# மனதைத் திறக்குமோ மௌனங்கள்...





இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# மனதைத் திறக்குமோ மௌனங்கள்...

# Manathai Thirakkumo Mounangal…

Author:

இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author//infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

மௌனம் – 1.

மௌனம் – 2.

மௌனம் – 3.

மௌனம் – 4.

மௌனம் – 5.

மௌனம் – 6.

மௌனம் – 7.

மௌனம் - 8.

மௌனம் – 9.

மௌனம் - 10

மௌனம் - 11

மௌனம் – 12

மௌனம் – 13.

மௌனம் – 14.

மௌனம் – 15.

மௌனம் – 16.

மௌனம் – 17.

மௌனம் – 18.

மௌனம் – 19.

மௌனம் – 20.

மௌனம் – 21.

மௌனம் – 22.

மௌனம் - 23.

மௌனம் – 24.

மௌனம் – 25.

மௌனம் – 26.

மௌனம் – 27.

மௌனம் – 28.

மௌனம் – 29.

மௌனம் – 30.

மௌனம் – 31.

மௌனம் – 32.

மௌனம் – 33.

# மௌனம் – 1.

இணைந்திருக்கும் இதயங்கள்

அன்பைச் சுமப்பதும்........

காயம் கொண்ட இதயங்களுக்கு

ஆறுதல் அளிப்பதும்.......

நேசம் கொண்ட நெஞ்சங்களாலே.....

காலையில் எழுந்து வியர்க்க விறுவிறுக்க பீச் மணலில் கால் புதைய மூச்சிரைக்க ஓடிக் கொண்டிருந்தார்கள் அருணும் ராஜேஷும். அவர்கள் ஓடுவதைப் பார்த்தவாறே பின்னால் ஜாகிங் செய்தவாறு வந்துகொண்டிருந்தான் மனோ.

இது வழக்கமாக நடக்கும் ஒன்றுதான். காலையில் துவங்கும் ஜாகிங், முடியும் வேளையில் ஒரு போட்டியாகவே மாறிவிடும். இறுதி ரவுண்ட் ஓடும்போது...., யார் முதலில் உழைப்பாளர் சிலையை நெருங்குவது என்ற போட்டி துவங்கிவிடும்.

ராஜேஷை வெறுப்பேற்றியே ஆகவேண்டும் என்பதற்காகவே அருண் அவனுக்கு போட்டியாக செயல்படுவான். அநேகமாக ராஜேஷ் தான் ஜெயிப்பான். சில வேளைகளில் அருண் ஜெயிப்பதும் உண்டு.

அருண் தோற்றுப்போகும் நாளெல்லாம்...., “ஐ...., இன்னைக்கு நான்தானே ஜெயித்தேன்...”, என்றும்..., அவன் தோற்றுபோகும் நாளெல்லாம்...., “நாளைக்கு நான் ஜெயிக்கிறேன் பாரு...., அதுவரை உன்கூட நான் காய். நீ ஏன் என்னை தோக்கடிச்ச...”, எனவும், சிறுபிள்ளைத் தனமாக முறுக்கிக் கொள்வான் ராஜேஷ். சொல்லப்போனால் அவனது இந்த சிறுபிள்ளைத்தனமான பேச்சைக் கேட்கவேண்டும் என்பதற்காகவே மாற்றி மாற்றி நடந்துகொள்வான் அருண்.

இன்று ராஜேஷ் வெற்றிபெற...., அருணோ...., “நீ ஏன் என்னை ஜெயிச்ச...., நீ போ...., நான் உன்கூட பேசமாட்டேன்...”, ராஜேஷை முந்திக்கொண்டு சொல்ல...., வேகமாக மண்டையை உருட்டி ‘சரி’

என்றான் ராஜேஷ். அவன் செய்கையில் சிரித்தவாறே...., தங்கள் அருகில் வந்த மனோவுடன் இணைந்தார்கள்.

“என்னடா சிரிப்பு...”, மனோ கேட்க...., “எல்லாம் வழக்கமான விஷயம் தான்..., ஆனா இன்னைக்கு ராஜேஷை நான் முந்திக்கிட்டேன். அதை கேட்டுட்டு..., மண்டையை உருட்டுறான்..., அதுக்குதான் சிரிச்சேன்...”, அருண் விளக்கினான்.

“ராஜேஷ்...., இன்னும் நீ இந்த சின்னப்புள்ளைத்தனமான பேச்சை விடவே மாட்டியா...? ஹம்...., இதுவும் நல்லாத்தான் இருக்கு. சரி, நான் ஜூஸ் குடிக்கப் போறேன். நீங்களும் வாறீங்களா..?”, சொன்னவாறு அருகில் இருந்த ஜூஸ் கடையை நோக்கி நடந்தான்மனோ.

அவன் போவதைப் பார்த்த அருண்...., “போன ஜென்மத்தில் இவன் மாடாவோ ஆடாவோ பொறந்திருப்பான் போல...., அதான் இந்த ஜென்மத்தில், இலை தழையெல்லாம் திங்க முடியலன்னு அருகம்புல் ஜூஸ்...., கத்தாழை ஜூஸ்ன்னு குடிக்கிறான்... நான் வரல இந்த விளையாட்டுக்கு....”, வேகமாகச் சொன்னான்.

“ஐயோ...., ஆமாடா...., சீனி கூட போடாமல்...., அதைவிடு. உப்பு கூட போடாமல்...., குடிக்கும்போதே வயித்தைப் பிரட்டும்...”, முகத்தை அஷ்ட கோணலாக்கி, ராஜு சொல்ல...., அவன் முகபாவங்களையே பார்த்துக் கொண்டிருந்தான் அருண்.

அத்தோடு....., “ராஜு....., அப்படியே நடிகர் திலகத்தை மிஞ்சிடுவடா...., அவ்வளவு எக்ஸ்ப்ரஷன் கொடுக்குற...”, அவன் கன்னத்தை கிள்ளி முத்தம் வைத்தவாறு அருண் சொல்ல....,

அவன் சொல்வதை உண்மை என நம்பி...., “தேங்க்ஸ் டா...”, என்றான். ‘அது எப்படித்தான் நாங்க என்ன சொன்னாலும் நம்புறானோ...’, தனக்குள் வியந்தவன் மனோ எங்கே எனப் பார்த்தான்.

மனோவோ...., இரண்டு ஜூஸ் டம்ப்ளர்களோடு வந்து...., ஒன்றை அருணிடமும்...., மற்றொன்றை ராஜேஷிடமும் நீட்ட மறு பேச்சின்றி வாங்கிக் கொண்டார்கள்.

ராஜேஷ் அடுத்த வினாடியே ஒரே மூச்சில் ஜூஸை குடித்துவிட்டு டம்ளரை மனோவிடம் கொடுக்க...., “அடப்பாவி...., அப்போ என்ன

பேச்சு பேசின.... இப்போ என்னவோ..., அவன் பாயாசத்தை கொடுத்த மாதிரி ஒரே மூச்சில் குடிச்சுட்ட...", அருண் வியக்க,

"ஆமா....., மனோ நமக்காக வாங்கிட்டு வந்திருக்கான் குடிக்காமல் இருக்க முடியுமா...?", அவனிடமே நியாயம் கேட்டான்.

"அது சரி...., அடேய்...., இதுக்கே உனக்கு ரெண்டு ஆஸ்கார் விருது கொடுக்கலாம்டா....", அருண் அவனைக் கேலி செய்தான்.

"ம்ச்...., குடிச்சுட்டு டம்ளரைத் தாடா...., வீட்டுக்குப் போகலாம். அம்மால்லாம் காத்துட்டு இருப்பாங்க...", மனோ சொல்லவே..., வேண்டா வெறுப்பாக முகத்தை வைத்துகொண்டு குடித்து முடித்தான்.

அவன் குடித்து முடிக்கவே...., கையோடு வைத்திருந்த தேன் பாட்டிலில் இருந்து விரலில் சிறு அளவு தேனெடுத்து அவன் நாக்கில் தடவி விட்டான் மனோ.

"மனோ...", நெகிழ்வாக அருண் அழைக்க....,

"உனக்கு பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும் அதான்..", அவனுக்கு விளக்கம் கொடுத்தான்.

"அப்போ எனக்கு...", ராஜு கேட்க...., "உனக்கு இல்லாமலா...., இந்தா...", மனோவின் கரத்தில் இருந்து அந்த சிறிய பாட்டிலைப் பிடுங்கி...., மொத்தமாக அவன் வாயில் கவிழ்த்தான் அருண்.

"டேய் அருண்...., அவனை கலாட்டா பண்ணுறதே உனக்கு வேலையா போச்சு....., விடுடா அவனை....", இருவரையும் பிரித்துவிட்டான்.

"எல்லாம் இருக்கட்டும்...., இப்போ வீட்டுக்குப் போனதுமே அம்மால்லாம் ஒரு விஷயத்தைப் பற்றி கேப்பாங்களே அதுக்கு என்ன முடிவு பண்ணி இருக்கீங்க...", மனோ கேட்க....

"ஹையோ...., வரவர அவங்களை சம்மாளிக்கறதுக்குள்ள நாக்கு தள்ளுது. பேசாமல் காதில் பஞ்சை வச்சுக்க வேண்டியதுதான்...", அருண் சொன்னான்.

அவன் சொன்னவுடன் தன் பாக்கெட்டுக்குள் கைவிட்டு இரண்டு துண்டு பஞ்சை எடுத்து அவன் கரத்தில் கொடுத்தான் ராஜு.

“உனக்கு ஓவர் குசும்புடா...., நான் ஒரு பேச்சுக்கு சொன்னால் உடனே எடுத்து நீட்டிடுவியா...?”, ராஜுவை அடிக்கப் பாய்ந்தான்.

“நீதானேடா கேட்ட...., என்கிட்டே இருந்தது நான் கொடுத்தேன். அது ஒரு குத்தமா....”, ராஜு அப்பாவியாக கேட்டான்.

“ஆமாடா...., அப்படியே அம்மா பேசும்போது...., அவங்க கண்ணு முன்னாடியே என் காதில் அதை வச்சுவிடு, விளங்கிடும்...”, கோபமாகச் சொன்னான்.

“அருண் வேண்டாம்...., நீ சொன்னதை அப்படியே செஞ்சுடுவான்...”, மனோ சொல்ல...., “நல்லவேளைடா...., சொன்ன...., இல்ல என் நிலைமை என்ன ஆயிருக்கும்...., ராஜு..., அவசரப்பட்டு அப்படியெல்லாம் செய்யக்கூடாது சரியா...”, ராஜுவிடம் சொல்லியே அழைத்து சென்றார்கள்.

ஜூஸ் டம்ளரை வாங்க பையன் வரவே...., அவனிடம் டம்ளரையும் காசையும் கொடுத்து அனுப்பிவிட்டு...., தங்கள் காருக்கு விரைந்தார்கள்.

போகும் வழியில்...., “மனோ...., இப்போதைக்கு அவங்ககிட்டே இருந்து தப்பிக்க, என்கிட்டே ஒரு வழி இருக்குடா...”, அருண் சொல்ல...., ‘என்ன’ என்பதுபோல் அவனைப் பார்த்தார்கள்.

“இல்ல...., ஜஸ்ட் சும்மாதான் சொல்லுறேன்...., பிறகு என்னை அடிக்கக் கூடாது...”, ஒரு நிபந்தனையோடே அவர்களிடம் அவன் சொன்னான். அவன் சொல்லி முடிக்கவே....,

“என் வாயில் என்னமோ வருது...., வேண்டாம்னு பார்க்குறேன்...”, ராஜேஷை குறிப்பாய் பார்த்தவாறு...., சொன்னான் மனோ.

புரிந்ததற்கு அடையாளமாக...., “ஹி...., ஹி...., ஹி...”, என வழிசலாக அருண் சிரிக்க..., “சகிக்கலடா வேண்டாம்...”, என சொல்லிவிட்டான் மனோ.

பேசியவாறே...., வீட்டுக்குள் அவர்கள் நுழைந்தபொழுது...., இவர்களுக்காகக்காத்திருந்தார்கள் அவர்களது பெற்றோர்.

மூன்று தாய்மார்களும் தங்கள் கணவர்களிடம்ஜாடைக்காட்ட...., எப்படி

பேச்சைத் துவங்குவது என்று அவர்கள் திணறி பேச்சைத் துவங்கும் வேளையில்...., “நாங்க கல்யாணம் பண்ணிக்கறோம்...”, ராஜு திடீரென சொன்னான்.

அவன் அப்படிச் சொல்லவே...., அனைவரும் என்னவென்று ஆர்வமாகப் பார்க்க...., “அப்பா...., உங்க அம்மா இப்போ எங்கே இருக்காங்க...?”, ராஜு வேகமாகக் கேட்டான்.

“இப்போ எதுக்குடா கேக்குற...? அவங்கல்லாம் போய் சேர்ந்துட்டாங்களே...”, யோசனையாக பதில் கொடுத்தார் அவர்.

அவர் அவ்வாறு சொல்லவே...., “அச்சோ...., அப்போ முடியாதே...”, கவலையானான் ராஜு.

“நீங்க கல்யாணம் கட்டிக்கிறதுக்கும்...., எங்க அம்மாவுக்கும் என்னடா சம்பந்தம்...?”, கடுப்பானார் அவர்.

“இல்ல...., உங்க அம்மாவை நான் கட்டிக்கலாம்னு பார்த்தேன்....., ஆனா அவங்கதான் செத்துப் போயிட்டாங்களே...., இனிமேல் அது முடியாதே...., அதான் சொன்னேன்...”, சாதாரணமாக உரைத்தான்.

“என்னடா உளர்ற...”,

“இல்லையே சரியாத்தானே சொன்னேன்...., நீங்க மட்டும் எங்க அம்மாவை கட்டிக்கலாம்...., ஆனா...., நான்மட்டும் உங்க அம்மாவை கட்டிக்கக் கூடாதா...?”, ரோஷமாகக் கேட்டான். அவன் சொல்லவே அனைவருமே திகைத்துப் போனார்கள்.

“டேய் லூசுப்பயலே...., என்னடா பேச்சு இது...”, அருண் அவன் அருகில் வந்து கடிந்துகொண்டான்.

“நீதானேடா காரில் வச்சு இந்த ஐடியாவை சொன்ன...., இப்போ பேச்சை மாத்துறியே...”, அப்பாவியாகக் கேட்டான்.

அருண் தலையிலேயே அடித்துக் கொண்டான். மனோ அவர்கள் அருகில் வந்து...., “அம்மா...., அருண் ஏதோ விளையாட்டா சொன்னான். அதை இவன் தப்பா புரிஞ்சுகிட்டு இப்படி சொல்லுறான்...”, சமாளிக்க முயன்றான்.

“ஏம்ப்பா...., உங்ககிட்டே நாங்க என்ன கேட்டோம்....., ஒரு கல்யாணம் பண்ணிக்கச் சொன்னோம். அதுக்கு மறுப்பு சொல்ல, என்னவெல்லாம் சொல்லலாம்னு யோசிக்கிற நேரத்தில்...., சம்மதம்னு ஒரு வார்த்தை சொல்ல உங்களுக்கு எவ்வளவு நேரமாகும்?...”, மனோவின் தாய் கெஞ்சலாகக் கேட்டார்.

“அம்மா...., ஏற்கனவே நாங்க சம்மதம் சொல்லி...., அதற்கு உண்டான பலனை நல்லா அனுபவிச்சது போதாதா...? இன்னும் மிச்சம் மீதி இருக்குன்னு நீங்க நினைக்கிறீங்களா...?”, மனோ கோபமாக கேட்க, அவருக்கு வாயடைத்துப் போனது.

“மனோ...., அது அப்போ. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி. இப்போ நம்ம நிலைமை அப்படி இல்லை...”, காஞ்சனா பரிந்து வந்தார்.

“நீங்க நிலைமைன்னு சொல்லுறது எதை...? இந்த பங்களாவையும்...., காரையும்...., பேங்க் பேலன்சையுமா...? அப்படின்னா நம்ம நிலைமை மாறித்தான் இருக்கு. ஆனா...., நாங்க மூணுபேரும் இன்னும் அதே முத்திரையோடதாம்மா இருக்கோம்.

“அதுவும் மாறிடும்னு நீங்க சொல்லுங்க...., முதல் ஆளா நான் பெண் பார்க்க வரத் தயார்...., ஆனா...., உங்களால சொல்ல முடியுமா...?”, அவன் அவர் கண்களைப் பார்த்து கேட்க...., காஞ்சனா தடுமாறினார்.

“உங்களாலேயே முடியலல்ல...., அப்போ...., ப்ளீஸ்ம்மா...., எங்களை இப்படியே விட்டுடுங்களேன்...., நாங்க இப்படியே ரொம்ப சந்தோசமாகத்தான் இருக்கோம்...., சோ...”, மேலே பேசவேண்டாம் என்று அவரிடம் சொன்னான்.

ஆனாலும் அவரால் பேசாமல் இருக்க முடியவில்லை. எனவே..., “மனோ...., என்னப்பா பிடிவாதம்...இது...? கொஞ்சம் இந்த அம்மா சொல்லுறதை கேக்க கூடாதா...?”, கெஞ்சலாக கேட்டார்.

“பிடிவாதம் எல்லாம் எதுவும் இல்லம்மா...., எங்களுக்கு இப்போதைக்கு கல்யாணம் வேண்டாம்...., அது சரிவராது”, முடிவாகச் சொன்னான்.

“அப்போ எப்போதான் செஞ்சுக்குறதா இருக்கீங்க...., உங்களுக்கு வயசு ஏறுதா...., இறங்குதா...? நாங்க கண் மூட முன்னாடி...., பேரப்பசங்களை கொஞ்சணும்னு எங்களுக்கும் ஆசை இருக்காதா...?

கொஞ்சம் மனசுவை மனோ...., இன்னும் ஒரே ஒரு முறை...., எங்களுக்கு வாய்ப்பு கொடு. ஊருக்குள் எவ்வளவோ நல்ல பொண்ணுங்க இருக்காங்க. தேடினால் கிடைக்காதது இல்லை. அவங்களுக்கும் வாழ்க்கை கொடுத்த மாதிரி இருக்கும்...”, இறங்கி வந்தார்.

அவரை ஆழமாக ஒரு பார்வை பார்த்தவன்...., “நாங்க வாழ்க்கை கொடுக்குறதா...? ஒரு விதமாக விரக்தியாக சிரித்தவன்...., “அப்போ நீங்களே எங்களை இப்படி நினைச்சுட்டீங்க இல்ல...”, வலியாக உரைத்தான்.

“ஐயோ ராஜா....., என்னப்பா...., உங்களைப்போய் நான் அப்படி சொல்வேனா.? பேரப்பசங்க ஆசையில் அப்படி பேசிட்டேன்...”, அவன் கரத்தை பற்றிக் கொண்டார்.

“ம்ச்..., விடுங்கம்மா...., உங்களைப்பற்றி எனக்குத் தெரியாதா...? இப்போ என்ன.... உங்களுக்கு பேரப்பசங்க வேணும் அவ்வளவுதானே...., கவலையை விடுங்க...”, சொன்னவன் மற்றவர்களைப் பார்க்க...., அருணும், ராஜுவும் அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

மாடியில் இருந்த அவரவர் அறைக்குச் சென்று மறைந்தார்கள். அவர்கள் செல்வதைப் பார்த்த பெற்றவர்கள் அனைவரின் கண்களும் கலங்கியிருந்தது.

“மனோம்மா...., என்ன உங்கபுள்ளை இப்படி சொல்லிட்டுப் போறான்!...”, அங்கலாய்த்தார் அருணின் தாய்.

“ஏன்தான் இந்த புள்ளைங்க இப்படி இருக்காங்களோ...., கல்யாணம் பண்ணிக்க சொல்றது அவ்வளவு பெரிய குத்தமா. வசதிக்கு குறைச்சலா...., அவனுங்களுக்கு படிப்பில்லையா...., அழகில்லையா...., எப்போதான் வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கப்போறாங்கன்னு தெரியலையே...”, மனோவின் தாய் ஒரு பக்கம் புலம்பினார்.

ராஜுவின் தாய் மௌனமாக கண்ணீர் வடித்தார். “நாங்கதான் கொஞ்சம் பொறுமையா இருக்கலாம்னு சொன்னோமே...., அதைக் கேக்காமல்...., இப்போ வேற ஏதாவது முடிவெடுத்துட்டாங்கன்னா என்ன செய்யிறது.

“இப்போ கீழே இறங்கி வரும்போது கொஞ்சம் பொறுமையா பேசுங்க. எதுவா இருந்தாலும் நிதானமா பேசி முடிவெடுக்கலாம். மனோ முடிவு பண்ணிட்டா...., நாம யாராலேயும் அதை மாத்த முடியாது. அதனால் இன்னைய பேச்சு இதோட முடியட்டும்.

“அவங்களுக்குன்னு பொறந்த பொண்ணை அவங்க சந்தித்தால்...., அவங்களோட முடிவு நொடியில் மாறிடும். அந்த பொண்ணை அவங்க கண்ணில் காட்டச்சொல்லி கடவுள் கிட்டே வேண்டிக்கலாம்...., நாம பார்த்த பொண்ணா இருந்தா என்ன...., அவங்க விரும்பிய பொண்ணா இருந்தா என்ன...

“நமக்கு அவங்க நல்லா இருக்கணும் அவ்வளவுதானே. போங்க...., போய் வேலையைப் பாருங்க....”, மனோவின் அப்பா சொல்லி அனுப்ப...., அனைவரும் அவர் பேச்சை ஆமோதித்து கலைந்து சென்றார்கள்.

அதன் பிறகு மனோ. அருண், ராஜு குளித்து, கிளம்பி...., சாப்பிட வந்து அமர்ந்த பிறகு...., வழக்கமான அவர்களது கலகலப்பில் எந்த குறைவும் இல்லாமல்..., பெற்றவர்கள் அனைவரும் பார்த்துக் கொண்டார்கள்.

அருண் வழக்கம்போல கலாட்டாவாக உரையாட...., ராஜு அவனோடு சேர்ந்துகொண்டான். ஆனால் மனோ மட்டும் எதையோ யோசித்துக் கொண்டிருக்க..., பெற்றவர்களின் அடிவயிற்றில் பிரளயம் மூண்டது என்னவோ உண்மை.

ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க அவர்கள் பிரம்ம பிரயத்தனம் செய்தார்கள். மற்றவர்கள் சாப்பிட்டு முடித்துவிட்டு காருக்குச் செல்ல...., மனோ இறுதியாகச் சென்றான்.

அவனை அழைத்த அருணின் தாய்...., “மனோ...., எந்த முடிவா இருந்தாலும் கொஞ்சம் நிதானமா யோசிச்சு எடுப்பா...”, தன்மையாகச் சொன்னார்.

“என்னம்மா புதுசா சொல்லுறீங்க...., எல்லாம் நான் பார்த்துக்கறேன்...”, பேச்சை முடித்துக்கொண்டு வெளியேறினான்.

இவ்வளவு நடந்த பிறகும்...., அருணின் தாயோ...., ராஜுவின் தாயோ...., மனோவை குற்றம் சொல்லவே இல்லை...., அவனால்தான் தங்கள்

மகன்களும் இப்படி இருக்கிறார்கள் என்று புலம்பவும் இல்லை.

தங்கள் மகன்களின் மனம் மாறவேண்டும் என்ற வேண்டுதலைத்தவிர வேறு எதுவும் அவர்களிடம் இருக்கவில்லை.

***ஏ எம் ஆர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற பெயர்ப்பலகை தாங்கிய மூன்றுமாடி கட்டிடத்தினுள் அவர்கள் கார் நுழைந்தது. வாசலில் இறங்கியவர்கள் அலுவலகம் செல்ல, காரை டிரைவர் அதன் இடத்தில் பார்க் செய்யச் சென்றான்.

அவர்கள் வருவதைக் கண்ட ஸ்டாஃப்கள் அனைவரும் எழுந்து காலை வணக்கம் உரைக்க...., அதைப் பெற்றுக்கொண்டவாறே தங்கள் அறைக்குள் நுழைந்தார்கள்.

மனோ...., அருண்...., ராஜேஷ்...., மூவருமே இந்த நிறுவனத்தின் பங்கு தாரர்கள் தான். ஆனால்...., மனோ நிர்வாகத்தை கவனித்துக் கொள்ள, அருண் கட்டிட வரைபடங்கள் போடும் வல்லுனனாக இருக்க, ராஜு ஃபீல்ட் இஞ்சினியராக இருந்தான்.

அலுவலகம் வந்தவுடன் மூவரும் அவர்களின் பணிப்பொறுப்புகளுக்கு ஏற்ப மாறிவிட...., ஒரே அறையில் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் சென்று அமர்ந்தார்கள்.

மூவரும் கலந்துரையாட...., அந்த அறையின் கோடியில் ஒரு வட்டமேஜை போடப்பட்டிருந்தது. மனோ தன் மேஜையில் இருந்த ஒரு ஃபைலைப் பார்க்க...., அந்த நேரம் அவன் மேஜையில் இருந்த தொலைபேசி அவனை அழைத்தது.

அதை எடுத்து செவிமடுத்தவனின் முகம் கோபத்துக்கு மாற...., “சரி நான் பார்த்துக்கறேன்...”, சொன்னவன் தொலைபேசியை அதனிடத்தில் வைத்தான்.

அவன் எதையோ கேட்க வாய் திறந்த வேளையில்...., “மனோ...., நான் உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு நினைத்தேன்...., நாம ஒரு ஆபீஸை இன்னும் ஒரு மாசத்தில் முடிச்சு கொடுக்குறதா சொல்லி இருந்தோமே...., அதில் ஒரு சின்ன பிரச்சனை....”, வழக்கத்துக்கு மாறாக சீரியசாக இருந்தான் ராஜு.

அவன் பேச்சில் குறுக்கிடாமல்...., அவனே சொல்லி முடிக்கட்டும் என்று அமைதி காத்தான் மனோ. “டேய்..., என்னடா இது...? பிரச்சனையில் சின்னது பெருசுன்னு சொல்லிட்டு இருக்க. முதல்ல என்ன பிரச்சனைன்னு சொல்லித் தொலை...”, பதட்டமானான் அருண்.

“அருண்....”, மனோ அழுத்தமாக அழைக்க, உடனே அடங்கினான். இதுதான் அருண்...., எதிலும் மிகுந்த விளையாட்டாக இருப்பான்...., அதேபோல் சீக்கிரமே பதட்டமடைந்து விடுவான்.

ராஜுவோ எதையும் சீரியசாக எடுத்துக்கொள்ள மாட்டான். வேலை என்று வந்துவிட்டால்....., கடைநிலை ஊழியனின் வேலையைச் செய்யக் கூட தயங்கமாட்டான். பிரச்சனை என்றால் அதன் சீரியஸ்னஸ் என்னவென்பதை புரிந்துகொள்ளவும் மாட்டான்.

ஆனால் எதுவாக இருந்தாலும் மனோவிடம் கொண்டுசென்றால் பிரச்சனை முடிந்துவிடும் என்பது மட்டும் அவனுக்குத் தெரியும். எனவேதான் நிர்வாகம் முழுவதையும் மனோ அவனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான்.

மனோவின் குரலில் அருண் அமைதியாகிவிட...., ‘நீ சொல்’ என்பதுபோல் ராஜுவைப் பார்த்தான்.

“மனோ...., நாம முடிச்சுக் கொடுக்குறதா சொன்ன ஆபீஸ் வேலையில் நம்ம சைட் எந்த பிரச்சனையும் இல்லை. ஆனா ரெண்டு நாள் முன்னாடி...., நாம ‘டையப்’ வச்சிருக்கும் இன்டீரியர் டெக்கரேஷன் கம்பெனி ஜிஎம் தான் ஏதோ சொன்னார்...”, தலையைத் தட்டி யோசித்தான்..., ஆனால் அவர் சொன்னது அவன் நினைவிற்கு வரவில்லை.

“ம்...., அவர் பொண்ணை உனக்கு கட்டி கொடுக்குறேன்னு சொன்னாரா?...”, கடுப்பாகக் கேட்டான் அருண்.

“ம்ச்...., இல்லடா...., அப்படின்னா அதை நான் உடனேயே உங்ககிட்டே சொல்லி இருப்பேனே...., இது வேற...”, சொன்னவாறு சீரியசாக யோசித்தான்.

“பார்த்தியாடா மனோ...., அதா இருந்திருந்தால் உடனே சொல்லியிருப்பானாம்...., வேலை விஷயம்னாலதான் சொல்லாமல்

இருக்கானாம்...., கிண்டலை பார்த்தியாடா...”.

“டேய்...., அதான் சொல்லுறேன்னு சொல்றேன் இல்ல...., நீ ஏன் இப்படி அவசரப்படுற...”, மீசையின் நுனியைத் திருகியவாறே யோசித்தான் ராஜு.

“மனோ கேட்டுக்கடா....., நான் அவசரப்படுறனாம்...”, தலையை ஆட்டிச் சொன்னான் அருண்.

வழக்கடித்தவர்களைக் கண்டுகொள்ளாமல்...., இன்டீரியர் டெக்கரேஷன் கம்பெனிக்கு போன் செய்தான் மனோ.

“மிஸ்டர் தேவன் இருக்காரா...? நான் மனோ பேசுறேன்னு சொல்லுங்க...”, சொல்லிவிட்டு இணைப்பு கிடைக்க காத்திருந்தவன்...., தேவன் லைனில் வரவே....,

“நான் மனோ...., ஈ.சி.ஆர் ப்ராஜெக்ட்டை எப்போ முடிக்கப் போறீங்க..., இன்னும் ரெண்டு மாசம்தான் டைம் இருக்கு...”, குரலில் எதையும் வெளிப்படுத்தாமல் கேட்டான்.

“சார்...., அதான் எல்லாம் ராஜு சார்ட்ட பேசிட்டோமே...”, விஷமமாக பேசினார் தேவன்.

“ஓ...., ஒரு நிமிஷம்...”, சொன்னவன் தொலைபேசியை ஸ்பீக்கரில் போட்டுவிட்டு...., மற்றவர்களைப் பார்க்க...., அவர்கள் வழக்காடுவதை விட்டுவிட்டு அவன் டேபிளை நெருங்கினார்கள்.

“இப்போ சொல்லுங்க தேவன்...”, அவன் சொல்ல....,

“சார் அதான்...., ராஜு சார்ட்ட எங்க டீலை சொல்லி அனுப்பினோமே...., அவர் உங்கக்கிட்டே பேசிட்டு சொல்லுறதா சொன்னார். பிறகு எப்படி நான்...”, அவர் இழுக்க....,

“தேவன்...., நான் ராஜு தான் பேசுறேன். நீங்க என்கிட்டே சொன்னதை அப்படியே மனோ கிட்டே சொல்லிடுங்க. ஏன்னா, நீங்க என்ன சொன்னீங்க என்பதை நான் மறந்துட்டேன். அதான்...”, இலகுவாக சொல்லிவிட்டான் ராஜு.

மனோவும் அருணும் சிரிப்பை அடக்கிக்கொள்ள...., அந்தபக்கம் தேவன்

திகைத்துவிட்டதை, அவரது அமைதியிலிருந்தே இவர்கள் உணர்ந்துகொண்டார்கள். ஆனால் ராஜுவோ...., "ஓகே மனோ...., நீயே பேசிக்கோ நான் சைட்டுக்கு கிளம்புறேன்...", சொல்லிவிட்டு நில்லாமல் கிளம்பிவிட்டான்.

தேவன் உண்மையாகவே வாயடைத்துபோயிருந்தான். தங்கள் டீலை, ராஜு பரிசீலனை செய்தால் கண்டிப்பாக பேரம் படிந்துவிடும் என்று எண்ணி மிதப்பாக இருந்தான். ஆனால் ராஜு இப்படி கழண்டுகொள்வான் என்பதை எதிர்பாராமல் திகைத்துப்போனான்.

அருணும்...., "அப்போ நானும் கிளம்புறேன் மனோ...., நீயே பேசிடு...", சொல்லிவிட்டு சென்றுவிட்டான்.

"சொல்லுங்க தேவன்...", அமர்த்தலாகக் கேட்டான்.

அவனது அமர்த்தலான குரலைக் கேட்டு உள்ளுக்குள் குளிரெடுத்தாலும் அதை மறைத்தவாறே....., "மனோ சார்...., அது வேற ஒண்ணும் இல்லை...., நீங்க ஒரு ஸ்குயர் ஃபீட்டுக்கு ரெண்டாயிரம் ரூபாய் தரீங்க...., அதை கொஞ்சம் அதிகப்படுத்தினால் நாங்க தொடர்ந்து பண்ணுறோம்...., இல்லன்னா...", அவர் பேசிக்கொண்டே போக..., இந்தப்பக்கம் மனோவின் தாடை இறுகி..., முகம் இரும்பாக மாறியது.

மேலே ஒரு வார்த்தை கூட பேசாமல், தொலைபேசியை தாங்கியில் வைத்துவிட்டான் மனோ.

***

# மௌனம் – 2.

வாழ்க்கை மிக அழகாய்......

வாழப் பழகிகொண்டோம்......

பூஞ்சோலையாய்......

மலரப் பழகிக் கொண்டோம்.........

‘க்குகூ...., க்குகூ...., க்குகூ...’, குயிலின் குரலில் உறக்கம் கலைந்து எழுந்தாள் நித்யா. காலைக் கதிர்களின் ரம்யமான வெம்மையும்...., மஞ்சள் நிறமும்...., முகம் விகசிக்க ஜன்னலைத் திறந்தாள்.

“ஏய்...., எவடி அவ...., முதல்ல ஜன்னலை மூடுடி...”, தலைக்கு அடியில் இருந்த தலையணையைத் தூக்கி...., முகத்தை மறைத்தவாறு தூக்கத்தை தொடர முயன்றாள் அனிதா.

அனிதாவின் பேச்சில் கலைந்து, படுக்கையில் எழுந்து அமர்ந்தாள் ராதா. “குட்மார்னிங் நித்தி...”, கண்களைக் கசக்கியவாறே சின்னக் குரலில் உரைக்க....., முகம்கொள்ளா சிரிப்பை அவளுக்கு பரிசாக்கியவள்...., “குட்மார்னிங் ராதா...., அதெப்படி தினமும் அனிதாவோட ஒரு புலம்பலுக்கே எழுந்துடுற நீ?....”, இளம் மஞ்சள் வெயிலை முகத்தில் தாங்கியவாறு கேட்டாள்.

வெயிலின் ஒளியுடன் போட்டிப்போட்ட அவள் முகத்தை இமைக்க மறந்து ரசித்தவாறே....., “நீ எப்படி குயில் சத்தத்துக்கே முழிக்கிறியோ அப்படித்தான் இதுவும்....”, எழுந்து அவள் அருகில் வந்து அவள் முகத்தையே பார்த்தவாறு சொன்னாள்.

“அம்மாடியோ...., இன்னைக்கு சென்னையே வெள்ளத்தில் மூழ்கிடும் போலையே...”, நாடியில் கைவைத்து நித்தி வியக்க...., அவளை போலியாக முறைத்தாள் ராதா.

‘உனக்கு லொள்ளுதானே...’, ராதாவின் கண்கள் அவளிடம் கேள்விகேட்க....,

“இல்ல...., வழக்கமா ஒரு குட்மார்னிங்கோட நிறுத்திடுவ....,

இன்னைக்கு இவ்வளவு வார்த்தை பேசுனியே, அதான் சொன்னேன். அதெப்படிதான் கண்ணாலேயே பேசுறியோ போ...., உன் கண் ரொம்ப அழகு ராதா...", தோழியை அணைத்தவாறு சொன்னாள் நித்தி.

"எனக்கும் சொல்லணும் போலத்தான் இருக்கு....", ராதா சொல்ல....,

"நீ சொல்லுறதை எனக்கு கேக்கணும் போல இருக்கு...", அவள் பேச்சை கேலி செய்தாள் நித்தி.

"உங்க ரெண்டுபேரையும் எனக்கு கொல்லணும் போல இருக்கு...", மூன்றாவதாக அவர்கள் பேச்சில் இடையிட்டாள் அனிதா.

நித்தியும் ராதாவும் களுக்கென சிரிக்க...., "ஏண்டி பரதேவதைகளா...., காலங்காத்தாலே தூங்காமல், என்னடி சுப்ரபாதம் வேண்டிக் கிடக்கு...., இதில் இந்த ஊமைக்கோட்டானுக்கு பேசணும்போல இருக்காம்...., எங்கே பேசுடி கேப்போம்....,

"மனுஷியை காலங்காத்தாலே தூங்க விடாமல்...., அப்படி என்னடி ரெண்டுபேருக்கும்...., என்ன...., உலக அழகி போட்டிக்கா போகப் போறீங்க...", கடுகடுத்தாள் அவர்களிடம்.

"உன்னை யாருடி தூங்க வேண்டாம்னு சொன்னா...., நாங்கதானே பேசிட்டு இருக்கோம்...., நீ தூங்கு....", நித்தி சாதாரணமாகச் சொன்னாள்.

"நீங்க எங்கடி என்னை தூங்க விட்டீங்க...., காதுக்குள்ளே கதை பேசினால் மனுஷி எப்படி தூங்குறது. அதென்ன....., உங்க அழகைப் பத்தி மட்டுமே பேசுறது...., என்னைப் பத்தியும் ரெண்டு வார்த்தை பேசலாம் இல்ல...", எழுந்து அமர்ந்து தலையணையை மடியில் வைத்துக் கொண்டாள்.

ராதாவும் நித்தியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "உன்னைப் பத்தி பேசுறதுன்னா....", யோசிப்பதுபோல் பாவனை செய்த நித்தி எதையோ கண்டுப்பிடித்தவள்போல் முகம் மலர...., மற்ற இருவரும் ஆர்வமாக அவளைப் பார்த்தார்கள்.

"ஹங்...., லேடி கும்பகர்ணி....., பூசணிக்காய்க்கு கைகால் முளைச்ச மாதிரி அழகா இருப்பா...., திருவாரூர் தேர் மாதிரி நடப்பா....., நடமாடும்

கிரைண்டர்...”,

“மூணுவேளை சாப்பாட்டை ஒரே வேளை சாப்பிடுவா....”, ராதா இடையில் எடுத்துக் கொடுக்க...., அதையும் சொன்ன நித்தி...., “இன்னும்....”, என யோசிக்க...., அவள் சொல்லிக்கொண்டே போக...., கொலைவெறியானாள் அனிதா.

“ஏண்டி....., நீங்க எல்லாம் ஐஸ்வர்யா ராய்க்கு கசின் சிஸ்டர்ஸ்...., நான் மட்டும் இப்படியா...., இருங்கடி உங்களை வந்து வச்சுக்கறேன்....”, சொன்னவள்...., கையில் இருந்த தலையணையோடு அவர்களை நெருங்கினாள்.

“ஏய்...., வேண்டாண்டி...., வாய்பேச்சு வாயோட இருக்கணும்....”, நித்தி சொல்ல....,

“அப்போ அது உன் வாய்க்குள்ளேயே இருந்திருக்கணும்...., என் காதுக்கு கேட்டிருக்க கூடாது...., நீங்கல்லாம் முருங்கைக்காய்க்கு கைகால் முளைச்ச மாதிரி இருந்துட்டு...., நான் பூசணிக்காயா.”

“ராதா...., உனக்கு இதுக்கெல்லாம் பேசறதுக்கு வாய் வருமா...., இருடி உன் வாயை கிழிக்கிறேன்....”, அவர்கள்மேல் பாய...., மூவரும் ஆளுக்கொரு தலகாணியை வைத்துகொண்டு கோதாவில் இறங்கினார்கள்.

“அனி...., நான் சும்மாத்தாண்டி சொன்னேன்...., நீதான் சின்னத்தம்பி குஷ்பு ஆச்சே....., நீ அழகிடி...”, நித்தி அறை முழுக்க ஓடியவாறு சொல்ல...

“நித்தி...., நீ எப்போ இருந்து பொய் சொல்ல ஆரம்பிச்ச....”, ராதா கேட்க....,

“இதோ இப்போ இருந்துதான்....”, ஓடியவாறே நித்தி உரைக்க....,

“ராதா...., இருடி முதல்ல உன்னை கவனிக்கிறேன்...”, நித்தியை விட்டுவிட்டு ராதாவை நெருங்கினாள்.

“அனி...., ராதாவை ஒண்ணும் செய்யாதே...., பாவம் தெரியாமல் உண்மையை உளறுது புள்ளை....”, நித்தி அவளை தடுக்கப் பாய்ந்தாள்.

அனிதா ராதாவை அடிக்க...., ராதா அவளை தடுக்க...., அனிதாவை நித்தி அடிக்க...., அவள் தன்னை அடிக்கவே, ராதாவை அடிப்பதை விட்டுவிட்டு...., திரும்பியவள்...., நித்தியை அடித்தாள்.

இறுதியில் யார் யாரை அடித்தார்கள் என்பதே புரியாமல் மூவரும் ஒன்றாகச் சேர்ந்து கொட்டமடிக்க...., அந்த அறை முழுவதும்...., அவர்கள் தலையணையில் இருந்த பஞ்சு தெறித்து...., காற்றில் பறக்கும்வரை அவர்கள் கொட்டம் தொடர்ந்தது.

அத்தோடு நில்லாமல்...., “ஏய்...”, “ஊய்...”, “எவடி அவ...”, “முடியை பிடிக்காதடி...”, “ராதா....”, “அனி...”, “நித்தி....” காட்டுக்கத்தலோடு....., காலின் அடியில் கிடந்த ரிமோட் மிதிபட...., ஸ்டீரியோவும் ஒரு பக்கம் அலற...., ஒரு உள்நாட்டுப் போரே அங்கே நடந்தது.

வீடே ஸ்டீரியோவின் ஓசையில் அதிர...., கிச்சனில் அவர்களுக்காக சமைத்துக் கொண்டிருந்த சோலைக்கனி அடித்துப்பிடித்து ஓடி வந்தாள்.

அறையை தன் பலம் கொண்டமட்டும் தட்டி...., “அம்மா...., நித்திம்மா...., அனிதாம்மா...., ராதாம்மா....., என்னதான் செய்யிறீங்க...., கதவைத் தொறங்க...., ஐயோ...., கட்டடமே இடிஞ்சுடும் போல...., பக்கத்து வீடுகள்ல இருந்து யாராவது சண்டைக்கு வந்துடப் போறாங்க.

“ஐயாவும் அம்மாவும் வந்தால் அவ்வளவுதான்....., சொன்னா கேளுங்கம்மா. அந்த சத்தத்தையாவது குறைங்க....”, உள்ளே கொட்டமடிப்பவர்களின் சத்தத்தோடு சோலைக்கனியின் குரலும் சேர்ந்துகொள்ள...., தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“ஏற்கனவே உள்ளே இவ்வளவு சத்தம்...., இதில் நான் பேசுறது எங்கே இவங்களுக்கு கேக்கப் போகுது. வேற வழியே இல்லை...., கதவை உடைச்சுட வேண்டியதுதான்....”, தனக்குத் தானே சொல்லிக் கொண்டவள்....,

‘இல்ல வேணாம் எதுக்கும் கதவைத் தொறந்து பார்ப்போம்...’, எண்ணியவள்...., கதவின் குமிழில் கைவைத்து திருகித் திறக்க...., நொடியில், பனிப்பொழிவில் நனைந்த சிலைபோல் மாறினாள் சோலைக்கனி.

ஒரு நிமிடம் என்ன நடந்தது என்பதே அவளுக்குப் புரியவில்லை. தன்

மேனி முழுவதும் பஞ்சால் போர்த்தியிருப்பதைப் பார்த்தவள் திடுக்கிட்டாள். இது வழக்கமாக நடக்கும் ஒன்றுதான் என்றாலும்...., பஞ்சு இவ்வளவு உதிரியாக மாறியிருப்பதை நம்பமுடியாமல் பார்த்தாள்.

வெளியே நின்று யோசிக்க நேரமில்லாமல்...., பஞ்சு வீடு முழுவதும் பரவாமல் இருக்க...., நொடியில் அறைக்குள் புகுந்து...., கதவை அழுந்த சாத்தினாள்.

கண்களே தெரியாத அளவுக்கு ஒரே புகை மூட்டம்போல்...., எங்கும் பஞ்சின் ஆதிக்கம்...., அறை முழுவதும் ஓடிக் கொண்டிருந்த அவர்களைக் கண்டவள்...., அவர்களைத் தடுக்க முயன்றாள்.

“ராதாம்மா...., நீங்கதான் ரொம்ப அமைதியான ஆளு...., நீங்களுமா...”, சிறிது நேரம் அவள் பின்னால் ஓட...., ராதாவுக்கு விழ இருந்த அடிகளில் பாதி அடியை சோலைக்கனி வாங்கியதுதான் மிச்சம்...., இதற்குமேல் தாங்க முடியாது என்பதுபோல்...., அவளை விடுத்து....,

“நித்திம்மா...., நீங்க பொறுப்பானவங்க...., நீங்களும் இவங்க கூட சேர்ந்துட்டு என்ன இது....”, அவளைத் தடுக்க முயல...., அனிதாவிடமிருந்து நாலு மொத்து வாங்கியதுதான் பலனாக இருந்தது.

“ம்ஹூம்....., இதுக்குமேல என்னால் முடியாது....., முதல்ல அந்த ரிமோட்டை எங்கேன்னு தேடுவோம்....”, எண்ணியவள்...., அவர்கள் காலுக்குள் புகுந்து...., ரிமோட்டைத் தேடினாள்.

அவளது கையிலும் காலிலும் மிதி வாங்கியதுதான் மிச்சம்...., ரிமோட் இருக்கும் சுவடே தெரியவில்லை. அதற்குள்...., அவள் காதில் இருந்து ரத்தம் வராத குறையாக...., செவிப்பறையே கிழிந்து தொங்கும்போல இருந்த சத்தத்தை தாங்க முடியாமல் மயக்கம் வரும்போல் இருந்தது.

“இவங்களுக்கெல்லாம் காதென்ன செவிடா...”, அவள் சத்தமாகப் புலம்பும் பொழுதே...., குனிந்திருந்த அவள் முதுகின்மேல் ஒருத்தி விழ...., அவள் காலை ஒருத்தி மிதிக்க...., அலறப் போகையில் அவள் தலையின் மீதே இன்னொருத்தி விழுந்து அவளை அமுக்கினாள்.

‘நம்ம சோலி முடிஞ்சுது...’, அவள் எண்ணும்போதே பட்டென அறையில் இருந்த ஸ்டீரியோவின் சத்தம் நின்றுபோக...., விளக்குகளும் ஒளிர்விட்டது.

“என்ன நடக்குது இங்கே....”, தாமரையின் சத்தத்தில் ஒரு நிமிடம் அனைத்தும் உறைந்து போனது.

நித்தி, அனிதா, ராதா மூவரும் சோலைக்கனியின் மேலிருந்து எழுந்து வரிசையாக நிற்க...., சோலைக்கனியோ எழ முடியாமல் படுத்திருந்தாள்.

முதல் வேலையாக, ஃபேன், ஏசி இரண்டையும், தாமரை நிறுத்த...., அடுத்த பத்து நிமிடங்களில் பஞ்சு பறப்பது சற்று மட்டுப்பட்டது.

மூவரின் தலைவிரி கோலமும்...., ஆடைகளின் நிலையும்...., தாமரையின் கோபத்தை உச்சத்துக்குக் கொண்டுபோக...., வாயைத் திறந்து அவர்களுக்கு அர்ச்சனையைத் துவங்கப் போகையில்...., சிறு முனகலுடன் அஞ்சலை எழுந்து அமர்ந்தாள்.

“நல்ல வேளை...., வந்துட்டீங்களாம்மா...., முடியலை...”, கேட்டவளால் எழுந்து நிற்க முடியவில்லை.

“ஏய்... இது யாருடி புது கேரக்டர்...”, நித்தியின் காதில் அனிதா கேட்க...., அவள் காலில் ஓங்கி மிதித்து அவளை அடக்கினாள்.

கத்தக்கூட முடியாமல் அடங்கினாள் அனிதா.

“ஆமா...., நீ யாரு?...”, கடுத்தார் தாமரை.

“ஐயோ அம்மா...., என்னைத் தெரியலையா...., நான்தான் சோலை...”, அழும் குரலில் சொன்னாள்.

“இவங்களை பார்த்துக்கச்சொல்லி உன்னை சொன்னால்...., நீயும் இவங்களோடு சேர்ந்து ஆட்டமா போடுற?...”, அவள்மேல் பாய்ந்தார்.

நடுங்கிப் போனாள் சோலை, “ஐயோ அம்மா...., இவங்களயெல்லாம் பிரிச்சு விடத்தான் வந்தேன்...., ஆனா...”, மென்று முழுங்கினாள்.

“பிரிச்சு விட வந்தவ...., அவங்க கீழே படுத்துக்கிட்டு என்ன செஞ்சுட்டு இருந்த....., இதுதான் நீ பிரிச்சு விடுற லட்சணமா....., உன் மூஞ்சியும்...., தலையும்...., ஆளும்...., நல்லா என் வாயில் வருது...., போ இங்கே இருந்து...., என் கண்ணு முன்னாடி நிக்காதே....”, காட்டு கத்தாக கத்தினார்.

“என்னடி...., நாம வாங்கவேண்டியதை எல்லாம் சோலை வாங்குது...., பாவம்...”, அனிதா அனுதாபப்பட...., பொங்கிய சிரிப்பை அடக்க மிகுந்த சிரமப்பட்டார்கள் மற்ற இருவரும்.

இப்பொழுது சிரித்தால் தங்கள் நிலைமை கவலைக்கிடமாகும் என்பதால் அமைதி காத்தார்கள். சோலையோ...., “எனக்கு இது தேவைதான்...., அம்மாடி, உசுரு தப்புனது பெருசாவுல்ல போச்சு....”, இடுப்பையும் தலையையும் பிடித்தவாறு...., தட்டுத் தடுமாறி சென்றாள்.

“முதல்ல வென்னீர் வச்சு குளிக்கணும்....., உள் காயத்துக்கு மருந்து ஏதாவது குடிக்கணும். இவங்க ஏறி மிதிச்சதில் எந்த பாகம் எங்கிட்டு எங்கிட்டு போய் செட்டில் ஆச்சுன்னே தெரியலை...., அம்மா....”, முனகியவாறே சென்றாள்.

“ஐயோ பாவண்டி....”, ஹஸ்கி வாய்சில் அனிதா சொல்ல...., ஏற்கனவே பொங்கிக் கொண்டிருந்தவர்கள், எவ்வளவு முயன்றும் முடியாமல் சிரித்துவிட்டார்கள்.

இவர்களை முறைத்த தாமரை...., “சோலை...., முதல்ல இந்த ரூமை கிளீன் பண்ணு...”, கட்டளை இட்டார்.

“இதோ நொடியில் வாரேம்மா....”, சொன்னவள் படிகளில் இறங்கி ஓடினாள்.

அவள் சென்றவுடன்...., இவர்கள் பக்கம் திரும்பியவர்...., “நீங்கல்லாம் பொண்ணுங்க தானே?....”, காட்டமாக கேட்டார்.

“இவங்களுக்கு ஏண்டி...., திடீர்ன்னு இப்படி ஒரு சந்தேகம்...., ராத்திரியோட ராத்திரியா நமக்கு மீசை முளச்சுடுச்சா...., கண்ணாடியை பார்க்கலாம்ன்னா, இந்த பஞ்சுவேற பறந்து தொலையிது...”, அனிதா புலம்ப...., மற்றவர்களுக்கு கொலை வெறியே கிளர்ந்தது.

இதழ் கூட அசையாமல் இவளால் எப்படித்தான் பேச முடிகிறதோ என நொந்து போனார்கள் ராதாவும் நித்தியும்.

“நீங்க சண்டை போட்டுக்கக் கூடாது...., ஒத்துமையா இருக்கணும்னு எவ்வளவு நாள் சொல்லியாச்சு. இன்னும் நீங்க சேர்ந்து இருக்கப்போறது ஒரு வருஷமோ இல்லை ரெண்டு வருஷமோ...., அதுக்குப் பிறகு....,

புருஷன்..., குழந்தைங்க...., குட்டிங்கன்னு உங்களுக்குள்ளே பார்த்துக்கக் கூட நேரம் கிடைக்காது...”,

“இதென்ன...., இன்னைக்கு செண்டிமெண்டை பிழியுது...., இப்போ இதுக்கு, நாம அழணுமா சிரிக்கணுமா?....”, தீவிரமாக சந்தேகம் கேட்டாள் அனிதா.

இப்பொழுது ராதா அவள் தொடையில் நறுக்கென கிள்ளினாள். அதை திறமையாகச் சமாளித்தவள்...., விறைப்பாகவே நின்றுகொண்டாள்.

“நீங்க சேர்ந்து இருக்கப்போற இவ்வளவு நாளும்...., கொஞ்சம் அனுசரணையா ஒத்துமையா இருந்துட்டு போகலாம் இல்ல....”, அவர் தொடர்ந்து பேச....,

“என்னடி இது...., இது இன்னும் நிறுத்தலை....., ஏய்...., ரெண்டுபேரும் என் கையை கெட்டியா புடிச்சுக்கோங்கடி...”, அவள் சொல்ல...., மற்றவர்கள் அவள் கரத்தை ஆளுக்கு ஒன்றாக பற்றிக் கொண்டார்கள்.

அனிதாவோ...., “என்னை விடுங்கடி...., நான் அதைப் போய் என்னன்னு கேட்டுட்டு வாரேன்...”, அவர்கள் பிடியில் திமிருபவள்போல் பாவ்லா காட்ட...., மற்ற இருவரும் அவளை கெட்டியாக பிடித்துக் கொண்டார்கள்.

ஏற்கனவே அறை முழுக்க பஞ்சு பறந்துகொண்டிருந்ததால்....., தாமரையால் கண்களை முழுதாக திறக்க முடியவில்லை. அப்படியே திறக்க முயன்றாலும்...., கண்களுக்குள் பஞ்சு சென்றதால் கண்களை கசக்கியவாறே பேசியதால்...., அவர்களின் செய்கைகளை அவரால் பார்க்க முடியவில்லை.

இங்கே அனிதாவோ அவர்கள் பிடியில் திமிறிக்கொண்டிருந்தாள். ஒரு கட்டத்துக்குமேல் அவளை அடக்க முடியாமல் திணறினார்கள். அதே நேரம் தாமரையும் இவர்களிடம் அசைவை உணர்ந்து இவர்களைப் பார்க்க...., பட்டென அனிதாவைப் பிடித்திருந்த கையை விட்டுவிட்டார்கள்.

அவர்கள் பட்டென விட்டுவிடவே...., திமிறிய வேகத்தில் தாமரையின்மீது மோதும் நிலைக்குச் சென்று...., இறுதியில் சுதாரித்து நின்றாள்.

தாமரையோ திகைத்துப் போனார். அவளது இந்த செய்கையை எதிர்பாராமல்...., எங்கே அவள் தன்மேல் மோதிவிடுவாளோ என்ற பயத்தில் சட்டென பின்வாங்க...., சுவரில் மோதிக்கொண்டார்.

அனிதாவும் இதை எதிர்பாராமல் அதிர்ந்தவள்...., வழக்கமான அவளது குறும்புத்தனம் தலை தூக்க...., அவளை ஓடிவந்து தாங்கிய தோழிகளிடம் தாமரையைக் கண்களால் காட்டி...., “விதி வலியது...”, எனச் சொல்லி, களுக்கென சிரித்தாள்.

கொலைவெறியானார்கள் மற்றவர்கள். தாமரை இருப்பதையும் பொருட்படுத்தாமல் ராதாவும் நித்தியும் அவளை மொத்தினார்கள்.

அவர்களது செய்கையைப் பார்த்த தாமரையின் கோபம் எல்லை கடக்க...., “உங்ககிட்டே பேசுனதுக்கு...., அந்த சுவத்துலே முட்டிட்டு இருந்துருக்கலாம்...”, கத்தினார்.

“அதான் முட்டிக்கிட்டீங்களே....., மறுபடியுமா....?”, அனிதா சொல்ல...., வேகமாக அவள் வாயை மூடினார்கள் மற்றவர்கள்.

அதே நேரம் சோலையும் வந்துவிட...., தாமரையின் கோபத்தையும்...., அவர்களின் சிரிப்பையும்...., சேட்டையையும் பார்த்தவள் நமக்கேன் வம்பு என்று அறையை ஒழுங்கு செய்யச் சென்றாள்.

சோலையின் முன்னால் அவர்களை எதுவும் சொல்ல முடியாமல்....., “இப்படியேதான் அடிச்சுக்கிட்டே இருக்கப் போறீங்களா...., முதல்ல போய் குளிங்க...”, அவர்களை விரட்டினார்.

விட்டால் போதுமென்று அவர்கள் மூவரும் பாத்ரூமுக்குள் சென்று புகுந்துகொள்ள...., ஆசுவாசமாக மூச்சுவிட்டார்கள். அப்பொழுது திடீரென...., “எனக்கு ஒரு சந்தேகம்....., இந்த சோலை எப்போ நாம சண்டைபோடும்போது உள்ளே வந்தா...? அவ வந்தது கூட தெரியாமல் நாம சண்டை போட்டிருக்கோம்...”, தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள் அனிதா.

“எல்லாம் உன்னால் தாண்டி...., செய்யிறதையும் செஞ்சுட்டு எப்போன்னு கேக்குறா பாரேன். பாவம் சோலை....”, நித்தி, அனிதாவை மொத்தியவாறே கவலைப்பட...., பாத்ரூமிலும் அவர்களது கொட்டம் கேட்க, தாமரை ஒரு முடிவுடன் தன் அலைபேசியை எடுத்துகொண்டு

வெளியே சென்றார்.

***

# மௌனம் – 3.

நட்பின் விதை நம்பிக்கை என்றால்
நம் நட்பின் விதை வீரியம் மிக்கதே.

தொலைபேசியை அதன் இடத்தில் வைத்த மனோவின் முகம் வழக்கத்துக்கு மாறாக இறுகியிருந்தது. ‘ச்சே...., என்ன மனுஷங்க...., ஒரு ஸ்குயர்ஃபீட்டுக்கு ஐநூறுரூபாய் செலவாக இருந்தாலும்...., ஐந்தாயிரம் ரூபாய் செலவாக இருந்தாலும்...., தாங்கள் கொடுக்கும் அந்த ரெண்டாயிரம் ரூபாய் அவர்களுக்கு பெரிதாகத் தெரியவில்லையா?’

‘எப்பொழுதும் அவர்களுக்கு நஷ்டம் வந்துவிடக்கூடாது என்பதிலும், லாபம் வரவேண்டும் என்ற கண்ணோட்டத்திலும் தாங்கள் பார்த்து பார்த்து செய்தாலும்...’, அவர்களது பேராசை அவனை ஆத்திரத்தில் குமுற வைத்தது.

எப்பொழுதும் யாரிடமும் கோபத்தைக் காட்டி பழக்கமில்லை என்பதால்...., அதை தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டான்.

முயன்று, வேலையில் கவனத்தைத் திருப்பினான். அடுத்து அவரிடமிருந்து வந்த அழைப்புகளை அவன் கண்டுகொள்ளவே இல்லை. ஒரு கட்டத்துக்குமேல் அது முடியாமல்...., தொலைபேசியை எடுத்தான்.

“சொல்லுங்க தேவன்...”.

“மனோ சாருக்கு கோபம் கொஞ்சம் அதிகமாத்தான் வருது. ஆனா உங்க நிலைமைக்கு இந்த கோபம் செட்டாகாதே...., அதே மாதிரி எங்க டீலுக்கு நீங்க சம்மதிக்கிறதைத் தவிர வேற வழியும் இல்லை...”, இப்பொழுது அவன் குரலில் கொஞ்சம் ஏளனம் குடிகொண்டிருந்ததோ....,

வெடித்துக்கிளம்பிய கோபத்தை தனக்குள் மென்று முழுங்கியவன்....., தன்னை நிதானத்துக்குக் கொண்டுவர போராடினான். ஆனாலும் தேவன் பேசுவது கொஞ்சம் அதிகப்படி எனப் புரிய....,

“ஓ...., நீங்க அப்படியா சொல்லுறீங்க. நான் என்ன நினைக்கிறேன்னா...., நம்ம டீலை முடிச்சுக்க, இதுதான் சரியான

நேரம்னு. சரி, எதுக்கும் நீங்க நம்மளோட ஒப்பந்த பத்திரத்தை பார்த்துட்டு ஒரு வார்த்தை பேசி இருக்கலாம்.

“பரவாயில்லை அதுவும் நல்லதுதான். யார் எப்படின்னு தெரிஞ்சுக்க எங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைச்சுதே. எனிவே...., உங்களோட இவ்வளவு நாள் தொழில் செய்ததில் எனக்கு ரொம்ப சந்தோசம்...”, சொன்னவன் தொலைபேசியை வைத்துவிட்டான்.

அங்கே தேவனோ நடுங்கிப் போனான். அவர்களது கம்பெனிக்கு அறுபது சதவீத லாபத்தைக் கொடுப்பது மனோவின் கம்பெனிதான். அப்படியிருக்கையில்...., வேகமாக தங்கள் ஒப்பந்த பத்திரத்தைப் பார்க்க...., அது இந்த மாதத்தோடு அவர்களது ஒப்பந்தம் முடிவடைவதை காட்டியது.

தங்களது ஒப்பந்த காலத்தை புதுப்பிக்கவேண்டிய இந்த நேரத்தில்...., அவசரப்பட்டுவிட்ட தன் முட்டாள்தனத்தை எண்ணி நொந்துபோனான். எம்.டியிடம் நல்லபெயர் வாங்கவேண்டியும்...., தன் பேராசையாலும், பொன்முட்டையிடும் வாத்தின் வயிற்றை அறுத்துவிட்டோமோ என நடுங்கிப்போனான்.

அவசரமாக மனோவிற்கு அழைக்க...., தொலைபேசியை எடுத்த மனோவோ அமைதியாகவே இருந்தான். அவனின் அமைதி தேவனின் வயிற்றை கலக்க...., “சார்...., நான் ஏதோ தெரியாமல்...”, தயங்கியவாறு இழுத்தான்.

“தெரியாமன்னு சொல்லாதீங்க தேவன். தெரிந்தே செய்தேன்னு சொல்லுங்க. இனிமேல் நாம பேச முடியாது. உங்க எம்.டி கேட்டால் நீங்களே பதில் சொல்லிக்கோங்க. உங்ககிட்டே இனிமேல் ஒரு வார்த்தை பேசக்கூட நான் தயாரா இல்லை.

“மனோ...., நான் சொல்லுவதை ஒரு நிமிஷம் கேளுங்க. இப்போ இந்த ப்ராஜெக்ட்டை நீங்க அவசரமா முடித்தே ஆகணும். உங்ககிட்டே அதிக நாளும் இல்லை. இப்போ நீங்க புது கம்பெனி தேடவே உங்களுக்கு நாள் ஆகலாம் அதனால்...”, எப்படியும் தங்கள் கெத்தை விட்டுகொடுக்கவும், இறங்கிவரவும் அவன் தயாராக இருக்கவில்லை.

அவன் பேச்சிலிருந்து அதை உணர்ந்துகொண்ட மனோ...., “அது எங்க தலைவலி தேவன். அதை நாங்க பார்த்துக்கறோம்..., அதைப்பற்றி நீங்க

கவலைப்படாதீங்க சரியா...”, சொன்னவன் அவன் பதிலை எதிர்பாராமல் வைத்துவிட்டான்.

அவனிடம் வீரமாகப் பேசிவிட்டாலும்...., அடிமனதில் எழுந்த சிறு கலக்கம் மனோவைப் பாடாய் படுத்தியது. அதன் பிறகு வேலையில் கூட அவனால் கவனம் செலுத்த முடியவில்லை.

மதியம் அவன் கேபினுக்குள் நுழைந்த அருணும் ராஜுவும் அவன் இருந்த நிலையைப் பார்த்து திடுக்கிட்டார்கள். தாங்கள் வந்ததைக் கூட உணராமல்...., யோசனையில் மூழ்கியிருந்த அவன் அருகில் சென்றார்கள்.

“மனோ...., மனோ...., என்னடா ஆச்சு...., ஏன் ஒரு மாதிரி இருக்க?...”, இருவரும் பதட்டமாகக் கேட்டார்கள்.

அவர்களை நிமிர்ந்து பார்த்தவன்...., “வாங்க உங்கக்கிட்டே பேசணும்...”, சொன்னவன்...., அவர்களை கான்பரன்ஸ் ஹாலுக்கு அழைத்துச் சென்றான்.

“என்ன மனோ...., சாப்பிட போற நேரத்தில் மீட்டிங். வழக்கமா சாயங்காலம் தானே பேசுவோம்...”, ராஜுவிற்குப் பசி வயிற்றைக் கிள்ள...., வயிற்றைத் தடவியவாறு கேட்டான்.

“டேய் சாப்பாட்டுராமா...., சாப்பாடு எங்கேயும் ஓடிடாது. அவனே ஏதோ அவசரம்னு சொல்லுறான், அதைப் புரிஞ்சுக்காமல்...”, எரிச்சலானான் அருண்.

ஆனால் மனோவோ...., அறைக்குள் நுழைந்து, இருக்கையில் அமரும்வரை அமைதியாக இருந்தவன்...., அவர்களும் அமரவே...., “இது அவசரமான விஷயம், அதான்...”, சற்று இடைவெளி விட்டான்.

அவனது அமைதியே பிரச்சனை பெரிதென்பதை உணர்த்த...., “என்ன ஆச்சு மனோ...., எதுவா இருந்தாலும் சொல்லு...”, அவனை தூண்டினான் அருண்.

“எல்லாம் அந்த தேவன் தான்...., இதுக்கு மேலேயும் நாம அவங்களோட இருக்குறது சரிவராது”, அவன் குரலில் இருந்த இறுக்கமே, அவன் ஒரு முடிவிற்கு வந்துவிட்டதை உணர்த்தியது.

ஆனாலும் அதை கண்டுகொள்ளாமல்...., “என்ன விஷயம் மனோ...”, அருண் கேட்டான்.

மனோ நடந்தவற்றைச் சொல்ல...., “அவன் அப்படியா சொன்னான்...., அவனை என்ன செய்தால் தகும்? இப்படி கடைசி நேரத்தில் காலை வாரினால், நாம என்னதான் செய்யிறது? இப்போ சரியா அறுபது நாள்தான் நம்ம கையில் இருக்கு.”

“அறுபத்தியோராம் நாள், சாவியை அவங்க கிட்டே நாம ஒப்படைக்கணும். இந்த நேரத்தில்....., அவன...”, கை முஷ்டி இறுக்கி மேஜையின்மேல் குத்தினான் அருண்.

ராஜுவோ...., “மனோ...., அவன் கேக்குறதை கொடுத்துட்டா பிரச்சனை முடிஞ்சுதே. பேசாமல் ஒத்துக்கோ...”, சாதாரணமாகச் சொன்னான்.

அருண் கோபமாக எதையோ சொல்லப் போகையில்...., “ராஜு...., அவன் இதோட நிறுத்திடுவான்னு எப்படி நம்புறது. அவன் நேர்மையா கேட்டிருந்தால் நாம பரிசீலனை பண்ணி இருந்திருக்கலாம். ஆனால் அவன்...., நம்ம வீக்னசில் அடிக்கப் பார்க்குறான்.

“இப்போ சொல்லு... அவனுக்கு அடங்கிப் போகணுமா...”, அவன் கண்களுக்குள் ஊடுருவி மனோ கேட்க, ராஜு திகைத்தான்.

“அப்படியா சொல்லுற..., நீ என்ன முடிவெடுத்தாலும், எனக்குச் சம்மதம்தான் மனோ...., நீயே சொல்லு...”, ராஜு உடனே ஒத்துக்கொண்டான்.

அருண் அமைதியாக இருக்க...., “என்ன அருண்...., நீ எதையுமே சொல்ல மாட்டேங்குற?...”,

“நீயே ஒரு முடிவிற்கு வந்திருப்பியே மனோ...., உன்னோட தீர்மானம் எப்பவும் சரியாகத்தான் இருக்கும். அந்த நம்பிக்கை எனக்கும் நிறையவே இருக்கு. இப்போ நீ சொல்லு...., என்ன செய்யப்போறோம்...”, தன்மேல் இவ்வளவு நம்பிக்கை வைக்கும் தோழர்களை எண்ணி வியந்தவன்,

“பேசாமல் பேப்பரில் ‘ஆட்’ கொடுக்கலாம். எப்படியும் நம்ம எதிர்பார்ப்புக்கு ஏற்ற ஒரு கம்பெனி அமையாமல் போகாது. எதையுமே

முயற்சி செய்து பார்க்காமலும் இருக்க முடியாது. என்ன சொல்லுறீங்க...”, அவர்களைப் பார்த்தவாறு கேட்டான்.

“மனோ...., இது...”, தயக்கமாகத் துவங்கிய அருண் முழுதாக கேட்காமல் நிறுத்திவிட்டான்.

“என்மேல் நம்பிக்கை இருக்குல்ல...., அப்போ வாங்க சாப்பிடப் போகலாம்...”, ஒரு முடிவோடு எழுந்தான்.

“டேய்...., எனக்கு பசி போய்டுச்சு...”, ராஜு சொல்ல...., அவனை வாஞ்சையாகப் பார்த்தார்கள்.

மனோவும் அருணும் அவன் பக்கம் சென்றவர்கள். இருபக்கமும் பக்கத்துக்கு ஒருவராக அவனை தோளோடு அனைத்துக் கொண்டார்கள். அந்த அணைப்பே அவனுக்கு நம்பிக்கை அளிக்க...., தானும் அவர்களை அணைத்துக் கொண்டான்.

“ராஜு...., அம்மா உனக்கு பிடிச்ச மீன் குழம்பு வச்சிருக்கேன்னு சொன்னாங்க...., நீ என்னன்னா பசி இல்லன்னு சொல்லிட்டியே. சரி பரவாயில்லை நான் சாப்ட்டுக்கறேன்...”, அருண் குறும்பாகச் சொன்னான்.

“என்னது மீன் குழம்பா...., எனக்கு பசி இல்லன்னு யார் சொன்னா...., செம பசி...., நான் போறேன்...”, அவர்கள் பிடியிலிருந்து விலகி ஓடினான்.

“டேய் அதெல்லாம் தர முடியாது. நீதானே பசிக்கலன்னு சொன்ன...”, அவனை விரட்டிச் சென்றான் அருண். அவர்கள் செல்லவே...., மேஜைமேல் இருந்த தொலைபேசியை எடுத்த மனோ....,

“ராகவன்...., உடனே ஒரு விளம்பரம் கொடுங்க...., எல்லா ஆங்கில நாளிதழிலும் இது வரணும். அதுவும் நாளைக்கே. தொடர்ந்து மூணு நாள் வர மாதிரி போடுங்க...”, சொன்னவன் விளம்பர வாக்கியங்களையும் சொல்லிவிட்டே சென்றான்.

திடனாக முடிவெடுத்தாலும்...., அடிமனதில் மனதை அரிக்கும் பயம் மட்டும் விலகவில்லை. வீட்டிற்கு செல்லும் வழியிலும் சரி...., வீட்டுக்கு சென்ற பிறகும் சரி...., மற்றவர்கள் இருவரும் ‘எல்லாம் மனோ

பார்த்துகொள்வான்’ என்ற நம்பிக்கையில்...., அத்தோடு பிரச்சனையை மறந்தவாறு சாப்பாட்டில் மூழ்கிவிட...., வாயில் இருந்த உணவு தொண்டையின் கீழ் இறங்க சண்டித்தனம் செய்தது.

***அலைபேசியை எடுத்துச் சென்ற தாமரை முதல் வேலையாக, நித்தி, அனிதா, ராதா மூவரின் பெற்றோருக்கு அழைத்துப் பேச....., அம்மூவரின் பெற்றோரும் என்ன செய்வது எனத் தெரியாமல் கலங்கினார்கள்.

பெரியவர்கள் அவர்களை நினைத்து கலங்க...., சிறியவர்களோ தங்களுக்குள் அடித்துக் கொண்டார்கள். ஒரே சுடிதாருக்கு துவங்கிய அவர்களில் சண்டை...., இறுதியாக...., அனிதா தான் புதிதாக வாங்கிய பிங்க் வண்ண உள்ளாடையைக் காணவில்லை என்பதில் வந்து முடிந்தது.

“ஏய்...., ஒழுங்கா உண்மையை சொல்லிடுங்கடி. எவ என்னோட புது துணியை எடுத்தது...”, அவள் மிரட்ட....,

“அடச்சீ...., அந்த கருமத்தை எவ எடுப்பா...”, முகத்தை சுளித்தவாறே சொன்னாள் நித்தி.

“என்னடி...., முகம் இப்படி அஷ்டக்கோணலாகுது...., நீ பேசுறதைப் பார்த்தால்...., அதைப் போடுற வழக்கமே இல்ல போல இருக்கு. எதுக்கும் செக் பண்ணிடுறேன்...”, கண்கள் மின்ன...., சொன்னவாறு நித்தியின் அருகில் வந்தாள்.

“அனி...., எதுல விளையாடுறதுன்னு ஒரு விவஸ்தை வேண்டாம். பேசாமல் போய்டு...”, விரல் நீட்டி எச்சரித்தவாறு ஓடத் தயாரானாள்.

“உன்கிட்டே உண்மை இருந்தால் நீ எதுக்குடி பயப்படுற. அங்கேயே நில்லு பார்ப்போம்...”, நித்தி ஓட முயல்வதை இரு பக்கமும் கைநீட்டி வழி மறித்தவாறே அவளை நெருங்கினாள்.

ராதாவோ அவர்கள் இருவரின் விளையாட்டைப் பார்த்து சிரித்தவாறு இருந்தாள். வயிற்றைப் பிடித்துகொண்டு அவள் சத்தமாக சிரித்துவிட....,

“ஏண்டி...., நாங்க சண்டைபோடுறதை பாத்து சிரிக்கவா செய்யிற...., அனி..., எனக்கென்னவோ உன்னோட துணியை அவதான்

எடுத்திருப்பாளோன்னு சந்தேகமா இருக்கு. வா அவளைப் புடிப்போம்...", இருவரும் சேர்ந்து ராதாவின் பக்கம் திரும்ப..., அலறிவிட்டாள் அவள்.

"ஏய்...., உங்களுக்கு என்னைப்பத்தி தெரியாதா...? நான் இந்தமாதிரி வம்பெல்லாம் செய்ய மாட்டேண்டி...", கெஞ்சினாள் ராதா.

"ஆமா ஆமா...., நீ இந்தமாதிரி வம்பெல்லாம் செய்யவே மாட்ட. நீதான் ஊமைக்கோட்டானாச்சே...", ஓடிய ராதாவை விரட்டினார்கள்.

இருவரும் அவளை பிடித்த அதே நேரம்...., "உங்களுக்கு எல்லாம் ஒரு முறை சொன்னால் புரியாதா. அதெப்படிதான் இருபத்திநாலு மணிநேரமும் சண்டை போட்டுட்டே இருக்கீங்களோ...., நீங்கல்லாம் ஃப்ரண்ட்ஸ்சா?...", கத்தினார் தாமரை.

"நாங்க ஃப்ரண்ட்ஸா...., உங்ககிட்டே இவ்வளவு பெரிய பொய்யை யார் சொன்னது. நாங்க எல்லாம் எனிமீஸ்!...., அப்படித்தானேடி....", அனிதா கேட்க...., மற்ற இருவரும் திருதிருத்தார்கள்.

"உங்க கொட்டத்துக்கெல்லாம் முடிவு கட்டியாச்சு. உங்க படிப்பு முடிஞ்சதுல்ல...., நாளைக்கே உங்களையெல்லாம் ஊருக்கு கூட்டி போக உங்களை பெத்தவங்க வரப்போறாங்க. எல்லாம் பெட்டி படுக்கையை எடுத்துட்டு தயாரா இருங்க", கண்டிக்கும் குரலில் சொன்னார்.

"ஹையோ நிஜம்மாவா...., ஹப்பா இவளுக தொல்லையில் இருந்து எனக்கு விடுதலை கிடைக்கப் போகுதா...? இந்த சந்தோசத்தை கொண்டாடவே, எங்கேயாவது வெளியே போகணுமே...., நீங்க யாராவது வரீங்களா...", அனிதா கேட்க...., மற்ற இருவரும் அவளை முறைத்தார்கள்.

"எங்களைவிட்டு போறதை உனக்கு கொண்டாடணும்...., அதுக்கும் நாங்கதான் வேணுமா....., போடி...", நித்தி பொரிய...., ராதாவோ எதுவும் சொல்லாமல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

"அட...., வரலன்னா வரலன்னு சொல்லிட்டு போங்க. அதுக்கு ஏண்டி என்னை வில்லி ரேஞ்சுக்கு காட்டுறீங்க...", தோளைக் குலுக்கிவிட்டுச் சென்றாள்.

நித்தியோ....., “நாமளும் வெளியே போகலாம் வரியா ராதா...”, ராதாவிடம் கேட்க....,

“இல்ல நான் வெளியே எங்கேயும் வரலை...”, அறைக்குள்ளேயே அடைந்துகொள்ளச் சென்றாள் ராதா. நித்தியும் அவளை வற்புறுத்தாமல்...., கிளம்பி வெளியே சென்றாள்.

அவர்கள் இருவரும் செல்லும் முன்னர்...., “சமைச்சு வச்சிருக்கேன், அதை சாப்பிட்டு போங்க...”, சோலை சொல்ல...., அவளது அழைப்பை கண்டுகொள்ளும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை.

அனிதாவோ, தனக்கு பிரட் போதும் என சொல்ல...., “உங்களுக்காகத்தானே சமைச்சேன். வேண்டாம்னா முதல்லையே சொல்லறதுக்கு என்ன?...”, ஆற்றாமையாகப் புலம்பினாள் சோலை.

“நீயாவது வரியா இல்ல...”, ராதாவிடம் கேட்க...., “எனக்கு ப்ரெட்டும் ஆம்லெட்டும் போதும்...”, சின்னக் குரலில் சொன்னாள்.

“அதானே...., நீ பேசினாலோ...., சாப்ட்டாலோ...., ஊர் சுத்தினாலோ உலகமே தலைகீழே சுத்துமே... அதெப்படிதான் மூணுபேரும் நாலு துருவங்களா இருக்கீங்களோ...., உங்களைச் சொல்லி குத்தமில்லை. உங்களைப் பெத்தவங்களை சொல்லணும்.

“ஹாஸ்டல்ல போட்டா...., ஒருத்திக்கு சாப்பாடு ஒத்துக்கலை..., ஒருத்திக்கு அவ இஷ்டத்துக்கு இருக்க முடியலை...., ஒருத்திக்கு ஹாஸ்டல்ல இருக்க பயம்....., மூணுபேரையும் உங்க விருப்பத்துக்கு மதிப்பு கொடுத்து, செலவானாலும் பரவாயில்லன்னு என்னையும் வேலைக்கு வச்சு,

“தனி வீட்டையும் வாடகைக்கு பிடிச்சு...., இப்படி எல்லாம் உங்க இஷ்டத்துக்கே செய்யிறாங்க இல்ல...., அதான் ஒரே வீட்டில் இருந்தாலும் கொஞ்சம்கூட ஒத்துமையே இல்லாமல் இருக்கீங்க. அதெங்க...., வீட்டில் அக்கா தங்கச்சி...., அண்ணன் தம்பி கூட பொறந்திருந்தால் அனுசரிச்சுப் போறதுன்னா என்னன்னு தெரிஞ்சிருக்கும்.

“இங்கேதான் வீட்டுக்கு ஒத்த புள்ளைங்களா போயிட்டீங்களே...., அதான் பெத்தவங்களை ஆடவச்சே வேடிக்கைப் பார்க்குறீங்க. ஹம்.....,

வாழ்க்கையோட அருமையும்...., நட்போட பெருமையும் எப்போதான் உங்களுக்கெல்லாம் புரியப் போகுதோ....

“நான்வேற...., பயித்தியக்காரி மாதிரி புலம்புறேன்...., யார் கேக்கணுமோ அவங்க கேக்கறதுக்கு இல்லை. எனக்கு தேவையா...”, ஆற்றாமையாகப் புலம்பினாலும் அவர் கண்கள் கலங்கவே செய்தது.

அன்றைய நாள் முழுவதும் மூவரும் அவர்கள் இஷ்டத்துக்கு இருக்க...., மறுநாள் காலையிலும்..., மற்றொரு பிரச்சனையோடே அவர்கள் நாள் விடிந்தது.

ஆனால், அன்று காலையில் தங்கள் அறைக்குள் நுழைந்தவரைப் பார்த்து மூவருமே திகைத்துப் போனார்கள். கைகளில் வைத்திருந்த துணிகளை கீழே போட்டவர்கள்...., ஒருவர் பின் ஒருவர் ஒளிந்துகொள்ள வழி தேடினார்கள்.

வழக்கமாக கேலி செய்யும் அனிதா கூட...., கப்பென வாயை மூடிக்கொண்டு திருதிருவென விழித்தாள்.

அவர்கள் விழிப்பதைப் பார்த்தவர்...., “என்னடா...., அவங்க அவங்க வீட்டுக்கு போய் செட்டில் ஆகலாம்னு பார்த்தா...., ‘இவன் வந்திருக்கானே, என்னவா இருக்கும்’னு தானே யோசிக்கிறீங்க...”, மீசையை நீவியவாறே அவர் கேட்க...., மூவருக்கும் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

“இல்ல...., அப்படியெல்லாம் நினைக்கலை...”, நித்யாதான் வாயைத் திறந்தாள்.

“அப்படி நினைக்கலைன்னா சந்தோசம் தான்...., உங்களுக்கு ஒரு முக்கியமான விஷயத்தை சொல்லத்தான் வந்தேன். இன்னும் கொஞ்ச நாளைக்கு நீங்க இங்கேதான் இருக்கப் போறீங்க. படிப்பு முடிஞ்சுடுச்சு இனிமேல் என்ன செய்யிறதா இருக்கீங்க...”, மூவரையும் கூர்மையாக பார்த்தவாறே கேட்டார்.

“கொஞ்சநாள் அப்படியே ஜாலியா இருந்துட்டு...”, அனிதா சொல்லத்துவங்கவே அவர் பார்த்த பார்வையில் கப்பென வாயை மூடிக் கொண்டாள்.

“நான் உங்க மூணு பேருக்கும் ஒரே இடத்தில் வேலை பார்த்து வச்சிருக்கேன். இன்னும் ரெண்டு நாளில் நீங்க அங்க ஜாயின் பண்ணப் போறீங்க அவ்வளவுதான்...”, சொன்னவர் வெளியேறினார்.

பெண்கள் மூவரும் சிலைபோல் நின்றார்கள்.

***

# மௌனம் – 4.

பார்க்கும் பார்வையின் பொருள்......

பார்ப்பவரின் கண்ணிலா...

பார்ப்பவரின் மனதிலா....

அன்று காலையில் வழக்கமான வேலைகளை முடித்துவிட்டு அலுவலகம் வந்த மனோவின் மனம் கலக்கத்தில் இருந்தாலும்...., அதை வெளிக்காட்டாமல் சாதாரணமாக இருக்க முயன்றான்.

அருணும் ராஜுவும் தங்கள் வேலைகளை கவனிக்கச் சென்றுவிட்டார்கள். அப்பொழுது அறைக்கதவு தட்டப்படவே...., “எஸ்...”, அவன் அனுமதியளிக்கவே ராகவன் உள்ளே நுழைந்தான்.

கையில் கத்தை காகிதங்கள். “குட்மார்னிங் சார்...., நாம மூணு நாளா தொடர்ச்சியாக கொடுத்த விளம்பரங்களுக்கு எக்கச்சக்க கொட்டேஷன் குவிந்து இருக்கு. நிறைய முதல்தர நிறுவனங்கள் கூட மெயில் அனுப்பி இருக்காங்க...”, அவன் சொல்லச் சொல்ல...., மனோவின் முகம் பிரகாசமானது.

இதுவரை மனதை அழுத்திய அனைத்து பாரங்களும் விலகி ஓட...., “நிஜமாதான் சொல்லுறியா ராகவா...., கேக்கவே எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா....? அப்போ உடனே எல்லாத்தையும் பார்த்து....., அதில் முதல் பத்து நிறுவனங்களோட பேப்பர்ஸ் மட்டும் எடுத்துட்டு வா...”, உற்சாகமாகச் சொன்னான்.

அவனது உற்சாகம் ராகவனையும் தொற்றிக்கொள்ள...., “சார்...., நீங்க கேப்பீங்கன்னு தெரியும், அதான் நானே எடுத்துட்டு வந்துட்டேன்...”, சொன்னவன், கையில் இருந்த பேப்பர்களை அவன் முன் வைத்தான்.

“ப்ரில்லியண்ட் ராகவா....., நீ இந்த கம்பெனிக்கு கிடைத்தது மிகப்பெரிய வரம்...”, மனமார பாராட்டினான்.

“எனக்கு இப்படி ஒரு வாய்ப்பை கொடுத்தது உங்க பெரிய மனசு சார்...”, அவன் நெகிழ்ந்தான்.

“கமான் ராகவா...., இப்படி பேசக்கூடாதுன்னு உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கேன்....., இனிமேல் இப்படி பேசினால் என்கிட்டே உதைதான் வாங்குவ. சரி நீ போ...., நான் இதையெல்லாம் பார்த்துட்டு உன்னை கூப்பிடுறேன்....”, சொன்னவன் அவனை அனுப்பினான்.

கத்தை பேப்பர்களை கையில் எடுத்தவனின் கரங்களோ மெல்லிய நடுக்கத்துக்குச் சென்றது. கண்களை அந்த பேப்பரில் செலுத்த...., கண்களில் இருந்த நீர் படலம் அவன் பார்வையை மறைத்தது.

உடனடியாக தன் அலைபேசியை எடுத்து நண்பர்களை அழைத்தவன்...., “உடனே கேபினுக்கு வாங்கடா...”, சொல்லிவிட்டு வைத்துவிட்டான்.

ஏதோ பிரச்சனை என்று எண்ணி...., பரபரப்பாக வந்தான் அருண். நண்பனின் முகத்தில் தெரிந்த ஒளியில் தானும் மலர்ந்தான்.

“என்ன மனோ...., என்ன விஷயம்..., ரொம்ப சந்தோசமா இருக்குற மாதிரி இருக்கு...”, கேட்ட நண்பனை ஓடி வந்து தழுவிக் கொண்டான். அவனுக்கு இணையாக தானும் அவனை இறுக்கியவன்....,

“என்னன்னு சொல்லுடா...., ஆர்வம் தாங்கலை...”, சஸ்பென்ஸ் தாங்காமல் கேட்டான்.

“சொல்லுறேண்டா ராஜுவும் வந்துடட்டும்...”, அவன் சொல்லி முடிப்பதற்கும், ராஜு பரபரப்பாக வருவதற்கும் சரியாக இருந்தது.

அவன் வியர்வையில் குளித்திருப்பதிலிருந்தே, மிகவும் பதட்டமாக இருக்கிறான் என்பது புரிந்தது. “மனோ...., ஏதாவது பிரச்சனையா...., வான்னு மட்டும் சொல்லிட்டு வச்சுட்ட...., அதான் அங்கே இருந்து சைக்கிள்ள வரதுக்குள்ள டைம் ஆயிடுச்சு”, வியர்வையை புறங்கையால் துடைத்தவாறே சொன்னான்.

அவனைப்பற்றி தெரிந்ததால் மேலே எதையும் அவனிடம் விவாதிக்காமல், கையில் இருந்த பேப்பர்களை அவர்களிடம் கொடுத்தான். புரியாமல் வாங்கிப் பார்த்தவர்கள்...., அதைப் படித்தவுடன் முகம் மலர்ந்தார்கள்.

“மனோ...., இதெல்லாம் ரொம்பவே பிரபலமான கம்பெனிங்கடா. இவங்க எல்லாமாகொட்டேஷன் மெயில் அனுப்பி இருக்காங்க...?

இதையெல்லாம் பார்க்கவே ரொம்ப சந்தோசமா இருக்குடா. அவங்க, நம்மளோட டீலிங் வச்சுக்குறாங்களா இல்லையா என்பது அடுத்த படிதான்....,

“ஆனால் இதையெல்லாம் பார்க்கவே எனக்கு...., இது எல்லாம் உன்னால் தாண்டா மனோ. இந்த கௌரவமான வாழ்க்கை...., கார், பணம்...., பங்களா...., நீ மட்டும் இல்லன்னா...”, அவனால் மேலே சொல்ல முடியாமல் குரல் தடுமாறியது.

“ம்ச்...., அருண்...., இது எல்லாத்துக்கும் பிள்ளையார் சுழி போட்டது நீதாண்டா. நீ என்னன்னா...”, மனோவும் நெகிழ்ந்தான்.

அவர்களையே பார்த்துகொண்டிருந்த ராஜுவோ...., “நான்தான் இங்கே உதவாக்கரை இல்ல...”, அவர்களை விட்டு தூரமாகச் சென்றவாறு கேட்க...., மற்ற இருவரும் தங்கள் உலகில் இருந்து கலைந்து...., அவனிடம் விரைந்தார்கள்.

“ராஜு...., நாம உருவாக்குற ஒவ்வொரு கட்டடமும்...., உன்னோட உழைப்பால்தான் உயர்ந்து வருது. உன்னோட உழைப்பு இல்லாமல் நாங்க ரெண்டுபேருமே இல்லடா...”, மூவரும் சேர்ந்து அணைத்துக் கொண்டார்கள்.

மூவரும் அமர்ந்து பேப்பர்களைப் பார்வையிட...., அவர்களின் அலுவலகத்தின் வாயிலில் மெல்லிய பரபரப்பு. வாசலில் நுழைந்தவரைப் பார்த்த அலுவலர்கள் அனைவரின் முகங்களிலும் மரியாதை தாண்டவமாடியது.

அனைவரும் அவரவர் இருக்கையில் இருந்து எழுந்து...., அவருக்கு மரியாதை செலுத்த...., அவரைப் பார்த்த ராகவன் எழுந்து ஓடி வந்தான். “சார்...., வாங்க...”, மரியாதையாக வரவேற்றான்.

“என்னப்பா...., நல்லா இருக்கியா...? சரி அவங்க எல்லாம் எங்கே...? ரொம்ப பிஸியா இருக்காங்களா...?”, கேட்டவாறே வேகமாக நடந்தார்.

அவருக்கு இணையாக நடந்தவாறே...., “மூணு சாருங்களுமே இங்கே ஹால்லதான் இருக்காங்க. வாங்கசார்...., இந்தபக்கம்...”, கைகாட்டியவாறு அவரை அழைத்துச் சென்றான்.

ஹாலின் முன்னால் வந்து நின்றவுடன்...., “இனிமேல் நான் பார்த்துக்கறேன்...”, அவனை அனுப்பினார்.

அவனும் அவரிடம் விடைபெற்று சென்றான். கதவைத் தட்டியவர்...., அவர்கள் அனுமதிக்கும் முன்பே உள்ளே நுழைய...., ஒருவருக்கு ஒருவர் அணைத்திருந்தவர்கள்...., யார் என்பதுபோல் திரும்பிப் பார்க்க...., உள்ளே நுழைந்தவரைக் கண்டு முகம் மலர்ந்தார்கள்.

“ஐயா...., நீங்க இங்கே...”, கேட்டவர்கள்...., அவர் காலில் விழுந்து வணங்கினார்கள்.

“நல்லா வருவீங்கப்பா...., நல்லா இருங்க...”, அவர்களை தோள் தொட்டு எழுப்பி நிறுத்தியவர்...., ஒவ்வொருவர் முகத்தையும் தீர்க்கமாகப் பார்த்தார். அவர் பார்வையை உணர்ந்து, பேசாமலே நின்றார்கள்.

“ஏம்ப்பா..., நான் இங்கே வரக்கூடாதா...?”, அவர் கேட்க....,

“ஐயோ ஐயா அப்படி இல்லை. உங்களுக்கு ஏன் சிரமம்னுதான்....., நீங்க ஒரு மிஸ்ட் கால் கொடுத்திருந்தால் போதுமே...., நாங்களே வந்திருப்போமே...”, மனோ பணிவாகச் சொன்னான்.

“ஏண்டா மனோ...., அவரென்ன உன் லவ்வரா...., மிஸ்ட் கால் கொடுத்தால் போதும்னு சொல்லுற...”, அந்த நேரத்திலும் அருண் கலாய்க்க,

“படவா..., நீ மாறவே இல்லை இல்ல...”, அவன் முதுகில் அடித்தார்.

“ஐயா...., நின்னுட்டே இருக்கீங்களே...., வாங்க உக்காருங்க...”, ராஜு சொல்ல...., அவன் தோளை ஆதரவாக தட்டிக் கொடுத்தார்.

மனோவும்...., “வாங்க உக்காருங்க....”, அவரை அழைத்துச் சென்று இருக்கையில் அமர்த்தினர். “நீங்களும் உக்காருங்கப்பா...”, அவர் அழுத்திச் சொல்லவே...., மறு பேச்சின்றி அமர்ந்தார்கள்.

“நீயும் மாறவே இல்லை ராஜு...., சரி என்ன எல்லோரும் வேலையைப் பார்க்காமல் ஒரே இடத்தில் இருக்கீங்க. ஏதாவது முக்கியமான பேச்சுவார்த்தையா...? நான் குறுக்கே புகுந்துட்டேனா...?”, சந்தேகமாகக் கேட்டார்.

“உங்களை விட முக்கியமான விஷயம் எதுவும் இல்லை. ஒரு சந்தோஷமான விஷயம்...”, சொன்னவர்கள்...., ஒருவர் மாற்றி ஒருவர்...., அது என்னவென்று விளக்கினார்கள்.

அவர்கள் முகங்களில் தெரிந்த மகிழ்ச்சியில் அவர் முகமும் மலர்ந்தது. “இது ரொம்பவே சந்தோசப்படவேண்டிய விஷயமாச்சே...., வாழ்த்துக்கள்...”, அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

“எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. அதுவும் உங்க எல்லோர் முகத்திலும் சந்தோஷத்தைப் பார்க்கும்போது மனசுக்கு நிறைவா இருக்கு”, உள்ளார்ந்த அன்போடு சொன்னார்.

அப்பொழுது ராகவன் கதவைத் தட்டிவிட்டு...., ஒரு ஃப்ளாஸ்க் மற்றும் நான்கு கப்புகளோடு வரவே...., “ஐயா...., ராகவனுக்கு நாங்க எதுவுமே சொல்லவேண்டாம்....., எல்லாவற்றையும் பொறுப்பாக செய்கிறான். இப்போகூட பாருங்க,

“நீங்க வந்துருக்கீங்க என்றவுடன்...., நாங்க சொல்லாமலே காஃபி எடுத்துட்டு வந்துட்டான் பாருங்க...”, மனோ சொல்லவே...., ஒரு விரிந்த புன்னகையோடு அனைவருக்கும் கப்புகளில் காஃபியை ஊற்றிக் கொடுத்தான்.

“ராகவ்...., ஆபீஸ் பையனை கூப்பிடாமல் நீ எதுக்கு இதையெல்லாம் செய்யிற...”, மனோ கேட்டதற்கு புன்னகையையே பதிலாக்கிவிட்டு அங்கிருந்து சென்றான்.

அவன் சென்றவுடன்...., “நல்ல பையன்...”, அவன் முதுகையே பார்த்தவாறு சொன்னார். அவர் சொன்னதை அனைவரும் அமைதியாக ஆதரித்தார்கள்.

காபி குடித்து முடித்தவுடன்...., “சரிப்பா நான் கிளம்புறேன்...., சும்மா உங்களையெல்லாம் பார்த்துட்டு போகலாம்னுதான் வந்தேன்...”, சொன்னவர் இருக்கையில் இருந்து எழுந்தார்.

“ஐயா...., உங்களுக்குத்தான் எங்கமேல் எவ்வளவு பாசம். வாங்க நான் கூட்டி போய் விடுறேன்...”, ராஜேஷ் அவரை கூட்டிச் செல்ல முன்வந்தான்.

அருணோ...., “ஐயா...., உங்களைப்பத்தி எங்களுக்குத் தெரியாதா...? பசங்க ஒழுங்கா இருக்கானுங்களா இல்லையான்னுதானே பார்க்க வந்தீங்க...”, கேலி செய்தான். அவனுக்கு சிரிப்பையே பதிலாக்கியவர் கிளம்ப முயன்றார்.

அவர் இருக்கையிலிருந்து எழப் போகையில்...., “ஐயா...., நீங்க வந்த விஷயத்தை சொல்லாமலே கிளம்பிட்டீங்களே...., சொல்லிட்டு போங்க...”, அவரைத் தடுத்தான் மனோ.

அவர் பார்வையில் ஒரு மெச்சுதல் வந்து போனது. தான் எடுத்த முடிவு எவ்வளவு சரி என்பதை கண்ணாரக் கண்டு திருப்தி அடைந்தார். அருணும் ராஜுவும் ஐயாவை கேள்வியாகப் பார்க்க...., வந்தவர் ஆர்ப்பாட்டமாக சிரித்தார்.

“படவா...., அப்படியே மனுஷன் மனசை படிச்சிடுவடா...., கேடிடா நீ...”, அவன் வயிற்றில் குத்தியவாறு வியந்து..., மெச்சி பாராட்டினார்.

மெல்லியதாக புன்னகைத்தவன்...., “நீங்க இன்னும் விஷயத்துக்கே வரலையே ஐயா...”, காரியத்திலேயே கண்ணாக இருந்தான்.

“ஆரிய கூத்தாடினாலும்...., காரியத்திலேயே கண்ணா இருக்கடா. நான் ஒரு உதவி வேண்டிதான் வந்தேன். ஆனா இப்போ அதை நான் கேட்பது சரியா வராதுன்னுதான் கிளம்பிட்டேன். இதுக்கு முன்னாடி நான் எந்தவித தயக்கமும் இல்லாமல்...., உங்ககிட்டே கேட்டு இருக்கேன், நீங்களும் செஞ்சு இருக்கீங்க.

“ஆனால் நான் இப்போ கேக்கப்போறது...., உங்க வளர்ச்சிக்கு தடையா இருக்கும்னு நான் நினைக்கிறேன். அதான் சொல்லாமலே கிளம்பிட்டேன்..., சரி...., அதுக்கு நான் வேற இடம் பார்த்துக்கறேன்...., கிளம்புறேன்”, எழுந்து கொண்டார்.

அவர் கரத்தை பிடித்து அமர வைத்தவன்...., “நீங்க என்னன்னு சொல்லுங்க. அது வேணுமா வேண்டாமான்னு நாங்க முடிவு பண்ணிக்கிறோம்”, பிடிவாதமாகச் சொன்னான் மனோ.

அவனிடம் எதுவும் சொல்லாமல்...., தான் கொண்டுவந்திருந்த செய்தித்தாளில்...., அவர்களது விளம்பரப் பகுதியை வட்டமிட்டு காட்டியிருந்தார்.

“எங்க ‘ஆட்’தானே.... இதுக்கென்ன...”, அருண் கேட்க...., “ஓ...., நீங்களும் இந்த விளம்பரத்தைப் பார்த்தீங்களா ஐயா...., அதுவிஷயமாதான் எங்களைப் பார்க்க வந்தீங்களா...”, ராஜு கண்களை பேப்பரில் ஓட்டியவாறே சொன்னான்.

அவர் மனோவின் முகத்தைப் பார்க்க...., “யாரா இருந்தாலும் சரி...., நீங்க அவங்களை வரச்சொல்லுங்க ஐயா. நாங்க பார்த்துக்கறோம். திறமை இல்லாதவங்களை, நீங்க சேர்த்துக்கச் சொல்ல மாட்டீங்க என்ற நம்பிக்கை எங்களுக்கு நிறைய இருக்கு...”, அவன் விளக்கத்தில், அவர் முகத்தில் அதே மாறாத புன்னகை.

“ஐயா...., நீங்க இதைக் கேக்கவா வந்தீங்க. பிறகு ஏன் சொல்லாமலே கிளம்பப் பார்த்தீங்க. நீங்க கேட்டு எதையுமே நாங்க மறுக்கமாட்டோம்”, அருணும் ராஜுவும் சொன்னார்கள்.

“நீங்க எதையுமே மறுக்க மாட்டீங்கன்னு எனக்குத் தெரியும். ஆனா நான் இப்போ கேட்பது அதிகப்படியான உதவி என்று எனக்குத் தோணுது அதான்..., அது மட்டும் இல்லை...., நான் இப்போ கேட்கும் உதவிக்கு உரிமையானவர்கள் அவ்வளவு தகுதி வாய்ந்தவர்கள் தானா என்பதே எனக்கு பெரிய சந்தேகம்.

“அது மட்டும் இல்ல...., இப்பொழுது நீங்களே, உங்க வேலையை முடிக்க புது கம்பெனியைத் தேடும் இந்த நேரத்தில்..., உங்களது முன்னேற்றத்துக்கு தடையாக எதையும் செய்ய நான் தயாராக இல்லை அதான்...”, முதல் முறையாக அவர் பேச்சில் சிறு தயக்கம் எட்டிப் பார்த்தது.

அதை உணர்ந்த மனோவோ...., “ஐயா...., நீங்க எதையுமே சொல்ல வேண்டாம். நாளைக்கு அவங்களை எங்கக்கிட்டே அனுப்புங்க. எனக்கும் ராஜுவிற்கும் இன்டீரியர் டெக்கரேஷன் பற்றி ஏற்கனவே கொஞ்சம் தெரியும்.

“எப்படியும் நீங்க அனுப்பும் ஆட்கள் இன்டீரியர் கோர்ஸ் முடித்தவர்களாகத்தானே இருப்பாங்க. அப்போ கண்டிப்பா எங்களால் சமாளிக்க முடியும். மேலே எதுவுமே, இதைப்பற்றி பேசவேண்டாம், நீங்க அவங்களை வரச் சொல்லுறீங்க, அவ்வளவுதான்...”, மேலே அவர் பேச வந்த எதையுமே அவன் கேட்க தயாராக இருக்கவில்லை.

அவரும் அதற்குமேல் பிடிவாதம் பிடிக்கவில்லை. ஆனால்...., "இங்கேபார் மனோ...., எப்போ அவங்க வேலை செய்வது உனக்கு திருப்தி அளிக்கவில்லையோ, அந்த நிமிடமே அவர்களை திரும்ப அனுப்பிவிடு. அது மட்டும் இல்லை....,

"அவர்களுக்கு சம்பளம் என்று பெரிதாக எதையும் நீ நிர்ணயிக்க வேண்டாம். மாத சம்பளமாக ஒரு ஐந்தோ...., ஏழோ கொடுத்தால் போதும். அதற்கும் அவர்கள் தகுதி இல்லையென்றால்...., அதைவிட குறைவாக கொடுத்தால் போதும்", வலியுறுத்திச் சொன்னார்.

"ஐயா...., அதெப்படி ஐந்தாயிரம் ஏழாயிரம்லாம் அவர்களுக்குப் போதும்...", தயக்கமாக இழுத்தான்.

"நான் சொல்வதில் ஏதேனும் காரணம் இருக்குமென்று உனக்குப் புரியலையா...? வருபவர்களை முதலில் நீ ஸ்டடி பண்ணு, பிறகு என்ன செய்யவேண்டுமென்று உனக்கே புரியும்...", பூடகமாகச் சொல்லி கிளம்பினார்.

மேற்கொண்டு அவரிடம் எதையும் விவாதிக்க, அவர்கள் தயாராக இருக்கவில்லை. அவரும், வருபவர்கள் கையில், தான் ஒரு கடிதம் கொடுத்து அனுப்புவதாகச் சொல்லிச் சென்றார்.

அவர் சென்றவுடன்...., "என்னடா...., நானே முடிவெடுத்துவிட்டேன் என்பதில் உங்களுக்கு ஏதாவது...?", அவன் இழுக்க....,

"மனோ...., இந்த கம்பெனியின் நிர்வாகம் முழுவதும் உன் கட்டுப்பாட்டில்தான் இருக்கு. இங்கே நீ எடுக்கும் முடிவுகளுக்கு நாங்கள் கட்டுப்படுவோம் அவ்வளவுதான். நீ எங்களிடம் சொல்லவேண்டும் என்ற அவசியம் கூட கிடையாது. அப்படியிருக்கும்போது...", அருண் கொஞ்சம் கோபமாகச் சொன்னான்.

ராஜுவோ...., "எனக்கு நீ என்ன செய்தாலும் சம்மதம்தான்...", ஒரே வார்த்தையில் முடித்துவிட்டான்.

"சரி நாம வேலையைப் பார்க்கப் போகலாம்...", அனைவரும் அவரவர் இடத்துக்குத் திரும்பினார்கள். மனோவின் மனதுக்குள் ஒரு மில்லியன் டாலர் கேள்வி தொங்கி நின்றது.

‘ஐயா ‘அவர்கள்’ என்றாரே...., அப்படியென்றால் எத்தனைபேர்..? ஐந்தாயிரம், ஏழாயிரம் ரூபாய்க்கு, இந்த வேலைக்கு யார் வருவார்கள்...? வேலை தெரியுமா தெரியாதா..?’, ஒரு பக்கம் கேள்விகள் குடைந்தாலும், வேலையிலும் கவனம் செலுத்தினான்.

வரப்போவது பெண்கள் என்று அறிந்திருந்தால்....?

***நித்தியும், அனிதாவும் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். ராதா அவர்களைப் பார்த்தவாறே படுக்கையில் அமர்ந்திருந்தாள்.

“அந்த மனுஷரை என்னடி செய்யலாம்...? அவர் நமக்கு வேலை பார்த்து வைக்கிறாராமா...., எனக்கு வர ஆத்திரத்துக்கு...”, அனிதா காலை தரையில் உதைத்தவாறு புலம்பிக் கொண்டிருந்தாள்.

“ஏய் அவர் வயசுக்காவது மரியாதை கொடுடி...”, நித்தி கண்டித்தாள்.

“இவ பெரிய மதர் தெரசா...., நியாயம் பேசுறா. அவருக்கு எதுக்குடி இந்த வேண்டாத வேலை...?”, புலம்பலை அவளால் நிறுத்த முடியவில்லை.

“அவர் வேலைக்குதானே போகச் சொன்னார்...”, ராதா மெல்லிய குரலில் முனக...., “

“என்னடி...., சொல்லுறதை கொஞ்சம் சத்தமா சொல்லு....”, பொரிந்தாள் அனிதா.

அதே நேரம்...., “உங்களையெல்லாம் கீழே ஐயா கூப்பிட்டாரும்மா...”, சோலை அவர்களை அழைத்தாள்.

அவர்கள் வரவே...., “ஏம்மா...., நீங்கல்லாம் ஒரே இடத்துக்கு வேலைக்குப் போறீங்களாமே....”, ஆச்சரியமாக அவள் வினவ....,

“ஆமா...., அதுக்கென்ன இப்போ...”, எரிந்து விழுந்தாள் அனிதா.

“ம்ச்...., அவளை அடக்கினாள் நித்தி. நித்தியை முறைத்தவள்...., “நீ சொல்லு...”, சோலையிடம் கேட்டாள்.

“அந்த கம்பெனி என்னத்துக்கு ஆகப்போகுதோன்னு நினைச்சேன்...., வேற ஒண்ணும் இல்லை...”, அவள் சீரியசாகச் சொல்ல...., இப்பொழுது

நித்தி அனிதாவை முறைத்தாள்.

அதற்குள் கீழே இறங்கி வந்துவிட...., மூர்த்தியோ..., "நாளை மறுநாள், அதாவது திங்கட்கிழமை காலையில் சரியா பத்துமணிக்கு...., இந்த கார்டில் இருக்கும் அட்ரஸ்க்கு போங்க. அங்கே மனோன்னு ஒருத்தர் இருப்பார். அவர்கிட்டே இந்த லெட்டரைக் கொடுங்க.

"மத்ததெல்லாம் அவர் பார்த்துப்பார். அங்கே போய் உங்க வாலை எல்லாம் கொஞ்சம் சுருட்டி வச்சுட்டு இருங்க. உங்க வாயைத் தொறக்க முன்னாடி...., சுற்றி இருப்பதை கொஞ்சம் கவனிங்க. இதுதான் நான் உங்களுக்கு சொல்லும் ஒரே விஷயம்.

"இதையும் நீங்க காதில் வாங்க மாட்டீங்கன்னு தெரியும். ஆனாலும் என்னோட திருப்திக்காக சொல்லுறேன்...", சொன்னவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றவுடன்...., அவர்களின் பெற்றோர் போன் செய்து, மாற்றி மாற்றி கொடுத்த அறிவுரையில் வாழ்க்கையே வெறுத்துப் போனது அவர்களுக்கு. அந்த முகம் தெரியாத மனோவின்மேல், அவர்களுக்கு கோபமாக வந்தது.

'அடேய் கிழவா....., உன்னை வந்து கவனிக்கிறோண்டா...', மனதுக்குள் மூவரும் கறுவிக் கொண்டார்கள்.

தங்கள் முதலாளி ஒருவரல்ல மூவர் என்று அறிந்தால்...? அவர் கிழவரல்ல..., குமரன் என கண்டுகொண்டால்...., வேலையைத் தொடர்வார்களா...?

***

# மௌனம் – 5.

தோட்டத்து மலர்களில்
மல்லியென்ன முல்லையென்ன

மலர் என்றாலே அழகுதான்.......

அன்று ஞாயிற்றுக் கிழமை...., வீட்டிலிருக்கும் பெரியவர்கள் வெளியே சென்றிருக்க...., மனோ பட்டாளம் இசிஆர் சாலையில் காரை எடுத்துகொண்டு கிளம்பிவிட்டார்கள். அன்று முழுவதும் வெளியில் சுற்றுவதாக ஏற்பாடு.

இது அவர்களது வழக்கம்...., சனிக்கிழமை பாதிநாள் வேலை, அடுத்த ஞாயிறு அன்று ஏதாவது ஒரு இடத்துக்கு சுற்ற சென்றுவிடுவார்கள். அன்றும்...., மாயாஜாலில் ஒரு திரைப்படத்தை பார்த்து முடித்தவர்கள்...., இசிஆர் தாபாவில் சாப்பிடச் சென்றார்கள்.

மூவரும் அவர்களுக்குப் பிடித்தவற்றை ஆர்டர் செய்தாலும்...., அனைத்தையும் பகிர்ந்து உண்டார்கள். ஒருவரை ஒருவர் கவனித்துக் கொண்ட பாங்கை...., மூன்று ஜோடி கண்கள் வியப்பாக பார்த்தது.

ஆனால் ஆண்கள் மூவரும் தங்கள் உலகத்தில் மூழ்கி இருந்தார்கள். அதிலும் ராஜு சாப்பிட்டுகொண்டிருக்கும் பொழுதே...., சற்று தூரத்தில் இருந்த குழந்தையிடம் காண்பித்த ஆர்வத்தையும்...., குரங்கு சேட்டைகளையும் அவர்களும் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

மனோவும் அருணும் கூட...., அவனை அடக்கவே இல்லை என்பதையும்...., அவன் செய்கையில் முகம் சுளிக்கவில்லை என்பதையும் வியப்பாய் உணர்ந்தார்கள்.

ஒரு வழியாக உண்டு முடித்த பிறகு...., எதற்கோ தங்களுக்குள் வழக்காடுவதைக் கண்டவர்கள்...., என்ன நடக்கிறது என்பதைப் பார்ப்போம் என்று அமைதியாக இருந்தார்கள்.

தங்களைப் போலவே..., மூவராக வந்திருக்கும் அவர்கள்மேல் சற்று ஆர்வம் பிறந்ததோ என்னவோ அவர்களுக்கு...., இங்கேயோ....,

“டேய் ராஜேஷ்….., சொன்னா கேளுடா……., அந்த குழந்தை பயப்படப் போகுது…., வேணாம்….., பிரச்சனையாயிடும்….”, அடிக்குரலில் அவனை தடுத்துக் கொண்டிருந்தான் அருண்.

“அதெல்லாம் எதுவும் ஆகாது…., பாப்பா சிரிக்கத்தான் செய்யுது…”, குழந்தையின் அருகில் செல்ல முயன்றுகொண்டிருந்தான் ராஜேஷ்.

“நீ தூரமா இருக்கறதால சிரிக்குது. நீயே கிட்டே போனால் அலறும்டா…”, அவன் காலை மற்றவர்கள் அறியாதவாறு பற்றிக் கொண்டான் அருண்.

“போடா பொறாமை புடிச்சவனே….., அங்கே பாருடா….., பாப்பா சந்தோஷமாதான் இருக்கு….”, பிடிவாதம் பிடித்தான் ராஜேஷ்.

“தூரமா இருக்கறதால் சந்தோசமா இருக்கா. கிட்டே போனால் அழுவாடா…”, இப்பொழுது கொலைவெறியானான் அருண்.

“உனக்குத்தான் தெரியும்ல…., எனக்கு பாப்பான்னா புடிக்கும்னு. பிறகு ஏண்டா தடுக்குற…”, அழும் குரலில் கேட்டான் ராஜேஷ்.

“அது உன் பாப்பா இல்லை. ஊரான் வீட்டு பாப்பா. தூரமா இருந்து கை காட்டினால் ஓகே. அதை விட்டு…., போய் தூக்கணும்னு சொன்னால் எப்படிடா…”, கடுப்படித்தான் அருண்.

“அதான் நாங்க கொஞ்ச நேரத்தில் ப்ரண்ட்ஸ் ஆயிட்டோமே…., நீ போடா…”, அருணைத் தள்ளிவிட்டுச் செல்ல அவன் முயல…., அவனைத் தடுக்க போராடிக் கொண்டிருந்தான் அருண்.

சிலபல நிமிடங்களாக…., தங்களுக்குள் அடித்துக் கொண்டிருந்த நண்பர்களை கண்களில் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் மனோஜ். அவன் தங்களையே பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து….,

“ஏண்டா மனோ…., நானும் எவ்வளவு நேரமா இவனோட போராடுறேன். நீபாட்டுக்கு தியேட்டர்ல படம் பாக்குற மாதிரி பார்த்துட்டே இருக்க. இவனை அடக்குடா….”, மனோஜை கடிந்தான் அருண்.

“அதுல்லடா அருண்…., நீயே நல்லா சமாளிக்கறியேன்னு பார்த்தேன்…”,

சிரிப்பை வாய்க்குள் புதைத்தவாறே சொன்னான்.

“நான்.... இவனை நல்லா சமாளிக்கிறேன்...., நீ பார்த்த...., கடுப்பை கிளப்பாமல் இவனை அடக்குடா. விட்டால் பாப்பா மேல பாஞ்சுடுவான் போல”, ராஜேஷை விட்டுவிட்டு மனோவிடம் பாய்ந்தான்.

“விடுடா அவனை. அதெல்லாம் எதுவும் செய்ய மாட்டான்...”, மனோ கூலாக சொல்ல...., ராஜேஷைத் தன் பிடியில் இருந்து விடுவித்தான் அருண்.

அவன் விடுவிக்கவே...., “என்னடா...., பொசுக்குன்னு விட்டுட்ட...., புடிடா அவனை....”, பதட்டமாகச் சொன்னான்.

“ம்ம்..., நீதானே விடச் சொன்ன...., நீயே புடி...”, கையை கட்டிக்கொண்டு அமர்ந்துவிட்டான்.

அருண், அப்படி அமர்ந்ததை கண்டுகொள்ளாமல் மனோ ராஜேஷையே பார்த்தவாறு இருக்க, அவனோ...., “மனோ...., நான் அந்த பாப்பாவை தூக்கிக்கவா...”, ஏக்கமாகக் கேட்டான்.

அவன் முகத்தைப் பார்த்து...., “ராஜு....”, தயக்கமாக இழுத்து எதையோ சொல்லப் போனவன்...., அவன் முகத்தைப் பார்த்து எதையும் சொல்லாமல் விடுத்தான். அவனது அமைதியே ராஜுவிற்கு சம்மதம் அளிக்க...., முகம் கொள்ளா சிரிப்புடன் தங்கள் டேபிளுக்கு இரண்டு டேபிள் தள்ளி இருந்த அந்த குழந்தையிடம் சென்றான்.

“டேய் மனோ...., அவங்களைப் பார்த்தாலே படா பேமிலியா தெரியுது. ஏதாவது வம்பாயிடப் போகுதுடா...”, பதட்டமாகச் சொன்னான் அருண்.

“எனக்கும் புரியுதுடா...., நீயே அவங்களைக் கொஞ்சம் கவனி...., அந்த குழந்தையை அம்போன்னு விட்டுட்டு அவங்க அவங்க வேலையைத்தான் பார்க்குறாங்க...”, அவன் குரலில் கொஞ்சம் கோபம் இருந்ததோ...

அருண் அங்கே பார்க்க...., குழந்தையின் பெற்றவர்களோ...., சாப்பிடும் வேளையில் குழந்தை தொல்லை செய்யக் கூடாது என்பதால் அதை பேபி சேரில் விட்டிருந்தார்கள். வாயில் வைத்திருந்த நிப்பிளை கையில் எடுத்து விளையாடியவாறு, குழந்தை ராஜுவைத்தான் வேடிக்கை

பார்த்தது.

“இவங்களுக்கெல்லாம், பிள்ளை என்பது ஒரு ஸ்டேட்டஸ் சிம்பல் அவ்வளவுதான்…”, தாடை இறுக சொன்னவனை இரக்கத்தோடு பார்த்தான் அருண்.

“அதுக்கு நாம என்னடா செய்ய முடியும்…?”, பரிதாபமாகக் கேட்டான்.

“நாம எதுவும் செய்யவேண்டாம்….., நம்ம ராஜு செய்வான்…”, ராஜு சென்ற திசையைப் பார்த்தவாறே சொன்னான். அருணும் தன் பார்வையை அங்கே செலுத்தினான்.

அவர்களை நெருங்கிய ராஜு…., “ஹல்லோ…., நான் பாப்பாவை கொஞ்ச நேரம் பார்த்துக்கவா…? நீங்க சாப்பிட்டு முடிச்ச உடனே வாங்கிக்கோங்க…”, கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் கேட்டு முடித்தான்.

திடீரென தங்கள் அருகில் வந்து பேசிய அவனை திகைப்பாகப் பார்த்தவர்கள்…., “சாரி…., நீங்க…”, அவர்கள் முகங்களில் சந்தேகத்தின் நிழல்.

அவர்கள் பேசத் துவங்கும் வேளையே…., அவர்கள் அருகில் வந்துவிட்ட மனோவும் அருணும்…., ராஜுவின் அருகில் சென்றார்கள்.

“ஹல்லோ…., ஐ’ம் மனோஜ்…, நாங்க ஏ.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன் ஓனர்ஸ். திஸ் இஸ் அவர் கார்ட். குழந்தை தனியா அழுதுட்டு இருக்காளே…., உங்களையும் சாப்பிட விடாமல் தொல்லை செய்யிறா. சோ…., நீங்க அனுமதித்தால் நாங்க கொஞ்சநேரம் பார்த்துக்கறோம்…”, முறையாக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு தன்மையாகக் கேட்டான்.

அவர்களின் தோற்றமும் அப்படி ஒன்றும் மோசமாக இல்லாமல் இருக்கவே, குழந்தையின் தந்தை சம்மதமாக தலை அசைத்தார். ஆனால் தாயோ கொஞ்சம் தயங்கினார்.

அவளது தயக்கம் உணர்ந்து…., “ப்ளீஸ் ப்ளீஸ்…., எனக்கு பாப்பாவை தூக்கிக்க ரொம்ப ஆசையா இருக்கு. நான் நல்லா பார்த்துப்பேன். கீழே இருக்க பாப்பாவை, தூக்கி வச்சுக்கறேன்னு சொன்னால் இவ்வளவு

யோசிக்கிறீங்க...”, குழந்தையிடம் விளையாட்டு காட்டியவாறே ராஜு புகார் வாசிக்க...., தாயின் முகத்திலும் சம்மதத்தின் அறிகுறி தெரிந்தது.

அவள் வாய் வார்த்தையால் சம்மதம் அளிக்கும் முன்பே...., குழந்தையை கைகளில் அள்ளிக் கொண்டான். குழந்தையும்..., அவனோடு நெடுநாள் பழகியவளைப் போன்று...., அவன் இரு காதையும் தன் கரங்களால் பற்றிக்கொண்டு...., அவன் கன்னத்தில் தன் பட்டு இதழ்களைப் பதித்தது.

அதைப் பார்த்த அனைவரின் கண்களிலும் வியப்பு. “ராஜு...., நீ பொண்ணா பொறந்துருக்க வேண்டியவன்டா...., அதேப்படித்தான் எல்லா குழந்தைகளையும் நொடியில் மயக்கிடுறியோ...”, அருண் அவனை கேலி செய்தான்.

அதை கண்டுகொள்ளாமல்...., “குட்டிம்மா...., நாம டாய்ஸ் வாங்க போலாமா...”, கேட்டவன்...., யாரையும் கண்டுகொள்ளாமல் குழந்தையோடு விரைந்தான்.

மனோ, அருணிடம் கண்ஜாடை காட்ட...., அதைப் புரிந்தவன்போல்...., ராஜுவோடு சென்றான். தாயின் கண்களில் கலக்கத்தைக் கண்ட மனோ...., அவர்களுக்கு அடுத்திருந்த மேஜையில் சென்று அமர்ந்தவன்...., “டேய் சீக்கிரம் வந்துடுங்கடா...., நான் இங்கேயே வெயிட் பண்ணுறேன்...”, அவர்களிடம் சொல்வதுபோல்...., குழந்தையின் பெற்றோருக்கு நம்பிக்கை அளித்தான்.

பாதி தூரம் சென்ற அருண் அவனைத் திரும்பிப் பார்த்து...., புரிந்ததற்கு அடையாளமாக தலையசைத்துவிட்டுச் சென்றான். பெற்றவர்களும் நிம்மதியாக உணவருந்தத் துவங்கினார்கள்.

அதைக் கேட்ட பெண்களும்...., இவ்வளவு நேரம் அவர்கள் சின்னக் குரலில் பேசியதால் எதையும் அவர்களால் கேட்க முடியவில்லை. ஆனால் இறுதியாக மனோ சொன்னதைக் கேட்டவர்கள்...., வியந்தார்கள்.

‘என்னடி நடக்குது இங்கே...?’, அவர்களின் பார்வைகள் இந்த கேள்வியை பரிமாறிக் கொண்டன.

வெளியே சென்ற ராஜூவோ, குழந்தையிடம் “என் செல்லத்துக்கு என்ன

வேணும்…”, அவளிடம் கேட்க…., அருகில் நிறுத்தியிருந்த சைக்கிளை கை காட்டியது.

“ஓ…., செல்லத்துக்கு சைக்கிள்ள போகணுமா…?”, கேட்டவன் கண்களைச் சுழலவிட….., எதிரில் பிளஸ்ஏ சைக்கிள் மார்ட் இருப்பதைப் பார்த்து, நேராக சைக்கிள் கடைக்குச் சென்று…, ஒரு பெரிய சைக்கிளை வாங்கினான்.

அவன் பின்னால் வந்த அருண் அவன் செய்வதையெல்லாம் வேடிக்கை மட்டுமே பார்த்தான். குழந்தையை இடக்கையில் தாங்கிக் கொண்டவன்…., ஒற்றைக் கையால் சைக்கிளை ஓட்டினான்.

அவன் சைக்கிளை கிளப்பிவிடவே…., போய் தங்கள் காரை எடுத்துவரவும் அவகாசம் இல்லாமல்…., சைக்கிள் கேரியரில் தொற்றிக் கொண்டான் அருண்.

கோடிகளில் புரளும் தங்கள் வாழ்வில்…., கொஞ்சம் கூட இயல்பைத் தொலைக்காமல்…., எளிமையாக…., சட்டென மற்றவரோடு பழகிவிடும் ராஜுவின் குணத்தை…., எப்பொழுதும்போல்…., இப்பொழுதும் மனதுக்குள் வியந்தவாறே அமர்ந்திருந்தான்.

ஆனால் பழக்கமில்லாத கேரியர் பயணம்…., அமர்ந்திருக்க மிகுந்த சங்கடத்தை அளித்தது. அதைவிட தன் உயரத்துக்கு காலை மடக்கி தூக்கி வைத்துகொள்ள மிகுந்த சிரமமாகவே இருந்தது அருணுக்கு.

ஆனால் ராஜுவின் சந்தோசத்திற்காக அனைத்தையும் தாங்கிக் கொண்டான். அவனோ அருணை கண்டுகொள்ளாமல்…., குழந்தையோடு உரையாடியவாறே….., மாலை வெயில் அவள் முகத்தில் அடிக்காதவாறு…., அழகான ஒரு கேப்பை வாங்கி அவளுக்கு அணிவித்தவன்…., குழந்தையின் சிரிப்பில் மயங்கியவாறு ஓட்டிச் சென்றான்.

வழிநெடுக அவளிடம் உரையாடவும் அவன் தயங்கவில்லை. குழந்தையும் அதன் பாஷையில் அவனுக்கு பதில் கொடுக்கவும் தயங்கவில்லை. குழந்தை கை காட்டியதை எல்லாம் வாங்கிக் குவித்தான்.

குழந்தையும், விழுந்துவிடாதவாறு…., அவன் கழுத்தை இறுக பற்றிக்

கொண்டது. இடையிடையே தன் ஈர இதழ்களால் அவனுக்கு முத்தம் வேறு கொடுக்க...., அவனும் ஆசையாக குழந்தையை முத்தமிட்டான்.

பின்னால் அமர்ந்திருந்த அருணுக்கு அந்த காட்சியைக் காணவே பாந்தமாக இருந்தது. ஆனால்....., இந்த ஆனாலுக்குப் பிறகு, மேலே ஒரு படி கூட அவர்கள் மூவரும் சிந்தித்ததில்லை...., சிந்திக்க விரும்பியதும் இல்லை.

வழியில், குழந்தைக்கு ஆள் உயர பொம்மைகள்...., டெடி என வாங்கிக் கொண்டே சென்றான். எதையும் தடுக்காமல்...., ஒரு பார்வையாளனாகவே இருந்துகொண்டான். கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆன பிறகும்...., ஹோட்டலுக்குத் திரும்பும் எண்ணமில்லாமல் சுற்றி வந்தவனை....,

“டேய்...., குழந்தையை தூக்கிட்டு எங்கடா ஊர்வலம் போற...? அங்கே குழந்தைக்குப் பணையமா ஒருத்தனை உக்கார வச்சிருக்கோம் அந்த நினைப்பு கொஞ்சமாவது இருக்குதா...?”, அவனிடம் எரிந்து விழுந்தான்.

அப்பொழுதுதான் அவன் இருப்பதையே உணர்ந்தவன்....., நீ எப்போடா வந்த...?”, ஆச்சரியமாக வினவினான் ராஜு.

அவன் அப்படி கேட்கவே...., “விளங்கிடும்...., ஏண்டா...., அப்போ பின்னாடி ஆள் இருக்கா இல்லையான்னு தெரியாமல்தான் இவ்வளவு நேரம் ஓட்டிட்டு வந்தியா...?”, அவனைவிட ஆச்சரியமானான் அருண்.

“இல்லடா...., ஓட்டும்போது கொஞ்சம் கஷ்டமா இருந்துதா...., அப்போ நான் நினைச்சேன்...., நான் ரொம்ப வெயிட் போட்டுட்டேனோன்னு....., ஆனா இப்போதான் தெரியுது...., நீ உக்காந்ததால் தான் அப்படித் தெரிஞ்சுதுன்னு...”, அசடு வழிந்தான்.

அத்தோடு நிறுத்தாமல்...., “நல்லவேளைடா...., நீ இருக்குறதைச் சொன்ன...., இல்லன்னா நான் உன்னை தொலச்சிருப்பேன்...”, சொல்லிவிட்டு சிரித்தவனை, மறுத்து எதுவும் சொல்லாமல்...., தானும் அவனோடு சேர்ந்து சிரித்தான்.

“ஆமாடா...., நல்ல வேளை சொன்னேன். நீ மட்டும் என்னை தொலச்சிருந்தால்...., நான் எப்படி வீட்டுக்கு வந்திருப்பேன். எனக்குதான் வழியே தெரியாது பாரேன்...”, அருண் கண்களை உருட்டி

சொல்ல....,

“ஐயோ ஆமாடா...., நீயும் வந்து முன்னாடி உக்காந்துக்கோ...., விழுந்துட்டன்னா...”, அவன் தன்னை கேலி செய்கிறான் என்பது கூட புரியாமல் வேகமாக ராஜேஷ் சொல்ல....,

“இல்ல ராஜு...., நான் உன் இடுப்பை கெட்டியா புடிச்சுக்கறேன்..., அப்போ விழ மாட்டேன் சரியா...”, அருண் விளையாட்டாகச் சொல்ல...., ராஜேஷோ வேகமாக மண்டையை உருட்டினான்.

“அதெப்படிடா...., எல்லாத்தையும் நம்புற...”, நொந்துபோய் அருண் கேட்க....,

“நீயென்ன பொய்யா சொல்லப்போற...”, அவனது பதிலில் உள்ளம் நெகிழ்ந்தான் அருண்.

“சரி வா...., ரொம்ப நேரமாச்சு..., அங்கே மனோ தனியா இருப்பான்...”, அருண் சொல்ல....,

“ஹையோ ஆமா இல்ல...., சரி வா...., நாம, பாப்பாவை நாளைக்கும் கூப்பிட்டுக்கலாம்...”, மறு பேச்சின்றி ஒத்துக் கொண்டான்.

ராஜு நொடியில் ஒத்துகொள்வான் என்பதால் தான்...., அருண் அவனை இவ்வளவு நேரம் தொல்லை செய்யாமல் இருந்ததே. இப்பொழுது மட்டுமல்ல...., வெளியே வந்த ஐந்து நிமிடங்களுக்குள் அவன் அழைத்திருந்தாலும் அவன் இதே பதிலைத்தான் சொல்லியிருப்பான். ஆனால் என்ன...., கொஞ்சம் வருத்தமாகச் சொல்லியிருப்பான் அவ்வளவே.

இவர்கள் சென்றபொழுது...., மனோ அந்த குழந்தையின் பெற்றோரோடு உரையாடிக் கொண்டிருக்க...., ராஜு வேகமாகச் சென்று...., குழந்தையை அதன் தாயிடம் கொடுத்தான்.

ஆனால் குழந்தையோ தாயிடம் செல்லமாட்டேன் என்று அடம் பிடித்து...., ராஜுவின் கழுத்தை கட்டிக் கொண்டது. ராஜு தயக்கமாக மனோவைப் பார்க்க...., அவன் கண்களில் இளக்கத்தைக் காணாதவன்...., குழந்தையை கட்டாயமாகப் பிரித்து தாயின் கரத்தில் கொடுத்தவன்...., அவர்களைத் திரும்பியும் பாராமல்...., முன்பு தாங்கள்

இருந்த இருக்கையில் சென்று அமர்ந்துகொண்டான்.

குழந்தையின் பெற்றோர் சங்கடமான பார்வை பார்க்க...., “எனிவே, உங்க உதவிக்கு மிக்க நன்றி...”, அவர்களை நடப்புக்குத் திருப்பி...., அவர்களுக்கு விடை கொடுத்தான்.

அவர்கள் சென்ற பிறகு...., ராஜுவின் அருகில் வர...., “ராஜு...., பாப்பா அவங்களோடது...., வாங்கும்போது இருக்க அதே சந்தோசத்தோட குழந்தையை அவங்க கிட்டே திரும்பக் கொடுக்கணும்னு, உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கேன்.

“அப்போ எல்லாம் சரி சரின்னு மண்டையை ஆட்டி கேட்டுட்டு...., இப்போ எதுக்கு இப்படி மூஞ்சியை தூக்கி வச்சுட்டு உக்காந்து இருக்க...”, கொஞ்சம் கண்டிப்பு கலந்து கேட்டான் மனோஜ்.

“நான் ஒண்ணும் பாப்பாவை கொடுத்ததுக்காக இப்படி இருக்கலை...., அவங்க, பாப்பாவை கையால கூட வாங்காமல்...., ஒரு பையில வாங்குனாங்க பாரு...., எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா...

“பாப்பாவை பிடிக்காதவங்களுக்கெல்லாம் பாப்பா இருக்கு. ஆனா நமக்கு ஏண்டா இல்லை...”, மூஞ்சியை தூக்கி வைத்துக் கொண்டான்.

“ம்...., அது ஏன் தெரியுமா....? நாமல்லாம் ஆம்பளைங்கடா...., நமக்கு பாப்பா வராது. அதான்...”, அருண் விளக்கம் சொல்ல...., வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கினான் மனோ.

“ஆமால்ல...., ஆனா...”, முகம் விகசிக்கச் சொன்னவன்..., மேலே எதையோ கேட்கும் முன்னர்....,

“ராஜு...., இன்னைக்கு நீதான ஹோட்டல் பில் கொடுக்குறதா சொன்ன. முதல்ல பில்லை செட்டில் பண்ணு...., நாம கிளம்பலாம்...”, மனோ வேகமாக குறுக்கிட்டான்.

வேகமாக பாக்கெட்டுக்குள் கை விட்டவன்..., பர்சை வெளியில் எடுத்துவிட்டு பேய் முழி முழித்தான். அவன் விழிப்பதைப் பார்த்த அருண்...., “என்னடா பர்சுக்குள்ளே தேள் ஏதாவது கொட்டிடுச்சா...., இப்படி முழிக்கிற...”, கவுன்ட்டர் கொடுத்தான்.

“தேள் இல்லடா...., பணம்...”, எச்சில் கூட்டி விழுங்கியவாறே திருதிருத்தான்.

“என்னது...., பணம் கொட்டிடுச்சா...., அதுக்கு எப்போ கொடுக்கு வந்துது...”, புருவம் சுருக்கி அருண் வினவ...,

“டேய்...., அவன் எதையோ சொல்ல வரான்...., அவனை சொல்ல விடாமல்...., என்ன ராஜு சொல்லு...”, அருணை அடக்கிவிட்டு..., ராஜுவிடம் கேட்டான் மனோ.

“மனோ...., காசெல்லாம் காலி ஆயிடுச்சு...”, அப்பாவியாக விழித்தவாறே சொன்னான்.

“அப்போ எங்களை மாவாட்டத்தான் ஹோட்டலுக்கு கூட்டி வந்தியா. அடப்பாவி இது தெரியாமல்...., மூக்கு முட்ட சாப்ட்டேனே...., இப்போ வேலை செய்யக் கூட உடம்பு வளையாதேடா....,

“இந்த லட்சணத்தில்...., நாங்க பர்ஸ் எடுத்தப்போ..., அதை புடுங்கி வீட்டில் வேற வச்சுட்டு வந்த. இப்போல்லாம் ஹோட்டல்ல கூட ஆட்டுரலு கிடையாது...., இன்னைக்கு எச்ச ப்ளேட்டு கழுவ வேண்டியதுதானா...

“மனோ...., நீ தட்டெல்லாம் கழுவு...., நான் கிண்ணமெல்லாம் பார்த்துக்கறேன். இவனை சில்வர் டம்பளர் கழுவ விட்டுடலாம்.... என்ன சொல்லுற, வாங்கடா...., முதலாளிகிட்டே கேட்டு நாமளே கௌரவமா செய்துடடலாம்...”, அருண் மூச்சு விடாமல் புலம்பினான்.

“அதெல்லாம் வேண்டாம்...., அதுக்கு வேற ஒரு வழி இருக்கு...”, ராஜு வேகமாகச் சொல்ல, மனோவும் அருணும் திகைப்பாக அவனைப் பார்த்தார்கள்.

அவன் சொன்ன ஐடியாவைக் கேட்டு தலை சுற்றியது அவர்களுக்கு.

***

# மௌனம் – 6.

“டேய் ராஜு…., உனக்கு எதுல விளையாடுறதுன்னே இல்ல…., இப்போ பணம் தானே வேணும்…., எல்லாம் நாங்க பாத்துக்கறோம்…”, அருண் அவனை கடிந்து கொண்டான். அருண் அவ்வாறு சொல்லவே…., ராஜுவின் முகம் சுருங்கிவிட்டது.

ராஜு வருத்தப்படுவதை தாங்காத மனோ…., “அருண்…., விடுடா…., அவன் ஏதோ ஆசைப்படுறான்…., செஞ்சுட்டு போகட்டும்…”, ராஜுவிற்கு ஆதரவு கொடுத்தான்.

“மனோ…”, மேலே பேசப்போனவன்…., மனோவின் கண்களில் தெரிந்த உறுதியிலும்…., ராஜுவின் கண்களில் தெரிந்த பிடிவாதத்திலும் அமைதியானான்.

“என்னடி நடக்குது இங்கே…”, அனிதா நக்கலாக கேட்க….,

“உன்னை யாரும் இங்கே இருக்க சொல்லலை…., உனக்குப் போகணும்னா போ…”, இதைச் சொன்ன ராதாவை, விழிகள் தெறித்துவிடும்போல் உறுத்து விழித்தார்கள் அனிதாவும் நித்தியும்.

அவர்களை கண்டுகொள்ளாமல்…., அங்கே என்ன நடக்கப்போகிறது என்பதை பார்த்தவாறு இருந்தார்கள். வேறு நேரமாக இருந்திருந்தால் அனிதா எழுந்து சென்றிருப்பாள். ஆனால் இப்பொழுது ஏனோ எழுந்து செல்ல மனம் வரவில்லை.

பெண்களும் மூவராகத்தான் வந்திருந்தாலும், அவர்களுக்குப் பிடித்ததை அவரவர் ஆர்டர் செய்துவிட்டு…., முடிந்த அளவு சாப்பிட்டுவிட்டு மிச்சம் வைத்துவிட…., அவரவர் சாப்பாட்டிற்கு அவரவர் காசு கொடுத்ததும்…., பில்லில் போட்டிருந்த டாக்சைக்(tax) கூட சில்லரையாக பிரித்து கொடுத்ததுவிட்டு அமர்ந்திருந்தார்கள்.

இப்பொழுது திரும்பி செல்வதற்கு கூட…., பீச்சுக்கு செல்லலாம் என்று ஆசைப்பட்ட நித்தியும் சரி…., மகாபலிபுரம் போகலாம் என்று சொன்ன அனிதாவும் சரி…., இவர்களை விட்டு வீட்டுக்குப் போகலாம் என ஒரு பக்கம் புலம்பிய ராதாவும் சரி…., யாரும் யாரின் கருத்துக்கும் ஒத்துவரவில்லை.

மூவரும் அவரவர் பாதையை பார்த்துச் செல்ல ஆசைதான். ஆனால் ஒரே காரில் வந்துவிட்டு...., மூன்று திசைகளில்ல் போக வழியில்லாமல் ஒரே இடத்தில் முடங்கியவர்கள் அவர்கள்.

அப்படியிருக்க...., தங்கள் கண் முன்பே...., ஒருவர் மற்றவருக்காக விட்டுகொடுத்து, மற்றவருக்காக ஒருவன் பணயமிருந்து...., ஒருவன் பின்னால் மற்றவன் காவலுக்குச் சென்று, என...., பார்த்த நிகழ்வுகள்...., அந்த நிகழ்வின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை அறிந்துகொள்ள விரும்பியது.

எனவேதான் எதுவும் சொல்லாமல் அனிதாவும் அப்படியே அமர்ந்துகொண்டாள். “என்னடி போகலையா...”, நித்தி குறும்பாக வினவ....,

“என்ன நக்கலா...., அப்போ நான் காரை எடுத்துட்டு கிளம்பட்டுமா...?”, அனிதா கேட்க...., நித்தி அவசரமாக தன் வாயை மூடிக் கொண்டாள்.

மூவரும் மனோ, அருண், ராஜு என்ன செய்கிறார்கள் என்று பார்க்க...., “மனோ...., இப்போகூட எதுவும் கெட்டுப் போகலை. கார்ல என்னோட இன்னொரு பர்ஸ் இருக்கு...”, சின்னக் குரலில் மன்றாடினான் அருண்.

“விடுடா...., அவன் முதல்முறையா ஒரு யோசனை சொல்லி இருக்கான். அதை செயல்படுத்தாமல் விடுறதா...?”, தாடை இறுக, மனோ தீவிரமாகச் சொன்னான்.

“மனோ...., அவன் சொன்னதெல்லாம் ஒரு யோசனை...., அதுக்கு நீ மண்டையை ஆட்டுற...., நீ முதல்ல அவன் என்ன சொன்னான்னு நல்லா கவனிச்சியா...?”, அருண் சின்னக் குரலில் அவனிடம் கேட்டான்.

“எல்லாம் நல்லாதான் கவனிச்சேன். நீ முதல்ல போய் காரை ஸ்டார்ட் பண்ணி வை. நாங்க பின்னாடியே வரோம்...”, மனோ தன் முடிவில் மாறவில்லை.

“மனோ...., நீ முடிவே பண்ணிட்டியா. பணம் கட்டாமல் போனா அசிங்கம்டா. வழியில் நம்மளை தடுத்துட்டாங்கன்னா அவமானம்...”, அருண் ஒத்துகொள்ளவே இல்லை.

“அதெல்லாம் எதுவும் ஆகாது...., நீ முதல்ல கிளம்பு”, வார்த்தையை

கடித்து துப்பினான் மனோ.

“அதெல்லாம் கிளம்ப முடியாது...., எதுவா இருந்தாலும் சேர்ந்தே ஒரு கை பாத்துக்கலாம்...., அப்படி நான் மட்டும் என்ன உசத்தி....”, சொன்னவன் சட்டமாக அமர்ந்து கொண்டான் அருண்.

“அப்போ நான் சொன்னால் நீ கேக்கமாட்ட...”, மனோ கேட்ட அடுத்த நிமிடம்...., இருக்கையிலிருந்து எழுந்து விருட்டென சென்றான்.

செல்லும் அவனையே பார்த்த மனோ...., “ராஜு...., இப்போ நாம கிளம்பலாமா...?”, மனோவின் குரலில் இருந்த பேதத்தை...., மற்ற நேரமாக இருந்தால் ராஜு புரிந்துகொண்டிருப்பான். ஆனால் தவறு செய்யப்போகும் தவிப்பில் இருந்ததால்...., அவனால் உணர முடியவில்லை.

“மனோ...., அருண் ஏன் முன்னாடியே போய்ட்டான். சரி அதுவும் நல்ல விஷயம்தான். அவன் காரை எடுத்துட்டு முன்னாடி வரட்டும், நாம ஓடிப்போய் ஏறிக்கலாம்....., ஆனா ஒண்ணு மட்டும் மனோ...., நாம இந்த காசை நாளைக்கே இங்கே மணியாடர் பண்ணுறோம் சரியா”, குதூகலமாகச் சொன்னான்.

அவன் சொன்னதற்கெல்லாம் தலையாட்டியவன்...., நொடியில் இருவரும் எழுந்து ஓடினார்கள். இதை எதிர்பாராத அனைவரும் திகைத்துபோய் அவர்களைப் பார்க்க....., பெண்கள் மூவருக்கும் அவர்களது செய்கை அதிர்ச்சியாக இருந்தது.

“அடப்பாவிங்களா....., பில்லுக்கு பணம் கொடுக்காமல் ஓடத்தான் இவ்வளவு பிளான் போட்டானுங்களா...., நானும் என்னவோன்னு நினைச்சேன். அடச்சே....”, நித்தி முதல் ஆளாக புலம்பினாள். மற்ற இருவரும் அதிர்ச்சியிலிருந்து விலகாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவள் சற்று சத்தமாக புலம்பிவிட்டாள் போலும்...., அவர்கள் டேபிளை கிளீன் செய்யவந்த பையனோ...., “ஹையோ மேடம்...., அவங்க மூணுபேரையும் இங்கே இருக்கும் எல்லோருக்குமே தெரியும். வாரா வாரம் வருவாங்க.

“அது மட்டும் இல்லை...., இன்னைக்கு ராஜு சார் பணம் கொடுக்குறேன்னு சொல்லியிருந்தாராம். எப்படியும் அவர்

சொதப்பிடுவார்ன்னு மனோ சார்க்கு தெரியும்போல, அதனால் வந்த உடனேயே கேஷியர்ட்ட ரெண்டாயிரம் ரூபாய் கொடுத்து வச்சுட்டார்.

“இப்போ நாங்கதான் ஐநூறு ரூபாய் அவருக்கு திரும்பக் கொடுக்கணும். அவங்க ராஜு சாரை எதுவும் சொல்லவேண்டாம்னு விளையாடுறாங்க போல. ராஜு சார்க்கு ஒரே விளையாட்டு புத்தி...”, பையன் சொல்லிக்கொண்டே போக...., அவர்களுக்கு, தாங்கள் எப்படி உணர்கிறோம் என்பதே தெரியவில்லை.

வாரா வாரம் வரும் அவர்கள்...., டேபிள் துடைக்கும் பையனிடம் கூட மதித்து உரையாடுவது மட்டுமல்லாமல்...., அவன் தோளில் கைபோட்டு சரிக்கு சரி பேசும் ராஜூவை அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

அதைவிட, இப்பொழுது ராஜு வாங்கிய சைக்கிளின் கீ...., அவனிடம்தான் இருக்கிறது. ராஜு வரும்பொழுதே அவனைப் பார்த்து...., அவன் கையில் திணித்துவிட்டுத்தான் வந்திருந்தான். அவ்வளவு அபிமானமுள்ள அவர்களை, எங்கே இவர்கள் தவறாக நினைத்துவிடுவார்களோ என்பதாலேயே வேகமாக சொல்லிவிட்டான்.

பெண்கள் மூவரும், ஒருவித ஆச்சரிய மனநிலையில் கிளம்பிச் செல்ல...., இங்கே காருக்குள் ராஜுவின் புலம்பல் நின்றபாடில்லை.

“மனோ...., நாம இப்படி செஞ்சிருக்க கூடாது. நீ காரை திருப்பு அருண்...., உன்கிட்டே எப்பொழுதும் காசு இருக்குமே...., இல்லன்னா வழியில் இருக்கும் ஏடிஎம்மில் வண்டியை நிப்பாட்டு, நானே காசு எடுத்து கொடுத்துடுறேன்....”, காரிலிருந்து குதித்துவிடுபவன்போல் இருந்தான்.

அருண் மனோவின் முகத்தைப் பார்க்க..., மனோவோ, இதழில் அழுத்தம் நிறைந்த சின்ன சிரிப்புடன் ராஜுவை பார்த்துக் கொண்டிருந்தான்.

“ராஜு....., இப்போ எதுக்கு அழுற மாதிரி மூஞ்சியை வச்சிருக்க...., அதான் நாம வாரம் தவறாமல் போறோமே...., அடுத்தமுறை போகும்போது கொடுத்துடலாம், சரியா...., உன்னைப்பத்தி எங்களுக்குத் தெரியும்டா. இவ்வளவு பயம் இருக்குறவன்தான்....., அப்போ அவ்வளவு ஜம்பமா, ஓடிடலாம்னு சொன்னியா...., உன்னையெல்லாம்....”, அவனை தோள் தொட்டு அணைத்துக் கொண்டான் மனோ.

“எல்லாம் சரிதான் மனோ...., ஒரு வாரம் வரை எல்லாம் என்னால் தாங்க முடியாது....., நான் ஏதோ விளையாட்டா நினைத்து செஞ்சுட்டேன். திரும்ப போலாமா...”, தவறு செய்த குழந்தை பரிகாரம் செய்ய முனைவதுபோல் கேட்டான்.

அவனது கெஞ்சல், கொஞ்சம்கூட மனோவை அசைக்கவில்லை. அருண் அவனை அழுத்தமாகப் பார்க்க...., அவன் பார்வையை உணராதவன் போன்று அமர்ந்துகொண்டான்.

மனோ எதையோ மனதுக்குள் முடிவெடுத்துவிட்டான் என்பதை அறிந்த அருண்....., தானும் அமைதியாக வந்தான். காருக்குள் ஒலித்த பாடலும்...., ராஜுவின் கெஞ்சல் மொழிகளும் மட்டுமே அந்த காருக்குள் ஒலித்தது.

அன்று மீதமிருந்த நாள் முழுவதும் ராஜுவின் புலம்பல் நின்றபாடில்லை. அவனது தாய் கூட அவனை சத்தம் போட்டார்.

“ராஜு...., அதான் மனோ தம்பி அவ்வளவு சொல்லுதே...., அப்புறமும் ஏண்டாப்பா புலம்புற. உனக்குதான் தப்புசெய்ய வராதே...., பிறகும் ஏன் அதை செய்யணும்னு நினைக்கிற....”, இரவு உணவின்போது கேட்டார்.

அவர் கேட்கவே...., “இதுக்குத்தான்...., இந்த குறுக்கு புத்தி உனக்கு மறுபடியும் வரக் கூடாதுன்னுதான் நான் அப்படி செய்தேன். நீ தப்பு செய்யணும்னு நினைத்ததுக்கு இதுதான் தண்டனை புரிஞ்சுதா...”, இருக்கையை உதறிவிட்டு எழுந்து சென்றுவிட்டான் மனோ.

‘தப்பு...., இந்த தப்பை இனிமேல் நீங்க மனசால் கூட செய்ய நினைக்கக் கூடாது. அதுக்கு நான் விட மாட்டேன்...’, மனோ மனதுக்குள் சூளுரைத்தான்.

அவன் அவ்வாறு செல்லவே...., அருணும் ராஜுவும் கூட தங்கள் சாப்பாட்டை மறந்தவர்களாக அவன் பின்னால் ஓடினார்கள்.

மனோ அறைக்குள் புகுந்து கட்டிலில் விழிகளை இறுக மூடி படுத்துக்கொள்ள...., அவன் அருகில் இருவரும் அமர்ந்தார்கள்.

“மனோ...., நான் தெரியாமல் செஞ்சுட்டேன். இனிமேல் அப்படி செய்யவே மாட்டேன்...., என்னை மன்னிச்சுடு. இந்த அவஸ்த்தைக்கு, நீ

அங்கேயே என்னை ரெண்டு அடி அடிச்சு இருந்திருக்கலாம். நீ இப்படி அமைதியா இருக்குறதே கஷ்டமா இருக்குடா. ஏதாவது பேசு...", அவன் கரத்தை கெட்டியாக பிடித்துக் கொண்டான் ராஜு.

வெடுக்கென அவன் கரத்தை தள்ளிவிட்டான் மனோ. "பேசாம போய்டு...., உனக்கு எப்படிடா அப்படி ஒரு யோசனை வரலாம்...., உன்மேல் கொலை வெறியில் இருக்கேன்...", ராஜுவின் முகம் பார்க்காமல் சொன்னான்.

அருண் இடையில் எதுவும் பேசாமல், அவர்களைப் பார்த்தவாறே இருந்தான். "அருண்...., நீயாவது சொல்லுடா...., மனோ...., இனிமேல் இப்படி நான் யோசிக்கவே மாட்டேன்டா. அப்போ ஏதோ ஒரு வேகத்தில் சொல்லிட்டேன்...., என்னை மன்னிக்க சொல்லுடா...", கெஞ்சினான்.

ராஜு கெஞ்சுவது பொறுக்காமல்...., "மனோ..., அதான் அவன்...", பேசத்துவங்கியவன்...., மனோ பார்த்த பார்வையில் அமைதியாகிவிட்டான்.

"ராஜு...., நீ உன் ரூமுக்கு போ...., நாம இதைப்பற்றி இதுக்கு மேலே பேசவேண்டாம்...", மனோ கடினமாக உரைத்தான்.

ராஜு அரை மனதாக அங்கிருந்து செல்ல...., அருணோ...., "இதுக்கு நீ அங்கேயே அவனை தடுத்திருக்கலாமே மனோ...", ஆற்றாமையாகக் கேட்டான். நண்பர்கள் தங்களுக்குள் மனதளவில் பிளவுபடுவதை அவன் விரும்பவில்லை, எனவே சொன்னான்.

"அப்போ நான் தடுத்திருந்தால் தான் யோசிக்கிறது தப்புன்னு அவனுக்கு புரியவே செய்யாது அருண், அதான்...., அவனைப்பற்றி உனக்கே தெரியும் தானே. இனிமேல் அவன் இப்படி யோசிக்க கூட தயங்குவான்.

"இனிமேல் ஒரு சின்ன தவறு கூட நடக்கக் கூடாதுன்னு, நான் ஒவ்வொரு நாளும் தவிக்கிறேன் அருண். உங்க ரெண்டுபேரையும் பார்த்துக்குற பொறுப்பு எனக்கு இருக்கு. இனிமேல் நாம ஒரு அடி சறுக்கினாலும்....., என்னால் அதை தாங்கிக்க முடியாது. நாம...., நாம மத்தவங்க மாதிரி இல்லை அருண்.

"உனக்கு நான் சொல்ல வர்ரது புரியுதா....", வேதனையை தனக்குள்

புதைத்தவாறு அவன் சொல்ல...., அருணும் கண் கலங்கினான்.

அருண் கண் கலங்கவே...., “சரி விடு...., கவலைப்படாதே நாளைக்கு எல்லாம் சரியாயிடும். நீயும் போ...”, அவனையும் அனுப்ப முயன்றான்.

“முடியாது மனோ. நான் இங்கேயே உன்னோடவே படுத்துக்கறேன்..”, சொன்னவன்...., மனோ எதுவும் சொல்லும் முன்னர் அவனோடு படுத்துக் கொண்டான்.

மேலே விவாதிக்காமல் அமைதியானான். அடுத்த பத்து நிமிடங்களில் ராஜு வந்து மனோவின் மறுபக்கம் படுத்துக்கொள்ள...., அந்த இரவு மூவருக்கும் தூங்கா இரவாக மாறிப் போனது. ஏதேதோ எண்ணங்கள் மூவரையும் அழுத்த...., அதன் கனம் தாளாமல் தடுமாறினர்.

மறுநாள் காலையில், அனைவரின் முகங்களும் வழக்கத்துக்கு மாறாக இருண்டே இருக்க...., அவர்களது பெற்றோர் மனம் நைந்தார்கள். அவர்களிடம் எதையும் பேசாமல்...., ‘தாங்கள் இருக்கிறோம் அவர்களுக்கு’ என்று ஒவ்வொரு தாயும் தன் மகனை அணைத்துக் கொண்டார்கள்.

ஆயிரம் வார்த்தைகள் கூற முடியாத ஆறுதலை, அந்த ஒற்றை அணைப்பு அவர்களுக்கு உணர்த்த, அலுவலகம் விரைந்தார்கள். எப்பொழுதும் சிரித்த முகமாக இருக்கும் தங்கள் முதலாளிகள்...., இறுக்கமாக இருப்பதைப் பார்த்த ஊழியர்கள் தாங்களும் சோர்ந்தார்கள்.

சிறிது நேரத்திலேயே, தங்களது மௌனம் அனைவரையும் பாதிக்கிறது என்பதை உணர்ந்த மனோ, முதலில் தன்னை சுதாரித்தான். “என்னடா...., வேலையைப் பார்க்காமல் இங்கேயே இருக்கீங்க. போங்க... போய் வேலையைப் பாருங்க”, அவர்களை விரட்டினான்.

அவன் பேசிவிடவே முகம் மலர்ந்தவர்கள்...., “இனிமேல் இப்படி கிறுக்குத்தனமா எதையும் செய்யமாட்டேன் மனோ...., நீ சொல்லுற மாதிரியே கேட்டு நடந்துப்பேன்...”, வேகமாகச் சொன்னான் ராஜு.

“அதெல்லாம் நீ எதையும் கேக்க வேண்டாம்...., உன் வேலையை ஒழுங்கா பாரு...., அதுவே போதும்..”, அவர்களிடம் பேசிகொண்டிருக்கும் பொழுதே..., ராகவன் சற்று பதட்டமாக வந்தான்.

“சார்…”, அவனது அழைப்பே வித்தியாசமாக இருக்க…., கேள்வியாக அவனைப் பார்த்தான்.

“என்ன ராகவா…., எதுக்கு இவ்வளவு பதட்டமா வர…., அப்படி என்ன விஷயம்…?”, அவனை அமைதிப்படுத்தியவாறே கேட்டான்.

“சார்…., ஐயா, வேலைக்கு மூணுபேரை அனுப்பி இருக்காங்க…., ஆனா…”, தயக்கமாக இழுத்தான்.

“அட…., உன்னையும் ஐயாதான் சேர்த்துவிட்டார். நாங்க பயந்தோமா என்ன…, இப்ப உனக்கு மட்டும் அப்படி என்ன பயம்…? போ…, போய் முதல்ல அவங்களை வரச்சொல்லு…”, அவனை அனுப்பினான் மனோ.

வெளியே சென்றவன்…., “வாங்க…., சார் உங்களை வரச் சொன்னார்…”, அவர்களை அழைத்துக்கொண்டு அறைக்குள் சென்றான்.

“வாங்க மிஸ்டர்…., மிஸ்….”, மிஸ்டர் என அழைக்கப்போனவன்…., உள்ளே வந்த பெண்களைப் பார்த்து திகைத்துப் போனான். அருணும் ராஜுவும் உச்ச அதிர்ச்சியில் உறைந்தே போயிருந்தார்கள்.

ஆண்களைப் பார்த்த பெண்களும் திகைத்துப் போய் நின்றார்கள்.

***

# மௌனம் – 7.

அறைக்குள் நுழைந்த பெண்களைப் பார்த்த மனோவிற்கு, ஒரு நொடி என்ன செய்வது என்றே தெரியவில்லை. அதிலும் தேவதையின் மறு பதிப்போ, என்று எண்ணும் வண்ணம், அம்ப்ரல்லா மற்றும் அனார்க்கலி சுடிதார்களில் இருந்த பெண்களின் தோற்றத்தில், ஒரு நொடி தங்களை மறந்து லயித்திருந்தனர் ஆண்கள்.

ஆனாலும் அவர்களைப் பார்த்த அதிர்ச்சிதான் அதிகமிருந்தது. அதுவும் ஒரு நொடிதான். மனோ சட்டென திரும்பி நண்பர்களைப் பார்க்க, அவர்களும் அப்பொழுது அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பெண்களுக்கும் ஒரு சின்ன அதிர்வு..., “ஏய் நேத்து பார்த்த நேச மலர்கள்டி....”, அனிதா சட்டென கமெண்ட் அடித்தாள்.

“அடியேய்...., அதென்னடி நேச மலர்கள்...?”, ஆண்களைப் பார்த்த அதிர்வில் இருந்து மீளாமல் கேட்டாள் நித்யா.

“அதாவது...., ஆணும் பொண்ணுமா இருந்தா பாச மலர்கள். இது எல்லாம் சேவல்கள் ஆச்சே...., அதான்...., நேச மலர்கள். எப்படி என் கண்டுபிடிப்பு...?”, தன்னைத்தானே மெச்சியவாறு...., அனிதா நித்யாவைப் பார்க்க....,

நித்யாவின் பார்வையோ...., ‘சகிக்கலை...’, என்ற பதிலை அவளுக்கு கொடுக்க...., அதை தூசிபோல் தட்டிவிட்டு...., ஆண்களை கவனித்தாள்.

ஆனாலும் மனமோ...., ‘இந்த பெருசு என்னதான் நினைச்சுட்டு இருக்கு?...’, அனிதாதான் மனதுக்குள் வசைபாடினாள்.

இதே நினைப்பைத்தான் மற்ற பெண்களும் வேறு விதமாக...., கொஞ்சம் மரியாதையாக எண்ணிக் கொண்டார்கள்.

தன் சிந்தையைக் கலைத்த பெண்கள், ஆண்களைப் பார்க்க...., அவர்கள் முகபாவங்களைப் பார்த்துகொண்டிருந்த பெண்கள் மூவரும்....,
‘இதென்ன... இதுக்குமுன்னாடி பொண்ணுங்களையே பாத்ததே இல்லாத மாதிரி இப்படி ஒரு ரியாக்ஷன்....,’ ஒரே போல் சிந்தித்தார்கள்.

அறைக்குள் ஒரு சங்கடமான அமைதி நிலவியது. முதலில் சுதாரித்த

மனோஜ், “கம்...., டேக் யுவர் சீட்...”, பெண்களைப் பார்த்து கை காட்டியவன்...., நண்பர்களையும் இருக்கையில் அமரச்சொல்லி ஜாடை காட்ட மறக்கவில்லை.

அதைப் பார்த்த அருண்...., ராஜுவை கைபிடித்து அழைத்துவந்து இருக்கையில் விட்டுவிட்டு, மனோவின் வலதுபக்கம் இருந்த அவனது இருக்கையில் சென்று அமர்ந்தான். பொதுவாக இப்படி ஜாடையில் பேசும் எதுவும் ராஜுவிற்கு புரியாது, எனவேதான் அவ்வாறு செய்தான்.

“ராகவ்...., யூ மே கோ...”, அவன் சொன்ன பிறகுதான்...., தான் இன்னும் அறைக்குள்ளேயே இருக்கிறோம் என்ற எண்ணமே ராகவனுக்கு வந்தது.

“சாரி சார்...”, தலையசைத்து விடை பெற்றுச் சென்றான்.

மனோ பெண்களைப் பார்க்க...., “மனோஜ்...”, நித்யா கேள்வியாக இழுத்தாலும்...., கடிதத்தை மனோவின் பக்கம் நீட்டினாள். மனோ அதை வாங்கிப் பார்க்க...., அதில் ஒரே ஒரு கையொப்பம் மட்டுமே இருந்தது.

சட்டென ஒரு அதிர்ச்சி மின்னி மறைய...., அவன் இதழ்களில் கீற்றாக ஒரு புன்னகையும் தோன்றியது. அந்த பேப்பரை அருணிடம் காட்ட...., அவன் முகத்திலும் அதே புன்னகை.

அவர்களின் புன்னகையைப் பார்த்த பெண்கள் குழம்பினார்கள். ஆனால் நித்தியின் மனம் மட்டும்...., மனோவின் அதிர்ச்சியை குறித்துக் கொண்டது. அது எதனால் என்று வேகமாக அவள் மூளை ஆராய...., அது கொடுத்த பதில், அவளுக்கு அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லை.

அப்பொழுது...., அந்த கையொப்பமிட்ட பேப்பரைப் பார்த்து அனிதா அடித்த நக்கல், அசந்தர்ப்பமாக அனைவரின் மூளையிலும் ஒரு மின்னலோட்டம் போனது.

மூர்த்தி அந்த கடிதத்தை அவர்களிடம் கொடுத்து, “இதை அங்கே மனோஜ்ன்னு ஒருத்தர் இருப்பார்...., அவர்கிட்டே கொடுத்தால் அவர் புரிஞ்சுப்பார்...”, என்று சொல்லிச் சென்றார்.

அவர் சென்றவுடன் அந்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்தபெண்கள் திகைத்தார்கள்.

“என்னடி இது...., என்னவோ பெரிய அமெரிக்க ஜனாதிபதி மாதிரி ஆட்டோக்ராப் மட்டும் போட்டு கொடுத்திருக்கார். இதை வைத்து, ஆபிசில் இருக்கற அந்த கிழவனுக்கு எப்படி புரியும்...”, படபடத்தாள் அனிதா.

ஆனால் அந்த காகிதத்தை யோசனையாகப் பார்த்த நித்தியின் முகத்தில் கலவையான உணர்வுகள். எதிலோ தோற்றுப் போகும் உணர்வு. அது ஏனென்று புரியவில்லை. அவள் முகத்தையே பார்த்துகொண்டிருந்த ராதா...., அவள் கையை அழுத்தி என்னவென்று கேட்க, ‘ஒன்றுமில்லை’, என்பதுபோல் தலையை அசைத்தாள்.

அனிதாவோ தன் புலம்பலை விடாமல் தொடர்ந்துகொண்டிருந்தாள். “பேசாமல் இந்த பேப்பரை கசக்கி வீசிட்டா என்ன...? அதான் நம்மகிட்டே பெருசு கொடுத்த விசிடிங் கார்ட் இருக்கே..., அதை வைத்து அந்தக் கிழவனைப் போய் பார்க்கலாம்...”, அவள் சொல்ல...., அவசரமாக அவள் கையிலிருந்து அந்த பேப்பரைப் பறித்தாள் நித்தி.

“ஏற்கனவே செஞ்சுவச்ச வம்பு போதாதா...? இதில் குழப்பம் வேற பண்ணனுமா..? நீ எதுவும் செய்யவேண்டாம்...., இந்த பேப்பர் என்கிட்டேயே இருக்கட்டும். பொதுவா எங்க பேச்சை நீ கேக்கமாட்டன்னு தெரியும். முடிந்தால் இதை கேளு..., இல்லையா விட்டுடு...”, அவள் கையிலிருந்து பேப்பரை பிடுங்கிச் சென்றாள்.

அவள் செய்கையைப் பார்த்தவள்...., தோளைக் குலுக்கிவிட்டு பேசாமல் இருந்தாள். அதை இப்பொழுது யோசித்தவர்கள்...., நடப்புக்குத் திரும்பி...., மனோவின் பேச்சில் கவனமானார்கள்.

“வெல்...., உங்க சர்டிபிகேட்ஸ்...”, மனோ கேட்க...., நித்யா தன் கையில் இருந்த ஃபைலை அவனிடம் கொடுத்தாள். மதிப்பெண்களைப் பார்த்தவனின் முகத்தில் திருப்தி நிலவியது.

அதைப் பார்த்தவன் அருணிடம் கொடுக்க, அவன் அதில் பார்வையை ஓட்டிவிட்டு...., ராஜுவின் பக்கம் நகர்த்தினான். ராஜுவும் அதை விரித்துப் பார்த்தான்.

மூன்றுபேரின் ஃபைல்களையும் வாங்கிப் பார்த்தவர்களின் முகங்களில் திருப்தி நிலவியது.

“இதுக்கு முன்னாடி ஏதாவது முன்னனுபவம் இருக்கா...?”, மூவரையும் பார்த்து கேட்டான்.

‘பெரிய இவரு...., அனுபவம் இல்லன்னா வேலை கொடுக்க மாட்டாரு...’, மனதுக்குள் நொடித்தாள் அனிதா.

நித்யாவோயோ எந்த தயக்கமும் இல்லாமல்...., “முன்னனுபவம் எதுவும் இல்ல சார்...., ஆனா காலேஜ் கடைசி வருஷம் படிக்கும்போது ஒரு ப்ராஜெக்ட் செய்தோம்...., அந்த சிடி இருக்கு...”.

“ஓ...., குட்...., அப்போ அந்த சிடி கொண்டு வந்து இருக்கீங்களா...?”, மனோ கேட்டான்.

மூன்று பெண்களும் ஆளுக்கு ஒரு சிடியைக் கொடுக்க...., புருவம் சுருக்கி கேள்வியாக அவர்களைப் பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்து, “இல்ல...., நாங்க மூணுபேரும் தனித்தனியாத்தான் ப்ராஜெக்ட் செய்தோம்...”, நித்யாயின் குரலில் இப்பொழுது ஒரு தயக்கம்.

“என்னங்க சொல்லுறீங்க...., மூணுபேரும் ஒரே கோர்ஸ்...., ப்ரண்ட்ஸ் வேற...., அப்படியிருக்கும்போது....”, அவர்களை புரியாத பார்வை பார்த்தவன் நண்பர்களைக் காணவும் தயங்கவில்லை.

‘நாங்க வெளியேதான் ப்ரண்ட்ஸ் மாதிரி தெரிவோம்...., உள்ளுக்குள்ளே எலியும் பூனையும் மாதிரி என்பது எங்களுக்குத்தானே தெரியும்...’, பெண்களின் மனம், தங்களுக்குள் சொல்லிக் கொண்டது.

அவர்களின் மௌனம் தொடரவே...., “சரி நீங்க கொஞ்சம் வெளியே காத்திருங்க..., கூப்பிடுறோம்...”, அவர்களை வெளியே அனுப்பினான். மனோ மட்டுமே தங்களிடம் கேள்வி கேட்டாலும்...., பதில் சொல்லும்பொழுது...., தங்கள் நண்பர்களையும் தன் பேச்சில் இணைத்துக் கொண்டதை பெண்கள் அனைவரும் குறித்துக் கொண்டார்கள்.

இதுவரை தங்களுக்கு இடையில் இருந்த எதுவோ தகர்ந்து போவதை உணர்ந்தார்கள். ஆபிசுக்குள் வந்தபொழுது மூவரும் மூன்று திசையைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தவர்கள்...., முதல் முறையாக ஒரே திசையைப்

பார்த்தவாறு அமர்ந்தார்கள்.

“நாம தப்பு பண்ணிட்டமோ...”, அனிதா மெதுவாக கேட்க....,

“அப்படித்தான் நினைக்கிறேன்...”, நித்தி தீவிர குரலில் உரைத்தாள். அன்று அந்த கையொப்பமிட்ட பேப்பரை பார்த்தபொழுது...., எதனால் தனக்கு எதிலோ தோற்றுபோகும் உணர்வு வந்தது என்பதை உணர்ந்து கொண்டாள்.

அதேபோல்...., சற்றுமுன் அவள் மூளை பொட்டிலறைந்து உரைத்த உண்மையும் புரிய, தீவிரமாக அவர்களுக்கு பதில் கொடுத்தாள்.

“நான் அப்போவே சொன்னேன். நீங்கதான்...”, ராதா வேகமாகத் துவங்கியவள்...., மற்ற இருவரும் அவளை ஒரு பார்வை பார்க்க...., அந்த பார்வையின் பொருள் புரியாமல் பேச்சை நிறுத்தினாள்.

நிறுத்தியவள்...., “என்ன...?”, தடுமாற்றமாகக் கேட்டாள்.

“இல்ல...., ரொம்ப புத்திசாலித்தனமா பேசுறதா நினைப்பா...?”, அனிதா அடிக்குரலில் உறுமினாள்.

“அனி...., அப்படி என்ன கோபம் உனக்கு. மத்தவங்களோடு கொஞ்சமாவது அனுசரிக்கணும்னு நினைத்தால் தானே. ஏதாவது சொல்ல முன்னாடி எகிறி அடிக்கணும். பிறகு எங்கே ஒத்துமையா இருக்குறது. அதெல்லாம் நாம கனவில்தான் எதிர்பாக்கணும்”, நித்தி சுற்றிலும் பார்த்தவாறு சின்னக் குரலில் கடிந்துகொண்டாள்.

அனிதா அவள் சொன்னதைக் கேட்டு முறைக்க..., ராதா களுக்கென சிரித்தாள்.

அனிதா ராதாவை திட்டும் முன்னர்...., “ராதா...., முதல்ல இப்படி சிரிக்கிறதை நிப்பாட்டு...”, நித்தி முதல் முறையாக தன்னை கடிந்துகொள்ளாமல் ராதாவை கடிந்துகொள்ள...., அனிதா மற்றவர்களைப் பார்த்து சிநேகமாகச் சிரித்தாள்.

நித்தியின் முகத்தில் இருந்த தீவிரத்தைப் பார்த்த ராதா...., “என்ன நித்தி...., கொஞ்சம் கோபமா இருக்க மாதிரி இருக்கு...?”, தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

“ம்ச்...., எல்லாம் அந்த லெட்டர் பத்திதான்...”, அலுத்துக் கொண்டாள் நித்தி.

“அது லெட்டர் கிடையாது...., ஆட்டோக்ராப்...”, நக்கலடித்தாள் அனிதா.

“இது நக்கலடிக்கிற விஷயம் கிடையாது அனி...”, பட்டென பதில் கொடுத்தாள் நித்தி.

அவளது கோபத்தைப் புரியாமல் பார்த்தார்கள் இருவரும். “என்ன சொல்லுற நித்தி...”, ராதா வினவ....,

“அந்த லெட்டரைப் பார்த்துட்டு அவங்க முகத்தில் தெரிஞ்ச அதிர்ச்சியைப் பார்த்தியா...., எனக்கு அப்படியே தலையை பூமிக்குள்ளே புதைச்சுக்கலாம் போல இருந்தது..”, நித்தி தன் மனதுக்குள் அரித்த விஷயத்தைச் சொன்னாள்.

“ஏய்...., நீ ரொம்ப சீன் போடுற...”, அனிதா அசட்டையாக பேசினாள்.

“ஆமா...., நான் சீன் போடுறேன்....”, குரல் உயர்த்திய நித்தி..., சட்டென தன்னை சுதாரித்துக் கொண்டு....,

“நீயே யோசிச்சு பார் அனி...., இப்போ யாராவது யாருக்காவது சிபாரிசுக் கடிதம் கொடுத்தால் எப்படி கொடுப்பாங்க. இப்படி வெறுமே ‘சைன்’ மட்டுமா போட்டுக் கொடுப்பாங்க. ‘நான் அனுப்பி இருக்கும் ஆள் இப்படிப் பட்டவர்...., இவ்வளவு திறமையானவர்...., இவங்களுக்கு வேலை கொடுத்து உதவினால் ரொம்ப உதவியா இருக்கும்...,’ இப்படித்தானே எழுதி கொடுப்பாங்க.

“ஆனா....., நமக்கு கொடுத்த சிபாரிசு கடிதம் எப்படி இருந்ததுன்னு யோசி. நாமெல்லாம் ‘சரியான வெத்து வேட்டுங்க’ன்னு சொல்லாமல் சொல்லுற மாதிரி இல்ல.

“அதுக்கு வலு சேக்குற மாதிரி...., ஆளுக்கொரு ஃபைல், ஆளுக்கொரு சிடி...., ஆளுக்கொரு பதில்...., அந்த மூணுபேர் முன்னாடி, நாம மூணுபேரும் நிக்கக் கூட தகுதியே இல்லாத மாதிரி இருக்கு...”, நித்தி, சின்னக்குரலில் அழுத்தமாக சொன்ன பிறகுதான்...., மற்றவர்களுக்கே புரிந்தது.

ஏனோ அவமானமாக உணர்ந்தார்கள். அங்கே அழுத்தமான மௌனம் நிலவியது. தங்கள் மன நிலையை...., நட்பை ஆராய்ந்து பார்த்தார்கள் மூவரும்.

அறைக்குள் ஆண்களோ...., என்ன பேசுவது என்பது தெரியாமல் அமைதி காத்தார்கள். "மனோ...., என்னடா இது...? ஐயா இப்படி பண்ணிட்டார்...?", அமைதியை கலைத்தான் ராஜு.

"நானும் அதேதான் கேக்கணும்னு நினைத்தேன். எனக்கு பயமா இருக்கு மனோ. எதுக்கும் ஐயாவுக்கு போனை போடு...", அருண், மனோவைத் தூண்டினான்.

மனோவும் அதையே எண்ணியவன் போன்று...., உடனடியாக அவருக்கு அழைத்தான். அவனது அழைப்புக்காகவே காத்திருந்தவர் போன்று...., முதல் ரிங் முடியும் முன்பே அழைப்பை எடுத்தார்.

"சொல்லுப்பா மனோ...., நீ போன் செய்வன்னு எதிர்பார்த்தேன். அதேபோல் பண்ணிட்ட...", அந்தபக்கம் ஆர்ப்பாட்டமாக பேசினார்.

"ஐயா...., நீங்க அனுப்பினதா சொல்லி மூணு.... பேர் வந்து இருக்காங்க...., ஆனா...", எப்படி கேட்கவென்று தெரியாமல் தயங்கினான்.

"ஹா..., ஹா....., என்ன மனோ...., நான் அனுப்பினவங்களைப் பார்த்தவுடன் அதிர்ச்சி ஆயிட்டியா என்ன...?".

"ஐயா....., அப்படியெல்லாம் எதுவும் இல்லை. உங்களுக்கே தெரியும்...., இங்கே கம்பெனியில் லேடீஸ் ஸ்டாஃப் யாரும் கிடையாது. அப்படியிருக்கும்போது, அது மட்டும் இல்லை, உங்களுக்கு எங்க நிலைமை தெரியும்....", அவன் குரலில் அவ்வளவு தயக்கம்.

"மனோ...., எனக்கு உங்கமேல் நம்பிக்கை இருக்கு. உங்களைப்பற்றி நன்றாக தெரிந்ததால் தான் அவங்களை அனுப்பி இருக்கேன். ஏற்கனவே நான் சொன்னது உனக்கு ஞாபகம் இருக்கும்னு நினைக்கிறேன்...., இருந்தாலும் மறுபடியும் சொல்கிறேன்...

"உனக்கு அவங்க வேலையில் திருப்தி இல்லை என்றால், ஒரு நிமிடம் கூட யோசிக்கவேண்டாம்...., உடனே திருப்பி அனுப்பிவிடு. சம்பளமும்

பெரிதாக எதுவும் கொடுக்க வேண்டாம்...., அவங்க வாழ்க்கையை புரிஞ்சுக்கணும்...., எனக்கு அதுதான் முக்கியம்...", அவர் குரல் முடிக்கும்பொழுது கனத்திருந்தது.

அதை உணர்ந்தவன் போன்று...., "ஐயா...., உங்க தேர்வு எப்பவுமே சோடை போகாது. எல்லாம் நாங்க பார்த்துக்கறோம். உங்க நம்பிக்கையை கண்டிப்பா காப்பாத்துவோம் ஐயா...", உறுதி அளிப்பவன்போல் சொன்னான்.

"அப்போ வேற எதுவும் இல்லையே..., நான் வைக்கிறேன். எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு", சொன்னவர் வைத்துவிட்டார்.

மனோவின் முகத்தையே பார்த்துகொண்டிருந்த நண்பர்கள் என்னவென்று கேட்க...., அவர் சொன்னதைச் சொல்லவே...., "மனோ...., எப்பவும் போல இதிலேயும், நீ என்ன முடிவெடுக்குறியோ அதுக்கு நாங்க ஆதரவு கொடுக்கிறோம். அவங்களை கூப்பிட்டு பேசு...", அருண் சொன்னான்.

"அருண்...., அவங்க என்ன வேலைடா செய்வாங்க...? எல்லாம் சின்னப் பிள்ளைங்களா இருக்காங்க...", ராஜு கேட்டான்.

"ராஜு...., நீ இவ்வளவு யோசிப்பியா...? நல்ல விஷயமாச்சே...., நீ உன் சின்ன மூளையை கசக்கி எதுவும் யோசிக்க வேண்டாம். எல்லாம் நம்ம மனோ பார்த்துப்பான். நீ உன் வேலைக்கு கிளம்பு...", அருண் அவனை அனுப்பினான்.

"அப்படியா...., சரிடா...., மனோ நான் கிளம்புறேன்...", சொன்னவன் கிளம்பப் போனான்.

அவனைத் தடுத்த மனோ...., "ராஜு...., கொஞ்சம் வெயிட் பண்ணு. அவங்களையும் கூட கூட்டிட்டு போ...., அவங்க தொழில் திறன் எவ்வளவுன்னு நமக்கு தெரியணுமே...".

"ம்ச்...., விளையாடாதே மனோ. வந்த முதல் நாளே அவங்களுக்கு வேலை கொடுப்பியா...? முதல்ல அவங்க இந்த சூழலுக்கு பழகட்டும்...", அருண் மனோவைத் தடுத்தான்.

நண்பர்களின் பேச்சைக் கேட்டு தனக்குள் சிரித்துக் கொண்டான்.

வேலைக்கு புதிதாக யார் வந்தாலும்...., உடனடியாக அவர்கள் திறமையைக் காண விரும்பும் அவன் தோழர்கள்...., பெண்கள்மேல் ஒரு சாஃப்ட் கார்னர் இருப்பதால்...., அவர்களை வேலை வாங்க தயங்குவது புரிந்தது.

“டேய்...., வேலைன்னு வந்துட்டா எல்லோரும் ஒண்ணுதான். சரி, நீங்க சொன்னீங்க என்பதற்காக, இன்னைக்கு ஒரு நாள், கம்பியூட்டரில் கொஞ்சம் வேலை பார்க்கட்டும்.

“இருந்தாலும் மூணுபேர் வருவாங்கன்னு எதிர்பார்க்காததால் முன்னேற்பாடு எதையுமே நாம செய்யலை. முதல்ல அவங்களுக்கு வேலை செய்ய இங்கே ஒரு இடம் ஏற்பாடு செய்யணும்....”, தாடையை நீவியவாறு சொன்னவன்....,

“சரி...., எதுக்கும் நீங்க உங்க வேலைக்கு கிளம்புங்க..., நான் பேசிக்கறேன்..”, மனோ சொல்லவே இருவரும் கிளம்பிவிட்டார்கள்.

அவர்கள் சென்றவுடன்...., மேஜைமேல் இருந்த அழைப்புமணியை அழுத்த..., அலுவலக பையன் உடனடியாக உள்ளே வந்தான்.

“வெளியே உக்காந்து இருப்பவங்களை வரச்சொல்லு...”.

பையன் வெளியேறி...., “அக்கா...., மனோ சார் உங்களை வரச் சொன்னாங்க...”, அவர்களை அறைக்குள் அனுப்பினான்.

மூன்று பெண்களும் அறைக்குள் வரவே...., “வாங்க...., உக்காருங்க...”, அவர்கள் அமர்ந்தவுடன்....,

“நீங்க என்ன வேலைக்கு வந்து இருக்கீங்கன்னு உங்களுக்குத் தெரியும்னு நினைக்கிறேன். உங்க வேலையை யார் எப்படி பிரிச்சுக்கப் போறீங்க...?”, அவர்களிடம் கேட்டான்.

அவன் ஏதோ புரியாத பாஷை பேசுவதைப் போல, அவனை விழி விரிய பார்த்தார்கள் அவர்கள். இதுவரை சேர்ந்து எதையுமே செய்து அறியாத அவர்கள், என்ன செய்வது, என்ன சொல்வது என்பது புரியாமல் திகைத்து அமர்ந்திருந்தார்கள்.

அவர்கள் முக பாவத்தில் சற்று குழம்பியவன்...., அதை விடுத்து,

“ஓ..., நீங்க இன்னும் அதையெல்லாம் யோசிக்கலையா...? எதுக்கும் நாளைக்கு வரும்போது இதை கொஞ்சம் யோசிச்சுட்டு வாங்க.... அதே மாதிரி...., இப்போ ஒரு நாலுமாடி பில்டிங்..., அதை அலுவலகமா உருவாக்கப் போறாங்க.

அதுக்கு, ஒவ்வொரு மாடிக்கும் என்ன கலர் இருந்தால் நல்லா இருக்கும்னு ஒரு ரஃப் ஸ்கெட்ச் போட்டு காட்டுறீங்களா...?”, சொன்னவன் ஒரு ஃபைலை அவர்கள் முன் வைத்தான்.

“இதில், அந்த கட்டடம் எவ்வளவு ஸ்குயர் ஃபீட்..., அறைகள் எவ்வளவு ‘ஃபீட்’ என்ற விவரம் எல்லாம் இருக்கு....”, சற்று யோசித்தவன்...., “உங்களுக்குன்னு இன்னும் தனியா எந்த கம்பியூட்டரும் ஒதுக்கலை, தற்போதைக்கு அதோ அந்த மேஜைமேல் இருக்கும் கம்பியூட்டரை யூஸ் பண்ணிக்கோங்க...

“நான் போயிட்டு ஒரு ஒரு மணி நேரத்தில் வரேன்...”, அவர்களின் திகைத்த முகத்தைப் பார்த்தாலும், என்னவென்று கேட்டுக் கொள்ளாமல்...., அங்கிருந்து வெளியேறினான்.

பெண்கள் மூவரும் இருக்கையை விட்டு அசையாமல் அமர்ந்திருந்தார்கள்.

***

# மௌனம் - 8.

அவன் விட்டுச்சென்ற இடத்திலேயே அமர்ந்திருந்தார்கள் மூவரும். வேலையை எங்கிருந்து துவங்கவென்று தெரியாமல் திகைத்தார்கள். இதுவரை, மூவரும் எதையுமே திட்டமிட்டு செய்ததில்லை என்பதால்...., யார் முதலில் துவங்குவது என்ற சிந்தையே அதிகமிருந்தது.

இறுதியாக...., "சரி முதல்ல நாம அந்த ஃபைலைப் பார்க்கலாம்....", நித்யா ஃபைலை கையில் எடுத்தாள்.

"இவன் நம்மை வேலை வாங்காமல் விட மாட்டான் போல....", அனிதா கலாய்க்க,

"நீ சும்மாவே இருக்க மாட்டியா...?", நித்தி வாயால் கேட்டதை...., ராதா பார்வையால் வினவினாள்.

"ரெண்டுபேரும் ஒண்ணு கூடிட்டாளுங்களாம்..", அனிதா உதட்டை பிதுக்கி தோளைக் குலுக்கினாள்.

"நீ திருந்தவே மாட்ட...., ராதா நீ வா...", அழைத்த நித்தி...., எழுந்து சென்றாள்.

ஃபைலைப் பிரித்த நித்தி...., உள்ளே பல மடிப்புகளாக இருந்த பேப்பரை விரிக்க...., அதில் வரைந்திருந்த கோடுகளைப் பார்க்கவே தலையைச் சுற்றியது.

"நித்தி...., என்னதிது...., விவேக் ஒரு படத்தில், தெலுங்கு எழுத்து புரியாமல்...., 'ஜிலேபியை பிச்சு போட்டது மாதிரி இருக்கு'ன்னு சொன்னது மாதிரி....., இதுல எல்லாமே ஒரே கோடாவே தெரியுது...., எனக்கு இப்போவே பீதியாகுதே...", ராதா தன் திகைப்பை மறைக்காமல் வார்த்தையில் வெளியிட்டாள்.

ஆனால் நித்யா அதை வார்த்தையில் சொல்லவில்லை அவ்வளவுதான் வித்தியாசம். அவளுக்கும் அப்படித்தான் இருந்தது.

ராதாவின் குரலைக் கேட்ட அனிதா...., இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவர்கள் வைத்திருந்த ஃபைலை எட்டிப் பார்த்தாள்.

பார்த்தவள்....., "ஹா...., ஹா...., இவன், கம்பெனியை இழுத்து மூடணும்னு முடிவு பண்ணியிருந்தால், அதை நேரடியாவே செஞ்சுட்டு போகலாமே. எதுக்கு தேவையில்லாமல் நம்மளை இதில் சிக்க வைக்கணும்...", வேகமாக கேட்டாள்.

"என்னடி உளறுற...?", நித்தி புரியாமல் புருவம் உயர்த்தினாள்.

"இல்ல...., நம்மகிட்டே ஒரு ஒரு ரூமா, டிசைன் செய்யக் கொடுத்தாலே ஒரு மண்டலம் ஆகும். இதில் இது நாலுமாடி கட்டிடம் வேற...., காமெடியா இல்ல...", கேட்டுவிட்டு கெக்கே பிக்கேவென்று சிரிக்க...., மற்ற இருவரும் கொலைவெறியானார்கள்.

"ஏண்டி உனக்கு நல்லதாவே பேச வராதா...", நித்தி ஆற்றாமையாக புலம்ப,

"ஏன் வராமல்...", ம்கும்...., என்று தொண்டையை செருமி சரிசெய்தவள்...., "நல்லகாலம் பொறக்குது நல்லகாலம் பொறக்குது...., தாயி ஜக்கமா வாக்கு சொல்லுறா....", அனிதா சத்தமாக சொல்லத் துவங்கவே...., ராதா பாய்ந்து சென்று அவள் வாயை அடைத்தாள்.

அத்தோடு....., "ஏண்டி நல்லதா பேச சொன்னால்...., குடுகுடுப்பை காரன் மாதிரி அருள் வாக்கு சொல்லுற...., வந்திருக்குறது புது இடம். அந்த பயம் கூடவா இல்லை...", அனிதாவின் வாயில் கையை வைத்து அடைத்தவாறே சொன்னாள்.

"அட....., நான் எதுக்கு பயப்படணும்...., இதென்ன ஜெயிலா..., இல்ல நான்தான் கைதியா....., போவியா...., ஹை ரைமிங்கா இருக்குல்ல...", தான் சொன்னதை அவளே சிலாகித்துக் கொண்டாள்.

"இல்ல...", நித்யாயும் ராதாவும் ஒரே குரலில் சொன்னார்கள்.

"பொறாமை...", அலட்சியமாகச் சொன்னவள்...., அவர்கள் அருகில் இருக்கையை இழுத்து போட்டு அமர்ந்தாள்.

வேகமாக பார்வையை அந்த வரைபடத்தில் ஓட்டியவள்...., "ஆத்தாடியோ எம்மாம் பெருசு. மூணுபேரும் சேர்ந்து வெள்ளையடிக்க ஆரம்பிச்சால் கூட ஒரு மாமாங்கம் ஆகும் போலவே....", கண்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரித்துச் சொன்னாள் அனிதா.

இவளை திருத்தவே முடியாது என்பதுபோல் தங்களுக்குள் பார்வையை பரிமாறிக்கொண்ட மற்றவர்கள்..., எங்கிருந்து துவங்கலாம்....., என்ன செய்யலாம் என சிந்திக்கத் துவங்கினார்கள்.

குழப்பம்தான் மிஞ்சியபோதும்....., அனிதா சொன்ன ஒரு வார்த்தை நித்யாயின் கருத்தை கவர்ந்திருந்தது. அதை நினைவில் கொண்டு..., “ராதா...., இவ சொன்னதிலும் ஒரு பாயிண்ட் இருக்கு...”, நித்யா சொல்லத் துவங்கவே....,

“எதுக்கு நம்மளை நடுவில் இழுக்குறாங்கன்னு சொன்னதுதானே...”, அனிதா இடையில் புகுந்து கேட்டாள்.

“உன் தலை...., அவ என்ன சொல்லவரான்னு கொஞ்சம் கேளு...”, ராதா வெடுக்கென சொன்னாள்.

“ஹேய் ஊமைக்கோட்டான்...., நீயென்ன இன்னைக்கு ரொம்ப பேசுற...., தப்பாச்சே...”, ராதாவை வம்புக்கு இழுத்தாள் அனிதா.

“ஆரம்பிச்சுட்டியா...”, தன் தலையிலேயே அடித்துக்கொண்ட நித்யா...., “ராதா அவளுக்கு பதில் சொல்லாதே...., இங்கே வா, நான் என்ன சொல்லுறேன்னா...”, என்று துவங்கி தன் கருத்தைச் சொல்ல....,

“ஆமா, இல்லன்னா மட்டும்..., அவ அப்படியே டக்கு டக்குன்னு பேசிடப்போறா...., போவியா....”, அனிதாவின் புலம்பலை அவர்கள் கண்டுகொள்வதாகவே இல்லை.

“ராதா...., நாம இந்த கட்டிடத்தை மொத்தமா பார்ப்பதால் தானே மலைப்பா இருக்கு. நாம ஒவ்வொரு ஃப்ளோரா போகலாம். அதிலும், ஒவ்வொரு அறையா, நம்மளோட வேலையை செய்துட்டே வந்தோம்னா சரியா இருக்கும்...”, நித்யா சொன்னதோடு மட்டுமல்லாமல்...., என்ன செய்யலாம்...., எங்கிருந்து துவங்கலாம் என்று திட்டமிட்டாள்.

ராதாவும் அவள் செய்கைக்கு துணை போனவள்...., கம்பியூட்டரை ஆன் செய்தவள்...., அறைகளுக்குத் தேவையான, வித்தியாசமான வண்ணங்களின் கலவைகளை உருவாக்கினாள். அவளது கிரியேட்டிவ் கலர்களை சிலாகித்துப் பாராட்டினாள் நித்யா.

அவர்கள் வேலையிலேயே கவனமாக இருக்க....., “ஏய்...., என்னங்கடி

பண்ணுறீங்க. முதல்ல அந்த இடத்துக்குப் போய்....., அங்கே என்ன கம்பெனி வரப்போகுதுன்னு தெரிஞ்சுகிட்டு...., அதுக்கு ஏத்த மாதிரி திட்டமிடணும். அதை விட்டுட்டு...., கணக்கு பண்ணுறாளுங்களாம், போங்கடி அங்கிட்டு...", அவர்கள் கையில் இருந்த ஃபைலைப் பிடுங்கினாள்.

"அதுக்கு...., மூணுபேரும் அங்கேயே போய் நிக்க முடியுமா...?", நித்யா கேட்க....,

"அதான், ஒண்ணுக்கு மூணுபேர் இருக்கோமே...., யாராவது போக வேண்டியதுதான். ஏன்...., இந்த ஊமைக்கோட்டானையே அனுப்புறது...", நொடித்துகொண்டாள் அனிதா.

"அதென்ன எப்போ பாத்தாலும் அவளை கேலி செய்யிறது. உனக்குன்னு வரும்போதுதான் அவளோட வலி உனக்கு புரியும். அப்போ வச்சுக்கறேன்...".

"ஹா..., ஹா...., சீரியஸா காமெடி பண்ணாதே நித்தி....", சொல்லிவிட்டு மீண்டும் அனிதா சிரிக்க...., அவர்களுக்குத்தான் வெறுத்துப் போனது.

இவர்களின் வழக்காடல் ஒரு முடிவிற்கு வரும் முன்பே...., அறைக்குள் வந்தான் மனோ.

வேகமாக அவர்கள் அருகில் வந்தவன்....., "உங்க வேலை எந்த அளவில் இருக்கு. நான் பார்க்கலாமா...?", நித்தியின் கையில் இருந்த ஃபைலில் பார்வையை ஓட்டியவாறே கேட்டான்.

"கிழிஞ்சுது...", அனிதா சன்னமாக உரைக்க...., நித்தியும் ராதாவும் கலவரமானார்கள். அவர்களுக்கும், இங்கே வேலைக்கு வந்ததில் அவ்வளவு பிடித்தமில்லைதான். ஆனாலும், மூர்த்தி எதைச் செய்தாலும் அதில் ஒரு நியாயமிருக்கும் என்று அறிந்ததால் நித்யா ஒத்துகொண்டாள்.

நித்யா தன்னுடன் இருக்கிறாள் என்ற தைரியத்தில், ராதாவும் ஒத்துகொண்டாள். ஆனால் அனிதா வேறு வழியில்லாமல் இதற்கு, இந்த ஏற்பாட்டிற்கு இணங்கியவள். எனவேதான், தன் துடுக்குத்தனத்தை மறைக்கவோ, விடவோ அவள் முயற்சிக்கவில்லை.

ஆனால் மனோவோ, அவள் குரல் தனக்கு கேட்டதாகவே காட்டிக்கொள்ளவில்லை. அவன் கவனம் முழுவதும்...., கணினியின் மீதும்...., அவர்கள் சொல்லப்போகும் பதிலுக்காகவும் காத்திருந்தன.

எப்படியும் ராதா பேசப்போவதில்லை...., இந்த அனிதா வாயைத் திறக்காமல் இருந்தாலே புண்ணியம்....., யோசித்த நித்யா....., “சார்...., எங்களுக்கு இதெல்லாம் ரொம்ப புதுசு. உங்க எதிர்பார்ப்புக்கு இதை சரியாக செய்வோமா என்பது சந்தேகம்தான்....”, தயக்கமாக என்றாலும்...., உண்மையை உரைத்தாள் நித்தி.

“நித்யா...., நீங்க, எங்களை எல்லாம் பெயர் சொல்லியே அழைக்கலாம். என் பெயர் உங்களுக்குத் தெரியும். ஆபீஸ்ல இருப்பவன் அருண். வெளியே போயிருப்பவன் ராஜு....

“பிறகு...., எங்க எதிர்பார்ப்பு எதுவாகவும் இருக்கட்டும். முதல்ல உங்க வேலையை காட்டுங்க. கஸ்டமர்க்கு நம்ம வேலை பிடித்தாலே போதும், அவங்க என்ன நினைக்கிறாங்க என்பது பின்னாடி போய்டும். சோ...”, நிறுத்தியவன் கேள்வியாய் அவளைப் பார்த்தான்.

எப்படியும் இந்த சூழலை எதிர்கொண்டே ஆகவேண்டும் என்ற உண்மை புரிந்ததால்...., “இப்போ கீழ் தளம் வரை மட்டும்தான் பார்த்தோம். அங்கே இந்த வர்ணம்...., என்ட்ரன்ஸில் ஒரு புகைப்படம்....., செயற்கை நீரூற்று...., சுவர்களுக்கு வர்ணம் பூச விரும்பவில்லை என்றால்...., வேறு வழிமுறைகளும் இருக்கின்றன...”, ஒவ்வொன்றாக சொல்லிக்கொண்டே போனாள்.

அத்தோடு...., “மேலும் சில புதிய வர்ணங்களை ராதா உருவாக்கி இருக்கிறாள். அந்த வர்ணங்கள் எல்லாம் ரொம்ப நல்லா இருக்கு. நீங்க ஒருமுறை பார்த்தால் உங்களுக்கு கண்டிப்பா பிடிக்கும்.

“ஆனா...., இது எவ்வளவு எக்ஸ்பென்ஸ் ஆகும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அதேபோல்...., அங்கே எந்த மாதிரியான கம்பெனி வருகிறது எனத் தெரிந்தால்...., அதற்கு ஏற்றவாறு சில புது ஐடியாக்களை செயல்படுத்தலாம்...”, முதலில் தயக்கமாகத் துவங்கியவள்...., முடித்தபொழுது ஒரு புது நம்பிக்கை அவள் பேச்சில் பிறந்திருந்தது.

அவள் பேச்சை ரசித்தவன்..., “வெல்...., குட் ஜாப்.....,

சொல்லப்போனால், என் எதிர்பார்ப்புக்கு மேலேயே தகவல் சொல்லிட்டீங்க. இனிமேல் நீங்க மூன்றுபேரும் கூட்டாக சேர்ந்து ஒரு வேலையைச் செய்யாமல்...., உங்களுக்குள்ளேயே வேலையை பிரிச்சுக்கோங்க.

“அதாவது, இப்போ ராதா நல்லா வர்ணங்கள் கோர்க்குறாங்க என்றால்...., அவங்களுக்கு அந்த பொறுப்பை கொடுங்க. அவங்க கோர்க்கும் வர்ணங்களை, கஸ்டமர்களிடம் காட்டி ஒப்புதல் வாங்கவும்...., ஒரு குட்டி டெமோ காட்டவும், ஒரு ஆள் முன்வாங்க.

“இன்னொருத்தர், ஃபீல்டில் இருந்து வேலையை கண்காணிக்கும் பொறுப்பை ஏத்துக்கோங்க....., கூடவே இருந்து, நீங்க நினைத்த விதத்தில் வேலை சரியா வருகிறதா என்பதை நீங்க கவனித்தால் நன்றாக இருக்கும்...”, அவன் சொல்லிக்கொண்டே போக...., கேட்டவர்களுக்கு மலைப்பாக இருந்தது.

“விடிஞ்சிது...., நம்ம உடம்பில் அங்கங்கே இருக்க கொழுப்பை எல்லாம் கரைக்காமல் விட மாட்டார் போல...., நான் வரலை இந்த விளையாட்டுக்கு...”, அனிதா அவசரமாக நித்தியின் காதில் சொன்னாள்.

இதுவரை அவன் பேசுவதை, இமை சிமிட்ட மறந்து பார்த்துக் கொண்டிருந்த நித்தி...., அனிதாவின் பேச்சில் கலைந்து...., அவளை கண்டிக்கும் பார்வை பார்த்தாள். அனிதா அவள் பார்வையை உணர்ந்தாலும் அலட்டிக் கொள்ளாமல்...., தோளைக் குலுக்கிவிட்டு பார்வையை திருப்பிக் கொண்டாள்.

பெண்களின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியையும்...., அனிதாவின் பேச்சையும்...., நித்யாயின் பார்வையையும் வினாடிக்குள் கண்டுகொண்டவன்...., அனிதாவின் பேச்சைப் பற்றி கண்டுகொள்ளவே இல்லை.

“இப்போ எதுக்கு இவ்வளவு அதிர்ச்சி. எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா கத்துக்கலாம். அதான், சொல்லித்தர நாங்க இருக்கோமே. நீங்க, யார் என்ன பொறுப்பை ஏத்துக்க போறீங்கன்னு மட்டும் முடிவு பண்ணிக்கோங்க...

“ஓகே...., நீங்க உங்க வேலையை இப்படியே தொடர்வதாக இருந்தாலும் சரிதான். இல்லையென்றால் கிளம்புவதாக இருந்தாலும்

எனக்கு சம்மதம்தான். நீங்க....", இருக்கிறீர்களா போகிறீர்களா என்பதை பார்வையில் தாங்கி கேள்வியாக அவன் வினவ....,

"இதுக்குமேல எந்த வேலையையும் என் உடம்பு தாங்காது. எனக்கு தூக்கம் வருது....", நித்தியின் காதில் அனிதா புலம்பினாள்.

'இதுவரை இவ என்ன வேலை செய்தா...?', யோசித்த நித்தி...., அனிதாவை அடக்கும் வழி தெரியாமல் சங்கடமாக நெளிந்தாள்.

இங்கேயே இருந்து, அனிதாவின் புலம்பலை கேட்பதைவிட...., வீட்டுக்குச் சென்று அவளை தங்கள் வழிக்கு கொண்டுவருவதுதான் சிறந்தது என்பது புரிய...., "நாங்க நாளைக்கு வந்து எங்க வேலையை கண்டினியு பண்ணுறோம்...., முதல்நாள்...., அதான் கொஞ்சம்...", தயக்கமாக உரைத்தாள் நித்யா.

அவள் தயக்கம் உணர்ந்தவன் போன்று, மெல்லியதாக சிரித்தவன்...., "அப்போ நாளைக்கு கொஞ்சம் தெளிவான முடிவோடு வருவீங்கன்னு நினைக்கிறேன்...", இதழை பிரித்து சிரித்தவாறு கேட்டான்.

அவன் சிரிப்பில் கொஞ்சம் மயங்கினாள் நித்யா. ராதா அதை கண்டுகொள்ளாமல் இருக்க...., அனிதாவோ...., "பெரிய புன்னகை மன்னன்...", மனதுக்குள் நொடித்தாள்.

"சரி நீங்க கிளம்புங்க. போக முன்னாடி அருண் அங்கே இருக்கான். அவன்கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு போங்க...", மேலே அவர்களிடம் பேசாமல் விலகி நடந்தான்.

தன் இருக்கையை நோக்கி நடந்தவன்...., லேசாக திரும்பி, கதவை நோக்கிச் செல்லும் நித்யாவை பார்த்தவன்...., அவள் தன்னைப்பார்த்துவிடும் முன்னர்...., அவர்களுக்கு முதுகு காட்டிச் சென்று, தன் இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

'நித்யாவைப் பார்த்தா கொஞ்சம் அம்மா மாதிரி...', யோசனையை அத்தோடு நிறுத்திக் கொண்டான்.

"இவன்கிட்டேயே நான் சொல்லிக்கப்போறதில்லை, இதில் அருண்கிட்டே வேறயாம்...", அசட்டையாகச் சொன்ன அனிதா...., அங்கிருந்து வெளியேறினாள்.

நித்யாயும், ராதாவும், ‘அவளை என்ன செய்வது’ என்பதுபோல் பார்த்தவர்கள். தங்களை கண்டுகொள்ளாமல் வேலையில் மூழ்கியிருந்த மனோவை சங்கடமாக ஒரு பார்வை பார்த்தவர்கள், அவன் அருகில் தயங்கிச் சென்றார்கள்.

அவர்கள் தன்னை நெருங்கவே...., “நான்தான் நீங்க கிளம்பலாம்னு சொல்லிட்டேனே. சோ...”, தோளைக் குலுக்கியவன்...., ‘பரவாயில்லை’ என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான்.

“சாரி...., அனிதா கொஞ்சம்....”, எப்படிச் சமாளிக்கவென்று தெரியாமலும்...., ‘அவள் செய்த வேலைக்கு’...., என்று தனக்குள் சலித்தவளுமாக நித்யா விளக்கம் கொடுக்கத் துவங்கவே....,

“நித்யா...., முதல் நாளே, ஒருத்தங்க சூழலை புரிஞ்சுக்கணும்னு நாம எதிர்பார்க்க முடியாது. அதேபோல் அவங்களை வேலைக்கு வரச்சொல்லி கட்டாயப்படுத்தினால் அவங்களும் என்னதான் செய்வாங்க பாவம்...., நீங்க கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கோங்க.

“அதோட...”, எதையோ சொல்லப் போனவன்....., “சாரி...., நான் உங்க தனிப்பட்ட விஷயத்தில் தலையிடுறேன்னு நினைக்கிறேன். அனிதாவை நான் எதுவும் தப்பா நினைக்கலை...”, பழைய புன்னகையை முகத்தில் தாங்கியவாறு அவர்களுக்கு விடை கொடுத்தான்.

‘இவனால் எப்படி இவ்வளவு சுலபமாக எதையும் எடுத்துகொள்ள முடிகிறது...’, எண்ணிய நித்யா..., ஒரு தலையசைப்புடன் அவனிடமிருந்து விடை பெற்றாள். ராதாவும் ஒரு பார்வையோடு நிறுத்திக் கொண்டாள்.

வெளியேறிய அவர்களின் முதுகை வெறித்தவன்...., ‘எப்படி சமாளிக்கப் போறோம்...?’, தனக்குள் கேட்டுகொண்டான்.

நித்தியும் ராதாவும், அனிதா எங்கே என்று தேட...., அனிதாவோ வராண்டாவில் கிடந்த இருக்கையில் அமர்ந்து வேடிக்கை பார்த்துகொண்டிருந்தாள். வேகமாக அனிதாவை நெருங்கியவர்கள்...., இருக்கும் இடம் கருதி தங்களை கட்டுப்படுத்தியவர்கள்,

“எழுந்து எங்களோட வாடி...”, கடித்த பற்களுக்கிடையில் நித்யா உரைக்க...., அவளின் கோப முகத்தைக் கண்டதால் மறு பேச்சின்றி

எழுந்து, வேண்டா வெறுப்பாக உடன் சென்றாள்.

அருணின் அறைக்குச் சென்று...., அவனது அனுமதிக்காகக் கதவைத் தட்ட...., “வாங்க...”, அருணின் குரல் உள்ளிருந்து ஒலித்தது.

நித்யாயும் ராதாவும் அறைக்குள் வரவே...., “சொல்லுங்க...., ஏதாவது உதவி தேவையா...?”, கையில் இருந்த வரைபடக் கருவிகளை மேஜைமேல் வைத்தவாறு வினவினான்.

“இல்ல...., நாங்க கிளம்புறோம். அதான்...”, சொல்லிவிட்டுப் போக வந்தோம் என்ற பொருளில் இழுத்து, நிறுத்தினாள்.

“நான் ட்ராப் பண்ணணுமா...?”, அவன் குரலில் இருந்தது, ஆர்வமா...., கடமையா...., கேலியா, என்பதை பெண்களால் இனம் காண முடியவில்லை.

திகைத்துப்போய் அவனைப் பார்க்க...., “என்னடி இவன்....., விட்டா நம்மளை தூக்கிக் கொண்டுபோய் விட்டுடுவான் போல...”, அனிதா அவசரமாக ராதாவின் காதைக் கடிக்க...., ராதாவோ...., ஏற்கனவே அவனது கேள்வியிலும்...., அனிதாவின் கேலியிலும் தன்னை கட்டுப்படுத்த முடியாமல், களுக்கென சிரித்துவிட்டாள்.

ராதா சிரிப்பதை ஆர்வமாகப் பார்த்தவன்...., அடுத்த நிமிடம் தலையை உலுக்கிக் கொண்டான். “ஹையோ...., நான் நிஜம்மாதாங்க கேட்டேன். உங்களை கேலி செய்யலை....”, அவசரமாக மறுத்தான்.

நிலைமையை எப்படி சமாளிக்கவென்று தெரியாமல் அவன் திணற...., “இல்ல...., மனோ சார் உங்ககிட்டயும் ஒரு வார்த்தை சொல்லிட்டு, கிளம்பச் சொன்னாங்க. அதான் சொல்லிட்டு போக வந்தோம். நாங்க கார்லதான் வந்திருக்கிறோம்...”, அவனை இயல்புக்கு கொண்டுவந்தாள் நித்யா.

“ஓ...., இவன் வேற...., சொன்னால் கேக்கவே மாட்டான். சரி வாங்க....”, அலுத்துக்கொள்வதுபோல் சொன்னாலும்...., நண்பனின் செய்கையில், ஒரு பெருமிதம் அவன் முகத்தில் எட்டிப் பார்த்தது.

அவர்கள் கிளம்ப எத்தனித்த அதே நேரம்...., ராஜேஷ் அருணின் அறைக்குள் நுழைந்தான்.

அங்கிருந்த பெண்களைப் பார்த்து வேகமாக அவர்கள் அருகில் வந்தான். “ஹாய், உங்களுக்கு எங்க கம்பெனியை பிடிச்சிருக்கா....? என்னோட வரீங்களா...., நம்ம சைட்டை உங்களுக்கு சுத்திக் காட்டுறேன்....”, ஆர்வமாக கேட்டான்.

அவன் கேட்டு முடிக்கவே...., “என்னடி இது லூசு மாதிரி...!!”, அனிதாவின் குரல் மட்டும் தனித்து ஸ்பஷ்டமாக அறைக்குள் ஒலிக்க...., அவள் குரல் அப்படி ஒலிக்கும் என்பதை எதிர்பாராத அனிதாவே திகைத்துப் போனாள்.

அந்த நேரம் எதேச்சையாக அங்கே வந்த மனோவும், அனிதாவின் பேச்சைக் கேட்டவன், கிளர்ந்த தன் கோபத்தை கட்டுப்படுத்த திணறிப் போனான்.

நித்தியும், ராதாவும் அனிதாவின் கையை அழுத்தி, தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்த, அருண், கோபத்தில் தாடை இறுக அவளை உறுத்து பார்த்தான்.

“ஓ...., சிலர் என்னை அப்படித்தான் சொல்லுவாங்க. நான் லூசெல்லாம் இல்லைங்க...”, ராஜு கல்மிஷமில்லாமல் உரைத்தான்.

அருண் கோபத்தின் உச்சிக்கே செல்ல...., “ராஜு...”, அவன் அழைப்பு அதை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. அருண், நண்பனின் அருகில் சென்று அவனைத் தோளோடு அணைத்துக் கொண்டு, பெண்களை தாடை இறுக கண்கள் சிவக்க...., பார்வையால் சுட்டான்.

மனோவும் அதையே செய்ய...., நித்தி, மனோவிடம் பார்வையால் மன்னிப்பு வேண்ட...., ராதா அருணிடம் மன்னிப்பு வேண்டினாள். ஆனால் சம்பந்தப்பட்ட இருவரில்...., ராஜு நண்பர்களின் ஆதரவில் சாதாரணமாக இருக்க, அனிதா முதல் முறையாக தன் செய்கைக்கு வெட்கினாள்.

***

# மௌனம் – 9.

காலையில் பெண்கள் மூவரும் ஆண்களைக் கண்டபொழுது அறையில் நிலவிய மௌனத்தைவிட....., இப்பொழுது அசாத்திய மௌனம் நிலவியது. யார் முதலில் பேச்சைத் துவங்குவது எனத் திணற....,

“ப்ளீஸ், யூ மே லீவ்...”, மனோ கிட்டத்தட்ட கத்த...., அருண் முகத்தை திருப்பிக்கொண்டு...., ராஜுவை அழைத்துக்கொண்டு அறையிலிருந்து வெளியேறினான்.

“சாரி மனோ...”, நித்யா அவனை சமாதானம் செய்ய முனைய....,

“ப்ளீஸ்....”, வாசலை நோக்கி கை நீட்டியவன்...., நித்யா மேலும் எதையோ பேச வரவே..., சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

“ச்சே...., அனி...., நீ எவ்வளவோ தப்பு பண்ணி இருக்க, அப்போல்லாம் உன்மேல் கோபம் இருந்தாலும்...., அதை நாங்க பெருசா எடுத்தது கிடையாது. ஆனால் இப்போ நீ செய்தது.....,

“ராதா...., வா நாம போகலாம்....., இவ வராளான்னு கேளு. இல்லன்னா நாம கிளம்பலாம்...”, கோபமாக அங்கிருந்து சென்றாள். ராதா அவள் பின்னால் ஓட, அனிதா ஒரு நிமிடம் அங்கே நின்றவள்...., ஒரு பெருமூச்சை வெளியேற்றியவள்...., அவர்கள் பின்னால் சென்றாள்.

இங்கே மனோவின் அறைக்குள் இருந்த அருண்...., ராஜுவை திட்டிக் கொண்டிருந்தான். “ஏண்டா ராஜு இப்படி இருக்க? ஒரு பொண்ணு உன்னை கேலி பண்ணுறா...., நீ என்னன்னா, அவகிட்டே விளக்கம் கொடுத்துட்டு இருக்க. உனக்கு கொஞ்சம் கூட கோபமே வரலயே....,

“நானா இருந்த அந்த இடத்திலேயே அவளை நாலு அறை விட்டிருப்பேன். ஐயாவுக்காகத்தான் பேசாமல் இருந்தேன். இந்த மனோ வரட்டும்...”, தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அறைக்குள் உலாவினான்.

மனோவும் அப்பொழுது வந்துவிடவே...., “மனோ...., நீ என்ன செய்வியோ தெரியாது. இனிமேல் அவ என் கண்ணுலேயே படக் கூடாது. அப்படியே பட்டால் நான் என்ன செய்வேன்னு தெரியாது.

“ச்சே...., இவங்களுக்கெல்லாம், ஒரு ஆம்பளை எதார்த்தமா இருந்தா...., அவனை லூசுன்னு சொல்லிடுவாங்களா...? இதில் இந்த பயித்தியக்காரன் வேற....., விளக்கம் குடுக்குறான்.

“முதல்ல இவனை சொல்லணும்டா...., நாம கோபமா இருக்கோம்...., இவன் என்னன்னா..., அவ ஏதோ அவார்ட் குடுத்த மாதிரி சிலையாட்டம் நிக்கிறான்...”, வாயை மூடாமல் புலம்பிக்கொண்டே இருந்தான்.

“அருண்...., அவ வேணும்னு சொல்லியிருக்க மாட்டாடா...”, ராஜு அனிதாவிற்கு பரிந்து வந்தான்.

“ஆமா ஆமா...., அவ வேணும்னு சொல்லியிருக்க மாட்டா. ‘நீ வேண்டாம்’னுதான் சொல்லியிருப்பா...”, கடுப்பான்னான் அருண்.

“டேய் நீயே பார்த்தல்ல...., சொல்லிட்டு, அவ எப்படி அமைதியாயிட்டான்னு...”, அருணை சமாதானம் செய்ய முயன்றான் ராஜு.

அவன் பேச்சில் எரிச்சலான அருண்...., “மனோ..., நீ என்னடா சிலையாட்டம் நிக்கிற...., ஏதாவது பேசித்தொலைடா...., இவன் எப்படி பேசுறான் பாத்தியா..”, அருணால் அவள் பேச்சை சாதாரணமாக எடுத்துகொள்ளவே முடியவில்லை.

மனோவிற்கும் மிகுந்த கோபம்தான்...., ஆனால் அதை இப்பொழுது வெளியிட்டால், அருண் இன்னும் கோபமாகிவிடுவான் என்பதால்...., பிரச்சனையை அத்தோடு முடிக்க எண்ணி....,

“ராஜு...., இன்னைக்கு என்ன சீக்கிரம் வந்துட்ட? சைட்ல ஏதாவது பிரச்சனையா...?”, அவன் யுக்தி சரியாக வேலை செய்தது.

“அதானே...., என்னடா பிரச்சனை..?.”, அருணும் அடுத்த விஷயத்துக்கு தாவினான்.

“இல்லடா...., முதல் முறையா நம்ம கம்பெனிக்கு பொண்ணுங்க வந்துருக்காங்க. அவங்களுக்கு நம்ம சைட்டை சுத்திக் காட்டலாம்னுதான் வந்தேன்...., எப்படியும் அவங்க நம்மளோட தானே இருக்கப் போறாங்க...”, ஆசையும்..., ஆர்வமும்...., சந்தோசமும் போட்டி

போட்டது ராஜுவின் குரலில்.

அதை கேட்டுக்கொண்டிருந்த அருணுக்கும், மனோவிற்கும் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அதிலும் மனோ திகைத்துப் போனான். கோபமாக வாயைத் திறக்கபோன அருணை பார்வையால் அடக்கியவன்...,

“அப்போ அவங்க இங்கேயே இருக்கணும்னு நீ ஆசைப்படுறியா ராஜு...”, ‘அப்படி ஆசைப்படக்கூடாதே’ என்ற தவிப்போடு கேட்டான்.

“பின்ன இல்லையா...., இன்னைக்கு நம்ம ஆபீஸ் எவ்வளவு அழகா இருந்தது தெரியுமா!! எனக்கு ரொம்ப பிடிச்சுதுடா...., நாம காலேஜ் படிக்கும்போது எல்லாம் அருண் எவ்வளவு ஆசைப்பட்டான்...., பொண்ணுங்க படிக்கிற காலேஜில் படிக்கணும்னு.

“ஆனா அப்போ முடியலை. ஆனா இப்போ கடவுளா பார்த்து அவங்களை நம்மக்கிட்டே அனுப்பி இருக்கார். அவங்க இங்கேயே இருக்கட்டும் மனோ...”, கிட்டத்தட்ட கெஞ்சினான்.

“ராஜு...., அப்போ நாம விடலை பசங்கடா. ஏதோ ஒரு ஆசையில் சொல்லிட்டேன். இப்போ அப்படியில்லை...., நமக்கு ஏழு கழுதை வயசாவுது. சில விஷயங்கள் நம்ம வாழ்க்கையில் நடக்கவே முடியாது என்பதை நாம ஏத்துக்கிட்டுதான் ஆகணும்...”, அருணின் குரல் இப்பொழுது கலங்கி இருந்தது.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவங்க இங்கே இருக்குறது உங்களுக்கு பிடிக்கலைன்னு சொல்லுங்கடா பாப்போம்...”, ராஜு முதல் முறையாக கோபம் கொண்டான்.

“எனக்கு அவளை பிடிக்கலடா...”, அருண் காட்டமாக சொன்னான்.

“உனக்கு பிடிக்கலன்னா பரவாயில்லை. எனக்கு பிடிச்சிருக்கு...”.

“ராஜு...”, மனோவும், அருணும் கிட்டத்தட்ட அலறினார்கள்.

“என்னங்கடா...?”, அவர்கள் அலறுவதன் காரணம் புரியாமல் கேட்டான்.

“இல்ல சும்மாதான்...., இப்படியே அவங்ககிட்டே பேசி வைக்காதே

ராஜு. ஏற்கனவே அனிதா ஒரு மாதிரி பேசுறா. அதேபோல் அவளுக்கு இங்கே வேலைக்கு வரவும் பிடிக்கலைபோல...., அதான் இப்படி நடந்துக்கறா...", மனோ ராஜுவிற்கு புரிய வைக்க முயன்றான்.

"மனோ..., அதான் நீயே சொல்லிட்டியே...., அவளுக்கு வேலைக்கு வர பிடிக்காததால் தான் இப்படி பேசுறா. பிடிச்சுட்டா எல்லாம் சரியா போய்டும்...", பிடிவாதமாக இருந்தான் ராஜு.

அவன் பேச்சில் செய்வதறியாது திகைத்தார்கள் இருவரும். பெண்களை திருப்பி அனுப்பிவிடும் முடிவில் அருண் இருக்க, மனோ, 'ஐயாவிடம் பேசவேண்டும்' என்று நினைக்க...., ராஜுவின் பிடிவாதம் அவர்களை என்ன செய்யவென்று தெரியாமல் திகைக்க வைத்தது.

ஒரு முடிவிற்கு வந்த மனோ...., "சரி...., அவங்க நாளைக்கு வந்தாங்கன்னா நாம மேற்கொண்டு பேசலாம். ஆனா அப்படியே அவங்க வரலன்னா...., நாமளா பேச முடியாது. என்ன ராஜு ஓகேயா..?".

"ம்...ம்...", ராஜு சந்தோசமாக தலையை உருட்ட...., "என்ன மனோ இது...", அருண் கண்டனக்குரல் எழுப்பினான்.

"அருண்...., எதையும் எடுத்தோம் கவுத்தோம்னு செய்ய முடியாது. அப்படியே அவங்களை...", சொல்லத் துவங்கியவன்...., ராஜுவை பார்த்து....,

"ராஜு...., இப்போ லஞ்ச் டைம் ஆயிடுச்சு. நீ வீட்டுக்கு போய் சாப்ட்டுட்டு, எங்களுக்கு சாப்பாடு எடுத்துட்டு வந்துடு, போ...", ராஜுவை அனுப்பினான்.

அவனும் மேலே எதையும் கேட்காமல்...., அங்கிருந்து சென்றான். அவன் சென்றவுடன்...., "மனோ...., நீ செய்யிறது சரின்னு நினைக்கிறியா. ராஜு எல்லாத்தையும் அவ்வளவு ஈசியா எடுத்துக்க மாட்டான். அதிலும் உறவுகள் விஷயத்தில் அவன் ரொம்பவே உணர்ச்சிவசப்படுவான்.

"இப்போவே பாரு...., அந்த பொண்ணு அவனை அப்படி கேவலப்படுத்திட்டு போகுது...., அதை கொஞ்சம்கூட புரிஞ்சுக்காமல்...., அவங்க நம்மளோடவே இருக்கணும்னு விரும்புறான்.

"இது இத்தோடவே நின்னுட்டால் பரவாயில்லை. அடுத்த கட்டத்துக்கு

போகணும்னு ஆசைபட்டால் என்ன செய்யிறது. எனக்கு பயமா இருக்கு...", தன் மனதில் இருப்பதை மறைக்காமல் மனோவிடம் கொட்டினான்.

"நீயே இவ்வளவு யோசிக்கும்போது...., நான் இதைப்பற்றி யோசிச்சிருக்க மாட்டேன்னு நினைக்கிறியா...", கூர்மையாக அவனைப் பார்த்து கேட்டான்.

"அப்படின்னா...?", புரியாமல் கேட்டான்.

"உனக்கே ராஜு பத்தி தெரியும். அவன் ஒரு குழந்தை மாதிரி. நாம எதையாவது மறுத்தால்...., சில நேரம் பிடிவாதத்தோட, 'இதுதான் வேணும்'னு கேட்பான். அதே நேரம்...., சமயம் பார்த்து நாம எடுத்து சொன்னால் புரிஞ்சுப்பான்.

"வந்தவங்களும் எவ்வளவு நாள் தாக்குப்பிடிப்பாங்கன்னு சொல்ல முடியாது. அவங்களே விலகிட்டாங்கன்னா நமக்கு பிரச்சனை இல்லை தானே....", அவன் பேச்சில் அவனுக்கே நம்பிக்கை இல்லை என்பதை உணர்ந்தவன்...

"அது மட்டும் இல்லை...., ஐயாவுக்கு என்ன பதில் சொல்லுறது...? 'அவங்க இப்படி நடந்துக்கறாங்க..., அதனால் அவங்க இங்கே வர வேண்டாம்'னு உண்மையை சொல்ல முடியுமா?", அவன் கேட்டதில் இருந்த உண்மை புரிய, அருண் அமைதியாக இருந்தான்.

"எனக்கும் கோபம் இருக்குதான் அருண்...., ஆனா கோபப்படும் நிலைமையில் நாம இல்லை, என்பது உனக்குப் புரியும்னு நினைக்கிறேன்..", குரல் இறுகச் சொன்னான்.

"மனோ...., நாம என்னைக்குத்தான் நம்மளோட உணர்வுகளை மறைக்காமல் வெளியிட்டு வாழ முடியும்...? அப்படி ஒரு நாள் நம்ம வாழ்வில் வருமா...? இப்படி ஒரு ஜென்மமும்...., வாழ்க்கையும் நமக்குத் தேவையா...?", வேதனையாக கேட்டான்.

கலங்கிய தன் கண்களை இமை கொட்டி மறைத்த மனோ...., "என்ன பேசுற அருண்...., எல்லாம் சரியா போய்டும். இன்னும் நாலு வருஷம்...., நாலு வருஷத்தில், நம்மளோட கிளை நிறுவனங்கள் இந்த சென்னை முழுக்க வேர்விடும் பொழுது...., நம்மளோட எல்லா கஷ்டமும் சரியா

போய்டும்...”, அருணுக்கு நம்பிக்கை கொடுத்தான்.

“ஆனா அப்போகூட...., நாம மூணுபேர் மட்டும்தான் இருப்போம் இல்ல...”.

அவன் கேள்விக்கு மனோஜிடம் பதில் இல்லை. ஆனாலும்...., “அதான் நாம மூணுபேர் இருக்கோமேடா...., பிறகு என்ன...? இப்படியே பேசினால் உதை வாங்குவ. ஒழுங்கு மரியாதையா விளையாட்டு பிள்ளையா...., சமத்தா நடந்துக்கற, சரியா...”, நெகிழ்வாக துவங்கியவன்...., கண்டிப்புடன் முடித்தான்.

“அதென்னடா மனோ...., ஒண்ணு, விளையாட்டு பிள்ளையா இருன்னு சொல்லணும்...., இல்லையா...., சமத்தா நடந்துக்கன்னு சொல்லணும்...., ரெண்டுமே இல்லாமல் குழப்புற...”.

“ம்ம்...., இது நல்ல பிள்ளைக்கு அழகு...., போ போய் வேலையைப் பாரு...”, அவனை அனுப்பினான்.

எல்லாவற்றையும் சமாளித்தாலும்..., அடிமனதுக்குள் சுழலும் அந்த வேதனை மட்டும் மறைவதாய் இல்லை. ‘இன்னும் எத்தனைநாள்...’, இந்த எண்ணத்தின் கனம் தாங்காமல் வேலையில் தன்னை மூழ்கடித்தான்.

இங்கே...., கார் அவர்கள் வீட்டை அடையும்வரை, பெண்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ளவில்லை. அறைக்குள் நுழைந்த பிறகும்...., அனிதாவிடம் பேசுவதை, ராதாவும், நித்யாவும் தவிர்த்தார்கள்.

நித்யா, வழக்கமாக அவள் வேடிக்கை பார்க்கும் ஜன்னல் அருகே சென்று வீதியை வேடிக்கை பார்க்க...., ராதா அவள் அருகில் சென்றாள்.

“என்ன நித்தி எதுவுமே பேச மாடேங்குற...?”, மெதுவாக வினவினாள்.

“ம்ச்...., என்ன பேசச்சொல்லுற ராதா...., இன்னைக்கு நடந்த விஷயத்துனால...., எனக்கு மறுபடியும் அவங்க முகத்தில் எப்படி முழிக்கிறதுன்னு தெரியலை. அவமானமா இருக்கு. ச்சே..., நாம மூணுபேரும் சேர்ந்தே இருக்க கூடாது ராதா.

“அவங்களும் மூணுபேர் தானே...., எவ்வளவு ஒற்றுமை பார். ஒருத்தனுக்கு ஒண்ணுன்னா, மூணுபேரும் சேர்ந்துடுறாங்க. தனக்கு கிடைக்கும் மரியாதை, மத்தவங்களுக்கும் கிடைக்கணும்னு எவ்வளவு அக்கறை.

“கண்ணுமண்ணு தெரியாத கோபத்தில் கூட...., நம்மளை தப்பா ஒரு வார்த்தை யாருமே பேசலை. அவங்களோட கண்ணியமும்..., நெருக்கமும்..., அன்பும் எங்கே?...., ஒரே அறைக்குள் எலியும் பூனையுமா அடிச்சுக்கற நம்ம நெருக்கம் எங்கே ?.

“போன முதல் நாளே...., நாங்க இப்படித்தான்னு படம் பிடிச்சு காட்டிட்டு வந்து இருக்கோம். முதல்ல நீ போன் போட்டு...., போட்டு.... எதையோ சொல்லு...”, தன் போனை கைப்பையில் இருந்து எடுத்து, ராதாவின் கரத்தில் விட்டெறிந்தாள்.

“நித்தி...., அவசரப்படவேண்டாம்....., எல்லாம் சரியாயிடும். கொஞ்சம் பொறுமையா...”, தன் இயல்பையும் மீறி படபடத்தாள் ராதா.

“ராதா...., நீ புரிஞ்சுதான் பேசுறியா...., வேண்டாம்...., இத்தோட எல்லாத்தையும் முடிச்சுக்கிட்டு அவங்க அவங்க வீட்டுக்கு போய்டலாம். நாம தோத்துப் போயிட்டோம்னு ஒத்துக்கலாம்...”, ராதாவின் கழுத்தை நெரிக்காத குறையாக கத்தினாள்.

இருவரையும் மாற்றி மாற்றி பார்த்துகொண்டிருந்த அனிதா...., “என்னவாம்...., ரொம்ப பேசுறா...., என்னவாம்...”, சந்தானம் ஸ்டைலில் அனிதா கேட்க...., அவளை இருவரும் கண்டுகொள்ளவே இல்லை.

ராதாவை உதறிவிட்டு...., பாத்ரூமுக்குள் சென்று புகுந்துகொண்டாள் நித்யா. அனிதா ராதாவை நெருங்க...., “சோலை...., சாப்பாடு ரெடியா...?”, ராதா கேட்டவாறு அங்கிருந்து நகர்ந்துவிட்டாள்.

எப்பொழுதும் எல்லாவற்றையும் அலட்சியமாக எடுத்துகொள்ளும் அனிதா...., முதல் முறையாக சிந்திக்கத் துவங்கினாள். நித்யாவை அவ்வளவு சுலபமாக சமாளிக்க முடியாது என்பது புரிந்ததால்..., ராதாவை தேடிச் சென்றாள்.

சாப்பாட்டு அறையில் அமர்ந்து ராதா சாப்பிட்டுக் கொண்டிருக்க...., அவள் அருகில் சென்று அமர்ந்தாள்.

“என்ன அனிதாம்மா...., உங்களுக்கும் சாப்பாடு எடுத்து வைக்கவா...?”, சோலை வந்தாள்.

“இப்போ உன்கிட்டே சாப்பாடு கேட்டேனா...? நீவேற நேரம் காலம் தெரியாமல்...”, அவளிடம் எரிந்து விழுந்தாள்.

“என்னம்மா... போன இடத்தில் ரொம்ப வேலையோ...., சூடா இருக்கீங்க..”, சோலை நக்கலாக கேட்டாள்.

“உனக்கு ரொம்ப வாய் ஜாஸ்த்தி ஆயிடுச்சு...., உன்ன...”, சுற்றி முற்றி தேடியவள்..., ராதாவின் தட்டில் இருந்த சாப்பாட்டை கொத்தாக அள்ளி...., சோலையின் வாயை அடைத்தாள்.

“ஐயோ என்னம்மா இது...?”, சோலை அலற முடியாமல் அலற...

ராதா தன்னிடம் சண்டைக்கு வருவாள் என்று அனிதா எதிர்பார்க்க...., அவளோ தட்டை எடுத்துகொண்டு அங்கிருந்து சென்றுவிட்டாள். அவள் சென்ற சற்று நேரத்தில் நித்தி வர...., சாப்பாட்டு மேஜையில் அமர்ந்திருந்த அனிதாவைப் பார்த்தவள்....,

“சோலை...., எனக்கு சாப்பாட்டை ரூமுக்கே கொண்டுவந்துடு...”, மாடிப்படியில் இருந்து கத்திவிட்டு அறைக்கு சென்றுவிட்டாள்.

“என்னடா இது...., இவங்க அடிச்சுக்கிட்டால் கூட பரவாயில்லை போல...., இப்படி இருந்தால் நல்லாவே இல்லை...”, வாய்விட்டு புலம்பிய சோலை சாப்பாட்டை தட்டில் எடுத்து போட்டுக்கொண்டு...., மாடிப்படி ஏறினாள்.

“ஏய்...., இப்போ சாப்பாட்டை எடுத்துட்டு எங்கே போற...?”, தாமரையின் குரல் ஓங்கி ஒலிக்க....,

“என்னவோம்மா....., பாப்பாங்க எல்லாம் வெளியே போய்ட்டுவந்து முகமே சரியில்லை. ராதாம்மா தனியா வந்து சாப்பிட்டு போய்ட்டாங்க. நித்தியாம்மா வேண்டா வெறுப்பா சாப்பாடு கொண்டுவரச் சொன்னாங்க. அனிதாம்மா என்னன்னா...., ‘ஒண்ணும் வேண்டாம் போ’ன்னு சொல்லுறாங்க.

“என்னவோம்மா...., மனசே கேக்கலை...., ஹம்...”, கவலையாக சோலை

புலம்ப...., தாமரை அவளை மேலே தடுக்கவில்லை.

இருக்கையிலிருந்து எழுந்த அனிதா, விடுவிடு என்று சோலைக்கு முந்திச் சென்றவள்...., தன் படுக்கையில் சென்று விழுந்தாள். கண்கள் கலங்குவதுபோல் இருந்தது. தான் அனாதையாக இருப்பதாக உணர்ந்தாள்.

வேகமாக தன் அலைபேசியை எடுத்தவள்...., படபடவென்று எண்களை அழுத்திவிட்டு, அந்தப்பக்கம் எடுக்கப்பட காத்திருந்தாள்.

“ஹல்லோ...”, அந்தபக்கம் கேட்ட குரலில் மகிழ்ந்தவள்....,

“அம்மா...”, அனிதா அழைத்த அடுத்த நொடி...., அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அவள் அமைதியாகிவிட...., அடுத்த நிமிடம் அலைபேசி வைக்கப்பட்டது.

கண்கள் கலங்கியது அனிதாவிற்கு. தன்னை கட்டுப்படுத்த முடியாமல் அவள் குலுங்கியழ....., அவள் அழுகையில் தோழிகள் இருவரும் கவலையாகப் பார்த்துக் கொண்டார்கள்.

அனிதாவோ, அலைபேசியை சுவற்றில் விட்டெறிய, அது இரண்டாகப் பிளந்து தன் உயிரை விட்டது. அவள் செய்கையை திடுக்கிட்டு போய் பார்த்த நித்யா...., ராதாவைப் பார்க்க..., அவள் உதட்டைப் பிதுக்கி தோளைக் குலுக்கினாள்.

நித்யா சாப்பிட்டு முடித்துவிட்டு, கை கழுவி வர...., சற்று நேரம் லேப்டாப்பை திறந்து வைத்து...., இன்று தாங்கள் பார்த்த கட்டிடத்தை எப்படி அலங்காரம் செய்வது என சிந்திக்கத் துவங்கினாள். நித்யாவுடன் ராதாவும் சேர்ந்து கொண்டாள்.

இருவரும் அனிதாவின்மேல் ஒரு கண்ணும்...., அவர்கள் வேலையில் ஒரு கண்ணுமாக, வேலையில் மூழ்கிய ஒரு மணி நேரத்தில்...., சோலை அவர்கள் அறைக் கதவைத் தட்டினாள்.

“என்ன அனிதாம்மா இது...., எப்பவும் அதிகமா சாப்ட்டுதான் தொல்லை பண்ணுவீங்க. இப்போ என்னன்னா...., சாப்பிடாமல் தொல்லை பண்ணுறீங்களே...., நீங்க பசி தாங்க மாட்டீங்க...., கொஞ்சம் சாப்பிடுங்கம்மா”, சோலையின் குரலில் ஒரு பாசம் வெளிப்பட்டது.

“நான் உன்கிட்டே கேட்டேனா...., எனக்கு எதுவும் வேண்டாம்...., எடுத்துட்டு போ....”, அனிதா கட்டிலில் குப்புற விழுந்தவாறு, தன் அழுகையை அவளுக்குக் காட்டாமல் சொன்னாள்.

“என்னம்மா நீங்க...., நீங்கல்லாம் ஃப்ரண்டுங்க தானே...., கொஞ்சம் சொல்லக்கூடாது...”, சோலை அனிதாவிடம் அலுத்தவள்...., நித்யா, ராதா பக்கம் திரும்பி கோபமாகக் கேட்டாள்.

“உன்கிட்டே இங்கே யாருமே அட்வைஸ் கேக்கலை...., நீ போ...”, சோலையின் முதுகில் கை வைத்து வெளியே தள்ளிவிட்டாள் அனிதா.

நித்யாவும் ராதாவும் அவள்மேல் கோபமாக இருந்தாலும்...., அனிதா சாப்பிடாமல் இருப்பதை எண்ணி வருந்தவே செய்தார்கள். தங்கள் கோபத்தை விட..., அனிதா சாப்பிடாமல் இருப்பதே பெரிதாகத் தோன்ற....,

“சோலை...., நில்லு...., ராதா...., சோலை கிட்டே இருந்து சாப்பாட்டை வாங்கிட்டு அவளை அனுப்பு...”, நித்யா சொன்னதை ராதா செய்தாள்.

சோலை வெளியேறவே...., ராதாவிடம்..., ‘அனிதாவிடம் கொடு..’, என்பதுபோல் கண்ணைக் காட்ட...., வேகமாக தலையை அசைத்து மறுத்தாள் ராதா.

நித்யா கண்களை மூடி கெஞ்சல் பார்வை பார்க்க...., அதற்கும் ராதா அசையவில்லை. வேறு வழியின்றி எழுந்து வந்த நித்யா...., “முதல்ல எழுந்து சாப்பிடு அனி...., நியாயப்படி நாங்கதான் உன்மேல் கோபப்படணும், இங்கே என்னன்னா எல்லாம் உல்ட்டாவா நடக்குது....”, கோபமாக சலித்துக் கொண்டாள்.

சலித்துக் கொண்டாலும்...., நித்யாவின் கைகள் சாப்பாட்டைப் பிசைந்து அனிதாவின் வாய்க்கு கொண்டு சென்றது. மறுக்காமல் வாய் திறந்து வாங்கிக் கொண்டவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீர்...., அவள் கன்னங்களில் வழிந்தது.

இதுவரை அனிதா அழுது கண்டிராத தோழிகள் இருவரும்...., அவள் கண்ணீரில் கரைந்து...., வேகமாக அவளை அணைத்துக் கொண்டார்கள்.

***

# மௌனம் - 10

மறுநாள் காலையில், கடல் நீலவண்ண சுடிதாரில் தங்கள் முன்னால் நின்ற தேவதைகளைக் கண்ட ஆண்களின் இதயம், ஒருமுறை நின்று, பின் துடித்தது.

மனோஜ், அருண், ராஜேஷ்...., மூவரின் வாழ்வில், முதல் முறையாக அவர்கள் பழகும் பெண்கள் என்றால், அது நித்யா, அனிதா, ராதா தான். ஒரு விதத்தில் ஆண்கள் அனைவரும் பெண்களின் உடனிருப்பை விரும்பினாலும், அனிதாவின் பேச்சு அவர்களை கொஞ்சம் தள்ளி வைக்கவே சொன்னது.

அன்றும் அறைக்குள் அமைதியே நிலவ...., “டேய் மச்சான்...., என்னடா இது? எப்பவும் நீதான் தெளிவா இருப்ப, இப்போ இப்படி இருக்க...?”, நண்பனின் காதில் முணுமுணுத்தான் அருண்.

அருண், மனோவை கலைக்க...., அனிதாவோ...., “என்ன ரியாக்ஷன் இது...? எப்போ பாத்தாலும் முழுங்குற மாதிரி மொறச்சு பாக்குறானுங்க. முன்னே பின்னே பொண்ணுங்களையே பாத்ததில்லாத மாதிரி...”, நித்யாவின் காதில் சொன்னாள்.

“நீ அடிதாண்டி வாங்க போற...., நேத்துதான் அவ்வளவு சொல்லிருக்கோம்...”, நித்யா, கடித்த பற்களுக்கிடையில் முகம் மாறாமல் அவளை கடித்து துப்பினாள்.

“நிஜமாவே உனக்கு அப்படி தோணலன்னு சொல்லு பார்ப்போம்...”, சவால் விட்டாள் அனிதா.

நித்யாவிற்கும் அதே எண்ணம் தான் என்பதை அவளது மௌனமே உணர்த்த...., “உனக்கும்தானே அப்படி தோணுது...., பிறகு ஏண்டி என்னை மட்டும் குத்தம் சொல்லுற...?”, நியாயம் கேட்டாள் அனிதா.

“அடியேய்....., இதுதான் நீ மன்னிப்பு கேக்குற லட்சணமா..., நேத்து என்னவோ, இன்னிக்கு வந்தவுடன் அவங்க காலில் விழுந்து மன்னிப்பு கேக்குறேன்னு சொன்ன...., இங்கே வந்து உன் வேலையை காட்டுற பாத்தியா...”, நித்யா விடாமல் கேட்டாள்.

“அதுக்குதான் அவசியமே இல்லை என்பதுபோல் நடந்துக்குறாங்களே.

பாக்குற பார்வையில் கோபம் தெரிந்தால் பரவாயில்லை...., ராஜுவை பாரு...., எதுவுமே நடக்காதது மாதிரி அவரே இருக்கும்போது....,

“நான் எதுக்கு மத்தவங்க கிட்டே மன்னிப்பு கேக்கணும்...., நான் நேரடியா அவர்கிட்டேயே கேட்டுக்கறேன். அனிதா டு ராஜு...., ராஜு டு அனிதா எப்படி..!!.”, நாட்டாமை படத்தில் கவுண்டமணி வினவுவதுபோல் கேட்க...., நித்யாவிற்கே சிரிப்பு வரும்போல் இருந்தது.

ஆனாலும் எப்படி அவர்களால் இப்படி சாதாரணமாக இருக்க முடிகிறது என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை. நித்யா அவள்மேல் பாயப் பார்த்தவள்...., மனோவின் கவனம் தங்கள் பக்கம் திரும்புவதை உணர்ந்து அமைதியானாள்.

“ஹாய்...., வாங்க...., எங்கே நீங்க வராமல் போய்டுவீங்களோன்னு ரொம்ப பயந்துட்டோம்...., இல்லங்கடா...?”, அங்கிருந்த மௌனத்தை ராஜு கலைக்க...., கடுப்பானான் அருண்.

‘நேத்து நைட் இவன்கிட்டே எவ்வளவு சொன்னோம்...., இப்போ அவளுங்களை பார்த்தவுடன் ஈ...., ன்னு இளிச்சுக்கிட்டு பேசுறான். இவன...’, மனதுக்குள் பற்களை கடித்தவன்....,

அருண் எதையோ சொல்லத் துவங்கும் முன்னர்...., “நாம நேரே வேலைக்குள் போய்டலாம்னு நினைக்கிறேன். ஏற்கனவே அந்த இசிஆர் ப்ராஜெக்ட் கொஞ்சம் டிலே ஆயிடுச்சு. இதுக்குமேல் தாமதித்தால் அது நல்லா இருக்காது. எனிவே...., நீங்க ரெடியா...”, மனோ நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

“நாங்க ரெடிதான். ஆனால்...”, நித்யா, தங்களுக்கு அனுபவம் இல்லை என்பதை சொல்லத் தயங்கினாள்.

“நித்யா...., நீங்க மட்டும் தனியா வேலை செய்யப் போவதில்லை. உங்களோட நாங்க மூணுபேர் இருக்கோம். ஃபீல்ட்ல எப்பொழுதும் ராஜு இருப்பான். அங்கே அவனுக்குத் தெரியாத விஷயமே கிடையாது.

“அதேபோல் பில்டிங் ஸ்கெட்ச் போடும்போதே அருணுக்கு ஒரு ஐடியா இருக்கும். அதோட எஸ்டிமேட் எவ்வளவு ஆகும் என்பது உங்களுக்கு தெரியணும்ன்னா தாராளமா நீங்க என்னைக் கேட்கலாம். முதலில் கொஞ்சம் மலைப்பாதான் இருக்கும், போகப்போக சரியாயிடும்...”,

அவர்களுக்கு நம்பிக்கை அளித்தான் மனோ.

“சரி நாங்க செய்யிறோம்...”, நித்யா அனைவரின் சார்பாக பதில் கொடுத்தாள்.

“அப்போ ஓகே. உங்கள்ள யார் ஃபீல்டுக்கு போறீங்க...? தேவையான எல்லாத்தையும் எடுத்துட்டு ராஜு கூட கிளம்புங்க...”, பார்வையை மூன்றுபேரிடமும் நிலைக்கவிட்டு சொன்னான்.

“நான் போறேன்...”, அனிதா சொல்லி முடிக்கும் வேளை...., “நிஜமாவா...”, ராஜுவின்குரலில் எவ்வளவு ஆர்வம் இருந்ததோ, அதே அளவு நம்பிக்கையில்லாமல் கேட்டான்.

“உங்களுக்கு ஏன் இப்படி ஒரு சந்தேகம்...?”, அனிதா, ராஜுவிடம் நேரடியாகக் கேட்டாள்.

“அது ஏன்னா...?”, ராஜு துவங்கிய வேளை....,

“ராஜு...., முதல்ல வொர்க்...., மத்ததெல்லாம் பிறகுதான் புரியுதா....., கூட்டி போ...”, மனோ அழுத்திச் சொல்ல...., அமைதியாகிவிட்டான்.

ஏனென்று புரியாமலே அனிதாவிற்கு கோபம் வந்தது. ‘அதென்ன..., ராஜுவை அவன் மிரட்டுறது. அவரென்ன சின்னப் பையனா...?’, அவள் மனம் சிணுங்கியது.

‘இல்லாமல் அவர் என்ன பெரிய மனிதனா...? ஆள் வளர்ந்த அளவு அறிவு வளரலை...., அதனால்தான் நண்பர்கள் பொத்தி பாதுகாக்குறாங்க போல...’, தனக்குத் தானே சமாதானமும் செய்து கொண்டாள்.

எதற்கு ராஜுவிற்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றோம் என்பதை அவள் யோசிக்கவில்லை. அதே நேரம்...., முதல்நாள் அவனிடம் அப்படி நடந்துகொண்டதற்கு மன்னிப்பு கேட்கவேண்டும் என்ற எண்ணம் மட்டும் அதிகரித்தது.

அதிலும், அவளிடம் அவன் காட்டும் ஆர்வம்...., மனதில் எதுவும் வைத்துகொள்லாமல்...., பழகும் அவனது குணம்...., அவளுக்கு பிடித்தது. ‘எப்படி இவரால் இப்படி இருக்க முடியுது...?’, மனதில் கேள்வி பிறந்தது.

ராஜு நொடியில் கிளம்பிவிட...., நித்யா ‘ஏதாவது வேண்டுமா...’, என்று அனிதாவிடம் கேட்க...., அவர்கள் எதையோ பேச விரும்புவது புரிய....,

“நீங்க வேண்ணா ஏதாவது டிஸ்கஸ் பண்ணுவதா இருந்தால் ஒரு பத்து நிமிஷம் பேசிக்கோங்க.... நீங்க இங்கே இருங்க...., நாங்க கான்ஃபிரன்ஸ் ஹாலுக்குப் போறோம்...”, அவர்களிடம் உரைத்துவிட்டு, நண்பர்களை அழைத்துக்கொண்டு வெளியேறினான் மனோ.

‘அநியாயத்துக்கு இருக்காங்காடி...., நம்மளை வெளியே போக சொல்லாமல்...., அவங்க போறாங்க...., உண்மையாவே இவங்க குணம் இதுதானா...., இல்ல நடிக்கிறானுங்களா...?”, அனிதா அவர்கள் முதுகையே வெறித்தவாறு கேட்டாள்.

“எனக்கும் அந்த சந்தேகம் இருக்கு... நடிப்பா இருந்தால்..., ரொம்பநாள் தாங்காது...., பார்க்கலாம்...”.

“அவங்க எதுக்கு நடிக்கணும்...”, ராதாவின் கேள்வி நியாயமாகத்தான் தோன்றியது.

“சரிதான்...., இப்போ அவங்களைப் பத்தின ஆராய்ச்சி நமக்கெதுக்கு...”, அதை அத்தோடு முடித்தவள்....,

“அனி..., நீ கையோட இந்த கேமராவை கொண்டுபோ...., ஃபீல்டுல எல்லாத்தையும் ஒரு போட்டோ எடுத்துட்டு...., அந்த நேரம் உனக்கு ஸ்ட்ரைக் ஆகும் விஷயங்களை நம்பர் போட்டு, இந்த ஃபைல்ல எல்லாத்தையும் குறிச்சுக்கோ..., நாம இங்கே வந்து கலந்து பேசி ஒரு முடிவிற்கு வரலாம்...”, தேவையானவற்றை சொல்லி அவளுக்கு விடை கொடுத்தாள் நித்யா.

கான்ஃப்ரன்ஸ் ஹாலுக்குச் சென்ற மனோ...., ராஜுவிடம் சில அறிவுரைகள் வழங்கினான். அனைத்தையும் பொறுமையாக கேட்டுக் கொண்டான்.

“ராஜு...., மறுபடியும் அவ உன்னை இன்சல்ட் பண்ணினா எங்ககிட்டே மறைக்காமல் சொல்லணும் புரியுதா. நீ பாட்டுக்கு மண்டையை ஆட்டிட்டு இருக்கக் கூடாது....”, அருண் அவன் பங்குக்கு உரைத்தான்.

“அவ அப்படியெல்லாம் செய்ய மாட்டாடா. இப்போ நீ என்னை ஏதாவது சொன்னால் நான் தங்கிக்க மாட்டேனா...., அதே மாதிரிதான்...”, ராஜு உரைக்க....,

“டேய்...., அவளும் நாங்களும் உனக்கு ஒண்ணாடா...”, அதிர்ந்தான் அருண்.

“அதெப்படிடா...., நீங்கதான் எனக்கு எல்லாமே..., ஆனா...., அவங்க எல்லாம் நம்மளை நம்பித்தானே இங்கே வந்து இருக்காங்க. நாமதானே அவங்களை பாத்துக்கணும்...., இப்போ மனோ அதைத்தானே சொல்லிட்டு இருந்தான்...”, ஏனோ ராஜுவிற்கு பெண்களை வேற்றாக நினைக்க முடியவில்லை.

“அருண்...., கொஞ்சம் சும்மா இருக்குறியா...., ராஜு...., நீ பொறுப்பா நடந்துப்பன்னு எங்களுக்குத் தெரியும். இப்பவும் அப்படியே நடந்துக்கோ. ஆனா எங்களை கேட்காமல் எந்த முடிவையும் எடுக்காதே சரியா...”, ராஜுவை அவன் வழியிலேயே சென்று மடக்கும் வழி மனோவிற்கு மட்டுமே தெரியும்.

இப்பொழுதும் அதையே கடைபிடிக்க...., “அது எனக்கு நல்லா தெரியும் மனோ. முடிவெல்லாம் உன் கையில்தான் கொடுப்பேன். அப்போ நான் கிளம்பறேன்...”, நண்பர்களிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பிவிட்டான்.

“மனோ...., எனக்கென்னவோ பயம்மா இருக்குடா...., இவன் என்னடா, ஒரே நாளில் இப்படி மாறிட்டான்...”, கவலை கொண்டான் அருண்.

“எனக்கு நம்பிக்கை இருக்கு அருண். நம்மை மீறி அவன் எதையும் செய்ய மாட்டான்...”, உறுதியாகச் சொன்னான். ஆனால் அவனது நம்பிக்கை அருணுக்கு ஏனோ வரவில்லை.

வேகமாகச் சென்ற ராஜு...., மனோவின் அறை வாயிலில் நின்ற பெண்களின் அருகில் சென்றான்.

நித்தியும் ராதாவும் அனிதாவை அணைத்து...., அவளுக்கு விடைகொடுக்க..., “அட...., நாங்களும் இப்படித்தான் செஞ்சுப்போம்...., நீங்களுமா...., சரி நாம கிளம்பலாமா...”, மூவரிடமும் கேட்டுவிட்டு, அனிதாவிடம் முடித்தான்.

’உங்களைப் பார்த்துதான் கற்றுகொண்டோம்’ என்று சொல்லாமல் அமைதியாக சிரித்தார்கள் அனைவரும்.

“போகலாம்...,” சொன்னவள்...., அவனை முன்னால் போகவிட்டு...., அவன் பின்னால் சென்றாள்.

அவர்கள் கட்டடத்தில் இருந்து வெளியே வருவதற்குள்ளாகவே அனிதாவை ஒரு ஐம்பது முறையாவது திரும்பி பார்த்துவிட்டான்.

‘ஏன் இப்படி பாக்குறான்...?’, குழம்பிப் போனாள் அனிதா.

அடுத்தமுறை அவன் திரும்பிப் பார்த்தபொழுது...., “என்ன...? அடிக்கடி திரும்பி பாத்துட்டே வரீங்க. நான் வரேனா இல்ல ஓடிட்டனான்னு தெரிஞ்சுக்கவா? அப்படியெல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடமாட்டேன், சரியா...”, கேலியாக சொன்னாள்.

“ஐயோ..., அப்படி நினைத்து பாக்கலை...., நான் பாட்டுக்கு வேகமா போயிட்டேன்னா...., அதான்...”, வேகமாகச் சொன்னான்.

“ஓ...., இல்ல நீங்க சரியான வேகத்தில்தான் போறீங்க, சோ...”, ஒப்புதலாக தலையசைத்தாள்.

கட்டிடத்தை விட்டு வெளியேறியவர்கள்..., பார்க்கிங் ஏரியாவுக்குச் சென்றார்கள். அவன் எடுத்த வாகனத்தைப் பார்த்து..., கண்கள் தெறித்துவிடும்போல் விழித்தாள்.

அதற்கு காரணம் என்னவென்றால்...., அவன் எடுத்தது ராயல்என்ஃபீல்ட் மோட்டார் பைக். அதில் படு ஸ்டையிலாக ஆரோகணித்தவன்..., அவளை தலையசைத்து வரச் சொன்னான்.

அவள் அருகில் வரவே..., “ஏறிக்கோங்க...”, சாதாரணமாகச் சொன்னான்.

“எ...என்ன...”, இதைக் கேட்கும் முன்பே தடுமாறிப் போனாள். அவளால் ஒத்துகொள்ளவே முடியவில்லை. இப்படி ஒரு சூழலை அவள் எதிர்பார்க்கவும் இல்லை.

‘இவன் என்ன வேணும்னு செய்யிறானா...., இல்ல விளையாடுறானா...., இல்ல வினைக்கு இப்படி பண்ணுறானா...’, யோசித்தவள்...., வேகமாக

சுற்றிலும் பார்வையை செலுத்தினாள்.

அக்கம்பக்கம் யாரும் இல்லாமல் போகவே...., தைரியமாக அவனை முறைத்தாள். அவள் பார்வையில் கோபத்தை உணர்ந்தவன்...., “நான் பத்திரமா கூட்டி போய்டுவேன்...”, அவள் கோபத்தின் காரணம் புரியாமல் வேகமாகச் சொன்னான்.

அவள் பார்வையில் மாற்றம் இல்லாமல் போகவே..., “நான் நல்லாவே வண்டி ஓட்டுவேன்...”, படபடத்தான்.

அவன் பதிலிலும் பதட்டத்திலும் அவள் கோபம் சற்று குறைந்தாலும் அசையாமல் நின்றாள். “நான் வேகமா எல்லாம் போக மாட்டேன்...”, சத்தியம் செய்யாத குறையாக உரைத்தான்.

அவன் முக பாவத்தில் அவளுக்கு சிரிப்புவரும்போல் இருக்க...., முகத்தை திருப்பிக் கொண்டாள். அவள் முகத்தைத் திருப்பவே...., “உங்களுக்கு இடம் பத்தாதுன்னு யோசிக்கறீங்களா...., நான் முன்னாடி தள்ளி உக்காந்துக்கறேன்...” அவனது இந்த பதிலில் அவள்முகம் கோபத்தை பிரதிபலிக்கவே....,

“நீங்க வேண்ணா ஓட்டுறீங்களா, நான் பின்னாடி உக்காந்துக்கறேன்”, வண்டியிலிருந்து இறங்கி, பரிதாபமாக அவள் முகத்தைப் பார்த்தான்.

அவன் கேள்விகளில் இருந்தும், சமாதானத்தில் இருந்தும்...., அவன் வேண்டுமென்று இதைச் செய்யவில்லை என்பது அவளுக்குப் புரிந்தது. புதிதாகப் பார்க்கும் ஒரு பெண்ணை, அவர்களிடம் கார் இருக்கும் பட்சத்தில், எடுத்த எடுப்பில் பைக்கில் செல்ல அழைக்கிறோம் என்ற எண்ணம் கூட அவனுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

அவனுக்குத் தெரியவில்லை என்றாலும் அவளுக்குத் தெரியுமே....., அவன் கல்மிஷமே இல்லாதவன் என்றாலும்...., ஒரு அந்நிய ஆண்மகனோடு சட்டென்று எப்படி செல்ல முடியும்...? தயங்கி தடுமாறினாள்.

அவள் ஒன்றும் ஆண்களோடு பைக்கில் செல்லாதவள் இல்லைதான். கல்லூரி நாட்களில் உடன் பயின்ற எத்தனையோ நண்பர்களோடு அவர்கள் பைக்கில் சென்றிருக்கிறாள். ஆனால் அதெல்லாம், அவர்களோடு கொஞ்சமாவது பழகிய பின்னர்தான்.

அப்பொழுதெல்லாம் இல்லாத தயக்கம்....., இப்பொழுது ராஜுவுடன் செல்வதில் அவளுக்கு ஏற்பட்டது.

அவள் முகத்தில் வந்துபோன கலவையான உணர்வுகளையே பார்த்துக் கொண்டிருந்தவன்...., இறுதியாக விடை கண்டவன் போன்று...., “உங்களுக்கு என்னோட ஒரே பைக்கில் வர பிடிக்கலையா...?”, அவன் சாதாரணமாக கேட்க முயன்றாலும்...., அதில் இருந்த வருத்தம் அவளைத் தாக்கியது.

அவன் வருத்தப்படுவது பிடிக்காமல்...., “ஹையோ ராஜு..., அப்படியெல்லாம் இல்லை...., நான் இந்தமாதிரி புல்லட்டில் போனதில்லை, அதான் கொஞ்சம் தயங்கினேன். மற்றபடி எதுவும் இல்லை....”, அவசரமாக மறுத்தாள்.

“நிஜம்மாவா...., இதுதான் முதல் தடவையா...., அப்போ உங்களுக்கு ரொம்ப புடிக்கும். சீக்கிரம் வாங்க....., டைம் ஆச்சு...”, ஆர்வமாக பைக்கில் ஏறிக் கொண்டான்.

அந்த வண்டியைப் பார்த்தவள், இமைகளைக் கொட்டி விரித்தாள். ‘இதென்ன காண்டாமிருகம் மாதிரி இருக்குது. இதில் எப்படி ஏறி...’, அவள் யோசனையைக் கலைத்தான் ராஜு.

“என்ன யோசிக்கிறீங்க...., ஏறுங்க..”, அவளை அவசரப்படுத்தினான்.

ஏறி அமர்ந்தவள்..., பிடிக்க பற்றுக்கம்பியைத் தேட...., அது இல்லாமல் போகவே...., “கைப்பிடிக்க எதுவும் இல்லையா...?”, தயக்கமாகக் கேட்டாள்.

அவன் என்ன பதில் சொல்வான் என்று தெரிந்துகொள்ள சற்று ஆர்வமும் கொண்டாள். அவனோ...., “அதெல்லாம் விழ மாட்டீங்க...., அப்படியே பிடிச்சுக்கணும்ன்னா...., பின்னாடி சாஞ்சுக்கறதுக்கு ஒரு கம்பி இருக்குல்ல அதை புடிச்சுக்கோங்க”, சொன்னவன்...., அவள் கைகளில் இருந்த பையை வாங்கி தனக்கு முன்பு வைத்துக் கொண்டான்.

“போலாமா...”, ரியர்வியு கண்ணாடி வழியாக அவளைப் பார்த்து கேட்க, அவள் தலையசைக்கவே வண்டியை கிளப்பினான்.

மிகுந்த உற்சாகமாக உணர்ந்தான். ஏனென்று புரியாத போதும்...., அனிதா தன்னுடன் வருவது மிகுந்த சந்தோசத்தை அளித்தது.

அவன் பின்னால் அமர்ந்திருந்த அனிதாவிற்கோ, தான் செய்தது சரியா தவறா என தன்னையே கேட்டுக் கொண்டாள். அவன் வருத்தமாக இருந்தால் எனக்கென்ன...., இல்லையென்றால் எனக்கென்ன...., ஒரு புதிய ஆண்மகனோடு...', அவளது யோசனையைக் கலைத்தான் ராஜு.

“நீங்க என்னை ராஜுன்னு கூப்பிட்டது எனக்கு ரொம்ப புடிச்சுது...”, திடீரென சொன்னான்.

அவன் பேச்சில் குழம்பியவள்...., “ஏன்..., அதுதானே உங்க பேர்...., பிறகு என்ன..?”, அவளுக்கு புரியவில்லை.

“என்னவோ...., சொல்லணும்னு தோணிச்சு அதான்...”, அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டான்.

“எல்லோரும் உங்களை ராஜூன்னு தானே கூப்பிடுறாங்க...”, விடாமல் கேட்டாள்.

“சரி விடுங்க...., எனக்கு சொல்லத் தெரியலை...”, சாலையில் கவனமானான். முதல் முறையாக ஒரு பெண்ணின் வாயில் இருந்து தன் பெயர் ஒலிக்கக் கேட்டதில் புரியாத இன்பம் கண்டான். அவள் தன்னை அப்படியே அழைக்கவேண்டும் என்று மனம் விரும்பியது.

“நீ என்னை அப்படியே கூப்பிடுறியா...நானும் உன்னை ஒருமைலேயே கூப்பிடவா?”, குரலில் ஆசை வழியக் கேட்டான்.

‘நீயென்ன லூசா...', என கேட்க வந்த வாயை அடக்கியவள்...., “சரி ராஜு...”, அவன் விருப்பத்தை உடனே நிறைவேற்றினாள்.

“யாஹூ...”, சன்னமாக அலறியவன்...., வண்டியை விரட்டினான்.

அனிதா திகைத்துப் போனாள். ‘ஹையோ...., நான் ஏன் இப்படி மாறிப் போனேன்...., எப்பொழுதும் யாரோட உணர்வுகளுக்கும் மதிப்பு கொடுக்காத நானா இப்படி நடந்து கொள்கிறேன்...., ஏன் இப்படி...?', தனக்குத் தானே கேட்டுக்கொண்ட கேள்விக்கு....,

அப்பொழுது விடை கண்டுபிடிக்கும் தைரியம் இல்லாமல்

அமைதியாகிவிட்டாள். மனதுக்குள் மெல்லிய குறுகுறுப்பு....

***

# மௌனம் - 11

ராஜுவும் அனிதாவும் சென்றவுடன்...., நித்யாவும் ராதாவும் தனித்திருக்க, ராகவன் அவர்களைத் தேடி வந்தான்.

“ஹல்லோ, ஐ’ம் ராகவன்...., சார் உங்களை வரச் சொன்னாங்க...”, அழைத்தவன் அவர்களோடு சேர்ந்து நடந்தான்.

“ராகவன்...., நீங்க இங்கே என்னவா இருக்கீங்க...?”, அறிந்துகொள்ளும் பாவனையில் கேட்டவாறு சென்றாள்.

“தனிப்பட்ட விதத்தில் எதுவும் இல்லை. சொல்லப்போனால் மனோ சார்க்கு பி.ஏன்னு வேண்ணா வச்சுக்கலாம். ஆனா அத்தோடு நிறுத்தாமல்...., இங்கே ஒவ்வொரு செக்ஷனிலும் வேலை ஒழுங்கா நடக்குதா என்பதை கண்காணிப்பேன்.

“ஹாலில் தண்ணி கேன் காலியானால் கூட கவனித்து மாற்றுவேன்...”, சாதாரணமாக உரைத்தான்.

திகைத்துப் போனாள் நித்யா. ஒரு வேலை செய்யச் சொன்னாலே ஓராயிரம் குறைகள் சொல்லும் மனிதர்களுக்கு மத்தியில்...., அந்த அலுவலகத்தில் அனைத்தையும் தன்னார்வத்துடன் கவனிக்கும் அவன்மேல், அவளுக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது.

சிரித்த முகமாக உரையாடியவாறு அவர்கள் ஹாலுக்குள் நுழைய...., ஏனோ அவர்களின் சிரிப்பு மனோவிற்கு எரிச்சலை அளித்தது.

“ராகவா...., உனக்கு வேலை செய்ய எதுவுமே இல்லையா...?”, எரிச்சலை மறைக்க முயன்று தோற்றுப் போனான் மனோ.

அதை உணர்ந்த ராகவனின் முகம் கசங்கிப் போனது. “சார்...”, அவன் திகைத்துபோய் அழைத்தான். வேலைக்குச் சேர்ந்த இவ்வளவு நாளில்...., மனோ ஒரு நொடி கூட அவனிடம் கோபப்பட்டது இல்லை.

அப்படியிருக்கையில்...., மூன்றாம் மனிதர் முன்பு அவன் கோபப்படவே..., அவமானமாக உணர்ந்தான். மனோவும் தன் செய்கைக்கு வெட்கினான்.

“சாரி ராகவா...., ஏதோ ஒரு கோபத்தில்...., கொஞ்சம் சத்தமா பேசிட்டேன். போ, போய் வேலையைப் பாரு...”, உடனடியாக மன்னிப்பு வேண்டினான்.

“ஐயோ சார்...., உங்களுக்கு என்னை திட்ட எல்லா உரிமையும் இருக்கு. அப்படியிருக்கும்போது...., நீங்க என்கிட்டே மன்னிப்பு கேட்டுக்கிட்டு...., வரேன் சார்...., வரேன் மேடம்...”, நித்யாவை ‘மேடம்’ என அழைத்துவிட்டு...., ஒரு நொடி, மனோவை மின்னல் பார்வை பார்த்துவிட்டு வெளியேறினான்.

மனோ மனதுக்குள் திக்கென அதிர்ந்தான். பொதுவாக ராகவன் மிகவும் திறமையானவன்...., மனோவின் மனமறிந்து நடந்துகொள்பவன். மனோ ஒன்றை நினைத்தால்...., அதை சரியாக முடித்து கொடுப்பவன்.

அப்படியிருக்கும்போது...., அவனது இந்த அழைப்பும் பார்வையும்...., ‘ச்சே..., சின்னப் பையன்கிட்டே போய்...’, தன்னையே குட்டிகொள்ளத் தோன்றியது.

அதை விடுத்து...., “நித்யா...., உங்க ரெண்டுபேருக்கும் ரெண்டு டெஸ்க்டாப் ஆர்டர் பண்ணிட்டோம். ஆனால் உடனடியா ஒரு ரூம் அலாட் பண்ணுறதுதான் கொஞ்சம் சிரமமா இருக்கு.

இப்போ ஃப்ரீயா இருக்குறதுன்னு பார்த்தால்...., இந்த கான்ஃபரன்ஸ் ஹால்தான் இருக்கு. ஆனா...”, அதில் இருக்கும் சிக்கல்களை எண்ணி அமைதியானான்.

அந்த ஹாலில்தான், அலுவலக மீட்டிங் அனைத்தும் நடக்கும். புது ஒப்பந்தம் கையெழுத்தாக...., மற்ற கம்பெனியில் இருந்து வருபவர்களை இங்கே வைத்துதான் சந்திப்பார்கள். அவசர ஆலோசனை கூட்டம் என அனைத்தும் இங்கேதான் நடக்கும்.

அப்படியிருக்கும்போது...., அவர்களை இங்கே அமர்ந்து வேலை செய்யச் சொல்வது அவ்வளவு சரியாக அவனுக்குத் தோன்றவில்லை.

அருணுக்கு ஒதுக்கியிருக்கும் அறை சற்று சிறியது. அங்கே அவன் எந்தவிதமான இடையூறும் இன்றி வேலை பார்ப்பான். மீதமிருப்பது மனோஜின் அறைதான். அது கொஞ்சம் பெரியது.

மூன்று மேஜைகள் ஒரே இடத்தில் போடப்பட்டு...., அதன் முன்னால் மூன்று இருக்கைகள்...., ராஜேஷ், மனோஜ்...., அருண் அமர போடப்பட்டிருந்தது. அதன் எதிரில் ஆறு இருக்கைகள் இருந்தது.

அந்த அறையின் ஓரத்தில் ஒரு வட்டமேஜை ஒன்று போடப்பட்டிருந்தது. தினமும் மாலையில் அருண், மனோ, ராஜு மூவரும் அன்றைய நாள் பற்றி அங்கே அமர்ந்துதான் விவாதம் செய்வார்கள்.

தன் அறையில் நித்யாவையும், ராதாவையும் அமரச் சொன்னால்...., அவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எண்ணியே அவன் தயங்கினான்.

அவன் தயக்கம் உணர்ந்து...., “சார்...., இங்கே உக்காந்து வேலை செய்வது அவ்வளவு சரிவராது. உங்களுக்கு விரோதமில்லை என்றால் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது...., நான் சொல்லவா...?”, நித்யா தயக்கமாக கேட்டாள்.

“எதுவாக இருந்தாலும் சொல்லுங்க...”, அவளை ஊக்கினான்.

“நேற்று நாங்க அமர்ந்து வேலை செய்த இடமே நல்லா இருக்கு. ஆனால் அந்த அறையில் ஒரு சின்ன மாற்றம் செய்தால் எல்லாம் சரியா இருக்கும்னு நினைக்கிறேன்...”, யோசனையாகச் சொன்னாள்.

“என்னன்னு சொல்லுங்க...”,

“ஆக்சுவலா அந்த ரூம் ரொம்பவே பெருசு. ஆனால் அதை யூஸ்பண்ணத் தெரியாமல் செய்து வச்சுருக்கீங்க...”, பேச்சுவாக்கில் சொல்லிவிட்டவள்..., வேகமாக நாக்கை கடித்துக் கொண்டாள்.

அவள் பேச்சில் புருவம் உயர பார்த்த மனோ..., அவள் பற்களுக்கிடையில் சிக்கியிருந்த சிவந்த நாக்கில் கண்களை லயித்திருந்தான்.

“ஓஹோ...., அப்போ அப்படியே இடிச்சு மாத்திடலாமா...?”, அருண் குறுக்கே புகுந்து நக்கலாகக் கேட்டான். அவன் குரலில் கலைந்த மனோ....,

“அருண்...”, மனோ கண்டிக்கும் குரலில் அழைக்க....,

“பின்ன என்னடா...., நீயும் ‘சொல்லுங்க சொல்லுங்க’ன்னு சொல்லிகிட்டே இருக்க..., இவங்க என்னன்னா...., யோசனை இருக்கு இருக்குன்னு சொல்லிக்கிட்டு..., இப்போதான் ஒண்ணு ஒண்ணா யோசிக்கிறாங்க போல...., மனுஷனுக்கு பொறுமை எருமை ஆகவா வேண்டாமான்னு கேக்குதுடா...”, கடுப்பானான்.

ராதா வழக்கம்போல சிரித்து வைத்தாள். “ஏங்க..., எனக்கு ஒரு சந்தேகம்...., நீங்க என்ன சிரிக்கறதுக்கு மட்டும்தான் வாயத் தொறப்பீங்களா...., நானும் வந்த அன்னையில் இருந்து பாக்குறேன்...., இதுவரை எங்ககிட்டே ஒரு வார்த்தை கூட பேசலை...., ஆனா நல்லா சிரிக்கிறீங்க...”, ராதாவிடம் நேரடியாக சொன்னான்.

அவள் திடுக்கிட்டு போனாள். “இ...இ...ல்ல பேசுவேன்...”, மருண்டு விழித்தவாறு அவள் தடுமாறி உரைக்க...., படபடவென்று கை தட்டியவன்...., கீழே குனிந்து சுற்றிலும் எதையோ எடுப்பவன்போல் பாவ்லா காட்டினான்.

“என்னடா எடுக்குற...”, மனோ இருக்கையில் இருந்து எழுந்தவாறு கேட்க....,

“அதான்...., இப்போ அவங்க வாயில் இருந்து கொட்டுச்சே கொஞ்சம் முத்து...., அதைத்தான் எடுத்துட்டு இருக்கேன்...”, அவன் சொல்லி முடிக்கவே...., அவன் முதுகில் இரண்டு அடி போட்ட மனோ....,

“டேய்..., நீ முதல்ல கிளம்புடா...., நான் பேசிக்கிறேன். எதிலும் ஒரு பொறுமையே கிடையாது...”, அவனை தள்ளிகொண்டுபோய் வெளியே விட்டு வந்தான்.

“நீங்க எதுவும் தப்பா எடுத்துக்காதீங்க ராதா. அவன் கொஞ்சம் இப்படித்தான் விளையாட்டா பேசுவான்...”, எங்கே அருணைப் பற்றி தவறாக எண்ணிவிடுவார்களோ என்பதால், அவர்களுக்கு புரியவைக்கும் எண்ணத்தில் சொன்னான்.

“மனோ...., அந்த கூட்டத்திலும் என்னை மாதிரி ஒரு ஆள் இருக்குடா. அதனால் அதெல்லாம் அவங்க தப்பா நினைச்சுக்க மாட்டாங்க, இல்லங்க...”, ஹாலின் கதவின் வழியாக தலையை மட்டும் நுழைத்தவாறு, ராதாவைப் பார்த்து இரண்டு கண்களையும் சிமிட்டி அருண் கத்த....,

திடுக்கிட்டு திரும்பிய மனோ..., அவன் தலையைப் பிடித்து வெளியே தள்ளி விட்டான். ராதா, என்ன சொல்வது என்று தெரியாமல் சிரிப்பதை நிறுத்த முயன்றவாறு நின்றுக்கொண்டிருந்தாள்.

“நீங்க சொல்லுங்க...., நமக்கு நேரம்தான் விரையமாயிட்டே இருக்கு..”

“அதாவது, நீங்க உக்காந்து இருக்கும் டேபிள், அந்த ரூமோட நடுவில் இருக்கு. அதை சுவற்றுப் பக்கம் நகர்த்திவிட்டு...., அதன் டைரெக்ஷனைக் கூட மாற்றி அமைத்தால்...., முழுமையாக அந்த இடத்தை உபயோகப்படுத்த முடியும்.

“அத்தோடு அந்த ரவுண்டு டேபிளை இடம் மாற்றி...., அமைத்தால்...., உங்களுக்கு விவாதிக்கவும் இடம் அப்படியே இருக்கும். இப்போ அந்த ரவுண்டு டேபிள் இருந்த இடத்தில் ஒரு மேஜையும், ரெண்டு டெஸ்க்டாப்ம் வைத்தால்....., நாங்க அங்கே வேலை செய்துப்போம்.

“அதேபோல்...., உங்களுக்கும் எங்களுக்கும் நடுவில்...., ஒரு தடுப்பு அமைத்துவிட்டால், உங்களுக்கும் தனிமையும் கிடைக்கும்...., தொல்லை இல்லாமலும் இருக்கும்....”, வேகமாக சொல்லி முடித்தாள்.

“இதில், நீங்க ஒவ்வொரு முறையும் எங்க ரூம் வழியா உங்க அறைக்கு போகணும்னா ரொம்ப சங்கடமா இருக்குமே...”, தயங்கினான் மனோ.

“இல்ல...., அதுக்கும் ஒரு வழி இருக்கு. டோர் திறக்கும் அளவுக்கு இடைவெளி விட்டுவிட்டு...., அதன் பிறகு அந்த தடுப்பு அமைத்தால்...., அதாவது சரியாக வாசலின் சரி பாதியான இடத்தில் வைத்தால்...., சரியாக இருக்கும்...”, வேகமாகச் சொன்னாள்.

“ஓகே...., நீங்க சொல்லுறது எனக்குப் புரியுது. அப்படியே செஞ்சுடலாம். இது தற்காலிகம்தான்...”, சொன்னவன் மேஜைமேல் இருந்த மணியை இரண்டுமுறை அழுத்த...., ஆபீஸ் பையன் வேகமாக வந்தான்.

“மணி...., இவங்க என்னன்ன கேக்குறாங்களோ, எல்லா வசதியும் செய்து கொடுக்கச்சொல்லி, நான் சொன்னேன்னு ராகவன் கிட்டே சொல்லு...., நீங்க இன்னைக்கு இந்த வேலையை முடிச்சுட்டு..., நாளையில் இருந்து நாம அடுத்த வேலைக்கு போகலாம்...”, அவர்களை அனுப்ப முயன்றான்.

அப்பொழுது அருண் அலறியடித்துக்கொண்டு ஒரு சாவியோடு ஓடி வந்தான். “டேய் மனோ இங்கே பார்...”, கையில் இருந்த சாவியை மனோவிடம் காட்ட...., விக்கித்துப் போனான் மனோ.

சட்டென தன்னை சுதாரித்தவன்...., “நீங்க கிளம்புங்க...”, அவர்களை அனுப்பிவிட்டு...., அருணிடம் திரும்பினான்.

***அறைக்கு வெளியே வந்தவுடன்...., “அக்கா...., நீங்கதான் இங்கே புதுசா வேலைக்கு சேர்ந்திருக்கவங்களா...., நேத்திக்கே சொன்னாங்க...., தேவதை மாதிரி மூணு மேடம் வந்துருக்காங்கன்னு...., நான் கூட அவங்க சொன்னப்போ நம்பவே இல்லை...., ஆனா...”, அழகாக வெட்கப்பட்டான் மணி.

“ஆனா என்ன மணி...”, நித்யா தூண்டினாள்.

“இப்போ நிஜமாவே நம்புறேன் மேடம்...., நீங்க மூணுபேரும் ரொம்ப அழகா இருக்கீங்க...”, சொல்லிச் சிரித்தான்.

“அதென்ன...., ஒரு தடவை அக்கான்னு சொல்லுற...., இன்னொரு முறை மேடம்னு சொல்லுற...., சும்மா அக்கான்னே சொல்லு...”.

“ஐயோ அதெப்படி முடியும்...., நீங்க மூணுபேரும் ஐயாவுக்கு பொண்ணுங்க மாதிரின்னு சொன்னாங்க. அப்போ உங்களை அப்படியெல்லாம் கூப்பிட முடியாது...”, அவசரமாக மறுத்தான்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை...., நீ எங்களுக்கு தம்பி மாதிரி, அதனால் அக்கான்னே சொல்லு, இல்லன்னா உன் கூட நாங்க பேசமாட்டோம்..., அப்படித்தானே ராதா...”, அவர்களின் இந்த மிரட்டலுக்கு அடி பணிந்தான் மணி.

“சரிக்கா...., உங்களை அப்படியே சொல்லுறேன்...”, நேராக அவர்களை ராகவனிடம் அழைத்துச் சென்றவன்....,

“அண்ணே...., சார்...., இவங்க கேக்குறதை எல்லாம் செஞ்சு கொடுக்க சொன்னாங்க...”, சொல்லிவிட்டு அங்கேயே நிற்க,

“மணி...., டாய்லெட்ல தண்ணி வரலை...., போய் மோட்டார் போடு போ...”.

“சரிண்ணே...”, சிட்டாகப் பறந்துவிட்டான்.

“சொல்லுங்க மேடம்...”, ராகவன் பணிவாக வினவ....,

“ராகவன்...., நாங்க உங்களை விட சின்ன பொண்ணுங்கதான். தாராளமா எங்களை பெயர் சொல்லியே கூப்பிடுங்க. மேடம்னு சொன்னா என்னவோ ஒரு மாதிரி இருக்கு. நாங்களே உங்களை பெயர் சொல்லி கூப்பிடும்போது...., இதெல்லாம் ரொம்ப ஓவர்.

“நாங்களும் உங்களை மாதிரி, இங்கே ஒரு தொழிலாளிதான்...., இன்னொரு முறை எங்களை மேடம்னு சொன்னால் இனிமேல் பேசவே மாட்டோம்...”, முறுக்கிக் கொண்டாள்.

“சரி...., அப்படியே செய்யிறேன். ஆனா அதுக்கு உங்க பெயர் என்னன்னு தெரியணுமே...”.

“ஓ..., காலையில் சொல்ல மறந்துட்டோமா...”, யோசித்தவள்...., “ராகவ்...., நேத்தைக்கே எங்க பெயர் உங்களுக்குத் தெரியும். என்ன கிண்டலடிக்கறீங்களா..” போலியாக முறைத்தாள்.

“கண்டு பிடிச்சுட்டீங்க...., சரி சொல்லுங்க...., என்ன உதவி வேணும்...”, வேலைக்குள் கடந்து சென்றார்கள்.

அதன் பிறகு வேலை வேகமாக நடக்கத் துவங்கியது.

***இங்கே ஹாலிலோ...., “அருண்...., அப்போ இந்த ராஜு எப்படி அனிதாவைக் கூட்டிப் போனான்...?”, தலையிலேயே அடித்துக் கொண்டான்.

“முதல்ல அவனுக்கு போனைப் போடுடா...?”, மனோ அலற...., பதட்டமாக ராஜுவை அழைத்தான் அருண்.

“முட்டாள்...., முட்டாள்...., என்ன காரியம் செய்து வச்சிருக்கான்னு தெரியலையே...., போச்சு. இப்படி செய்வான்னு எதிர்பார்க்கவே இல்லை. இவனை எல்லாம்...”, வசைமாரி பொழிந்தான் அருண்.

ஐந்து ஆறு ரிங் போன பிறகு...., ராஜு அழைப்பை ஏற்க...., “டேய் ராஜு...”, அருண் பேசத் துவங்கும் முன்னர்...., அவனிடமிருந்து அலைபேசியை பறித்த மனோ....,

“ராஜு...., அனிதா எங்கே...?”, நேரடியாகக் கேட்டான்.

“இதோ என்னோட வண்டியில் இருக்கா. நீதானே இசிஆர் ப்ராஜெக்ட் இடத்துக்கு கூட்டி போக சொன்ன...., இப்போ என்னடா திடீர்ன்னு...”, பதட்டமாக கேட்டான்.

“உன்னோட புல்லட்டுலையா போயிருக்க...”, நம்ப முடியாமல் கேட்டான்.

“வழக்கமா அதில் தானே போவேன்...”, ராஜுவின் பதிலில், மௌனமாக அலைபேசியை வைத்துவிட்டான் மனோ. குழம்பிப் போனான் ராஜு.

அலைபேசியை காதிலிருந்து எடுத்த ராஜு அதையே வெறித்து பார்த்தவாறு இருக்க...., “ராஜு...., என்ன..? யார் போன்ல...?”, அவனை உலுக்கினாள்.

“மனோதான்...., ஏன் போன் பண்ணினான்னு தெரியலை. ஆனா கோபமா இருக்கான்னு மட்டும் தெரியுது. நீ எங்கேன்னு கேட்டான்..., சொன்னேன்...., வச்சுட்டான்...”, அடுக்கடுக்காக சொல்ல...., அனிதாவிற்கு நொடியில் விஷயம் விளங்கிவிட்டது.

ஒரு நொடி திகைத்தவள்...., “அதெல்லாம் கோபமால்லாம் இருக்க மாட்டாங்க. அப்படியே கோபமா இருந்தால் நான் பேசிக்கறேன்..., நீங்க போங்க...”, அனிதா சொல்லவே...., வண்டியை கிளப்பிச் சென்றான்.

இங்கே அருண் கோபத்தின் பிடியில் இருந்தான். “இவன் என்ன சின்ன பையனா...., இல்ல அவன் கூட்டிப் போனது கைக் குழந்தையா...? கார் இருக்கும்போது, புதுசா பார்க்கற ஒரு பெண்ணை, புல்லட்டில் கூட்டி போயிருக்காண்டா....,

“ஏற்கனவே அவளுக்கு, அவனைப் பாத்தா லூசாட்டம் தெரியும். இன்னைக்கு அதை கன்ஃபர்மே பண்ணியிருப்பா. இதுமட்டும் ஐயாவுக்கு தெரிஞ்சுது...., என்ன சொல்லுவார்...., இன்னைக்கு சாயங்காலம் அவன் வரட்டும்...., அப்படியே...”, கையை ஆட்டி ஆட்டி பேசியவன்...., இறுதியில் அவன் கழுத்தை நெரிப்பதுபோல் செய்கை செய்தான்.

மனோவும் கோபமாகத்தான் இருந்தான். ஆனால் யோசிக்கும்பொழுது அந்த கோபம் மறைந்துவிட்டது.

“அருண்...., அவன் என்ன அவ கையை காலை கட்டியா அவனோட வண்டியில் கூட்டி போயிருப்பான்...., விடுடா...”, தான் புரிந்துகொண்டதை அருணுக்கு விளக்க முயன்றான்.

“அதெல்லாம் சரிதாண்டா...., இருந்தாலும்...., மனசே ஆறலடா...”.

“விடு அருண்...., சாயங்காலம் வந்தவுடன் பேசிக்கலாம்...”, அருணை அமைதிபடுத்தினான்.

“அதெப்படிடா விட முடியும்...? இருந்தாலும், அவனுக்கு எங்கேயோ ஒரு மச்சம் இருக்குதுடா...., அதான் இப்படியெல்லாம் நடக்குது. என்னையும் உன்னையும் பாத்தா...., ஒரு பொண்ணு கூட சீண்ட மாட்டாளுங்க...., அதுக்கெல்லாம் ஒரு முக ராசி வேணும்டா...”, சொல்லிக்கொண்டே திரும்பியவன்...., வாசலில் நின்ற பெண்களை கண்டுகொண்டு பேச்சை நிறுத்தினான்.

“வாங்க...., என்ன அங்கேயே நின்னுட்டீங்க...?”, மனோ அழைத்தான்.

“சாரி...., கதவு திறந்தே இருந்தது அதான்....”, சங்கடமாக உரைத்தாள் நித்யா.

“நித்யா....., நீங்க எதுவும் சொல்லாதீங்க. அவங்க சொல்லட்டும்...”, அருண் குறுக்கே புகுந்து சொன்னான்.

ஏற்கனவே கொஞ்சம் கோபத்தில் இருந்ததால் மனோ அருணைத் தடுக்கவில்லை. ராதாவோ...., அவன் பேச்சில் திகைத்துவிட்டு...., “இ..ல்..ல..”, அவள் இழுக்க....,

“என்னங்க...., வெறும் காத்துதான் வருது....’, ன்னு ரேவதி சொன்ன மாதிரி..., இந்த இழு இழுக்குறீங்க...”, ஏனோ ராதாவை சீண்டுவது அவனுக்குப் பிடித்திருந்தது.

“மேலே சொல்லுங்க...”, கையை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு அசையாமல் நின்றான். மனோ இருக்கையில் சாய்ந்துகொண்டான்.

அவனது தோரணையில் ஒரு வினாடிக்கும் அதிகமாக அவனை

வெறித்தவள்..., சட்டென பார்வையைத் திருப்பிக் கொண்டு...., “டேபிள் எல்லாம் கொஞ்சம் அரேஞ் பண்ணிட்டோம். உங்களுக்கு பிடிச்சிருக்கான்னு...”,

“பிடிச்சிருக்கு...”, அருண் அவள் முகத்தையே ஒரு மாதிரி பார்த்துவிட்டு..., ஏதோ யோசனையில் சொல்லிவிட..., “எ...ன்...ன...”, தடுமாறி அவனை நோக்கினாள் ராதா.

“அது என்னன்னா...., கண்டிப்பா நல்லாதான் செஞ்சிருப்பீங்க. எங்களுக்கு பிடிக்கும்னு சொல்ல வந்தோம்...., இல்லடா மனோ...”, நண்பனையும் கூட்டு சேர்த்தான்.

“நீங்க போங்க...., நாங்க பின்னாடியே வரோம்....”, அவர்களை அனுப்பிவிட்டு...., பாதுகாப்பாக கதவையும் மூடிவிட்டு வந்த அருண்....,

“மனோ...., எல்லாமே ஒரு மார்கமா போற மாதிரியே ஒரு ஃபீலிங்டா....., நிஜமாவே நாம நல்லவனுங்க தானாடா....?”, பரிதாபமாகக் கேட்டான் அருண்.

அவனைப் பார்த்து வாய்விட்டு சிரித்தவன்....., “தெரியலையேடா...”, நாயகன் கமல் குரலில் மனோ சொல்ல...., உக்கிரமாக அவனை முறைத்தான் அருண்.

“சரி சரி...., ரொம்ப முறைக்காதே...., வா முதல்ல போய் நம்ம ரூமை பார்ப்போம்...”, அருணையும் அழைத்துக்கொண்டு அங்கிருந்து விரைந்தான்.

***

# மௌனம் – 12

முழுதாக ஒரு வாரம் கடந்திருந்தது. இசிஆர் ப்ராஜெக்ட்டை தட்டுத் தடுமாறி துவங்கிவிட்டார்கள். இந்த ஏழுநாட்கள், நிறைய அனுபவங்களை...., வாழ்க்கையை பற்றிய புரிதலை, அனுசரணையை...., வியப்பை...., ஒற்றுமையை...., தோழிகளுக்கு கொடுத்திருந்தது.

எலியும் பூனையுமாக இருந்தவர்கள்...., நட்பின் அடுத்த கட்டத்தில் அடியெடுத்து வைத்தார்கள். ஒருவர் மற்றவருக்காக சிந்திப்பது...., இதுவரை அவர்கள் செய்தே அறியாத ஒரு விஷயம்...., அதை செய்யத் தூண்டியிருந்தது, அண்மையில் சந்தித்த ஆண்களின் நட்பு.

நாள் தவறாமல் இணைந்தே வரும் அவர்களின் நட்பு...., அவர்களது வேலையில் மூழ்கி இருந்தாலும்...., நாளின் இறுதியில் அவர்களது அனுபவத்தை பகிர்ந்துகொள்ளும் பாங்கு....., தங்களுக்குள் மூன்றாம் மனிதரை நுழைய அனுமதிக்காத ஒற்றுமை....,

ஒருவரை ஒருவர், தங்களுக்குள் எவ்வளவு கேலி செய்தாலும்...., மற்றவரிடம் விட்டுக்கொடுக்காமல் இருக்கும் அவர்களது நட்பு...., இப்படியாக...., ஆண்களைப் பார்த்து...., தங்கள் பிடிவாதத்தில் இருந்து இறங்கி...., மூன்று பெண்களும் தங்களுக்குள் நெருக்கமாகி இருந்தார்கள்.

அதே நேரம், வேலையிலும் நிறைய கற்றிருந்தார்கள். கொஞ்சம் குற்றவுணர்வும் எட்டிப் பார்த்தது.

அவர்களுக்கு ஒதுக்கிய வேலையில்...., எழுபத்தைந்து சதவீதத்தை ஆண்களே பார்த்துக் கொண்டார்கள். அப்படி பார்த்துக்கொண்டாலும்...., பெண்களை குற்றம் சொல்லாத அவர்களின் பெருந்தன்மை...., பெண்களைப் பெரிதும் கவர்ந்தது.

அதே நேரம்...., தேவையில்லாமல் அவர்களுக்கு சுமையாக இருக்கின்றோமோ என்ற தவிப்பும் அதிகமாக இருந்தது. எப்படியாவது வேலையை கற்றுத் தெரிந்தே ஆகவேண்டும் என்ற உத்வேகத்தையும் அது கொடுத்தது.

“நித்தி...., நிஜமாவே நாம இங்கே வேலைதான் செய்யிறோமா...?”, அனிதா சந்தேகம் கேட்கும் அளவிற்கு அவர்கள் நிலைமை இருந்தது.

“எனக்கும் அதே சந்தேகம் தான்...”, ராதா தன் பங்குக்கு சொன்னாள்.

“ரெண்டுபேரும் உதை தாண்டி வாங்கப் போறீங்க...., நானே ஏற்கனவே நொந்துபோய் இருக்கேன்...., நீங்கவேற...., நீங்களாவது ஆளுக்கொரு பக்கம் தப்பிச்சு போய்டுறீங்க...., மனோகிட்டே பேசுறது நான்தானே...”, அவள் கவலை அவளுக்கு.

புதிதாக போட்ட டிஸைன் சரியாக இருக்கிறதா என டெஸ்க்டாப்பில் சரிபார்த்தவாறே..., தோழிகளிடம் சிடுசிடுத்தாள் நித்தி.

“ஏன்...., ஏதாவது திட்டினாரா...?”, கவலை கொண்டாள் அனிதா.

அனிதா கேட்கவே...., அவள் முகம் பார்த்தவள்...., “ம்ச்...., திட்டினால் கூட பரவாயில்லடி...., என்னதான் சொதப்பினாலும், கொஞ்சம் கூட முகத்தைச்சுணுக்காமல் எல்லாத்தையும் சொல்லித்தரார்...., அதுதான் எனக்கு கவலையே...”, வேலையை சரியாக செய்ய முடியவில்லையே என்ற சங்கடம் தொனித்தது.

“இந்த அறிவு படிக்கும்போது இருந்திருக்கணும்....”, நக்கலாக சொன்னாள் அனிதா.

“சரி...., அப்போ நாங்க எங்க அறிவை மட்டும்தான் கடன் கொடுத்திருந்தோம்...., நீங்க என்ன செய்து கிழிச்சீங்களாம்...”, அவளைவிட நக்கலாக கேட்டாள் நித்தி.

“உங்கள வேவுபாக்குறதுக்கே நேரம் சரியா போச்சு. நீங்கதான் ஒரே ஆளா அலைவீங்களே...., உங்களுக்கு என்னடி ஆச்சு. நீங்களாவது ஒழுங்கா படிச்சிருந்தால் இப்படி நடந்து இருக்குமா...?”, கவலை கொண்டாள் அனிதா.

“எங்க படிப்புக்கு என்னடி குறைச்சல்..., உன்னை மாதிரி பார்டர்லயா பாஸ் ஆகி இருக்கோம்...., எல்லாத்திலும் டிச்டிங்க்ஷன்...., அது தெரியுமா...?”, பெருமை பொங்கியது நித்தியின் குரலில்.

“அந்த வெளக்கமாருக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. ஒரு ரூமை

காட்டி..., இது எவ்வளவு இருக்கும்னு கேட்டா...., ஒரு ஆறடி இருக்குமான்னு கேட்டு எங்க மானத்தை வாங்குற....,

“அவங்க என்ன, உன்னை அடக்கம் பண்ணறதுக்கு குழியவா காட்டுனாங்க...”, பல்லைக் கடித்தாள் அனிதா.

அனிதாவின் பேச்சைக் கேட்டு பக்கென சிரித்துவிட்டாள் ராதா.

அவள் சிரிக்கவே...., “ராதா...., அருண்கிட்டே மாட்டிகிட்டு இவ்வளவு முழிச்ச பிறகும் உனக்கு சிரிப்பு மட்டும் நிக்கவே மாட்டேங்குது இல்ல...”, ராதாவிடம் பாய்ந்தவள்....,

“ஆமா..., ஸ்கொயர்ஃபீட்டுன்னு கேட்டே பழகிட்டு...., புதுசா...., அடி...., அங்குலம்னு கேட்டால் நானும் என்னதான் செய்வேன்...? அதிலும் அவர் டக்குன்னு கேக்கவே தடுமாறிட்டேன்...., ஏதோ பதட்டத்தில் வந்துடுச்சு, விடேன்...”, சலிப்பாக சொன்னாள்.

நித்தியும் என்னதான் செய்வாள்...., இதை வைத்தே அவளை இரண்டுநாளாக ஓட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கவலைக்கும் நியாயம் இருந்தது. படிக்கும் காலத்தில் ஏனோதானோவென்று படித்தவர்கள் அவர்கள்.

தங்கள் காலில் நிற்கவேண்டும்...., தங்கள் திறமையை மற்றவருக்கு நிரூபிக்கவேண்டும், இது தங்களது அடையாளம்..., தனித்துவம் என்ற எந்த எண்ணமும் இல்லாமல்...., மேம்போக்காகவே இருந்துவிட்டார்கள்.

ஆனால் இங்கே வந்து...., தங்களது அலுவலகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரின் செயலையும் பார்க்கும்பொழுதும்...., தாங்கள் இவ்வளவு நாளாக வாழ்க்கையை எப்படி ஏனோதானோவென்றும்....., ஒரு பொறுப்பற்ற தன்மையோடும் வாழ்ந்திருக்கிறோம் என்பது புரிந்தது.

அலுவலகத்தை பெருக்கி...., பாத்ரூமைக் கழுவும் பெண்மணி துவங்கி...., அலுவலக பையன்...., வாசலில் நிற்கும் காவலாளி...., கிளார்க்...., கணக்கர்...., என அனைவரும், அவர்கள் செய்யும் வேலைக்கு உண்மையாக இருந்தார்கள்.

உண்மையான உழைப்பை கொடுத்தார்கள். யாரும், பெயர் வாங்க

வேண்டும் என்றோ..., மற்றவர் பார்க்கவேண்டும் என்றோ வேலை செய்யவில்லை, மாறாக...., தங்கள் வேலையே தங்களுக்கு எஜமானன் என்பதாக நடந்துகொண்டார்கள்.

அலுவலகத்தில் அனைவருமே ஆண்கள்தான்....., கூட்டிப் பெருக்கும் பெண்மணியையும்...., நித்யா, அனிதா, ராதா..., இவர்களைத் தவிர அங்கே வேறு பெண்கள் கிடையாது.

ஐம்பது ஆண்களுக்கு மத்தியில் இவர்கள் வேலை செய்தாலும்...., அவர்களில் ஒருவர் கூட...., பெண்களை தவறான பார்வை கூட பார்த்தது கிடையாது. இவ்வளவிலும்...., கிட்டத்தட்ட நாற்பது ஆண்கள் அருண்..., மனோ..., ராஜ்..., அவர்களின் வயதைவிட சற்று கூடக் குறைய இருப்பார்கள்.

அங்கிருக்கும் அனைவரும், ஏதோ ஒரு விதத்தில் மிகுந்த நெருக்கமான மனநிலையில் இருப்பதுபோல் அவர்களுக்குத் தோன்றியது. இந்த சந்தேகம் எழவே...., "ஏன் மனோ...., இங்கே வேலை செய்பவர்கள் எல்லாம் வேறு வேறு இடங்களில் இருந்து வருபவர்கள் போலவே இல்லை. ஏதோ ஒரே வீட்டில் இருந்து வருவதுபோல் எனக்கு தோன்றுகிறது.

"உங்களுக்கும் அப்படித் தோன்றுகிறதா...?", ஒரு நாள் எதேச்சையாக கேட்டபொழுது...., மனோவின் முகத்தில் வந்துபோன பாவம் என்னவென்று அவளால் இனம் காண முடியவில்லை.

நித்யாவை ஆழமாக ஒரு பார்வை பார்த்ததோடு சரி..., மேற்கொண்டு ஒரு வார்த்தை கூட அதைப்பற்றி அவன் பேசவில்லை.

மேற்கொண்டு அவளாலும் அவனிடம் அதைப்பற்றி விவாதிக்க முடியவில்லை. நித்யா, அனிதா, ராதாவை அனைவரும் 'மேடம்' என்றே அழைத்தார்கள். இவர்கள் எவ்வளவோ மறுத்துப் பார்த்தும்...., யாரும் அவர்களது அழைப்பை மாற்றிக் கொள்ளவில்லை.

"அதெப்படிம்மா...., நீங்க ஐயாவுக்கு பொண்ணுங்க மாதிரின்னு சொன்னாங்க...., அப்போ நாங்க எப்படி உங்களை பேர் சொல்லி கூப்பிடுறது, அது நல்லா இருக்காது...", அனைவரும் சொல்லிவைத்ததுபோல் இதே பதிலையே, வெவ்வேறு விதமாக கொடுத்தார்கள்.

மூவரும் சேர்ந்து மனோவிடம் அதைப்பற்றி புகார் தெரிவித்தபொழுது...., "வேண்டாம் அதை அப்படியே விட்டுவிடுங்கள்...., அவர்கள் விருப்பப்படியே இருக்கட்டும்...., சில விஷயங்களை நாம் மற்ற நினைப்பது முட்டாள்தனம்...", குரல் இறுக அவன் சொன்னபொழுது....,

தாங்கள் கேட்டதற்கும்...., இவன் சொல்வதற்கும் என்ன சம்பந்தம் என்று புரியாமல் குழம்பிப் போனார்கள்.

"நித்தி...., நாம ஏதாவது மர்ம தேசத்துக்குள் புகுந்துட்டோமா...", அனிதா காதுக்குள் கிசுகிசுக்க...., நித்தி அவளை புரியாமல் பார்த்தாள்.

நித்தியின் பார்வையை உணர்ந்தவள்...., "இல்ல...., அவர் பேசுறது எனக்கு சுத்தமா புரியலை, அதான் கேட்டேன்...", நகங்களை ஆராய்ந்தவாறு அனிதா சொல்ல...., கடுப்பானாள் நித்தி.

"ஏற்கனவே நானும் குழம்பிப்போய் இருக்கேன்..., இதில் நீயும் உன் பங்குக்கு குழப்பியே ஆகணுமா...., விட்டுடு...", பல்லைக் கடித்தவாறு அவளுக்கு பதில் கொடுத்தாள்.

அவர்களது உரையாடல் மனோவின் காதில் விழுந்தாலும் அதைப்பற்றி அவன் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அலுவலகத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல...., இவர்களே ஒரு புதிராகவே இருந்தார்கள்.

இப்படியாக சில அனுபவங்களும் அவர்களுக்கு ஏற்பட்டன.

"ஏய் நித்தி...., நான் கேட்டுகிட்டே இருக்கேன்...., நீயென்ன கனவு கண்டுக்கிட்டு இருக்கியா...?", நித்தியின் தோளை உலுக்கினாள் அனிதா.

"ஹாங்..., என்ன கேட்ட.... அனி...", நினைவுகளில் இருந்து கலைந்தாள் நித்தி.

"என்ன கேட்டனா....? மனோ ஏதாவது கேட்டாரான்னு கேட்டேன்...", விளையாட்டை விட்டுவிட்டு கேட்டாள்.

"ம்ச்...., அதெல்லாம் எதுவும் இல்லை...., சரி நீயென்ன இன்னும் கிளம்பாமல் இருக்க...? ஏற்கனவே வேலை தலைக்கு மேல இருக்கு. இதில் நீவேற இப்படி டைம் வேஸ்ட் பண்ணாதே...", மென்மையாக

கடிந்துகொண்டாள்.

பழைய அனிதாவாக இருந்தால்...., ‘ஏன் நீயே போய் பார்த்துக்கொள்’, என்று எகிறியிருப்பாள் ஆனால் இப்பொழுது இருப்பவள் புது அனிதாவாயிற்றே..., எனவே...., “இதோ கிளம்பிட்டே இருக்கேன்...., ராஜு வந்தவுடன் போக வேண்டியதுதான்...., சரி நேத்து நான் சொன்ன அந்த மாடலை டிஸைன் செஞ்சீங்களா...?”, பொறுப்பானவளாக கேள்வியும் கேட்டாள்.

“அது நம்ம ராதாவோட வேலை...., நீ அவகிட்டே கேளு...., ஏய் ராதா..., இவ கேக்குறது உன் காதில் விழுதா இல்லையா...?”, சிஸ்ட்டத்துக்குள் தலையை விட்டிருந்தவளை...., , அவள் தோள் தொட்டு இழுத்தவாறு கேட்டாள்.

“கொஞ்சம் வெயிட் பண்ணு..., இப்போதான் உள்ளே புகுந்து தேடிட்டு இருக்கா. சீக்கிரம் கண்டுபிடிச்சுடுவா...., சரியான தத்தி..., எப்படித்தான் இந்த வாயை மூடியே வச்சு இருக்காளோ...., ஒருநாள் இல்ல ஒரு நாள்...., சிலந்தி கூடு வைக்க போகுது பாரு....?”, ராதாவின் அமைதியை கேலி செய்தாள்.

“ஏய் சும்மா இருடி...?”, “அப்படிச் சொல்லுங்க அனிதா...”, இரு குரல்களும் ஒன்றுபோல் ஒலித்தது.

சட்டென தங்கள் இருக்கைகளில் இருந்து எழுந்து நின்றனர் மூன்று பெண்களும். அவர்கள் செய்கையைப் பார்த்த அருண்....,
“அடேங்கப்பா..., எங்களுக்கு இவ்வளவு மரியாதையா.. நாடு தாங்காது...”, பேச்சு அனிதாவிடம் இருந்தாலும்...., அவன் பார்வை ராதாவிடமே நிலைத்து இருந்தது.

“அட...., நாங்க உங்களுக்கு மரியாதை கொடுத்தோம்னு நினச்சுட்டீங்களா...? அப்படியெல்லாம் அவசரப்பட்டு முடிவெடுக்க கூடாது. ஆசையைப் பாரேன்..”, நொடித்துக் கொண்டாள் அனிதா.

“அதானே பார்த்தேன்...., இங்கே வந்து, ‘இது என்ன வேலைன்னு பாருங்க’ன்னு எங்களை வேலை வாங்காமல் இருந்தால் போதாது. இதில் மரியாதை வேற தரணுமா...., நியாயம்தான்...”, அருணும் அதேபோல் பதில் கொடுத்தான்.

“நாங்கல்லாம் இங்கே அப்பரசண்டிகள்...., எங்களுக்கு முதல்ல வேலையெல்லாம் சொல்லித் தந்துதான் ஆகணும்...”, குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோல் பேசும் அவளை கண்களில் சிரிப்புடன் பார்த்திருந்தான் மனோ.

ராஜுவோ...., ‘அவள் என்ன சொன்னாலும் சரியாகத்தான் இருக்கும்’ என்பதுபோல் பார்க்க...., அருண், ராதாவின் முகத்தில் தாண்டவமாடும் கோபத்தையே ரசித்துக் கொண்டிருந்தான்.

இந்த கேலிகள் அவர்களுக்குள் இப்பொழுது பழக்கமான ஒன்றாகி விட்டிருந்தன. முதலில் அனிதாவின்மேல் கோபம் கொண்டிருந்த அருண் கூட...., தன்னைப்போல் அவளும் வாயாடி என்று தெரிந்த பிறகு...., அவளோடு வாயாடுவது அவனுக்குப் பிடித்திருந்தது.

முதலில் பதறிய இருவரின் நண்பர்களும்...., அவர்கள் சாதாரணமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள் என்று தெரிந்த பிறகு...., அவர்களது வாய்ச் சவடால்களுக்கு பார்வையாளர்களாக மாறி ரசிக்கத் துவங்கி விட்டார்கள்.

“என்னது...., அப்பரசண்டிகளா...? அடப்பாவிங்களா... உங்களை நம்பியா எங்க ஐந்துகோடிரூபாய் ப்ராஜெக்டை நாங்கள் ஒப்படைத்திருக்கோம்...? மனோ...., கேட்டியாடா...?”, பொய்யாக அலறினான்.

அத்தோடு நிறுத்தாமல்...., “அப்போ முதல் மூணுமாசம் சம்பளம் கொடுக்க வேண்டாம்னு சொல்லுங்க....?”, குறும்பாக கேட்டான்.

“சம்பளம் எல்லாம் எதுவும் வேண்டாம்...., இந்த மாசம் முழுக்க எங்களுக்கு ஆகும் செலவை நீங்க பார்த்துக்கிட்டா போதும்...”, விட்டுகொடுக்காமல் பேசினாள் அனிதா.

“அம்மாடியோ...., இதுக்கு சம்பளமே கொடுத்துட்டுப் போய்டலாமே...’, அவன் எண்ணியதை சொல்லும் முன்னர்....,

“அப்போ நான் ரெடி...”, இடையில் புகுந்து சொல்லிவிட்டிருந்தான் ராஜு.

சட்டென இடையிட்ட ஒரு மௌனத்தை...., “இவன் வேற...., சம்மன்

இல்லாமல் ஆஜர் ஆகுறான்...”, கேலியைத் தொடர்ந்தான் அருண்.

“இது நல்லா இருக்கே...., நீங்களும் செய்ய மாட்டீங்க...., செய்யிறவங்களையும் தடுப்பீங்களா...?”, அருணிடம் சண்டைக்குப் போனாள் அனிதா.

“அப்போ உனக்கு ஓகே தானா அனி...”, ராஜு அவன் காரியத்திலேயே கண்ணாக இருந்தான்.

“எனக்கு எப்பவுமே டபிள் ஓகே ராஜு...”, பட்டென தன் சம்மதத்தை தெரிவித்தாள். அது விளையாட்டுக்குச் சொன்னதா...., இல்லையென்றால் உண்மையாகவே சொன்னதா என்பதை, அவள் மனம் மட்டுமே அறியும்.

அவள் பதிலில், “ஹையா...., அருண் தோத்துட்டியா...”, ராஜு சந்தோசத்தில் குதிக்க...., அவள் பேச்சை எப்பொழுதும் விளையாட்டாகவே எடுத்துகொள்ளும் அருணும், மனோவும் கவலை கொண்டார்கள்.

‘ராஜுவோடு இப்படி விளையாடாதே...’, என்று சொல்ல, வாய்வரை வந்த வார்த்தைகளை தடுக்க மிகுந்த சிரமப்பட்டான் மனோ. அதே நிலைதான் அருணுக்கும் என்பது, அவன் பார்வையில் இருந்தே தெரிந்தது.

நிலைமையை சமாளிக்கும் பொருட்டு...., “நித்யா...., நேத்தைக்கே நான் உங்களை, அந்த ப்ராஜெக்ட் வேலை சரியா இருக்கான்னு பார்க்கச் சொன்னேனே...., அப்போ இன்னைக்கு நீங்கதான் ராஜுவோட போறீங்களா..?”, மனோவின் குரல் சற்று எரிச்சலும் கோபமும் கலந்து வெளிவந்தது.

ஏனோ அந்த நேரம், அவனது பேச்சை அங்கிருந்த யாருமே ரசிக்கவில்லை. ஆனாலும்...., மனோவை எதிர்த்து பேச விரும்பாமல் அமைதியாகவே இருந்தார்கள்.

“ராஜு...., நீ நித்யாவை கூப்பிட்டு கிளம்பு...., இன்னைக்கு அனிதா, கம்பெனியில் இருந்து...., அவங்களோட வியூஸை கொஞ்சம் ஸ்கெட்ச் பண்ணட்டும்...”, அவன் குரல் கட்டளையாக ஒலித்தது.

“சரி மனோ...”, இதுவரை அவனை மறுத்தே பேசியிராத ராஜு உடனே ஒத்துக்கொள்ள...., அனிதாவிற்குத்தான் கண்மண் தெரியாமல் கோபம் வந்தது.

ராஜுவை அவள் உறுத்து விழிக்க...., அவள் பார்வையின் பொருள் புரியாமல்...., “என்ன அனி...., ஏதாவது கோபமா இருக்கியா...?”, அவளிடமே விளக்கம் கேட்டான்.

“இப்போ ஆமான்னு சொன்னால் என்ன செய்யப் போறீங்களாம்...”, கோபத்தை விடாமல் கேட்டாள்.

அனிதாவின் கோபம் அதிகப்படியாக தோன்ற...., “அனி...”, அடிக்குரலில் அவளை அடக்கினாள் நித்யா.

நித்யாவை சுடும் பார்வை பார்த்தவள்...., அங்கிருந்த அனைவரையுமே முறைத்தவாறு விருட்டென்று அறையிலிருந்து வெளியேறியவள்...., வாசலின் அருகில் சென்று ராஜுவை அதிகப்படியாகவே முறைத்துவிட்டுச் சென்றாள்.

“அனி...”, அவள் கோபத்தைப் பார்த்து அவள் பின்னால் செல்லப் போனவனை....,

“ராஜு...., உன்னை சைட்டுக்கு போகச் சொன்னேன்...”, மனோவின் குரல் அழுத்தமாக ராஜுவை தடுத்தது.

“மனோ...., அனிதா...”, வாசலையே பார்த்தவாறு...., மனோவிடம் பார்வையால் கெஞ்சினான்.

‘இதை வளரவிடுவது நல்லதல்ல...’, தனக்குள் சொல்லிகொண்ட மனோ...., அசைந்துகொடுக்காமல் அமைதியாக ராஜுவைப் பார்த்தான்.

மனோ எப்பொழுதும் ராஜுவின் நியாயமான விருப்பங்கள், ஆசைகளுக்கு குறுக்கே நிற்பவன் இல்லை என்பதால்...., மனோவின் அழுத்தமான மறுப்பு..., ராஜுவிற்கு தன் செய்கையில் ஏதோ தவறிருப்பதை உணர்த்தியது.

மனோவை மீறிச் செல்ல மனமில்லை என்றாலும்...., அனிதாவின் கோபம் அவனை வெகுவாக பாதித்தது. “அருண்...”, அவன் தனக்கு

உதவிக்கு வருவானோ..., என்ற ஆசையில் அவனை அழைக்க...., அருணும் இளகாமல் நின்றான்.

ராஜுவின் கெஞ்சல், நித்யாவையும், ராதாவையும் வெகுவாக பாதித்தது. நித்யா மனோவை ‘ஏதாவது செய்ங்களேன்...’, என்பதுபோல் பார்க்க...., ராதா அருணை முறைத்தாள்.

‘இவ முறைக்கிறதுக்கு மட்டும்தான் என்னை பார்ப்பா....’, அருண் அவள் பார்வையை ஆராய்ந்து கொண்டிருந்தவன், அதன் பொருளை உணர மறுத்தான்.

எப்படி இருந்தாலும், இரு ஆண்களின் பார்வையிலும் ஒரு பிடிவாதமான மறுப்பு தெரிந்தது. அதை உணர்ந்த பெண்கள் இருவரும் திகைத்தார்கள். இவ்வளவு நாளிலும்...., அனிதா – ராஜு, அருண் – ராதா, இடையில் மெல்லிய உணர்வுகள் ஓடுவதை ஒவ்வொருவரும் இனம் கண்டிருந்தார்கள்.

அப்படியிருக்கையில் மனோ, அருணின் இப்போதைய பிடிவாதம் அவர்களுக்கு வித்தியாசமாகத் தோன்றியது. அதைவிட...., ராஜு நண்பர்களை மறுத்து செல்லாதது அதைவிட வியப்பை அளித்தது.

நித்யாவின் பார்வை மனோவிடம் மௌனமாய் கேள்வி கேட்க..., ‘எதற்கும் நான் அசையத் தயாரில்லை’ என்பதுபோல் அழுத்தமாக நின்றான் மனோஜ். நித்யாவிற்கு அவனது இந்த செய்கை கோபத்தை அளித்தது.

‘மற்றவர் வாழ்க்கையை இவர் என்ன தீர்மானிப்பது....? அவர்களுக்கென்று ஆசைகள் இருக்காதா...? எல்லோரும் இவரைப்போல் இருப்பார்களா..? அவர்களது நேசத்தை ஏன் புரிந்துகொள்ள மாட்டேன் என்று அடம் பிடிக்கிறார்...?’, கேள்விகள் படையெடுத்தன.

மனோவின் பார்வையில் மாற்றமில்லை என்பதை உணர்ந்த ராஜு...., “நித்யா, வாங்க...”, அவளை அழைத்தவன்...., முன்னால் சென்றான். ராஜுவின் குரலில் நடப்புக்குத் திரும்பியவள்....,

ராதாவிடம் பார்த்துகொள்ளுமாறு சொன்னவள்...., அவசரமாக தேவையானவற்றை கைப்பையில் எடுத்து வைத்தவாறு கிளம்பிச்

சென்றாள்.

நித்யா வரும்வரை அறை வாயிலில் காத்திருந்தவனது பார்வை...,
அனிதா இருக்கிறாளா என்று பார்வையால் துழாவினான். தூரத்தில்
சுவரின் மறைவில் இருந்து ராஜுவை பார்த்துகொண்டிருந்த அனிதா....,
அவன் தன்னைத் தேடுவதை உணர்ந்து மகிழ்ச்சி கொண்டாள்.

ஆனால் அதே நேரம்...., நித்யா வந்துவிடவே...., அவளை
அழைத்துக்கொண்டு முன்னால் நடந்தான். அப்படியென்றால்..., ‘நித்யா
வருகிறாளா என்று பார்க்கத்தான் நின்றானா..’, அனிதாவின் மனம்
அனிச்சம் மலராய் வாடியது.

***

# மௌனம் – 13.

ராஜுவும் நித்யாவும் சென்ற பிறகும், நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றாள் அனிதா. ஏனோ ராஜு நித்யாவை உடன் அழைத்துச் செல்வதை அவள் அடியோடு விரும்பவில்லை.

என்னவோ அவளுக்கு உடைமையான ஒருவன்...., மற்றொரு பெண்ணோடு பழகுவதைப்போல் எண்ணி அவள் மனம் மறுகியது. இந்த ஏழு நாட்களில்...., அவனது கவனிப்பும்...., அனுசரணையும் அவளை அடியோடு புரட்டிப் போட்டிருந்தன.

தந்தை இல்லாத அவளுக்கு...., ஒரு தகப்பனின் வாத்சல்யத்தோடும், சகோதரனின் அன்போடும்...., தாயின் அரவணைப்போடும்...., தன்மேல் மொத்தமாக அன்பைப் பொழிந்த அவனை, தனது தோழிகளாக இருந்தாலுமே கூட, அவனது நேசத்தை பங்குபோட அவள் விரும்பவில்லை,

ஏழு நாட்களாக புரியாத உண்மை..., அவன் தன்னைவிட்டு...., நித்யாவின் பின்னால் சென்ற அந்த நிமிடம் புரிந்தது...., அவனை எதற்காகவும், யாருக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது என்று.

அதைவிட...., இப்பொழுது அவளை எப்படி அழைத்துச் சென்றிருப்பான்..? அவனது புல்லட்டிலா...?’ இந்த நினைவே கசந்து வழிந்தது. அப்படிமட்டும் இருக்கட்டும்...., நீ எப்படி அவன் புல்லட்டில் போகலாம்...?’, என்று நித்யாவை அறையவேண்டும் என்ற ஆத்திரம் பிறந்தது.

ஓடிச்சென்று அவர்களை தடுத்துவிடுவோமா....?’ என்ற எண்ணம் அவளை ஆட்டிப் படைத்தது. வராண்டாவில் நின்றாலும்...., மூச்சுக்காற்றுக்கு சுவாசக்குழல் தவித்தது. அழுதே அறியாத அவளது விழிகள் கண்ணீர் மழையைப் பொழியவா என்று அவளை மிரட்டியது.

இந்த உணர்வுகளை தாங்கிக்கொள்ள முடியாமல்...., அறைக்குத் திரும்பினாள். அங்கே ராதா வேலைபார்த்துக்கொண்டிருக்க...., அறைக்குள் நுழைந்த அவளை, தன் இருக்கையில் இருந்து கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தான் மனோஜ்.

அவர்கள் இருந்தது ஒரே அறை என்பதோடு...., அவர்களது அறையைப் பிரித்தது...., பாதி மறைத்திருந்த தடுப்பு மட்டுமே, எனவே இரண்டுபக்கம் இருப்பவர்களும் மற்றவர்களை பார்த்துக்கொள்ள முடியும்.

எப்பொழுதும் சிரித்துக்கொண்டிருக்கும் அவள் விழிகள்...., மலர்ச்சியாக இருக்கும் அவள் முகம், தற்போது வாடியிருப்பதைப் பார்க்க, அவனுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும்...

இந்த ஆனால் தான் அவர்களைத் துரத்திக்கொண்டிருந்தது. அனிதா அவனையே பார்க்க...., அவனும் அவளையேதான் பார்த்துகொண்டிருந்தான். அவன் பார்வையை விலக்கிக் கொள்ளாமல் போகவே...., வெடுக்கென முகத்தை திருப்பிக்கொண்டு...., ராதாவின் அருகில் இருந்த இருக்கையில் பொத்தென அமர்ந்தாள்.

அவள் செய்கை, சின்னக் குழந்தைகள் தன் நண்பனிடம் கோபித்துகொண்டு முகம் திருப்புவதுபோல் இருக்கவே..., மனோவின் இதழ்களில் மெல்லிய புன்னகை அரும்பியது.

ராதாவின் அருகில் அமர்ந்த அனிதாவோ...., எதையும் செய்யப் பிடிக்காமல், தன் முன்னால் இருந்த டெஸ்க்டாப்பை முறைத்தவாறே அமர்ந்திருந்தாள். அனிதாவை அமைதியாக திரும்பிப் பார்த்த ராதா...., அவள் மனம் புரியவே...., தன் கையால் அவளது வலக்கரத்தை அழுத்திப் பிடித்தாள்.

எப்பொழுதும் அனிதாவிற்கும் ராதாவிற்கும் பேச்சுவார்த்தைகள் மிகக் குறைவாகத்தான் இருக்கும். ராதாவின் அமைதியும், அனிதாவின் கேலியும் எதிரெதிர் துருவங்களாகப் பிரிந்தே நிற்கும். எனவே இருவரும் நேரடியாக பேசிகொள்வதில்லை.

ஆனால் இன்று..., இருவருக்கும் வேறு வழி இருக்கவில்லை. ராதா தன் கையைத் தொடவே...., “நான் ரொம்ப ஸில்லியா நடந்துக்குற மாதிரி இருக்குல்ல...”, கலங்கிய குரலில் முடிக்க..., ராதாவின் முன் அவமானமாக உணர்ந்தாள்.

ராஜுவை விட்டுக்கொடுக்க முடியாது என்பதில் உறுதியாக இருந்தாலும்...., ராஜு மற்றவர்முன் நடந்துகொண்டது மனதை அழுத்தியது. எனவேதான் அவ்வாறு கேட்டாள்.

“இப்போதான் ஸில்லியா பேசுற அனி. நாம அவங்கவங்க மனசுக்கு உண்மையானவங்களா நடந்துக்கிட்டா போதும். யாருக்கும் எந்த விளக்கமும் கொடுக்க வேண்டாம்.

“அதே மாதிரி...., எங்க ஃப்ரண்ட் கஷ்டப்படுறதைப் பார்த்து சந்தோசப் படுற அளவுக்கு, நானோ நித்யாவோ சேடிஸ்ட் கிடையாது...”, அனிதா வருத்தப்படுவது பிடிக்காமல் ஆறுதல் அளித்தவள்...., இவள் எப்பொழுது எங்களை புரிந்துகொள்வாள் என்பதை நினைக்கையில் ஆற்றாமையாக இருந்தது.

“ராதா...”, ஒரு கேவலோடு அவள் தோள் சாய்ந்தாள்.

அனிதா அழுதுவிடவே தவித்துப் போனாள் ராதா. “அனி...., அனி...., இங்கே பார்...., எதுக்கு இப்படி அழற...., நீ ரொம்பவே தைரியமான பொண்ணு...., அப்படியிருக்கும் போது...”, அருகில் மனோ இருக்கிறான் என்ற நினைவே அவளை சங்கடத்துக்குள்ளாக்க...., சின்னக் குரலில் தோழியை தேற்ற முயன்றாள்.

அவர்கள் சங்கடம் உணர்ந்தவன் போன்று...., அறையில் தான் இல்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தும் விதமாக...., கதவை சிறு சத்தத்தோடு அறைந்து சாத்திவிட்டு சென்றான்.

கதவு சாத்தும் சத்தத்தில் திடுக்கிட்டவர்கள்...., மனோ தங்களுக்காகத்தான் இப்படிச் செய்துச் சென்றிருக்கிறான் என்பதை உணர்ந்து எந்த மனநிலையில் தாங்கள் உணர்கிறோம் என்பதையே இனம் காண முடியாமல் இருந்தார்கள்.

“இதெல்லாம் நல்லாத்தான் செய்யிறார்...”, கண்களில் கண்ணீரோடு அலுத்துக் கொண்டாள் அனிதா.

அழுதுகொண்டே சிரிக்கும் அனிதாவைப் பார்த்தவள்...., “இப்போ என்ன நடந்துச்சுன்னு இப்படி அழற அனி. உனக்கு நாங்க இருக்கோம். அத்தோட..., நாம நிம்மதியா, தனியா பேசிக்கணும்னு இவ்வளவு அக்கறையா யோசிக்கிற மனோ...., நாம மனசு கஷ்டப்படுற மாதிரி எதையும் செய்ய மாட்டார்.

“இப்படி தேவையில்லாமல் அழுறதை விட்டுட்டு...., வேலையைப் பாரு. ராஜுவும் நித்தியும் சைட்டுக்கு தானே போயிருக்காங்க...., உன் ராஜு

மேல உனக்கு நம்பிக்கை இல்லையா...?", அவளையே ஆழம் பார்த்தவாறு கேட்டாள்.

திடுக்கிட்டு விழித்து ராதாவைப் பார்க்க...., அவள் பார்வையை உணர்ந்து...., "உனக்கு அவரைப் பிடிச்சிருக்கு...., அவர்மேல் ரொம்ப பாசம் வச்சிருக்கன்னு புரிஞ்சுக்க பிரமாதமான அறிவு ஒண்ணும் தேவையில்லை. அதான் முதல் நாளே அவரோட ஜோடி போட்டுட்டு புல்லட்டில் வந்து இறங்குன ஆளாச்சே நீ...", கேலி வழிய ராதா சொல்ல...., அழகாய் வெட்கப்பாட்டாள் அனிதா.

"அப்படில்லாம் எதுவும் இல்லை...", விட்டுக்கொடுக்காமல் சொன்னாள்.

"அப்படியெல்லாம் எதுவும் இல்லாமல் தான்..., கோபமா போனதும்...., இப்போ அழுதுட்டு இருக்குறதுமா...?".

அவள் இவ்வாறு சொல்லவே...., "உனக்கு புரியாது ராதா. ராஜு, அருண் மாதிரி கிடையாது...", குரலில் இனம் புரியாத உணர்வு கலக்க சொன்னாள்.

"ஏய்...., லூசு மாதிரி எதையாவது உளறாதே அனிதா...", அவளை கடிந்துகொண்டாள்.

"எதை உளறுறேன்னு சொல்லுற நீ...., அருண், உன்னை பார்க்கும் பார்வையில் காதல் வழியுது. என்னவோ உனக்கு தெரியவே தெரியாதுன்னு பொய் சொல்லாதே...",

"அனி...", அவளை அடக்க முயன்றாள்.

"ராதா...., சும்மா நடிக்காதே. நித்யா இதை சொன்னால் கூட கொஞ்சம் ஒத்துப்பேன். நீ இருக்கியே...., போடி...", சிடுசிடுத்தவள்...., அவள் கையை உதறிவிட்டு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

ராதா மனதுக்குள் போராடிக் கொண்டிருந்தாள். அவளுக்கு அருணின் ஆர்வமான பார்வையும், துளைக்கும் பார்வையும் புரிந்ததுதான். ஆனால் எப்பொழுதும் தன்னைச் சீண்டும் அவன்மேல்...., கோபப்பார்வையையே அவள் வீசி இருக்கிறாள்.

அதேபோல்...., அவனும் நெருங்குவதுபோல் இருக்கும்...., ஆனால்...,

அடுத்த நேரமே...., சாதாரணமாக நடந்துகொள்வான். அப்படியிருக்கையில்...!? இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. அதே நேரம்...., இளக்கம் இருக்கும் அவன் விழிகளில், ஒருவித விலகலும், பிடிவாதமும் தெரிவதும், சேர்ந்தே நினைவுக்கு வந்தது.

ராஜு ஒருவனைத் தவிர...., மற்ற இருவரும் மனதுக்குள் எதையோ வைத்துகொண்டு.... எவ்வளவுதான் பேசி, உதவியாக நடந்துகொண்டாலும், ‘சற்று எட்டியே இரு’ என்பதுபோல் நடந்துகொள்வதும் புரிவதாய்....

ஒரு பெருமூச்சொன்று கிளம்ப...., “நீ சொல்வது சரிதான்...., அருண், ராஜு மாதிரி கிடையாதுதான்...”, குரல் இறுகச் சொன்னாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் வெட்டும் பார்வை பார்த்துக் கொண்டார்கள். “நீ ஏண்டி அப்படிச் சொன்ன...?”, அனிதா காட்டமானாள்.

“நீ சொன்னதைத்தான் நானும் சொன்னேன்...”, விட்டுக்கொடுக்காமல் சொன்னாள்.

“நான் என்ன சொன்னேன்..., நீ என்ன சொல்லுற...?”.

“ராஜு மாதிரி யாராலேயும் மாற முடியாது அனி. அவரோட அக்கறை, பாசம், கவனிப்பு...., கண்காணிப்பு, வெளிப்படையான பேச்சு...., இப்படி எதிலும்”, சற்று பொறாமையாகச் சொன்னாளோ...?!

“என்கிட்டே மட்டும்னு உன்னால் உறுதியா சொல்ல முடியுமா..?”, அனிதாவின் இந்த கேள்வியில் திடுக்கிட்டுப் போனாள் ராதா.

அனிதாவின் மனதுக்குள் என்ன இருக்கிறது, எது அவளை கவலைக்குள்ளாக்குகிறது என்பது புரிய...., “அனி...”, அதிர்ச்சியாக அழைத்தாள்.

“உனக்கு, என் மனசு தவிக்கிறது புரியுதா ராதா...?”, உள்ளம் துடிக்க கேட்டாள்.

புரிந்ததற்கு அடையாளமாக ராதா மௌனமாக இருக்க...., “ராஜுவை நீ நம்பவில்லை என்றாலும்...., நம்ம நித்யாவையுமா நம்பலை...?”,

கவலையானாள் ராதா.

“நித்யா இதில் வரவே இல்லை ராதா. நான் ராஜுவைப் பத்தி மட்டும்தான் பேசுறேன். அவருக்கு, மூன்றுபேரில் ஒரு ஆளாக, நான் இருப்பதை விரும்பலை. அவருக்கு நான் ஸ்பெஷலா இருக்கணும்...., ஆனா அப்படி இல்லன்னு நினைக்கும்போது....”, மேலே சொல்ல முடியாமல் விழிகளை இறுக மூடிக் கொண்டாள்.

அவள் கவலை புரிய...., ஆதரவாக அவள் தோளை அழுத்தினாள் ராதா.

“சரி வேலையைப் பாரு...., எல்லாம் விதிப்படிதான் நடக்கும்....”, விட்டேற்றியாக சொல்ல முயன்றாலும்...., ‘ராஜுவிற்கு நான் எப்படி...?’ என்ற வினா அனிதாவின் மனதின் ஓரம் அரிக்கத் துவங்கியது.

அதைவிட...., ‘ராஜு என்ன செய்துகொண்டிருப்பான்...?’ மனம் இதையே சுற்றி வந்தது.

அதே நேரம் வெளியே சென்றிருந்த மனோவும் அறைக்குள் நுழைய...., தங்கள் வேலையில் கவனமானார்கள். சற்று நேரத்தில்...., “ராதா...”, மனோவின் அழைப்பு அவர்களை எட்ட...., இருக்கையில் இருந்து எழுந்து அவன் அருகில் சென்றாள்.

“நேத்து, ஒரு வீட்டோட ப்ளூபிரிண்ட் கொடுத்தேனே...., அதுக்கு இன்டீரியர் என்ன பண்ணலாம்னு முடிவு பண்ணிட்டீங்களா? அந்த டிசைனை கொஞ்சம் காட்டுங்க...”, எதுவும் நடவாததுபோல் நடந்துகொண்டான்.

“அது...., அருண் நேத்தைக்கு சாயங்காலம் பார்த்துட்டு தரதா சொன்னாங்க. பென்ட்ரைவில் தான் இருக்கு....”.

“ஓ...., சரி. நீங்க போய் அதை வாங்கிட்டு வந்துடுங்க...”, சொன்னவன், கையில் இருந்த ஃபைலில் பார்வையைப் பதித்தான்.

‘இதென்ன.... ஆபீஸ் பையனை அனுப்பாமல்...”, அவள் மனம் முரண்டியது. ஆனாலும் வேறு வழியில்லாமல் வாசல் பக்கம் நகர.....,

“ராதா...., இன்னைக்கு மணி வரவில்லை, அதான்....., இல்லன்னா, நான் ராகவனை அனுப்பவா...?”, அவள் தயக்கம் உணர்ந்தவனாகக்

கேட்டான்.

“இ...இல்ல...., நானே போறேன்....”, சட்டென அங்கிருந்து வெளியேறினாள்.

அறையிலிருந்து வெளியேறியவள்...., அதே தளத்தில்...., அவர்களுக்கு நேரெதிர் மூலையில் இருந்த அருணின் அறைக்கு விரைந்தாள்.

அவன் அறைக்கு முன்னால் நின்று ஒரு நொடி தயங்கியவள்...., சிறு தயக்கத்துக்குப் பிறகு, கதவை ஒற்றை விரலால் தட்டி அனுமதி வேண்டினாள்.

ஒரு நிமிடம் உள்ளே அமைதி நிலவியது. பின்னர்...., “ராதா...?”, சந்தேகமா...., அனுமதியா...., அழைப்பா...., புரியாத விதத்தில், அருணின் குரல் அவளை எட்டியது.

கதவின் திறப்பில் கைவைத்து திருகித் திறந்து, ராதா உள்ளே நுழைய...., “ஹேய்...., உள்ளே வாங்க...., என்ன தயக்கம்...”, அவளை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான்.

இத்தனை நாட்களில், அவன் அறைக்கு ராதா தனியே வருவது இதுவே முதல் முறை. அப்படியிருக்கும்பொழுதும், அவன் ‘தான்தான்’ என்பதை எப்படி அடையாளம் கண்டுகொண்டான் என்பது தோன்ற....,

“அது..., எப்படி...., நான்தான்னு...”, தயக்கமாக இழுத்தாள்.

“இதை கண்டுபிடிக்க பிரமாதமா எந்த மூளையும் அவசியமில்லை. இதுவே மணியா இருந்தா...., அருண் சார்...., ன்னு ஒரு மாதிரி இழுத்து கூப்பிடுவான். ராகவனா இருந்தால்...., ‘அருண் சார்’ன்னு விறைப்பா கூப்பிடுவான்.

“இதுவே மனோ...., ராஜுவா இருந்தால்...., டேய்...., ன்னு கூவிக்கிட்டே வருவாங்க. ஆனா எல்லோருமே, சத்தம் கொடுத்துட்டு, உள்ளே வந்துடுவாங்க. நித்யா...., அனிதா கூட அப்படித்தான்...., ’அருண்’ன்னு...., குரல் கொடுத்துட்டு உள்ளே வருவாங்க.

“ஆனா...., நீங்க மட்டும்தான்...., கதவை, அதுக்கு வலிக்குமோன்னு தட்டிட்டு, பேசாமல் இருந்தீங்க. அதை வைத்துத்தான்

கண்டுபிடித்தேன்...”, முன்னதைச் சாதாரணமாக உரைத்தவன்...., பின்னதைச் சொல்லும்பொழுது மெதுவாகச் சிரித்தான்.

“அதென்ன...., எப்போ பார்த்தாலும் என்னை கேலி பண்ணுறது...”, அவன் கேலியில் கோபம் எட்டிப்பார்க்க...., முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“உன்னை கேலி செய்யாமல்....”, ஆழ்ந்த குரலில் அவன் வினவ...., அந்த வார்த்தைகளின் நெருக்கத்திலும், திடீரென தன்னை ஒருமையிலும் அழைத்ததால், விதிர்த்துப்போய் அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவள் பார்வையை உணர்ந்த பிறகே தான் செய்த தவறு புரிய...., “பின்ன...., உன்னை கேலி செய்யாமல் என்ன செய்யச் சொல்லுற....? எண்ணி எண்ணி பேசினால் அப்படித்தான்....”, இப்பொழுது குரல் சாதாரணமாக இருக்க கேலியில் முடித்தான்.

அவன் கண்கள் ஒளிர்ந்தது...., அவளையே இமைக்க மறந்து பார்த்தான். அவன் பார்வைக்கும் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தது. அவன் பேச்சில் அவள்தான் குழம்பிப் போனாள். ‘இவன் என்ன என் உணர்வுகளோடு விளையாடுகிறானா...?’... கோபம் வந்தது.

மேலே அவனிடம் எதையும் விவாதிக்கப் பிடிக்காமல்...., “நேத்து நான் கொடுத்த பென்டிரைவ் வேணும்...”, ஏனோ அவன்முன் நிற்க அவளால் முடியவில்லை.

“ஓ...., அதை வாங்கத்தான் வந்தியா...?”, அவன் குரலில் ஒரு ஏமாற்றம் வழிந்தது.

மனதுக்குள் அலுத்துப் போனாள். ‘இவன் கொஞ்சம் வெளிப்படையாக இருந்தால் பரவாயில்லை...’, என்ற எண்ணம் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

அலுப்பாக அவனைப் பார்க்க....., எப்பொழுதும் அவளைப் பார்க்கும் அதே பார்வையைச் சுமந்தவாறு அவளைப் பார்த்திருந்தான். தொடர்ந்து அவனைப் பார்க்க முடியாமல் அவன் பார்வையின் வீச்சு தாக்க...., சட்டென பார்வையை தழைத்துக் கொண்டாள்.

“பென்டிரைவ்...”, குரல் வெளியே வராமல் கேட்டவளின் பார்வையோ,

நிலத்தை துழாவியது. அவள் பார்வையில் அவனது குறும்புத்தனம் தலை தூக்க, அவனும் அவள் அருகில் சென்றவன்...., கீழே குனிந்து தேடினான்.

அவன் செய்கையைப் புரியாமல் பார்த்தவள்...., “என்...., எ...ன்ன...”, திணறினாள்....,

“இல்ல...., எதையோ நீ மட்டும் தனியா தேடுறியே...., நாமளும் கூட சேர்ந்து தேடுவோமேன்னுதான்...”, சிரியாமல் அவன் சொல்ல...., திகைத்துப் போனவள்...., கண்களில் அதை வெளிப்படுத்த...., வாய்விட்டு சிரித்தான் அருண்.

அவன் சிரிக்கவே...., “விளையாடாதீங்க...., நான் போகணும்...., இப்போ பென்டிரைவை தரப்போறீங்களா இல்லையா...”, செல்லமாக சிணுங்கினாள்.

அவள் சிணுங்கலில் தன்னைத் தொலைத்தவன்...., அவளை விழுங்கும் பார்வை பார்க்க...., “நான் போறேன்...”, அங்கிருந்து செல்ல முயன்றாள்.

அவள் செல்லவே....., எட்டி அவள் கையைப் பிடித்துவிட்டான். “அருண்...”, அதிர்ந்துபோய் அவனைப் பார்த்தாள்.

அவள் அதிர்ச்சியை கண்டுகொள்ளாமல்...., “வேண்டாமா...?”, ஒரு மாதிரி குரலில் வினவினான்.

“ஹாங்....”, அவன் பாவனையில்..., அவள் மூளை மொத்தமாக வேலைநிறுத்தம் செய்திருந்தது.

அவள் விழிகள் தெறித்து வெளியே விழுந்துவிடும் அளவு அவள் விழிக்க..., “பென்டிரைவை தானே வாங்க வந்த. அதைத்தான் வேண்டாமான்னு கேட்டேன். நீ என்னனு நினைச்ச...”, பிடித்திருந்த அவள் உள்ளங்கையில் பென்டிரைவை வைக்க...., அவன் இதழோரம் சிரிப்பில் துடித்தது.

அவன் சிரிப்புக்கு மாறாக...., அவள் விழிகள் கண்ணீரால் நிறைந்தது. ‘என் உணர்வுகளோடு விளையாடுகிறாரா....? இல்லையென்றால்...., இவருக்கு இது பொழுதுபோக்கா...? இவர் மனதில் என்ன இருக்கிறது...?’

‘ஒரு நேரம், நெருங்கி வந்து இம்சை கொடுக்கிறார். மறு நேரம், கேலி செய்து என் மனதை வதைக்கிறார்...., என் மனம் என்ன பாடுபடும் என்று இவருக்கு எந்த கவலையும் இல்லையா...’, மனம் அதன் போக்கில் அவனிடம் கேள்விகேட்க...., வழக்கம்போல் அவள் இதழ்கள் எதையும் ஒலிக்கவிடாமல்...., அழுந்த மூடியே இருந்தது.

ஆனால் கண்களோ கண்ணீரைச் சொரிந்தது. அவள் கண்ணீரைப் பார்த்தவன்...., சட்டென அவள் கரத்தை விடுவித்தான். ‘தான் அதிகமாக அவளோடு விளையாடிவிட்டோமோ...’, குற்றவுணர்வில் தவித்தான்.

அவளிடம் நெருங்கவும் முடியாமல்...., அவளைவிட்டு விலகியிருக்கவும் முடியாமல்....., தன் தடுமாற்றத்தை மறைக்க...., மறைக்கவும் முடியாமல்...., அவளை அதிகமாக வதைக்கிறோம் என்பது புரிந்துபோனது. ‘இப்படி ஒரு நிலைமை எங்களுக்கு மட்டும் ஏன்...?’, தனக்குள் மறுகியவன்,

முதலில் ராதாவை சமாதானம் செய்வதே முக்கியம் எனத் தோன்ற, “ராதா...., இது ஒரு சின்ன விளையாட்டு...., இதுக்குபோய்...”, அவளை சமாதானம் செய்ய முயன்றான்.

“உங்களுக்கு எல்லாமே விளையாட்டு தானா...?”, அவள் கேள்வியில் இருந்த வலி அவனை பலமாகத் தாக்கியது.

“ராதா...”, அவன் அவளை நெருங்க முயல...., கதவைத் திறந்துகொண்டு வெளியேறினாள்.

அவள் செல்வதைத் தடுக்க முடியாத தன் நிலையை வெறுத்தவாறு, செல்லும் அவளையே வெறித்திருந்தான் அருண்.

***

# மௌனம் – 14.

ராதாவிற்கு, தங்கள் அறைக்குள் நுழைந்த பிறகும்...., இதயத்தின் முரசு அடங்கவில்லை. கண்கள் கண்ணீரை வெளியேற்ற முயல, முயன்று அதை உள்ளிழுத்துக் கொண்டாள்.

மனோ அவளையே கூர்மையாகப் பார்க்கவே...., சட்டென தன்னை தேற்றிக் கொண்டவள்...., பென்டிரைவை அவனிடம் கொடுத்தாள். அவள் முகத்தில் இருந்த துயரத்தை புருவ மத்தியில் ஒரு சுளிப்புடன் பார்த்தவன்...., அவளிடம் எதையும் கேட்காமல்...., பென்டிரைவை லேப்டாப்பில் இணைத்தான்.

“மனோ...., நீங்க பாத்துட்டு ஏதாவது மாற்றம் இருந்தால் சொல்லுறீங்களா..? கொஞ்சம் தலை வலியா இருக்கு அதான்...”, அவள் குரல் கெஞ்சிற்று.

“ஓ...., டேப்லட் ஏதாவது தரவா...?”, அக்கறையாகக் கேட்டான்.

அவள் தலை மறுப்பாக ஆடவே...., “ஓகே...., நீங்க வேண்ணா ரெஸ்ட் எடுத்துக்கோங்க ராதா. நான் நித்யா கிட்டே பேசிக்கறேன்...”, அவன் சொல்ல,

அந்த நேரம் தனக்கு தனிமை மட்டும் போதும் என எண்ணியவள்...., மறுத்துக் கூறாமல் அங்கிருந்து சென்றாள். ராதா இடத்தை விட்டு நகரவே..., மனோவின் முகம் இறுகியது.

‘அருண்...’, மனதுக்குள் பல்லைக் கடித்தான்.

‘இவனுங்களை என்ன செய்தால் தகும். ஒருத்தன் புரிஞ்சுக்காமல் நடந்துகிட்டா...., இன்னொருத்தன் புரிஞ்சுக்க மாட்டேன்னு நடந்துக்கறானே. இதில் கஷ்டப் படுவது இவங்கதான்...’, மனம் பெண்களுக்காக இரக்கப் பட்டது.

இருக்கையில் இருக்கப் பிடிக்காமல்...., விருட்டென எழுந்து, அருணின் அறைக்குச் சென்றான்.

அருணின் அறைக்குச் சென்றவன்...., அவனை வெட்டும் பார்வை பார்த்தான். இவன் வருகையை எதிர்பார்த்திருந்தவன் போன்று....,

“சொல்லு மனோ...”, அமைதியாக வினவினான்.

“நான் என்ன சொல்ல...., நீதான் சொல்லணும்....”, நறுக்குத் தெறித்தாற்போல் பேசினான்.

அருண் எதுவும் பேசாமல்...., அவன் அறையில் இருந்த ஜன்னல் அருகே சென்று வானத்தை வெறித்தான். அவன் வருத்தத்தில் இருப்பது புரிய...., கோபமாக அவனிடம் கேள்விகேட்க வேண்டும் என்று வந்தவனால், அது முடியாமல் அமைதியாக அவன் முதுகை வெறித்தான்.

“அருண்...”, அழுத்தமாக அழைத்து அவனை கலைத்தான்.

“நானும் மனுஷன்தான் மனோ. எனக்கும் சில மென்மையான உணர்வுகள் எல்லாம் இருக்கு. மனசுன்னு ஒண்ணு இருக்கு, அதுக்குள் ஒரு பொண்ணோட நினைப்பும் இருக்கு...., இல்லன்னு என்னை பொய் சொல்லச் சொல்லுறியா...?”, கோபமாகத் துவங்கி...., ஆற்றாமையாக முடித்தான்.

“உன் நினைப்பு உன்னோட மட்டுமே இருந்தால் நான் எதுவும் சொல்லப்போவதில்லை அருண். ஆனால்...., அது ஒரு பெண்ணை வருத்தப்பட வைக்கிறது என்றால், அதை நான் அனுமதிக்க முடியாது. அதுவும்...., ஐயாவுக்கு துரோகம் செய்யும் எந்த வேலையையும் என்னால் செய்யவே முடியாது”, திட்டவட்டமாக மறுத்தான்.

“நீ சொல்வது எனக்குப் புரியாமல் இல்லை மனோ. நானும் என்னை கட்டுப்படுத்த வேண்டும் என்றுதான் நினைக்கிறேன் ஆனால்...”, அவன் பக்கம் திரும்பியவன்...., எச்சில் கூட்டி விழுங்கி தன்னைத் தேற்றிக் கொண்டு,

“கண்டிப்பா எனக்கு புரியுது மனோ. இனிமேல் கவனமா நடந்துக்கறேன். என்னையும் அறியாமல் ராதாவிடம் நான் தடுமாறிப் போய்விடுகிறேன் என்பதுதான் உண்மை...”, மனோவின் கண்களைப் பார்த்து உரைத்தான்.

“சாரி அருண்...., உனக்கு நான் சொல்ல வேண்டியதே இல்லை. இருந்தாலும் சொல்கிறேன்...., பாத்து நடந்துக்கோ...., இந்தமுறை நமக்கு அடி விழுந்தால்...., அது மரண அடியாகத்தான் இருக்கும்...”, சொன்னவன், அருணின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து

வெளியேறினான்.

மனோ சொல்வதில் இருந்த உண்மை தன்னைத் தாக்க...., ஆழ்ந்த மூச்சுக்கள் எடுத்து தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டுவந்தான் அருண்.

அருணிடம் வீராப்பாக பேசிவிட்டாலும்...., மனோ மனதுக்குள் நொந்துதான் போனான். இதையே சிந்தித்தால் வலிகள் மட்டுமே மிஞ்சும் என்பது புரிய...., ராதா செய்து வைத்திருந்த வேலையில் தன்னை மூழ்கடித்துக் கொண்டான்.

நேரம் பதினொன்றைக் கடக்க...., கழுத்தைத் தேய்த்தவாறு நிமிர்ந்து பார்க்க....,

ராதா தன் மேஜையில் தலை கவிழ்ந்து படுத்திருக்க...., அனிதா கணினியின் திரையைப் பார்த்தவாறே இருந்தாள். அவள் இருந்த தோற்றமே, அவள் வேலை செய்யவில்லை என்பதை அவனுக்கு உணர்த்த, ராகவனுக்கு அழைத்து...., மூன்று கப் டீ கொண்டுவரச் சொன்னான்.

ராகவன் சிறிய ப்ளாஸ்கில் டீயும், மூன்று கப்பும் கொண்டுவர...., அவனை அனுப்பிவிட்டு, பிளாஸ்க் மற்றும் கப்பை எடுத்துகொண்டு அவர்கள் அருகில் சென்றான்.

அங்கிருந்த மற்றொரு இருக்கையில் அவன் அமரவே...., ராதா வேகமாக நிமிர்ந்து அமர்ந்தாள். அனிதாவோ அவனைப் பார்க்காமல் முகத்தை கணினியிடமே திருப்பியிருந்தாள்.

டீயை மூன்று கோப்பைகளில் ஊற்றியவன்...., இரண்டு கைகளில் இரண்டு கோப்பையை எடுத்தவன்...., ஒன்றை ராதாவிடமும், மற்றொன்றை அனிதாவிடமும் கொடுத்தான்.

ராதா சட்டென வாங்கிக் கொள்ள...., அனிதாவோ..., “எனக்கு வேண்டாம்..”, பிடிவாதமாக உரைத்தாள்.

“அனிதா ப்ளீஸ்...”, மேலே மறுக்க முடியாதவாறு அவன் முகம் இருக்க...., கோப்பையை கை நீட்டி பெற்றுக் கொண்டாள்.

மனோவின் செய்கையில், சட்டென அவளுக்கு ராஜுவின் நினைவு அதிகமாகத் தாக்க...., ‘அதெப்படிடா, அக்கறை காட்டுவதில் மூணுபேருமே ஒரே மாதிரி இருக்கீங்க...’, தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

அதிலும்...., ராஜுவோடு அவள் இருந்த கடந்த நாட்களை அவளுக்கு நினைவூட்டியது. முதல்நாள் அவளை தன் புல்லட்டில் ஏற்றிச் சென்றவன்...., இசிஆர் சாலையில் அன்று வெயில் அதிகமிருக்கவே...., ஒரு இளநீர் கடையில் வண்டியை நிறுத்தினான்.

அவள் கேள்வியாக பார்க்கும் பொழுதே..., “ரொம்ப வெயிலாஇருக்கு. அங்கே போனாலும் ஸ்பெஷலா எதுவும் கிடைக்காது அதான்...”, சொன்னவன், அவளுக்கு ஒரு இளநீரை வாங்கிக் கொடுத்தான்.

அப்பொழுது ஏனோ..., ‘நீங்கள் குடிக்கவில்லையா?’ என்று கேட்கவேண்டும் என்று கூட அவளுக்கு தோன்றவில்லை. இல்லையென்றால்...., பழக்கமில்லாத வெயிலில் அவள் நாவு வரண்டிருந்ததால்..., தன் தாகம் மட்டுமே பிரதானமாகத் தோன்றியதோ என்னவோ...

ஆனால் அவனோ...., அத்தோடு நிறுத்தாமல்...., அவள் குடித்து முடித்தவுடன், இளநீர் வழுக்கை எடுத்து கொடுத்ததாகட்டும், அவள் கையில் இருந்து ஓட்டை வாங்கி ஓரமாகப் போட்டதாகட்டும்...., அனைத்திலும் ஒரு தனி அக்கறையைக் காட்டினான்.

அத்தோடு நிறுத்தாமல்...., அந்த நேரம் ஒரு காதல் ஜோடியில்..., பின்னால் அமர்ந்திருந்த காதலி முகம் முழுக்க துப்பட்டாவில் மூடியிருக்கக் கண்டவன்...., “அனிதா...., நீங்களும் அந்த பொண்ணை மாதிரி துப்பட்டாவை போட்டுக்கோங்க...., அப்போ வெயிலே தெரியாது...”, அதன் சூட்ச்சுமம் தெரியாமல், சாதாரணமாக உரைத்தான்.

அனிதாவிற்குத்தான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. “ராஜு..., அப்படியொண்ணும் பெருசா வெயில் அடிக்கலை...., வாங்க போகலாம்...”, அவனை அழைத்துக்கொண்டு சென்றாள்.

ஏனோ அவன் அக்கறை அவளுக்கு பிடித்தது.

அப்பொழுது அவர்கள் வேலை செய்யும் இடம் வந்துவிட, அவளை

முதல் தளத்தில் சுற்றிப் பார்க்கச் சொன்னவன், அங்கே வேலை செய்யும் ஒரு பையனை அழைத்து, அவளுடன் இருக்குமாறு பணித்துவிட்டு அங்கிருந்து சென்றான்.

சைட்டுக்கு வந்தவுடன், வேலை எவ்வளவு முடிந்திருக்கிறது என்பதை கவனிப்பதுதான் அவனது முதல் வேலை. அன்றும் அதை சரியாகச் செய்தான். அடுத்த ஒரு மணி நேரத்தில் அவளிடம் வந்தவன்...., அவளுக்கு ஏதாவது உதவி வேண்டுமா என்றும், அவள் எடுக்கும் புகைப்படங்கள், அவள் எழுதும் குறிப்புகளை ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

அவளுக்கு சில குறிப்புகள் கொடுத்து உதவவும் செய்தான். அன்று மதியம் அவர்கள் மீண்டும் அலுவலகத்திற்கு வந்தபொழுது..., மனோவும், அருணும் அவளைப் பார்த்த பார்வை...., அவளுக்கு இப்பொழுதும் நினைவில் இருக்கிறது.

மனோவும் அருணும் அவளை சங்கடமான ஒரு பார்வை பார்க்க, ராஜுவை இருவரும் முறைத்தார்கள். சம்பிரதாய கேள்விகளுக்குப் பிறகு, சாப்பிடப் போகலாம் என்று பிரிந்தாலும்...., அவர்கள் மனதின் ஓரம் அரிப்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

அதே நேரம் நித்யாவும் ராதாவும்...., தாங்கள் அறையில் செய்திருக்கும் மாற்றத்தை அவளை வந்து பார்க்கச் சொல்லவே, மேலே எதையும் சொல்லவோ, கேட்கவோ முடியாமல் சென்றார்கள்.

அறைக்குள் நுழைந்தவுடன்..., அன்றைய நாள் பற்றியும், வேலை இடத்தைப் பற்றியும் நித்யா கேட்க, அப்பொழுது ராதா...., “எப்படி போயிட்டு வந்த...? ராஜுதான் கார் ஓட்டினாரா...?”, இல்லையென்றால் கால் டேக்ஸியா..?”, பொதுவாகக் கேட்டாள்.

அதற்கு அவள் சொன்ன பதிலில் அவர்கள் சற்று திகைத்தாலும் உடனே தங்களை சமன் படுத்திக் கொண்டார்கள். இன்றைய காலத்தில் ஒரு ஆணும் பெண்ணும் இருசக்கர வாகனத்தில் வெளியே செல்வது ஒன்றும் அவ்வளவு பெரிய தவறாக அவர்களுக்குத் தோன்றவில்லை.

இவர்கள் அனைவரும் அதை சாதாரணமாக எடுத்துகொள்ள, ஆண்கள் இருவரும்தான் அதை பெரிய விஷயமாக கருதினார்கள். ஆனால் அதை ராஜுவிடம் சொல்லி, புதிதாக எந்த குழப்பத்தையும் அவன் மனதில்

விதைக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை.

எனவே அமைதியாக இருந்தார்கள். கார் அமைதியாக அவர்கள் வீடுநோக்கிச் செல்ல, “மனோ..., நாம நினைத்த மாதிரி...., அனிதா அப்படியொன்றும் மோசமானவ கிடையாது இல்ல...”, அருண் மனோவிடம் கேட்டான்.

“நீ நினைத்த மாதிரின்னு சொல்லு....”, சொன்னவன் ஓரக்கண்ணால் ராஜுவை நோட்டமிட்டான்.

ராஜுவின் அமைதி மனோவிற்கு சரியாகப் படவில்லை. “என்ன ராஜு..., அமைதியா இருக்க...?”, அவனை ஆழம் பார்த்தான்.

“மனோ...., நீ ஏன் அவங்களையும் நம்மளோட சாப்பிட கூப்பிடலை...., அவங்களும் நம்மளோடவே இருந்தால் நல்லா இருக்கும் இல்ல....”, குழந்தையின் ஆர்வம் அவனிடம்.

அருண் மனோவை கொஞ்சம் கலவரமாகப் பார்க்க, அருணுக்கு பார்வையால் தைரியம் சொன்னவன்...., “ராஜு..., அவங்களும் நம்ம கம்பெனியில் வேலை செய்யும் மத்த ஸ்டாஃப்புங்களைப் போலத்தான், அப்படியிருக்கும்போது...., இதென்ன புதுசா...”, முளையிலேயே எந்த எண்ணத்தையும் கிள்ளியெறிய முயன்றான்.

“ம்....,” ஏனோ ராஜுவால் இதை ஒத்துக்கொள்ள முடியவில்லை என்பதை அவனது உறுமலே சொன்னது.

தான் உணரும் இந்த இதமான மனநிலையை...., அவர்களுக்கு எப்படி சொல்லி புரியவைக்க என்று தெரியாமல் அமைதியானான். ஆனாலும் ராஜு சந்தோசமாக இருப்பது அவனது செய்கையிலே தெரிந்தது.

வீட்டிற்கு போனவுடன் தாயை அழைத்து, அவர் மடியில் படுத்துக் கொண்டான். படுத்தவன்..., “அம்மா..., அப்படியே தலையை கோதி விடுங்க”, குழந்தையென கொஞ்சிக் கொண்டு...., இதமான மனநிலையில் கண் மூடினான்.

அவன் செய்கையையே மனோவும் அருணும் பார்க்க...., ‘என்ன...?’, என்று ராஜுவின் தாய் பார்வையாலேயே வினவ...., ‘நீங்களே கேளுங்க’, என்று மனோவும் பார்வையாலேயே பதில் கொடுத்தான்.

“என்னப்பா ராஜு...., சாப்பிடப் போகாமல்...., திடீர்னு அம்மா மடியில் படுத்துட்ட..”, இதமாக அவன் தலையை வருடியவாறு கேட்டார்.

“ஏன்னு தெரியலம்மா...., மனசெல்லாம் ஒரே சந்தோசம். இதுவரைக்கும் இப்படி சந்தோசமாக இருந்ததே இல்லை என்பது மாதிரி இருக்கு..”, மனதை மறைக்காமல் சொன்னான்.

“ஆமா இருக்கும் இருக்கும்....., அதான்.... ஒரு...”, “அருண்...”, அருணின் கேலியை சட்டென முடிவிற்கு கொண்டுவந்தான் மனோ.

“என்ன அருண்...., என்னமோ சொல்ல வந்த...?”, ராஜுவின் தாய் விடாமல் கேட்டார்.

“அம்மா...., அருணுக்கு வேற வேலை இல்லை....., சும்மா எதையாவது தேவையில்லாமல் கிளறுவான். நீங்க ராஜுவையே கேளுங்க. அவன் மனசில் என்ன இருக்குன்னு அவன்தானே சொல்லணும்....”, அருணிடம் கண்டிக்கும் பார்வை வீசியவாறே சொல்லி முடித்தான்.

“ஓ...”, எதையோ அவர்கள் ராஜுவிடம் மறைக்க முயல்வதை புரிந்துகொண்டார்.

“என்னன்னு சொல்லுப்பா...., சொன்னா அம்மாவும் சந்தோசப் படுவேன் இல்ல...”, ராஜுவை தூண்டினார்.

“நானும் அதைத்தான் யோசிக்கிறேம்மா. அம்மா...., அனிதா என்னோட இருக்குறதால இருக்குமா...?”, அவரிடமே சந்தேகம் கேட்டான்.

“அனிதா...”, கேள்வியாக மனோவைப் பார்த்தார்.

அதே நேரம் மனோ, அருணின் பெற்றவர்களும் வந்துவிடவே...., “இப்போ நம்ம கம்பெனியில் புதுசா நித்யா, ராதா, அனிதான்னு மூணுபேர் சேர்ந்திருக்காங்க. நம்ம ஐயாவோட ரெக்கமண்டேஷன் தான்.

“இன்டீரியர் டிசைனிங்படிச்சு முடிச்சு இருக்காங்க. இன்னைக்கு அனிதா சைட்டைப் பார்க்க ராஜுவோட போயிருந்தாங்க அதான்...”, தகவல்போல் உரைத்தான் மனோ.

“புல்லட்டில் போயிருந்தாங்கன்னு சொல்லாமல் விட்டுட்டியே...”,

எடுத்துக் கொடுத்தான் அருண்.

“நிஜமாவாடா...”, கண்களில் ஆர்வம் மின்ன வினவினார் மனோவின் தாய். ஆர்வமாக அவன் அருகில் சோபாவில் அமர்ந்து கொண்டார்கள்.

“ம்ச்...., அம்மா...., ரொம்ப கற்பனையை வளர்க்காதீங்க. ஐயாவுக்காகத்தான்..., அதுவும் வரப்போறவங்க பொண்ணுங்கன்னு தெரியாமலே வாக்கு கொடுத்துட்டோம்...”, அலுத்துக் கொண்டான் மனோ. சற்று கவலையாக ராஜுவைப் பார்த்தான்.

“ஐயா, தெரியாமலா செஞ்சு இருப்பார். அவர்கிட்ட பேசுனியா...?”, கண்களில் சந்தோசம் மின்ன...., ஆர்வமாக கேட்டார் அருணின் தாய்.

“ம்...”, முனகினான் மனோ.

“என்னப்பா சொன்னார்...?”, அருணின் தாயும், ராஜுவின் தாயும் ஒரேபோல் வினவினார்கள்.

“அவங்க என்னோட பொண்ணு மாதிரி...., பத்திரமா பாத்துக்கோங்க. உங்கமேல எனக்கு நம்பிக்கை இருக்குன்னு சொன்னார்...”, குரலை உயர்த்தினான் மனோ. அதே நேரம் ராஜுவை கண்டிக்கும் பார்வை பார்க்கவும் மறக்கவில்லை.

பெற்றோரின் முகம் வாடிவிட்டது. “சரி வாங்க சாப்பிட போகலாம்....”, தங்கள் விதியை நொந்தவாறே எழுந்து சென்றார்கள்.

ராஜுவும் அவர்களோடு செல்ல..., இறுதியாக பின்தங்கியவன்...., மனோவின் கரத்தைப் பற்றிக் கொண்டான். “மனோ...., நான் ஏதாவது தப்பா சொல்லுறனா...? ஏன் ஒரு மாதிரியா இருக்க...., நீ சொன்னா நான் சரியா புரிஞ்சுப்பேன்...”, மனோவின் பேச்சு அவனை பாதித்தது.

“செய்யிறதெல்லாம் செஞ்சுட்டு எப்படி கேக்குறான் பாரு...”, நக்கலடித்தான் அருண்.

“என்னடா செய்தேன்...?”, அப்பாவியாக கேட்டான் ராஜு.

“இப்படி பால் வடியிற மூஞ்சியை வச்சுட்டுத்தானேடா எல்லாம் செய்யிற...”, அவன் குரலில் சிறு பொறாமையும் வழிந்தது.

“ராஜு...., உனக்கு ஒண்ணுமட்டும் சொல்லுறேன். எப்பவும் நாம மூணுபேரும்தான் நிரந்தரம். நமக்கு நடுவில் நாலாவது ஆள் எப்பொழுதும் நிரந்தரம் கிடையாது, புரியுதா...”.

“தெளிவா சொல்லு மனோ...”, தலையை சொறிந்தவாறே கேட்டான்.

“என்னடா திடீர்ன்னு அம்பி ஆயிட்ட. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி ரெமோவாட்டம் கனவில் மிதந்துட்டு இருந்த. எப்படியோ, அந்நியன் ஆகாமல் இருந்தா சரி...”, அருண் சிரித்தான்.

உடன் சேர்ந்து சிரித்த மனோ...., சூழ்நிலையின் கனம் குறைவதை உணர்ந்தான். “ராஜு...., நீ நீயாவே இரு...”, அவன் தோளில் கைபோட்டு அழைத்துச் சென்றான்.

‘அனிதா என்ன நினைக்கிறான்னு தெரியலை...., இவன் என்னன்னா....., ஆண்டவா, எல்லாத்தையும் நல்லபடியா முடித்துவை...., அவளிடம் பேசணும்’, வேண்டுதலோடு பின்தொடர்ந்தான்.

“என்ன ரெண்டுபேரும் என்னை மாதிரி ஆயிட்டீங்க...., கையில் இருக்கும் டீ, ஏடு வைக்கிற அளவுக்கு அப்படி என்ன யோசனை...”, ராதாவின் குரல், அனிதாவையும் மனோவையும் நடப்புக்கு அழைத்து வந்தது.

அனிதா அந்த டீயை அப்படியே ஒதுக்கிவிட, மனோ அதை ஒரே மூச்சில் வாயில் கவிழ்த்தான். அவன் செய்கையை அவர்கள் வித்தியாசமாக பார்க்க....,

“சில விஷயம் பாக்க ரொம்ப அழகா இருக்கும். ஆனா பழகினா அதிர்ச்சியா இருக்கும். இப்போ நடந்த விஷயம் மாதிரி...”, கையில் இருந்த டீ கப்பை அவர்களிடம் உயர்த்திக் காட்டியவன், இருவரையும் குறிப்பாய் பார்த்தவாறு அங்கிருந்து அகன்றான்.

அவன் சொல்ல வந்ததன் பொருள் புரிந்தும், புரியாமல் திகைப்பாய் அவன் முதுகை வெறித்தார்கள் இருவரும்

***

# மௌனம் – 15.

“மனோ...., காலையில் நான் போட்ட அந்த டிசைனை விட, இது அழகா இருக்கா பாருங்க. எனக்கு என்னமோ இது நல்லா இருக்கும்னு தோணுது”, சொன்னவள் அவன் அருகில் சென்று தன் லேப்டாப்பை காட்டினாள்.

வேகமாக அதில் பார்வையை ஓட்டியவன்...., “நித்யா...., ரொம்ப அழகா இருக்கு. அதிலும் இந்த டார்க் கலரில் வரும் ‘ஷேட்’ ரொம்ப அட்டகாசம். இப்போல்லாம் நாங்க அசருற அளவுக்கு டிஸைன் போட்டு அதகளம் பண்ணிடுறீங்க...”, மனமார அவளை பாராட்டினான்.

பார்வை அவளை மயிலிறகாய் வருடிச் சென்றது. அவள் தன் கண்களை சந்திக்கும் முன்னர்...., பார்வையை மாற்றிக் கொண்டான். அவள் கவனிக்காமல் இருக்கும் வேளைகளில்...., நித்யாவை ரசிப்பது மனோவுக்கு மிகவும் பிடிக்கும்.

அதையே இப்பொழுதும் செய்தவன்...., அவளது வேலையிலும் தனிக் கவனம் செலுத்தினான்.

அவன் பாராட்டை மனமார ஏற்றுக் கொண்டவள்...., “இதுக்கு இவ்வளவு செலவு ஆகலாம்னு ஒரு கணக்கு போட்டிருக்கேன், அதையும்...”, சற்று தயங்கினாள்.

“இதென்ன கேள்வி நித்யா...., முதல்ல அதைக் காட்டுங்க...”, வேகமாக தன் அருகில் இருந்த இருக்கையை இழுத்துப் போட்டு அவளை அதில் அமரச் சொன்னான்.

சட்டென அதில் அமர்ந்தவள்...., அவன் முன்னால் இருந்த லேப்டாப்பில்...., சற்று எட்டி...., தான் வைத்திருக்கும் ஃபோல்டரை ஓபன் செய்தாள். சட்டென அது ஓபன் ஆகாமல் போகவே... “இதில் தானே ‘சேவ்’ செய்து வைத்திருந்தேன்...”, தனக்குத் தானே கேட்டவள்...., இன்னும் கொஞ்சம் முன்னால் சாய்ந்து தேடினாள்.

முதலில் அவளது லேப்டோப்பிலேயே கவனமாக இருந்தவன்...., அவளது முடி காற்றில் பறந்து அவன் முகத்தில் விழவே, அவன் கவனம் சிதறியது. தன் முகத்தில் விழுந்த முடிக்கற்றைகளை, ஒதுக்க கை

தூக்கியவன், அது முடியாமல்....., கைகளில் அதை ஏந்த முயன்றான்.

அது அவன் கைகளுக்கு அகப்படாமல் ஆட்டம் காட்ட...., அவள் தலை குளித்திருந்ததால், அவள் முடியில் இருந்து வந்த ஷாம்பூ வாசம் அவன் நாசிக்குள் நுழைந்து அவனை இம்சை செய்தது.

தன் வாழ்நாளில் எந்தப் பெண்ணையும் அவன் இவ்வளவு நெருக்கத்தில் பார்த்ததில்லை. அவள் சிகைக்குள் புதைந்துபோகும் வேட்கை எழுந்தது. தன்னை கட்டுப்படுத்தியவன்...., இமைகளை மூடி...., அவள் கூந்தலின் ஸ்பரிசத்தை ரசித்தான்.

“இதோ...., இதுதான் மனோ...., பாத்துட்டீங்களா? ஓகேயா இருக்கா...?”, கேட்டுக் கொண்டிருந்தவள்...., அவனிடமிருந்து பதில் இல்லாமல் போகவே...., அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

அவன் அமர்ந்திருந்த தோற்றம்...., அவள் இமைகளை படபடக்க வைத்தது. “மனோ...”, அழைக்கத்தான் எண்ணினாள். ஆனால் அவன் விழித்திருக்கும்போழுது, ஒருவித கவனமுடனே செயல்படுவதுபோல் அவளுக்கு உணர்த்தும் அவனது முகபாவம்....,

இப்பொழுது மிகுந்த இயல்போடு...., ஒருவித பரவச நிலையில்...., அவனது உள்மனதை பிரதிபலிக்கும் பிம்பமாக இருந்ததை கலைக்க மனமில்லாமல் ஆசையாய் நோக்கினாள்.

எவ்வளவு நேரம் தங்கள் லோகத்தில் இருந்தார்களோ...., மனோ இமைகளை பிரிக்கப் போவது தெரியவே...., சட்டென பார்வையை லேப்டாப்பின் பக்கம் திருப்பிக் கொண்டாள்.

இதயம் அதன் உச்ச வேகத்தில் துடித்தது. மூச்சடக்கி காத்திருந்தாள். அவன் மூச்சுக்காற்று அவள் முதுகில் விழும் உணர்வு. இதற்குமேல் இந்த நிலையில் இருக்க முடியாது என்பது புரிய, பட்டென தன் இருக்கையில் அமர்ந்து கொண்டாள்.

இமைகள் பட்டாம்பூச்சியாய் சிறகடிக்க...., தயக்கமாக அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவனோ...., எதுவுமே நடவாததுபோல்....., அவள் லேப்டாப்பில் பார்வையை பதித்திருந்தான். எதையோ எதிர்பார்த்து ஏமாந்த ஒரு உணர்வு.

படபடக்க வைத்த மெல்லிய உணர்வுகள் அடங்கிவிட...., அவனையே வெறித்தாள்.

அவனோ...., “வாவ்...., ரொம்ப அருமையா செய்திருக்கீங்க நித்தி. எஸ்டிமேட் கூட ரொம்பவே சரியா இருக்கு. நான் போட்டால் எப்படி வந்திருக்குமோ அதே ரேட் தான் போட்டிருக்கீங்க...”, மறந்தும் பார்வையை அவள் பக்கம் திருப்பவில்லை.

“ஓ...”, அவளது ஓ அதிருப்தியாய் வெளிவந்தது. ஆனால் அவனது “நித்தி” விளிப்பு இனித்தது.

“சரி நீங்க பாருங்க...., நான் அருணை பாத்துட்டு வரேன். அவன்கிட்டே ஒரு விஷயத்தை முடிக்க சொல்லியிருந்தேன்...”, தன் அலைபேசியை எடுத்துக் கொண்டு அங்கிருந்து விரைந்தான்.

சுள்ளென்ற கோபம் தலைக்கு ஏறியது. அதை லேப்டாப்பிடம் காட்டியவள்..., அதை அறைந்து சாத்திவிட்டு தூக்கி வந்தாள். அவள் அறைந்து சாற்றிய சத்தத்தில் நிமிர்ந்து பார்த்த ராதா...., அங்கே நித்யா மட்டும் தனியாக இருப்பதைப் பார்த்தவள்....,

“நித்தி...”, குரல் உயர்த்தி அழைத்தாள்.

சோர்ந்துபோய் எழுந்து வந்தாள் நித்யா. அவள் முகம் கசங்கியிருப்பதைப் பார்த்தவள்...., “என்ன ஆச்சு நித்தி...?”, அவள் கரத்தை அழுத்தினாள்.

“உங்களுக்கு இருக்கும் அதே பிரச்சனை, இப்போ எனக்கு...”, தலையில் கை வைத்துக் கொண்டாள்.

“மனோ ஏதாவது சொன்னாரா...?”, விடை தெரிந்துகொண்டே கேட்டாள்.

“சொல்லி இருப்பாருன்னு நீ எதிர்பார்க்குறியா...?”, வெடுக்கென கேட்டாள்.

“இதுக்கு என்னதான் முடிவு நித்தி. நாமதான் நம்ம மனசுக்குள் ஆசை வச்சுகிட்டு இருக்கோமா...? அவங்களுக்கு அப்படியொரு எண்ணமே இல்லையோ...”, கவலையாகக் கேட்டாள்.

“ஆமா ஆசை இல்லாமத்தான்...., ராஜு அனிதா பின்னாடி அப்படி சுத்துறாரா...? அருண் உன்னை பார்வையாலேயே சாப்பிடுறாரா...?”, நித்யாவின் கேள்வியில் இருந்த உண்மை அவளை சுட்டது.

“அதென்ன எங்க ஆளுங்களை மட்டும் சொல்லுற...., மனோவைப் பத்தி விட்டுட்ட...., ராகவன் உன்கிட்டே நெருங்கினாலே, மனுஷன் பொறாமையில் வெந்துபோறார. நீ கிட்டே போனாலே...”, வேகமாக அவள் வாயை அழுந்த மூடினாள்.

முகம் சிவந்து கிடந்தது. “சரி சரி...., மனோ..., நான் நெருங்கினாலே உறைஞ்சு போய்டுறாரா...? போதுமா...”, சிடுசிடுத்தாள்.

அவள் முகத்தை ஒற்றை விரலில் நிமிர்த்திய ராதா...., “இப்போ எதுக்கு இந்த கோபம்...”, தலை ஆட்டி கேட்டாள்.

அவளிடம் என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதியானாள். முகத்தை திருப்பிக் கொண்டவள்...., “முதல்ல வேலையை பாரு...., கதை கேக்க வந்துட்டா...”, அவள் கையை வெடுக்கென தள்ளிவிட்டு திரும்பிக் கொண்டாள்.

மனதில் பொங்கிய கோபம் அடங்க மறுத்தது. டப் டப்பென லேப்டாப் பட்டனை அவள் அழுத்த...., “ஏய்...., புது லேப்டாப்புடி...., நீ பாட்டுக்கு உடைச்சுடாதே. அதுவும் உன் ‘அவர்’ ஸ்பெஷலா வாங்கி கொடுத்தது வேற...”, கண்ணை சிமிட்டி ராதா கேலி செய்தாள்.

“ஆமா இதுக்கு மட்டும் குறைச்சல் இல்லை...”, முணுமுணுத்தவள் கவனம் கண்டிப்பாக வேலையில் இருக்கவில்லை. லேப்டாப்பை ஆசையாக வருடியவள்...., ‘எல்லாத்தையும் பாத்து பாத்து செய்யிற நீங்க...., ஏன் என் மனசை மட்டும் புரிஞ்சுக்காமல் இருக்கீங்க...’, மானசீகமாக அவனிடம் கேள்வி கேட்டாள்.

இந்த லேப்டாப்பை அவன் வாங்கித் தந்த சூழல் நினைவிற்கு வந்தது. வழக்கமான ஒரு மாலை...., அனிதா வந்த வேகத்தில், நித்யாவின் முன்னால் இருந்த டெஸ்க்டாப் மானிட்டரை தன்பக்கம் திருப்பிக் கொள்ள,

“அனி...., என்ன செய்யிற நீ...? வேலை பாதியில் நிக்கிது...., ஏய்...”, நித்யாவின் எந்த புலம்பலையும் கேட்டுக் கொள்ளாமல்...., தான்

அவர்கள் வேலையில் செய்ய முயன்ற மாற்றங்களை பட்டியலிடத் துவங்கினாள். அத்தோடு சில கருத்துக்களையும் இணைத்துக் கொண்டிருந்தாள்.

“அனி...., வழக்கமா ராதா கிட்டே தானே வம்புக்கு போவ...., இப்போ என்ன புதுசா...”, டெஸ்க்டாப் ஸ்க்ரீனை தன்பக்கம் திருப்ப முயன்றவாறு கேட்டாள்.

“இப்போ அவகிட்டே வம்புக்கு போனேன், அவ்வளவுதான்...., மறுநாள் என் பாதி உயிர் போய்டும். அதோட, நான் என் ஆள் கூட நிம்மதியா இருக்கணும்னு எனக்கு ரொம்ப ஆசை...”, ராதாவையும் வம்பிழுத்தவாறே வேலையை தொடர்ந்தாள்.

“அனி...., இப்போ நான் உன் பேச்சுக்கு வந்தேனா...? நீ ஏண்டி என்னை வம்புக்கு இழுக்குற...”, ராதா பரிதாபமாக கேட்டாள்.

“அம்மாடி...., கொஞ்சம் மெதுவா பேசு. உன் ஆளு காது பாம்பு காது, நீ பேசுறதை கேட்டாலே என்மேல் பாஞ்சுடுவார்...”, பயந்தவள்போல் சொன்னாள் அனிதா.

அனிதாவிற்கு கொஞ்சம் கூட பயமே கிடையாது. அவள் பேசவேண்டும் என்று எண்ணுவதை பட்டென சொல்லிவிடுவாள். அனிதாவின் வாய்க்கு பயந்து ராதா பதட்டமாக திரும்பிப் பார்க்க...., அவள் எண்ணியதுபோலவே, அருண் இவள் பக்கம்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

சட்டென பார்வையைத் திருப்பிக்கொண்டு அமைதியாகிவிட்டாள். “அனி...., உனக்கு வர வர வாய் ரொம்ப ஜாஸ்த்தி ஆயிடுச்சு. இது என்ன பேச்சு, அவங்க காதில் விழுந்தா என்ன நினைப்பாங்க...?”, அடிக்குரலில் கண்டித்தாள்.

“உங்களுக்கெல்லாம் பயம்...., எனக்கு அது இல்லை...”, அலட்சியமாக சொல்லிவிட்டு பேசாமல் இருந்தாள்.

“அனி...., எல்லாம் விடு...., முதல்ல நான் இதுவரை செஞ்ச வேலையை சேவ் பண்ணறதுக்காவது ஒரு நிமிஷம் அதை தாயேன்...”, அவள் குரல் கெஞ்சிற்று.

“சீ போ…”, அவளை தள்ளியவள்…., பிடிவாதமாக இருந்தாள். அனிதாவின் பிடிவாதம் உணர்ந்து நித்யாதான் விட்டுகொடுக்க வேண்டியதாகப் போயிற்று.

ஆனால் அவர்கள் திசை பக்கமே பார்வையை திருப்பாமல் இருந்த மனோ மறுநாள் காலையில், கையில் ஒரு புது லேப்டாப்போடு வந்து அவள் கையில் கொடுத்துவிட்டு, “இது உங்களுக்குத்தான். பாஸ்வர்ட் போட்டு லாக் பண்ணி வச்சுக்கோங்க…”, அனிதாவை ஒரு பார்வை பார்த்தவாறே அவன் சொன்னபொழுது, நித்யாவால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

மனோ அங்கிருந்து நகரவே…., “இவ ஆளைவிட பயங்கரமாவுல்ல இருக்கார். ஹம்…., எப்படியோ என் புண்ணியத்தால் உனக்கு ஒரு லேப்டாப் கிடைச்சுடுச்சு. ஆனா நீ எனக்கு நன்றியெல்லாம் சொல்லவேண்டாம்…”, அனிதா பாவ்லா காட்ட…., நித்யா அவள் முதுகில் இரண்டு மொத்து மொத்தினாள்.

மொத்திவிட்டு திரும்பிப் பார்க்க…, மனோவின் பார்வை அவளை வருடி விடைபெற்றது. சிலிர்த்த நித்யா, நினைவில் இருந்து கலைந்து…., ஆசையாக அவளது லேப்டாப்பை தடவிக் கொடுத்தாள்.

இப்பொழுதே மனோவைக் காணவேண்டும் என்பதுபோல் இருந்தது. எழுந்து சென்றாள். வேகமாக அருணின் அறைக்கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைந்தாள்.

“சொல்லுங்க நித்யா…”, வரையும் பலகையில் இருந்து முகத்தை நிமிர்த்தியவாறு அருண் கேட்டான்.

“இல்ல சும்மாதான்…”, சொன்னவளின் பார்வை அந்த அறையை முழுதாக வலம் வந்தது.

“ஏதாவது வேணுமா…? என்ன தேடுறீங்க…?”, அவன், அவள் அருகில் வரும் முன்னர், அறையிலிருந்து அகன்றாள்.

ஒற்றை தோள் குலுக்கலோடு வேலையில் கவனம் செலுத்த போனவன்…., “ராதா….”, நித்யா அவள் அறையில் இல்லை, யாரையோ தேடுகிறாள்…, அப்படியென்றால் மனோவும் அங்கே இல்லை….., யாஹூ…”, குதித்தவன், கையில் இருந்த பென்சிலை டேபிளில்

வைக்கும் பொறுமை கூட இல்லாமல், தூக்கி வீசிவிட்டு ஓடினான்.

நித்யாவோ, மனோ எங்கே என்று தேடியவாறு வேகமாக வந்தாள். அவள் அவசரமாக வருவதைப் பார்த்த ராகவன்...., "நித்யா...., இவ்வளவு அவசரமா எங்கே போறீங்க...", அவளுக்கு ஏதாவது உதவி தேவையோ என்ற எண்ணத்தில் கேட்டான்.

"மனோ..., மனோ இங்கே வந்தாரா...? ஒரு அவசர போன்கால், அதான்...", வாய்க்கு வந்த காரணத்தை உரைத்தாள்.

மனோவிற்கு வரும் அழைப்புகள் அனைத்தும், ராகவனைத் தாண்டித்தான் செல்லும் என்ற உண்மையை மறந்தவளாக அவள் உரைக்க...., அதைக் கண்டுகொண்டவன்...., "ஓ..., யார்..., அந்த தேவன் சாரா...? அப்போ முக்கியமான விஷயமாகத்தான் இருக்கும்...", விஷமமாக உரைத்தான்.

"அண்ணா...?", ஒரு வேகத்தில் அழைத்துவிட்டாள். அழைத்த பிறகுதான் தான் என்ன சொன்னோம் என்பதையே உணர்ந்தவள்....,

நாக்கை வேகமாக கடித்துக் கொண்டு...., "சாரி ராகவன்...., அது ஒரு ஃப்ளோவில் வந்துடுச்சு...", அவன் எப்படி எடுத்துகொள்வானோ என்பதால் தயங்கினாள்.

"எனக்கு இப்படி ஒரு அழகான மூணு தங்கச்சிகள் இருப்பது பிடிச்சிருக்கு. என்னை அப்படியே கூப்பிடுங்க...", ஒரு அண்ணனின் வாஞ்சையோடு கண்கள் கலங்க சொன்னான்.

"அதான் தங்கச்சின்னு சொல்லிட்டீங்களே...., பிறகு என்ன இ'ங்க'...., பேசாமல் பெயரை சொல்லி கூப்பிடுங்க....".

"சரி நித்யா. மனோ அனேகமா அந்த பால்கனியில் தான் நிப்பாருன்னு நினைக்கிறேன். ஏதாவது டென்ஷனா இருக்கலாம். போய் பாரு...., தேவன் ரொம்பநேரமா லைனில் காத்துட்டு இருக்கார்...", வந்த சிரிப்பை வாய்க்குள் புதைத்துக் கொண்டான்.

"அண்ணா...., அது சும்மா...., என்னன்னா...", அவனிடம் எப்படிச் சொல்லவென்று தெரியாமல் தயங்கி தடுமாறினாள்.

“மனோ சார் அவ்வளவு சீக்கிரம் சம்மதிப்பாருன்னு எனக்குத் தோணலை. ஆனா என் தங்கச்சியோட ஆசை மட்டுமல்ல...., என் சாரோட ஆசையும் கைக்கூடணும்னு அந்த கடவுளை நான் வேண்டிக்கிறேன்...”, கொஞ்சம் சீரியசாக சொன்னான்.

அவள் என்னவென்று வினவும் முன்னர்...., அங்கிருந்து அகன்றான். இவர்கள் சிரித்தவாறு பேசிகொண்டிருந்ததை மனோ பார்த்துச் சென்றதை இருவரும் அறியவில்லை.

‘இங்கே எல்லாமே மர்மம் தானா....?’, அலுத்தவள்...., யோசனையை அப்படியே நிறுத்திவிட்டு, மனோவைத் தேடிச் சென்றாள்.

பால்கனி கதவு மூடியிருக்க..., சிறு தயக்கத்துப் பிறகு, லேசாக திறந்தாள். அங்கே மனோ, குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தான். அவனது நடையே, அவன் கோபமாக இருப்பதை அவளுக்கு உணர்த்தியது.

‘என்னவாக இருக்கும்...?’, அவள் தயங்க,

மனோவோ..., ‘ஆண்டவா..., வரவர நான் சரியே இல்லை. அவள் கிட்டே நெருங்கும் போதெல்லாம் நான் என் வசமிழக்கிறேன். அதுவும் சற்று நேரத்துக்கு முன்னர்...., அவள் கூந்தலில் இருந்து வந்த வாசனை...., இதற்குமுன் இப்படி ஒரு வாசனையை நான் உணர்ந்ததே இல்’லை.

விட்டால்...., பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான மணமா..., செயற்கையான மணமா என்று பட்டிமன்றமே வைத்திருப்பான். ‘தினமும் அவள் குரலைக் கேட்க தவிப்பது முதல், அவள் பார்வையை சந்திக்காமல் தவிர்ப்பது துவங்கி...., அவளது பார்வையின் பொருள் புரியவில்லை என்று நடிப்பது வரை..., உயிர்வதையாக இருக்கிறதே...’.

‘இதோ இப்பொழுது கூட...., என்னை மறந்திருந்தேன். அவளிடம் அசைவை உணர்ந்து பார்த்தால்...., கண்டிப்பாக என் மன உணர்வுகளை கணித்திருப்பாள் என்றே தோன்றியது. எனவேதான் அவள் முகத்தைக் கூட பார்க்காமல் எழுந்து வந்துவிட்டேன்...’.

இங்கே என்னன்னா...., இப்பொழுது தன்மீதே கோபம் வந்தது. ‘அவ யாரோட பேசுனா உனக்கென்னா..? உன்னால் அவளை கல்யாணம்

செஞ்சுக்க முடியாது. அப்படியிருக்கும்போது...., அவளும் உன்னை மாதிரியே இருக்க முடியுமா...? முட்டாள் மாதிரி நடந்துக்காதே...', அதென்னவோ நித்யா ராகவனுடன் பேசினால் மட்டும் மனோவால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

வந்த முதல்நாள் துவங்கிய இந்த உணர்வு...., முதலில் 'ஐயாவின் பெண்களை நான்தான் பார்த்துக்கொள்ளவேண்டும், அதனால் வந்த உரிமை உணர்வு' என்று தன்னை சமாதானம் செய்தவன்...., அதன் பிறகு அவர்கள் இருவரும் பார்த்துக் கொண்டாலே, எரிச்சலாக மாறியபொழுது, அதிர்ந்துதான் போனான்.

எவ்வளவோ முயன்றும் அந்த பொறாமை உணர்வும், பொசசிவ் குணமும் நித்யாவின் விஷயத்தில் மாறமாட்டேன் என்று அடம் பிடித்தது.

“மனோ...”, மிகுந்த தயக்கத்துக்கிடையில் அழைத்தாள்.

சட்டென நடையை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தவன்...., தன் முகத்தை கோபத்தில் இருந்து மாற்றிக்கொள்ள முயன்றான். ஆனால் அது முடியாமல் முகத்தை ஒரு மாதிரி வைத்துக் கொண்டான்.

ஆனாலும்...., தனக்குச் சொந்தமானதை வேறு யாரோ களவாடிச்செல்லும் கோபம் தெரித்தது அவன் முகத்தில். அவ்வளவு கோபத்திலும்...., “என்ன...., ஏதாவது பிரச்சனையா...?”, அவளுக்கு ஏதாவது தேவையாய் இருக்குமோ என்ற நினைவில் கேட்டான்.

“இல்ல...., அருண் உங்களை தேடிட்டு வந்தார் அதான்...”, அவனையே அசையாமல் பார்த்தவாறு, கதவில் சாய்ந்துகொண்டாள். சற்று திகைத்தான். அவனது திகைப்பை குறித்துக் கொண்டாள். 'அப்போ என்கிட்டே இருந்து தப்பிக்கத்தான் ஓடி வந்தீங்களா...', அவள் பார்வை அவனை குற்றம் சாட்டியது.

அவன் சற்று தயங்கியவன்...., அவளிடம் அவனை பார்க்கப் போவதாகத்தான் சொல்லிவிட்டு எழுந்து வந்தான். இப்பொழுது அது பொய்த்துப் போக...., “இல்ல...., நான் கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணலாம்னு வந்தேன்...”, அவளுக்கு முதுகு காட்டியவாறு சொன்னான்.

“பண்ணிட்டீங்களா....?”, அவள் குரல் முதுகின் பின்னால் ஒலித்த பிறகும் அசையாமல் இருந்தான்.

“ம்ம்...”, தலை அசைத்தான்.

தான் செல்லாமல், அவளும் போகப்போவதில்லை என்பதை உணர்ந்தவன் திரும்பி, அவளைத் தாண்டி நடந்தான். அவனுடன் இணைந்துகொண்டாள். அமைதியாகவே நடந்தான். ஆனாலும்...., அவள் ராகவனிடம் அப்படி என்ன சிரித்துப் பேசினாள் என்பதை அறிந்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் அதிகமாக எழுந்தது.

அவள் பக்கம் திரும்புவதும்...., எதுவும் கேட்காமல் நடப்பதுமாக அவன் இருக்க....,

“என்ன கேக்கணுமோ சட்டுன்னு கேளுங்க...”, ஒரு முறை அவள் பக்கம் பார்க்கும்போது கேட்டாள்.

“ராகவன் ஏதாவது சொன்னானா...?”, அவள் கேள்வியாக பார்க்கவே...., “இல்ல...., எனக்கு ஏதாவது அவசர போன்...., நீங்க இந்த வழியா தானே வந்தீங்க அதான் கேட்டேன்...”, சமாளித்தான்.

சட்டென எதுவோ புரிவதுபோல் இருந்தது அவளுக்கு. ‘அடப்பாவி...., அப்போ நான் அவன்கிட்டே பேசிட்டு இருந்ததை பாத்துட்டுதான் கோபமா இருந்தீங்களா...? இவ்வளவு பொசசிவ்வா இருக்குறவருதான்...., என்னைவிட்டு விலகியும் போறாரா...?’, அவனையே பார்த்தாள்.

இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது.

***யாஹூ என்ற கூவலோடு வெளியேறிய அருண்...., நொடியில் மனோவின் அறையில் இருந்தான். அருணை அப்பொழுது அங்கே எதிர்பாராத ராதா திகைத்தாள்.

அவள் திகைப்பை நிதானமாக அளந்தவன்...., அனிதாவின் இருக்கையில் அமர்ந்தான். சற்று படபடப்பாக உணர்ந்தாள் ராதா.

டைப் அடிக்கும் விஷயங்கள் அனைத்தும் தப்பு தப்பாக போனது. எதையாவது பேசுவானா என்று காதை தீட்டிக்கொண்டு அமர்ந்திருக்க,

அவனோ அவளை இமைக்காமல் பார்த்தது தவிர எதையும் பேசவில்லை.

அன்றைய அந்த சம்பவத்திற்குப் பிறகு...., இன்றுதான் அவள் அருகிலேயே வந்திருக்கிறான். கைகள் கொஞ்சம் உதறல் எடுக்க...., தடுமாறி டைப் அடிக்கும் அவளை, கண்களில் சிரிப்புடன் பார்த்திருந்தான்.

“என்னைப் பார்த்தால் அவ்வளவு பயங்கரமாவா இருக்கு...., இல்லையே...., இன்னைக்கு காலையில் கூட பார்த்தேனே...., கிருதா மட்டும்தான் கொஞ்சம் வளர்ந்திருக்கு....”, இரண்டு கையாலும் கிருதாவை வருடியவாறு அவன் சொல்ல,

திடீரென அவன் பேசியதால் எழுந்த பதட்டத்தில்...., பட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவள் தன்னை நிமிர்ந்து பார்க்கவே...., அந்த பார்வைக்காகத்தான் காத்துக்கொண்டிருந்தேன் என்பதுபோல்...., ஆளைச் சுருட்டும் பார்வையைப் பார்த்தான்.

அவஸ்த்தையாக நெளிந்தாள் ராதா. “இப்போ என்ன வேணும் உங்களுக்கு...?”, கோபமாக கேட்க முயன்றாலும்...., அவன் பார்வையில் தடுமாறியே அவளால் கேட்க முடிந்தது.

“எனக்கு எதுவும் வேண்டாம்...., சும்மா உன்னை பாத்துட்டு போகலாம்னு வந்தேன். என்மேல் கோபமா இருக்கன்னு தெரியும் அதான்...”.

‘அதான் தெரியுதில்ல...’, என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“ராதா...., நாம நினைக்கிறது எல்லாம் எப்பவுமே நடந்துவிடாது. அதான்...”, சம்பந்தமே இல்லாமல் சொன்னான்.

‘எனக்கு இந்த பேச்சு வேண்டாம்’, என்பதுபோல் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

“எனக்கு எதுவும் கேக்க வேண்டாம்...”, வெடுக்கென சொன்னாள்.

“அப்போ சரி...., ஆனா நான் கொஞ்சநேரம் இங்கே உக்காந்துக்கறேன். உன்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்னு நினைச்சேன்...”, அவன்

இடைவெளிவிட, அவன் குரலில் இருந்த பாவனை அவளை ஆர்வமாக அவனைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

அதைக் கண்டாலும், உணராதவனாக பாவித்து...., “அன்னைக்கு அந்த பென்டிரைவில் பார்த்த உன்னோட கலரிங் எல்லாம் ரொம்ப நல்லா இருந்தது. இதை அன்னைக்கே சொல்லணும்னு நினைச்சேன்...”, அவன் சொல்லி முடித்த பொழுது,

டேபிள் மேல் இருந்த கத்தை ஃபைல்களைத் தூக்கி அவன் தலையில் ஒரே போடாக போட்டுவிட்டு வெளியேறியவள்...., நித்யாவின்மீது மோதி நின்றாள்.

***

# மௌனம் – 16.

நித்யாவின் மீது மோதிய ராதா திடுக்கிட்டு நிமிர...., அவள் வந்த வேகத்தில் திகைத்த நித்தி அவளை கேள்வியாகப் பார்த்தாள்.

நித்தியின் பார்வையை உணர்ந்த ராதா...., பதட்டமாக அருண் இருந்த இடத்தைப் பார்க்க, ராதாவின் பார்வையைத் தொடர்ந்து தன் பார்வையை செலுத்திய நித்தி, அருண் தலையைத் தேய்த்தவாறு இருப்பதைப் பார்த்தவள்...., ராதாவை உள்ளடக்கிய சிரிப்போடு பார்த்தாள்.

ராதா எதுவும் சொல்லாமல் முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு ஒதுங்கி நின்றாள்.

அந்தநேரம் நித்யாவின் பின்னால் மனோ வந்து நிற்க, பெண்கள் இருவரும் வழியில் நிற்பதைப் பார்த்தவன்...., அவர்கள் தலைக்கு மேலாக அவர்கள் அறைக்குள் எட்டி பார்த்தான்.

அங்கே அருணோ தலையைப் பரபரவென்று தேய்த்தவாறு...., இவர்களைப் பார்த்து அசட்டு சிரிப்பு சிரித்தான்.

“அருண்...., என்ன ஆச்சு....?”, மனோ பெண்களைத் தாண்டி...., அருணின் அருகில் சென்றான்.

“இல்ல...., இந்த டேபிள் ஓரத்தில் இடிச்சுக்கிட்டேன் அதான்...”, மனோவைப் பார்க்காமல் பதில் சொன்னான்.

“ஓஹோ...., அப்போ இந்த ஃபைல் எல்லாம்...”, கீழே சிதறிக் கிடந்த ஃபைல்களைப் பார்த்தவாறு, மனோ கேள்வியாக இழுக்க....,

“அது, நான் இடிச்சதில் கீழே விழுந்துடுச்சு...”, வேகமாக சொன்னான்.

“அதெப்படி அருண்...., நீ ஓரத்தில் இடிச்சு...., டேபிள் நடுவில் இருந்த ஃபைல் எல்லாம் கீழே விழுந்திருக்கு. ஆச்சரியமா இல்ல...”, போலியாக வியந்தான்.

“ஓ...., நீ செய்த இந்த மேஜிக் வேலையால் தான், ராதா பயந்துபோய் வெளியே வந்தாங்களா...?”, வெளியே கேலிபோல் இருந்தாலும்,

அருணை அந்த கேள்வி தாக்கவே செய்தது.

அருணால் எதுவும் சொல்ல முடியாமல், இருக்கையில் இருந்து எழுந்தவன், ராதாவின் அருகில் சென்று, “சாரி…”, அவள் முகம் பாராமல் உரைத்துவிட்டு வெளியேறினான்.

ராதாவை அவனது சீண்டலும், பார்வையும், குறும்பும் தாக்கியதை விட, அவனது ‘சாரி’ அவளை மிகுந்த வேதனைப் படுத்தியது. ராதாவின் முகம் வாடுவதைப் பார்த்த மனோ…., “முட்டாப்பய…”, வெளிப்படையாகவே தன் கோபத்தை வெளிப்படுத்தினான்.

“சரி நீங்க வேலையைப் பாருங்க…., நானும் வேலையைப் பாக்குறேன்”, சொன்னவன் எழுந்து அவன் டேபிளுக்குச் சென்றான்.

‘அருணுக்கு வரவர கொஞ்சம்கூட பொறுமையே இல்லாமல் போய்டுச்சு…., இப்போ எதுக்கு அவகிட்டே சாரி கேட்டுட்டு போறான். அவ கேட்டாளா…., எங்களை மனசுக்குள் நினைத்த பாவத்துக்கு…., மூணு பொண்ணுங்களுக்கும் நாங்க வேதனையை மட்டுமே பரிசா கொடுக்குறோம். இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும்….’, இருக்கையில் அமர்ந்தவன், முடிவெடுத்த பிறகே இதமாக உணர்ந்தான்.

அன்று முழுவதும் ஒருவித மோன நிலையிலேயே கழிய, மாலையில் ராஜுவும், அனிதாவும் வந்தவுடன், மூவரையும் ஒருங்கே அழைத்தான். வழக்கமாக ஆண்கள் மூவர் மட்டுமே மாலையில் கலந்துரையாடுவார்கள் என்பதால், ‘என்னவாக இருக்கும்…?’, என்ற யோசனையோடே சென்றார்கள்.

“வாங்க வாங்க…., இன்னைக்கு உங்க வாழ்நாளிலேயே நீங்க மறக்க முடியாத நாளா அமையப் போகுது. என்னன்னு சொல்லுங்க பாப்போம்…”, அவர்கள் மூவரையும் பார்த்தவாறு கேட்டான் மனோ.

“என்னடி…., மூணும் தெளிஞ்சு, நம்மளை விரும்புறதை கண்டு புடிச்சிடுச்சுங்களா…., அப்போ அதுங்களுக்குதானே இது மறக்க முடியாத நாளா இருக்கும்….”, அனிதா கிசுகிசுத்தாள்.

“நீ அடிதாண்டி வாங்கப் போற….”, நித்யா வெளிப்படையாகவே அவளை முறைத்தாள்.

“அனிதா...., நீங்க, வந்த அன்னையில் இருந்து இன்னைக்கு வரைக்கும் மாறவே இல்லை...”, சிரிப்பாய் சொன்னான் மனோ.

“அதில் உங்களுக்கு ஏதாவது வருத்தமா...?”, அனிதா வெடுக்கென கேட்டாள்.

“எனக்கென்ன வருத்தம்...., சந்தோசம் தான்...”, மனோ வேகமாக சொன்னான்.

“அதெப்படி...., நான் என்ன சொன்னாலும் கண்டுக்கவே மாட்டேங்குறீங்க...., அதுவும், நான் வந்த நாள்முதல் இன்னைக்கு வரைக்கும் நீங்க எதுவுமே என்னை சொன்னதில்லையே...., ஏன்...?”, தன் நெடுநாள் சந்தேகத்தைக் கேட்டாள்.

“இதில் இவ்வளவு ஆச்சரியப்பட என்ன இருக்கு. எனக்கு, நீங்க பேசுறதை எல்லாம் கேக்கும்போது, அருண் பேசுற மாதிரித்தான் இருக்கும். இப்போ அருண் ஏதாவது சொன்னால் நான் கோபப்படுவேனா...., இதுவும் அப்படித்தான்...”, சாதாரணமாக சொன்னான்.

“அது...”, சற்று தயங்கியவள்...., “நீங்க சொல்லுறதை, இன்னைக்கு நிலைமையை வச்சுன்னா நான் கொஞ்சம் ஒத்துப்பேன். ஆனால் வந்த அன்னைக்கு...., ராஜுவை....”, அன்று அவனை லூசு என்று சொன்னதை எண்ணி இன்று வெட்கியவளாய் நின்றாள்.

நித்யா அவள் தோளை அழுத்தி அவளை ஆதரவாக அணைத்தாள்.

“அனி...., அன்னைக்கு உனக்கு என்னைப்பத்தி தெரியாது, அதனால் அப்படி சொன்ன. இப்போ சொல்லுவியா....? அதான் அன்னைக்கே சாரி சொல்லிட்டியே, பிறகும் ஞாபகம் வரும்போதெல்லாம் இதென்ன பேச்சு.

அதெல்லாம் மனோ எதுவும் நினைச்சுக்க மாட்டான். இதோ இந்த அருண்தான் கோபமா இருந்தான், பிறகு அவன் கூட மாறிட்டான். நீதான்...”, அனிதா மற்றவர் முன்பு சங்கடப்படுவது பிடிக்காமல், மனோ பதில் சொல்லும் முன்னர், ராஜு குறுக்கே புகுந்து கேள்வி கேட்டான்.

“ஹப்பா...., உன் ஆளுக்கு உன்னை விட்டுக்கொடுக்கவே முடியலடி..., என்ன கோபம் பாரேன்”, நித்யா இப்பொழுது அனிதாவின் காதில்

கிசுகிசுத்தாள்.

அனிதா, நித்யாவை போலியாக முறைத்தவாறே, ஓரக்கண்ணால் ராஜுவை பார்க்க, அவனோ முகத்தை தூக்கி வைத்துக் கொண்டான். ‘ஐயாவுக்கு கோபமாக்கும்...., அதை எப்படி போக வைக்கணும்னு எனக்கா தெரியாது’, தனக்குள் சொல்லிகொண்டவள் மென்மையாக சிரித்தாள்.

“அனிதா..., ஏற்கனவே நித்யாவும், ராதாவும்...., இதுக்காக மாத்தி மாத்தி மன்னிப்பு கேட்டாச்சு. இனிமேல் அதைபத்திய பேச்சே இருக்கக் கூடாது. நான் சந்தோசமான விஷயம்னு சொல்லிட்டு இருக்கேன், நீங்க என்னன்னா பழசை கிளறுறீங்களே...”, மனோ மென்மையாக கடிந்து கொண்டான்.

அனிதாவிற்கு அவன் சொன்ன செய்தி புதிதாக இருந்தது. அவள் ராஜுவிடம் மன்னிப்பு கேட்டது என்னவோ உண்மை, ஆனால் அவன் நண்பர்களிடம் நான் ஏன் கேட்கவேண்டும் என்று மிதப்பாக இருந்தாள், ஆனால் அவளது தோழிகள், மனோ மற்றும் அருணிடம், தனக்காக மன்னிப்பு வேண்டி இருக்கிறார்களே....,

தோழிகளை நம்ப முடியாமல் பார்த்தாள். “நான் செய்த தப்புக்கு..., நீங்க ஏண்டி...”, கோபமாக வினவினாள்.

“ஃப்ரண்ட்ஸ்ன்னா இப்படித்தான் இருக்கணும் அனிதா. உங்களுக்கு தெரியாதா...?”, அவன் எதைச் சொல்கிறான் என்பது புரிய அமைதியானாள்.

“என்ன அனி...., எங்களுக்கு தெரியாமல் எதுவோ நடந்திருக்கு போல...?”, ராதா கேட்டாள்.

ராதா கேட்கவே, முதல்நாள் ராஜுவுடன் புல்லட்டில் சென்றுவிட்டு திரும்பிய அன்று மாலை, அவர்கள் கிளம்பும் வேளையில்...., அவசரமாக அனிதாவை அழைத்த மனோவும், அருணும்....,

“சாரி அனிதா...., ராஜு என்னவோ யோசிக்காமஉங்களை புல்லட்டில் கூட்டி போய்ட்டான். அவனுக்கு இதெல்லாம் புரியாது...., அவனுக்காக நாங்க உங்ககிட்டே சாரி கேட்டுக்கறோம்....”, வந்த முதல்நாளே இப்படி ஆகிவிட்டதே என்ற எண்ணத்தில், மனோ தயக்கமாக உரைத்தான்.

“இதில் நீங்க இவ்வளவு பேசுற அளவுக்கோ...., தயங்குற அளவுக்கோ, நான் ராஜு கூட புல்லட்டில் போனது அவ்வளவு பெரிய விஷயமா...? இது ஒரு சாதாரண விஷயம்...”, சொன்னவள்...., மேலே நில்லாமல் சென்றுவிட்டாள்.

அவள் அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டதை நினைத்து வருத்தப்படுவதா, சந்தோசப்படுவதா என்று புரியாமல் தடுமாறினார்கள். ஏனென்றால்...., மதியம் ராஜு இருந்த மனநிலையாலேயே அவ்வாறு கவலைப் பட்டார்கள். அதைத்தான் அவன் இப்பொழுது சொன்னான் என்பதை நினைத்தாள்.

“இன்னைக்கு என்ன நாள்ன்னு உங்களுக்கு ஞாபகம் இருக்கா...?”, விரிந்த புன்னகையோடு கேட்டான் மனோ.

“இன்னைக்கா...., சற்று யோசித்தவர்கள்...., எதுவும் ஸ்பெஷலா தெரியலையே...”, இழுத்தார்கள்.

“இன்னையோட நீங்க இங்கே வேலைக்கு வந்து ஒரு மாசம் ஆகுது. உங்க உழைப்புக்கு ஏற்ற கூலி வேண்டாமா...?”, புருவம் உயர்த்தினான்.

“என்ன...?”, நித்யா விழி விரித்து ஆனந்தமாக அதிர,

“ஹையோ...., ஆமா...., எங்களுக்கு நாள் போனதே தெரியலை...”, அனிதா குதித்து கும்மாளமிட,

“அதுக்குள்ளே ஒரு மாசம் ஆயிடுச்சா...?”, நம்ப முடியாமல் தன் மகிழ்ச்சியை வெளியிட்டாள் ராதா. மூவரும் கட்டிக்கொண்டு சேர்ந்து குதித்தார்கள். ஹைஃபை கொடுத்துக் கொண்டார்கள். ஒரு நிமிடம் அவர்கள் மூவரும் தங்கள் உலகத்திலேயே இல்லை.

பெண்களின் சந்தோசத்தை, இமைக்காமல் பார்த்துகொண்டிருந்தார்கள் ஆண்கள். பெண்களின் சந்தோசம், அவர்களையும் தொற்றிக் கொண்டது.

“எங்களையும் சேர்த்துகிட்டா நல்லா இருக்கும்...”, அருண் இடையில் புகுந்து அவர்களை கலைத்தான்.

“எதுக்கு...”, குதிப்பதை நிறுத்திவிட்டு அவனிடம் கேட்டாள் அனிதா.

“இல்ல...., நீங்க மட்டும் குதிக்கிறீங்க. இங்கே நாங்க மூணுபேர் கூட இருக்கோம்...., எங்களை கண்டுக்கவே மாட்டேங்குறீங்களே...”, புகார் வாசித்தான் அருண்.

“அருண்...., ஆக்சுவலா நீங்கதான் எங்களை கண்டுக்க மாட்டேங்குறீங்க...”, சந்தடிசாக்கில் அவர்களை வாரினாள் அனிதா.

“ஏண்டா இப்படி...?’, மனோ செய்கையில் வினவினான்.

“இதென்ன இவ்வளவு பெரிய பழியை தூக்கி எங்க மேல போட்டுட்டீங்க...., ஐ’ம் ஆல்வேஸ் ரெடி...”, தலை தாழ்த்தி சொன்னவன்...., வேகமாக அவள் அருகில் செல்லப் போனான்.

ஒற்றை விரல் நீட்டி..., “பிச்சுபுடுவேன்..., உங்க வேலையெல்லாம் ராதாவோட நிப்பாட்டிக்கோங்க...”.

“ஏய் லூசு...., சும்மா இருடி...”, ராதா அவளை வேகமாக அடக்கினாள்.

“ஆமா...., இப்படியே என்னையும் அடக்கி...., நீங்களும் வாயை மூடிக்கிட்டே இருங்கடி. என்னாலல்லாம் அப்படி இருக்க முடியாது...”, விட்டால் அங்கே இருந்த ஆண்களின் சிண்டை பிய்த்துவிடுபவள்போல் எகிறினாள்.

“அனிதா...., அனிதா...., நாம எதையோ பேச வந்து எதையோ பேசிட்டு இருக்குறோம். இன்னைக்கு உங்களுக்கு சம்பள நாள்....., இப்போ சம்பளத்தை வாங்கிக்க போறீங்களா..., இல்ல இப்படி சண்டை போட்டுக்க போறீங்களா...?”, நிலைமை கைமீறி செல்வதை வேகமாக தடுத்தான் மனோ.

“எஸ்கேப்பா....”, அவனை கூர்மையாக பார்த்து, அனிதா சத்தமாக புலம்பியவள், “சரி விடுங்க...., இந்த நாளை பகைச்சுக்கவோ, இந்த நாளின் இனிமையை குறச்சுக்கவோ நான் தயாரா இல்லை. எங்கே, டக்குன்னு கையில் காசை தாங்க பாப்போம்...”, அவன் முன்னால் கையை நீட்டினாள்.

அவள் முதலில் சொன்னதை காற்றோடு விட்டவன்...., “ஹப்பா...., உங்களுக்கு சம்பளம் கொடுக்கலாம்னு கூப்பிட்டால்...., அதை கண்டுக்காமல் விட்டுட்டு, என்னவோ நான் தரமாட்டேன்னு சொன்ன

மாதிரி சீன் போடுறீங்க....,

அவள் எதையோ சொல்லத் துவங்கும் போது...., “நான் சொல்லி முடிச்சுடுறேன், இப்போ என்னோட கேள்வி ஒண்ணே ஒண்ணுதான்...., உங்களோட சம்பளத்தை ஒரே ‘செக்கா’ தரவா...? இல்ல மூணு ‘செக்கா’ வேணுமா...?”, அவர்கள் முகம் பார்த்தான்.

“இதென்ன கேள்வி மனோ...., ஒரே செக்காவே கொடுத்துடுங்க...”, நித்யா சொன்னாள்.

“அவங்க ரெண்டுபேரும் எதுவும் சொல்லலையே...”, மற்றவர்களைப் பார்த்தான்.

“எங்களுக்கு எந்த தடையும் இல்லை. ரெண்டு ‘செக் லீஃப்’ உங்களுக்கு லாபம் பண்ணிக் கொடுக்குறோம்..., அதை பாராட்டாமல்...., முதல்ல ‘செக்கை’ கொடுங்க...., பேசியே டைம் வேஸ்ட் பண்ணுறது”, அனிதா வேகமாக இடை புகுந்தாள்.

செக்கில் வேகமாக அமவுண்ட்டைநிரப்பியவன்...., நண்பர்களிடமும் அதை காட்டினான். அவர்களின் முகம் திருப்தியை வெளிப்படுத்தியது. ராஜு வேகமாக செக்லீஃபை கரத்தில் வாங்கியவன்...., “மனோ...., சூப்பர்டா...”, உற்சாகமாக சொன்னான்.

செக்கை மனோவின் கரத்தில் கொடுத்தான். “நீயே கொடு ராஜு...”, தலை அசைத்து சொன்னான் மனோ.

“நிர்வாகம் கேஷ் விஷயம் எல்லாம் உன்னோட பொறுப்பு. நான் தலையிட மாட்டேன்...”, சொன்னவன் அவன் கரத்திலேயே கொடுத்தான்.

செக்கை வாங்கிய மனோ...., பெண்களின் முகத்தைப் பார்த்தான். அவர்கள் முகம் ஆர்வத்தை சுமந்திருந்தது. மேலும் அவர்களை சோதிக்காமல்...., நித்யாவின் பக்கம் செக்கை நீட்டினான்.

நித்யா தோழிகளைப் பார்க்க...., அனிதா இரண்டு கண்ணையும் சிமிட்டி ‘வாங்கு’ என்று சொல்ல...., ராதா புன்னகைத்தாள். செக்கை வாங்கியவுடன், மூவரும் அதில் பார்வையை செலுத்த...., இனிமையாக அதிர்ந்தார்கள்.

நம்பமுடியாத நிலையில்...., நித்யாவின் கரத்தில் இருந்து செக்கை பிடுங்கியவள்...., தான் பார்த்தது நிஜம்தானா என்பதை நம்ப முடியாமல்...., வாய்விட்டு சொல்லிப் பார்த்தாள்....,

“ஐம்பதாயிரம் ரூபாயா...?”, அனிதா மனோவிடம் வாய்விட்டே கேட்டுவிட்டாள்.

“மனோ...., இதென்னமோ அதிகமா தோணுது...”, நித்யா அனிதாவின் கரத்தில் இருந்து செக்கை வாங்கி மனோவிடம் கொடுத்தாள்.

“நித்யா...., நீங்க மூணுபேரும், காலையில் பத்து டு ஐந்தா வேலை பாக்குறீங்க? நேரம் காலம் இல்லாமல் உழைக்கிறீங்க. உங்க உழைப்புக்கான நியாயமான கூலிதான் இது...”, அருண் சமாதானம் செய்தான்.

“அருண்...., நாங்க மட்டும் இல்லையே. இந்த கம்பெனியில் வேலை பார்க்கும் நாப்பது பேரும் அப்படித்தான் இருக்காங்க...”, நித்யா சமாதானம் ஆகவில்லை.

“எங்க பெரியவர் என்னவோ..., நீங்க ஐநூறு ரூபாய் கொடுத்தாலும் ஒழுங்கா வேலை பாக்கணும்னு சொல்லி அனுப்பினார். இப்போ நீங்க ஐம்பதாயிரம் கொடுத்தீங்கன்னு தெரிஞ்சுது அவ்வளவுதான்...., என்னாலேயே நம்ப முடியலை, அவர்....”, மயங்குவதுபோல் பாவ்லா செய்தாள் அனிதா.

“உண்மையை சொல்லணும்னா...., எங்க வேலையில் பாதி வேலையை நீங்கதான் செஞ்சீங்க...., அப்படியிருக்கும்போது...., இதை நாங்க கொண்டு போனால்...., எங்களாலேயே எங்களை மன்னிக்க முடியாது...”, தீர்மானமாக மறுத்தாள் நித்யா.

“நித்தி...., இதைவிட கம்மியா கொடுத்தால்...., அது நாங்க உங்க திறமைக்கு செய்யும் அநியாயமா இருக்கும்..”, மனோ கண்டிப்புடன் சொன்னான்.

இவர்கள் மாற்றி மாற்றி வழக்கடித்துக் கொள்ள...., “சரி உங்களுக்கும் வேண்டாம்...., எங்களுக்கும் வேண்டாம்...., நாளைக்கு சண்டே தானே...., நாங்க வெளியே போகும் நாள். பேசாமல் நீங்களும் எங்களோட வாங்க. நாளைக்கு ஆகும் மொத்த செலவையும் நீங்க

செய்ங்க...., எப்படி...”, கண்களில் ஆர்வம் மின்ன கேட்டான் ராஜு.

“டேய் ராஜு...., அசத்திட்டடா...”, அருண் ஓடிப்போய் ராஜுவை கட்டிக் கொண்டான்.

பெண்களிடம் எந்த ரியாக்ஷனும் இல்லாமல் போகவே...., என்னவென்று பார்க்க...., அவர்களின் பார்வையோ மனோவிடம் இருந்தது. இருவரும் மனோவை திரும்பிப் பார்க்க, அவனோ இவர்களை முறைத்துக் கொண்டிருந்தான்.

“நித்தி...., இருக்குறதிலேயே உன் ஆளுதாண்டி ரொம்ப முரண்டு புடிக்கிறான். இவன் மட்டும் இல்லன்னா..., எங்க ஆளுங்க ரெண்டும் எங்களையே சுத்திவரும். நீ என்ன செய்வியோ தெரியாது...., முதல்ல அவனை சரி பண்ணுற, ஆமா....”, அனிதா கடித்த பற்களுக்கிடையில் நித்யாவிடம் கோபம் கொண்டாள்.

“ம்...., நாளைக்கு வருவாங்கல்ல...., அப்போ பேசிக்கலாம்...”, அனிதாவிடம் சொன்னவள், மனோவை கோபப்பார்வை பார்த்தாள். அத்தோடு..., “மனோ, நாளைக்கு நீங்க வரீங்க அவ்வளவுதான். எங்களுக்கு உங்களோட பேசணும்...”, நிதானமாக சொன்னாள்.

அத்தோடு...., “நம்ம கண்ணாமூச்சி ஆட்டத்தை நிறுத்திக்கலாம்னு நினைக்கிறேன்....”, சொன்னவள்...., “ஏய்...., வாங்க..., அவங்க நாளைக்கு காலையில் வந்து நம்மளை பிக்கப் பண்ணிப்பாங்க...”, சொன்னவள், அவர்கள் பதிலை எதிர்பாராமல், தோழிகளோடு வெளியேறினாள்.

***

# மௌனம் – 17.

மாலையில் வீடு வந்து சேர்ந்த பிறகும், முதல் சம்பளம் கிடைத்த மகிழ்வை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை அவர்களால். மனதுக்குள் ஏதோ ஒரு இனம் புரியாத அழுத்தம், எல்லாம் நல்லபடியாக முடியவேண்டுமே என்ற தவிப்பு, இப்படியான கலவையான உணர்வுகளுக்கு உள்ளானார்கள்.

மூவரின் சிந்தையும் ஒன்றே என்றாலும், ஒவ்வொருவரின் மனநிலையும் வெவ்வேறாக இருந்தது. குளித்து முடித்து, உணவு மேஜையின் முன் அமரும் வரைக்கும் அவர்களது மௌனம் தொடரவே....,

“என்னம்மா...., மறுபடியும் சண்டை போட்டுகிட்டீங்களா...? எப்பவும் கூத்தும் கும்மாளமுமா, அந்த பொட்டியோட இருப்பீங்க..., இன்னைக்கு என்னன்னா இப்படி அமைதியா இருக்கீங்க...? இன்னைக்கு அந்த பொட்டிக்கு லீவா...?”, நித்யாவின் லேப்டாப்பைத்தான், சோலை அவ்வாறு குறிப்பிட்டாள்.

கொஞ்ச நாளாக, வீட்டுக்கு வந்த பிறகும் மூவருமாக தாங்கள் டிசைன் செய்த கட்டிடத்துக்கு, இது பொருந்துமா என்று கணினியில் அவர்கள் சரி பார்ப்பதும், திருத்தங்கள் செய்வதும், கருத்துக்கள் ஒத்துப்போகவில்லை என்றால் சண்டை போட்டுகொள்வதும் சாதாரண நிகழ்வாகிப் போயிருந்தது.

அவர்கள் முன்பு போட்ட சண்டைக்கும், இப்பொழுது போடும் சண்டைக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருந்தது. சில வேளைகளில் நித்யா வேலையில் மூழ்கிவிட்டால், அனிதாவோ ராதாவோ அவளுக்கு ஊட்டி விடுவது கூட நிகழ்ந்தது.

அந்த வேளைகளில் எல்லாம்...., திறந்தவாய் மூடாமல் சோலை வியப்பாள். அவள் அப்படி அசந்து நிற்கும் நேரத்தில், கைநிறைய சாதத்தை அள்ளி, அவள் வாயில் திணித்தும் விளையாடுவார்கள்.

வேலை போர் அடித்தால்...., அவளை வேலை செய்யவிடாமல் அடுப்படியில் நின்று சமையலுக்கு உதவுகிறோம் பேர்வழி என்று சமையற்கட்டையே அதகளம் பண்ணி விடுவார்கள். ஆனால், இன்று அவர்கள் வேலை செய்யாமல் போகவே சோலை இவ்வாறு

கவலைப்பட்டாள்.

அவள் குரலில் கலைந்த நித்தி, கண்களை சுழலவிட்டவாறு தாமரையைத் தேட...., அவரும் ஹாலில் அமர்ந்தவாறு இவர்களைத்தான் பார்த்துகொண்டிருந்தார்.

நித்யா, அனிதாவை ஒரு எச்சரிக்கும் பார்வை பார்க்க...., “எங்களை கொஞ்சூண்டு கூட நல்லவங்களாவே இருக்க விட மாட்டியா சோலை...”, அனிதா இழுத்து கேட்டவாறு... வாய் திறந்தாள்.

“நான் என்னங்கம்மா செய்தேன்...., என்னைக்கும் கலகலன்னு இருப்பீங்க..., இன்னைக்கு அப்படி இல்லையேன்னு கேட்டது ஒரு குத்தமா..?”, நொடித்துக் கொண்டாள் சோலை.

“உனக்கு இன்னைக்கு பாசமா ஊட்டாமல் போய்ட்டோம்னு உனக்கு வருத்தம்...., கவலையை விடு...., இன்னைக்கு உனக்குத்தான் என் முதல் உருண்டை...”, சொன்னவள் உருண்டை உருட்ட....,

“அனிதாம்மா..., எனக்கு ஒரு வாய் ஊட்ட ஒரு கைப்பிடி சாதம் போதாது...? என்னமோ யானைக்கு கவளம் உருட்டுற மாதிரி செய்யிறீங்க..., ஆத்தாடியோ நான் இல்லை....”, அலறியடித்துக்கொண்டு ஓட்டம் பிடித்தாள் சோலை.

“உனக்குன்னு எடுத்தது உனக்குத்தான்...., அதெப்படி விட முடியும்...?”, அனிதா எழுந்து துரத்த...., “சும்மா கிடந்த சங்கை ஊதி கெடுத்துப்புட்டேனே...”, சோலையின் செய்கையில் அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

அதன் பிறகும் அவளை விடாமல்...., அவள் வாயில் சாதத்தை திணித்த பிறகுதான் அடங்கினாள் அனிதா. அதே நேரம் தாமரை தன் அலைபேசியோடு வெளியேற...., ஒரு பெருமூச்சொன்றை வெளியேற்றினாள் நித்யா.

ராதா அவளை கேள்வியாகப் பார்க்க...., “தாமரை இன்னைக்கு ரிப்போர்ட் கொடுக்க போயாச்சு...., ஒரு வழியா சமாளிச்சிட்டோம்... அதான்...”, ராதாவிடம் திரும்பி புன்னகைத்தாள்.

“முன்னாடின்னா கூட நாம நடிக்க வேண்டி இருக்கும். இப்போதான்

அதுக்கு அவசியமே இல்லையே. முதல் வேலையா ‘அந்தப்பெரிய்யவருக்கு’ போன் பண்ணி சொல்லணும்...., ஆனா என்ன சொல்லுவாரோன்னுதான் கவலையா இருக்கு...?”, அனிதா புலம்பினாள்.

“நீ சொல்லுறதும் சரிதான்...”, ஆமோதித்தவள்...., முதல் வேலையாக மூர்த்திக்கு அழைத்தாள்.

கால் வெயிட்டிங் ஆக...., அவள் கட் செய்யவே, அடுத்த நிமிடமே அவளது அழைப்பிற்கு வந்தார். “என்ன... புதுசா...?”, அவர் குரலில் ஆச்சரியம் விரவிக் கிடந்தது.

“இன்னைக்கு முதல்நாள் சம்பளம் வந்துது...., அதான் சொல்லலாம்னு...., அத்தோட....”, அவள் சொன்னதைக் கேட்டவரோ....,

பின்னால் அவள் சொன்னதை கண்டுகொள்ளாதவராக...., “முதல் மாச சம்பளம் வாங்கி இருக்கீங்க. அதை கொண்டாடுங்க...., அடுத்த மாதம் பாத்துக்கலாம்...”, அவள் கோரிக்கைக்கு முற்றுபுள்ளி வைத்தார்.

ஸ்பீக்கர் வழியே அவர் பேசுவதை கேட்டுகொண்டிருந்த அனிதாவின் முகம் கோபத்துக்குச் சென்றது. “நித்தி...., ஒரு நாள் இல்ல ஒருநாள்...., இந்தாளு என் கையில் சிக்கி சின்னாபின்னமாகப்போகுது பாரேன்...இது பண்ற நச்சு தாங்க முடியலை”, கறுவினாள்.

“அனி...., அவரோட வயசுக்காவது மரியாதை கொடுன்னு உனக்கு எத்தனை முறை சொல்லிட்டேன்...”, அனிதாவை கடிந்துகொண்டாள்.

“நித்தி...., அவருக்கு மரியாதை கொடுப்பதால் தான் இந்தளவுக்கு சொல்லுறேன்..., இல்லன்னா சறுக்குமரம்...., ஒட்டடை குச்சி...., வில்லன்..., இப்படி சொல்லியிருப்பேன்...”, அவள் அலட்சியமாகச் சொல்ல....,

“உன்கிட்டே சொன்னதுக்கு நான் அந்த சுவத்திலே முட்டி இருக்கலாம்...”.

“இப்போகூட உன்னை நான் தடுக்கலை...., தாராளமா முட்டிக்கலாம்...”, அனிதா சொல்ல...., “உன்ன...”, அனிதாவை அடிக்க துரத்தினாள்.

“நித்தி…., எச்சி கையால் அடிக்காதே…., முதல்ல கை கழுவிட்டு ரூமுக்கு போகலாம்…”, சொல்லிவிட்டு, அவர்களை அழைத்துக்கொண்டு அறைக்குச் சென்றாள்.

அடுத்த பத்து நிமிடங்களில், அறைக்குள் இருந்தார்கள். ராதா கதவை சாத்திவிட்டு வர, “நித்தி…., நாளைக்கு ஏதாவது நடக்கும்னு நினைக்கிறியா..?, கேள்வியோடு நித்தியின் அருகில் அமர்ந்தாள்.

சற்று நேரம் அமைதியாக இருந்தவள்…., “எப்படியும் நேரடியா பேச முடியாது, சும்மா போட்டு பாக்கலாம்…”, யோசனையாகச் சொன்னாள்.

“என்ன நித்தி இப்படி சொல்லுற…?”, கவலையானாள் ராதா.

“வேற என்னதான் செய்யச் சொல்லுற ராதா…? ஒருத்தன் வாயவே திறக்க மாட்டேங்குறான். ஒருத்தன் பார்வையால் சாப்பிடுறான். இன்னொருத்தன் எதுல சேர்த்தின்னே தெரியலை…., இதில் எந்த நம்பிக்கையில் அவங்க கிட்டே பேசுறது…?”, கவலையானாள் நித்தி.

“உன் ஆளு பரவாயில்லை நித்தி…., திடனா முடிவு எடுக்குறவர்…?”, ராதா யோசனையாக சொன்னாள்.

அத்தோடு…., “இதோ இவளோட ஆளு…., இவமேல் உயிரையே வச்சு இருக்கார். ஆனா…”, ராத இழுக்க….,

“ராதா…., ராஜு என்னை மட்டும் ஸ்பெஷலா கவனிக்கலை…., அன்னைக்கு நித்யா அவரோட போயிருக்கும்போது, அவளையும் தான் கவனிச்சுக்கிட்டார்”, இடை புகுந்தாள் அனிதா.

“இப்படியே மாத்தி மாத்தி சண்டை போட்டுக்க போறீங்களா…? அனி…., நீ அடிக்கடி இப்படியே சொல்லுற, அது ஏன்…?”, கூர்மையாக அவளைப் பார்த்தாள்.

“என் மனசுக்கு ரொம்ப பயம்மா இருக்கு நித்தி. அவர் சாதாரணமா செய்யிறதை, நான்தான் எனக்கு சாதகமா எடுத்துக்குறனோன்னு தோணுது. ஆனா அப்படி மட்டும் இருக்கட்டும்…, அவரை என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது…?”, அவள் பேச்சில், அவனை விட்டுகொடுக்க முடியாது என்ற பிடிவாதம் தெரிந்தது.

“உன் சந்தேகத்தை நாளைக்கே தீர்த்துடலாம் விடு…”, அவளிடம் சொன்ன நித்யா, “உனக்கு இப்படி ஏதாவது சந்தேகம் இருக்கா…?”, ராதாவிடம் கேட்டாள்.

“அவளுக்கு அப்படி ஒரு சந்தேகமே வராது. ஏன்னா…? ‘நான் கடிக்காமல் அப்படியே சாப்பிடுவேன்..’, ங்குற மாதிரில்ல அருண் அவளைப் பார்ப்பார்…”, அனிதா கேலி செய்தாள். அவள் கேலியில் ராதாவின் முகம் சிவந்துவிட்டது.

“ஆமா இப்படித்தான் இந்த ஒரு மாசமா பாக்குறார்…., எந்த முன்னேற்றமும் இல்லை. சிலநேரம், என்னைப் பாத்தா…., ஊமையாட்டம் இருக்கறதால் ‘விளையாடிப் பார்ப்போம்’னு அவருக்கு தோணுதோ என்னமோ…?”, அவள் கவலையைச் சொன்னாள் ராதா.

நித்யா அமைதியாக இருப்பதைப் பார்த்தவர்கள்…., “நீ எதுவுமே சொல்லலையே நித்தி…”, அவளை உலுக்கினர்.

“என்ன சொல்ல…., அவர் மனசுக்குள் இருப்பதை, வெளியே சொல்லவைக்கும் சக்தி எனக்கு இல்லன்னுதான் சொல்லணும். மத்த ரெண்டுபேரும் ஒரு விதத்திலாவது அவங்க மனசை வெளிப்படுத்துவாங்க. ஆனா மனோ….”, அவள் கண்கள் மெல்லியதாக நனைந்தது.

“நித்தி….”, இருவரும் அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டார்கள். “இல்ல…., என்ன ஆனாலும் சரி…., நாளைக்கு இதைப் பற்றி நாம் பேசியே ஆகணும்…”, முடிவெடுத்துவிட்டார்கள்.

இவர்கள் இங்கே ஒரு முடிவெடுக்க, அங்கே ஆண்களும் ஒரு முடிவிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் எடுத்த முடிவிற்கு வலு சேர்த்தது…., மாலையில் அவர்கள் அலுவலகத்தில் நடந்த அந்த சம்பவம்.

மறுநாள் விடியல் பதைபதைப்புடனும், எதிர்பார்ப்புடனும், கவலையுடனும் ஒருவித கலவையான மனநிலையில் விடிந்தது பெண்களுக்கு. நேரம் பத்துமணியைக் கடந்த பிறகு…., இதயத்துடிப்பின் வேகம் அதிகரித்தது. ஒருவர் முகத்தை ஒருவர் கவலையுடன் பார்த்துக் கொண்டார்கள்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் தேங்கி

அமர்ந்திருந்தார்கள். அந்த நேரம் அவர்களுக்கு உயிர்ப்பை கொடுக்க வந்ததுபோல்...., வாசலில் கார் வந்துநிற்கும் ஓசை கேட்டது.

வெளியே ஓடிச்சென்று அவர்களை வரவேற்க கால்கள் துடித்தாலும், அதை அடக்கியவாறு அறையிலேயே...., சோலையின் வரவுக்காய் காத்திருந்தார்கள்.

“அம்மாடி...”, அவளது குரல் உள்ளே சென்று எதிரொலிக்கும் முன்பே, அனிதா கதவைத் திறந்தாள்.

சோலை திகைத்துப்போனவள்..., “என்னம்மா...., கதவுகிட்டேயே நின்னுட்டு இருந்தீங்களா...? சரி அதை விடுங்க...., உங்களைத் தேடி யாரோ வந்து இருக்காங்க. தாமரை அம்மா உங்களையெல்லாம் கையோட கூட்டி வரச் சொன்னாங்க....”, அனிதாவிடம் சடைக்கத் துவங்கியவள்...., அவள் கோபமுகத்தைப் பார்த்து, விஷயத்தை சொல்லிவிட்டு சென்றுவிட்டாள்.

கீழே சென்றபிறகு...., தாமரையின் கூர்மையான விழிகளை சந்திக்க மறுத்துவிட்டு...., தாங்கள் வெளியே செல்வதாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்கள்.

ஆனால் மனோவோ...., தன் கையில் இருந்த ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து கொடுக்க...., தாமரையின் விழிகள் வெளிப்படுத்திய அதிர்ச்சியைப் பார்த்தவன்...., “ஐயாகிட்ட மனோ, அருண், ராஜூன்னு சொன்னால் தெரியும்..”, தயக்கமாக உரைத்துவிட்டு வெளியேறினான்.

அவன் செய்கையை பெண்கள் புரியாமல் பார்க்க...., “அது ஒண்ணும் இல்லை நித்யா...., இப்படி மூணு தடியனுங்க வந்து, அவங்க பொண்ணுங்களை தள்ளிக்கிட்டு போறானுங்களேன்னு அவங்க கவலைப்படக்கூடாதுல்ல....., அதான்...”, மனோவின் செய்கைக்கு விளக்கம் கொடுத்தான் அருண்.

“ஓ...”, அதற்குமேல் அதற்கு மற்றவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றாலும், நித்யா மனோவை ஓரப்பார்வையாக பெருமையுடன் பார்த்தாள். அவள் பார்வையை உணர்ந்தாலும், அவள்புறம் பார்க்காமல் இருந்தான் மனோ.

“அனிதா...., நீங்க உங்க காரை எடுத்துட்டு வரீங்களா....?”,

எடுத்துவந்தால் நன்றாக இருக்கும் என்ற ரீதியில் சொன்னான் மனோ.

அனிதா சட்டென திரும்பி நித்யாவைப் பார்க்க...., அவள் பார்வையோ மனோவிடமே இருந்தது. ஆனால் அவன் அனிதாவையே பார்க்க...., அப்பொழுதுதான் ஆண்களிடம் இருந்த வித்தியாசம் அவளுக்கு புலப்பட்டது.

வீட்டின் முன்னால் வாக்குவாதம் எதுவும் வேண்டாம் என்பதால்...., நித்யா அனிதாவிடம் தலையசைக்க...., தங்கள் காரின் ஓட்டுனர் இருக்கையில் அவள் சென்று அமர, மற்றவர்களும் ஏறிக்கொள்ள..., காரைஎடுத்த வேகத்திலேயே அவளது கோபம் மற்றவர்களுக்குப் புரிந்தது.

அருண் மனோவை அழுத்தமாக பார்க்க, ராஜுவோ அனிதா ஓட்டிச் சென்ற கார் சென்ற திசையையே, ஏக்கமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

“ஏன் மனோ இப்படி பண்ணுன...?”, குரலில் ஏக்கம் வழிய கேட்டான் ராஜு.

“ராஜு...., நேத்துதான் அவ்வளவு சொன்னேன். இப்போ இப்படி கேட்டால் நானும் என்னதான் செய்யட்டும்..? எனக்குமட்டும் இப்படியெல்லாம் செய்யணும்னு ஆசையா என்ன...? அருண்...., நீயே காரை எடு...”, ஓட்டுனர் இருக்கைக்கு அருகில் ஏறிக் கொண்டான்.

மனோ, வெளியே எவ்வளவோ அழுத்தமாகத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், அவனும் மனிதன் தானே...., நித்யாவின் நெருக்கமும், அன்பும் வேண்டுமென்று அவனது மனம் முரண்டினாலும்....., தான் அதை மறுக்கும் நிலையிலிருப்பதை அடியோடு வெறுத்தான்.

ராஜு தலையை தொங்கப்போட்டுக் கொண்டு பின்னிருக்கையில் ஏற...., பாரமான மனதுடன் அருண் காரை கிளப்பினான். கார் சாலையில் சீற..., காருக்குள் அசாத்திய அமைதி.

அவர்களது இந்த மோனநிலை, மாயாஜாலுக்குள் நுழையும்வரை மட்டுமே. அங்கே நுழைந்த அடுத்த நிமிடம்...., மூவரும் விடலைப்பருவத்துக்குள் நுழைந்துவிட்டார்கள்.

பேச்சும் சிரிப்பும், ஆட்டமும் பாட்டமுமாக கொட்டமடித்தார்கள். ஆண்களின் செய்கையை, பார்வையாளர்களாக பார்க்க மட்டுமே முடிந்தது பெண்களுக்கு.

படம் துவங்க இன்னும் ஒருமணிநேரம் இருக்கவே...., அருண் "அனிதா...., இன்னைக்கு உங்களோட ட்ரீட்ன்னு சொல்லிட்டு, இப்படி எங்க வயிறை வாட விடலாமா...? வேகமா போய் எங்களுக்கு ஆளுக்கொரு கட்லட் வாங்கிட்டு வாங்க.

"எனக்கு டொமேடோ சாஸ்...., ராஜுவுக்கு சில்லி சாஸ்...., மனோவுக்கு பிளெயின்....", வேகமாக அடுக்கினான்.

"சரியான தீனிப்பண்டாரங்க....", ராதா அவனைப் பார்த்தவாறே..., அடிக்குரலில் அவனிடம் சீற...., அது காதில் விழுந்ததாகவே அவன் காட்டிக்கொள்ளவில்லை.

பெண்கள் மூவரும் எழுந்து செல்ல...., "மனோ...., என்னமோ ஒரு மாதிரி அவஸ்த்தையா இருக்குடா...", அருண் ஆழ்ந்து சொன்னான்.

அவன் சொல்லவே...., ராஜு வேகமாக அங்கிருந்து எழுந்து சென்றான். "இவன் எங்கடா போறான்...?", அருண், மனோவிடம் கேட்க, அவனிடம் எதற்கும் பதில் இல்லை. இதழில் ஒட்டவைத்த சிறு புன்னகை மாறாமல் அப்படியே இருந்தான்.

"நீ என்னடா...., ஒரே நாளில் யோகி ஆயிட்டியா என்ன...?", அவனை வம்பிழுத்தான்.

அதே நேரம் பெண்கள் கட்லட்டுகளுடன் வரவே...., பேச்சு தடை பட்டது. ராஜு அருணிடம் வேகமாக வந்தவன்..., "அருண் சீக்கிரம் வா...", அவன் கையைப் பிடித்து இழுத்தான்.

"எங்கடா...?", புரியாமல் கேட்டான்.

"அங்கே டாய்லெட் எல்லாம் ஃப்ரீயாதான் இருக்கு...", வேகமாகச் சொன்னான்.

"இப்போ யாருடா டாய்லெட் போகப்போறா...?".

"இப்போ நீதானே அவஸ்த்தையா இருக்குன்னு சொன்ன...?",

தான்தான் புரியாமல் கேட்டுவிட்டோமோ என்று குழம்பினான் ராஜு.

‘ஆண்டவா...., நான் எதை நினைத்து சொன்னால்...., இவன் எதை புரிஞ்சுக்கிறான் பாரு...’, நொந்துகொண்டவன்...., அதை வெளிக்காட்டாமல் “இப்போ சரியா போச்சுடா...., நீ உக்காரு, இங்கேபார் என்ன வாங்கிட்டு வந்திருக்காங்கன்னு பாரு, உக்காந்து சாப்பிடு”, ராஜுவை திசை திருப்பினான்.

“சரி...”, ராஜுவும் முன்னதை மறந்துவிட்டு கட்லட்டில் கவனமாகிவிட, பெண்களின் பார்வை அருணைத் துளைத்தது. அதை உணர்ந்தவன்...., “காலையில் கொஞ்சம் வயிறு சரியில்லை அதான்...”, சமாளிக்க முயன்றான்.

ஆனால் ராஜுவோ அதற்கும், “அப்படியா..”, எனக் கேட்டு ஆப்பு வைத்தான்.

அருண், மனோவை பரிதாபமாக ஒரு பார்வை பார்க்க, “நீங்க உங்களுக்கு எதுவும் வாங்கிக்கலையா...?”, கட்லட்டை பிய்த்து வாயில் போட்டவாறு, வேறு பேச்சுக்கு தாவினான் மனோ.

“இல்ல...., எங்களுக்கு வயிறு நிறைஞ்சு இருக்கு, நீங்க சாப்பிடுங்க”, வெடுக்கென சொன்னாள் அனிதா.

“அப்போ அங்கே வச்சே சாப்பிட்டு வந்துட்டீங்களா...?”, ராஜு ரிசப்சனை காட்டிக் கேட்டான்.

“ஆமா...., இங்கே வந்தால் நீங்க புடுங்கி தின்னுட்டீங்கன்னா...., அதான்...”, அதற்கும் எகிறினாள்.

“ஓ...”, ராஜு தாராளமாக ஒரு ‘ஓ’வை போட்டவன்...., பிறகு தெளிந்தவனாக, “ச்சே... ச்சே...., நாங்க அப்படியெல்லாம் செய்ய மாட்டோம்...., இல்லடா..”, வேகமாக மறுத்தவன், நண்பர்களையும் துணைக்கழைத்தான்.

‘அடிங்கொய்யால...., அவ ஓட்டுறது கூட தெரியாமல்...., பக்கி, எப்படி போய் சிக்குது பாரேன்...’, அருண் கடுப்பானான். சாதாரண நேரமாக இருந்தால் அவனும், ராஜுவிற்கு ஈடாக பேசக்கூடியவன்தான், ஆனால் இன்று ஏனோ அது முடியவில்லை.

“ஆமா...., நீங்க அப்படியெல்லாம் செய்ய மாட்டீங்க. கண்டுக்காமல் இருப்பீங்க அதானே...”, அனிதா இரு பொருள்பட உரைத்தாள்.

அவள் குரலில் கோபத்தை உணர்ந்த ராஜு, “நீ கோபமா இருக்கியா..?”, அவளிடமே கேட்டான்.

“இல்ல..., சில்லுன்னு இருக்கேன்...”, அவனிடம் சிடுசிடுத்தாள்.

“ம்...”, கேள்வியா பதிலா என்ற தோரணையில், குத்துமதிப்பாக மண்டையை உருட்டினான் ராஜு. நித்யா அனிதாவின் கரத்தை பிடித்து அமைதிப்படுத்த, அருண், ராஜுவின் காலை மிதித்து அடக்கப் போகையில்...., மனோ தன் காலை அவன் உதைப்புக்கு கொடுத்துவிட்டு, அருணை கண்களால் அடக்கினான்.

தான் இப்பொழுது மட்டும் ராஜுவை உதைத்திருந்தால்...., அவன் கொஞ்சம் கூட தயங்காமல்...., ‘ஏண்டா என்னை மிதித்தாய்..’, என்று கேட்டிருப்பான் என்ற உண்மை காலதாமதமாகப் புரிய, , மனோவை மன்னிப்பு வேண்டும் பார்வை பார்த்தான்.

மூன்று ஆண்களுமே வழக்கத்தைவிட அதிகமான ஒதுக்கத்தோடும்..., கவனத்தோடும் நடந்துகொள்வதை, பெண்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள். ராஜு கூட அனிதாவிடம் சிறு ஒதுக்கம் காட்டினான். அதை அனிதாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அருணோ...., ராதாவைப் பார்த்தாலே...., அவளை பார்வையாலேயே கபளீகரம் செய்பவன்...., அன்று மறந்தும் அவள் பக்கம் திரும்பவில்லை. மனோ எப்பொழுதுமே விறைப்பாகவே நடந்துகொள்வான், நித்யா ராகவனிடம் பேசினால் மட்டுமே அவனிடம் சிறு சலனம் வந்துபோகும்.

இன்று மிகவும் சாதாரணமாக நடந்துகொண்டான். ஆனால் மூன்று ஆண்களுமே தவறாமல் செய்த ஒரே விஷயம்...., தங்கள் மனதுக்கு பிடித்தவர்களின் கண்களை சந்திக்க மறுத்தார்கள், அதேபோல்...., மிகுந்த உற்சாகமாக தங்களை காட்டிக்கொள்ள முயன்றார்கள்.

அதிலும் அருண் கேலி செய்வதும், அது புரியாமல் ராஜு குழம்புவதும், அதையே கெட்டியாக பிடித்துகொண்டு மனோ இன்னும் கலாய்ப்பதும் தொடர, இங்கிருந்து சென்றால் போதும் என்ற முடிவிற்கு, பெண்களை வர வைத்தார்கள்.

அதிலும் முதல்நாள் தாங்கள் பார்த்த அதே மனநிலையில் அவர்கள் இருக்க, பெண்களோ...., மனதுக்குள் அவர்களை சுமந்துகொண்டு, அவர்களின் காதலுக்காக ஏங்கும் நிலையில், தாங்கள் இருப்பதை உணர்ந்தார்கள்.

‘ஏன் இவர்களைப் பார்த்தோம்...?’, என்று மூவரும் சிந்திக்க, இவர்களைப் பார்த்ததால்தான், எலியும் பூனையுமாக இருந்தவர்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் என்ற உண்மை புரிய, தங்களையே கட்டுப்படுத்திக் கொண்டார்கள்.

“சரி...., படம் துவங்க டைம் ஆயிடுச்சு...., நாம போகலாம்....”, மனோ கடிகாரத்தைப் பார்த்தவாறே உரைக்க, மறுபேச்சின்றி அனைவரும் கிளம்பினார்கள்.

ஏற்கனவே டிக்கெட் எடுத்துவிட்டதால்...., தங்கள் எண்ணுக்குரிய இருக்கையில் அவர்கள் போய் அமர, முதலில் சென்ற நித்யாவோ..., அவர்களது இருக்கைக்கு பக்கத்து இருக்கையில் ஒரு ஆண் அமர்ந்திருப்பதைப் பார்த்தவள்...., ஒரு இருக்கையை விட்டுவிட்டு, அடுத்த இருக்கையில் அமர்ந்தாள்.

அவள் அருகில் ராதா, அனிதா அமர்ந்துவிட, ஆண்கள் மூவரும் செய்வதறியாமல் திகைத்தார்கள். “அருண்...., அங்கே போய் உக்கார்...”, நித்யாவுக்கு அடுத்திருந்த இருக்கையைக் காட்டி மனோ சொல்ல...., நித்யாவின் கண்களில் தெரிந்த ஜுவாலையில், அருண் பின்வாங்கினான்.

அருண் பார்வையாலேயே தன் மறுப்பை தெரிவிக்க, மனோ ராஜுவைப் பார்க்க, அவனோ இவர்களைக் கண்டுகொள்ளாமலே, அனிதாவின் அருகில் சென்று அமர்ந்துவிட்டான்.

மனோ ராஜுவின் செய்கையில் திகைத்தவன்...., “அருண்...., புரிஞ்சுக்க...?”, மனோவின் குரல் கெஞ்சிற்று.

“மனோ...., இதை என்னால் செய்ய முடியாது...?”, சொன்னவன், ராஜுவின் அருகில் சென்று அமர்ந்துகொண்டான்.

வேறு வழியில்லாமல்..., நித்யாவின் அருகில் அவன் சென்று அமர, அவள் பார்வையோ அவனையே துளைத்தது. எவ்வளவு நேரம்தான்

அவனும் தன்னை கட்டுப்படுத்திக்கொள்ள முடியும்...?
அடிப்பார்வையாக நித்யாவைத் திரும்பிப் பார்த்தான்.

அதே நேரம் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு..., திரையில் படம் துவங்க முன்னோட்டம் ஓடியது. திரையில் ஒளிர்ந்த வெளிச்சம் நித்யாவின் முகத்தில் பட்டு தெறிக்க...., அவள் கண்ணில் வைரத்துளியாய் மினுமினுத்தது...., கண்ணீர் துளி.

அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வழிவதைக் காணும் தைரியமற்றவனாய்...., தன் இவ்வளவு நேர பிடிவாதத்தையும், முகமூடியையும் கழட்டி வீசியவன்...., சட்டென அவள் வலக்கரத்தை, தன் இடக்கரத்துக்குள் கோர்த்து பிடித்தான்.

அதே நேரம் படத்தின் டைட்டில் பெருத்த இசையோடு அறிமுகப்படுத்தப்பட, அந்த இசையின் அதிர்வாலா..., இல்லை அவள் கரத்தை பிடித்துவிட்டோமே என்ற படபடப்பா தெரியவில்லை, மனோவின் கரத்தில் ஒரு மெல்லிய நடுக்கம்.

***

# மௌனம் – 18.

படம் துவங்கவே...., அருண் வேகமாக எழுந்து வெளியே சென்றான். ‘அவனுங்க ரெண்டுபேரும் அவனுங்க ஆளுங்களோட ஜோடி போட்டுக்கிட்டு படத்தை பார்ப்பானுங்க. நான் மட்டும் இளிச்சவாயனா...?’, செல்லும் அவன் மனம் குமுறியது.

அருண் எழுந்து செல்வதைப் பார்த்த அனிதா..., ராதாவை அழுத்தமாகப் பார்த்து, தலையை அசைக்க, தன் தலையை மையமாக அசைத்த ராதா, அவன் பின்னால் சென்றாள்.

அருண் எங்கே என்று அவள் விழிகள் துழாவ...., அருணோ...., வராண்டாவின் ஒரு மூலையில் போடப்பட்டிருந்த இருக்கையில் சென்று அமர்ந்து, கவிழ்ந்து தன் தலையை கைகளில் தாங்கிக் கொண்டிருந்தான்.

அவன் அமர்ந்திருந்த கோலமே அவன் மனநிலையை அவளுக்கு உணர்த்த, ‘இவ்வளவு ஆசை இருக்குறவங்க, ஏன் அப்படி நடந்துக்கணும், பின்னாடி இப்படி வருத்தப்படணும்...., நல்லா படட்டும்...’, கோபமாக எண்ணினாள்தான், ஆனாலும் அவனை அப்படியே விட்டுச்செல்ல மனமில்லாமல் அவன் அருகில் சென்று அமர்ந்தாள்.

தன் அருகில் யாரோ அமர்வதை உணர்ந்தாலும், நிமிர்ந்து பார்க்காமல் இருந்தான் அருண். “என்ன படம் பாக்கலையா...?”, ராதாவின் குரல் தயங்கி ஒலிக்க, அவசரமாக நிமிர்ந்து பார்த்தான்.

“ராதா...”, கண்களில் காதலைத் தேக்கி, அந்த ஒற்றை வார்த்தையில் தன் நேசம் முழுவதையும் அவன் கொட்டி அழைக்க, உருகித்தான் போனாள்.

“அருண்...”, கொஞ்சம் அதிர்வும், நம்பமுடியாத தன்மையோடும் ஒலித்தது அவள் குரல்.

“ராது...., ராதா...”, தடுமாறிப் போனான். அவனால் நம்ப முடியவில்லை, தாங்கள் விலக முயன்றாலும், தங்களைத் தொடரும் அவர்களது நேசம் கண்டு உள்ளம் நனைந்தான்.

ராதாவோ..., அவனது செல்ல அழைப்பு ஏற்படுத்திய உணர்வை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

அவர்களது நேசத்தை ஏற்க முடியாத தங்கள் நிலையை எண்ணி கலங்கியவன்....., இமைகளை அழுந்த மூடித் திறந்தபொழுது, அவன் கண்களில் இருந்த அன்னியோனியம் தொலைந்து போயிருந்தது.

அவன் அழைப்பில் உருகிக் கொண்டிருந்தவள், அவன் பார்வையில் சடாரென்று மாறிய ஒட்டாத தன்மையைப் பார்த்தவளின் உள்ளம் துடித்தது.

அவள் கண்களில் வலியைக் கண்டவன், “ராது...., நீ படம் பாக்கலையா..? என்ன இந்தப்பக்கம்...?”, பேச்சை சாதாரணமாக மாற்றினான்.

“இந்த கேள்வியை நான் வந்த உடனேயே கேட்டேன். நீங்க படம் பாக்கலையா...?”, அவனையே பார்த்தாள். அவளிடம் கோபம் முளைவிட்டது.

“ம்....., பாப்கார்ன் வாங்கலாம்னு வந்தேன்....”, சமாளித்தான்.

“நீ...?”, புருவம் தூக்கி அவன் வினவ....,

“அதான்...., எங்கே நீங்க வாங்கிடுவீங்களோன்னு நினைச்சுதான் நான் வந்தேன். ஏன்னா...? இன்னைக்கு எங்களோட ட்ரீட் ஆச்சே...”, அசராமல் அவனுக்கு திரும்பக் கொடுத்தவள், இருக்கையிலிருந்து எழுந்து சென்றாள்.

அவள் கோபத்தை, அவளது நடையிலேயே உணர்ந்துகொண்டவன், அவளைப் பின்தொடர்ந்தான். இரண்டு லார்ஜ் பாப்கார்ன் வாங்கியவள், “உங்களுக்கு ஜூஸ் ஏதாவது...?”, கேள்வியாக இழுக்க,

“ரெண்டு கோக் வாங்கு...”, சொன்னவன் அவள் உடனே நின்றுகொண்டான்.

அவள் கைக்கு ஒன்றாக பாப்க்கார்னை எடுத்துகொண்டு செல்ல, “ராது...., ஒரு நிமிஷம்...”, சொன்னவன், ஒரு ட்ரேயில் கோக்கை வைத்தவன், அவள் கையில் இருந்த பாப்க்கார்னை அதில் வைக்கச் சொன்னான்.

மறுபேச்சின்றி அவள் வைக்க, “இப்போ போ...”, அவன் சொல்ல,

‘நீங்க..?’, என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“நான் வரல...., நீ போ...”, அவன் சொல்லி முடிக்கும் முன்பு, ட்ரே அவன் கைக்கு மாறியிருந்தது. வெடுக்கென திரும்பி, அதே வேகத்தில் திரையரங்குக்குள் நுழைந்தாள்.

“ராது...., நில்லேன்...., ம்ச்...., சொன்னா கேளு...”, அவனது எந்த அழைப்பும் அவளை திரும்ப வைக்கவில்லை.

“ஹம்...., இன்னைக்கு வேடிக்கை மட்டுமே பாக்கணும்னு என் தலையில் எழுதியிருந்தால், யாரால் அதை மாத்த முடியும்...”, புலம்பியவாறு அவள் பின்னால் சென்றான்.

திரையரங்குக்குள் நுழைந்தவனை இன்ப அதிர்ச்சி தாக்கியது. ராதாவின் இருக்கைக்கு அனிதா மாறியிருக்க, அவள் அருகில் ராஜு அமர்ந்திருந்தான். ராதா காலியான இருக்கையில் சென்று அமர, அவள் அருகில் இருந்த இருக்கை காலியாக இருந்தது.

முகம் விகசிக்க அவள் அருகில் வேகமாக சென்று அமர்ந்தவன்...., ராதாவின் கையில் ட்ரேயை கொடுத்தவன், நிம்மதியாக அமர்ந்து, பெருமூச்சொன்றை வெளியேற்றினான்.

அவன் செய்கையைப் பார்த்த ராதாவுக்கு, ஒருபக்கம் அவன் மேல் கோபம் இருந்தாலும், ‘ஏன் இப்படி...?’, என்று அவனை எண்ணி கவலையும் கொண்டாள்.

அவள் கையில் இருந்த ஒரு பாப்க்கார்ன், கோக்கை எடுத்தவன், “ராஜுவுக்கு கூல்ட்ரிங்க்ஸ் ஒத்துக்காது, அவனுக்கு கொடுக்க வேண்டாம்னு சொல்லிடு...”, ராதாவின் காதில் சொன்னான்.

“யார்ட்ட...?”, அவள் வெடுக்கென கேட்க, அதற்கு பதில் சொல்லாமல் அமைதியாகிவிட்டான்.

‘இதுக்குமட்டும் பதில் சொல்ல மாட்டாரே...’, மனதுக்குள் நொடித்தவள், மறுக்காமல் அனிதாவிடமும் உரைத்தாள்.

அனிதாவின் கையில் இருந்த கோக்கை ராஜு ஆசையாகப் பார்க்க, அதை அவனிடம் கொடுக்காமல், நித்யாவிடம் கொடுத்தாள் அனிதா.

“அனி...., எனக்கு வேணும்...”, அவள் கையை சுரண்டினான்.

“ராஜு...., உங்களுக்குத்தான் ஒத்துக்காதுல்ல...., பேசாமல் இருங்க. இந்தாங்க பாப்கார்ன் சாப்பிடுங்க...”, அவன் கையில் பாப்கார்ன் பாக்கெட்டை திணித்தாள்.

“பாப்கார்ன் சாப்பிட நான் என்ன சின்ன பையனா...?”, அவளிடம் முரண்டு பிடித்தான்.

“பின்ன...., நீங்க என்ன தாத்தாவா...?”, அவள் கேலியில் இறங்கினாள்.

“நீயும் இவனுங்களோட சேர்ந்துட்ட...”, முகத்தை தூக்கி வைத்து கொண்டான். அவன் செய்கையில் சிரித்தவள்...., அவன் கரத்தை தோளோடு சேர்த்து பிடித்துக் கொண்டாள். அவளது செய்கையில் அவன் கோபம் பறந்தோட, சற்று சாய்ந்திருந்த அவள் தலையோடு தன் தலையை இணைத்துக் கொண்டான்.

இங்கே நித்யாவின் கரமும், மனோவின் கரமும் இன்னும் விலகிக் கொள்ளவில்லை. நடுங்கிய அவன் கரத்தை அவள் பிடித்து ஆறுதல் அளித்தாளா...? இல்லையென்றால்...., அவள் வருத்தப்படுவது பிடிக்காமல் அவன் அவளுக்கு ஆறுதல் அளித்தானா என்பதை பிரித்தறிய முடியவில்லை.

இடைவேளை வரும் மட்டும், ஆறுபேரின் கவனமும் ஒரு பொட்டுகூட திரையில் பதியவில்லை என்பது மட்டும் அப்பட்டமான உண்மை. மூன்று ஜோடிகளும், தங்கள் ஜோடியின்மேல் தாங்கள் கொண்டுள்ள நேசத்தை, தங்களை அறியாமல் வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் அருகாமையும், ஆறுதலும்...., மௌனமும் கூட ஒருவருக்கு ஒருவர் மிகவும் தேவையாக இருந்தது.

இடைவேளையின் பொழுது கூட...., பிரிய மனமில்லாமலும், விலகிக்கொள்ள மனமில்லாமலும் பிரிந்தார்கள். ஒரு தோழமை, புரிதல், நெருக்கம், காதல் என அனைத்தையும் அந்த திரையரங்கு அவர்களுக்கு போதித்தது.

ரெஸ்ட் ரூம் சென்றவர்கள் அமைதியாகவே இருக்க...., “என்னப்பா இது...?”, ராதா துவங்கினாள்.

“நித்தி...., அவங்க வாயைத் திறக்கவே போவதில்லை என்பது மட்டும் எனக்கு தெளிவா தெரியுது. ஆனால் அதே நேரம்....., மூணுபேரும் நம்மை விரும்பவும் செய்யிறாங்க, அதுவும் எனக்கு புரியுது, என்னதான் செய்யிறது...?”, அனிதா கோபமும், ஆற்றாமையும் கலந்து புலம்பினாள்.

“எவ்வளவு தூரம் போறாங்கன்னு நாமளும் பாக்கலாம்...., கண்டிப்பா இதுக்கு ஒரு முடிவு இருக்கு...”, நித்யா பேச்சை முடித்துக் கொண்டாள்.

அதன் பிறகு படம் பார்க்க யாருமே தயாராக இல்லை. எனவே ஹோட்டலுக்கு கிளம்பிவிட்டார்கள். இசிஆர் தாபாவில் தங்கள் காரை நிறுத்திவிட்டு அவர்கள் உள்ளே நுழையும்பொழுது, நேரம் ஒன்றை நெருங்கியது.

வாரத்தின் இறுதிநாள் என்பதால் கூட்டம் சற்று அலைமோதியது. அங்கே வேலை செய்யும் பையன் இவர்களைப் பார்த்து ஓடி வந்தவன், “என்னண்ணே இன்னைக்கு கொஞ்சம் சீக்கிரம் வந்துட்டீங்க...., இருங்க இப்போ அந்த குடில்ல இருக்க ஃபேமிலி போய்டுவாங்க, நீங்க அங்கே உக்காரலாம்....”, சொன்னவன் உடனடியாக, ‘ரிசர்வ்டு’ போர்ட்டை தொங்கவிட்டான்.

அவர்களுக்குத் தேவையானதை ஆர்டர் செய்யும்வரை அங்கே அமைதியே நிலவியது. “வேற எங்கே போறோம் அனி...”, அங்கிருந்த அமைதியைக் கலைத்தான் ராஜு.

“என்னைக் கேட்டா...., மனோவையே கேளுங்க...”, அனிதாவின் பார்வை மனோவை துளைத்தது. இவ்வளவு நேரம் தன் கரத்தை விடவே மனமில்லாதவன் போன்று கெட்டியாக பிடித்து வைத்திருந்தவன்...., இப்பொழுது ஒட்டாத பார்வை பார்ப்பதும், பார்வையைத் தவிர்ப்பதும்...., நித்யாவால் தாங்க முடியவில்லை.

எதையோ தாங்கள் எதிர்பார்த்து வர....., இங்கே அதற்கு மாறாக நடக்கும் விஷயம்...., அங்கே சாப்பிடும் மன நிலையிலோ...., அவர்களோடு சகஜமாக உரையாடும் மன நிலையிலோ, பெண்கள் இருக்கவில்லை.

“ஏன் எப்பவும் கோபமாவே பேசுற...”, வழக்கமான அவன் கேள்வியைக் கேட்க, “அதெப்படித்தான் எப்பவுமே எதுவுமே உங்களுக்கு புரிய மாட்டேங்குதோ..., எனக்கு அதுதான் சுத்தமா புரியலை”, இருக்கும்

கோபம் முழுவதையும் அவன்மேல் காட்டிவிட்டு,

“நித்தி...., எழுந்து அங்கே போய் உக்காருடி...”, அவளை கிட்டத்தட்ட இழுத்து எழுப்பிவிட்டாள்.

ராஜு அப்பாவியாக அவளை விழிவிரித்துப் பார்த்ததை அவள் கண்டுகொள்ளத் தயாராகவே இல்லை. “அருண்..., எனக்கு சாப்பாடு வேண்டாம்...”, ராஜு சற்று கோபமாக உரைக்க,

மனோவிடம் இப்பொழுது ஒருவித இறுக்கம் குடிகொண்டிருந்ததை நித்யாவும் உணர, அவளுக்கும் அங்கே இருக்கவே மனம் வரவில்லை. “நித்யா...., எனக்கு சாப்பாடு வேண்டாம்...., பேசாமல் கிளம்பிடுவோமா...?”, நித்யாவிடம் அனிதா கேட்டாள்.

“சரி...”, நித்யாவும் எழுந்துவிட, ஆண்கள் மூவரும் என்ன செய்வதென்றே தெரியாமல் திகைத்தார்கள்.

அதிலும் அருணும், ராஜுவும் மனோவின் முகத்தை பதட்டமாகப் பார்க்க, அவனோ குனிந்த தலையை நிமிராமல் அமர்ந்திருந்தான். அவனது செய்கை நித்யாவை அதிகம் பாதிக்க, வெடுக்கென இருக்கையை உதறிவிட்டு எழுந்து வெளியே சென்றாள். அனிதா அவளைப் பின்தொடர்ந்து செல்ல, ராதா என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்திருந்தாள்.

நித்யா சென்றபொழுது எழுந்த அவளது விசும்பல்...., மனோவின் இதயத்தை கசக்கிப் பிழிந்தாலும், ‘இதில் தன்னால் எதுவும் செய்ய முடியாது’ என்பதுபோல் தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தான்.

அருண் மனோவின் கரத்தை அழுத்த, நிமிர்ந்து பார்த்த மனோவின் விழிகள் ரத்தமென சிவந்திருந்ததைக் கண்ட ராதா திகைத்தாள்.

“மனோ...., அழுவாதடா...”, அனிதாவின் பின்னால் ஓடத் துவங்கிய ராஜு, மனோவின் நிலை கண்டு, அவன் அருகில் வந்து அவன் தோளை அழுத்திக் கொண்டான்.

அருண் அங்கே இருக்க முடியாமல்...., சட்டென எழுந்து கைகழுவும் இடத்துக்குச் செல்ல, ராதாவால் அருணின் பின்னால் செல்லாமல் இருக்க முடியவில்லை.

அங்கே அவள் கண்ட காட்சியை நம்ப முடியாமல், இமை தட்டி விழித்தவள், வேகமாக அருணை நெருங்கினாள். அவனோ...., அவள் வந்ததைக் கூட உணராமல்...., மூச்சுக்காற்றுக்கு தவிப்பவன் போன்று...., வேகவேகமாக ஆழமான மூச்சுக்களை விட்டு தன்னை கட்டுப்படுத்த போராடிக் கொண்டிருந்தான்.

ராதாவுக்கு அப்பொழுது ஒன்று புரிந்தது...., ராஜுவிற்கும், மனோவிற்கும், அருணிற்கும் மனதளவில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்பதே. மேலே யோசிக்க முடியாமல் அருணின் நிலை அவளை இழுக்க....,

“அருண்...”, அவன் தோளில் கைவைத்து தன்பக்கம் திருப்பினாள்.

திகைப்பாய் திரும்பியவன்...., அங்கே ராதா நிற்பதைப் பார்த்து, நொடி கூட தாமதிக்காமல், அவள் தோள் சாய்ந்து விசும்பினான். அவன் முதுகு குலுங்குவதில் இருந்தும், கண்ணீர் துளிகளை அவள் தோள் அவளுக்கு உணர்த்துவதில் இருந்தும், அவன் அழுவதை உணர்ந்தவள், வேதனை கொண்டாள்.

“என்னம்மா...., என்ன...? இப்போ எதுக்கு இப்படி அழறீங்க...? ம்ச்..., இங்கே பாருங்க... அருண்....,” அவனை விலக்க அவள் எடுத்த எந்த முயற்சியும், அவனிடம் பலிக்கவில்லை.

“எங்களை விட்டு போய்டுவீங்களா...? எங்களை வெறுத்துட்டீங்களா..?”, அவன் குரலில் வேதனை வழிந்தது.

“அருண்...., அப்படியெல்லாம் எதுவும் இல்லை...”, அவள் சமாதானம் எதுவும் அவனை எட்டியதாகவே இல்லை. அவன் நிலையிலும் எந்த மாற்றமும் இல்லை.

“என்ன இது சின்னப் பிள்ளை மாதிரி அழுதுட்டு...”, அவன் முதுகை வருடினாள். அவள் செய்கையில் ஆறுதல் கண்டவன், “நீங்க எங்களை விட்டுப்போவதை, எங்களால் தாங்கிக்க முடியாது ராது...., மனோ, ராஜு ரொம்ப பாவம்...., அவனுங்க உயிரோடவே செத்துடுவாங்க”, அவன் சொல்லச் சொல்ல, அவனது அணைப்பு இறுகியது.

“அப்போ நீங்க...?”, கோபமாகக் கேட்டாள் ராதா. அந்த நேரம் கூட, நண்பர்களைப் பற்றி மட்டும் பேசுகிறானே என்று இருந்தது அவளுக்கு.

“நான்…., நான்…., நானுந்தான் செத்துடுவேன்…”, இப்பொழுது அவனது இறுக்கத்தில் அவளால் மூச்சு கூட விட முடியவில்லை.

“அருண்…., இவ்வளவு ஆசையை மனசுக்குள்ள வச்சுக்கிட்டு, உங்களுக்கெல்லாம் அப்படி என்ன பிடிவாதம் வேண்டிக் கிடக்கு….., நீங்களும் கஷ்டப்பட்டு, எங்களையும் ஏன் இப்படி கஷ்டப்படுத்துறீங்க…?”, அவனை செல்லமாக அடித்தாள்.

அவளது இந்த கேள்வியில் தெளிந்தவன்…., வேகமாக அவளை விட்டு விலகினான். குழாயைத் திறந்து தன் முகத்தை வேகமாகக் கழுவியவன், “நீ கிளம்பு ராது…”, ஒட்டாத குரலில் சொன்னான்.

அவன் செய்கையில் கோபம் கொண்டவள்…., எட்டி அவன் சட்டைக் காலரைப் பிடித்தாள். “ஏன்…? நான் ஏன் போகணும்னு கேட்கறேன்…., இவ்வளவுநேரம் கட்டிக்கிட்டு இருக்கும்போது என்னை போகச் சொல்லணும்னு தோணவே இல்லல்ல. ஆனா மனசு இப்போ சமாதானம் ஆன உடனே விரட்டுவீங்களோ…?”, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கியவாறு கேட்டாள்.

தனக்கு நெருக்கமாக…., கோபத்தில் சிவந்த ராதாவின் முகத்தைப் பார்த்த அருணுக்கு, அவள் கத்துவதோ, அவள் கோபமோ…., அவள் பேச்சோ…., எதுவுமே அவன் கருத்தில் பதியவில்லை. மாறாக…., ‘இப்படி ஒரு நெருக்கம் இனிமேல் எனக்கு வாய்க்காது…’, என்பது மட்டுமே அவனுக்குத் தோன்றியது.

உடனே சுற்றுமுற்றும் பார்வையை ஒட்டி, அவ்விடத்தில் யாருமில்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டவன், வழக்கமான அவனது கிறக்கப் பார்வைக்கு, அவன் பார்வை மாறியிருக்க, “நான் ஒருத்தி கேட்டுக்கிட்டே இருக்கேன்…., இப்படிப் பார்த்தால் ஆச்…”, மேலே பேச அவள் இதழ்களை அருண் அனுமதிக்கவில்லை.

விழிகள் தெறித்துவிடுவதுபோல் திகைத்து விழித்தவளுக்கு, மூளை வேலை நிறுத்தம் செய்திருந்தது. அவள் கைகள் அவனை விலக்க முயல, அது முடியாமல்…., அவன் சட்டைக்காலரையே இறுக பற்றிக் கொண்டாள்.

நேரம் கடக்க…., “அருண்…”, ராஜேஷின் அதிர்ந்த குரலில் சட்டென அவர்கள் விலக, மேலே அங்கே தாமதிக்க முடியாமல், ராதா அங்கிருந்து

அகன்றாள்.

“அருண்...., நீ...., ராதா...”, திக்கித் திணறினான் ராஜேஷ்.

“இல்லடா...., அவ கண்ணுல தூசி விழுந்துடுச்சாம் அதான்...”, அருண் சமாளிக்க....,

“இல்லையே...., நீ அவளுக்கு முத்தம் கொடுத்த...., நான் பாத்தேன்...., இது தப்பு...”, அவன் சொல்ல, வேகமாக அவன் வாயை மூடினான் அருண்.

“சரி எதோ தெரியாமல் கொடுத்துட்டேன். விட்டுடேன்....., நானே கொஞ்சம் பதட்டமா இருக்கேன், இதில் நீ வேற...., இப்போ மனோ எங்கே...?”, தலையை அழுந்த கோதியவாறு கேட்டான்.

அவன் அங்கேதான் இருக்கான்...., இப்போ பரவாயில்லை. நித்யாவும் அனிதாவும் கோபமா போய்ட்டாங்க. எனக்கு அனிதா வேணும். நீங்க என்னதான் சொன்னாலும்...., என்னால் அவ இல்லாமல் இருக்க முடியாது. படம்பார்க்கும்போது எவ்வளவு சந்தோசமா இருந்தோம்....., இங்கே மட்டும் ஏண்டா...?

“அனிதா எப்பவுமே என்கிட்டே கோபமாவே நடந்துக்கறா. தனியா இருந்தா பாசமா பேசுறா... ஆனா நாம எல்லாரும் சேர்ந்து இருக்கும்போது...., நான் சரியா நடந்துக்கலையா...., இல்ல, எனக்கு கூட்டத்தில் சரியா நடந்துக்க தெரியலையா...?

“நீங்க சொன்ன மாதிரி...., நமக்கு இந்த கல்யாணம் எல்லாம் சரிவராதாடா? அதுவும் எனக்கு, சுத்தமா சரிவராதோ...?”, கலங்கிய குரலில் கேட்டான் ராஜு.

அவனை வேகமாக அணைத்த அருண்...., “எல்லா இடத்திலும் நீ சரியாத்தான் நடந்துக்கற. நாங்கதான் இடத்துக்கு தக்கமாதிரி மாறிடுறோம். அதான்...., அது உன்னை ரொம்ப பாதிக்குது. எல்லாம் விதிப்படிதான் நடக்கும் ராஜு. நம்மால் எதையுமே மாத்த முடியாது.

“இங்கே வரும்போது நாம எடுத்த முடிவென்ன...? ஆனால் விதி நம்மளை எங்கே இழுத்துட்டு வந்து நிறுத்தியிருக்கு பாத்தியா...? சாரிடா...”, ராஜுவின் வருத்தம், அருணை அதிகமாக பாதித்தது.

“பரவாயில்லை...., நான் நாளைக்கு அனி கிட்டே பேசிக்கிறேன். நீ மனோவை வந்து பார்...., வா...”, அருணை அழைத்தவாறு முன்னால் சென்றான்.

“ராஜு...., இங்கே நடந்த எதையும் மனோகிட்டே சொல்லிடாதே சரியா...”, கண்களால் கெஞ்சியவாறு சொன்னான்.

அருண் இதைச் சொல்லவில்லை என்றால்...., கண்டிப்பாக மனோவிடம் அவன் இதை ஒப்பித்துவிடுவான். இப்பொழுதும் ராஜு சொல்லமாட்டான் என்பதற்கு எந்தவிதமாக உத்தரவாதமும் இல்லைதான். ஆனாலும், ’எச்சரித்திருந்தால் ராஜு சொல்லாமல் இருந்திருப்பானோ’ என்ற எண்ணம் எழாமல் இருக்கவே அவ்வாறு செய்தான்.

“ம்...”, அரை மனதாக ஒப்புதல் அளித்தவாறு முன்னால் சென்றான் ராஜு. ‘என் பிபியை ஏத்தாமல் விட மாட்டான்...’, பெருமூச்சொன்றை வெளியேற்றியவாறு பின்னால் சென்றான்.

அருணால் மனோவின் முகத்தை பார்க்கவே முடியவில்லை. அவனது அமைதியை கவனிக்கும் நிலையில் மனோவும் இருக்கவில்லை. எனவே..., ஆர்டர் செய்த உணவுவகைகளுக்கு பணத்தை கொடுத்துவிட்டு, சாப்பிடாமலே அங்கிருந்து வெளியேறினர்.

வீட்டில் ஆவலாக அவர்களை எதிர்பார்த்திருந்த பெற்றோரின் முகங்கள் அனைத்தும், அவர்கள் வந்திறங்கிய கோலம், நேரத்தைப் பார்த்து..., வாடிய மலர்களானது.

ராஜு ஓடிச்சென்று தாயின் மடியில் தலை வைத்து படுத்துக்கொள்ள..., “என்ன ராஜு...?”, அவன் தலையை கோதியவாறே அவன் தாய் வாஞ்சையாக கேட்டார்.

“எல்லாரும் கோவிச்சிக்கிட்டு போய்ட்டாங்கம்மா...”, இவ்வாறு துவங்கியவன், அனைத்தையும் சொல்லிமுடித்த பிறகே அடங்கினான்.

“மனோ என்னப்பா இது...? நாங்களும் ஏதோ நல்ல சேதி சொல்வீங்கன்னு எதிர்பார்த்தோம். எங்களுக்கென்னவோ...., அவங்களுக்கும் சம்மதம் என்றுதான் எங்களுக்கு தோணுது. அப்படியிருக்கும்போது...”, தயங்கியவாறே இழுத்தார் ராஜுவின் தாய்.

“இது நித்யா, அனிதா, ராதா சம்பந்தப்பட்ட விஷயம் கிடையாது. அவங்க குடும்பம் சம்பந்தப்பட்ட விஷயம். நானும், அவங்க அப்பா அம்மா யார்ன்னு, அவங்க சர்ட்டிஃபிகேட்டில் பார்த்தேன்...., ஒரே குடும்பமா இருந்தால் பிரச்சனையை கொஞ்சம் சுலபமா சமாளிக்கலாமோன்னு. ஆனா...., எல்லாம் எங்களுக்கு எதிராவே இருக்கு.

“உங்க ஆசைப்படியே அவங்க குடும்பத்தில் பேசி...., அதில் ஏதோ ஒரு குடும்பம் ஒத்துக்கலன்னா என்ன செய்வீங்க...? பிரச்சனை எனக்குன்னா, நான் ஒதுங்கிக்க தயாரா இருக்கேன். ஆனா இவனுங்கள்ல ஒருத்தனுக்குன்னா என்னால் அதை தாங்கிக்க முடியாது.

“இப்போ சொல்லுங்க..., என்ன செய்யலாம்னு. மனசுக்குள் ஆசை இருந்தால் மட்டும் போதாது...., கொஞ்சம் அதிர்ஷ்டமும் வேணும்...”, படபடவென பொரிந்தான்.

அவன் பேச்சில், பெற்றவர்களே திகைத்தார்கள். மனசுக்குள் ஆசை இல்லாமலா..., அவர்களை திருமணம் செய்ய ஏதாவது வழி இருக்கிறதா என்று ஆராய்ந்து இருப்பான்...? அவனது கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் அமைதியானார்கள்.

“மனோ..., அதென்னடா..., நீ ஒதுங்கிக்கிறது. ஏன்..., எங்களுக்கு அப்படியொரு நினைப்பிருக்கும்னு உனக்கு தோணவே இல்லையா...?”, கோபமாகக் கத்தினான் அருண்.

“இல்லடா...., நீங்களாவது சந்தோசமா இருந்தால் எனக்கு அது சந்தோசம்தான்”,

“இன்னொருமுறை இப்படி பேசுன..., நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். இது இப்படியே எவ்வளவு தூரம் போகும்னு பாக்கலாம். நாம இப்படியே இருந்துடலாம் சரியா...”, பேச்சை அத்தோடு முடித்தான் அருண்.

“அப்போ நான் என்னதான் செய்யணும்...? சொல்லுங்கடா...? எனக்கு எப்படி நடந்துக்கணும்னு தெரியலை. அனிதாவை எனக்கு ரொம்ப புடிச்சிருக்கே, என்னால் அவளை அழ வைக்க முடியாது...”, அப்பாவியாகச் சொன்னான் ராஜேஷ்.

ராஜுவின் பேச்சில் அனைவரின் மனமும் உச்சரித்த ஒரே வார்த்தை...., “ஆண்டவா....”, என்பதுதான்.

“ஏய் ராதா...., உடனே அந்த பெரிசுக்கு போனைப் போடுடி...., இவனுங்க மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்கானுங்கன்னு தெரிஞ்சே ஆகணும்...., அதுதானே, நம்மளை அவனுங்க கிட்டே அனுப்பிச்சிது...”, அனிதா வந்ததுமுதல் எகிறிகொண்டிருந்தாள்.

“அனி..., முதல்ல கொஞ்சம் பொறுமையா இரு. இப்போ அவங்களைப் பத்தி எதுக்கு பேசுறீங்கன்னு கேட்டால் என்ன சொல்லுறது...?”, நித்யா அவளை அடக்கினாள்.

“நீ சரிவர மாட்ட...”, சொன்னவள், தன் அலைபேசியை எடுத்து அவருக்கு அழைத்தாள்.

அவளது அழைப்புக்காக காத்திருந்தவர்போல ஒரே ரிங்கில் அவர் போனை எடுக்க, என்ன பேசவந்தோம் என்பது புரியாமல் சற்று தடுமாறினாள்.

ஆனால் அவரோ...., “சொல்லும்மா...., என்ன வெளியே போயிட்டு சீக்கிரமே வந்துட்டீங்க போல...”, கேள்வியாக நிறுத்தினார்.

“ஆமா...., கொஞ்சம் தலைவலியா இருந்துது அதான் சீக்கிரம் வந்துட்டோம்...”, சற்று தயங்கியவள்..., “எங்களுக்கு ஒரு விஷயம் தெரிஞ்சுக்கணும்...”, அவள் இடைவெளிவிட, எதுவாக இருந்தாலும் அவள் வாயிலிருந்தே வரட்டும் என்று அமைதி காத்தார்.

‘வாயைத்திறந்து என்னன்னு கேக்குதா பாரேன்...., மகா அழுத்தம்’, மனதுக்குள் புலம்பியவள்,

“இந்த மனோ, அருண், ராஜு எல்லாம் நார்மல் ஆட்கள் தானே...?”, எதையோ கேட்கவந்து, எப்படியோ கேட்டுவிட்டாள்.

“அனிதா...”, நித்யாவும் ராதாவும் கண்டிக்கும் குரலில் அழைக்க, மூர்த்தியோ ஒரு படி மேலே போய்...., “நீ மாறவே இல்லை அனிதா. யாரைப்பற்றி என்ன பேசுற...? இனிமேல் அவங்களைப் பற்றி இப்படிப் பேசுவதாக இருந்தால், நீங்க யாரும் அங்கே வேலைக்கே போக வேண்டாம்...”, மேலே அவள் பேச வாய்ப்பு கொடுக்காமல் அழைப்பை

துண்டித்தார்.

***

# மௌனம் – 19.

மேஜைமேல் இருந்த பொருட்கள் அனைத்தையும் மாற்றியவாறே..., எதையோ சிறிது நேரமாக தேடிகொண்டிருந்தான் மனோ. தன் இருக்கையில் அமர்ந்தவாறே நித்யா அதை ஓரக்கண்ணால் கவனித்தாலும், என்னவென்று கேட்காமல், தன் லேப்டாபில் கண்களை பதித்தவாறு அசையாமல் இருந்தாள்.

மனோவும் அவளை நிமிர்ந்து பார்ப்பதும், அவளிடமிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா என்று எதிர்பார்ப்பதுமாக தேடலைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

‘நித்தி...., வாயேன்...?’, அவன் மனம் ஊமையாக அவளிடம் கெஞ்சிக் கொண்டிருந்தது.

‘எழுந்துசென்று என்னவென்று கேட்டுவிடுவோமா...?’, அவள் மனம் பரபரக்க, தன்னை கட்டுப்படுத்தியவாறு...., வேலை செய்பவள்போல் பாவ்லா காட்டியவாறு இருந்தாள்.

இறுதியில் மனோவால் தான் தேடியதை கண்டுபிடிக்க முடியாமல் போகவே, தயங்கியவாறு நித்யாவின் அருகில் வந்தான். அப்பொழுதும் அவள் நிமிர்ந்து பார்க்காமல் போகவே...., “நித்தி...”, மெதுவாக அழைத்தான்.

“சொல்லுங்க...?”, வெட்டுவதுபோல் கேட்டாள். அவளது இந்த கேள்வியிலேயே மனோவின் முகம் வாடிப் போனது. பத்து நாளாக இதே கதைதான்...., அவனிடம் சகஜமாக பேசவில்லை, அவன் பேச முயன்றாலும், கத்தரிப்பதுபோல் பேசி, அவனை தவிக்க விட்டாள்.

ஆனால் மனோவோ அதை கண்டுகொள்ளாமல்...., “குன்றத்தூர் கோடவுனுக்கு எஸ்டிமேட் போட்டுவச்சிருந்தோமே ஒரு பென்டிரைவ்ல...., அதைக் காணோம்...., எங்கேயாவது பாத்தியா...?”, தயக்கமாகவே கேட்டான்.

உண்மையாகவே அந்த பென்டிரைவ் அவன் பேண்ட் பாக்கட்டில்தான் இருக்கிறது என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும் தன்னை எப்படியாவது அவனுடன் சகஜமாக பேசவைக்கவேண்டும் என்ற

ஆசையாலேதான் அவன் அவ்வாறு நடந்துகொள்கிறான் என்பதும் அவளுக்குப் புரியாமல் இல்லை. இந்த சில நாட்களில் ஒருமையிலும் அவளை அழைக்கத்துவங்கியிருந்தான்.

“அதை நான் உங்ககிட்டே நேத்தே கொடுத்துட்டேன்...”, விடேற்றியாகச் சொன்னாள்.

“எனக்கும் அது தெரியும்...., இப்போ அதைக் காணோம்..., கொஞ்சம் வந்து தேடிக் கொடேன்...”, அவன் குரல் அவளிடம் கெஞ்சிற்று.

“இப்போ உங்களுக்கு அந்த டேட்டா தானே வேணும். அதை நான் என்னோட மெயில்ல அட்டாச் பண்ணி வச்சு இருக்கேன். இப்போ அதைத் திரும்ப உங்களுக்கு அனுப்புறேன்...”, அவனிடம் பேசிக்கொண்டே லேப்டாப்பில் நோண்டியவள்....,

“ம்...., அனுப்பிட்டேன் பாத்துக்கோங்க...”, அவ்வளவுதானே என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

அவன் சளைக்காமல் அவளைப் பார்க்க, அவனைக் கண்டுகொள்ளாமல் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். ஒரு நிமிடம் அவன் அங்கேயே நின்றும், அவள் அவனை கண்டுகொள்ளாமல் இருக்கவே, சோர்ந்த நடையுடன் இருக்கைக்குத் திரும்பினான்.

செல்லும் அவன் முதுகை வெறித்த நித்யாவின் மனமோ...., அவன் மனம் அடைந்த வேதனையை விட அதிகம் அடைந்தது.

மனோ - நித்யா இப்படி என்றால்...., ராதா - அருண் வேறு விதமாக மோதிக் கொண்டார்கள்.

“ராதா...., நேத்து டிஸைன் செய்ததை என்கிட்டே காட்டவே இல்லையே....”, அருண் ராதாவின் அருகில் நின்று அவன் கேட்கும்பொழுது,

“நீங்க எப்போ ஆர்க்கிடெக்டில் இருந்து, இன்டீரியர்க்கு மாறுனீங்க...?”, அவன் முகம் பார்க்காமல் பதில் கொடுப்பாள்.

“முதல்ல எல்லாம் காட்டிட்டு தானே இருந்த...?”, அவன் குறைப்படும்பொழுது,

“முதல்ல இருந்த மாதிரியே எல்லா நேரமும் இருக்க முடியுமா...? இல்லன்னா முதல்ல இருந்த மாதிரிதான் எல்லாம் இருக்குதா என்ன...?”, தலை நிமிராமல் அவள் சொல்லும் வேளைகளில், ராதாவுக்கு இவ்வளவு பேசத்தெரியுமா என்று வியந்து போவான்.

“ராதா காபி சாப்பிட போகலாமா...?”, அவளை அழைத்தால்....,

“நித்தி...., உன்னைத்தான்...”, அவளிடம் வார்த்தையைத் திருப்பி விடுவாள்.

“ராதா...., வெளியே போகலாமா...?”, முதலில் அவள் மூக்குடைத்ததை கண்டுகொள்ளாமல் தொடர்ந்தால்...

“எப்படி...., அன்னைக்கு போனோமே அப்படியா...?”, அவள் கேள்வியில், அருணின் கசங்கிய முகத்தை ஓரவிழியில் உணர்ந்தாலும், அன்று நித்யா அழுத அழுகையும், அனிதா வேதனைப்பட்டதும் அவள் கண்களுக்குள் படமாக விரிய, மனதை இறுக்கிக் கொள்வாள்.

“நித்யா...., உங்களுக்கு ஒதுக்கியிருக்கும் லேபரர்ஸ் போதுமா...? இல்லன்னா சொல்லுங்க ஏற்பாடு பண்ணிடுறேன்...?”, மனோ வலிய வாய் கொடுக்கும் பொழுது,

“இதை நீங்க அனிதாகிட்டேதான் கேக்கணும்...?”, இரக்கமே இல்லாமல் வெட்டி விடுவாள்.

“ராதா...., நேத்து ஏதோ புது கலர் காம்பினேஷன் போட்டயாமே...., அது ரொம்ப நல்லா இருந்ததுன்னு மனோ சொன்னான்...”, இதுதான் சாக்கென்று அவள் அருகில் அமர்ந்துகொள்ள அவன் துடிக்க,

“இதோ இந்த பென்டிரைவில் அதோட காப்பி இருக்கு, பாத்துட்டு சொல்லுங்க..”, நொடியில் எடுத்து அவள் நீட்டிவிட,

“அப்படியே போட்டுக் காட்டேன் பாக்கலாம்....”, அவள் மூக்குடைத்ததை கண்டுகொள்ளாமல் அவன் வினவ,

“எனக்கு கொஞ்சம் அர்ஜன்ட் வேலை இருக்கு...., சோ...”, அவள் நிர்தாட்சண்யமாக மறுக்கும்போது....., அந்த பென்டிரைவை அப்படியே அவள் மேஜைமேல் வீசிவிட்டுச் செல்வான்.

இரு ஆண்களும் கஜினி முகம்மதாக படையெடுக்க, பெண்கள் இருவரும் இரும்பாக இருந்தார்கள். அவர்கள் எவ்வளவு விலகிப் போனாலும், அதையெல்லாம் கண்டுகொள்ளாமல்...., அலையை விரட்டும் கரையாக அவர்களிடமே வந்தார்கள்.

அவர்களது இந்த செய்கையே பெண்களை மிகவும் அசைத்துப் பார்த்தது. அவர்களது மன உறுதி அனைத்தும், கரையான் அரிக்கும் புத்தகமாக நாளுக்கு நாள் பலவீனமாகிக் கொண்டே வந்தது.

அது செல்லரித்து மண்மேடாகவே அந்த நாள் வந்ததோ....

அன்று இசிஆர்ப்ராஜெக்ட்டை முடித்து, கீயை ஒப்படைக்கும் நாள். எனவே வேலைகள் அனைத்தும் உச்ச பரபரப்பில் முடிந்து, அன்றைய நாளில் சிறு பூஜைக்கு ஏற்பாடு செய்திருந்தார் கட்டிடத்தின் உரிமையாளர்.

நித்யா - மனோ, ராதா – அருண் இருவருக்கிடையில் அலுவலக பேச்சுக்கள் தவிர, வேறு எதுவும் இப்பொழுதெல்லாம் இடம்பெறவில்லை. ஆண்கள் இருவரும் முழுதாக தங்களை ஒதுக்கிக் கொள்ள முயன்றார்கள்.

அனிதாவும் ராஜுவும் மட்டுமே நெருங்கிப் பழகினார்கள். ராஜுவை தடுக்க முடியாமல் அவர்கள் தேங்க, அனிதாவோ ‘நான் இப்படித்தான்’ என்பதுபோல் நடந்துகொண்டாள்.

சில நேரம் ராஜுவிடம் கோபமாக, சில நேரம் நெருக்கமாக, சில நேரம் உற்ற தோழியாக என பலவிதங்களில் பரிமளித்தாள். ராஜேஷுடனான அவளது பழக்கம், மனோவையும், அருணையும் மிகுந்த கவலைக்குள்ளாக்கியது என்பது மட்டும் உண்மை.

வரவேற்பில் ஒரு பெயிண்டிங்கை வைக்க உதவியவாறு ராஜுவும் அனிதாவும் நிற்க, அவர்களைப் பார்த்த மனோவின் முகம் இன்னதென்று பிரித்தறிய முடியாத பாவனையை வெளிப்படுத்தியது. யோசனையோடு அன்று அனிதாவிடம் பேசியதைச் சுற்றி வந்தது.

“அனிதா...., ராஜு கொஞ்சம் அப்பாவி...”, அருண் பேசத் துவங்கியபோழுதே, “நீங்க உங்க ப்ரண்ட் கிட்டே பேசவேண்டியதை என்கிட்டே பேசுறீங்கன்னு நினைக்கிறேன்...., சாரி...”,

முகத்திலடித்தாற்போல் சொல்லிச் சென்றுவிட்டாள்.

அதையே நினைத்தவன் ஆணியடித்தாற்போல் அங்கேயே நிற்க, அருண் அவன் தோளை அழுத்தவே சுய உணர்வை அடைந்தான்.

“என்ன மனோ…., அவங்களையே பாத்துட்டு இருக்க…?”, அருண் கேட்க, “ராஜு முகத்தில் இப்போ இருக்கற இதே சந்தோசம் நிலைக்கணுமேன்னு வேண்டிக்கறேன் அருண். என்னால் வேற என்ன செய்ய முடியும்…., சரி, நீ அவங்க வந்துட்டாங்களான்னு பாரு.

“இந்த நித்யாவையும், ராதாவையும் காணோமே. கோபத்தில் வராம இருந்துடுவாங்களா…?”, கவலையானான் மனோ.

“அவங்களுக்கு நம்மமேல் கோபம் இருந்தாலும்…., இது அவங்களோட முதல் வேலை…., சோ வராமல் இருக்க மாட்டாங்க”, அருண் சொல்லி வாயை மூடுவதற்கும், ஒரு கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

இருவரும் சாதாரணமாக திரும்பிப் பார்க்க, அதிலிருந்து இறங்கியவர்களைக் கண்டவர்களின் ரத்த அழுத்தம் எகிறியது. நித்யா, பிங்க் வண்ண சுடிதாரில் தேவதையாக மிளிர, ராதா, ஊதா வண்ணப் புடவையில் ஜொலித்தாள்.

“மனோ…., இன்னைக்கு நம்மளை ஒரு வழி பண்ணாமல் விட மாட்டாங்க போல இருக்கேடா. அதுவும் ராது புடவையில்…., சத்தியமா நான் இன்னைக்கு ஸ்டெடி இல்லை மச்சான்…., ஃப்ளாட்டுதான்….”, மனோவின் காதை கடித்தான் அருண்.

மனோ அவன் சொன்னதை கவனித்தாலும்…., மிகக் கச்சிதமாகப் பொருந்திய அம்பர்லா சுடிதாரில் இருந்த நித்யாவின் மேலிருந்து அவனால் பார்வையைத் திருப்பவே முடியவில்லை.

“புடவை என்னடா புடவை…”, அருணின் புலம்பலுக்கு சாதாரணமாக பதிலளித்தவன்…., நித்யாவையே பார்வையால் தொடர்ந்தான்.

அருணோ…., ராதாவையே விழுங்கும் பார்வை பார்த்தான். மனோவையும், அருணையும் பார்த்த பெண்களும், மயங்கவே செய்தார்கள். இருவரும் பட்டு வேஷ்டி சட்டையில் இருந்ததுதான் அதன் காரணம்.

“ராதா...., தெரிஞ்சுதான் புடவை கட்டுனியா...? கில்லாடிதான்... இன்னைக்கு எப்படியும் நீ அருண் கிட்டே இருந்து எதையாவது வாங்காமல் வர மாட்ட”, நித்யா கண்ணடித்து கேலிசெய்ய, அழகாக வெட்கப்பட்டாள் ராதா.

“அடிப்பாவி...., ஒரு பேச்சுக்காவது, ‘அப்படியெல்லாம் எதுவும் இல்ல’ன்னு சொல்லுவன்னு பாத்தா...., இப்படி வெக்கப்படுற. அப்போ முடிவே பண்ணிட்ட, நடத்து நடத்து...”, அதற்கும் அவளை கேலி செய்ய, நித்யாவின் முதுகில் செல்லமாக அடித்தாள் ராதா.

“ம்ச்..., விளையாடாதே நித்தி, என் ஆளு மட்டுமா...? அங்கே மனோவை கொஞ்சம் திரும்பிப் பாரு...., பிறகு சொல்லு...”.

“அது சரியான வெத்து வேட்டு...., களிமண்ணு மாதிரி என்னை பார்த்து மட்டும் வைப்பார், அந்த கொடுமையை நான் பார்க்க வேற வேணுமா...? கடுப்படிக்காம வா...”, மனோ பொதுவாக அப்படி நடந்துகொள்வதால் அவ்வாறு சொன்னாள்.

“அப்போ அதுதான் உன் வருத்தமா...?”, ராதா இப்பொழுது கலாய்க்க, நித்யா அவள் முதுகில் அடித்தாள்.

இவ்வளவும் அவர்கள் வாசலில் இறங்கி கட்டிடத்துக்குள் நுழையும் முன்பு நிகழவே, ஆண்கள் இருவரும் அவர்கள் விளையாட்டில் சில்லு சில்லாக நொறுங்கிக் கொண்டிருந்தார்கள்.

“மனோ...., இன்னைக்கு ஒரு நாளு என்னை விட்டுடுடா...., என்னால் முடியாது...”, சொன்னவன் ராதாவின் பின்னால் செல்ல, மனோ சிரித்துக் கொண்டான். வேகமாக அவனைத் தடுத்தவன்....,

“பாத்துடா...., அவசரப்பட்டு எதையும் செய்துடாதே....., பிறகு அன்னைக்கு மாதிரி, ரெண்டுநாள் ஜுரத்தில் படுத்துடப் போறா...”, மனோவின் குரல் தொடர,

“டேய் மனோ...., அப்போ நிஜமாவே அவளுக்கு உடம்புசரியில்லடா...., நான் முத்தம் கொடுத்ததால் இல்லை...”, வேகமாகச் சொன்னான் அருண்.

“அப்போ அன்னைக்கு அவளுக்கு முத்தமாடா கொடுத்த....”,

அதிர்ச்சியானான் மனோ.

“நீ குத்துமதிப்பாதான் சொன்னியாடா…? நானாதான் வாயை விட்டேனா…? நானும், இந்த ராஜு உன்கிட்ட உளறிட்டானாக்கும்னு நினைச்சேன்…”.

“இந்த விஷயம் அவனுக்கும் தெரியுமா…? சொல்லவே இல்ல…? பரவாயில்லையே, ராஜு கொஞ்சம் தேறிட்டான் போல…”, கொஞ்சம் சந்தோசமாக, தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

“போச்சு…., அவனையும் மாட்டி விட்டுட்டேனா…? இனிமேல் இன்னும் கொஞ்சநேரம் இங்கே நின்னால் என்னென்ன உளறுவேன்னே சொல்ல முடியாது. நான் கிளம்புறேன்…”, அங்கே நில்லாமல் விரைந்தான்.

மனோவின் சிரிப்பு அவனைத் தொடர, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை. உள்ளே சென்றவன்…, ராதா குத்துவிளக்கின் அருகில், அதற்கு எண்ணெய் வார்த்து, திரியை போட்டுகொண்டிருந்தாள். அவள் அருகில் சற்று நெருங்கி நின்றவன், அவளையே உற்று பார்த்துக்கொண்டிருந்தான்.

முதுகைத் துளைக்கும் உணர்வில் சட்டென திரும்பியவள்…, நெருங்கி நின்றிருந்த அவன்மேல் மோதிக் கொண்டாள். பின்னால் நகர்ந்தால் குத்துவிளக்கை இடித்துவிடும் அபாயம் இருந்ததால்…., அவன் பக்கம் சாய்ந்து, அவன் நெஞ்சின்மீது மோதி நின்றாள்.

பூப்பந்தாக தன்மீது அவள் மோதிக் கொள்ள…., “சோ சாஃப்ட்…”, அவன் இதழ்கள் அவனை மீறி முணுமுணுத்தது.

அவன் பேச்சில்…, அவன்மேல் கோபம் வருவதற்குப் பதிலாக வெட்கம் வர, அதை மறைத்தவாறே…., “என்ன…?”, கோபமாக கேட்க முயன்றாள்.

“இல்ல…., நான் ஒரு பூவை மிதிச்சுட்டேன், அதைச் சொன்னேன்…”, சமாளித்தான்.

“திருட்டுப் பூனை…”, அவனை கைகளால் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அங்கிருந்து சென்றாள்.

அவளது கூற்று அட்ச்சர சுத்தமாக அவன் காதில் விழ, அவள் செல்லும்

பாதையை மறித்தவன், “நான் திருட்டுப் பூனையா...., அப்படி என்ன திருடினேனாம்...”, அவளிடம் நியாயம் கேட்டான்.

“தெரியாதவங்களுக்கு சொல்ல முடியும், தெரியாத மாதிரி நடிக்கிறவங்களை என்ன செய்யிறது...”, அவனையே பார்த்தவாறு அழுத்தமாகச் சொன்னாள்.

“ப்ளீஸ் ராது...., இன்னைக்கு நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன். அதை கெடுக்க வேண்டாமே...”, அவன் கெஞ்ச, அவன் கூறியதில் இருந்த உண்மை புரிய அமைதியானாள்.

“உனக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமா...? நான் உனக்கு ஹெல்ப் பண்ணுறேன்...”, இமைக்க கூட மறுத்தவனாக, விழிகளால் அவளை மொய்த்தவாறு அவன் சொல்ல,

“இப்படி பாக்காமல் இருந்தால் அதுவே பெரிய ஹெல்ப் தான்...”, வாய்க்குள் முணுமுணுத்தவாறு சென்றாள். நீண்டநாள் கழித்து அவளது இணக்கம், அருணை அவளைவிட்டு எங்கும் செல்லவிடவில்லை.

அவனது தொல்லைகள் தொடரவே செய்தது. பூ அலங்காரம் செய்யும் இடத்தில்...., “நல்ல வாசனை...”, அவள் கழுத்தின் அருகில் வாசம் பிடித்தவாறு, அவன் சொல்ல, அவனது மூச்சுக் காற்றின் வெப்பத்தில் தகித்தவள், வேகமாக திரும்பிப் பார்க்கவே,

“பூவைத்தான் சொன்னேன்...”, கையில் வைத்திருந்த கொத்துப் பூவை காட்டியவாறு அவன் சொல்ல, கோபத்தை காட்ட முடியாமல் தடுமாறினாள். அவளது இளக்கத்தை உணர்ந்த அருணும் அவளை விடாமல் பின்தொடர்ந்தான்.

ஒரு கட்டத்தில்...., ஃபங்க்ஷனுக்கு உரியவர்கள் வரத் துவங்கவே....,
“அருண், எல்லோரும் வராங்க...., நீங்க போங்க...”, கண்களை சுழலவிட்டவாறு சொன்னாள்.

“அதையெல்லாம் மனோ பாத்துப்பான்...”, அசட்டையாக சொன்னவன், ‘அவளைவிட்டுச் செல்ல மனமில்லை’ என்பதை அவளுக்கு செய்கையால், பார்வையால் உணர்த்தியவாறு நின்றான். அருண், ராதாவின் நிழலாகத் தொடர,

அவனது எண்ணம் அவளுக்கும் புரிய...., அவன்மேல் பிடித்து வைத்திருக்கும் கோபத்தை தொடர முடியாமல் தடுமாறினாள். “இவ்வளவு ஆசையை மனசுக்குள் வச்சுக்கிட்டு பிறகு ஏன் இப்படி நடந்துக்கறீங்க...?”, மனதுக்குள் எப்பொழுதும் புலம்புவதை, இன்று வெளிப்படையாகக் கேட்டுவிட்டாள்.

இவ்வளவு நேரம் இருந்த உல்லாச மனநிலை கலைந்துபோக, வழக்கமாக அவளிடம் கையாளும் மௌனத்தை தொடர முடியாமல்...., “என் மனசுக்குள் இருப்பதை உன்கிட்டே சொல்ல பயமா இருக்கு ராது. ப்ளீஸ்..., இதுக்குமேல் எதுவும் வேண்டாமே....,

“ஆனா உன்கிட்டே ஒண்ணு மட்டும் சொல்லணும்...”, சற்று இடைவெளிவிட்டவன், “சாரி ராது...., எங்க நிலைமை தெரிந்திருந்தும், நாங்க உங்கமேல ஆசைபட்டிருக்கக் கூடாது...., இந்த ஆசை நிறைவேறவும் செய்யாது”, அவளது அதிர்ந்த முகத்தை காணாமல் திரும்பிச் சென்று மறைந்தான்.

அவன் தங்கள்மேல் இருக்கும் நேசத்தை ஒத்துகொண்டான் என்பதற்காக சந்தோசப்படுவதா...., இல்லையென்றால்...., அது தெரியவந்த அடுத்த நிமிடமே அதை மறுத்துச் செல்வதற்காக வருத்தப்படுவதா என்று தெரியாமல் குழம்பினாள்.

ராஜுவோ அனிதாவின் முந்தானையைப் பிடித்துக்கொண்டே சுற்றினான்.

“ராஜு..., க்ரவுண்ட் ப்ளோரில் செய்ய வேண்டிய அலங்காரம் எல்லாம் முடிச்சுட்டோம். மேலே போய் ஒரு ரவுண்ட் பாத்துட்டு வரேன்...”, சொல்லிவிட்டு அனிதா நகர....,

“நானும் உன்னோடவே வரேன்...”, அவளுடன் நடந்தான்.

“ராஜு...., அதான் எல்லா வேலையும் முடிஞ்சுடுச்சுன்னு சொல்லுறேன்ல்ல..., மனோவும் அருணும் எங்கேன்னு பாத்து அவங்களுக்கு ஏதாவது ஹெல்ப் வேணுமான்னு கேளுங்க...”, அவனை முதுகைப் பிடித்து தள்ளாத குறையாக அனுப்பி வைத்தாள்.

“அவங்களுக்கு என் ஹெல்ப் எல்லாம் தேவைப்படாது...?”, பிடிவாதமாக அங்கேயே நின்றான்.

“என்கிட்டே மட்டும் இவ்வளவு அடம் பிடிக்கத் தெரியுது. அவங்ககிட்டே, நான்தான் வேணும்னு கேக்க மட்டும் உங்களுக்கு வாய் வராதா...?, சமயம் பார்த்து அவனைச் சாடினாள்.

இது சில நாட்களாகத் தொடர்வதுதான் என்றாலும்...., இன்று ஏனோ கவலையாக உணர்ந்தான். “அனி...., நாந்தான் ஏற்கனவே சொன்னேனே...., நான் சொல்ல முன்னாடியே அவங்களுக்குத் தெரியும். அப்படியிருக்கும்போது...., மறுபடியும் நான் என்னன்னு சொல்ல...?”, கவலையானான்.

“சரி இப்போ அவங்களா நானான்னு வந்தால்...”, அவள் சரியான இடத்துக்கு வர,

“உன்ன நினைச்சுட்டே, அவங்களோட நான் காலம் முழுக்க இருந்துடுவேன் அனி...”, கையைத் தூக்கி..., சட்டையில் தன் முகத்தை துடைத்தவாறே அங்கிருந்து விலகினான்.

அவன் பதில் இப்படித்தான் இருக்கும் என்று எதிர்பார்த்து இருந்தாலும், தன்னை உயிராக நினைத்தாலும், அவர்களது நட்புக்குள் எதையுமே நுழைய விட மறுக்கும் ஆண்களின் பிடிவாதத்தில் நிலைகுலைந்துதான் போனாள் அனிதா.

ராஜு செல்லும் முன்னர்...., கையைத் தூக்கி முகத்தை அழுந்தத் துடைத்ததில் இருந்து, அவன் அழுதுகொண்டு தான் செல்கிறான் என்பதை எண்ணியபொழுது...., அவர்களைப்பற்றி தெரிந்தும், ஏன் இப்படி காயப்படுத்துகிறோம் என்று தன்னையே நொந்துகொண்டாள்.

நித்யா, இந்த வேலை முடிந்தபிறகு, இன்றுதான் இங்கு வருகிறாள் என்பதால்...., தங்கள் வேலைகள் எப்படி வந்திருக்கிறது என்பதை அறிய, அந்த கட்டிடத்தை சுற்றிப் பார்க்கச் சென்றாள்.

அன்றொரு நாள் மனோ சொன்னான் என்ற காரணத்துக்காக, ராஜுவுடன் நித்யா சென்றாள் தான். ஆனால் அதற்காக அனிதாவின் கோபமும், வருத்தமும், அவளை கலவரமாக்க, அதற்குப் பிறகு செல்ல மறுத்துவிட்டாள்.

அனிதாவை சமாதானம் செய்ய, ராஜு எவ்வளவு பாடுபட்டான் என்பதை கண்கூடாக காணவே, அவசியத்துக்குக் கூட செல்ல

மறுத்துவிட்டாள். அனிதா, தினமும் புகைப்படம், வீடியோ என ஒவ்வொரு படிகளையும் அவளுக்குத் தெரியப்படுத்தினாள்தான்.

ஆனாலும் நேரில் பார்க்கும்பொழுது...., 'இது எனது கற்பனையில் உருவான வடிவம்...., எனது கைவண்ணம்...., எனது அடையாளம்...', மனம் பெருமிதத்தில் விம்மித் தணிந்தது.

அதே நேரம்...., அறைக்குள் யாரோ வரும் அரவம் கேட்கவே, 'மனோவாக இருக்குமோ...' என்ற சிறு எதிர்பார்ப்புடன் மெதுவாக திரும்பிப் பார்க்க, அறைக்குள் கோபமும், சோகமும், வருத்தமும், இயலாமையும் போட்டிபோட, முகத்தில் கவலையைத் தேக்கி வந்த தோழிகளைப் பார்த்து புருவம் உயர்த்தினாள்.

ஒரு நொடி, ஏமாற்றம் அப்பட்டமாக அவள் முகத்தில் மின்னி மறைந்தது. அதை உணர்ந்த அனிதாவோ....,

"என்ன...., உன் ஆளுதான் வரானோன்னு ரொம்ப ஆவலா எதிர்பார்த்த போல..., அவன் வரமாட்டாண்டி...., அவன்தான் சரியான சாமியார் ஆச்சே, அமுக்குணி...., எனக்கு வர ஆத்திரத்துக்கு...", நரநரவென பல்லைக் கடித்தவள்,

"நித்தி...., நீ என்ன செய்வியோ தெரியாது...., இன்னும் ஒரு மாசத்தில், மனோ மனசுக்குள் என்ன இருக்குன்னு கேட்டு சொல்லுற. ஏன்னா...? மத்த ரெண்டுபேரையும் ஆட்டி வைக்கிற கயிறு, அவன்கிட்டேதான் இருக்குது....

"மனோ ஒருத்தன் வாயைத் திறந்தாலே எல்லாம் சரியா போய்டும்...., எனக்கு நம்பிக்கை இருக்கு...", படபடவென பொரிந்தாள் அனிதா.

நித்யாவின் தலை சம்மதமாக ஆடியது. அவளது முயற்சிக்கு பலன் இருக்குமா...? மனோ மனதைத் திறப்பானா....? விடை அவனிடமே...

***

# மௌனம் – 20.

இன்றோடு திறப்புவிழா முடிந்து ஐந்து நாட்கள் ஓடிவிட்டன. அருணும் ராதாவும், ராஜுவும், அனிதாவும் ஒருவித ஒற்றுமையில் நாட்களை நகர்த்த, மனோ மட்டும் சற்று இறுக்கமாகவே இருந்தான்.

அவனது கோபத்துக்கும் இறுக்கத்துக்கும் காரணம் இருந்தது. அன்று பூஜையின்பொழுது, தன்னால் முடிந்த அளவு நித்யாவின் அருகில் செல்லாமல், அவளை பார்வையாலேயே தொடர்ந்தான்.

அதே நேரம் அவளும் அவனைத்தான் கவனித்துக் கொண்டிருந்தாள். பட்டு வேஷ்டியில் அம்சமாக இருந்த அவனை கவனிக்காமல் இருப்பது அவளால் முடியாத செயலாகவே இருந்தது.

பூஜை நடக்கும் வேளையில்...., கையை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு சுவற்றில் சற்று சாய்ந்தாற்போல் நின்ற அவன் கோலம், அழியா கோலமாக அவள் மனதை நிறைத்தது.

அவனிடம் யாராவது எதைப்பற்றியாவது கேட்கும்பொழுது, புருவம் சுருக்கி, சற்று தலை தாழ்த்தி அவன் கவனிக்கும் விதம், ஒற்றைக் கையால் தலையை அழுந்த கோதிக்கொள்ளும் அழகு, மீசையின் நுனியை திருகியவாறு சுற்றுபுறத்தை அலசும் அவனது விழிகள்...., இப்படி முழுமையாக அவனை ரசித்தாள்.

பூஜை முடித்து, கட்டிடத்தை சுற்றிப் பார்க்க என்றும், உணவு உண்ணும் இடத்தில் ஒரு கண்ணுமாக..., இங்கேயும் அங்கேயும் நடக்கும் வேளையில், ஓரவிழிப் பார்வையால் அவளைக் காணாமல் காணும் அவன் விழிகள்...., அரை வினாடிக்கும் குறைவாக அவள் கண்களை சந்தித்து மீளும் அவன் சாதுர்யம், என மொத்தமாக அவனை ரசித்தாள்.

அன்று கண்ட அவனது தோற்றமே அழியாத கோலமாக அவள் மனதில் ஆழப் பதிந்தது. அவன்மேல் கொண்ட கோபம் அனைத்தும், அவன் ஓரவிழியில் தன்னைக் காணும்பொழுது தகர்ந்து போனது.

அவன் தன்னைத் தேடுகிறானா என்பதை அறிய, சற்றுநேரம் அவன் பார்வையில் படாமல் ஒளிந்திருந்து அவனைக் காண...., பரபரப்பாக

அவளைத் தேடிச் சுழலும் அவன் கருமணிகள், அவளைக் காணும்வரை ஓயாதபொழுது...., அவன் தவிப்பில் குளிர் காய்ந்தாள்.

இப்படி அனைத்தும் பிடித்ததுதான்....., ஆனால்...., ஒருபக்கம் பார்வையால் ராதாவை விழுங்கியவாறு நிற்கும் அருண், மறுபக்கம்...., ‘நீ என்ன சொன்னாலும் நான் இப்படித்தான்’ என்று அனிதாவைச் சுற்றிவரும் ராஜு...., அவர்களைப் பார்க்கும்பொழுது மனதுக்குள் ஒரு ஏக்கம் எழுவதை நித்யாவால் தவிர்க்க முடியவில்லை.

அவனுக்கும் தன்னைப் பிடித்திருக்கிறது என்பதில் அவளுக்கு சந்தேகம் இல்லை. ஆனால்...., அந்த நேசத்தை தன்னிடம் வெளிப்படுத்தாமல் இருந்தால் அதனால் என்ன பயன்...?

தனது காதலனுக்கும் தான் முக்கியமானவளாக, உயிராக...., அவன் தன்மேல் எவ்வளவு நேசம் வைத்திருக்கிறான் என்பதை அவ்வபொழுது உணர்த்துபவனாக இருக்கவேண்டும் என்று அவள் விரும்புவதில் என்ன தவறு இருக்க முடியும்...?

இவ்வளவுநேரம் அவன் ஓரவிழிப் பார்வை போதும் என்று இருக்க முடிந்த அவளால்...., ஒரு வார்த்தைக்குக் கூட அவனிடம் பஞ்சம் வந்தபொழுது கோபம் எழவே செய்தது.

தான் கோபம்கொண்டு விலகும்பொழுது அவன் நெருங்க முயல்வதும், அவள் நெருங்க முயலும்பொழுது...., அவளை தவிக்கவிடுவதுமாக மனோ கண்ணாமூச்சி ஆடினான்.

ஒரு கட்டத்துக்குமேல் அவன் செய்கையில் அவள் சற்று வெறுப்பாக, வெளியேறிவிடலாம் என்று அவள் எண்ணும் வேளையில்...., ராகவன் அங்கே வந்தான்.

இதுவரை மனோவிற்கு, ராகவனுடன் தான் பேசினால் பிடிக்கவில்லை என்பதால் சற்று ஒதுங்கி இருந்தவள்...., ‘இன்று என்ன ஆகிறது என்று பார்ப்போம்’ என்ற எண்ணத்தில்...., வலியச் சென்று அவனிடம் பேசினாள்.

“என்ன ராகவன்..., லேட்டா வரீங்க...?”, கேட்டவாறு அவனை எதிர்கொண்டாள்.

“ஓ..., நித்யா நீங்களா...? எல்லோரும் இங்கே வந்துட்டா யாராவது ஆபீஸையும் பாக்கணுமே...., அதான் நான் கொஞ்சம் லேட்டா வந்தேன். ஜஸ்ட் ஒரு விசிட்...., இப்போ கிளம்பிடுவேன்....

“சரி கஸ்டமர் ஏதாவது சொன்னாங்களா...? உங்க வேலை அவங்களுக்கு ரொம்ப பிடிச்சு இருக்காம்...., சோ உங்களுக்கு பொன்முடிப்பு கூட தரப்போறதா பேசிகிட்டாங்கன்னு கேள்விப்பட்டேன்...”, கேலியில் இறங்கினான்.

“அண்ணா...”, சற்று கோபமாக அவனைப் பார்த்து கண்ணை உருட்டியவள்..., “உங்களுக்கு ரொம்பத்தான்...., இதுதான் எங்களோட முதல் வேலை...., எங்களோட முழு திறமையையும் இந்த ப்ராஜெக்ட்ல போட்டிருக்கோம்...., உங்களுக்கே தெரியுமே...”, தயக்கமாக அவள் இழுக்க....,

“அட...., தெரியும்மா...., நான் சும்மா விளையாட்டுக்குத்தான் சொன்னேன். எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு. நான் உண்மையைத்தான் சொல்லுறேம்மா...., மனோ சார் கஸ்டமர்ட்ட என்ன சொன்னாங்கன்னு தெரியலை, உங்களை ஊக்கப்படுத்தியே ஆகணும்னு பேசிக்கிட்டதா..., எனக்கு இங்கே இருந்து இப்போதான் போன் வந்துது...”, உண்மையான சந்தோஷத்துடன் சொன்னான்.

“அண்ணே...., உண்மையாகவா...?”, நம்ப முடியாமல் கேட்டாள்.

“நான் எதுக்கும்மா இதில் பொய் சொல்லப்போறேன். நீயே பாக்கத்தானே போற...., சரி மனோ சார் எங்கே..., நான் அவர்ட்ட ஒரு செக்கில் சைன் வாங்கணும் அதான் இவ்வளவு அவசரமா வந்தேன்...”, பார்வையை சுழலவிட்டவாறு கேட்டான்.

“அவரா...., இழுத்தவள், உங்க முதுகுக்கு பின்னாடிதான்...., கொஞ்சம் தள்ளி நிக்கிறார்”, அவள் சொல்லி முடிக்கும் முன்னர்....,

“என்ன...?”, அலறியவாறு திரும்பிப் பார்த்தான்.

ராகவன் திரும்பிப் பார்க்கவே...., மனோ அங்கிருந்து அவசரமாக நகர்ந்து சென்றான்.

அதைப் பார்த்தவன்...., “ஐயோ..., நித்யா..., என்னமா இது...?”,

சங்கடமாக உரைத்தவன்...., வேகமாக அங்கிருந்து நகர்ந்தான்.

நித்யாவைப் பார்த்து சிரித்தாலே, அன்று முழுவதும் இல்லாத குறைகளைச் சொல்லி ராகவனை வறுத்தெடுப்பான் மனோ. அப்படியிருக்கையில் இன்று அவளிடம் சிரித்துப் பேசியுமிருக்கிறான், அப்படியிருக்கும்போது தான் என்ன கதிக்கு ஆளாவோமோ...? என்ற பீதியுடனே சென்றான்.

மனோவோ...., ‘அவளுக்குத்தான் தெரியுமே....., தெரிந்தும் எப்படி அவ அந்த ராகவனோட பேசலாம். நான்கூட அவகிட்டே இப்படி சிரிச்சு பேசமாட்டேன்...., அப்படியிருக்கும்போது....”, பொருமிக் கொண்டிருந்தான்.

“சார்...., ருத்ரேஷ் உடனே செக் வேணும்னு போன் செய்தார் அதான்...., உங்களை பார்த்து சைன் வாங்கிட்டு போகலாம்னு வந்தேன். அதோட...., நித்யா அவங்க...., சும்மாதான்...., இல்ல...., நான்தான் நீங்க எங்கேன்னு அவங்ககிட்டே கேட்டுட்டு இருந்தேன்...”, பதட்டமாக...., தன்னை புரிந்துகொள்ளவேண்டுமே என்று கவலையாக உரைத்தான் ராகவன்.

அதற்குள் தன்னை ஓரளவுக்கு கட்டுப்படுத்திக்கொண்ட மனோ, ‘கண்டிப்பா என்னால் அவளை திருமணம் செய்துகொள்ள முடியாது, அப்படியிருக்கையில், அவள்மேல் எழும் இந்தமாதிரி உணர்வுகளுக்கு நான் இடம் கொடுக்கக் கூடாது...’, தனக்குள் உருப்போட்டான்.

அதன் பிறகு தெளிவாக, “இப்போ நான் எதுவுமே சொல்லலையே ராகவன். செக்கை தாங்க, சைன் போட்டு தரேன். அப்படியே சாப்பிட்டுட்டு போங்க...., ஹங்...., இன்னொரு முக்கியமான விஷயம்....,

“நாம எதிர்பார்த்த அளவுக்கு ஆட்கள் வரலை, சோ சாப்பாடு மிச்சமாகும்னு நினைக்கிறேன், கொஞ்சம் இருந்து பார்த்து, கையோட சாப்பாட்டை எடுத்துட்டு போய்டுங்க, பசங்க திருப்தியா சாப்பிடட்டும்”, சாதாரணமாக உரைத்தான்.

“கண்டிப்பா சார்...., சாப்பாட்டை எடுத்துட்டு போனேன்னா எல்லோருமே ரொம்ப சந்தோசப்படுவாங்க...”, உற்சாகமானவன், சாப்பாட்டு அறையை நோக்கிச் சென்றான்.

ராகவனைத் தொடர்ந்து வந்த நித்யா, அவர்கள் பேசுவதைக் கேட்டு குழம்பிப் போனாள். எதிர்பார்த்த மனோவின் கோபம் வெளிப்படாத அதிர்ச்சியை விட, இப்பொழுது அவன் பேசியதால் ஏற்பட்ட அதிர்ச்சியே அதிகமிருந்தது.

மெதுவாக அவன் அருகில் சென்றவள்...., “மனோ...., என்ன இது...?”, குழப்பமாக கேட்டாள்.

“எது...?”, கண்களில் கூர்மையோடு வினவினான்.

“இல்ல...., இங்கே மிச்சமாகுற சாப்பாட்டை ஏதாவது ஆஷ்ரமத்துக்கு கொடுத்தால் பரவாயில்லை. ஆனா...., நம்ம பசங்களுக்கு...., ஏன்...?”, புரியாமல் கேட்டாள்.

“ஏன்...., அவங்க வயிறார சாப்பிடுவதில் உனக்கு என்ன அவ்வளவு பொறாமை....?”, ஒரு மாதிரி வினவினான்.

“ம்ச்...., புரியாம பேசாதீங்க மனோ. கேவலம்...., எச்சி...”,

“நித்தி...., போதும்...., இதெல்லாம் எனக்கு தெரியாதுன்னு நீ நினைக்கிறியா..?”, முகம் முழுக்க கோபத்தில் தகிக்க, கண்கள் சிவந்து அவளை உறுத்து விழித்தவன், கோபத்தில் எதையும் பேசிவிடக் கூடாதே என்று கைகளை இறுக்கி தன் கோபத்தை கட்டுப்படுத்தினான்.

அதே நேரம்...., “மனோ...., அவங்க எல்லாம் கிளம்புறாங்களாம், கொஞ்சம் வந்துட்டு போ...”, அருண் சொல்லிவிட்டு, வேகமாக அவனுடன் நடந்தான்.

கோபத்தில் அவன் நான்கு திட்டு திட்டியிருந்தால் கூட அவள் நிம்மதியாக உணர்ந்திருப்பாள். ஆனால் அவன் கண்களில் தெரிந்த ஒருவித வலி கலந்த இயலாமை அவளை உருக்கியது. ஆனால் அதைபற்றிய எந்த வேறு எந்த பேச்சையும் அவன் பேச விரும்பவில்லை.

மேற்கொண்டு அவள் முகத்தை பார்த்து பேசவும் மறுத்தான்.

அதன் பிறகு, முகம் முழுக்க கோபத்தை அணிந்தவாறு, நித்யாவிடம் பேச மறுத்து, மௌனவிரதம் பூண்டான். ஆனால் நித்யா அவன் செய்கையை கவனித்தவாறு இருந்ததால்...., அவனது கோபம் உண்மையானது

இல்லை என்பதை புரிந்துகொண்டாள்.

தன் தோழிகளிடம் கூட அதை உரைக்கவில்லை. அவன் வழியிலேயே செல்வோம் என்று நினைத்தவள்...., முதல் வேலையாக மணியை அழைத்தாள். அவள் அழைத்தவுடன் ஓடி வந்தவன், “சொல்லுங்கக்கா...., ஏதாவது வேணுமா...?”, ஆர்வமாக கேட்டான்.

“மணி...., உன் வீடு எங்கே...? வீட்டில் யாரெல்லாம் இருக்காங்க...?”, மெதுவாக பேச்சு கொடுத்தாள்.

“என்னக்கா திடீர்ன்னு...”, கொஞ்சம் அதிர்ந்துபோய் கேட்டான். அவளது இந்த கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை என்பதை அவனது முகம் அப்பட்டமாக வெளிப்படுத்தியது.

“அட...., ஒரு சின்ன கேள்வி கேட்டேன், அதுக்கு ஏன் இவ்வளவு ஷாக் ஆகுற, உனக்கு சொல்ல இஷ்டம் இல்லன்னா வேண்டாம்...?”, அவன் விஷயத்தில் ஆர்வம் இல்லாதவள்போல் காட்டிக் கொண்டாள்.

மணியும், மேலே எதுவும் சொல்லாமல், விட்டால் போதுமென்று அங்கிருந்து அகன்றான். அவனது இந்த செய்கை, நித்யாவின் புருவத்தை உயர்த்தியது.

அதோடு, அங்கே அலுவலகத்தில் வேலை செய்த ஒவ்வொருவரிடமும் ஜாடையாக, குடும்பத்தைப் பற்றி விசாரித்தாலும், அவர்களைப் பற்றி விசாரித்தாலும் அனைவரின் பதிலும் மௌனமாகவே இருந்தது.

குழப்பம் மட்டுமே மிஞ்சியது அவளுக்கு. ‘நான் என்ன அப்படி கேட்கக் கூடாததை கேட்டுவிட்டேன் என்று எல்லோரும் இப்படி அலறியடிச்சு ஓடறாங்க....?’, கேள்வி அவளைக் குடைந்தது.

அங்கே வேலை செய்தவர்களில் முக்கால்வாசிபேர், இரண்டு மூன்று அறைகளில் சேர்ந்து தங்கி இருந்தார்கள். அது கூட மனோ கட்டிகொடுத்த அறைகளாகவே இருந்தது. அனைவரின் வருமானமும் கச்சிதமாக இருந்தது.

சாப்பாட்டு செலவு கம்பெனியே செய்ய, வாடகையோ, கரண்டுபில்லோ அனைத்தும் கம்பெனியே செய்தது. அனைத்தும் மர்மமுடிச்சுக்களாகவே இருந்ததே தவிர, தெளிவாக எதுவும் இருக்கவில்லை. அங்கிருந்த

யாருமே தவறான வழியில் போவதாகவோ, தவறானவர்களாகவோ இருக்கவில்லை.

மனோவின் ஏஎம்ஆர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பற்றிய மதிப்பீடுகள், அதன் வளர்ச்சி நன்றாக இருந்தாலும், அதிகமான வேலைகளை எடுப்பதற்கோ, மற்ற கம்பெனிகளோடு போட்டிபோடவே அவர்கள் தயாராகவே இருக்கவில்லை.

மாறாக...., பெரிய கம்பெனிகள், தங்கள் வேலைப்பளுவில் கவனிக்க முடியாமல், அல்லது செய்ய விருப்பமில்லாமல் இருக்கும் வேலைகளையே பெரும்பாலும் இவர்கள் செய்தார்கள். அது ஏன் என்ற அந்த கேள்வி, நித்யாவை அதிகம் குடைந்தது.

அன்று காலையில் செய்தித்தாளை புரட்டுகையில்......, அரசாங்க பள்ளிக்கூடம் கட்ட, டெண்டர்கள் வரவேற்கப்பட, அந்த பேப்பர் கட்டிங்கோடு மனோவை ஆர்வமாக சந்திக்க வந்தாள் நித்யா.

“மனோ...., இங்கே பாருங்க. நமக்கு ஒரு ஜாக்பாட் வாய்ப்பு. ஒரு பள்ளிக்கூடம் கட்ட டெண்டர் அறிவிச்சு இருக்காங்க. நாம எப்பொழுதும் நியாயமான லாபத்தில் கட்டடம் கட்டுவதால்...., இந்த டெண்டர் நமக்கு கிடைக்க அதிக வாய்ப்பு இருக்கு....”, உற்சகமானாள்.

ஆனால் அவளது மகிழ்ச்சியில் ஒரு சதவீதம் கூட அவனிடம் பிரதிபலிக்கவில்லை. அதில், அவளது உற்சாகம் பாதியாக வடிந்துவிட, அவனை கேள்வியாக ஏறிட்டாள்.

“ம்ச்...., இதெல்லாம் நமக்கு சரிவராது நித்தி, வேண்டாம்...”, திட்டவட்டமாக மறுத்தான்.

“மனோ...., நம்மால் முடியும். அதிலும் நியாயமான நமது லாபம்...., இதை நமக்கே பெற்றுத்தரும்...”, அவனை சம்மதிக்க வைக்க முயன்றாள்.

“ப்ளீஸ் நித்தி...., சொன்னா புரிஞ்சுக்க. அதெல்லாம் பெரிய மனிதர்கள் விவகாரம். நம்மால் முடியாது. கவுன்சிலர், வார்டு மெம்பர் துவங்கி எல்லோருக்கும் மொய் வைக்கணும்...., நம்ம நிம்மதி போய்டும், வேண்டாம்...”, அவன் அவளை சமாதானம் செய்தான்.

அரை மனதாக தலை அசைத்தாள் நித்யா. ஆனால் அடுத்த முறை அவள்

அவனை மடக்கிய செய்தபொழுது விழி பிதுங்கிப் போனான். அன்று ஒரு தனியார் பில்டிங் கட்ட டெண்டர் விடப்பட, அவனுக்கு அதை தெரிவிக்காமல், தனக்குத் தேவையான விவரங்களை, அவ்வப்பொழுது அவனுக்கே தெரியாமல் கேட்டு,

சரியான விதத்தில் கச்சிதமாக ஒரு டெண்டரை கோட் செய்து, அந்த கம்பெனிக்கு அனுப்பிவிட்டாள். அதை அனுப்பியபிறகு, மனம் படபடவென அடித்துக் கொண்டது. அதற்கு காரணமும் இருந்தது. மனோ இதுவரை புது அசைன்மெண்ட்ஸ் எடுக்க, தனியாக எந்த முயற்சிகளையும் எடுத்தது கிடையாது.

அவ்வளவு ஏன், அதற்கு ஆர்வம் காட்டியதுகூட கிடையாது. ஏற்கனவே அதைப்பற்றி ஜாடையாக சொன்னபொழுது கூட, “நம் கையில் இருக்கும் ப்ராஜெக்ட் முடியவே நாள் ஆகும் நித்தி...”, ஒரே வாக்கியத்தில் அனைத்தையும் முடித்துவிட்டான்.

ஆனால் நித்திக்கோ, அவனது முழு திறனையும் அவன் வெளிக்கொணரவில்லை என்றும், தன் வளர்ச்சிக்கு தானே தடையாக இருப்பதுபோன்றும் தோன்றியது. ‘ஏன்’ என்ற கேள்விக்கு அவன் கண்டிப்பாக விடை சொல்லப்போவதில்லை என்பதும் புரிந்தது.

ஒருநாள் அவனிடமே...., “நம்ம கம்பெனி எங்கேயோ போகவேண்டியது...., அதைச் செய்யாமல் எதற்காக இந்த அடக்கம்....? அது எதில் இருக்கணுமோ அதில்தான் இருக்கணும். நம்ம திறமையை நிரூபிக்க வேண்டிய இடத்தில் இல்லை....,

“திறமையான நிர்வாகம்...., திறமையான ஆர்க்கிடெக்ட், இஞ்சினியர்கள், தொழிலாளர்கள்....., இவ்வளவும் இருந்தபோதும்...., ஒரு வட்டத்தை போட்டுட்டு ஏன் அதுக்குள்ளேயே இருக்கீங்க...”, தன்னவனது திறமை முடக்கப்படுகிறதே என்ற தார்மீக கோபம் தெறித்தது அவள் வார்த்தைகளில்.

ஆனால் அவள் பேசி முடித்தபிறகு...., அதை அமைதியாக கேட்டுகொண்டிருந்தவன் இறுதியாக பார்த்த அந்த பார்வை...., அதற்கு விடை கண்டறிய முடியாமல் தவித்துப் போனாள்.

‘எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா...?’, இப்படிச் சொன்னதோ...., அதை செய்ய முடியாத இயலாமையா...? எண்ணி எண்ணி குழம்பிப்

போனாள். ஆனால் அதன்பிறகு அவனிடம் இதைப்பற்றி பேச முடியவில்லை.

பேச்சை துவங்கினாலே...., தலை கவிழும் அவன் தோற்றம்...., சற்று கலங்கிபோகும் அவன் குரல்...., ‘இந்த பேச்சு வேண்டாமே’...., என்று கண்களால் கெஞ்சும் அவன் தோற்றம்...., அதை காண முடியாமல் அவள்தான் தவித்துப் போனாள்.

“மனோ...”, ஒற்றை அழைப்பில் தன் ஆதரவை அவனுக்குக் கொடுக்க, உடைந்து போகாமல் இருக்க மிகுந்த பாடுபட்டான் மனோ. தன் உணர்வுகளை அவளுக்குக் காட்டாமல், சட்டென அங்கிருந்து அகன்று போனான்.

ஆண்கள் கழிவறைக்குள் சென்றவனின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. மனசுக்குப் பிடித்தவளின் ஆதங்கம் ஒரு பக்கம், ஆதரவு ஒரு பக்கம், வேதனை ஒரு பக்கம், நேசம் ஒரு பக்கம், அவள் மொத்தமுமாக தன்னை இவ்வாறு ஆக்ரமிக்க, அதை மறுக்கும் வலி, அவனை உள்ளுக்குள் உருக்கியது.

அவள் நேசம் புரியவில்லை என்றும், அவள் கரிசனத்தை கண்டுகொள்ளாமலும், ஆதங்கத்தை சட்டை செய்யாமலும் அவனும் எவ்வளவுதான் போராட முடியும்? அதிலும் மனம் முழுக்க அவளை நிரப்பிக்கொண்டு அலைகையில், அவளை தவிக்கவிடுவது, பலமடங்கு வலித்தது.

‘என்னவானாலும் பரவாயில்லை, எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிவிடலாமா...’, அவன் மனம் முரண்ட,

‘அதன்பிறகு அவள் உன்னைவிட்டு விலகிச் சென்றால் தாங்கிக் கொள்வாயா....?’, அவன் மனதின் கேள்விக்கு பதில் அவனிடம் இருக்கவில்லை. என்னவானாலும் அவளது விலகலைத் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாது. அதற்கு இந்த வலியே பரவாயில்லை என்று முடிவெடுத்தான்.

இங்கே நித்யாவோ...., ராகவனிடம் “நீங்களாவது சொல்லகூடாதா ராகவன்...., எவ்வளவோ செய்யலாம்...”, ஆற்றாமையால் புலம்பவும் மட்டுமே அவளால் முடிந்தது. அனிதாவும் ராதாவும் அவளுக்கு ஆதரவாக இருந்தார்கள்.

‘எப்பொழுது எப்பொழுது’ என்று அவள் தவித்த நாளும் வந்தேவிட்டது. அன்று காலையில்..., பெண்கள் அறைக்குள் நுழைந்தபொழுது மூன்று ஆண்களுமே அங்கே இருந்தார்கள். அறையில் சற்று தள்ளி, கைகளை பிசைந்தவாறு ராகவன் நின்றுகொண்டிருந்தான்.

வழக்கமாக மூவரும் சேர்ந்திருந்தால்...., எதையாவது சொல்லி கலாய்த்து கொண்டிருப்பார்கள். ஆனால் இன்று மூவருமே இறுக்கமாக இருந்தார்கள். ராஜு கூட அவ்வாறு இருந்ததுதான் ஆச்சரியமே.

தங்கள் இருக்கையில் சென்று அவர்கள் அமர, “ஒரு நிமிஷம் எல்லோரும் வரீங்களா...?”, அருண்தான் குரல் கொடுத்தான்.

மனோ, தன் கையில் இருந்த அந்த கவரை மேஜைமேல் தூக்கிப் போட, நித்யாவின் இதயம் தொண்டைக்குழியில் துடித்தது.

***

# மௌனம் – 21.

ஒரு நாள் இந்த சூழலை சந்தித்தே ஆகவேண்டும் என்று நித்யாவுக்குத் தெரியும். ஆனால் அது இவ்வளவு கடினமான நாளாக இருக்குமென்று அவள் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை.

மனோ வாயைத் திறந்து ஏதாவது பேசியிருந்தால் கூட அவள் இவ்வளவு வேதனைபட்டிருக்க மாட்டாள். ஆனால்...., அந்த கவரை மேஜைமேல் தூக்கிப் போட்டுவிட்டு, அவர்களைப் பார்த்த அந்த பார்வை...., உள்ளுக்குள் உதறல் எடுத்தது.

“உனக்குத் தெரிஞ்சுதான் இது நடந்ததாடா...?”, அருண் ராகவனிடம் சாட...,

“ஐயோ சார்...., சத்தியமா எனக்குத் தெரியாது. ஆனா எனக்கென்னமோ எதுவும் தப்பா...”, மனோ பார்த்த பார்வையில் அவன் பேச்சு பாதியில் நின்றுபோனது.

“நித்யா இது உன் வேலை தானே...., நான் அவ்வளவு சொல்லியும்...., ம்ச்...”, ஆழமாக மூச்சை இழுத்தவன், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு, “சரி இது இத்தோட போகட்டும், எல்லோரும் அவங்கவங்க வேலையைப் பாக்கப் போங்க...”, அந்த லெட்டரைத் தூக்கி குப்பைக் கூடையில் போட்டுவிட்டு அவர்களைப் பார்த்து சொன்னான்.

“மனோ...”, நித்யா அழுத்தமாக அவனை அழைத்தாள்.

சுற்றியிருந்த அனைவரும் அவளை பார்வையால் அடக்க, தோழிகள் இருவரும் அவள் கை பிடித்து அழுத்தினார்கள். அனிதாவே மனோவின் கோபம் கண்டு சற்று திகைத்திருந்தாள், எனவேதான் அவள் அனுமதியின்றியே அவள் கரங்கள் அதைச் செய்தது.

“இன்னும் போகலையா...?”, குரலை உயர்த்தாமல் கோபத்தை வெளிப்படுத்தும் அவனை, அனைவரும் வியப்பாய் பார்த்தார்கள்.

மனோ பொதுவாக கோபமே படமாட்டான், எனவேதான் அனைவரின் புருவமும் உயர்ந்தது. “நீங்க எல்லோரும் போங்க...”, தோழிகளின் கையை விலக்கியவள், அருண் ராஜுவையும் பார்வையால் போகச்

சொன்னாள்.

தன்னை மீறிய கோபத்திலும், நித்தியின் பேச்சை ரசிக்கவே செய்தான் மனோ. மறு நிமிடம் அங்கே யாரும் இருக்கவில்லை. ‘இங்கே நான் முதலாளியா, இல்லை இவளா...?’, கேள்வியோடு அவளை ஏறிட்டான்.

“என்ன...., இங்கே நான் முதலாளியா இல்லை இவளான்னு யோசிக்கிறீங்களா...? முதலாளிக்கு ஒரு தடுமாற்றம்ன்னா அதை சரிசெய்யும் கடமையும் உரிமையும் எனக்கு இருக்கு. கடமைன்னு நான் சொன்னது என் வேலையை.

“உரிமைன்னு நான் சொன்னது எதுன்னு உங்க மனசாட்சிக்கு தெரியும். ஒண்ணு இந்த டெண்டர் ஒப்பனிங்க்கு நீங்க போகணும், இல்லையா...., எது உங்களைத் தடுக்குது, உங்க மனசுக்குள் என்ன இருக்குன்னு நீங்க என்கிட்ட சொல்லணும்...”, பிடிவாதமாக நின்றாள்.

“நான் டெண்டர் ஒப்பனிங்க்கு போறேன்...”, சொல்லிவிட்டு இருக்கையில் இருந்து விருட்டென எழுந்து வெளியே சென்றான்.

வெளியே அவனுக்காக அனைவரும் காத்துகொண்டிருக்க, “என்ன ஆச்சு மனோ...?”, ராஜு படபடத்தான்.

“நான் போறேன்னு சொல்லிட்டேன்...”, ஒரு மாதிரி குரலில் சொன்னான்.

“மனோ வேண்டாம்...”, இதைச் சொன்னதும் ராஜுதான்.

ராஜு இவ்வாறு சொல்லவே அனிதாவிற்கு கோபம் வந்தது. இந்த டெண்டரை அனுப்ப நித்யா எவ்வளவு உழைத்தாள் என்பதை கண்கூடாக கண்டவளாயிற்றே.

“ராஜு...., அவ ஒண்ணும் அவளுக்காக இதைச் செய்யலை, எல்லாம் உங்களுக்காகத்தான்...., இப்படி எதையுமே புரிஞ்சுக்காமல் பேசாதீங்க...”, அவனை அடக்கினாள் அனிதா.

“எங்களுக்காக...”, “ராஜு....”, எதையோ சொல்லப்போனவனை, ஒற்றை வார்த்தையில் அடக்கினான் மனோ.

“வேண்டாம் மனோ...., நீ எங்கேயும் போக வேண்டாம். புதுசா எந்த

அவமானமும் பட வேண்டாம். இல்லன்னா நானும் உன்னோட வருவேன். உன்னை எங்கேயும் தனியா விட மாட்டேன்…”, ராஜு வாய் விட்டு புலம்ப, அருணும் அதே முடிவில்தான் இருக்கிறான் என்பதை அவன் முகம் வெளிப்படுத்தியது.

“இல்ல…., நீங்க யாரும் என்னோட வர வேண்டாம். நான் நித்யாவைக் கூட்டிக்கிட்டுப் போறேன்…”, அவன் சொல்லவே….,

“மனோ….”, அருணும், ராஜுவும் அதிர்ந்துபோய் அழைத்தார்கள்.

“நீங்க என்ன சொன்னாலும் இதில் எந்தவிதமான மாற்றமும் இருக்கப்போவது இல்லை. சோ…., டைம் வேஸ்ட் பண்ணாமல் போங்க..”, சொன்னவன் மேலே அங்கே நிற்கவில்லை.

அன்றைய நாள் முழுவதும் ராஜுவும், அருணும் தங்கள் இயல்பிலேயே இருக்கவில்லை. எப்பொழுதும், சைட்டுக்கு போனதும்…., மஞ்சள் தொப்பியை தன் கையால், அனிதாவிற்கு மாட்டிவிடும் ராஜு, அன்று அவளை கண்டுகொள்ளவே இல்லை.

அத்தோடு…., வேலை செய்யும்பொழுது ஒரு தொழிலாளி விழுந்துவிட, அவர் கொண்டுவந்த செங்கல் அவர் காலில் விழுந்து பதம் பார்த்தது. எப்பொழுதும் இப்படி ஒரு காட்சியைக் கண்டால் உதவிசெய்ய விரையும் ராஜு, அன்று “ஐயா பாத்து வரக்கூடாதா…?”, என்பதோடு முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

சுற்றி இருந்த அனைவரும் அவனை வித்தியாசமாகப் பார்க்க, அதை கண்டுகொள்ளும் மனநிலையில் அவன் இருக்கவில்லை. டீ வந்தபொழுது, அவனது டீயை வாங்கிகொண்டு ஒதுங்கிக் கொண்டான். அனைத்தும் அவனை மீறிய செயலாகவே நடந்துகொண்டிருந்தது.

அனிதா சற்று நேரம் பார்த்தவள், “இப்போ என்ன நடந்துடுச்சுன்னு இப்படி இருக்கீங்க ராஜு. சொன்னால் தானே புரியும்…”, அவனைப் பிடித்து உலுக்கினாள்.

“என்னால் சொல்ல முடிந்தால் சொல்ல மாட்டேனா…? ஆனா…., தயவுசெய்து நித்யா கிட்டே பேசேன்…., அங்கே போகவேண்டாம்னு சொல்லேன். எனக்கு பயம்மா இருக்கு அனி. மனோ கஷ்டப்பட்டால் எங்களால் தாங்கிக்க முடியாது. அவன்தான் எங்களோட பலம்….,

ப்ளீஸ்", அவள் கையைப் பிடித்து கெஞ்சினான்.

அதற்குமேல் அவள் எவ்வளவோ கேட்டும் அவனிடம் பதில் இல்லை. மாறாக புலம்பல் மட்டுமே மிஞ்சியது. அனிதாதான் சோர்ந்து போனாள். அதே நேரம்...., அவனது புலம்பல், அவளை கவலை கொள்ளவும் செய்தது. நித்யாவிடம் பேசவேண்டும் என்ற முடிவையும் எடுக்க வைத்தது.

அலுவலகத்தில் ராதா அருணைத் தேடிச் சென்றாள். அங்கே அவனோ, அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தான். அவள் உள்ளே வரவே, நடையை ஒரு நொடி நிறுத்தியவன், மீண்டும் தொடர்ந்தான்.

அவன் செய்கையைப் புரியாமல் பார்த்தவள், "அருண்...., இப்போ என்ன நடந்துடுச்சுன்னு இவ்வளவுடென்ஷனா இருக்கீங்க...", மெதுவாக கேட்டாள்.

"இன்னும் என்னதான் நடக்கணும்...., இப்போதான் எல்லாம் சரியா போயிட்டு இருக்குன்னு சந்தோசப்பட்டோம். ஆனா...., அது இல்லன்னு நல்லா புரிஞ்சுடுச்சு...", கோபம் குறையாமல் பதில் சொன்னான்.

"முதல்ல உங்க மனசுக்குள் என்ன விஷயம் ஒளிஞ்சு இருக்குன்னு சொல்லுங்க. இது உங்க வளர்ச்சியை மனதில் வைத்துகொண்டு செய்யப்பட்ட ஒரு முயற்சி. உங்களோட திறமை எல்லாம் இப்படி சின்னச் சின்ன ப்ரஜெக்ட்க்கு டிஸைன் செய்தே முடிஞ்சு போகணும்னு நீங்க நினைக்கிறீங்களா...?

"ஆனா எங்களுக்கு, நீங்க இன்னும் பெருசா வளரணும்னு ஆசை. அதான் இப்படி செய்தோம்...., நீங்க இவ்வளவு பதட்டப்படும் அளவுக்கு அது ஒண்ணும் பெரிய விஷயம் கிடையாது...", அவளும் குரல் உயர்த்தினாலும், அவனுக்கு தைரியம் சொன்னாள்.

"ஐயோ ராதா புரியாமல் பேசாதே. இப்போ உன் கண்ணு முன்னாடி என்னை யாராவது அவமானப்படுத்தினால் நீ அதை தாங்கிப்பியா..., அதை சொல்லு....", சம்பந்தமே இல்லாமல் கேட்டான்.

"இப்போ அதுக்கும், உங்க கேள்விக்கும் என்ன சம்பந்தம்...அருண்?", புரியாமல் இருக்கிறானே என்று ஆற்றாமையாக கேட்டாள்.

“கேட்டதுக்கு பதில்சொல்லு ராதா…”.

“அதைப் பாத்துட்டு நான் சும்மா இருக்க மாட்டேன். உங்களுக்கு ஒரு அவமானம்ன்னா அது எனக்கும் இல்லையா…? அப்படி ஒண்ணும் உங்களை தனியா விட்டுட மாட்டோம்”.

“இது ஒரு கண்ணோட்டம் ராதா. இப்படி நினைச்சுப் பாரு…., மனசுக்கு பிடிச்ச பொண்ணு முன்னாடி அவமானப்படும் அந்த வலி இருக்கே….., மத்தவங்க கேலிபேசும் நிலையில் இருப்பது ஒரு விதம்ன்னா…., நாம உயிரா நினைக்கும், நேசிக்கும் பொண்ணு முன்னாடி ஏற்படும் அவமானம்…, உயிரோட சமாதி ஆகுறதுக்குச் சமம்.

“எங்களுக்கு அவமானங்கள் புதிதில்லை, ஆனால்…., தரையில் இருந்து விழுந்தால் அடி கொஞ்சமா இருக்கும். மாடிமேல் இருந்து விழுந்தால் அடி பலமா இருக்கும் ராதா. சிலநேரம் எழ முடியாமலே கூட போகலாம்..”, சொன்னவன், வேதனையாக அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு அங்கிருந்து அகன்றான்.

ராதாவிற்கும் என்ன செய்வது என்றே தெரியவில்லை. ‘முடியாது’ என்று சண்டை போட்டால் எதிர்த்து கேள்வி கேட்கலாம்…., இப்படி உடைந்துபோய் புலம்புபவனிடம் என்ன கேட்க, எதற்கும் நித்யாவிடம் பேசிவிடுவது என்று அவளும் முடிவெடுத்தாள்.

அலுவலகம் முழுவதும் அன்று இதே பேச்சாகவே இருந்தது. அனைவரும் கூடிக் கூடி பேசினார்கள். சிலர் வெளிப்படையாக, தங்கள் குலசாமிக்கு வேண்டுதல் நிறைவேற்றுவதாக கூட சொன்னார்கள்.

இவ்வளவிலும், யாரும் பெண்களை ஒரு குறையும் சொல்லவில்லை. “எல்லாம் நல்லபடியாக நடக்கவேண்டும்”, என்ற வேண்டுதல் மட்டுமே பிரதானமாக இருந்தது.

இதைப் பார்த்த பெண்களே குழம்பிப் போனார்கள். முதலாளிக்காக, ஒரு தொழிலாளி வேண்டினால் அது வியப்பில்லை, ஆனால் ஒட்டுமொத்த தொழிலாளர்களும் வேண்டுவதை வியப்பாய் பார்த்தார்கள்.

மதியம் வீட்டிற்குச் செல்லும் முன்பே ராகவனிடம், மதியத்துக்குமேல் அலுவலகம் வரமாட்டோம் என்று சொல்லிவிட்டே சென்றார்கள் ஆண்கள். பெண்களும் அதை கேட்டுகொண்டிருந்தாலும், எதையும்

காட்டிக் கொள்ளவில்லை.

மதியம் சாப்பிட, வீட்டிற்குச் சென்ற அவர்களது சோர்ந்த முகத்தைப் பார்த்த பெற்றவர்கள் அவர்களிடம் என்னவென்று கேட்கவே, ராஜுதான் அனைத்தையும் ஒப்பித்தான்.

அவன் சொல்லி முடிக்கவே, காஞ்சனா ஓடிச் சென்று, பூஜையறையில் சாஷ்ட்டாங்கமாக விழுந்து வணகியவர், “ஆண்டவா...., இப்போவாவது எங்க புள்ளைங்களுக்கு நல்ல வழியைக் காட்டுனியே...”, கன்னத்தில் போட்டுகொண்டவர், பூஜை அறையில் இருந்த குங்குமம், விபூதியை எடுத்து வந்து அவர்களது நெற்றியில் பூசினார்.

“என்னம்மா நீங்களும் புரியாமல் நடந்துக்கறீங்க. அவங்களுக்குதான் ஒண்ணும் தெரியாது. உங்களுக்குமா...?”, வேதனையாகக் கேட்டான் மனோ.

“எப்போ பாத்தாலும் என்ன தம்பி இது. இப்போ நீங்க ஆறு வருஷத்துக்கு முன்னாடி இருந்த அதே மனோ, அருண், ராஜு கிடையாது. இப்போ நீங்க ஏஎம்ஆர் கன்ஸ்டரக்க்ஷன்னோட முதலாளிங்க. உங்களுக்குன்னு சமுதாயத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் இருக்கு.

“நியாயமானவர்கள் என்ற பெயர் இருக்கு. அந்த பெயரோட நீங்க மேலே மேலே வளரணும்னு நாங்களும் வேண்டாத தெய்வம் இல்லை. ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி நாங்க வாயால சொன்னதைத்தான் இப்போ நித்யா தைரியமா செயல்ல காமிச்சுருக்கா.

“இதில் நீ யோசிக்க எதுவுமே இல்லை. தைரியமா போ...., அந்த டெண்டர் உனக்குத்தான். நீ கோட்(quote) பண்ணிய அளவுக்கு கிட்டே கூட யாராலும் வந்திருக்க முடியாது. நான் அடிச்சு சொல்லுறேன்...”, கண்ணீர் கண்களில் வழிய, நெகிழ்வாக உரைத்தார்.

“எல்லா அம்மாவுக்கும் அவங்க புள்ளைங்கன்னா உசத்திதானே...”, முணுமுணுத்தான்.

“மனோ...., நீ எதுக்கு இப்போ இப்படி புலம்புற, ஐயா கிட்டேயே போன் பண்ணி கேட்டுடு. அவர் சொன்னால் உனக்கு ஓகே தானே...”, அவன் தந்தை அவனை தேக்கினார்.

அவர்கள் அனைவரும் கட்டாயப்படுத்தவே, அரை மனதாக அவருக்கு போன் செய்ய சம்மதித்தான். அவன் அழைக்கவே, வேலையில் இருந்தவர், புருவமத்தியில் முடிச்சுவிழ அழைப்பை ஏற்றார்.

“சொல்லுப்பா மனோ...., எல்லாரும் எப்படி இருக்கீங்க...? அவங்கல்லாம் என்ன செய்யிறாங்க. உபகாரமா இருக்காங்களா...., இல்லை....”, கேட்டவர் ஆர்ப்பாட்டமாக சிரித்தார்.

“ஐயாவோட தேர்வு எப்பவும் சோடை போகாதே...”, இருபொருள்பட அவன் சொல்ல....,

“அட...., கில்லாடிதான் போ...., அதுசரி...., உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா. சரி இப்போ என்ன விஷயமா கூப்ட்ட...., என்ன அவங்க ஏதாவது சண்டித்தனம் பண்ணுறாங்களா...? சொல்லு... கழுதைகளை சரி பண்ணிடுவோம்...”, அவர் அங்கே மீசையை முறுக்கிக் கொள்வதை அவன் இங்கே மானசீகமாகக் கண்டான்.

முன்பெல்லாம் அவன் போன் செய்தால்...., “என்னப்பா ஏதாவது உதவி வேணுமா...?”, என்று துவங்குபவர்...., இப்பொழுது அந்த கேள்வியையே கேட்பதில்லை என்பதை உணர்ந்துகொண்டான்.

“ஐயா...., உங்ககிட்டே சொல்லாமல் ஒரு விஷயம் செய்துட்டோம். அதாவது...”, அவன் இழுக்க....,

“அட மனோ...., எதுவாக இருந்தாலும் சொல்லுப்பா. என்கிட்டே என்ன தயக்கம்...”, அவனை ஊக்கினார்.

“ஐயா அது வந்து...., பிரதாப் கன்ஸ்ட்ரக்ஷன் ஒரு டெண்டர் விடுறாங்க. அதுக்கு கொட்டேஷன் அனுப்பி இருக்கோம். நாளைக்கு அதை பிரிக்கிறாங்க, எங்களையும் கூப்ட்டு லெட்டர் அனுப்பி இருக்காங்க, அதைத்தான் உங்ககிட்டே சொல்லலாம்னு...., போன் செய்தேன்...”, என்ன சொல்வாரோ என்ற பதை பதைப்பிலேயே சொல்லி முடித்தான்.

அவன் சொன்னதற்கு அந்தப்பக்கம் பதிலில்லாமல் போகவே, நொடியில் உலகையே சுற்றிவரும் உள்ளம், எதை எதையோ சிந்தித்தது.

‘உனக்கேன் இந்த தேவையில்லாத வேலை’, என்றோ...., ‘ஓ..., அவ்வளவு பெரிய ஆளாகி விட்டீர்களோ...’, என்றோ...., எதையாவது

சொல்லிவிடுவாரோ என்று தவிப்போடு காத்திருந்தான்.

ஆனால் அந்தப்பக்கம் அவர் சொன்னதைக் கேட்டு நெகிழ்ந்தேபோய்விட்டான். “மனோ...., எவ்வளவு பெரிய சந்தோஷமான விஷயம் சொல்லியிருக்க. இனிப்பில்லாமல் சொல்லுகிறாயே. பரவாயில்லை, நீ சொன்ன விஷயமே இனிப்பாகத்தான் இருக்கு....,

“நாளைக்கு உனக்குத்தான் அந்த டெண்டர் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. அதற்காக இப்பொழுதே உனக்கு வாழ்த்து சொல்லிடுறேன்...

“என்னடா நம்ம புள்ளைங்க குண்டுசட்டிக்குள்ளேயே குதிரை ஒட்டுறாங்களேன்னு எத்தனையோ நாள் வருத்தப்பட்டிருக்கேன், இனிமேல் உங்க வாழ்க்கையை நீங்கதான் முடிவு பண்ணணும்னுதான் இவ்வளவு நாள் ஒதுங்கி இருந்தேன்.

“கொஞ்சம் தாமதம் ஆனாலும்...., நல்ல முடிவாகத்தான் எடுத்து இருக்கீங்க. எனக்கு ரொம்ப சந்தோசம்”, அவரது அதே ஆர்ப்பாட்டம் கொஞ்சம் கூட குறையாமல் இருந்தது.

‘ச்சே...., இவரையா நாம் தவறாக நினைத்தோம்’, என்று மனோதான் மனதுக்குள் வெட்கினான்.

“உங்க ஆசீர்வாதம் வேணும் ஐயா...”.

“என் ஆசீர்வாதம் எப்பவும் உங்களுக்கு உண்டு. ஆல் தி பெஸ்ட்...., அவனுங்களுக்கும் சொல்லிடு...”, சொன்னவர் அழைப்பை துண்டித்துவிட்டு, மர்மமாக புன்னகைத்துக் கொண்டார்.

என்னவோ, அவரோடு உரையாடியது அவனுக்கு யானை பலத்தைக் கொடுத்தது. ‘இவ்வளவுநாள் நாம்தான் நாட்களை வீணாக்கிவிட்டோமோ’, என்று சிந்திக்கவும் வைத்தது.

இப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நித்யாவிற்கு அழைத்து பேசவேண்டும் என்று அவன் உள்ளம் துடித்தது. ஒரு பக்கம் கொஞ்சம் தயக்கமும் இருந்தது. ஆனால் மனோவின் முகத்தில் புன்னகையைப் பார்த்த பெற்றவர்கள், உடனடியாக இனிப்பு செய்வதில் ஆர்வம் காட்டி,

அந்த இடத்தையே கலகலப்பாக்க, நித்யா அவன் மனதில் ஒரு ஓரதிற்கு போனாள்.

ஏற்கனவே 'மதியம் அலுவலகம் வரமாட்டோம்' என்று சொல்லிவிட்டதால்....., வழக்கமில்லாத வழக்கமாக மதியம் நன்றாக சாப்பிட்டதாலும், ஒருவித உற்சாகம் மனதைத் தொற்றியதாலும், மூன்றுமணிக்கு அனைவரும் படுக்கப் போனார்கள்.

மாலை ஐந்து முப்பது மணிக்கு அவர்களை பெற்றவர்கள் எழுப்பி காபி கொடுக்க, பேசியவாறே அதையும் அருந்தினார்கள். பேச்சின் இடையில்...., "வெளியே ஊரெல்லாம் ஒரே கலவரமா இருக்கு....", ராஜுவின் தந்தை சொல்ல திடுக்கிட்டார்கள்.

"நல்ல வேளை...., நீங்க நேரத்தோட வீட்டுக்கு வந்துட்டீங்க. இல்லன்னா நாங்க தவிச்சு போயிருப்போம்....", மனோவின் தாய் நிம்மதியாக உரைத்தார்.

அடுத்த நிமிடம் மனோ...., "ஹையோ..., அப்போ ஸ்டாஃப்ஸ் எல்லாரையும் பத்திரமா வீட்டுக்குப் போகச் சொல்லணும். இல்லன்னா இன்னைக்கு அங்கேயே தங்கிக்க சொல்லவேண்டியதுதான்...", சொன்னவாறு தன் அலைபேசியை எடுத்தான்.

"அதெல்லாம் நாங்க ஏற்கனவே சொல்லிட்டோம் மனோ. எல்லோரும் கிளம்பி போயிருப்பாங்க." அவர் சொன்னாலும், சமாதானம் ஆகாமல் முதலில் ராகவனுக்கு அழைத்தான்.

"சார்...", அவன் குரல் ஒலித்தவுடன், "எல்லோரும் சேஃபா இருக்காங்களா...? எதுவும் பிரச்சனை இல்லையே...?", வேகமாக கேட்டான்.

இல்ல சார்...., ஏற்கனவே பாதிபேர், சாப்பிட வீட்டுக்குத்தான் போயிருந்தாங்க. மீதிபேரை நம்ம கம்பெனி வேனிலேயே கொண்டுபோய் விட்டுட்டேன். ஆனா...".

"என்ன ஆனா...?", படபடத்தான்.

"அனிதாவும், ராதாவும் நீங்க கிளம்பிப் போன கொஞ்ச நேரத்திலேயே வீட்டுக்கு போய்ட்டாங்க ஆனா...., நித்யாதான் எப்படிப்

போனாங்கன்னு தெரியலை. போன் செய்தால் எடுக்கவும் இல்லை...”, அவன் சொல்லி முடிக்கும் முன்னர் போனை வைத்துவிட்டு நித்யாவிற்கு அழைத்தான்.

ரிங் போய்க்கொண்டே இருக்க...., நித்யா அழைப்பை எடுக்கவே இல்லை. கைகள் நடுங்கியது அவனுக்கு. அவன் செய்கையில், அருண் அவன் அருகில் வந்து அவன் தோளை அழுத்த, எதுவும் சொல்லும் நிலைமையில் மனோஜ் இருக்கவில்லை.

“நித்தி...., போனை எடு...., பிக்அப்...., பிக் அப்....”, வாய் தானாக புலம்ப, கையோ போனை இறுக பற்றி இருந்தது.

ஏற்கனவே ராதா, அனிதா மூலம், விஷயம் மற்றவர்களுக்கும் தெரியவந்திருக்க, அவர்களும் கவலையானார்கள். அழும் அவர்களை சமாதானம் செய்த அருணும் ராஜேஷும், எப்படியும் அவளை கண்டுபிடித்துவிடலாம் என்று தைரியம் சொன்னார்கள்.

உடனடியாக ஒரு சட்டையை மாட்டிக்கொண்டு மனோஜ் கிளம்ப, அவனோடு அருணும், ராஜேஷும்வும் கிளம்பி விட்டார்கள். கலவர சமயத்தில் காரில் போனால், பிரச்சினை பெரிதாகலாம் என்பதால், ராஜேஷின்வின் புல்லட்டில் பயணமானார்கள். பதட்டத்தில் எதையும் யோசிக்கமுடியாமல், மூவரும் ஒரே பைக்கில் ஏறிச்சென்றார்கள். அப்பொழுதும் நித்யாவிற்கு ப்ளூடூத்தில் அழைத்தவாறே மனோஜ் வண்டியை விரட்டினான்.

ஆளும்கட்சித் தலைவரது மரணம் என்பதால்...., சட்டம் ஒழுங்கு தலைகீழாக கடைபிடிக்கப் பட்டது. வழியெங்கும் கடைகள், வணிக வளாகங்கள், அனைத்தும் அடித்து உடைத்து சூறையாடப் பட்டன.

வாகனங்கள் கொளுத்தப்பட்டன. மெயின் ரோட்டின் வழியாகச் செல்லாமல், தங்கள் கம்பெனியில் இருந்து, அவர்கள் வீட்டிற்கு செல்ல எத்தனை வழிகள், குறுக்கு வழிகள் இருக்கிறது என்பதைப் பார்த்து, சந்து பொந்துகளில் புகுந்து சென்றான்.

பதட்டமாக இருந்தாலும் அவன் நிதானத்தை கைவிடவில்லை. தான் பதட்டமானால் எதையும் செய்ய முடியாது என்பது அவனுக்குத் தெரியும். எவ்வளவுதான் கவனமாகச் சென்றாலும்...., மனோவின் தலையை ஒரு கல் பதம் பார்த்தது.

நெற்றியில் இருந்து ரத்தம் வழிந்து கண் பார்வையை மறைத்தாலும்...., அதை புறங்கையால் துடைத்தவாறு முன்னேறினான். மருத்துவமனைக்குச் செல்லலாம் என்று சொல்லக் கூட முடியாமல், மற்றவர்கள் மௌனம் காத்தார்கள்.

நெற்றிக்காயத்தின்வலியையும் மறந்து...., ‘இன்று முழுவதும் அவளிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லையே...., பேசாமல் போய்விட்டோமே என்று பின்னர் வருத்தப்பட வைத்துவிடுவாளோ...? எங்கே போனாள்...?’

‘ஆண்டவா...., இதுவரை எனக்கு எந்த நல்லதும் நீ செய்ததில்லை, அதைப்பற்றி நான் உன்னிடம் கேட்டதும் இல்லை. அதற்காக வருத்தப்பட மட்டுமே என்னால் முடிந்தது. ஆனால் இப்போ உன்னிடம் கேட்பது ஒன்றே ஒன்றுதான்..., என் நித்திக்கு எதுவும் ஆகக் கூடாது.... ‘

‘அப்படியே ஏதாவது ஆகவேண்டுமென்றால்...., என் உயிரை எடுத்துக்கொள்’ அந்த நேரம் அவனுக்கு ஒன்று புரிந்தது. தான் நித்தியை உயிராய் நேசிக்கிறோம். அவள் இல்லாமல் தன்னால் எதுவும் முடியாது என்று.

‘நித்தி...., நித்தி...’, மனம் கிடந்தது அடித்துக் கொண்டது.

அந்த நேரம்...., ஒரு சந்தில் திரும்ப..., எங்கிருந்தோ பறந்து வந்த உருட்டுக் கட்டை ஒன்று, பின்னால் அமர்ந்திருந்த ராஜுவின் முதுகை பலமாகத் தாக்கியது. “அம்மா...”, என்று சற்று அலறினாலும்...., சட்டென தன்னை கட்டுப்படுத்திக் கொண்டான்.

“ராஜு...., அடி பட்டுடுச்சா...”, ராஜு வலி தாங்கமாட்டான் என்பதால், அந்த நேரத்திலும் மனோ வினவ...., “எனக்கு ஒண்ணும் இல்லை, நீ போ...”, பார்வையை சுழலவிட்டவாறு நகர்ந்துகொண்டிருந்தார்கள்.

அதே நேரம், மனோவின் அலைபேசிக்கு முயன்று லைன் கிடைக்காமல், அருணின் அலைபேசிக்கு அழைத்தாள் நித்யா.

“ஹலோ அருண்...., நான் பத்திரமா வீட்டுக்கு வந்துட்டேன். நீங்க என்னைப்பற்றி கவலைப்படாமல் வீட்டுக்குப் போங்க. நாளைக்கு பாக்கலாம்...”, படபடத்தாள். எங்கே தன்னை முன்னிட்டு அவர்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்ளக் கூடாதே என்று கவலைப் பட்டாள்.

“இருங்க...., நீங்களே மனோ கிட்டே பேசிடுங்க...”, சொன்னவன்...., மனோவின் காதில் அலைபேசியை வைத்தான். அதே நேரம் கால் கட்டானது.

மறுபடியும் அவன் நித்யாவிற்கு அழைக்க, ‘நீங்கள் அழைக்கும் நபர் தொடர்பு எல்லைக்கு வெளியில் உள்ளார்’ என்ற வாய்ஸ் மெஸ்சேஜ் கேட்டது. இதனால், மனோ இன்னும் பதட்டமானான். அவன் கவனித்திருந்தால் தெரிந்திருக்கும், அவள் அருணுக்கு அழைத்தது அனிதாவின் எண்ணிலிருந்து என்பதும்,

எனவே, அவள் உண்மையிலேயே வீட்டில்தான் இருக்கிறாள் என்ற உண்மையும் புரிந்திருக்கும். அவன் இருந்த பதட்டத்தில், அதையெல்லாம் கவனிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை.

அவன்தான் அவளைக் கண்ணால் கண்டாலே ஆயிற்று என்று இருந்தானே...., ‘இல்லை...., நித்தி என்னை சமாதானம் செய்யத்தான் அருணிடம் இந்தப் பொய்யைச் சொல்கிறாள்...., இல்லையென்றால் ஏன் எனக்கு தொடர்பு கிடைக்கவில்லை...’, பலவாறாக குழம்பித் தவித்தான்.

இறுதியாக, வழியில் என்ன ஆனாலும் பரவால்லை, அவள் வீட்டுக்கே சென்று பார்த்துவிடுவது, என வண்டியை தொடர்ந்து ஓட்டிச் சென்றான். அவள் வீட்டின்முன்னால் வண்டியை நிறுத்தியவன், கதவை பலம்கொண்டமட்டும் தட்டினான். அருணும், ராஜுவும் ஆறுதல் சொல்லக் கூட சந்தர்ப்பம் கொடுக்கவில்லை அவன்.

கதவு இவ்வளவு வேகமாக தட்டப்படவே...., கண்டிப்பாக வந்திருப்பது அவர்கள்தான் என்பது நித்யாவுக்கு புரிந்துபோக...., சோலையைத் தவிர்த்துவிட்டு, அவளே ஓடிச்சென்று கதவைத் திறந்தாள்.

நித்யாவை கண்ணால் கண்டபிறகுதான்...., மூச்சே விட்டான் மனோஜ். மனோ எவ்வளவு நிம்மதியை உணர்ந்தானோ...., அதற்கு மாறாக நித்யா திகைத்துப் போனாள்.

முகம் முழுக்க ரத்தத்துடன் அவன் நின்ற தோற்றம்...., இதுவரை அவனை கசங்கிய உடையில் கூட கண்டதில்லை. ஆனால் இன்றோ, பொருத்தமே இல்லாத ஷார்ட்ஸ் ஷர்ட்டில்....., தலையெல்லாம் கலைந்து, நலுங்கிய அவன் தோற்றத்தைக் கண்டவள்....,

“மனோ...., ஐயோ ரத்தம்...”, அவள் சொல்லி முடிக்கும் முன்னர்...., அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள்.

“நித்தி...., நித்தி...., உனக்கு ஒண்ணும் இல்லையே...”, அவன் அணைப்பில், அவளது உடலில் இருக்கும் எலும்புகள் அனைத்தும் இடம் மாறுவதாகத் தோன்றியது அவளுக்கு.

ஆனால் அந்த வலி தந்த சுகமோ அலாதியாக இருந்தது. தாங்கள் வாசலிலேயே இந்நிலையில் நிற்பதை உணர்ந்தநித்யா, மெதுவாக உள்ளே நகர, மனோ இன்னும் நடப்புக்குத் திரும்பாமல் இருந்தான்.

அவன் அணைப்பு..., அவளை எதில் இருந்தோ காப்பவன் போல் இருந்ததே தவிர...., வேறு சிந்தை எதுவும் இருக்கவில்லை. சுற்றியிருந்தவர்கள் திகைப்பாய் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

***

# மௌனம் – 22.

மனோவின் இந்த அணைப்பை நித்தி சத்தியமாக எதிர்பார்க்கவில்லை. அவனுக்கு அவளைப் பிடிக்கும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும்...., அலுவலகத்தில் கூட, இரண்டு வினாடிகளுக்கு மேல் அவளை தொடர்ந்து பார்க்க மாட்டான்.

ஒரு இடைவெளிக்குமேல் அவளை நெருங்கமாட்டான். தொட்டுப்பேசும் சந்தர்ப்பத்தை இதுவரை அவன் உருவாக்கியதே இல்லை. கொஞ்சம் ஆர்வமாக அவன் பார்ப்பதை, அவள் கண்டுகொண்டாள் என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டால் கூட...., மறந்தும் கூட மீண்டும் அவளைப் பார்க்கமாட்டான்.

அப்படிப்பட்டவன்...., தன்னை தொட்டு அணைத்திருப்பதை அவளால் நம்ப முடியவில்லை. அதுவும் இவ்வளவு இறுக்கமாக...., அந்த இறுக்கத்தில்..., அவன் உடலில் ஓடிய மெல்லிய நடுக்கம் அவளுக்குப் புரிந்தது.

அதனாலேயே அவனை, அவன் செய்கையை தடுக்காமல் அமைதி காத்தாள். அவன் இதழ்கள் அவள் பெயரையே உச்சரிக்க...., அவன் கரங்களோ...., அவள்உயிரோடுதான் இருக்கிறாளா என்று உணர்பவன் போன்று, தொட்டுப்பார்த்தது.

கரங்கள் அவனுக்கு உணர்த்தும் செய்தியை நம்ப முடியாதவனாக, “நித்தி...., நீதானே...., உனக்கு ஒண்ணும் இல்லையே...”, நித்தி நடுவில் பேசவந்த எதையுமே அவன் கவனிக்கும் நிலையில் இருக்கவில்லை.

அவன் நெற்றியில் வழியும் ரத்தம் ஒருபக்கம்...., அவனது புலம்பல் மறுபக்கம்...., அவன் அணைப்பின் இறுக்கம் மூச்சுமுட்ட...., திணறிப் போனாள். ஆனாலும் அவனைவிட்டு விலக முயலவில்லை. இத்தனைநாளாக அவன் மனதை அறிய போராடியவள் ஆயிற்றே.

இப்படி ஒரு சந்தர்ப்பத்தில்தான் அது வெளிவரவேண்டும் என்று இருந்தால் யார் என்ன செய்ய முடியும்...? அப்பொழுதுதான் அவளுக்கு மற்றவர்களின் நினைவே வந்தது.

நித்திக்கோ தர்மசங்கடமாக இருந்தது. அவன் தோள் வளைவில்

நிமிர்ந்து பார்க்க..., அனிதா பக்கத்தில் இருக்கும் அறையைக் கண்காட்டுவது புரிய, மேலே எதையும் யோசிக்காமல் அவன் அணைப்பிலேயே நழுவி அந்த அறைக்குள் சென்று கதவை அடைத்தாள்.

“மனோ...., இங்கே பாருங்க...., எனக்கு எதுவும் இல்லை. அதான் உங்க கைக்குள்ளே தானே இருக்கேன்...., இன்னும் என்ன சின்னப் பிள்ளை மாதிரி. முதல்ல உங்க காயம் என்ன நிலைமையில் இருக்குன்னு பாப்போம்...”, கொஞ்சம் அழுத்தமாக சொன்ன பிறகுதான் சற்று இயல்பானான்.

அதன் பிறகுதான் தான் செய்த செயலின் வீரியம் புரிய, அவள் முகம் பாராமல் தரையைப் பார்த்தவாறே நின்றான். அவனை கைபிடித்து அழைத்துச் சென்று, அங்கிருந்த படுக்கையில் அமர வைத்தவள்...., அவன் கன்னத்தில் கைகொடுத்து தன் முகம் காண வைத்தாள்.

அவளை தான் உயிராய் நேசிக்கிறோம் என்றாலும்...., அதை அவளிடம் வெளிப்படுத்தும் முன்பு தான் செய்த செய்கை அவனுக்கு சங்கடத்தை அளித்தது. அதே நேரம், அதற்காக அவளிடம் மன்னிப்பை வேண்டவும் மனம் வரவில்லை.

ஒரு மாதிரி மனநிலையில் அவன் தடுமாற, நித்தியோ அவனை உணர்ந்தவள் போன்று...., “நீங்க இங்கேயே இருங்க. நான் ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ்சை எடுத்துட்டு வரேன்...”, அறையிலிருந்து வெளியேறினாள்.

அவளை கரம் பிடித்து தடுத்தவன்...., “என்மேல் கோபமா இருக்கியா நித்தி. ஏன் என் போனை எடுக்கவே இல்லை...?”, தவிப்பாய் கேட்டான்.

“உங்கமேல எனக்கென்ன கோபம் மனோ. என்னோட போனை நம்ம ஆபீஸ்லயே மறந்து விட்டுட்டு வந்துட்டேன். அதான் எடுக்கலை...”, வேகமாக அவனை சமாதானம் செய்தாள்.

“ஓ...., நான் பயந்துட்டேன்...., எங்கே என்மேல் இருக்க கோபத்தில்தான் எடுக்கலையோன்னு...., நான் இதையெல்லாம்....”, வேகமாக அவன் வாயை மூடியவள்,

“முதல்ல உங்களை கவனிப்போம். பிறகு எல்லாம் பேசிக்கலாம்.

கொஞ்சம் கவனமா இருக்க மாட்டீங்க...., இப்போ பாருங்க...., எப்படி காயம் பட்டுருக்குன்னு...", கவலையாக உரைத்தவளின் கரங்களோ...., அவன் முகத்தை பாசமாக வருடியது.

அவள் செய்கையில் நெகிழ்ந்தவன்...., அவள் கைகள்மேல் தன் கரத்தை வைத்து அழுத்திக் கொண்டான். அவளை காணாமல் தான் தவித்த தவிப்பு கண்முன் வந்துபோக...., "நான் எப்படிப்பட்டவனா இருந்தாலும் உனக்கு என்னை பிடிக்கும்தானே நித்தி. என்னை வெறுத்துட மாட்டியே...", குரல் தடுமாற, கரகரப்பாய் பேசினான்.

அவன் மனதை எது அழுத்துகிறது என்பது புரியாமலேயே...., அவனை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவளுக்குள்ளே புதைந்துபோக துடிப்பவனாக...., அவள் இடையை கட்டிக்கொண்டு ஒடுங்கினான்.

அவனை தாய்மையின் பரிவோடு அரவணைத்தவள், "நீங்க என்னை போன்னு விரட்டினால் கூட நான் உங்களை விட்டு போகமாட்டேன் மனோ...", அவன் சிகையை ஒதுக்கியவாறு உறுதியாகச் சொன்னாள்.

அவள் வார்த்தைகள் அவனுக்குள் இறங்க...., அந்த நிமிடத்தை கலைக்க மனமில்லாமல், அவன் ஆழ்மனதில் படிந்துகிடக்கும் துயரமும் புரியாமல் மௌனமானாள். இருவரும் காதலைச் சொல்லாமலேயே...., ஒருவர் மற்றவரின் மனம் புரிந்தவர்களாக அமைதியானார்கள்.

இவர்கள் அறைக்குள் வந்த அதே நேரம்...., ராஜு அனிதாவிடம் வேகமாகச் சென்றவன்...., "அனி...., எனக்கும் அடி பட்டுருக்கு. பயங்கரமா வலிக்கிது...", வேதனையை முகத்தில் சுமந்தவாறு, தன் முதுகை அவள் பக்கம் திருப்பிக் காட்டினான்.

"என்ன...., அடி பட்டுடுச்சா...? எங்கே...?", படபடத்தவள்...., அவன் முதுகில் கை வைத்து அழுத்தினாள்.

"அங்கே இல்லை. இன்னும் கொஞ்சம் மேலே...., இல்ல இங்கே...., இந்த பக்கம்...., ம்ச்...., போ அனி...., அங்கல்லாம் இல்லை", அவள் சரியான இடத்தில் கை வைக்காமல் போகவே...., சலிப்பாகவும், முனகலாகவும் சொன்னான்.

இது வேலைக்காகாது என்பதை உணர்ந்தவள்...., "முதல்ல உள்ளே

வாங்க..”, அவனை மற்றொரு அறைக்குக் கூட்டிச் சென்றாள். அவள் என்ன செய்யப் போகிறாள் என்பதை உணர்ந்தவன் போன்று...., அருண் அவளிடம் மறுத்து எதையோ சொல்லப் போகையில்...., அவள் பார்த்த பார்வையில்,

“சரி...., பட்டாத்தான் புரியும்னா, என்னால் எதுவும் செய்ய முடியாது...”, அசட்டையாக தோளை குலுக்கி தலையை அசைத்தான்.

“எல்லாம் எங்களுக்குத் தெரியும்...”, முறைப்பதை விடாமலே...., ராஜுவை கரம் பிடித்து அழைத்துச் சென்றாள்.

“நானும் பாக்கத்தான போறேன்... இங்கேதானே இருப்பேன்...”, அருண் நக்கலாக மொழிந்தான்.

அருணை கண்டுகொள்ளாமல்...., அங்கிருந்து சென்றவள்...., “ராஜு...., டிஷர்ட்டை கழட்டுங்க...., எங்கே அடிபட்டிருக்குன்னு பாப்போம்...”, அனிதா சொன்னதற்கு மறு பேச்சில்லாமல் அவன் செயல்பட...., அவன் அருகாமையில் அனிதாதான் சற்று தடுமாறிப் போனாள்.

இவ்வளவு நேர அலைச்சலினால் வியர்வையோடு கலந்த அவனது ஆண்மையின் வாசனை அவளை ஏதோ செய்தது. அவன் முதுகின் பின்னால், தயங்கித் தடுமாறி அவள் நிற்க, “அனி...., நான் வலிக்கிதுன்னு சொல்லிட்டு இருக்கேன்...., நீ என்ன செய்யிற...?”, அவன் கேள்வியில், தன் மோனநிலையில் இருந்து வெளியே வந்தாள்.

“ஹங்....., அ...தான்...., பாத்துட்டு இருக்கேன்...”, திணறியவாறு உரைத்தவள், அவன் முதுகைப் பார்க்க, உருட்டுக்கட்டை பலமாக மோதியதால் கன்றி சிவந்திருந்தது அவன் முதுகு.

அதைப் பார்த்தவளுக்கு, மனதில் இருந்த மயக்கம் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் ஓடிப் போக...., “ஹையோ...., என்ன இது...? இப்படி அடி பட்டுருக்கு...”, சொன்னவள்...., கைகளால் அதை தொடப் போனவள்...., அவன் எதற்காகவோ பின்னால் சரியவே...., அவள் கைகள் அவன் காயத்தின்மேல் அழுத்தமாகப் பதிந்து போனது.

அவ்வளவுதான் அவளுக்குத் தெரியும்...., அடுத்த நிமிடம்...., அவர்கள் வீடே குலுங்கும்படி...., “ஆஆஆ.....”, என அலறிவிட்டான் ராஜு.

திடுக்கிட்டுப் போனாள் அனிதா. ஒரு நிமிடம் என்ன நடந்தது என்றே தெரியாமல் உறைந்தவள்...., அவன் வலியில் துடிப்பதைப் பார்த்தவள், "ராஜு...., சாரி...., சாரி...., தெரியாமல் கை பட்டுடுச்சு. ஹையோ சத்தம் போடாதீங்களேன்....., என்ன இது...., சின்னப் பிள்ளையாட்டம்....,

"எல்லோரும் வெளியே இருக்காங்க என்ன நினைப்பாங்க...", அனிதாவின் எந்த விளக்கமும், சமாதானமும் அவனை எட்டவே இல்லை. சின்னப் பிள்ளையென கத்திக் கொண்டிருந்தான்.

அவன் வாயை மூட அவள் முயற்சிக்க...., "ஆ...., அனி...., அனி...., ரொம்ப வலிக்குது. ஏதாவது செய்...., எண்ணெய் போடு...., மருந்தைப் போடு...", அலறலை நிறுத்தவே இல்லை.

ராஜுவின் அலறலைக் கேட்ட அருண், ராதாவைப் பார்த்து கண்ணடித்து சிரிக்க, ராதாவோ...., ராஜுவின் கத்தலுக்கு காரணம் புரியாமலும், அருணின் சிரிப்பின் காரணம் புரியாமல் விழித்தாள்.

"அருண்...., ராஜு எதுக்கு இப்படி கத்துறார்...?", ஒருவித பயத்தோடு கேட்டாள்.

"அவனுக்கு எந்த வலியையும் தாங்க முடியாது. அது குறையும் வரைக்கும் இப்படிதான் கத்தி கூச்சல் போடுவான். அவன் குணம் தெரிந்ததால் தான், அனிதாவை தடுக்கப் பாத்தேன். நான் என்னமோ, அவங்க ரொமான்ஸ் பண்ணும்போது குறுக்கே போன மாதிரி முறைச்சுகிட்டு போனாங்கல்ல...., அனுபவிக்கட்டும்...", தோள் குலுங்க சிரித்தான்.

வேகமாக அவன் அருகில் வந்த ராதா..., அவன் தோளில் இரண்டு அடி போட்டாள். "என்னன்னு கேக்காமல் இதென்ன சிரிப்பு. முதல்ல போய் அவரை சமாதானம் செய்ங்க...", அவனை விரட்டினாள்.

"முறுக்கிட்டு போனாங்கல்ல...., அவங்களே சமாளிக்கட்டும்...", தோளைக் குலுக்கிவிட்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்துகொண்டான்.

இங்கே ராஜுவோ...., அனிதாவிடம்...., "ரொம்ப வலிக்குது அனி...., அனி...", விடாமல் புலம்பினான்.

என்ன செய்து அவனை சமாதானம் செய்வது என்று புரியாமல்

திகைத்தவள், முதலில் அவனை அமைதிபடுத்துவது ஒன்றே முக்கியம் என்று தோன்ற...., நொடி கூட தாமதிக்காமல், அவன் பின்னங்கழுத்தில் கை போட்டு, தன் பக்கம் இழுத்தவள்...., அவன் புலம்பிக் கொண்டிருக்கும் பொழுதே, அவனை இழுத்து, அவன் இதழோடு தன் இதழை இணைத்தாள்.

இதுவரை கையை உதறிக் கொண்டிருந்தவனின் கரங்கள் சட்டென அனிதாவின் இடையைப் பற்றிக்கொள்ள...., "அனி...", என்ற அவனது அழைப்பு, திகைப்பும், குழைவுமாக மாறிப் போனது.

இதழ் இணைப்பு மட்டுமே அவள்வசமிருக்க...., இப்பொழுது முற்றுகையை அவன் மாற்றியிருந்தான். ஒரு அழகான ஆழமான முத்தத்தில் திளைத்திருந்தவன், அனிதா அவன் சிகைக்குள் கரம்கொடுத்து அவனை விலக்கவே, ஒரு வழியாக முடிவிற்கு வந்தது.

ஆசையாக சுவைத்த மிட்டாயைப் பாதியில் பிடுங்கியதுபோன்ற பாவனையில் விழித்தவன்...., "ரொம்ப நல்லாருக்கு அனி. எனக்கு இன்னும் வேணும்...", அவன் கேட்ட பாவனையில்..., அனிதாவால் மறுக்க முடியவில்லை.

மீண்டும் அவன் ஆசைக்கு இசைந்தவள், அவனது ஆர்வத்தில் குழைந்துதான் போனாள்.

ஆனாலும் ஒரு கட்டத்துக்குமேல் அவளால் தாள முடியாமல் அவனிடமிருந்து விலகியவள்...., "போதும் ராஜு....., இப்போ எதுக்கு இப்படி கத்துனீங்க...? இனிமேல் வலித்தாலும், இப்படியெல்லாம் கத்தக்கூடாது புரியுதா. நீங்க சின்னப் பையன் கிடையாது....,

"இனிமேல் இப்படி கத்துனீங்கன்னா உங்ககிட்டே பேசமாட்டேன் ஆமா...", அந்த நேரத்திலும், அவனை மனதளவில் முதிரவைக்க முயன்றாள்.

அவனோ அவள் சொல்லவருவது பாதி புரிந்தும் புரியாமலும்...., "நான் கத்தாமல் இருக்கணும்ன்னா, இப்போ செய்தமாதிரி எனக்கு முத்தம் கொடுத்தன்னா நான் கத்தவே மாட்டேன் சரியா...?", அவளிடம் டீல் பேசினான்.

அவன் சொன்ன விதத்தில் சிரித்தவள்....., ஆசைக் காதலியாக அவனுக்கு

சம்மதம் கொடுக்கவும் மறக்கவில்லை.

அதே நேரம் வெளியே இருந்த அருண், சட்டென ராஜுவின் சத்தம் நின்று போனதையும், அது குறைந்த விதத்தையும் பார்த்தவன்...., கண்களை அகல விரித்து அதிர்ச்சி அடைந்தான்.

“படுபாவிங்க...., ஒருத்தன் எமோஷனல் ஆகி ஒரு பக்கம் ரூமுக்குள் போனான்னா...., இன்னொருத்தன் பச்சப்புள்ளமாதிரி நடிச்சுக்கிட்டே இன்னொரு பக்கம் ரூமுக்குள் போய்ட்டான். ரெண்டுத்துக்கும் லாயக்கில்லாமல் நான்தான் நடுவழியில் உக்காந்து இருக்கேன்...”, பொறாமையில் பொசுங்கியவாறு, இரண்டு சாத்திய கதவுகளையும் பார்த்தவாறு புலம்பினான்.

அவன் சொன்ன பாவனையில் ராதா வாய்விட்டு சிரிக்க...., “உனக்கு என்மேல் இரக்கமே வரலையா...? அதுசரி...., ஒருத்தன் ரத்தக் காயத்தோட வந்தான், இன்னொருத்தன் உருட்டுக்கட்டை அடி வாங்கினான்...., எனக்குதான் இந்த கடவுள் ஓரவஞ்சனை செஞ்சுட்டானே....,

“எனக்கும் ஏதாவது ஆகியிருந்தால்...., அவனுங்களை மாதிரி ஏதாவது கிடைச்சிருக்கும்....? எங்கே...., நமக்குத்தான் அந்த அதிர்ஷ்டம் எல்லாம் கிடையாதே....”, கேலிபோல் உரைத்தாலும்..., அதில் தெரிந்த ஏக்கம் ராதாவை அசைத்துப் பார்த்தது.

“ஆமா...., உங்களுக்கு சாமர்த்தியம் பத்தாதுன்னு சொல்லுங்க. அதை விட்டுட்டு எதுக்கு தேவையில்லாமல் இப்போ கடவுளை இழுக்குறீங்க...”, அவனை திசை திருப்பும் பொருட்டு, சொன்னவள், கையில் கிடைத்த ஒரு புத்தகத்தை எடுத்து அவன் தலையில் போட்டுவிட்டு, எழுந்து மற்றொரு அறைக்குச் சென்றாள்.

ஒரு நிமிடம் அவள் எதற்காக அடித்தாள் என்பதே புரியாமல் குழம்பியவன்...., புரிந்த பொழுதோ...., “ஏய்...., என்ன சொன்ன...?”, அவள் அறைக்குள் புகுந்து கதவடைக்கும் முன்னால், அவன் உள்ளே சென்று கதவை சாற்றினான்.

“அருண்...., நான் ஏதோ சும்மா...., உங்களை டைவர்ட் பண்ணத்தான் சொன்னேன்...”, அவனது வழக்கமான விழுங்கும் பார்வையை எதிர்கொண்டவளால், அதற்குமேல் பேச முடியாமல் திணறினாள்.

“எனக்கு சாமர்த்தியம் பத்தாதுன்னு சொன்னல்ல...., அப்படி இல்லன்னு காட்ட வேண்டாம்....”, “வேண்டா....”, வேண்டாம் என்று முடிக்கும் முன்னர்...., அவளை, அவள் இதழ்களை தன்வசம் ஆக்கியிருந்தான்.

அந்த நேரம் அருணின் வருத்தத்தை போக்குவது மட்டுமே அவள் எண்ணத்தில் இருந்தது. அந்த நிமிடம் மூன்று ஜோடிகளும் நிம்மதியாகவும், நிறைவாகவும் இருந்தார்கள்.

நித்தி மனோவின் காயத்துக்கு மருந்துபோட்டுவிட்டு, பிளாஸ்டர் போட்டு வெளியே வந்தபொழுதும் சரி, அனிதா, ராஜுவின் காயத்துக்கு ஒத்தடம் கொடுத்து, மருந்துபோட்டு வெளியே வந்தபொழுதும் சரி, ராதா மனோவுடன் உரையாடி முடித்து வெளியே வந்தபொழுதும்...., சோலை பேஸ்த்தடித்த முகத்துடன்...., ஹாலின் மூலையில் அமர்ந்திருந்தாள்.

அவள் அப்படி இருப்பதைப் பார்த்த மூவரும் ஜாடை காட்டி சிரிக்க, சோலைக்குதான் ‘ஃபுல்’ அடித்த மயக்கத்தில் இருப்பதுபோல் இருந்தது. காட்சிகள் மங்கலாக, காது கேட்காமல், குழறலாக இருந்தது. அது, பெண்களை இன்னும் உசுப்பேற்ற...., வாய்விட்டு சிரித்தார்கள்.

ஆண்கள் மூவரும் அவர்கள் சிரிப்பை மனதுக்குள் சேகரித்துக் கொண்டார்கள். அந்த நாளின் இனிமை மறுபடி தங்கள் வாழ்வில் வருமா என்பது அவர்களுக்குத் தெரியாது. எனவே...., அந்த நொடியின் இனிமையை இழக்க அவர்கள் தயாராக இருக்கவில்லை.

ஒரு வழியாக அவர்களிடம் ஆயிரம் பத்திரங்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு போன ஆண்கள்...., நீண்ட வருடங்களுக்குப் பிறகு, நிம்மதியாக உறங்கினார்கள்.

காலையில் விடியல், மனோவின் வீட்டில் கொஞ்சம் பதட்டமாகவே விடிந்தது. அருண் மனோவைச் சுற்றியே வந்தான். மனோ அதை உணர்ந்தாலும், மறுத்து எதுவும் கூறவில்லை.

“மனோ நானும் உன்னோடவே வரேன்...”, ஆயிரமாவது முறையாக அருண் சொல்ல, ஆயிரத்தோராவது முறையாக மனோ அதை மறுத்தான்.

“இவ்வளவுநாள் நிர்வாகத்தை நான்தான் பார்த்தேன், இனிமேலும் பார்த்துக் கொள்வேன். என் வேலையில் தலையிடாதே”, என்று

பிடிவாதமாக முடித்துவிட்டான்.

“இதற்கு முன்னால் பரவாயில்லை மனோ. ஏதோ தெரியாமல் இருந்தோம். ஆனால், இனிமேல் ஏற்படக்கூடிய அவமானங்கள் எதையும் உன்னை தனியாக சந்திக்க விடமாட்டேன்”, அவனும் பிடிவாதமாக உரைத்தான்.

“அதையேதான் நானும் சொல்லுகிறேன் அருண். இவ்வளவுநாள் என் ஒருவனோடு போன அவமானம்...., அப்படியே என்னோடு போகட்டும். உங்களை தொடரவேண்டாம். என் முடிவு சரியானதாக இருக்கும் என்ற நம்பிக்கை இருந்தால் இத்தோடு அந்த பேச்சை விடு....., எல்லாம் நான் பாத்துக்கறேன்”, தைரியமாக சொல்லிவிட்டாலும்...., உள்ளுக்குள் தடுமாறிகொண்டுதான் இருந்தான் மனோ.

காரை எடுத்து, நித்யாவை அழைத்துக்கொண்டு, அந்த இடம் சென்று இறங்கும்வரை அவர்களுக்குள் ஒரு துளி பேச்சு கூட இடம்பெறவில்லை. வாகனத்தை பார்க்கிங்கில் நிறுத்தியவனது பார்வை பதட்டமாக சுற்றுப்புறத்தை ஆராய்ந்தது.

இதுவரை இருந்த தைரியம் அனைத்தும் வடிந்துபோனதாக உணர்ந்தான். அதை நித்தியிடம் மறைத்தவன், ஸ்டியரிங் வீலில் கையை அழுந்தப் பற்றியவாறு தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தான்.

பத்துநிமிடத்துக்கு மேல் ஆன பிறகும் மனோ கிளம்பும் வழியைக் காணாமல் போகவே...., மேலும் நேரமும் நெருங்கிவிடவே, “மனோ...., உள்ளே போகலாம். எவ்வளவு நேரம்தான் காருக்குள்ளேயே இருப்பது..?”, அவனைக் கலைத்தாள்.

“ம்...., போகணும்...., போகலாம்....”, அவன் வாய் உரைத்தாலும் இறங்கும் வழியைக் காணோம். என்னவோ, பார்டர் மார்க் எடுக்கும் பையன் ரிசல்ட்டைப் பார்க்க பயந்து அமர்ந்திருப்பதுபோல் இருந்தது அவனது தோற்றம்.

இறுதியில், தன் இருக்கையில் இருந்து இறங்கிய நித்தி, அவன் பக்கம் சென்று கதவைத் திறந்தவள்...., அவன் கரம் பிடித்து வெளியே இழுத்தாள். மனோவின் கரங்களோ சில்லிட்டு போய் இருந்தது. உள்ளங்கை முழுவதும் வியர்வையின் ஈரம்.

இப்படி ஒரு நிலையில் மனோவை எதிர்பாராத நித்தி திகைத்தாள். தன் கரங்களுக்குள் அவன் கரங்களைப் பொதிந்து கொண்டாள். கார் பார்க்கிங்கில் அவன் கரத்தைப் பிடித்தவாறு இருப்பதை யாராவது பார்த்தால், வம்பாகிவிடுமே என்ற கவனத்தில்...., பார்வையை வேகமாக சுழலவிட்டாள்.

நித்தியை அதிகநேரம் சோதிக்காமல்...., இருக்கையிலிருந்து இறங்கியவன், கரத்தை விடுவித்துக் கொண்டு, பேண்ட் பாக்கெட்டுக்குள் நுழைத்துக் கொண்டான். தங்கள் கம்பெனியின் பெயர் தாங்கிய இருக்கையைப் பார்த்து தேடி இருவரும் அமர்ந்தார்கள்.

டெண்டர் பிரிக்கத் துவங்கியபொழுதும் சரி, அதன் பிறகும் கூட, முகத்தை இறுக்கமாக வைத்துகொண்டு, விறைப்பாகவே அமர்ந்திருந்தான்.

அவன் நிலையைக் கண்டவள்...., “மனோ, ரிலாக்ஸ்...”, அவனை அமைதிபடுத்த முயன்றாள்.

ஆனால் அவனோ...., தன் பேண்ட் பாக்கெட்டில் இருந்து கர்ச்சீப்பை எடுத்தவன், முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான். அவளிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை.

டெண்டர் அமவுண்ட்டை மனோவின் கம்பெனிதான் குறைவாக கோட் செய்திருப்பதாகக் அறிவித்தபொழுது கூட, நித்தி துள்ளலாக நிமிர, மனோஜோ ஒரு மோன நிலையிலேயே இருந்தான்.

அவனைச் சுற்றி இருந்த அனைவரும் கரங்களைத் தட்டி அவனுக்கு வாழ்த்து தெரிவிக்க, கண்ணுக்கே எட்டாத முறுவலோடு அவர்களை எதிர்கொண்டான்.

“இப்பொழுது ஏஎம்ஆர் கன்ஸ்ட்ரக்ஷன் பற்றிய ஒரு சிறிய முன்னோட்டம்...”, என்ற அறிவிப்போடு...., அவர்கள் எடுத்துச்செய்த கட்டடங்களின் அணிவகுப்பு திரையில் ஓட, அங்கிருந்த அனைவரின் பார்வையும் மனோஜின் மேல்தான் இருந்தன..

மனோஜை மேடைக்கு அழைக்க...., அவனோ நித்தியைப் பார்த்தான். சற்று தயங்கினாலும்...., அவளும் அவனோடு எழுந்து செல்ல...., மேடையிலேயே ஒப்பந்தங்கள் அனைத்தும் கைமாற...., அனைவரின்

வாழ்த்துக்களையும் பெற்றுக் கொண்டான்.

அப்பொழுதும் முகம் சற்று தெளிந்ததே தவிர, கண்களோ ஒரு கவனமுடனே மற்றவர்கள் மீது படிந்து மீண்டது. அவனது பார்வையின் வித்தியாசம் மற்றவர்களுக்குப் புரிந்ததோ இல்லையோ...., நித்யா சரியாக உணர்ந்துகொண்டாள்.

அங்கிருந்தவர்கள் ஒவ்வொருவராக வந்து அவனுக்கு வாழ்த்தையும், தங்களை அறிமுகமும் செய்துகொள்ள, கொஞ்சம் தயங்கினாலும், அவர்களோடு சகஜமாக பேச முயன்றான். அதே நேரம்..., நித்தியை அடிக்கடி பார்க்கவும் தவறவில்லை.

அவளோ பார்வையாலேயே தைரியம் அளித்துக் கொண்டிருந்தாள். அவளது உடனிருப்பு, இன்னும் தைரியத்தையும், தெம்பையும் அவனுக்கு அளித்தது.

மற்றவர்கள் விடைபெற்று சென்றுவிட, தாங்கள் வேலைசெய்யப் போகும் கம்பெனியோடு சில பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றது. அவர்களோடு சாதாரணமாக உரையாடியவன்....,

“மனோஜ்...., உங்களோட கம்பெனியில் இருந்து கொட்டேஷன் வந்தவுடனே நாங்க எல்லாம் உடனே நினைத்தோம்...., கண்டிப்பா நீங்கதான் வின் பண்ணுவீங்கன்னு. நாங்களும் ஃபீல்டில் உங்களை நாலு வருஷமா கவனிச்சுட்டு தானே இருக்கோம்.

“அப்போவே நீங்க இன்னும் பெரிய ஆர்டர்கள் எடுக்கலாமேன்னு நினைப்போம். இப்போ நீங்களே எங்க ப்ராஜெக்ட் செய்யப்போவது, எங்களுக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. எங்களுக்கு உங்கமேல் நூறு சதவீதம் நம்பிக்கை இருக்கு...., நீங்க தைரியமா பண்ணுங்க...., ஆல் தி பெஸ்ட்...”, கை குலுக்கி விடை கொடுத்தார்.

கையில் அவர்கள் கொடுத்த ஃபைலோடு வெளியேறியவனின் முகம் இப்பொழுது பிரகாசமாக இருந்தது. வேகமாகச் சென்று காருக்குள் ஏறி அமர்ந்தவன்...., ஆழமான மூச்சுக்களை எடுத்து விட்டான்.

நித்யா அவனைப் புன்சிரிப்போடு பார்த்து...., “என்ன குட்டிப்பையா, பயம் போய்டுச்சா...?”, கேலியாக வினவினாள்.

“நித்தி...., வித் யுவர் பெர்மிஷன்...”, சொன்னவன்...., அவள் என்னவென்று கேட்கும் முன்னர்...., அவளை இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

“ஹப்பா...., நித்தி...., நான் எப்படி ஃபீல் பண்ணுறேன்னு எனக்கு சொல்லவே தெரியலை. ஆனா அது எல்லாத்தையும் இப்போ சொல்லுறேன். அதுக்கு முன்னாடி....”, அவளை விலக்கி அமர்ந்தவன்...., வேகமாக தன் அலைபேசியை எடுத்தான்.

அருணுக்கு அழைத்தவன்...., “டேய்...., இப்போவே ராஜு, ராதா, அனிதா எல்லாரையும் கூட்டிட்டு விஜயா மால் வர...., இந்த நாளை நாம செலிபிரேட் பண்ணுறோம்...”, அவன் என்னவென்று கேட்கும் முன்னர், அழைப்பை துண்டித்தவன்,

தங்கள் வீட்டுக்கு...., ஐயாவுக்கு என அனைவருக்கும் அழைத்துச் சொன்னான். அத்தோடு நிறுத்தாமல்...., அருகில் இருந்த பீச்சுக்கு காரை விட்டவன்...., உச்சி வெயிலையும் பொருட்படுத்தாமல்....., மணலில் கால்கள் புதைய, “யாஹூ....”, என கத்தியவாறு ஓடினான்.

அது அவ்வளவாக ஆள் நடமாட்டமில்லாத பகுதி என்பதால்...., அவனது கூச்சலைக் கேட்க அங்கே யாரும் இருக்கவில்லை. அவன் செய்கை அனைத்தையும் புரியாத பார்வையாகவே பார்த்துக் கொண்டிருந்தாள் நித்யா.

மனோவோ ஓடியவன்...., அலையில் கால் நனைய நின்றவன், அப்படியே மண்டியிட்டு அலையில் அமர்ந்துவிட்டான். அலை வந்து அவன்மீது மோத, முழுவதுமாக நனைந்துவிட்டான்.

நித்தி அவன் அருகில் வந்தவள்...., “மனோ என்ன இது சின்னப் பையன் மாதிரி. முதல்ல எழுந்து வாங்க...”, அவனைப் பிடித்து எழுப்பினாள்.

“நித்தி...., நான் இப்போ எவ்வளவு நிம்மதியா இருக்கேன்னு உனக்கு சொன்னால் புரியாது. ஹப்பா...., நேற்றையில் இருந்து நான் பட்ட டென்ஷன்...., உஃப்...., இப்போ அதுக்கு மாறா...., பத்துபேர் முன்னாடி, நானும் ஒரு முழு மனிதன்தான் என்பதை உணர வச்சுட்ட.

“எல்லார மாதிரியும்..., என்னாலும் நாலுபேருக்கு சமமா நடந்துக்க முடியும்...., நானும் சாதாரண வாழ்க்கையை வாழ முடியும்...., எனக்கு

இந்த சமுதாயத்தில் ஒரு மதிப்பிருக்கு, ஒரு கௌரவம் இருக்கு என்பதை எனக்கு தெரியப்படுத்தியிருக்க நித்தி.

“இந்த டெண்டர் எனக்கு கிடைக்காமல் போயிருந்தால் கூட, நான் துளிக் கூட வருத்தப்பட்டிருக்கவே மாட்டேன். ஏன்னு கேக்குறியா...., வந்திருந்த மனிதர்களில் ஒருத்தர் கூட என்னை ஏளனமா பாக்கவே இல்லை. உனக்கு இது தேவையான்னு கேக்கவே இல்லை.

“மாறாக...., என்னையும் அவங்கள்ள ஒருத்தனா பாத்தாங்க. இது...., இது உன்னால்தான் நித்தி. இப்போ கேளு...., உனக்கு என்ன வேணும்னு கேளு நித்தி. என் உயிரைக் கூட உனக்குத் தரேன்...”, அவள் காலருகில் மண்டியிட்டு, அவள் கரங்களைப் பிடித்தவாறு அவன் கேட்க, தான் அப்படி என்ன செய்தோம் என்று புரியாமல் திகைத்து நின்றாள் நித்யா.

***

# மௌனம் - 23.

மனோஜும் நித்யாவும் மாலுக்கு சென்று சேரும் முன்பே, அருண் மற்றும் அனைவரும் இவர்களுக்காக காத்திருந்தார்கள். காரில் வரும்பொழுதே, அருண் எங்கே இருக்கிறான் என்று கேட்க, அவர்கள் ஃபுட் கோர்ட்டில் இருப்பதாகச் சொல்லவே, அவர்களை அங்கேயே காத்திருக்கச் சொல்லிவிட்டு, மனோவும், நித்தியும் உடை எடுக்கச் சென்றார்கள்.

பீச்சில் அலையில் நின்றதால் மனோவின் உடை முழுவதும் நனைந்திருக்க, அவன் ட்ரயல் ரூமில் காத்திருக்க, அவனுக்காக அவசரமாக உடைகளைத் தேர்வுசெய்து எடுத்துச் சென்று கொடுத்தாள் நித்யா.

ஜீன்ஸும் டிஷர்ட்டும் அவள் எடுத்துக் கொடுத்திருக்க, டிஷர்ட் போட கொஞ்சம் தயங்கினாலும்....., நித்தி முதல் முதலில் தேர்வுசெய்த உடை என்பதால்...., மறுக்காமல் போட்டுக் கொண்டான்.

பொதுவாக மனோ டிஷர்ட் போட மாட்டான். அவனுக்கு அதில் அவ்வளவாக பிடித்தம் இருந்தது இல்லை. ஆனால் இன்று அணிந்தபிறகு அந்த உடை ஏனோ அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ட்ரயல் ரூமில் இருந்து வெளியேறியவன்...., நித்தியின் முன்னால் சென்று நிற்க,

“வாவ்...., இந்த ட்ரஸில் சூப்பரா இருக்கீங்க மனோ. உங்களுக்கு பிடிச்சிருக்கா...?”, தனது தேர்வு அவனுக்கு பிடிக்கிறதா என்பதை அறியும் ஆர்வம் அதிகம் தொனித்தது அவளிடம்.

“ம்...., ரொம்ப....”, டிஷர்ட்டை நீவியவாறே ஆசையாக பதில் கொடுத்தான். அதற்கான பணத்தையும் அவளே கொடுக்க, அவளுக்கு அந்தப்பணத்தைதிருப்பிக்கொடுக்கும் எண்ணமே இல்லாமல் அவளோடு நடந்தான்.

ஃபுட் கோர்ட்டுக்குள் நுழைந்த மனோவை அனைவருமே ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அருண் ஓடிச்சென்று மனோவை அணைத்துக் கொண்டான். “என்ன மனோ...., புது டிரஸ்சா...? ரொம்ப அழகா இருக்கு”, ராஜு அவன் உடையைப் பற்றி சொன்னான்.

“நிஜமாவே எல்லாம் நல்லபடியாதானே முடிஞ்சது...”, மனோவின் காதுக்குள் மெதுவாக வினவினான்.

“அருண்...., உண்மையைத்தான் சொன்னேன். நீங்களும் அங்கே இருந்திருக்கலாம்னு நினைத்தேன் தெரியுமா...? ஒரு உண்மையான கௌரவம் கிடைத்தது. நான் நிஜமாவே ரொம்ப சந்தோசமா இருக்கேன். இதுக்கு நாம நித்யாவுக்குதான் தேங்க்ஸ் சொல்லணும்....”, நித்தியை பார்த்தவாறே உரைத்தான்.

“மனோ...., இது ஒரு சாதாரண விஷயம்...”, அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

“மனோ...., நித்யா நமக்கு ரொம்ப உதவி செய்யிறாங்க இல்ல. ஆனாலும் நீ எனக்கு போன் பண்ணும் வரை என்னால் எதுவுமே செய்ய முடியலை. நீ போன் பண்ணி பேசிய பிறகுதான் நிம்மதியா மூச்சே விட முடிஞ்சது...”, அந்த நேர டென்ஷன் விலகியவனாய் பேசினான் அருண்.

“நானும் உங்ககிட்டே முதல்ல தைரியமா பேசிட்டு போயிட்டாலும்..., இவ்வளவு நேரம் நான் அனுபவித்த டென்ஷன்....., ஹப்பா...., அதை சொல்ல வார்த்தையே இல்லைடா. ஆனா அப்படி எதுவுமே நான் பயந்த மாதிரி நடக்கலை என்ற பிறகுதான்...., என்னால் நிம்மதியா மூச்சு கூட விட முடிஞ்சது”, அருணையும் ராஜுவையும் தழுவிக் கொண்டான்.

“இவ்வளவு டென்ஷனை மனசுக்குள் வச்சுக்கிட்டு, எங்களை ஏண்டா வர விடாமல் தடுத்த. கஷ்டத்தை எல்லாம் நீ மட்டும் தனியா அனுபவிக்கணும்னு என்ன இருக்கு...? லாபத்தில் மட்டுமே பங்கு வாங்கிக்கவா நாங்க இருக்கோம்...?”, கோபமானான் அருண்.

“ம்ச்...., அதான் எல்லாம் நல்லபடியா முடிஞ்சுடுச்சேடா...., பிறகு என்ன...”, அவனை சமாதானம் செய்தான்.

“டேய்...., நீங்க மட்டும் என்னவோ பேசிக்கறீங்களேடா...., எனக்கும் நம்ம நிலைமை தெரியும். ஆனா என்ன பேசன்னு தெரியலடா..”, தான் மட்டும் தனித்திருப்பதாக உணரவே ராஜு இடையில் புகுந்தான்.

“ராஜு...., நீதாண்டா நம்ம கம்பெனிக்கு ஆணி வேரே...., அப்படியிருக்கும்போது ஏண்டா இப்படி பேசுற..”, மனோ அவனை ஆதரவாக அணைத்தான்.

“எதுக்கெடுத்தாலும் இது ஒண்ணை சொல்லிடுங்க...”, அலுத்துக் கொண்டான். மனோவும், அருணும் சிரித்துக் கொண்டார்கள்.

அதே நேரம் பெண்களும் பேசினார்கள்...., “நித்தி...., மனோ என்ன சொல்லுறார்...?”, அனிதா கேட்டாள்.

“அவர் ரொம்ப ஹேப்பி தான்...., ஆனாலும் எனக்குதான்...., மனசே சரியில்லை அனி....”, கலக்கமாக சொன்னாள்.

“ஏன்...? என்ன ஆச்சு...?”, அனிதா அவள் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“அனி...., மீட்டிங் துவங்கியது முதல் முடியும் வரை...., என்னவோ நெருப்பின்மேல் இருந்த மாதிரி இருந்தார். ஆனால் அதை வெளியே காட்டிக்காமல் இருக்க அவ்வளவு முயற்சி செய்தார். அவர் பார்வையில் அப்படி ஒரு கவனம்...., பதட்டம்...., கொஞ்சம் பயம்.....,

“அந்த மீட்டிங் முடியிற வரைக்கும் அவர் கட்டுப்பாட்டை இழந்துடக் கூடாதேன்னு நான் வேண்டாத தெய்வம் இல்லை. மேடை பயத்தில்...., அம்மா முந்தானைக்குள் ஒளிஞ்சுக்குற குழந்தை மாதிரி...., என் முகத்தைப் பாத்துட்டே இருந்தார்.

“மீட்டிங் முடிஞ்சு...., வெளியே வந்த பிறகு...., என் கையை புடிச்சுக்கிட்டு அவர் பேசுனது...., மனசுக்குள்ளே எதுவோ நெருடுது அனி. அதை என்னன்னு சொல்லத் தெரியலை. அவர்ட்ட இதுக்கெல்லாம்என்ன காரணம்ன்னு கேக்கவும் பயம்மா இருக்கு.

“எதையாவது கொஞ்சம் கட்டாயப்படுத்தி கேட்டால்...., செய்யாத தப்புக்கு அடி வாங்கிட்டு முழிக்கிற குழந்தை மாதிரி பாக்குறார். என்னால் அதை மீறி ஒரு வார்த்தை கேக்கவும் முடியலை.

“ஆனா ஒண்ணு மட்டும் புரியுது. என்னை ரொம்ப நேசிக்கிறார். ஆனா அதை சொல்ல தயங்குறார். சொல்லப்போனா...., அவர் அதை சொல்லவே மாட்டாரோ...., என்பதுதான் இப்போ என் பயமே...”, இதைச் சொன்னபொழுது அவள் குரல் உடைந்து போனது.

முயன்று தன்னை கட்டுப்படுத்தியவள்...., தன் நிலையை அவர்களிடம் மேலும்வெளிப்படுத்த தயங்கியவளாய்....., சட்டென எழுந்து சென்றாள்.

அவள் பின்னால் எழுந்து செல்ல முயன்ற ராதாவைத் தடுத்த அனிதா...., "இதுக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும். நாம அவங்க கிட்டே பேசுவோம்", நித்தியின் பேச்சு அனிதாவையும் கலங்க வைத்திருந்தது. எனவே ராதாவை அடக்கினாள்.

ஆண்கள் திரும்ப வந்தபொழுது, நித்தி அங்கே இல்லாததைப் பார்த்த மனோ...., கேள்வியாக அனிதாவைப் பார்க்க, அவன்மேல் கோபத்தில் இருந்த அனிதா, முகத்தை திருப்பிக் கொண்டாள். எனவே அவன் ராதாவைப் பார்க்க, அவளோ அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.

சூழ்நிலை இறுக்கமாவதை விரும்பாத அருண்...., "நீங்க இருங்க. நான் நித்யாவை பாத்துட்டு வரேன்...", பொதுவாக உரைத்தவன், வேகமாக எழுந்து சென்றான்.

அவன் எழுந்து செல்லவே...., மனோவின் பக்கம் கோபமாகத் திரும்பிய அனிதா, "மனோ...., உங்க மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்கீங்க. எங்களுக்கும் பொறுமை ஒரு அளவுக்குத்தான் இருக்கும். நாங்களும் ரொம்ப பொறுமையா போயிட்டே இருக்கோம்...., ஆனா அதை நீங்க உங்களுக்கு சாதகமா எடுத்துக்கறீங்க....", எடுத்த எடுப்பிலேயே கோபமாக மொழிந்தாள்.

அவள் கோபத்தை இப்படி எதிர்பாராத மனோ திகைத்தாலும்...., அவளை எதிர்த்து எதுவும் சொல்லாமல் அமைதி காத்தான். அவன் அமைதி அவளை இன்னும் எரிச்சல் மூட்ட, ராஜுவை கோபமாக முறைத்தாள்.

வழக்கம்போல் அவள் கோபத்துக்கான காரணம் புரியாமல் விழித்தவன், "அனி...", பரிதாபமாக அழைத்தான். அதே நேரம், ராதாவும் அவள் கரத்தை அழுத்தவே, அந்த நேரத்தின் இனிமையை கெடுக்க மனமில்லாமல் அமைதியாகிவிட்டாள்.

அதன் பிறகு யாரும் தங்களுக்குள் பேசிக்கொள்ளவில்லை. ஆனால் அதற்கு அவசியமே இல்லை என்பதுபோல்...., அங்கே ஒரு குட்டி தேவதை தளிர் நடையோடு வர...., ராஜு வழக்கமான அவனது ஆர்வத்தோடு குழந்தையை கவனிக்கத் துவங்கினான்.

அதே நேரம்...., அருண் நித்யாவைத் தேடிச் சென்றான். மாலின் கைப்பிடிச் சுவரின் அருகில் கைபிடித்தவாறு...., மேலிருந்து கீழே

வருபவர், போவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் நித்யா.

அவள் பார்வை அங்கே நிலைத்திருந்தாலும், அவள் கவனம் அங்கே இல்லை என்பதை உணர்ந்த அருண்...., தயக்கமாக அவள் அருகில் சென்றான்.

“நித்யா...”, அதே தயக்கத்தோடு அவளை அழைக்க, கனவிலிருந்து கலைந்தவள் போன்று திடுக்கிட்டு திரும்பியவள், அருணை அங்கே எதிர்பார்க்காதவளாக சற்று திகைத்தவள்...., அவனையே அமைதியாகப் பார்க்க,

“எல்லோரும் அங்கே இருக்கோம்...., நீங்க மட்டும் இங்கே தனியா...? உங்ககிட்டே ஒரு விஷயம் சொல்லணும்...., ரொம்ப தேங்க்ஸ் நித்யா. நாங்க எல்லோருமே உங்களுக்கு ரொம்ப கடன் பட்டிருக்கோம். அதை தேங்க்ஸ்ன்னு ஒரு வார்த்தையில் சொல்லி முடிச்சுட முடியாது.

“அதிலும்...., ரொம்ப நாளைக்குப் பிறகு மனோ சந்தோசமா இருக்கான். அந்த சந்தோசம் உங்களால் என்பதை நினைக்கும்போது...., எனக்கு என்ன சொல்லுறதுன்னே தெரியலை. நீங்க மூணுபேரும் எங்க மூணுபேர் வாழ்க்கையில் கிடைத்தது, நாங்க வாங்கிவந்த வரம்.

“ஆனா...., நாங்க உங்களுக்கு வரமா சாபமான்னுதான் எங்களுக்குத் தெரியலை....”, அவள் பார்வையைத் தவிர்த்தவன்...., “ப்ளீஸ் உள்ளே போகலாம்...., அங்கே எல்லோரும் உங்களுக்காகத்தான் காத்துட்டு இருக்காங்க...”, அவன் குரலில் இருந்த கெஞ்சல் அவளை, மறுத்து எதுவும் சொல்ல வைக்கவில்லை.

அவனோடு அவள் நடக்க...., உள்ளேயோ...., ராஜுவின் பார்வை அந்த குழந்தையைக் காட்டி எதுவோ சொல்ல...., அனைவரின் பார்வையும் அந்த குழந்தையிடமே நிலைத்திருந்தது. அந்த குழந்தைக்கு ஒரு வயது மட்டுமே நிரம்பியிருக்கும் என்பதால்...., தத்தி தத்தி நடந்த குழந்தை...., கையில் வைத்திருந்த லாலிபாப்பை எச்சில் ஒழுக சுவைத்தவாறு, புரியாத மொழியில் எதையோ மிழற்றியவாறு இருந்தாள்.

அந்த குழந்தையைப் பார்த்த ராஜு...., “அனி..., அனி...., அந்த பாப்பாவைப் பாரேன்...., எவ்வளவு அழகு இல்ல....., நான் தூக்கிக்கவா...?”, குழந்தையின்மீது கவனத்தைப் பதித்தவாறு...., அவள் கையைச் சுரண்டினான்.

தனிச்சையாக அனிதாவின் கண் மனோவின் பக்கம் பாய்ந்தது. மனோவோ ஒரு சின்ன சிரிப்புடன், கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு, ‘நீயே சமாளி’ என்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான்.

மனதுக்குள் சற்று படபடப்பாக உணர்ந்தாள் அனிதா. எப்பொழுதும் ராஜேஷுக்கு, தன் முடிவுகள், விருப்பங்கள், ஆசைகள் எதுவாக இருந்தாலும், மனோஜ் மற்றும் அருணிடம் கேட்டுத்தான் பழக்கம். அதை, இங்கே வேலைக்கு வந்த சிறிது நாட்களிலேயே அனிதா உணர்ந்திருந்தாள்.

ஆனால் சில நாட்களாக ராஜு, அனிதாவை, தன் நண்பர்களுக்கு ஈடாக எண்ணிவிட்டான் என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அன்று சைட்டில் வேலை நடந்துகொண்டிருந்தபொழுது, செங்கல் வியாபாரி ஒருவர் இவர்களை வந்து பார்க்க, குழப்பத்துடனே அவரை எதிர்கொண்டான்.

“ராஜு தம்பி...., நம்ம செங்கலை வேண்டாம்னு மனோ தம்பி சொல்லிட்டாரே...., அவருக்கு செங்கலைப் பத்தி என்ன தெரியும்...? இங்கே ஃபீல்டில் நின்னு வேலை பாக்கும் உங்களுக்குத்தான் அது தெரியும். உங்க வேலையில் அவர் தலையிடுறார்...., நீங்களும் பாத்துட்டு இருக்கீங்களே..”, அவன் மனதில் விஷத்தை கலக்க முயன்றார்.

வந்தவரிடம் அவன் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மாறாக...., விடுவிடுவென அனிதாவைத் தேடிச் சென்றவன், “அனி...., அந்த தேவநாதன் வந்திருக்கார்...., நீ வந்து பேசு வா...”, சொன்னவன், அவள் என்னவென்று தெளியும் முன்பே, அவள் கை பிடித்து இழுத்துச் சென்றான்.

“ராஜு...., தேவநாதன் யாரு...?”, அவன் இழுப்பிற்கு சென்றவாறே கேட்டாள்.

“அதான்...., அந்த செங்கல் வியாபாரி...”, அவளை அழைத்துச் சென்று அவர்முன் நிறுத்தியவன்....,

“என்னமோ சொன்னீங்களே...., அதை இப்போ சொல்லுங்க..”, அசட்டையாக சொல்லிவிட்டு நின்றுகொண்டான்.

“என்னதம்பி...., புரியாத பிள்ளையா இருக்கீங்களே...”, அவனிடமே திரும்பினார்.

“நான் இதுவரை எந்த டீலும் உங்களோட பேசியது இல்லை. இனிமேலும் கிடையாது. எதுவா இருந்தாலும் அவகிட்டே பேசுங்க...”, கோபமாகவே சொன்னான்.

இவர்களுக்கு இடையில் அனிதாதான் விழித்துக் கொண்டிருந்தாள். “ராஜு..., இதெல்லாம் மனோ தானே பேசுவாங்க...., நீங்க அவர்கிட்டேயே பேசச் சொல்லுங்க...”, அவனை நெருங்கி சின்னக் குரலில் வற்புறுத்தினாள்.

“எல்லாத்துக்கும் அவனையே தொல்லை செய்தால் எப்படி. அதான் இப்போ நீ இருக்கியே. நீயும் சரியாதான் பேசுவ..., நீயே பேசு...”, பிடிவாதம் பிடித்தான்.

“ஓ...., கதை அப்படிப் போகுதா...., அப்போ நீங்கதான் புது...., ம்...., நீங்களே சொல்லுங்கம்மா...., மூணு பேரும்முதலாளிங்க...., ஆனா ரெண்டுபேர் ஏசியிலேயே இருப்பாங்களாம்...., ஒருத்தரை மட்டும் வெயிலில் காய விடுவாங்களாம்.

சரி அதுதான் போகட்டும்...., வேலை செய்யும் இடத்தில் கூட...., முடிவை எடுக்க அவரை அனுமதிக்கலன்னா...., அவரும் நாலு காசு பாக்க வேண்டாமா...., அப்போ வேலை செய்ய இவர்...., பலன் அனுபவிப்பவர்கள் அவங்களா...?

“தம்பியும் நாலு காசு பாக்கட்டும்னு ஒரு நல்லெண்ணத்தில் சொன்னால்...., அதில் கூட மண்ணள்ளி போட்டால்...., தம்பிக்குத்தான் அது புரியலை. நீங்க எடுத்து சொல்லுங்கம்மா...”, மொத்தமாக வரும் லோடில்...., பாதிக்குமேல் சுடாத கல்லைக் கொடுத்து லாபம் பார்த்துக்கொண்டிருந்தவர், தற்போதுஅது நடவாமல் போன எரிச்சலில், ராஜுவை ஏத்திவிட முயன்றார்.

அவர் பேசி முடிக்கும் முன்பே...., “ஹல்லோ என்ன நீங்கபாட்டுக்கு பேசிட்டே போறீங்க...., ஏற்கனவே உங்களுக்கு தெரியும்...., இங்கே நிர்வாகம், மனோ கையில்தான் இருக்குன்னு. அது மட்டும் இல்லை...., உங்க செங்கல் தரமா இல்லன்னு, அவர்கிட்டசொன்னதே நாங்கதான்.

“நீங்க சொன்ன மாதிரி...., இங்கே சைட்டில் ராஜு எடுக்கும் எல்லா முடிவிற்கும்...., மனோ கட்டுப்படுறார் என்பதுதான் உண்மை. அதனால்..., தேவையில்லாமல் நீங்க இந்த சிண்டு முடியிற வேலையை எல்லாம் விட்டுட்டு, உங்கள் வேலையைப் பாத்துக்கிட்டு நீங்க கிளம்பிட்டா பரவாயில்லை.

“இல்ல...., இதுக்கு மேலேயும் நீங்க பேசுவீங்கன்னா...? உங்க முதலாளிகிட்டே நாங்க நேரடியா பேசவேண்டி இருக்கும். எப்படி வசதி...?”, அவளது மிரட்டலில்...., அவன்தான் வாலைச் சுருட்டிக்கொண்டு போய்விட்டான்.

அதை அறிந்தபொழுது மனோ அவளை அழைத்து...., “தேங்க்ஸ்...”, அவன் சொன்ன ஒற்றை வார்த்தையில் அவளுக்குத்தான், தான் எதுவும் தவறாக நடந்துகொண்டோமோ என்று உதறல் எடுத்தது.

“சாரி மனோ...., நான் உங்ககிட்டே கேக்கச் சொல்லித்தான் சொன்னேன்...”, எங்கே அவன் தன்னை தவறாக எண்ணிவிடுவானோ என்று வேகமாகச் சொன்னாள்.

“எப்பொழுதும் உங்களோட இந்த சப்போர்ட் ராஜுவுக்கு இருக்கணும்...”, ஒருவித அழுத்தமாக உரைத்தவன்...., “நான் அதைத்தான் விரும்புறேன். அவனும்...”, சொல்லிவிட்டு சென்றுவிட்டான். அதன் பிறகும், சைட்டில் நடக்கும் விஷயங்களின் முடிவுகளை அவள் எடுத்தாலும்...., அவன் புரிந்தும் புரியாத ஒரு பார்வையோடு விலகிவிடுவான்.

இன்றும் அதே புதிய பழக்கத்தில், ராஜு அனிதாவிடம் கேட்க, அனிச்சையாக மனோவைப் பார்த்தவள்...., சட்டென பார்வையைத் திருப்பிக்கொண்டு, ராஜுவைப் பார்த்தாள்.

“அனி..., பாப்பாவை தூக்கிக்கவா...? எவ்வளவு அழகு பாரேன்...”, இருக்கையிலிருந்து எழ முயன்றான்.

அப்பொழுது அங்கே வந்த அருண்...., “ஏண்டா...., உனக்கே பாப்பா பெத்துக்குற வயசாகுது. நீயேண்டா அடுத்த பாப்பாவை தூக்கிக்க ஆசைப்படுற...?”, ஒரு பேச்சுவாக்கில் கேட்ட பிறகுதான்...., தான் என்ன கேட்டோம் என்பதையே உணர்ந்தான்.

சட்டென அங்கே ஒரு அமைதி நிலவ...., ராஜுவோ...., அதை கண்டுகொள்ளாமல்..., "ஆமால்ல...., அனி...., எனக்கு பாப்பா பெத்துக் கொடுக்குறியா...., எனக்கு பாப்பான்னா ரொம்ப புடிக்கும், சொல்லு...", என்னவோ லாலிபாப் வேண்டும் என்பதுபோல் அவன் கேட்க, யார் என்ன சொல்வது என்று தெரியாமல் திணறினார்கள்.

அனிதா சங்கடமாகவும், தவிப்பாகவும் மற்றவர்களை ஓரவிழியில் நோட்டமிட, ராஜுவிற்கு அந்த தயக்கம் எதுவும் இருக்கவில்லை...., "சொல்லு அனி...", அடம் பிடித்தான்.

அனைவரின் கவனமும்...., இப்பொழுது அனி என்ன பதில் சொல்வாள் என்பதிலேயே இருந்தது. ஒரு நிமிடம் யோசித்தவள்...., பின்னர் தயக்கமே இல்லாமல் அவன் சட்டைக் காலரைப் பிடித்து அருகில் இழுத்து...., அவன் கண்களுக்குள் பார்த்து கேட்டாள்....,

"உனக்கு எத்தனை பாப்பாடா வேணும்...., நான் பெத்துத் தாரேன்...", கிட்டத்தட்ட அடிக்குரலில் உறுமியவள்....,

"நீ எப்போ என் கழுத்தில் தாலி கட்டப்போறன்னு சொல்லு. அடுத்த பத்தாவது மாசம் உனக்கு குழந்தைப் பெத்துக் கொடுக்க நான் ரெடி... சொல்லு...., உன் கேள்விக்கு நான் பதில் சொன்னேன்ல...., என் கேள்விக்கு நீ இப்போ பதில் சொல்லு...", அவன் சட்டைக் காலரைப் பிடித்து உலுக்கினாள்.

இதுவரை அவர்களுக்குள் கண்ணாமூச்சி ஆடிக்கொண்டிருந்த ஆட்டத்தை முடிவிற்கு கொண்டுவர முயன்றாள் அனி.

அவள் கேள்வியில் திகைத்து விழித்த ராஜு...., "இப்போ...., இப்போவே கல்யாணம் பண்ணிக்கலாம்...", வெகு சாதாரணமாக உரைத்தான்.

இப்பொழுது திகைப்பது அவளது முறை ஆயிற்று.

***

# மௌனம் – 24.

தங்கள் கம்பெனிக்கு டெண்டர் கிடைத்த சந்தோசத்தை கொண்டாட வந்த இடத்தில்…., எதிர்பாராமல் நேர்ந்துவிட்ட வார்த்தைப் பிரயோகங்கள், எங்கேயோ சென்று முடிய…., அனிதாவின் கேள்வியும்…., அதைத் தொடர்ந்த ராஜுவின் பதிலும்…., யாரும் எதிர்பாராததாக அமைந்துவிட்டது.

ராஜுவின் பதிலில் அனிதா திகைத்து அமர்ந்தது மட்டுமல்லாமல்…., அனைவரும் உறைந்துபோயிருக்க…., அந்த சூழலை எப்படிக் கையாள்வது என்று தெரியாமல் தவிக்க…., “அட…., ராஜுவுக்கு கல்யாணமா…? கல்யாணத்துக்கு எங்களை எல்லாம் கூப்பிடுவியா மாட்டியா….?”, மனோவின் குரல் வழக்கத்துக்கு மாறாக கேலியாக ஒலித்தது.

அனிதா சட்டென ராஜுவின் சட்டையில் இருந்து கையை விலக்கிக் கொள்ள, ராஜு வேகமாக விலகி அமர்ந்தான்.

மனோ பேச்சை மாற்ற விரும்புவது தெளிவாகப் புரிய, அனிதாவிற்கு கோபம் கிளர்ந்து எழுந்தது. “இப்போ நீங்க ஏன் பேச்சை மாத்துறீங்க…?”, அவனிடம் நேரடியாகக் கேட்டாள்.

இதை எதிர்பாராத மனோ திணற, “அனி…., மனோ பாவம் திட்டாதே”, ராஜு அவனுக்கு பரிந்து வந்தான்.

“நான் எனக்காக பேசலை ராஜு. உங்களுக்காகவும்தான் பேசுறேன். அப்போ உங்களுக்கெல்லாம், எங்களை கல்யாணம் செஞ்சுக்குற ஐடியாவே இல்லையா…? சும்மா இப்படியே சுத்திட்டு கழட்டி விட்டுடலாம்னு பாக்குறீங்களா…?”, கோபம் குறையாமலே கேட்டாள்.

“அனி…., கொஞ்சம் உன் கோபத்தை கண்ட்ரோல் பண்ணு. சுத்தி இருக்குறவங்க வேடிக்கை பாக்குறாங்க….”, நித்யா அவளை அடக்கினாள்.

“இப்படி எதையாவது சொல்லியே, நாள்பாட்டுக்க ஓடிட்டே இருக்கு. இவங்க வாயில் இருந்து ‘ஐ லவ் யூ’ ன்னு ஒரு வார்த்தையை வாங்கவே நமக்கு ஒரு வருஷம் ஆச்சு. இப்போ கூட…., ‘எங்களால் காதலைத்தான்

சொல்ல முடியும்...., அதுக்கு மேல எதுவும் முடியாது'ன்னு சொன்னா அதுக்கு என்ன அர்த்தம்...?

“அப்போ இவங்களுக்காக நாம என்ன அலையி...”, “அனிதா...., ப்ளீஸ்...., இப்படி பெரிய வார்த்தை எல்லாம் பேசாதீங்க. சொல்லபோனால்...., எங்க தகுதியை மீறி ஆசைப்பட்டது எங்க தப்பு. உண்மையை சொல்லணும்னா...., நாங்கல்லாம் கோழைகள். எதார்த்தத்தை ஏத்துக்க தெரியாத கோழைகள்”, வேதனையாக மொழிந்தான் மனோஜ்.

“மனோ...., முதல்ல இப்படி பூடகமா பேசுறதை நிப்பாட்டுங்க. மனசை தொறந்து பேசுங்க. உங்களை சேர்த்து வைத்து பேசினால் வேலைக்கு ஆகாது...., மூணுபேரும் தனியா வாங்க பேசலாம்....., ராஜு எழுந்து வாங்க”, ராஜுவின் கை பிடித்து இழுத்துச் சென்றாள்.

அவன் திகைத்து அமர்ந்திருக்கும்பொழுதே...., ராதா அருணைப் பார்த்துவிட்டு எழுந்து செல்ல...., வேறு வழியின்றி அவள் பின்னால் சென்றான்.

அங்கே நித்யாவும், மனோவும் தனித்திருக்க....., நித்தியின் நினைவோ...., பீச்சில் அவர்கள் பேசியதில் நிலைத்தது. மனோ, ‘உனக்கு என்ன வேண்டுமென்று’ உணர்ச்சி மேலிட கேட்க...., “நான் என்ன கேட்டாலும் தருவீங்களா மனோ....?”, அவள் கேள்வியில் தன் சந்தோசம் பாதியாகக் குறைய அவளை உறுதியாகப் பார்த்தாலும்....,

“இந்த நிமிஷம் நீ என்ன கேட்டாலும் தருவேன் நித்தி. அது என் உயிராவே இருந்தாலும்....., ஆனா....”, தயங்கியவன்...., “இல்ல நீ கேளு...”, அவள் கரங்களைப் பற்றியவாறு கேட்டான்.

“எனக்கு ஒரே ஒரு விஷயம்தான் தெரியணும் மனோ. நீங்க ‘ஆனா’ன்னு சொல்லி நிறுத்துனீங்களே....., அந்த ‘ஆனா’....., என்ன....? உங்க மனசுக்குள் மறைந்திருக்கும் அந்த விஷயம் என்னது...? உங்க மனசை வெளியிட முடியாமல்...., உங்க மனசை அழுத்தும்...., அரிக்கும் அந்த விஷயம் என்ன?”, அவள் கேட்டுவிட்டாள்.

இவ்வளவுநாள் அவள் மனதை உறுத்திய அந்த கேள்வியை...., அவனிடம் கேட்டுவிட்டாள். அவன் பதிலுக்காக பதைபதைப்புடன் அவள் காத்துக்கொண்டிருக்க....., அவள் கரத்தை விலக்கியவன்.....,

“எனக்கு ஒரே ஒரு மாசம் டைம் கொடு நித்தி. எல்லாத்தையும் நான் சொல்லுறேன்”, அதைச் சொல்லும்பொழுதே...., எப்படி அவளிடம் சொல்லப்போகிறோம் என்று தவித்துப் போனான்.

“உங்களுக்கு என்னை பிடிக்கும்தானே மனோ...”, ஒருவித தவிப்போடு அவள் வினவ....,

“இந்த கேள்வியை நீ என்கிட்டே கேட்கறதுக்கு பதில் நீ என்னை கொன்னுடலாம் நித்தி....”, மிதமிஞ்சிய வலியில் அவன் உரைக்க...., ஓடிபோய் அவனை, அவன் முதுகோடு அணைத்துக் கொண்டாள். அவனது வேதனை தாளாமல் அவனை அணைத்துக் கொண்டாலும், தன்னிடம்இன்னமும்அவன் காதலைச் சொல்லாததில், அவள் மனம் காயப்படத்தான் செய்தது.

“உங்களை நான் நம்புறேன் மனோ...”, அவள் சொல்ல....,

“உன் நம்பிக்கையை எப்பொழுதும் நான் காப்பாற்றுவேன் நித்தி...”, உறுதி கொடுத்தான்.

அதை நினைத்தவள்...., ‘நாம் ஒன்று நினைக்க...., தெய்வம் ஒன்று நினைப்பதை எண்ணி வேதனை கொண்டாள். இன்னும் ஒரு மாதத்தில் அனைத்தும் சரியாகிப் போகும் என்று அவள் சந்தோஷம் கொண்டாலும்..., இப்பொழுது நடந்த பேச்சு அவளை கவலைக்குள்ளாக்கியது.

“என்ன முடிவெடுத்துருக்க நித்தி....?”, குரல் அடைக்க கேட்டான்.

“சாரி மனோ...., இப்போ எனக்கு என் ப்ரண்ட்ஸ் ரொம்ப முக்கியம். அவங்க மனசை என்னால் உடைக்க முடியாது. நாங்க கேட்பது எங்களோட நியாயமான ஆசையைத்தான். உங்களோட மௌனத்தையும்...., அலட்சியத்தையும் தாங்குவதை விட, நீங்க சொல்லப்போற உண்மை அவ்வளவு பெரிய பாதிப்பை கொடுக்காதுன்னுதான் நினைக்கிறேன்”, நித்யாவின் குரலில் பிடிவாதம் வெளிப்பட்டது.

“அப்படியா....?”, ஒரு மாதிரி வினவியவன்...., அவளை ஒட்டாத பார்வை பார்த்தான்.

அவனது இந்த பார்வை அவள் அடிவயிற்றில் பயப்பந்தை சுழலவிட, அவள் வெறித்துப் பார்த்துகொண்டு இருக்கும்பொழுதே...., "என் மனசுக்குள் இருப்பதை எல்லாம் நான் ஏன் உன்கிட்டே சொல்லணும்....?", மேஜைமேல் இருந்த தண்ணீர் கப்பின் விளிம்பை விரலால் உரசியவாறு நிதானமாகக் கேட்டான்.

"மனோ....", அதிர்ந்துபோய் அழைத்தாள். அவள் அழைப்பில் இருந்த அதிர்ச்சியும் வலியும் அவனை கொன்று கூறுபோட்டது. ஆனாலும்...., 'என் நித்திக்காக....', என்று மனதில்உருபோட்டவன்....., "எல்லாத்தையும் முடிச்சுக்கலாம் நித்தி....., நாளையில் இருந்து நீங்க யாரும் வேலைக்கு வர வேண்டாம்...", உறுதியாக உரைத்தான்.

அவன் சொன்னதை நம்ப முடியாமல், திகைத்துபோய் அமர்ந்துவிட்டாள் நித்தி. "மனோ நீங்க....?", ஒரு வேளை விளையாடுகிறானோ என்ற எண்ணத்தில் குரல் நடுங்க...., நம்பிக்கையும் இல்லாமல் கேட்டாள்.

"உங்க நல்லதுக்காகத்தான் சொல்லுறேன் நித்தி. நான் உனக்கு வேண்டாம்...", அவளை பார்ப்பதை தவிர்த்தான்.

"நீங்க எனக்கு வேணுமா வேண்டாமான்னு, நான்தான் முடிவெடுக்கணும் மனோ...., அதை நீங்க சொல்லக் கூடாது. உங்களுக்கு நான் வேணுமா வேண்டாமா...? என் கண்ணைப் பார்த்து பதில் சொல்லுங்க...", அவன் கன்னத்தைப் பிடித்து திருப்பினாள்.

அதற்கு பதில் சொல்லாமல்...., அவள் கையைத் தட்டிவிட்டவன்...., இருக்கையில் இருந்து எழுந்து சென்றுவிட்டான். செல்லும் அவன் முதுகையே வெறித்தவள்...., "இதில் இதற்குமேல் நான் செய்ய எதுவுமே இல்லை...", வேதனையாக தனக்குள் உரைத்தாள்.

அங்கிருந்து அவள் வீட்டுக்குச் செல்ல....., அவளுக்கு முன்பாக அனிதாவும் ராதாவும் அங்கிருக்கக் கண்டாள். அவர்களின் முகங்களும் சரியாக இருக்கவில்லை.

"அனி...., என்ன ஆச்சு...? ராதா...., நீ சொல்லு...", இருவரிடமும் கேட்டாள்.

"என்ன ஆச்சா....? கல்யாணம்னு சொன்னால் மட்டும் சின்னத்தம்பி பிரபு மாதிரி ரியாக்ட் பண்ணுறார். இல்லையா...., இப்போவே வா கல்யாணம்

செஞ்சுக்கலாம்னு குதிக்கிறார். வீட்டில் வந்து பேசுங்கன்னு சொன்னால்....., மனோ கிட்டே கேட்டு சொல்லுறேன்னு அதே டயலாக்..., எனக்கு வர ஆத்திரத்துக்கு....", அனிதாவின் குரலில் கோபத்தைவிட, ஆதங்கமும் வருத்தமுமே அதிகம் இருந்தது.

நித்யா ராதாவைப் பார்க்க...., "அருண், விளையாட்டா பேசி என்னை டைவர்ட் பண்ணத்தான் நினைக்கிறாரே தவிர...., மேற்கொண்டு எதுவும் பேச மறுக்குறார். கல்யாணத்தைப் பற்றி பேசினால்...., மனோவின் முடிவுதான் இறுதியானதுன்னு ஒற்றை வார்த்தையில் பதில். மேற்கொண்டு என்னால் ஒரு வார்த்தை கூட பேச முடியலை...", ராதாவும் கலங்கினாள்.

"நாங்க சொல்லுறது இருக்கட்டும்...., மனோ என்ன சொன்னார்...?", அவர்களின் கேள்விக்கு....,

"நாம இனிமேல் அவங்க கம்பெனிக்கு வேலைக்கு போக வேண்டாம்னு சொன்னார்...", தைரியமாக சொல்ல முயன்றாலும்...., அவள் குரல் உடைந்து போனது.

"அப்படியா சொன்னார்...? நீயும் கேட்டுட்டு பேசாமல் வந்தியா...?", ஆத்திரமாக கத்தினாள் அனிதா.

"விட்டுடலாம் அனி...., நம்மமேல கொஞ்சமாவது காதல் இருந்தால்...., அவங்களே நம்மைத் தேடி வருவாங்க.... நாம கொஞ்சநாள் ஊருக்கு போயிட்டு வரலாம். நாமளும் ஊருக்கு போய் நாலு வருஷம் ஆகுதே...", தாயைக் காணவேண்டும் என்ற ஏக்கம் வெளிப்பட்டது அவள் குரலில்.

அதே நேரம்...., மனோ அவன் வீட்டுக்குள் சோர்ந்துபோய் நுழைய..., அவனுக்காகவே காத்துகொண்டிருந்தார்கள் அனைவரும். அவர்களைக் கண்டாலும்....., எதுவும் சொல்லாமல் அவன் அறைக்குச் செல்ல முயல,

"மனோ...., நாங்கல்லாம் உனக்காகத்தான் காத்துட்டு இருக்கோம். நீ என்னன்னா எங்களைப் பார்த்தும் பாக்காத மாதிரி போற...., இங்கே வா...., பேசணும்...", அவன் தாய் வழக்கத்துக்கு மாறாக கண்டிப்பாக அழைத்தார்.

அவரை பரிதாபமாகப் பார்த்தவன்...., "ப்ளீஸ்ம்மா...., இப்போதைக்கு எதுவுமே பேசும் நிலைமையில் நான் இல்லை...., நாளைக்குப்

பேசலாமே”, நெற்றியை விரலால் அழுத்தியவாறு சொன்னான்.

அவன் மனநிலை புரிந்தாலும்...., தற்போதைக்கு அவனை அப்படியே விட முடியாது என்று தோன்றவே...., “இதற்குமேல் எங்களால் பொறுமையா இருக்க முடியாது மனோ. என்ன முடிவெடுத்திருக்கன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்...”, அவரும் அசையாமல் நின்றார்.

“எல்லாத்தையும் முடிச்சுட்டேம்மா.... நாளையிலிருந்து நாம வழக்கம்போல் நம்ம வேலையைப் பாக்கலாம். நீங்க எங்களுக்காக அந்த பூஜையறையில் இருக்கும் கடவுளர்கள் கிட்டே பேச்சுவார்த்தை நடத்தலாம்...., நாங்க காலையில் எழுந்து பீச் மணல்ல ஓடிட்டே...., எங்க பழைய வாழ்க்கைக்கு திரும்பிடலாம்.

“உங்களுக்கு நாங்க...., எங்களுக்கு நீங்க...., அதுதான் நமக்கு சரிவரும்”, விரக்தியாக பேசினான்.

“அப்படின்னா...? என்னடா செஞ்சு வச்ச...?”, அதிர்ச்சியானார். அனைவருமே அவன் பேச்சில் அதிர்ந்து போனார்கள்.

நிதானமாக நடந்துவந்து அருணின் அருகில் அமர்ந்தவன்...., அவனைப் பார்த்தான். அருணோ..., எதுவும் பேசாமல் தலை கவிழ்ந்து அமர்ந்திருக்க, ராஜு தவிப்பாக அவன் முகம் பார்த்தான்.

“நாளையில் இருந்து அவங்களை...., யாரையும்...., வேலைக்குவர வேண்டாம்னு...”, அவன் சொல்லி முடிக்கும் முன்னர்...., மனோவின் தாய் அவனை கைநீட்டி அறைந்தே விட்டார்.

“மனோம்மா...., என்ன இது....”, காஞ்சனா அவர் அருகில் ஓடிவந்து அவரைத் தடுக்க....,

“என்னை என்னதான் செய்யச் சொல்லுறீங்க...., என்ன காரியம் செஞ்சுட்டு வந்திருக்கான் பாருங்க. இவன் இஷ்டத்துக்குத்தான் முடிவெடுக்கணும்னா., அப்போ நாமல்லாம் எதுக்கு இருக்கோம்.

“நம்மகிட்டே ஒரு வார்த்தை கேக்கணும்னு தோணலை...., நானும், இவங்கல்லாம்விவரமானவங்க..., புரிஞ்சு நடந்துக்குவாங்கன்னு பாத்தா...., இப்படி வாழ்க்கையவே தொலைச்சு தலைமுழுகிட்டு வந்து நிக்கிறானே.

“அவனை விடுங்க...., சரியான கல்லு மனசுக்காரன்...., அருண், ராஜு முகத்தைப் பாருங்க. ஒரு நிமிஷம்...., அவங்களைப் பத்தி யோசித்திருந்தால், இப்படி ஒரு காரியத்தை செய்திருப்பானா அவன்...?”, ஆத்திரம் குறையாமல் கத்தினார்.

“இப்போகூட பாருங்க...., நான் இவ்வளவு பேசுறேன்...., வாயைத் திறக்கறானான்னு பாருங்க...”, பொருமினார்.

“நாமதான் இவ்வளவு பதட்டப்படுறோம்...., அந்த மத்த ரெண்டு கல்லுளிமங்கனுங்களைப் பாருங்க...., ‘ஏண்டா இப்படி செய்தே’ன்னு மனோவைகேக்கறானுங்களா...., அவனுங்களைச் சொல்லணும்....”, ராஜுவின் தாய் அவர்களோடு சேர்ந்து தன் பங்குக்கு பொரிந்தார்.

“எல்லோரும் கொஞ்சம் சும்மா இருங்க. அவனுங்களே மனசொடஞ்சு இருக்காங்க. மேலே மேலே அவங்களை காயப்படுத்திக்கிட்டு...”, மனோவின் தந்தை அவர்களை தடுக்க முயன்றார்.

“ஆமா...., இப்படியே அவனுங்களுக்கு சப்போர்ட் பண்ணித்தான்...., அந்த அப்பாவி பொண்ணுகளோட மனசை உடைச்சுட்டு வந்திருக்கானுங்க...., இன்னைக்கு அவன் வாயைத் தொறக்காமல் இங்கே இருந்து எழுந்து போக முடியாது....”, விடாப்பிடியாக நின்றார் ராஜுவின் தாய்.

எதுவும் பேச முடியாத நிலையில் மனோவின் தந்தை அவனைப் பார்க்க, இமைகளை அழுந்த மூடிக் கொண்டவன்...., சோபாவின் பின்னால் சாய்ந்து படுத்துக் கொண்டான். அவன் தொண்டைக்குழி ஏறி இறங்குவதைப் பார்த்தவர்கள்...., அவன் மிகுந்த வேதனையில் இருப்பதை உணர்ந்து கொண்டார்கள்.

ஆனாலும் அவன் செய்ததற்கு காரணம் தெரிந்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் தோன்றியதால்...., “வாயைத் திறந்து பேசு மனோ...”, அவனை துருவினார்.

ஒரு முடிவில் கண்ணைத் திறந்தவன்...., “பசிக்கு சாப்பாடு போட்ட வீட்டிலேயே திருடுவது ரொம்ப தப்பும்மா. என்னால் அதைச் செய்ய முடியாது...”, குரல் அடைத்தாலும்...., ஒரு வழியாக சொல்லி முடித்தான்.

“அதுக்கும்...., நீ செய்ததுக்கும் என்னடா சம்பந்தம்...?”, புரியவில்லை

அவர்களுக்கு.

“என்ன புரியலையா…? சரி தெளிவாவே சொல்லுறேன்…., இன்னைக்கு டெண்டர் கிடைச்சிடுச்சுன்னு சந்தோசமா ஐயாவுக்கு போன் பண்ணி சொன்னேன். வாழ்த்து சொன்னார்…”, அதில் அவன் நிறுத்த…., ‘இதில் என்ன இருக்கிறது’ என்பதுபோல் அவனைப் பார்த்தார்கள்.

அடைத்த தொண்டையை செருமியவன்….., “வாழ்த்து சொன்னவர், அதோட நிறுத்தலை…., ‘என் பொண்ணுங்க எவ்வளவு பொறுப்பா மாறிட்டாங்கன்னு நினைக்கும்போது எனக்கு எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா…?’

‘அவர்களை நான் அங்கே அனுப்பியதன் காரணமே….., ஒற்றுமையையும், உழைப்பையும் உங்ககிட்டே இருந்து கத்துக்கணும் என்பதால் தான். அது நிறைவேறிடுச்சு…., இனிமேல் நல்ல மாப்பிள்ளையா பார்த்து அவங்களுக்கு கல்யாணம் செய்து வைக்கணும்.’

‘ஆனா இப்போ நான் அதைச் சொன்னால்…., அதுக்கும் ஏதாவது பிரச்சனை செய்வாங்க. அதனால்…., நீயே எப்படியாவது அவங்களை, வேலைக்கு இனிமேல் வர வேண்டாம்னு சொல்லிடு’ன்னு சொன்னார்.

“இவ்வளவு நம்பிக்கை வைத்து பேசுபவரிடம்…., இல்ல…., ‘உங்க பொண்ணுங்களை நாங்க விரும்புறோம்’னு எந்த முகத்தை வச்சுக்கிட்டு அவர்ட்ட சொல்லச் சொல்லுறீங்க. ‘உனக்கு என்னடா தகுதி இருக்கு’ன்னு அவர்கேட்டுட்டால்…., இந்த முகரைங்களை எங்கே கொண்டு வச்சுக்கிறது…?

“அதைவிட…., ‘வாழ வழி காட்டிய என்கிட்டேயே…., இப்படிச் செய்ய உங்களுக்கு எப்படி மனசு வந்துது…., உங்கமேல வச்சிருந்த நம்பிக்கையை இப்படி உடைச்சு போட்டீங்களே’ன்னு சொன்னால்….., இந்த உயிரை வச்சுக்கிறதுக்கு கூட அருகதை இல்லாதவங்களா மாறிடுவோம்மா….

“என்னால் அதைச் செய்ய முடியாது. என்னால் மட்டும் இல்லை…., இதோ இந்த ராஜுவால் கூட முடியாது. அதனால் தான்…., மொதல்லபோன் போட்டு எல்லாரையும் வர சொல்லிட்டு….., ட்ரயல் ரூமில் இருந்து மறுபடியும் போன் செய்து, நிலைமையை இவங்க

ரெண்டு பேர்கிட்டயும் சொன்னேன்.

“அப்போ கூட...., ராஜு சொதப்பத்தான் செய்தான்...., அதை சரிசெய்து...., ஒரு முடிவுக்கு வர முன்னாடி...., இந்த பாழா போன பிறப்பை நாங்க என்ன செய்ய...? எங்களால் எதுவுமே முடியலம்மா...?”, இதைச் சொல்லி முடிக்கையில் மனோஜே கதறிவிட்டான்.

அவன் தாய் ஓடிச் சென்று அவனை அணைத்துக் கொண்டார்...., அவர் மடியில் முகம் புதைத்து குலுங்கியவன்...., சற்று நேரத்தில் தெளிந்தவனாக...., “இப்போ சொல்லுங்க...., நாங்க செய்தது தப்பா...?”, அவரிடமே கேட்டான்.

என்ன பதில் சொல்வதென்று யாருக்கும் புரியவில்லை. ஆனால் மனோவின் தாய் ஒரு முடிவிற்கு வந்தவராக...., அவன் கண்ணீரைத் துடைத்துவிட்டார்.

அவனைத் தேற்றியவர்...., “சரி...., அதான் தெளிவா ஒரு முடிவுக்கு வந்துட்டீங்கல்ல..., இனிமேல் அதைப்பற்றி பேச வேண்டாம். முதல்ல மூணுபேரும் போய் டிரஸ் மாத்திட்டு வாங்க, சாப்பிடலாம்...”, ராஜுவின் தாய் இடையில் பேச வந்ததை கண் காட்டி தடுத்தவர்...., அவர்களை கட்டாயப்படுத்தி அறைக்கு அனுப்பினார்.

அனைவரும் தயங்கியவாறே எழுந்து செல்ல...., மாடியேறிய அவர்கள்...., மனோ அவன் அறைக்குள் நுழையும் பொழுது...., பின்னாலேயே அவன் அறைக்குள் அருணும் ராஜுவும் நுழைய...., அவர்களை தோளோடு தழுவிக்கொண்ட மனோ....,

“சாரிடா...., உங்களை ரொம்ப கஷ்டப்படுத்துறேனா...? எனக்கு வேற என்ன செய்றதுன்னு தெரியலை, அதான்...”, தன் வேதனையை மறைத்து அவர்களிடம் பேசினான்.

“எங்களுக்கு மட்டும்தான் கஷ்டமா...., உனக்கு இல்லையா...?”, அருண் கேட்க, அவனிடம் மௌனம் மட்டுமே பதிலாக இருந்தது.

“சரி...., போய் டிரஸ் மாத்திட்டு வாங்க”, அவர்களை அனுப்பியவன்...., அங்கேயே நின்று செல்லும் அவர்களை வேதனையோடு பார்க்க...., “ராஜு...”, தயக்கமாக அழைத்தான்.

ராஜு அவன் அருகில் செல்லவே...., “கோபமா...?”, அவன் கை பிடித்துக் கேட்டான். ‘இல்லை’ என தலையாட்டியவன்...., “எனக்கு அனி வேணும் மனோ...., அவ இல்லாமல் என்னால் இருக்க முடியாது...”, கெஞ்சினான்.

சட்டென அவனை தோளோடு அணைத்தவன்...., ‘இவனுக்காகவாவது நாம் எதையாவது செய்யணும்...., ஆனா எப்படி...?’, அவன் மனதின் கேள்விக்கு அவனிடமே பதில் இருக்கவில்லை.

அவர்களை அனுப்பியவன்...., தன் டிஷர்ட்டை கழட்டி கட்டிலில் போட்டவன் ஆசையாக அதை வருடினான். “நிதா...., ஐ லவ் யூ...”, அவன் இதழ்கள் சத்தமாக முணுமுணுத்தது.

இவர்களது பேச்சையும், மனோவின் இந்தச் செய்கையையும் வெளியே இருந்து பார்த்துக்கொண்டிருந்த மனோவின் தாய்...., உறுதியாக ஒரு முடிவெடுத்தவர்...., அவர்கள் குளிக்கச் சென்றதும்...., மனோவின் அலைபேசியில் இருந்த நித்யாவின் அலைபேசி எண்ணைக் குறித்துக்கொண்டு வெளியேறியவர்...., முதல் வேலையாக அவளுக்கு அழைத்தார்.

***

# மௌனம் – 25.

மனோவின் தாய் நித்யாவின் அலைபேசிக்கு முயற்சிக்க, அவரது அவசரம் புரியாமல் அது சதி செய்தது. முதலில், ‘தொடர்பு எல்லைக்கு வெளியே உள்ளார்’ என உரைக்க...., அதன் பிறகும் விடாமல் முயற்சிக்க, இப்பொழுது அது அணைத்து வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல, சோர்ந்து போனார்.

அவருக்கும் முதலில் ஐயாவிடம் பேச ஆசைதான். ஆனால் அதற்கு முன்பு...., பெண்களிடம் பேசவேண்டுமென்று அவர் உள்ளம் விரும்பியது. சரி, எப்படியும் அவள் செல் போனை ஆன் செய்வாள் என்ற நம்பிக்கையில், ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை தொடர்புகொள்ள முயன்றார்.

மனோ, அருண் இருவரும் சாப்பிட வந்து அமர...., அவர்களைக் கூட கண்டுகொள்ளாமல், அவர் கரங்கள் அலைபேசியை அடிக்கடி நோண்டியது.

அதை உணர்ந்த மனோ...., “போன்ல யார் கிட்டே பேச ட்ரை பண்ணிட்டே இருக்கீங்க...?”, திடுமென அவன் கேட்க, சற்று தடுமாறியவர்...., “ராஜு எங்கே என்று...”, பேச்சை மாற்ற, அனைவரின் கண்களும் அவனைத் தேடியது.

“எப்பவும் உன்னோடதானே வருவான் மனோ...?”, கேள்வியாக நிறுத்தியவர்...., “சரி ஒரு ஐந்து நிமிஷம் பார்ப்போம்...., குளிச்சு முடிக்கலையோ என்னவோ....”, தானே சமாதானமும் செய்தார்.

காத்திருந்தும்...., அவன் வராமல் போகவே...., மனோவின் தாய் ராஜுவை தேடித் போக முயற்சிக்க, அவரைத் தடுத்துவிட்டு, மனோவே எழுந்து சென்றான்.

அவன் அந்தப்பக்கம் செல்லவே...., “ஹப்பா...., ஒரு நிமிஷத்தில் கலங்கடிச்சுட்டான்...”, சற்று உதறலாகவே சொன்னார். அருண் அவரை கேள்வியாக நோக்கினாலும்...., மனதுக்குள் இருந்த குழப்பங்களால் எதையும் அவனால் யோசிக்க முடியவில்லை.

அவன் கரங்களும் அவன் அனுமதியின்றியே...., ராதாவின் அலைபேசி

எண்ணை அழுத்துவதும்....., அழைப்பு செல்லும் முன்னர் கட் செய்வதுமாக, போராடிக் கொண்டிருந்தான்.

ராஜுவின் அறைக்கு முன்னால் மனோ நிற்க, அவன் அறையின் கதவு பூட்டாமல் திறந்திருக்கவே...., உள்ளே பார்த்த மனோ திகைத்தான். அங்கே ராஜுவோ...., தன் செல்போனில் இருந்த அனிதாவின் புகைப்படத்தை, ஒவ்வொன்றாக ஓடவிட்டு பார்த்துக் கொண்டிருந்தான்.

அது மட்டும் இல்லாமல்...., ஒவ்வொரு புகைப்படத்தைப் பார்க்கும்போதும்...., “இது, அன்னைக்கு நீ என்னைப் பார்த்து முறைக்கும் போது எடுத்தது. இது, புது சுடி போட்டுட்டு வந்த அன்னைக்கு எடுத்தது. அன்னைக்கு நீ எவ்வளவு அழகா இருந்த தெரியுமா...?

“இது...., சற்று யோசித்தவன்...., ஹங்...., இது, அன்னைக்கு நான் ஒரு அழுக்கு பாப்பாவை தூக்கினேன்னு, நீ என்னை ஒரு மாதிரி பாக்கும்பொழுது எடுத்தது...., இது நாம ரெண்டுபேரும் சேர்ந்தாமாதிரி முதல் முறை எடுத்த போட்டோ.

“இந்த போட்டோவை மட்டும், நீ யாருக்கும் காட்டக் கூடாதுன்னு சொன்ன...”, அதில் அனிதா அவன் கன்னத்தில் இதழ் பதித்திருக்க...., ராஜுவின் முகம் மலர்ந்திருந்தது. என்னவோ அவள் அப்பொழுது அவன் கன்னத்தில் இதழ் பதிப்பதுபோல்...., கையால் கன்னம் தடவினான்.

அத்தோடு நில்லாமல்...., இன்னும் அவன் நினைவுகள் தொடர...., அங்கே நிற்க முடியாமல் தவித்தான் மனோ. ஆனாலும் அவனைத் தனியே விட்டுச் செல்ல மனமில்லாமல்...., ‘குழந்தை மாதிரி ஏங்கிப்போறானே...’, மனோவின் மனது ராஜுவிற்காக அதிகமாக தவித்தது.

“ராஜு...”, மெதுவாக அவனை அழைக்க...., நிதானமாகத் திரும்பிய ராஜுவோ...., “நாம நல்லவங்க இல்லையா மனோ...? நாமல்லாம் அவங்களை கல்யாணம் செஞ்சுக்க முடியாதா...?

“இந்த அருண் என்னவோ சொன்னான்...., அவங்களை இழுத்துட்டு வந்து கல்யாணம் கட்டிக்கிட்டாதான் நமக்கு கல்யாணம் ஆகும்னு சொன்னானே...., ஏன் அப்படி...? இழுத்துட்டு வரதுன்னா...? எனக்குப் புரியலையே.

“அப்படி செய்தால் அவங்க நம்மளை கல்யாணம் செஞ்சுப்பாங்களா? அப்போ நாம அப்படியே செய்யலாமா...? எனக்கு அனி இல்லாமல்...., என்னமோ இங்கே வலிக்குது மனோ...., மூச்சடைக்கிற மாதிரி இருக்கு...., உனக்கு நித்யாவைப் பார்க்காமல் அப்படி இல்லையா...?”, ராஜு தன் நெஞ்சை காட்டிச் சொல்ல...., மனோ உள்ளுக்குள் நடுங்கிப் போனான்.

அதைவிட...., அருண் ராஜுவிடம் சொன்னதைக் கேட்டு இன்னும் அதிகமாக கலங்கினான். ‘அருணும் இப்படிச் சொல்லவேண்டும் என்றால்..., அவன் ராதாவை எவ்வளவு மிஸ் செய்கிறான் என்பது இதில் இருந்து தெரிகிறதே...., இவர்கள் வேதனையை நான் எப்படி குறைப்பது?...’, தனக்குள் கேள்வி கேட்டான்.

‘உனக்கு அப்படி நெஞ்சை அடைக்கவில்லையா..?’, என்ற மனசாட்சியின் குரலுக்கு...., ‘இல்லை’ என்று பொய்யாகக் கூட அவனால் உரைக்க முடியவில்லை. சட்டென ராஜுவை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

தங்கள் வாழ்க்கையில் காதல், திருமணம் என்பன எல்லாம் இல்லவே இல்லை என்று வாழ்ந்தபொழுது...., சில ஏக்கங்கள் எல்லாம் இல்லாமல் இருந்தது.

ஆனால்...., நெஞ்சு முழுக்க காதலையும், நேசத்தையும் சுமந்து...., ‘இவள் என் எதிர்காலம்....., இவள் என் வாழ்க்கை...., இவள் என் வாழ்க்கைத் துணை’, என்ற எண்ணத்தை மனதுக்குள் விதைத்த பிறகு...., அது வேர்விட்டு விருட்சமாக மாறியிருக்கும்பொழுது....,

கனவில் அவர்களோடு வாழ்ந்துகொண்டிருக்கும் பொழுது...., இது எதுவுமே இல்லை என்று மனதை சமாதானம் செய்வது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

தன் இதயத்தையே வெட்டி வெளியே வீசிவிடும் அளவு வலித்தது. அந்த உயிர் வலியைக் கூட...., முகத்தில் ஒரு துளி கூட வெளிப்படுத்த முடியாமல், முகத்தை சாதாரணமாக வைத்துக்கொள்ள போராடுவது, இன்னும் அதிகமாக வலித்தது.

ஆனால் இப்பொழுது தனது ஒரு சிறு மாறுதல் கூட...., தங்கள் வாழ்க்கையையே புரட்டிப்போடும் என்பதால்...., நிதானத்தை

கடைபிடித்தான்.

“ராஜு...., இங்கே பாரு...., எல்லாம் சீக்கிரம் சரியாயிடும். நீ என்னை நம்புற தானே...”, மனோ கேட்க....,

“எனக்கு எல்லாமே நீதானே செய்வ மனோ. உன்னை நம்பாமல்...., ஆனா..., அனி வந்துடுவா தானே...”, அவன் அதிலேயே இருக்க...., ’ஹோ...’வென இருந்தது மனோவிற்கு. எவ்வளவுதான் சமாதானம் செய்தாலும்...., இந்த விஷயத்தில் மட்டும்...., அனிதாவை அவன்முன் நிறுத்தாமல் அவன் சமாதானம் ஆகமாட்டான் என்பதும் புரிய...., கலங்கித்தான் போனான் மனோ.

“இதென்ன சின்னப் பிள்ளை மாதிரி...., சொன்னால் கேக்க மாட்டியா...., முதல்ல கீழே வந்து சாப்பிடு வா...”, கோபம் காட்டி அவனை மாற்ற...., சின்னக் குழந்தையாக உதடு பிதுக்கி, தலையை வெடுக்கென ஆட்டி, ‘உன்னிடம் சண்டை’ என்பதுபோல் திருப்பிக்கொண்டு சென்றான்.

அவன் செல்வதைப் பார்த்தவன்...., ஒரு பெருமூச்சொன்றை வெளியிட்டவன்..., ‘இது முதல் நாள் அல்லவா...., அதான் இப்படி நடந்துக்கறான். ரெண்டுநாள் ஆனால் எல்லாம் சரியாகிப் போய்டும்...’, அவனுக்குச் சொல்வதுபோல் தனக்கும் சொல்லிக் கொண்டான்.

இங்கே பெண்களின் நிலையும் பரிதாபமாகத்தான் இருந்தது. அனிதாவும், ராதாவும் ஒரு விதமாக தங்கள் காதலர்கள்மேல் கோபம் கொண்டிருந்தார்கள் என்றால்...., நித்யா இன்னும் அதிகமாக கோபம் கொண்டிருந்தாள்.

‘எவ்வளவு சுலபமாக சொல்லிவிட்டான். ‘அவன் மனதில் இருப்பதை ஏன் என்னிடம் சொல்லவேண்டும்’ என்று கேட்டானே...., ஏன் அவனுக்குத் தெரியாதா...? நான் யாரென்று அவனுக்குத் தெரியாதா...? ஏன் சொல்லணும்னு தெரியாதா....?’, மனதுக்குள் பொருமியவள்...,

‘அன்னைக்கே அனிதா சொன்னா...., அவன் தன்னுடைய காதலையாவது உன்னிடம் சொல்வானா...? என்று கேட்டாள். அப்படித்தானே ஆகிவிட்டது. இன்றுவரை அவன் காதலைச் சொல்லவே இல்லையே...., ’ அவள் மனம் எண்ணமிடும் பொழுதே,

‘உங்களுக்கு நான் வேண்டாம்னு சொல்லுங்க பாப்போம்’ என்று

கேட்டபொழுது, அவன் பதில் சொல்லாமல் கையை தட்டிவிட்டு சென்றதை நினைத்து மகிழ்ச்சியாக இருந்தது. என்மேல் ஆசை, காதல் இல்லாமல் இருந்திருந்தால், அவனால் பதில் சொல்லாமல் போயிருக்க முடியாது.

தன்மேல் ஆசை இருப்பதாலேயே அவன் அவ்வாறு செய்தான் என்பதை எண்ணி, கொஞ்சமே கொஞ்சம் ஆறுதல் கொண்டாள். ஆனாலும்...., அவன் காதலை சொல்லாதது மனதை வருத்தியது.

நித்யா அமைதியாக இருப்பதைப் பார்த்த ராதா...., அவள் அருகில் வந்து அவள் தோளை அழுத்த...., "ஆமா...., அவளோட உக்காந்து முகாரி பாடு. உக்காந்திருக்கா பாரு...., ஏண்டி..., அவன் வராதேன்னு சொன்ன உடனே, ஆடு மாதிரி தலையை ஆட்டிட்டு வந்துட்டியா...?

"நாங்க அப்படித்தான் வருவோம்...., உன்னால் என்ன செய்ய முடியும்னு அவன் சட்டையைப் பிடிச்சு கேட்டிருக்க வேண்டாம்...", ஆத்திரமாக பொரிந்தாள் அனிதா.

"நீ ராஜு கிட்டே கேக்க வேண்டியதுதானே...", ராதா எகிற,

"அவர்தான் என்னை கட்டிக்கிறேன்னு சொன்னாரே...., ஆனா...., எல்லாம் இந்த மனோ செய்யும் வேலை...., அவனுங்க மனசுக்குள்ளே என்னதாண்டி இருக்கு...", கோபமாகத் துவங்கியவள்..., ஆற்றாமையாக புலம்பி...., கண்ணீரில் முடித்தாள்.

இவர்கள் இருவரும் வாய் விட்டு புலம்ப, ராதா மனதுக்குள் புழுங்கினாள். தன் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லாதவன்...., விளையாட்டாகப் பேசி தவிர்த்தவன்...., அவள் கோபமாகக் கிளம்பியபொழுது சொன்ன 'ஐ லவ் யூ' மட்டும் மனதை இம்சித்தது.

அதைச் சொன்னபொழுது அவன் கண்களில் வழிந்த காதல்...., இயலாமை..., வருத்தம்...., ஏக்கம்...., அப்படியே அவனை அணைத்து...., உங்களுக்குள்ளே என்னதான் இருக்கு...., என கேட்க எழுந்த ஆவலை அடக்க போராடியவள்..., அங்கிருந்து ஓடியே வந்துவிட்டாள்.

வாழ்க்கை காதலோடு முடிந்துவிடுவது இல்லையே...., வாழ்க்கை முழுவதும் துணைபோக, அது மட்டும் போதாது. இருமனம் இணையும் திருமணம் முடிந்தால் தான்...., அதில் ஒரு முழுமை இருக்கும்.

அப்படியிருக்க, அதை புரிந்துகொள்ளாமல்...., எங்கள் நேசத்தை புரிந்துகொள்ளுங்கள் என யாசிக்கும் அவர்களின் நியாயம் புரியாமல் குழம்பினார்கள்.

“நித்தி...., பெரியவர்கிட்டஇவங்களைப் பத்தின விஷயங்களைக் கேட்டால் என்ன...?”, ராதா தயங்கி கேட்க...., “அதான் எல்லாத்தையும் பேசத் தெரியாமல் பேசி கவுத்து வச்சுட்டாளே. இனிமேல் அவங்களைப்பற்றி அவர்ட்ட ஒரு வார்த்தை கூட வாங்க முடியாது...”, நித்யா வெடுக்கென சொன்னாள்.

முன்பு யாராவது தன்னை குறைசொன்னால் கோபப்படும் அனிதா...., இன்று அமைதியாக இருக்கவே...., “சாரி அனி...., ஏதோ தெரியாமல்...., ஒரு ஃப்ளோவில் வந்துடுச்சு...”, சங்கடமாகச் சொன்னாள்.

“விடு நித்தி...., நீயென்ன இல்லாததையா சொன்ன...., சரி விடு...., ஊருக்கு போலாமா...? அம்மாவைப் பாக்கணும் போல இருக்கு. மூணுபேரும் சேர்ந்தே போகலாம்...., உங்களைப் பார்த்தா அவங்க ரொம்ப சந்தோஷப் படுவாங்க”, ஏக்கமாக உரைத்தாள்.

அதைப் புரிந்தவர்களும் சரி என சொல்ல...., ராதா போன் செய்ய, போனை எடுக்கப் போனாள். அவளை வேகமாகத் தடுத்தவள்...., “அது ரெண்டுநாள் ஆஃப்லையே இருக்கட்டும். இப்போ ஆன் பண்ணி...., அதில் ஒரு மெசேஜ், ஒரு மிஸ்ட் கால் கூட இல்லன்னா...., அதை தாங்கிக்கிற சக்தி உனக்கு இருக்குன்னா அதை ஆன் பண்ணு...”, ஆத்திரமாக உரைத்தவள்...., வேதனையாக முடிக்க...., ராதா அலைபேசியை அப்படியே வைத்துவிட்டாள்.

இது எந்த மாதிரியான நேசம் என்பதை அறிய முடியாமல் தவித்தார்கள். ஆண்கள்மேல் கோபமும் இருக்கிறது....., ஆனால் அதைவிட அதிகமாக காதல் இருக்கிறது என்பதை எண்ணும்போது...., தங்கள் மனநிலையைக் கண்டு அவர்களே வியந்தார்கள்.

இறுதியாக ஊருக்குச் செல்ல கிளம்பியவர்கள்...., பெரியவருக்கும் அழைத்துச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைக் கேட்டவர், எதுவும் சொல்லாமலே வைத்துவிட்டார்.

மறுநாள் மாலையில் தங்கள் ஊருக்குச் செல்ல...., அவர்களைப் பார்த்த அனிதாவின் தாய் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். “கண்ணுங்களா...?”,

என அவர் அழைத்தவாறே ஓடிவந்து இவர்களை கட்டிக்கொள்ள...., நித்யா அவர் முகத்தைப் பார்த்தவள்...., அதில், தங்களை திடீரெனப் பார்த்த அதிர்ச்சி இல்லாததும், மகிழ்ச்சி மட்டுமே இருப்பதைப் பார்த்தவள்....,

‘அப்படின்னா இவங்களுக்கு நாம வரப்போறது முன்னாடியே தெரியுமா..? அப்போ அம்மாவுக்கு...’, அவள் யோசனையை கலைத்தது அவரது அணைப்பு. ஆனால் அனிதா கோபமாக முகத்தை திருப்பிக் கொண்டாள்.

“அனிதா...”, ஆசையாக அவர் அழைக்க..., காலை உதைத்து நடந்தவள், அறைக்குச் சென்று கதவை அடைத்துக் கொண்டாள்.

அவரது முகம் சோர்ந்து போக...., “அம்மா...., அவ உங்களைப் பாக்கணும்னு தான் ஆசையா வந்தா. இப்போ உங்களைப் பாத்த உடனே, அம்மாகிட்டே செல்லம் கொஞ்சுறா, வேற எதுவும் இல்லை. நீங்க கவலைப்படாதீங்க. அவளால் உங்களை வெறுக்க முடியாதும்மா...”, அவருக்கு ஆறுதல் அளித்தாள் நித்தி.

அனிதாவின் கோபம் உணர்ந்தவர்...., “சரிம்மா...., போய் முகம் கைகால் கழுவிட்டு வாங்க...”, அவர்கள் இருவரையும் அறைக்கு அனுப்பியவர், கிச்சனுக்குச் சென்று...., இட்லி ஊற்ற சொல்லிவிட்டு,

“மதியம் வைத்த சாம்பார் இருக்குல்ல...., அதோட கொஞ்சம் தேங்காய் சட்டினி, தக்காளி சட்டினி, புதினா சட்டினி வச்சுடுங்க...., அவங்களுக்கு அதுதான் பிடிக்கும்...”, மேலும் சில வேலைகளை மேற்பார்வை பார்த்துவிட்டு, கையில் அனிதாவிற்கு பிடித்த சிற்றுண்டியோடு அவள் அறைக்குச் சென்றார்.

அனிதா. கட்டிலில் படுத்திருப்பதைப் பார்த்தவர்...., தன் நடுங்கும் கரங்களால் அவள் முதுகை வருடினார். “அனிதா...., இந்த அம்மாமேல் கோபமா...?”, குரல் குழற அவர் கேட்க...., ஒரு நிமிடம் எதுவும் சொல்லாமல் இருந்தவள்...., சட்டென தாயின் மடியில் தலை வைத்துக் கொண்டு, ‘இல்லை..’, என்பதுபோல் தலை அசைத்துவிட்டு அவர் இடையை கட்டிக் கொண்டாள்.

அவளது செய்கையில் திகைத்தவர்...., “என்னம்மா...? இவ்வளவு நாள் அம்மா உன்னை பாக்காமல் இருந்துட்டேன்னு வருத்தமா...? இந்த

அம்மாவுக்கு வேற வழி தெரியலடா. உனக்கு அண்ணன் தம்பி, அக்கா தங்கை இருந்திருந்தா நான் இவ்வளவு வருத்தப்பட்டிருக்க மாட்டேன்.

“இதய நோயோட போராடிட்டு இருக்கற என்னோட இதயம் எப்போ அதோட துடிப்பை நிறுத்தும்னு தெரியாது. அப்படியிருக்கும்போது...., உன்னை தனியா நிறுத்திட்டு போக எனக்கு பயமா இருந்தது. அதான்...., என்னோட பிரிவை நீ இப்போலேர்ந்தே பழகிக்கணும்னுதான்....”, அவரால் மேலே சொல்ல முடியாமல் அழுதார்.

மகள் தன்னோடு பேசாமல் இருப்பதை அவரால் தாங்க முடியவில்லை. தன் கணவன் போன பிறகு...., அவளுக்காக மட்டுமே வாழ்பவர் அவர். அப்படியிருக்க...., அனிதாவின் மௌனம் அவரை கலங்க வைத்தது என்னவோ உண்மை.

தாய் அழவே...., வேகமாக எழுந்து அவரை கட்டிகொண்டவள்...., “சாரிம்மா..., நான் உங்களை ரொம்ப கஷ்டப்படுத்திட்டனா...? உங்க மனசு எனக்கு புரியாமல் இல்லை. ஆனா அப்போ, என்னால அவங்களோட ஒட்ட முடியலை. ஆனா இப்போ...., எல்லாம் சரியாயிடுச்சும்மா.

“நான் மூர்த்திப்பா கூட பேசுறேன்...., உங்களுக்கு சந்தோசம் தானே. தயவுசெய்து நீங்க அழாதீங்கம்மா....., நீங்க அழுதால் என்னால் தாங்க முடியாது...”, தாயின் கண்ணீரைத் துடைத்தவள்...., தானும் அழுதாள்.

“மூ...., மூர்த்திப்பான்னா....”, ‘மூர்த்திப்பா என்றா சொன்னாய்’ என்று நம்ப முடியாமல் கேட்டார். அவளது இந்த அழைப்பே அவரை நெகிழ வைக்க...., மகளை ஆதூரமாக கட்டிக் கொண்டார்.

“இது போதும்மா...., இனிமேல் நான் எந்த கவலையும் இல்லாமல் போய் சேர்ந்துடுவேன்...”, அனிதா அவர் வாயை மூட....,

“என்னம்மா பேச்சு இது. உங்களை அவ்வளவு சீக்கிரம் எங்கேயும் போக விட மாட்டோம். உங்க கையால சாப்பிடணும்னு எவ்வளவு ஆசையா வந்தோம்....., நீங்க என்னன்னா...., அனிதாவை கொஞ்சிட்டே உக்காந்துட்டீங்களே”, குறைபட்டாள் நித்யா.

“கண்ணுங்களா...., உங்களுக்கு இல்லாததா....? வாங்க வாங்க...”, அனிதாவை எழுப்பி...., அவர்களையும் அணைத்தவாறு சாப்பாட்டு

மேசைக்கு அழைத்து வந்தவர்...., அங்கே, சமையல்காரர்கள் அவசரமாக தயாரித்திருந்த உணவுகளை ஒரு தட்டில் எடுத்து வைத்தவர்...., அவரே மூவருக்கும் ஊட்டிவிட்டார்.

கண்கள் கலங்க மூவரும் சாப்பிட்டார்கள். எதை எதையோ பேச எண்ணினாலும், நால்வரும் எதையும் பேசிக்கொள்ளவில்லை. அவர்கள் மௌனம் உணர்ந்தவர்...., புருவ மத்தியில் முடிச்சோடு அவர்களைப் பார்த்தார்.

மூவரையும் தூங்கப் போகச் சொன்னவர்...., ஒரு நொடி தயங்கிவிட்டு, நித்யாவை அழைத்தார். மூன்று பெண்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள, அவர் நித்யாவை தங்கள் அறைக்கு கூட்டிச் சென்றார்.

அவள் தயங்கியவாறு நிற்க...., அவள் கையைப் பிடித்து அழைத்துவந்து கட்டிலில் அமர்த்தியவர்...., “என்ன பிரச்சனை நித்தி...?”, அவளிடம் நேரடியாக கேட்டார்.

சற்று திடுக்கிட்டவள்...., “அப்படில்லாம் எதுவும் இல்லம்மா...?”, இதைச் சொல்லும்பொழுது அவரைப் பார்ப்பதை கவனமாக தவிர்த்தாள்.

மென்மையாக சிரித்தவர்...., “உங்க மூணு பேரையும் நீங்க பொறந்து விழுந்த அன்னையில் இருந்து பாத்துட்டு இருக்கேன். ராதா அமைதியா இருந்தால் கொஞ்சம் ஒத்துப்பேன். ஆனா நீயும் அனிதாவும்...., அதுவும் அனிதா, அவங்க அப்பா இறந்தப்போ மட்டும்தான் அழுதா.

“அதுக்குப் பிறகு...., வீம்புக்குன்னே அழவே மாட்டா. மனசுக்குள் என்ன கஷ்டம் இருந்தாலும் அவ கண்ணில் இருந்து ஒரு சொட்டு கண்ணீர் கூட வராது. ஆனா இன்னைக்கு கலங்கிபோய் நிக்கிறா...? ராதா ஜீவனே இல்லாமல் இருக்கா.

“நீ முயற்சிப்பண்ணி இயல்பா இருக்க போராடுற. இந்த அம்மாகிட்டே நீ நடிக்கவேண்டிய அவசியம் என்ன...? அது மட்டும் இல்லாமல்...., சொல்லாமல் கொள்ளாமல் நீங்க உடனே கிளம்பி வரும்படி அப்படி என்ன கஷ்டம் உங்களுக்கு?”

“அனிதாவால் எதையும் எதிர்த்து சொல்லாமல் இருக்கவே முடியாது. அப்படிப்பட்டவள் எதுவுமே சொல்லாமல்...., உங்களோட கிளம்பி

வந்திருக்கா...., நீங்களும் உங்க வீட்டுக்குப் போகாமல்...., என்னைத் தேடி வந்திருக்கீங்க. அதைவிட, இன்னும் கூட, உங்க வீட்டுக்குப் போகணும்னு ஒரு வார்த்தை கூட நீங்க சொல்லவே இல்லை...

“அப்படின்னா...., உங்க மனசுக்குள் இருப்பதை உங்களை பெத்தவங்க கண்டு புடிச்சுடுவாங்கன்னு இங்கே ஒளிஞ்சு இருக்கீங்க அப்படித்தானே. உங்க கஷ்டத்தை ஏன் என்கிட்டே மறைக்க முயற்சி பண்ணுறீங்க...? அவங்க ரெண்டுபேரும், நான் என்ன கேட்டாலும் வாயைத் தொறக்க மாட்டாங்க.

“அதனால் தான் உன்னை கேக்குறேன். உண்மையை மட்டும் சொல்லு...”, அவர் அழுத்திக் கேட்கவே...., வேறு வழியின்றி வாயைத் திறந்தாள். அவளுக்கும் தன் மனதில் இருப்பதை யாரிடமாவது சொல்லியே ஆகவேண்டும்போல் இருந்தது.

அதே நேரம் ராதாவும் அனிதாவும் கூட அவர் அறையின் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்துவிட...., அவர்களும் தங்கள் மனதுக்குள் இருந்த வேதனையை கொட்டினார்கள்.

அனைத்தையும் கேட்டவர்...., “சரி...., முதல்ல உங்க போனை ஆன் பண்ணுங்க...”, அவர் சொன்னதைக் கேட்டு திகைத்தார்கள்.

அதை கண்டுகொள்ளாமல்...., “அனிம்மா...., அம்மாவுக்கு...., நாங்க வரது..”, நித்யா தயக்கமாக நிறுத்த..., “இன்னும் சொல்லலை...., நாளைக்கு நானே கூட்டி போறேன். முதல்ல நான் சொன்னதை செய்ங்க...”, அவர் கட்டளையிட, தங்கள் போனை ஆன் செய்தார்கள்.

அவர்கள் ஆன் செய்த சில நிமிடங்களிலேயே மெச்செஜ்களால் போன் நிரம்பியிருக்க...., நித்யா தன் அலைபேசிக்கு வந்திருந்த மிஸ்ட்கால்களைப் பார்த்து திடுக்கிட்டாள். அவள் முக மாற்றத்தைப் பார்த்து புருவம் சுருக்கியவர்...., வேகமாக அவள் கையில் இருந்து அலைபேசியை வாங்கிப் பார்க்க....,

“you received (1000) missed call from this(81.......) number”, இந்த செய்தியைப் பார்த்து அவரே ஒரு நிமிடம் திடுக்கிட்டார்.

“நித்தி...., இது...., நீ சொன்ன மனோஜோட நம்பரா...?”, அவர் கேள்வியாக நிறுத்த....,

‘இல்லை’ என்பதுபோல் தலை அசைத்தவள்...., “அ...., அவரோட அம்மா...”, திக்கித் திணறினாள்.

“நீங்கல்லாம் படிச்சவங்க தானே. கையில் செல்போன் வச்சிருக்கதே அவசரத்துக்கு பேசத்தான். ஆனா...., அவங்க எதுக்கு பேச முயற்சி செய்தாங்கன்னு தெரியவே இல்லையே...? மூணுபேரும் ஒரு முடிவெடுத்து கிளம்பி வந்துட்டீங்க...

“ஏற்கனவே அவங்க உங்களைப் பிரிஞ்ச ஏக்கத்தில் இருப்பாங்க. இதில் நீங்க வேற செல்போனை ஆஃப் பண்ணி வச்சு...., ஆண்டவா...., உங்களுக்கெல்லாம் பெரியவங்கன்னு நாங்க எதுக்கு இருக்கோம். சைக்கிள் வேணும், லேப்டாப் வேணும், கிளிப் வேணும்...., பென் வேணும்....,

“இப்படி ஒவ்வொரு விஷயத்துக்கும் பெத்தவங்க கிட்டே கேட்டு வாங்கத் தெரியுது. இப்படி ஒருத்தன் மேல நினைப்பு இருக்கு...., ஆனா அவங்க வாயைத் தொறக்க மாட்டேங்கறாங்கன்னு சொல்ல மட்டும் தைரியம் இல்லையா...?

“உங்களோட எந்த ஆசைக்காவது நாங்க தடை சொல்லி இருக்கோமா...? எல்லாத்தையும் நீங்களே பேசி முடிவு பண்ணி...., எனக்கு வர ஆத்திரத்துக்கு மூணுபேரையும் அறையலாம்னு தோணுது..” படபடவென பொரிந்தார்.

அவர் கோபத்தில் பெண்கள் திகைத்து நிற்க...., நித்யாவின் கண்களில் கண்ணீர் குளம் கட்டிவிட்டது.

“அம்மா இப்போ...”, நித்யா திணற...., “ஆமா இப்போ கேளு...., என்ன செய்யறதுன்னு. இதை அங்கே இருக்கும்போதே கேக்க முடியலையா...? இவளுங்க ரெண்டுபேரும்தான் அவசர குடுக்கைங்க...., உனக்கு எங்கே போச்சு புத்தி.

“அங்கே இருக்கும்போதே பெரியவர் கிட்டே பேசியிருக்க வேண்டாம்..., அவர்தானே உங்களை அங்கே வேலைக்கு அனுப்பி வச்சார்...? எல்லா முடிவையும் நீங்களே எடுக்குற அளவுக்கு வளர்ந்துட்டீங்களோ...?”, அவரால் பொறுத்துகொள்ளவே முடியவில்லை.

“அம்மா...., நீங்க கொஞ்சம் அமைதியா இருங்க...”, அவர் டென்ஷன்

ஆவது பொறுக்காமல் சொன்னாள் நித்யா.

“ஆமா...., இதையெல்லாம் நல்ல தெளிவா சொல்லு. வாழ்க்கையில் கோட்டை விட்டுடுங்க...., இப்போ நேரம் வேற பதினொண்ணு ஆகுது...., போன் பண்ணும் நேரமும் இல்லை..”, தலையிலேயே லேசாக அடித்துக் கொண்டவர்....,

ராதா...., அனிதாவின் அலைபேசியையும் பிடுங்கிப் பார்த்தார். அதிலும் இப்படி நிறைய தவிர்க்கப்பட்ட அழைப்புக்கள் இருக்க...., கோபம் கரையைக் கடக்கவா என வேண்டியது.

அவர்களது அலைபேசியை அவர்களிடமே கொடுத்தவர்...., “சரி...., என்ன மெச்செஜ் வந்திருக்குன்னு பாருங்க...”, சிடுசிடுத்தார்.

அனைவருக்கும் கைகள் உதறியது. கைகள் நடுங்க நித்யா இன்பாக்ஸ்சை திறக்க...., கடைசியாக வந்த மெச்செஜ்..., “நித்தும்மா...., நித்தும்மா...., நித்தும்மா...., நித்தும்மா...”, என்று விடாமல் புலம்பியிருந்தது.

வேகமாக முதல் மெச்செஜ் போய் பார்க்க...., “சாரி...”, என்று இருந்தது. முதல் செய்திக்கும்...., இறுதி செய்திக்கும் இடையில்...., மன்னிப்பு வேண்டல் செய்தியில் துவங்கி...., “ஏன் பதில் இல்லை...”, “கோபமா...”, “நித்யா....., ஏதாவது சொல்லேன்...”, “திட்டியாவது மெச்செஜ் அனுப்பு...”, நித்யா..., என்னமோ ஒரு மாதிரி இருக்கு...”, “தனியா இருக்க மாதிரி...”,

“உன்னை ரொம்ப மிஸ் பண்ணுறேன்...”, “நித்தி...., பேசவே மாட்டியா...”, “என்னை வெறுத்துட்டியா...”, “நித்தி...., ப்ளீஸ்...”, “நிது...”, “நித்தும்மா...”, படிப்படியாக மாறிய அவனது அழைப்பு, ஏக்கம் பேச்சு...., படிக்க படிக்க..., நித்தி உருகிப் போனாள்.

பொதுவாக மனோ மிகுந்த உறுதியானவன்...., தன் உணர்வுகளை வெளிக்காட்டவே மாட்டான். அப்படிப்பட்டவனே ஒரே நாளில் இவ்வளவு உருகியிருக்க...., முதல் முறையாக, தான் அவனை விட்டு வந்திருக்கக் கூடாதோ என்று வருந்தினாள்.

நித்யாவின் கண்கள் கண்ணீரை உற்பத்தி செய்ய...., தாயைத் தேடிய கன்றாக அவர் தோள் சாய்ந்து அழுதாள்.

ராதாவோ அவள் போனை இமைக்க மறந்து வெறித்திருந்தாள். அருண், அவனது புகைப்படங்களை செல்ஃபியாக எடுத்து அவளுக்கு அனுப்பி வைத்திருந்தான். அவளை எப்பொழுதும் விழுங்கத் துடிக்கும் அவன் விழிகள், புகைப்படங்களில் ஏக்கத்தை சுமந்திருந்தது.

ஒவ்வொரு மணி நேரத்துக்கும் ஒவ்வொரு புகைப்படம் எடுத்து அனுப்பியிருக்க, முந்தினநாள் இரவில் அவன் ஒரு பொட்டு கூட தூங்கவில்லை என்பதை, அந்த புகைப்படங்கள் அவளுக்கு உணர்த்தின. வார்த்தைகளை உதிர்க்காமல்...., நிழற்படமாக அனைத்தையும் கொட்டியிருந்தான்.

ஒரு மணி நேரத்துக்கு முன்னதாக வந்த புகைப்படத்தில் அவன் கண்கள் கலங்கியிருக்க, அவள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே மற்றுமொரு புகைப்படம் வர...., அதில் ஐந்து செக்கெண்டு மட்டுமே ஓடும் ஒரு வீடியோ வந்திருக்க...., நடுங்கும் கரங்களால் அதை ஓடவிட....,

“ராது...”, என்று அவன் உச்ச அழைப்பில் கத்த, அவன் கண்களோ கண்ணீரை மடமடவென கொட்டியது. சட்டென மொபைல் கேமராவை அவன் திருப்ப...., சட்டென அந்த வீடியோ முடிந்து போனது. “அருண்...”, என்னவோ அவன் நேரில் இருப்பதுபோல் அவனை அணைக்கத் துடிக்க...., அது முடியாமல்..., போனை கட்டிலில் தூக்கி வீசிவிட்டு...., “அம்மா என்று அவரையே அடைந்தாள்.

அவர் கண்கள் இப்பொழுது அனிதாவை நோக்க...., ராஜு புலம்பித் தள்ளியிருந்தான் ‘வாட்ஸ்ஆப்’பில்... “அனி...., நீ எப்போ வருவ...”, “அனி எனக்கு பாப்பா பெத்து தரேன்னு சொன்னியே...., அது எப்போ நடக்கும்..”, “நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிறேன்...”,

“எனக்கு இங்கே மனசை என்னமோ பிசையுது...”, “வலிக்குது அனி..”, “ரொம்ப வலிக்குது அனி...”, “வாய்விட்டு கத்தணும் போல இருக்கு...”, “ இனிமேல், வலிச்சாலும் கத்தக்கூடாதுன்னு நீ அன்னிக்கு சொன்னியே...”, “அப்படிக் கத்தணும்னு தோணினால் உன்கிட்டே சொல்லச் சொன்னியே..”, “அன்னைக்கு மாதிரி என் வாயை அடைப்பியா...?”

“அனி...., வலிக்குது...”, “நான் இப்போ கத்தப்போறேன்...”, “ஆ... ஆ... ஆ... ஆ...”, அதற்குமேல் அவளால் படிக்க முடியவில்லை.

ஓடிச்சென்று அவன் வாயை அடைக்கும் வேகம் பிறக்க...., “நான் இப்போவே போறேன்...”, வெளியே ஓடப் போனவளை அடக்க, அனைவரும் மிகுந்த சிரமப்பட்டார்கள்.

“ராஜு...., எனக்கு இப்போவே...., இந்த நிமிஷமே ராஜுவை பாக்கணும். எனக்கு அவர் வேணும்...., அவர் இல்லாமல் நான் செத்துடுவேன்...., என்னை விடுங்க...., நான் போறேன்...”, காட்டுக் கூச்சல் போட்டவளை எப்படி சமாதானம் செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை.

யாருக்கு யார் ஆறுதல் அளிப்பது என்று கூட புரியாமல்...., அனைவரும் தாயைத் தேட....., கட்டிலில் அமர்ந்தவர்..., மூவரையும் மடியில் தாங்கிக் கொண்டார்.

கோபமாக எதையோ சொல்லப் போனவர்...., தரையில் விழுந்த மீனாக துடிக்கும் பெண்களைப் பார்த்து...., அவர்களை ஆதரவாக அணைத்துக் கொண்டார்.

சற்று அவர்களை அழ விட்டவர்...., “சரி, இப்போ எல்லோரும் அமைதியா இருங்க. எதுவாக இருந்தாலும் நாளைக்குப் பேசிக்கலாம்...”, அவர்களை அடக்கினார்.

“இல்லை இப்போவே கிளம்புறோம்...., காலையில் நாங்க அவங்க முன்னாடி இருக்கணும்...”, மூவரும் ஒன்றாக புலம்பினார்கள்.

அவர்களை நிதானமாகப் பார்த்தவர்...., “சரி நின்னு...”, அதே நிதானமாகக் கேட்க..., அவர் கேள்வியில் இருந்த உண்மை தாக்க...., ‘அதானே...., இப்போ அவங்க முன்னாடி நின்னால் மட்டும் அப்படியே கழுத்தில் தாலி கட்டிடுவாங்களா...?’, கேள்வி பிறக்க...., இன்னும் துடித்தார்கள்.

“இப்போ நீங்க வருத்தப்பட வேண்டி, நான் எதையும் சொல்லலை. ஆனாலும் இதுக்கு ஒரு முடிவு தெரியாமல் நான் விடப்போவதில்லை. முதல்ல நீங்க தூங்குங்க...., இனிமேல் எல்லாத்தையும் நாங்க பாத்துக்கறோம்...”, அவர்களை தூங்கச் சொன்னார்.

அதே நேரம் நித்யாவின் அலைபேசி அடிக்க...., அவளைத் தவிர்த்துவிட்டு, பெண்களை அமைதியாக இருக்குமாறு செய்கை காட்டியவர்...., அலைபேசியை ஆன் செய்து செவிமடுத்தார்.

“ஹல்லோ...., நித்யாவா...., நித்யாவா பேசுறது. நான் பேசுறது கேக்குதாம்மா நான் மனோவோட அம்மா பேசுறேன். ஹல்லோ...., அங்கே இருக்கியாம்மா..?”, அனிதாவின் தாய், பதில் ஹலோ சொல்லும் முன்பே படபடத்தார்.

“நீங்க பேசுறது எனக்கு தெளிவா கேக்குது. நான் அனிதாவோட அம்மா பேசுறேன் சொல்லுங்க...?”, சட்டென ஒரு அமைதி சூழ்ந்தது.

“அனிதாவோட அம்மாவா...? நான் யாருன்னு உங்களுக்கு சொன்னால் தெரியுமான்னு தெரியலை...., நான் மனோஜோட அம்மா. மனோ யாருன்னா...”, அவர் துவங்கவே....,

“நித்யாவோட முதலாளிதானே மனோஜ். எனக்குத் தெரியும் சொல்லுங்க...”, அனிதாவின் தாய் அவரைத் தடுத்தார்.

“ஓ...”, அவரது ‘முதலாளி’ என்ற அழைப்பில் சோர்ந்த மனோவின் தாய்...., இருந்தாலும் விடாமல்...., “எனக்கு உங்ககிட்டே கொஞ்சம் பேசணும். நேர்ல பார்த்தால் நல்லா இருக்கும்னு நினைக்கிறேன். நீங்க எங்கே இருக்கீங்கன்னு சொன்னால்...., நான் நேர்ல வாறேன்”, தயங்கினாலும் தான் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்தார்.

“அப்படியா...?”, ஒரு நிமிடம் நிறுத்தியவர்...., “நான் திருச்சியில் இருக்கேன்”, அவர் சொல்ல....,

“பரவாயில்லை..., நீங்க விலாசம் சொல்லுங்க. நான் நாளைக்கே நேர்ல வரேன்...”, எங்கே, வேண்டாம் என்று சொல்லிவிடுவாரோ என்று, அவர் குரல் அனிதாவின் தாயிடம் கெஞ்சிற்று.

“என்ன விஷயம்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?”, அனிதாவின் தாய் கேட்க, பெண்கள் மூவரும் அவரிடம் கண்களால் கெஞ்சினார்கள்.

அதைக் கண்டுகொள்ளாமல் விட்டவர்...., மனோவின் தாயின் பதிலுக்காக காத்திருந்தார். “இதை நேர்ல பேசினால்தான் சரியா வரும்...., இருந்தாலும் திடுதிப்புன்னு வந்து எதுவும் சொல்ல முடியாது என்பதால்...., நித்யாவை எங்க மனோவுக்கு கேக்கலாம்னு...., “

“ஆனா உங்க முடிவுதான் இறுதியானது. அவங்க வாழ்க்கையில் என்ன நடந்ததுன்னு உங்களுக்கு முதல்ல தெரியணும்..., அதுக்கு முன்னாடி....,

இல்ல..., நான் நேர்லயே வந்து பேசுறேனே...”, அலைபேசியில் பேசுவது சரியாகப் படாததால் நிறுத்திவிட்டு, அனிதாவின் தாய் என்ன சொல்வரோ என்று பதைப்புடனே காத்திருந்தார்.

“சரி...., அப்போ நீங்க வாங்க...., விலாசம் நான் பொண்ணுங்கட்ட சொல்லி அனுப்ப சொல்லுறேன்...”, சொன்னவர் அலைபேசியை வைத்துவிட்டார்.

‘பொண்ணுங்க...?’, மனோவின் தாய் குழம்பிப் போனார். இருந்தாலும் மேலே அதைப்பற்றி சிந்திக்காமல்...., மற்றவர்களிடமும் விஷயத்தை சொல்ல நினைக்கையில் நேரம் பார்க்க...., அது நள்ளிரவைத் தாண்டி சென்றுகொண்டிருக்கவே...., அந்த எண்ணத்தை கைவிட்டவர்...., விடியலுக்காக காத்திருக்கத் துவங்கினார்.

அனிதாவின் தாய் எல்லாம் சரியாகிப்போகும் என்ற நம்பிக்கையை பெண்களுக்குக் கொடுத்து உறங்க வைத்தவர்...., மனோவின் தாய் அப்படி என்ன சொல்லபோகிறாரோ என்ற எண்ணத்தில் உறக்கம் தொலைத்தார். இறுதியில், ‘எதுவாக இருந்தாலும் சந்திப்போம்’ என்று முடிவெடுத்து உறங்கத் துவங்கினார்.

மறுநாள் தங்கள் வீட்டில் இருந்த பெரியவர்களை முகம் மலர வரவேற்று, அவர்களுக்கு சிற்றுண்டி கொடுக்க...., அதை சாப்பிடுவதா வேண்டாமா என்ற யோசனையோடு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு அமர்ந்திருந்தார்கள் ஆண்களின் பெற்றோர்.

“சும்மா சாப்பிடுங்க. சம்பந்தம் வச்சுக்கிறதும்...., வச்சுக்காததும் பிறகு பாத்துக்கலாம். இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்திருக்கீங்க...., ஒரு ஃப்ரண்ட் வீடா நினைச்சு சாப்பிடுங்க...”, அனிதாவின் தாய் வற்புறுத்த, கொஞ்சம் தயங்கினாலும் உண்டார்கள்.

அதன் பிறகு யார் பேச்சைத் துவங்குவது என்று தயங்க...., “பேசணும்னு வந்துட்டு அமைதியாவே இருக்கீங்க. மனோ, அருண், ராஜு எல்லாம் எப்படி இருக்காங்க...?”, அனிதாவின் தாய் பேச்சைத் துவங்க,

கண்களில் நீர் நிறைய...., “புள்ளைங்க ஒரே நாளில் துடிச்சு போய்ட்டாங்க. அவங்களோட இக்கட்டான சூழலில் எல்லாம் நாங்க துணையா இருந்திருக்கோம். ஆனா...., இப்படி துவண்டுபோய் அவங்களை நான் பாத்ததே இல்லை.

“மனோ ரொம்ப தைரியமானவன்னு நினைச்சிருந்தேன்....., ஆனா ஒரே நாளில்..., அவன் வாழ்க்கையே சூனியம் ஆன மாதிரி மாறியதைத்தான் என்னால் தாங்கவே முடியலை. ராஜு...., குழந்தை மாதிரி தேம்பி அழறான். அருண்...., விளையாட்டு பிள்ளையா இருக்குறவன்...., ரூமை விட்டு வெளியே வரவே இல்லை.

“இதையெல்லாம் பாக்க முடியாமத்தான்...., இப்போ உங்க முன்னாடி இருக்கோம். இப்போ கூட அவங்களுக்கு, நாங்க இங்கே வரது தெரியாது. சொல்லாமல்தான்...., வேண்டுதல்ன்னு சொல்லிட்டு வந்திருக்கோம்..”, முந்தானையால் கண்களைத் துடைத்தவாறு சொன்னார்.

அவர் இவ்வாறு சொல்லவே...., அனிதாவின் தாய்க்கு சுள்ளென கோபம் வந்தது. “ஏன்...? இந்த தயக்கம் எல்லாம்...., என் பொண்ணுங்க மனசுக்குள் ஆசையை வளர்க்க முன்னாடி, இதெல்லாம் அவங்களுக்கு தெரியலையாம்மா...? அப்படியென்ன பிடிவாதம்...?

“காதல் வேணும்...., கல்யாணம் வேண்டாம்னு...., அப்படியென்ன பிடிவாதம், தயக்கம்...? ஏன் இப்படி இருக்காங்க...? என் பொண்ணுங்க கண்ணீர் விட்டு அழுததை, என்னால் கண்கொண்டு பாக்க முடியலை. இவங்களுக்கு நான் என்ன ஆறுதல் சொல்லுறது...?

“நீங்க சொல்லுங்க...., அப்படி வெளியவே சொல்ல முடியாத அளவுக்கு, தங்களோட மனசுக்கு பிடிச்ச பொண்ணுங்க கிட்டே கூட சொல்ல முடியாத அளவு என்ன பிரச்சனை..? எனக்கு இப்போ தெரிஞ்சாகணும்...”, ஒரு தாயாக, அவர் கோபம் கொண்டார்.

அதைப் புரிந்துகொண்ட மனோவின் தாய்...., “உங்க கோபத்தில் நியாயம் இருக்கு. ஆனா...., அவங்க மனசுக்கு பிடிச்ச பொண்ணுங்க கிட்டே....., தாங்கள் ஒரு கொலைக்குற்றவாளிகள் என்பதையும், அதுவும், சொந்த அப்பாவையே கொன்னுட்டு...., ஜெயிலுக்குப் போய்...., தண்டனை முடிச்சு வந்தவங்கன்னு, எப்படி..., எந்த முகத்தோட அவங்க சொல்லுவாங்க..?”, நியாயம் கேட்டவர்...., துக்கம் தாளாமல் குலுங்க, காஞ்சனா அவரைத் தாங்கினார்.

அங்கே ஊசி விழுந்தால் கேட்கும் அளவு அமைதி நிலவியது.

***

# மௌனம் – 26.

மனோவின் தாய் சொன்னதைக் கேட்ட அனைவருக்கும், அவர் சொன்ன செய்தியின் தாக்கத்தை ஜீரணிக்கவே கொஞ்ச நேரம் பிடித்தது. அதிலும் பெண்கள் மூவரும் அந்த செய்தியை கேட்டு கொஞ்சம் அதிர்ந்துதான் போனார்கள்.

ஆண்களின் மனதுக்குள் பெரிதாக ஏதோ ஒரு விஷயம் அரித்துக் கொண்டிருக்கிறது. அதை அவர்களால் வெளிப்படையாக சொல்ல முடியவில்லை...., அது..., அவர்கள் குடும்பப் பின்னணியாக இருக்கலாம்...., ஜாதியாக இருக்கலாம்...., வாழ்க்கை முறையாக இருக்கலாம்...., இப்படியான காரணங்களை அவர்கள் எதிர்பார்த்திருக்க, கொலைகாரர்களாக இருப்பார்கள் என்று கற்பனை கூட செய்து பார்த்திருக்கவில்லை.

‘என் மனோ கொலைகாரனா....? அதுவும் சொந்த அப்பாவையேவா...? ஏன்..? அப்படியென்றால் இங்கே அவர் அப்பாவாக இருப்பவர் யார்...?’, மூன்று பெண்களின் யோசனையும் இதுவாகத்தான் இருந்தது.

தான் சொன்ன செய்தியின் தாக்கம் கொஞ்சம் தணியட்டும் என்பதுபோல் அமைதியாக இருந்த மனோவின் தாய்...., “உங்களுக்கு இன்னொரு சந்தேகமும் வரலாம்...., அப்படின்னாஇப்போ அவங்க அப்பாவா இருக்கறவங்க யாருன்னு....? உண்மையை சொல்லப்போனால்...., நாங்க மூணுபேருமே அவங்களோட அம்மா அப்பா கிடையாது.

“பொதுவா யாருமே, புள்ளைங்களைத்தான் தத்தெடுப்பாங்க. ஆனா எங்க பசங்க எங்களை, தங்களோட அம்மா அப்பாவா சுவீகாரம் பண்ணிக்கிட்டாங்க...”, அடுத்த அதிர்ச்சியை அளித்தார்.

‘என்ன இது...? ஒரே மர்மக்கதையா இருக்கு...’, பெண்கள் நினைக்க...., “நீங்க என்ன சொல்லுறீங்க. மூணுபேருமே கொலைகாரர்களா...?”, அனிதாவின் தாய் அதிர்ச்சியை மறைக்காமல் கேட்டார். அவர் புருவம் யோசனையாக சுருங்கி இருந்தது.

“தயவுசெய்து அவசரப்பட்டு, நீங்களா எந்த தப்பான முடிவுக்கும் வந்துடாதீங்க. நாங்க சொல்லப்போற விஷயத்தை கொஞ்சம்

பொறுமையா கேளுங்க. மனோ, அருண்தான் அப்படி...., ராஜு அப்படி இல்லை. ஆனா...., நீங்க இதை எப்படி எடுத்துப்பீங்கன்னு தெரியலை...", அதைச் சொல்ல மிகவும் தயங்கினார்.

"அதான் எல்லாத்தையும் சொல்லணும்னு வந்துட்டீங்களே...., சொல்லிடுங்க", அனிதாவின் தாய் விடாமல் கேட்டார்.

"உங்களுக்கு ராஜுவோட குணம் பற்றி தெரியுமா என்னன்னு தெரியலை. சட்டுன்னு யாரையுமே நம்பிடுவான்...., வெள்ளந்தியான குணமும், வெள்ளை மனசும் கொண்டவன்....", நேரடியாக சொல்ல முடியாமல் சுற்றி வளைத்தார்.

அவர் சுற்றி வளைப்பதைப் பார்த்த அனிதாவின் கால்கள் நடுங்க...., கைகள் இரண்டும் உதறியது. அவள் நிலை உணர்ந்து, நித்யா சட்டென அவள் தோளை அழுத்தி, தன்மேல் சாய்த்துக் கொண்டாள். அனிதாவின் இதழ்கள் நடுங்கியது.

"அனி...., கண்ட்ரோல் யுவர்செல்ஃப்...., பாத்துக்கலாம்...", அறை வாயிலில் தன் மகள் துடிப்பதைப் பார்த்த தாயுள்ளம் தவிக்க...., "ஹையோ...., இப்படி பீடிகை போடாமல் விஷயத்துக்கு வாங்க...", அவர் உள்ளம் பதைபதைத்தது.

"ராஜு...., போதைப்பொருள்...., இல்ல..., அவனுக்கு அது என்னன்னே தெரியாமல் தான்...", அனிதாவின் தாயின் கைகள் நடுங்குவதைப் பார்த்தவர்...., வேகமாக சேர்த்துச் சொன்னார்.

அனிதாவின் தாயின் பார்வை அவர்களை குற்றம் சுமத்த...., அதை சந்திக்க முடியாமல் தலை கவிழ்ந்தனர் ஆண்களின் பெற்றோர். அனிதாவின் தாய் அறைவாயிலைப் பார்க்க...., ராஜுவின் செய்தி கொடுத்த அதிர்ச்சியைத் தாங்காமல்..., குலுங்கி அழுதுகொண்டிருந்தாள் அனிதா.

கொலை என்பதைக் கூட...., ஓரளவுக்கு ஏதோ ஒரு இக்கட்டான சூழலில், உணர்ச்சியின் பிடியில் நடந்துவிட்ட தவறென்று ஒத்துகொள்ள முடிந்த அவரால்...., போதைப்பொருள் கடத்தலை அவ்வளவு சுலபமாக எடுக்க முடியாமல் தவித்தார்.

அதிலும்...., அனிதாவின் மனம் கவர்ந்தவன், ஒரு போதைப்பொருள்

கடத்தலில் ஈடுபட்டு...., தண்டனை அனுபவித்தவன் என்பதை அவர்களால் ஜீரணிக்கவே முடியவில்லை.

“அனிதாம்மா...., நீங்க..., நான் சொன்ன விஷயங்களை...., இன்னைக்கு இருக்கற மனோ..., அருண்...., ராஜுவோட ஒப்பிட்டு பாக்காதீங்க. இதெல்லாம் அவங்களோட பதினைந்து வயதில் நடந்த விஷயங்கள்...”, அவர்கள் தவறான முடிவை எடுத்துவிடக் கூடாதே என்ற பதைப்போடு பேசினார்.

ஏற்றுக்கொள்ள முடியாத மனநிலையோடு...., அரை குறையாக தலையை அசைத்தார் அனிதாவின் தாய். “நான் சொல்லப்போறதை முழுசா கேட்ட பிறகு நீங்க முடிவுக்கு வாங்க....”, கிட்டத்தட்ட அவர் குரல் இறைஞ்சிற்று.

அதே நேரம் ஆண்களும்...., தங்கள் மனம் கவர்ந்த பெண்களின் புகைப்படத்தை வைத்துகொண்டு, தங்கள் இருண்ட பக்கங்களை புரட்டத் துவங்கினார்கள். எப்பொழுதும் அதை நினைக்கவே விரும்பாத அவர்கள், இன்று வேறு வழியின்றி...., தங்கள் இணைகளிடம் எப்படி இதைச் சொல்வது என்ற மனநிலையில் மூழ்கினர்.

எண்ணங்கள் கடந்த காலத்துக்குள் நுழைந்தது. மனோ...., ஏழைப் பெற்றவர்கள் அஞ்சலை, சுவாமிக்குப் பிறந்த ஒரே புதல்வன். அவன் தந்தை ஒரு தனியார் கம்பெனியில் பியூனாக வேலை பார்த்து வந்தார். அவரது ஒரே பலவீனமும்...., மிகவும் மோசமான பலவீனமும் ‘குடி’தான்.

மனோவின் தாய் அஞ்சலை...., சேற்றில் மலர்ந்த செந்தாமரை என்றுதான் சொல்ல வேண்டும். இருக்கும் இடம் சேரியாக இருந்தாலும்...., அந்த இடத்துக்கே ஒட்டாத தனித்துவம் அவரிடம் உண்டு. அவரைப் பார்க்கும் யாரையும்...., ஒரு நொடி திரும்பி பார்க்கத் தூண்டும் அழகு அவருடையது.

“அம்மா...., நீ ரொம்ப அழகும்மா....”, மனோ அடிக்கடி இந்த வார்த்தையை அஞ்சலையிடம் உரைப்பான். தாயின் அழகில் அவனுக்கே ஒரு தனி கர்வம் உண்டு.

சுவாமியிடம் பணம் இருந்தாலும்...., இல்லை என்றாலும் நிதானம் தவறும் அளவு குடித்துவிட்டு வருவார். அவர் வேலை செய்த கம்பெனியின் முதலாளிதான் அருணின் தந்தை அரசு.

பணத்துக்காக...., அரசு சொல்லும் எதையும், சுவாமி செய்ய தயங்குவதே இல்லை. எவ்வளவு பணம் கிடைத்தாலும், மனைவிக்கோ, மகனுக்கோ எதையுமே அவர் செலவு செய்யவே மாட்டார்.

அவர்கள் வீட்டின் செலவுகளை, அஞ்சலை நான்கு வீட்டில் பாத்திரம் கழுவி நிறைவேற்றினார். பெரிய வீடுகளின் பழைய சாதம்..., அவர்களின் உயிர்வாழ்வின் ஆதாரமாக இருந்தது. தாயின் துன்பமும், கஷ்டமும் உணர்ந்து, மனோவும் எதற்கும் ஆசைப்பட மாட்டான்.

பசித்தால் கூட...., தாயிடம் அதை வெளிப்படுத்த மாட்டான். இருந்தால் எதையாவது சாப்பிடுவான். இல்லையென்றால் கூட...., பேசாமல் படுத்துக் கொள்வான்.

அவருக்கு உடம்பு சரியில்லாமல்...., வேலைக்குப் போகாத நாட்களில்...., தாய் பாசமாக அவன் தலையை வருடி...., “பசிக்குதாப்பா...? இன்னைக்கு அம்மா கையில் காசில்லை ராஜா...., அதான்...”, அவர் கவலையாக உரைக்கும்பொழுது,

“மதியம் நான் சத்துணவு நிறைய சாப்பிட்டேம்மா...., எனக்கு பசிக்கலை. நீங்கதான் மதியம் கூட சாப்பிட்டிருக்க மாட்டீங்க...., ஹாஸ்பிட்டல் போலாம்மா...., இப்படியே ரெண்டு நாளா கிடக்கறீங்களே...”, தாய்க்காக கவலைப்படுவான் அவன்.

அப்பொழுதெல்லாம்...., மூக்குமுட்ட குடித்துவிட்டுவரும் தந்தையை சபிப்பான். ஆனால் அவன் தாய், தந்தையை ஒரு வார்த்தை கூட குறை சொல்லமாட்டார். அனாதையான அவரை...., ரோட்டில் நாலுபேர் மத்தியில் கேவலப்பட விடாமல்...., கழுத்தில் ஒரு மஞ்சள் கயிறைக் கட்டி, தனக்கு பாதுகாப்பு அளித்த அவரை, அவரால் எப்பொழுதும் சபிக்க முடிந்ததில்லை.

அவர்களது இந்த நிம்மதியைக் குழிதோண்டி புதைப்பதுபோல்...., அவர்கள் வாழ்வில் அந்தநாள் வரும்வரை...., வறுமையிலும் நிம்மதியாகவே வாழ்ந்தார்கள் அவர்கள்.

அரசுவின் மிகப்பெரிய பலவீனம்...., பெண்கள். பணத் திமிரும், மிதப்பும்...., செருக்கும் அதிகம் இருக்க, நாளொரு பெண்ணுடன் புரளும் குணம் உடையவர்.

அவரது இந்த குணமே...., அவர் வீட்டை போர்க்களமாக மாற்றி இருந்தது. மகன் சிறியவனாக இருந்த வரைக்கும்...., சற்று அடங்கிப் போன அருணின் தாய் விமலா., அவன் வளரத் துவங்கவே தன் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

அருணின் தாத்தா பாட்டி இருந்த வரைக்கும் அடங்கி இருந்த அரசு...., அதன் பிறகு ஒரு கெஸ்ட்ஹவுசை கட்டிக்கொண்டு...., தன் திருவிளையாடல்கள் அனைத்தையும் அங்கே வைத்துக் கொண்டார்.

முதலில் கண்டித்த விமலா..., இறுதியில் கெஞ்சியும் பார்த்தார். ஆனால்...., அரசு கேட்பதாக இல்லை. மகனது கவனத்துக்கு விஷயம் போகக்கூடாது என்று எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும்...., தினமும் நடக்கும் போராட்டங்களை எப்படி அவனடமிருந்து மறைக்க முடியும்?

தந்தை இரவில் தாமதமாக வரும் வேளைகளில் எல்லாம்...., தாயும் தந்தையும் சண்டை போடுவதைப் பார்த்த அருண், முதலில் குழம்பிப் போனான்.

“என்னங்க...., நீங்க செய்யிறது உங்களுக்கே சரியா இருக்கா..? நான் உங்களுக்கு எதில் குறை வைத்தேன்...? ஏன் இப்படி...?”, தன் கணவன் தினமும் ஒரு பெண்ணோடு கழிப்பதை தாங்க முடியாமல் கேள்வி கேட்டார்.

“என்னடி...., கேள்வியெல்லாம் புதுசா இருக்கு. எனக்கு ஒருத்திமட்டும் பத்தாது. உன்னால் எனக்கு ஈடு கொடுக்க முடியாது. உனக்கு என்ன தேவை...? வசதியான வாழ்க்கை, கிரெடிட் கார்ட்...., கார்...., உன் இஷ்ட்டத்துக்கு நீயும் இருக்கலாம்...., அவ்வளவு ஏன்...., நான் போரடித்தால்...”, அவர் கண்ணடித்து கேவலமாக உரைக்க...., ‘இவருடனா நான் குடும்பம் நடத்தி பிள்ளை பெற்றேன்’ என்று அருவருத்துப் போனார் விமலா.

“சீ...., நான் என்ன நாயா...? அதுக்குதான்...”, அவர் மேலே பேசும் முன்பு...., இறுதியில் வாய்ச் சண்டை முற்றி...., தந்தை தாயை கைநீட்டி அடிப்பதும்...., தாயின் கண்ணீரும், ஒளிந்து நின்று அவர்களைப் பார்த்துகொண்டிருந்த அருணை துடிக்க வைத்தது.

அவன் தொலைவில் இருந்ததால் அவர்களது பேச்சு அவன் காதை

எட்டவில்லை.

“அம்மா…”, என ஓடி வந்து, தாயை கட்டிக்கொண்டான். அவனை கட்டிக்கொண்டு அவரும் கண்ணீர் வடித்தார்.

“ஏம்மா தினமும் சண்டை போட்டுக்கறீங்க…? சண்டை போடாதீங்கம்மா..?”, விஷயம் இன்னதென்று புரியாமல்…., தாயிடம் கெஞ்சினான்.

“அதெல்லாம் ஒண்ணும் இல்லை கண்ணா…., நீ இதையெல்லாம் பெருசா எடுத்துக்காதே…., நீ உன் படிப்பில் கவனம் செலுத்து…”, மகனிடம் தன் வேதனைகளை மறைத்து பேசி அனுப்பினார்.

அவனும் வளர்ந்து பதினைந்து வயதை எட்டும்பொழுது…., அவனுக்கும் சில விஷயங்கள் வேலைக்காரர்களின் மூலம் தெரிய வந்தது. தன் தந்தையின் மறுபக்கம் அவனுக்கு மிகுந்த அதிர்ச்சியையும், அருவருப்பையும் அளித்தது.

அவன் முதல் முறையாக தாயிடம் கேள்வி கேட்டான். “ஏம்மா…., அப்பா நல்லவர் இல்லையாம்மா…? எல்லோரும் என்னென்னவோ பேசுறாங்களேம்மா…?”, தாயிடம் வலியும், அவமானமும் கலந்து கேட்டான்.

அவர் துடித்துப் போனார். மகன்களுக்கு எப்பொழுதும் தந்தைதான் முதல் ஹீரோ…., அப்படியிருக்க…., தன் தந்தையின் வாழ்க்கைமுறை அவனை அருவருக்கச் செய்தது.

“அவரை இனிமேல் மாற்ற முடியாது அருண்….., அம்மாவின் தலையெழுத்து இப்படி ஆகிவிட்டது. இந்த வாழ்க்கை உனக்கு வேண்டாம். அடுத்த வருடம் உன்னை நான் ஹாஸ்ட்டலில் கொண்டுபோய் விட்டு விடுகிறேன்…”, தன் இயலாமையை நினைத்து மறுகினார்.

“முடியாதும்மா…?”, அவன் பிடிவாதமாக மறுத்து…., “நான் அப்பாகிட்டே பேசுறேன்…”, கோபமாக உரைத்தான்.

தாய் எவ்வளவோ தடுத்தும்…., ஒரு வேகத்தில்…., அரும்பு மீசையின் துடிப்பில், அன்று தந்தையிடம் பேசி…., அவனும் அவன் தாயும் அவரது

பெல்ட்டின் அடிக்கு தங்கள் உடம்பை புண்ணாக்கிக்கொண்டதில், வலியை விட, அவமானம்தான் அதிகம் இருந்தது அருணிடம்.

அதிலும், தாயையும் சேர்த்து பலியாடாக மாற்றிய தன் முட்டாள் தனத்தை எண்ணி, தன்னையே வெறுத்தான். கூப்பிட்ட குரலுக்கு வேலையாள்...., சொகுசு வாழ்க்கை...., நோயில் கூட, உயர்தர சிகிச்சை, என நவீனமாக வாழ்ந்து பழகிய அவனது உடல்...., எதிர்பாராத இந்த நிகழ்வில் துவண்டு, துடித்துப் போனது.

பத்துநாள் மருத்துவமனை வாசம் கழிந்து வீட்டுக்கு வந்தபொழுது, வேலைக்காரர்கள் தன்னை ஏளனமாகப் பார்ப்பதுபோல் தோன்றியது. வேதனை அவமானம்....., எல்லாம் தன் தந்தையால் என்பதை நினைக்கும்பொழுதே...., எங்கேயாவது போய் விடுவோமா என்று எண்ணினான்.

ஆனால் எங்கே போவது என்று அவனுக்குத் தெரியவில்லை. நாட்கள் நரகமாகக் கடக்க...., அன்று வீட்டின் முன்னால் யாரோ ஒரு பெண்மணியின் அழுகுரல் கேட்க...., என்னவென்று எட்டிப் பார்த்தான்.

அங்கே..., விமலாவின் காலில் விழுந்து ஒரு பெண்மணி கதறுவதும்...., அதற்கு தன் தாய் ஏதோ சமாதானம் செய்வதையும் பார்த்தவன்...., வேகமாக அறைக்குள் இருந்து வெளியே வந்தான்.

அவன் வந்தபொழுதோ...., கத்தையான பணத்தை அந்த பெண்மணியின் கையில் கொடுத்தவர்...., “நீங்க தைரியமா போங்க...., என்னை மீறி, எதுவும் நடக்காது...”, அவருக்கு தைரியம் சொல்லி அனுப்பினார்.

ஆனாலும் அவர் மனம் முழுவதும்...., எப்படி இதை தடுக்கப் போகிறேன் என்று கிடந்தது அடித்துக் கொண்டது. “யாரும்மா அவங்க...? நீங்க ஏன் அவங்களுக்கு பணம் கொடுத்தீங்க...?”, அருண் கேட்க...., பொங்கிய கண்ணீரை உள்ளுக்குள் இழுத்தவர்....,

“அவங்க பையனுக்கு உடம்பு சரியில்லையாம்...., ஹாஸ்பிட்டலில் கட்ட பணம் இல்லன்னு சொன்னாங்க...., அதான் கொடுத்தேன்...”, அவன் முகம் பார்க்காமல் உரைத்தவர்...., தங்கள் அறைக்குச் சென்று கட்டிலில் அமர்ந்தவர், வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்தார்.

மனமோ...., ‘ஹையோ ஆண்டவா...., இதென்ன சோதனை.

முன்னாடியாவது 'அந்த' மாதிரி பொண்ணுங்களோட தான் கெட்டு சீரழிந்தார் என்றால்...., இப்பொழுது குடும்ப பெண்ணின் மீதே கைவைக்க துணிந்து விட்டாரே. முடியாது...., அப்படி நடக்க நான் விட மாட்டேன்.'

'என் உயிரைக் கொடுத்தாவது இதைத் தடுத்தே தீருவேன்....', எந்த நேரத்தில் இப்படி எண்ணினாரோ..., அந்த எண்ணம் நிறைவேறப் போவது தெரியாமலேயே இதை நினைத்தார்.

தாயின் வெறித்த பார்வையைக் கண்ட அருணுக்கு...., எதுவோ சரியில்லை என்பது புரிந்தது. தாயின் அருகிலேயே அமைதியாக அமர்ந்துகொண்டான்.

***இங்கே...., மனோவின் தாய் அஞ்சலையோ...., அழுதுகொண்டே இருந்தார். அது மனோவுக்குத் தெரியாமல் மறைக்க முயன்றார்.

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வந்தது முதல்...., தாயை கவனித்துக்கொண்டே இருந்தான் மனோ. அவரோ எதையோ மனதுக்குள் போட்டு மறுகுவது புரிந்தது. அது, தன் உடல்நிலையால் வந்த கவலையா...? இல்லையென்றால் பணக் கஷ்டமா என்பது அவனுக்குப் புரியவில்லை.

மனோவின் தாய் அஞ்சலையோ...., தன்னை மீறி வழியும் கண்ணீரை கட்டுப்படுத்த முடியாமல் துவண்டார். "அம்மா...., அதான் எனக்கு இப்போ சரியாயிடுச்சுல்ல....., இன்னும் ஏம்மா அழுதுட்டே இருக்கீங்க...? பணத்துக்கு ரொம்ப கஷ்டப் பட்டீங்களாம்மா...?", அவனது இந்த கேள்வி அவரை உடைத்துப் போட....,

ஒரு பாயை விரித்து அவனை அதில் படுக்க வைத்தவர்...., பட்டென குடிசையில் இருந்து வெளியேறி...., பின்னால் குளிப்பதற்காக இருந்த தடுப்புக்குள் புகுந்தார். வீட்டுக்குள் வாய்விட்டு அழ முடியாமல்...., துவைக்கும் கல்லில் அமர்ந்து குமுறி அழுதார்.

'எப்படி...., எப்படி அவரால் முடிந்தது...? கட்டிய மனைவியை இன்னொருவனுக்கு...', நினைக்கவே தேகம் முழுவதும் பற்றி எரிந்தது.

தன் வறுமையை முதல் முறையாக சபித்தார் அவர். மனோவிற்கு திடீரென உடல்நிலை சரியில்லாமல் போக...., கவர்மெண்ட்

மருத்துவமனையில் சரியான கவனிப்பு இல்லாமல் போகவே...., அவனை தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

ஆனால் கையில் நூறு ரூபாயைத் தவிர வேறு பணம் இல்லாமல் போகவே...., தன் கணவனது கம்பெனிக்கு அவரைத் தேடிச் சென்றார். அங்கே கணவனிடம் பணம் கேட்க...., ஒரு நாள் கூட தன்னிடம் பணம் கேட்காத மனைவி, முதல் முறையாகக் கேட்கவே...., பாக்கெட்டில் இருந்த பணத்தை, எண்ணி கூட பார்க்காமல் எடுத்து கொடுத்தனுப்பினார் சுவாமி.

“ஆத்தா மாரியாத்தா...., இன்னைக்கு என்மேல் கருணை வச்சுட்டம்மா...”, வாய்விட்டு சொன்னவர்...., பணத்தை பெற்றுக்கொண்டு, தன் மகனைக் காண ஓடினார்.

ஆனால் அது சாபமான நாள் என்பது அன்று மாலையே அவருக்குத் தெரிந்து போனது. முதல் முறையாக குடிக்காமல் வீட்டுக்கு வந்த கணவனை வியப்பாக பார்த்தவர்...., “என்னய்யா...., இன்னைக்கு போட்டுக்கலையா...?”, சாதாரணமாக கேட்டவாறு உள்ளே வேலை பார்க்க விரைந்தார்.

ஒரு பீடியை எடுத்து பற்றவைத்த சுவாமியின் கரங்கள் நடுங்கியது. பீடியை பற்றவைக்கவே முடியாமல் அதை தூக்கி வீசியவன்...., குடிசைக்குள் சென்றான். அங்கே ஒரு ஓரமாக மனோ சுருண்டு கிடக்க...., மனோவின் தாயின் புடவை அவனைப் போர்த்தியிருந்தது.

மகன் ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதைப் பார்த்த அவன், மனைவியை நெருங்கி..., அவர் இடுப்பில் கைவைத்து அழுத்த..., அது உணர்த்திய செய்தியில்...., அடுப்பை ஊதிக்கொண்டிருந்தவர் சட்டென திரும்பி, மகனைப் பார்த்தார்.

“என்னய்யா இது..., இந்த நேரத்தில் போய்...., புள்ளைக்கு கஞ்சி காச்சி கொடுத்துட்டு மாத்திரை கொடுக்கணும். அவனுக்கு என்னமோ டைபாய்டு ஜுரம்னு சொன்னாங்க...., அவன் முழிச்சுக்க போறான்...., முதல்ல விலகுங்க...”, நீண்ட மாதங்களுக்குப் பிறகு கணவனின் நெருக்கம் அவரை கிறங்க வைத்தாலும், மகனின் உடல்நிலை கொஞ்சம் தடுக்க, எங்கே அவன் விழித்துக் கொள்வானோ என்று ஒரு பக்கம் தவித்தார்.

அதையெல்லாம் கண்டுகொள்ளாமல்..., “ஏய்...., சும்மா ‘சோ’ காட்டாதே..., இப்போ வர...., அவ்வளவுதான்...”, அதற்குமேல் அவன் அவளிடம் அனுமதி வேண்டவில்லை.

அலேக்காக அவரைத் தூக்கியவன்..., குடிசையின் மறுஓரம் சென்று மனைவியோடு சரிந்தான். கணவனின் வேகம் அவர் தேகத்தை நடுங்க வைக்க...., “என்னய்யா இம்புட்டு அவசரம்...?”, அவர் கேள்விகள் எதுவும் அவனைத் தேக்கவில்லை.

கணவனின் வேகமும், அவசரமும்...., தவிப்பும்...., அவரை திகைக்க வைத்தாலும், நீண்டநாளுக்குப்பின்னான அந்தக் கூடலால், அன்றைய இரவு அவர்களுக்கு ஒரு முழுமையான இரவாக அமைந்தது.

ஆனால் அடுத்தநாள் காலையும் சுவாமி வேலைக்குச் செல்லாமல் தேங்கவே...., அஞ்சலையின் புருவங்கள் மேலேறியது. “என்னய்யா...., வேலைக்கு போல...?”

“உன்னாண்ட ஒரு விஷயம் பேசணும்...”, சுவாமியின் குரலில் அவ்வளவு தயக்கம்.

அதே நேரம் மனோ காய்ச்சல் அதிகரித்து வாந்தி எடுக்க...., அவசரமாக அவனை அள்ளிக்கொண்டு, நேற்று சென்ற மருத்துவமனைக்கு ஓடினார். அங்கே அவனைச் சேர்த்து, ‘சலைன்’ ஏற்றப்பட...., உடனடியாக...., பணமும் கட்டச் சொன்னார்கள்.

அவர் கணவனைப் பார்க்க...., அவன் இரும்பாக இருந்தான். அவன் முகத்தைப் பார்த்த அஞ்சலை அவனை உலுக்க...., “என்னாண்ட பணம் இருக்கு. ஆனா நான் தரணும்ன்னா, நீ நான் சொல்லறதை கேக்கணும்...”, இரக்கமே இல்லாமல் சூழ்நிலையை தனக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்தான்.

“என்னய்யா இப்படி பேசுற...., எதா இருந்தாலும் பொறவு பேசிக்கலாம். முதல்ல பணத்தை கட்டு...”, கெஞ்சினார்.

“அதெல்லாம் செத்து ஒண்ணும் போக மாட்டான். அதான் நான் உன்கிட்ட பேசணும்னு சொல்லுறேனே... முதல்ல வா...”, அஞ்சலையை இழுத்தான்.

“யோவ்...., முதல்ல வாயைக் கழுவுய்யா. உள்ளே கிடக்கது உன்னோட புள்ளை...”, அதிர்ச்சியாக சொன்னார்.

“எனக்கு அதெல்லாம் தெரியாது...., முதல்ல நீ வூட்டுக்கு வா. உன்னாண்ட பேசணும்...”, அஞ்சலை வர மறுக்கவே...., அப்படியென்றால் மகனை தூக்கிக்கொண்டு போய்விடுவேன் என்று சுவாமி மிரட்டவே...., வேறு வழியின்றி, செவிலியிடம் பணத்தோடு வருவதாகச் சொல்லிவிட்டு வெளியேறினார்.

வீட்டுக்கு வந்தவன்...., எந்தவித முன்னறிவிப்பும் இன்றி...., “நமக்கே நமக்குன்னு ஒருலச்ச ரூபாய் கிடைச்சா நீ என்ன செய்வ...?”, இருக்கும் சூழலில் இப்படி ஒரு கேள்வியை எதிர்பாராத அஞ்சலை திகைத்தார்.

“நமக்கே நமக்கா...? என்னய்யா விளையாட்டு இது...? நீ இங்கனையே கிடந்தது புலம்பு...., தண்ணியடிக்காமல் உன் மூளை குழம்பிடுச்சு போல..., முதல்ல போய் தண்ணியடி...., நான் வேற எங்கேயாவது பணம் கிடைக்குதான்னு பாக்குறேன்...”, அவனை தள்ளிவிட்டு செல்லப் போனார்.

“என் முதலாளி தாரேன்னு சொல்லுறார்...”, அவள் கை பிடித்து தடுத்தான்.

“அவர் இன்னாத்துக்கு தரணும்...?”, புரியாமல் கேட்டார்.

“எல்லாம் நீ மனசு வைச்சால் நடக்கும்...”, நைசாக பேசினான்.

“நான் என்ன மனசு வைக்கிறது...?”, சத்தியமாக அஞ்சலைக்கு புரியவில்லை.

“என் முதலாளி...., உன்மேல் ஆசைப் படுறார். ஒரு நாளைக்கு நீ சரின்னு சொன்னால்..., ஒரு லட்சம் லம்ப்பா தாரேன்னு சொல்லுறார்...”, பணத்தாசை அவன் கண்களை மறைக்க...., மானம் காக்க வேண்டிய கணவன், அவள் கற்பை விலை பேசிவிட்டு வந்திருந்தான்.

அஞ்சலைக்கு காதை அடைத்தது. “எ..ன்..ன...ய்யா சொல்லுற...”, மூச்சுவிடவே சிரமமாக உணர்ந்தார். அதிர்ச்சி என்றால் அப்படி ஒரு அதிர்ச்சி.

சில நொடிகள் எதுவும் புரியவில்லை. புரிந்தபொழுது, கண்கள் கண்ணீரை சொரியத் துவங்கின. அவன் கொடுத்த அதிர்ச்சியை தாங்க முடியாமல் மடங்கி அமர்ந்து சத்தம்போட்டு அழுதார்.

“ஐய...., இப்போ என்னத்துக்கு சீன் போடுற...., ஒரே ஒரு நாள் தான...., இருட்டுரூமுக்குள் எனக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம் தெரிஞ்சுடப் போகுது. கண்ணை மூடிக்கிட்டு பொறுத்துகிட்டன்னா...., அதுக்குப் பிறகு கிடைக்கற பணத்தில்...., சொந்தமா ஒரு கடையைப் போட்டுக்கிட்டு உக்காந்தோம்ன்னா...., சுகமா வாழலாம்...”, கேவலமாக பேசினான்.

அவன் பேச்சில் அருவருத்துப் போனார். ‘இவனுக்கா நான் முந்தானை விரித்தேன்...?’ நேற்று அவனோடு கூடிய உடல்...., அருவருப்பில் காந்தியது.

“இதுக்கு நீ என்னை கொன்னு போட்டிருக்கலாம்யா...?”, அழுகையினூடே அவர் சொல்ல....,

“மண்ணு திங்கப்போற உடம்பை யார் தின்னா என்னடி...?”, ஆத்திரம் அவன் கண்ணை மறைத்தது.

“இதுக்குமேல ஒரு வார்த்தை உன்கிட்டே பேச முடியாது. நீ ஒத்த பைசா தர வேண்டாம். நானே என் புள்ளையை பாத்துக்கறேன்...”, அவனைத் தாண்டி வெளியேற முயன்றார்.

“ஓ...., அந்த புள்ளையே இல்லாமல் போய்ட்டா..”, “யோவ்...”, அவன் கேள்வியில் அலறிவிட்டார்.

“இங்கே பாருடி...., உனக்கு ரெண்டுநாள் டைம். அதுக்கு மேல...., நான் ஒரு முடிவுக்கு வரவேண்டி இருக்கும்...”, சொன்னவன் வெளியேறினான்.

செயல்பட மறுத்த மூளையையும், நகர மறுத்த கால்களையும் நகர்த்தி, தான் வேலைசெய்யும் வீட்டுக்குச் சென்று...., முன்பணம் வாங்கி மகனது மருத்துவமனைக்குச் சென்றார்.

பணம் கட்டிவிட்டு அமர்ந்திருக்க..., மகனது உடல்நிலை சீரானாலும்...., அஞ்சலையின் முகம் தெளியவில்லை. மறுநாள் கணவனிடம் மெதுவாக பேச, அவர் பேச்சை கேட்கும் நிதானத்தில் அவன் இருக்கவில்லை.

சோர்ந்து போனார்.

ஆனாலும் விடாமல் முயற்சி செய்ய...., "நாளைக்கு ஒரு நாள்தான் இருக்கு", அவன் பதிலில் சர்வமும் ஒடுங்கியது அஞ்சலைக்கு.

'என்ன செய்ய..? யாரிடம் கேட்க...?', மனம் துடிக்க...., தன் கணவனின் முதலாளியின் மனைவியிடம் பேசினால் என்ன என்று தோன்றியது. ஆனாலும்...., அவர்களும் எப்படிப்பட்டவர்களோ...? தான் சொல்வதை நம்புவார்களா என்று துடித்தாள்.

வேறு வழியில்லாமல் விமலாவை சந்திக்க...., அவர், தான் பார்த்துகொள்வதாக நம்பிக்கை கொடுத்தாலும்...., மனம் கிடந்தது தவித்தது. "அம்மா...", என்ற மனோவின் அழைப்பில் கலைந்தவள், முகத்தை கழுவிக்கொண்டு குடிசைக்குள் விரைந்தார்.

தாயின் அழுது சோர்ந்த முகத்தைப் பார்த்தவன்...., "எனக்குதான் ஒண்ணும் இல்லையேம்மா...., பிறகு ஏன் இப்படி அழுதுட்டே இருக்க...?", மனோவின் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

நள்ளிரவில்...., மகன் தூங்கிவிட்டான் என்ற நினைப்பில்...., கணவனிடம் பேசிப் பார்க்க...., "இங்கே பாருடி...., நாளைக்கு சாயங்காலம் தயாரா இரு. என் முதலாளி ரெண்டுநாள் பொறுத்திருந்ததே அதிகம். அவரெல்லாம் காத்திருக்க வேண்டிய அவசியமே கிடையாது....., ஆமா...., இங்கே பாரு...., பத்தாயிரம் ரூபாயை தூக்கி கொடுத்திருக்கார்.

"இது தனி...., அந்த பணம் தனியாம்...", பணக்கட்டை ஆட்டியவாறு அவன் சொல்ல, அந்த பணத்தைப் பிடுங்கி தூர வீசினார்.

வீசியவர்...., "பொண்டாட்டியை கூட்டிக்கொடுத்து முன்னேறணும்னு நினைக்கிறியே.. நீயெல்லாம் ஒரு ஆம்பளையா...?", அப்படியாவது அவனுக்கு ரோசம் வராதா என்று அஞ்சலை நினைக்க....,

"நான் ஆம்பளையா இல்லையான்னு உனக்கு அம்புட்டு சந்தேகமா...? இப்போ வேண்ணா மறுபடியும் நிரூபிக்கவா...? பெரிய பத்தினி மாதிரி பேசாதே...., என்கூட படுக்கறதை அவர் கூட படுக்கப்போற அவ்வளவுதானே...., இங்கே பார்...., உன்னை எப்படி கூட்டி போகணும்னு எனக்குத் தெரியும்...", சொன்னவன்...., அவர் வீசியெறிந்த

பணக்கட்டை எடுத்து மடியில் சொருகியவாறு திண்ணையிலேயே சுருண்டுவிட்டான்.

மனோவிற்கு சில நிமிடங்கள், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதே புரியவில்லை. இறுதியாக தாய் பேசியதை கேட்டவன்...., அதன் பொருள் புரியவே சற்று நேரமாக...., அதற்கு தந்தையின் பதில் அவனை திகைக்க வைத்தது.

மனோவின் கண்கள் ரத்தமென சிவந்து விட்டது. 'தான் போற்றும்...., பெருமைப்படும்...., கர்வம் கொள்ளும் தாயின் அழகு...., ஆபத்துக்குச் உள்ளாகப்போவதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

தாயின் அழுகை, தந்தையின் பேச்சு அனைத்தையும் கேட்டவன்...., கொந்தளித்துப் போனான். 'அம்மா...., நான் இருக்கற வரைக்கும், உனக்கு ஒண்ணும் ஆக விட மாட்டேம்மா...', மனதுக்குள் சபதம் பூண்டான்.

அவனது எண்ணம் ஈடேறுமா...?

***

# மௌனம் – 27.

மறுநாள் விடியல் அனைவரையும் ஒரு பட்டத்துக்கு உள்ளாக்கி இருந்தது. சிறுவர்கள் இருவரும் என்ன செய்வது..? எப்படிச் செய்வது என குழம்பித் தவிக்க, அஞ்சலையோ..., இந்த இக்கட்டில் இருந்து எப்படி தப்பிக்கப்போகிறோம்...., எனத் தெரியாமல் குழம்பினார்.

விமலாவோ..., அந்த அபலைப் பெண்ணை...., தன் சபலக் கணவனிடம் இருந்து எப்படி காப்பாற்றப் போகிறோம் என தவித்தார். ஆனால், எப்படியும் இன்று தன் கணவனை வீட்டைவிட்டு வெளியே அனுப்புவதில்லை என்று சபதம் பூண்டார்.

அதற்கு முத்தாய்ப்பாக...., கணவனோடு கோயிலுக்குச் செல்லவேண்டும் என்று அவர் முரண்டு பிடிக்க..., அரசுவோ அலட்சியமாக அதை முறியடித்து வெளியேறினார்.

அரசுவின் செய்கை, விமலாவின் அடிவயிற்றில் திகிலை மூட்ட, அன்று மதியம் அவரது அலுவலகத்துக்கே கிளம்பிச் சென்றார். அங்கே வியப்பாக அவளைப் பார்த்த ஊழியர்களின் பார்வையைத் தவிர்த்தவர், கணவனின் அறைக்குள் நுழைந்தார்.

அங்கே அவர் கண்ட காட்சியில் முகம் கசங்கினாலும்...., சட்டென தன்னை மீட்டவர்...., “நீ ஸ்டெனோ தானே..., வந்த வேலை முடிஞ்சுதா...., கிளம்பு...”, அவளைப் பார்த்து உறும...., சட்டென அறையிலிருந்து வெளியேறினாள் ஸ்டெனோ.

“ஏய்...., என்ன ஆபீஸுக்கெல்லாம் புதுசா...., இது வேலை செய்யிற இடம்...., ஒழுங்கு மரியாதையா வீட்டுக்கு கிளம்பு. இல்ல நடக்குறதே வேற...”, அடிக்குரலில் கர்ஜித்தான்அருணின் தந்தை.

அவனது கோபத்தை கண்டுகொள்ளாமல்...., “இன்னைக்கு முழுக்க நான் இங்கேதான் இருப்பேன்...”, சட்டமாக அரசுவின் எதிர் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

“என்ன புதுசா...?”, அவனது கேள்விக்கு, விமலா ஒரு ஆழமான பார்வையையே பதிலாக்கினார்.

“ஏய்...., வாயைத் தொறந்து பேசுடி...”, எகிறினான்.

“ஓ...., அப்போ பேச மாட்ட...., பாப்போம்...., எவ்வளவு நேரம் இப்படியே இருக்கன்னு...”, அவன் வேலையைத் தொடர...., விமலா அசையவே இல்லை.

நேரம் செல்லச் செல்ல...., அரசுவின் கோபம் அதிகரிக்க...., “கிளம்புடி...., வீட்டுக்கு போகலாம்....”, அலுவலகத்தில் எதுவும் ரசாபாசம் ஆவதை விரும்பாமல்...., மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

வெற்றிக்குறியாக விமலா சிரிக்க...., பிபி எகிறியது அரசுவுக்கு.

வீட்டின் வாசலில் இறங்கியவுடனே...., விமலாவின் கையைப் பிடித்து இழுத்து வீட்டுக்குள் வீச...., ஹாலில் இருந்த டீபாயில் மோதி கீழே விழுந்தார். டீபாயின் முனையில் மோதியதால்...., காயமாகி ரத்தம் கசிய, அதை கண்டுகொள்ளும் நிலையில் அவர் இருக்கவில்லை.

“ஏண்டி...., உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால்...., ஆபீசில் வந்து சட்டமா உக்காந்துட்டு என்னை ப்ளாக்மெயில் பண்ணுவ. இவ்வளவு நாள் இல்லாமல் இப்போ மட்டும் என்னடி...? திடீர்ன்னு பிடிவாதம்...? கொன்னு புதைச்சிடுவேன்...”, விரல் நீட்டி உறுமினான்.

அவன் குரலில் தெரிந்த ரௌத்திரத்தில் அவரது முதுகுத்தண்டு சில்லிட்டது. ஆனாலும்...., அஞ்சலையின் அழுத முகம் நினைவிற்கு வர..., தன் பயத்தை மூட்டை கட்டிவிட்டு...., நிமிர்ந்து எழுந்தார்.

“இப்போ மட்டும் என்னன்னா கேட்டீங்க...? இவ்வளவு நாள் இல்லாமல்...., எல்லாத்தையும் நீங்களும் புதுசா தானே செய்யிறீங்க. உங்க கீழே வேலைபார்க்கறவங்களுக்கு நீங்க காவலா இருக்க வேண்டாம். ஆனா...., அதுக்கு பதிலா...., அவங்க வாழ்க்கையில் நெருப்பள்ளி கொட்டாமல் இருக்கலாமே...”, ஆதங்கத்தை கொட்டினார்.

புருவம் தூக்கி எள்ளலாக அவரைப் பார்த்தவன்...., “ஓ...., கதை அப்படிப் போகுதோ..., அப்போ இதுதான் விஷயமா...? என்னடா...., திடீர்ன்னு பூனை புலியாவுதேன்னு பாத்தேன்.

“யார்...., அந்த குடிகாரப் பயலோட பொண்டாட்டி வந்து இங்கே

நீலிக்கண்ணீர் விட்டாளா…? அதுதான் நீ, அவளை காக்கும் கிருஷ்ண பரமாத்மா அவதாரம் எடுக்குறியா…?

“த்ச்சு….., த்ச்சு….., த்ச்சு…, ஆனாலும்…., உன்னால் இதில் எதுவும் செய்ய முடியாது. பேசாமல் ஒதுங்கிடு…., நீ இதில் எல்லாம் தலையிடாதே. எல்லாம் நான் பாத்துக்கறேன். என்கிட்டே இருக்கற பணம் எல்லாத்தையும் சமாளிக்கும்.

“நீ நல்ல புள்ளையா ரூமில் போய் ரெஸ்ட் எடு…., நான் போயிட்டு இப்போ வந்துடுறேன்…”, எள்ளலாக உரைத்தவன்…., வெளியேற முயன்றான்.

அதே நேரம்…., அருண் அவன் அறைக்குள் இருந்து வெளியே வர முடியாமல் திண்டாடினான். அவன் அறை வெளியே பூட்டப்பட்டிருக்க…., “அம்மா…., இந்த கதவைத் திறந்து விடுங்கம்மா…., யாராவது இருக்கீங்களா வாங்க….”, கத்திக் கொண்டிருந்தான்.

அரசு வெளியேற முயலவே…., ஓடிச் சென்று அவன் பாதையை மறித்த விமலா, “இங்கே பாருங்க…., இவ்வளவுநாள் நீங்க செய்ததைக் கூட ஓரளவுக்கு என்னால் பொறுத்துக்க முடிஞ்சது. ஆனால்…., இப்போ நீங்க செய்யப் போறது…., வேண்டாம்…., இதை நீங்க செய்யக் கூடாது. உங்களை நான் வெளியே போக விட மாட்டேன்…”, கைநீட்டி அவன் பாதையைத் தடுத்தார்.

“ஏய்…., நான் கொலை வெறியில் இருக்கேன். என்னை சீண்டாதே. என் வழில என்னைப் போகவிடு….”, கண்களை உருட்டி அவரை முறைத்தான்.

“சொன்னாக் கேளுங்க வேண்டாம்…”, அவன் கோபத்தைக் கண்டுகொள்ளாமல், எப்படியாவது அவனைத் தடுத்துவிடவேண்டும் என்ற வேகத்தில் செயல்பட்டார்.

போராடி அவன் வெளியே செல்ல முயல…., அவன் காலைக் கட்டிக்கொண்டு தடுத்தார். அவனது அடியோ…, மிதியோ விமலாவை அசைக்கவே இல்லை. இறுதியாக போராடித் தளர்ந்தவன்….,

“அப்போ…., நீ வழியை விட மாட்ட…”, “விட மாட்டேன்…”, பிடிவாதமாக உரைத்தார் விமலா.

“ஓ...., அதையும் பாக்கலாம்...”, சொன்னவன் விடுவிடுவென்று அறைக்குள் சென்று, தன் பாதுகாப்புக்காக வைத்திருக்கும் கைத்துப்பாக்கியை எடுத்துகொண்டு வெளியே வந்தான்.

எப்படியோ அவனை போகவிடாமல் தடுத்துவிட்டோம்...., என்று நிம்மதி பெருமூச்சு விட்ட விமலா நிமிரும் வேளையில்...., கையில் துப்பாக்கியோடு வெளியே வந்த அவனைக் கண்டு திகைத்தார்.

அதே நேரம் அருணோ...., “அம்மா...., வேண்டாம்மா...., எதுவும் சொல்லாதீங்க...., அவரை விட்டுடுங்கம்மா...? தடுக்காதீங்கம்மா...?”, கெஞ்சினான்.

மகனை வேதனையாகப் பார்த்தவர்...., கணவனிடம் திரும்பினார். அரசோ...., கொலைவெறியோடு விமலாவை நெருங்கினான்.

***இங்கே மனோவின் வீட்டிலோ...., சுவாமி, மனோவின் உயிரை பணயமாக வைத்து மனைவியிடம் விளையாடினான். மனோ அவனை எதிர்க்க...., இரண்டே அடியில் அவனை வீழ்த்தி தள்ளினான் சுவாமி.

மகனிடம் ஓடிச் செல்ல முயன்ற மனைவியைத் தடுத்தவன்..., “இப்போவாச்சும் அவன் மயங்கித்தான் கிடக்கான்...., இன்னும் கொஞ்ச நேரம் போச்சு...., அவனை கொன்னே புடுவேன்...”, சுவாமி மிரட்ட, அப்படியே எங்க ரெண்டுபேரையும் கொன்னு போடு....”, ஆத்திரத்தில் வெடித்தார் அஞ்சலை.

“என்னடி...., மயிலே மயிலே இறகு போடுன்னு கெஞ்சினால் வேலைக்கு ஆகாது. உன்னையெல்லாம் எப்படி சரி பண்ணணுமோ...., அப்படிச் செய்யணும். சொன்னவன்...., அவரே எதிர்பாராத நேரம்...., அஞ்சலையின் கன்னத்தில் மாற்றி மாற்றி அறைய...., அதன் வீச்சு தாங்காமல் மயங்கிச் சரிந்தார்.

மயங்கிச் சரிந்த அவரை...., தங்களது ரிக்ஷாவில் தூக்கிப் போட்டு...., அரசுவின் கெஸ்ட்ஹவுசுக்குச் சென்றான். அங்கே சென்று...., அஞ்சலையின் கையையும் வாயையும் கட்டிப் போட்டுவிட்டு...., வாசலிலேயே முதலாளியின் வரவுக்காக காத்திருந்தான்.

நேரம் கடந்துகொண்டிருக்க...., குடிசையில் மயங்கிய மனோ, மயக்கம் தெளிந்து எழுந்தான்...., எழுந்தவன்...., தாயைக் காணாமல் திகைத்தான்.

வீட்டுக்கு வெளியே பார்க்க...., இரவாகி விட்டதன் அடையாளமாக...., சேரியே இருளில் மூழ்கி இருந்தது.

“ஹையோ...., அம்மாவுக்கு என்ன ஆயிற்றோ...’, அவன் மனம் அடித்துக்கொள்ள...., ஏற்கனவே தன் அப்பாவின், முதலாளியின் கெஸ்ட்ஹவுஸ் பற்றித் தெரிந்தபடியால்...., அங்கு விரைந்தான்.

“அம்மா...., அம்மா...., என்று அவன் மனம் அடித்துக் கொண்டது. அவன் கெஸ்ட்ஹவுசுக்குள் நுழையும் நேரம்..., அருணும் தன் மொபெட்டில் அங்கே நுழைந்தான். அருணின் சட்டை முழுவதும் ரத்தத்தில் தோய்ந்து இருந்தது.

இருவரையும் வரவேற்றது அஞ்சலையின் கூக்குரலே. “அம்மா...”, மனோ கதற...., “அப்பா....”, அருண் அலறினான்.

வாசலில் இருந்த சுவாமி எழுந்து ஓடி வந்தவன்...., “நீ இங்கே என்னடா செய்யிற...., ஒழுங்கு மரியாதையா வீட்டுக்குப் போ...., நான் அம்மாவோட சீக்கிரம் வாரேன்...”, அவனை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றான்.

மனோவோ அவன் சொல்வதை கண்டுகொள்ளாமல்...., தாயின் கூக்குரல் கேட்ட திசைக்கு போக முயன்றான்.

“டேய்...., நான் சொல்லிக்கிட்டே இருக்கேன். கேக்காமல்...”, அவன் கன்னத்தில் அறைந்து கீழே தள்ளிவிட்டான். ஆனால் அருணோ...., இவர்களைக் கடந்து...., கையில் துப்பாக்கியோடு அங்கே விரைந்தான்.

ஆனால் வீட்டில் அனைத்து கதவுகளும் மூடப்பட்டிருக்க...., கீழே இருக்கும் ஒரு அறையில் இருந்து, அஞ்சலையின் கூக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது. அருணிற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ஏற்கனவே அது ஒதுக்குபுறமான இடம் என்பதால்...., ஆள் நடமாட்டம் இருக்கவில்லை.

“அப்பா...., விட்டுடுப்பா...., அவங்களை எதுவும் செய்யாதப்பா... அப்பா...”, ஜன்னலை அடித்தான். உள்ளே பெண்மோகம் கொண்ட வெறியில் இருந்ததால்...., அருணின் கூக்குரல் அரசுவை எட்டவே இல்லை.

மனோ கீழே விழுந்தவன்...., எழுந்து உள்ளே செல்ல முயல...., அவன் தந்தை மீண்டும் அவனை அடித்து தள்ளி விட்டான். மனோ இப்பொழுது சென்று விழுந்த இடத்தில்...., குழி தோண்டும் கடப்பாரைக் கிடப்பதைப் பார்த்தவன்...., மேற்கொண்டு எதையும் யோசிக்கவில்லை.

தாயின் கூக்குரல் ஒரு பக்கம்...., தந்தையில் இழி செயல் மறுபக்கம்...., இயலாமை ஒரு பக்கம்...., அவமானம் ஒரு பக்கம்...., இதற்குமேல் யோசிக்க எதுவும் இல்லை, தாயை காப்பாற்றியே ஆகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தவன்...., கையில் கடப்பாரையை தூக்கியவன்...., தனக்கு முதுகு காட்டி சென்றுகொண்டிருந்த தந்தையின் முதுகில் விசையோடு அதை இறக்கினான்.

சரியாக...., அது அவனது சிறுநீரகம் கணையம் முதலியவற்றை குறிபார்த்து தாக்க...., அடுத்த சில நிமிடங்களில் துடிதுடித்து இறந்தான் சுவாமி. தந்தை இறக்கும்வரை அவனையே பார்த்துக் கொண்டிருந்தவன்...., அதன் பிறகுதான், தாயின் குரலில் கலைந்தவனாக...., முகத்தில் தெறித்திருந்த குருதியை துடைக்கக் கூடத் தோன்றாமல்...., தாயைத் தேடி ஓடினான்.

அங்கே அருண், ஒரு ஜன்னலை தட்டும் சத்தம் கேட்கவே...., அங்கே சென்ற மனோ...., தானும் சேர்ந்து திறக்க முயற்சிக்க, முடியாமல் போகவே...., சுற்றிலும் தேடி, ஒரு பூந்தொட்டியை எடுத்து ஜன்னலை நோக்கி வீச...., ஜன்னல் சில்லு சில்லாக நொறுங்கியது.

உள்ளே அவர்கள் கண்ட காட்சியில்...., இரு சிறுவர்களும் அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போனார்கள். “அம்மா...”, மனோ...., அதிர்ந்துபோய் தாயை அழைத்து துடிக்க...., அருணோ..., செயலற்று நின்றுகொண்டிருந்தான்.

‘அவங்களை எப்படியாவது காப்பாத்து அருண்...’, தனது தாயின் இறுதி வார்த்தை காதில் ஒலிக்க...., கையில் இருந்த துப்பாக்கியால் தந்தையின் முதுகை குறி வைத்தான். பதட்டத்தில் எங்கே சுட்டான்...., எத்தனை தோட்டா என்பது எதுவும் அவனுக்குத் தெரியாது.

கையில் இருந்த துப்பாக்கியின் தோட்டா காலியாகும் வரை சுட்டவன்...., “ஆ....”, என அலறியவாறு துப்பாக்கியையும் உள்ளே வீசியடித்தான்.

தந்தையின் அலறல் காதில் ஒலித்ததும்தான்...., நிம்மதியாக உணர்ந்தான். ஒரு நிமிடம் உள்ளே எந்த அசைவும் இருக்கவில்லை.

“அம்மா...., அம்மா...”, மனோ குரல் கொடுக்க...., அஞ்சலை எழுந்து செல்வது நிழலாக அவனுக்குத் தெரிந்தது. அவனது கூக்குரல் அஞ்சலையை எட்டியதாகவே தெரியவில்லை.

“அம்மா...., கதவைத் திறங்கம்மா...., அம்மா...., இங்கே பாருங்கம்மா...?”, மனோவின் எந்த குரலுக்கும் பதில் இருக்கவில்லை.

“அம்மா...., எங்கம்மா போறீங்க...., அம்மா...., ஐயோ...., யாராவது வாங்களேன்...., அம்மா...., கதவைத் திறங்கம்மா....”, கதவையும் ஜன்னலையும் தட்டித் தட்டி ஓய்ந்து போனான்.

வாசலிலேயே தலை வைத்தவன்...., கதறித் தீர்த்தான். முன் கதவின் அருகில் இருந்த ஜன்னல் அவன் கண்களுக்குத் தெரிய...., அதையும் பூந்தொட்டியைப் வீசிப்போட்டு உடைத்தவன்...., ஜன்னல் வழியாகப் பார்க்க...., தன் சேலை முந்தானையால்...., சாப்பாட்டு மேஜைமேல் இருந்த ஃபேனில் சுருக்கு போட்டவர்...., தன் தலையை அதற்கு கொடுத்தார்.

“ஐயோ...., அம்மா...., வேண்டாம்மா...., வந்துடுங்கம்மா...., அம்மா...., நான் இருக்கேம்மா...., அம்மா..., எனக்காக வந்துடுங்கம்மா...., அம்மா...”, தாயின் செய்கையைத் தடுக்க முடியாமல் மனோஜ் துடிக்க...., சத்தம் கேட்டு எழுந்து வந்த அருண்...., மனோவை தாங்கிக் கொண்டான்.

இறுதியாக அஞ்சலை பார்த்த அந்த பார்வை...., துடிக்கும் அவர் உடல்...., தன் கண் முன்பே தாயின் உயிர் போவதை பார்த்த மனோ...., நொறுங்கிப் போனான்.

யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்றே தெரியவில்லை. தன் தாயையும் அருண் கொஞ்ச நேரம் முன்புதான் பறிகொடுத்திருந்தான். அந்த வேதனை அடங்கும் முன்பே...., இப்படி ஒரு துயரம் நடந்தேற...., கண்முன்னால் நடந்த எதையும், சிறுவர்களான அவர்களால் தடுக்க முடியவில்லை.

“அம்மா....”, மனோ கதற...., அருணாலும் சேர்ந்து அழத்தான் முடிந்தது.

அடுத்த அரைமணி நேரத்தில் போலீஸ் வாகனம் அங்கே வர...., அருணின் வீட்டு காவல்காரன் வண்டியில் இருந்து குதித்து இறங்கினான்.

மனோவும் அருணும் சேர்ந்து அமர்ந்திருக்க, போலீஸ் அவர்களை நெருங்கியது. இருவரும் சிறுவர்கள் என்பதால் காவலர்களாலும் கடுமையாக நடந்துகொள்ள முடியவில்லை.

ஏற்கனவே விமலாவின் உடல் பிரேதபரிசோதனைக்கு அனுப்பப் பட்டிருக்க, கதவை உடைத்து, அஞ்சலை, அரசுவின் பிணங்களும் கைப்பற்றப் பட்டன. சுவாமியின் உடல் கடப்பாரையோடு ஏற்றப்பட...., சிறுவர்கள் இருவரும் எந்த மாற்றமும் இல்லாமல் ஜீப்பில் அமர்ந்து இருந்தார்கள்.

வீட்டுக்குள் இருந்து துப்பாக்கியும் கைப்பற்றப்பட, காவலர்களின் புருவம் மேலேறியது. “என்ன சின்ன தம்பி இது...? என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாது...., நான் வந்திருப்பேனே...”, காவலாளி தன் விசுவாசத்தை காட்ட, அவனுக்கு பதில் கொடுக்காமல் அமர்ந்திருந்தான் அருண்.

எதையும் யோசித்து செய்யும் மனநிலையில் அருண் அப்பொழுது இருக்கவில்லை. தனது வீட்டில் நடந்தவை அருணின் கண்முன்னால் வந்தன. அறைக்குள் இருந்து துப்பாக்கியோடு வெளிப்பட்ட அரசு, ரௌத்திரமாக விமலாவின் முன்னால் நிற்க, அதைக் கண்டு கொஞ்சமும் பயப்படாமல் பாதையை மறித்தாள் அவர்.

“விலகுடி...., இல்ல...., இதுக்கு நீ பலியாக வேண்டி இருக்கும்...”, கண்கள் சிவக்க அரசு கர்ஜிக்க,

“நான் செத்தால் கூட பரவாயில்லை. ஆனா உங்களை இங்கே இருந்து ஒரு அடி கூட நகர விட மாட்டேன்...”, வாசல் கதவை தாழிட்டார்.

“உனக்கு அவ்வளவு திமிராடி...., எனக்கு எப்படிப் போகணும்னு தெரியும்டி..”, பெண்வெறி அவனை மூர்க்கனாக்கி இருந்தது.

ஒற்றைக் கையால் விமலாவை விலக்க...., அவர் நகர மறுத்து போராட...., கோபமும், ஆத்திரமும் கண்ணை மறிக்க...., துப்பாக்கியால் விமலாவைச் சுட்டான்.

இதை எதிர்பாராத விமலா “அம்மா...”, என துடிக்க....., அதைவிட அதிகமாக அருண் துடித்தான்.

துப்பாக்கி சத்தம் கேட்டு காவலாளி ஓடி வர...., அப்பொழுது வீட்டைத் திறந்துகொண்டு...., துப்பாக்கியை அங்கேயே வீசிவிட்டு அரசு வெளியேறினான்.

“அண்ணே...., கதவைத் திறந்து விடுங்க...”, அருணின் குரலுக்கு செவி சாய்ப்பதா...., முதலாளியம்மாவைப் பார்ப்பதா என்று அவன் தடுமாற, விமலா மகனை நோக்கி கை காட்ட...., ஓடிபோய் கதவை திறந்துவிட்டான்.

“அம்மா...., நான்தான் சொன்னேனேம்மா...., ஏம்மா இப்படி செஞ்சீங்க...”, அருண் கதற....,

அதைக் கண்டுகொள்ளாமல்...., “அவங்களை எப்படியாவது காப்பாத்து அருண்...”, இறுதி வார்த்தையாக இறைஞ்சினார்.

“யாரைம்மா...., என்னம்மா சொல்லுறீங்க...?”, கதறியவாறு கேட்டான்.

“கெஸ்ட்ஹவுஸுக்குப் போ...., உடனே போ...., என்னைப் பற்றி கவலைப் படாதே...”, அவனைப் பிடித்து தள்ளி விட்டார்.

“அம்மா...”, அவன் இன்னும் தயங்க...., “உன் அம்மாவோட கடைசி ஆசை அருண்...., செய்...”, கட்டளையிடவே...., கண்ணீர் வழியும் கண்களோடு...., வெளியேறியவன்...., வழியில் கிடந்த துப்பாக்கியையும் கையில் எடுத்துக் கொண்டான்.

அவன் மொபெட்டை கிளப்பும் வேளை...., “ஐயோ அம்மா...”, என்ற காவலாளியின் கதறல்...., தாய் இந்த உலகத்தை விட்டு போய்விட்டதை அவனுக்கு உணர்த்த, அழக்கூட நேரமில்லாமல், கெஸ்ட்ஹவுசுக்கு விரைந்தான்.

ஆனால்...., தான் என்ன செய்ய வந்தோம்...? என்ன செய்தோம்...? தாயின் ஆசையை நிறைவேற்றினோமா...? எதுவும் அவனுக்குப் புரியவில்லை.

அருகில் அமர்ந்திருந்த மனோவைப் பார்க்க, அவன் இறுகிப்போய்

அமர்ந்திருந்தான். ஒரே நாளில் அவர்களது வாழ்க்கை இருண்டு போனது அவர்களுக்கு. எதையும் யோசிக்க முடியாமல், யோசிக்கத் தோன்றாமல்...., அமர்ந்திருந்தார்கள்.

ஒரே நாளில்..., இந்த உலகத்தில் தங்களுக்கென்று யாருமில்லாமல்...., அனாதையாகிப்போன விந்தை. அதிலும் கொலைகாரர்களாக மாறிப்போன கொடூரம்...., அறியா வயதில்...., தங்களை மீறி எதையோ செய்யப்போய்...., அது எங்கேயோ முடிந்த அவலம்....,

பெற்ற தந்தையரின் ஒழுக்கமின்மையும், பணத்தாசையும்...., சிறுவர்களான அவர்கள் வாழ்வை பலி வாங்கிவிட்டது. இனி என்ன நடக்கும்...? சுற்றிலும் நிற்கும் காக்கி உடை மனிதர்கள். கண்களில் இறுக்கத்தையும், முகத்தில் கடுமையையும் மட்டுமே காட்டும் இவர்களுக்கு மத்தியில், வாழ்க்கை எப்படி இருக்கும்...?

சூனியத்தை வெறித்தனர் மனோவும் அருணும்.

***

# மௌனம் – 28.

ஆயிற்று....., இன்றோடு ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் வாழ்க்கை துவங்கி பத்து நாட்கள் ஓடிவிட்டது. பச்சை வண்ண உடை...., அலுமினிய தட்டு, அலுமினிய டம்பளர்...., கிழிந்த பாய்...., கொசுக்கடியுடனான தூக்கம்...., வாயில் வைக்க முடியாத உணவு...., அருண் நரகத்தை அனுபவித்தான்.

ருசிக்கு உண்டு பழகியவன் அவன். பசி என்றால் என்னவென்றே தெரியாது. இட்லி பிடிக்கவில்லையா...., உடனே தோசை...., அதுவும் பிடிக்கவில்லையா...., உடனே பொங்கல்...., ஊத்தப்பம்...., சப்பாத்தி...., சாம்பார், சட்டினி...., பொடி...., துவையல்...., என முழ நீள மெனுவில் புழங்கியவன் அவன்.

அப்படியிருக்க...., புழுங்கிய வாடை எடுக்கும் புழுத்த அரிசி சாதம். தண்ணீராக சாம்பார்...., புழு நெளியும் தண்ணீர்...., எதையுமே அவனால் கண்கொண்டு பார்க்கக் கூட முடியவில்லை.

சாப்பாட்டை வாங்கிக் கொண்டு...., கண்ணீர் வழிய அருண் நிற்கும் கோலம்...., மனோஜை கலங்கடிக்கும். மேல்தட்டு வர்க்கத்தின் நிறம், பொலிவோடு இருக்கும் அருண்...., இப்படி ஒரு இடத்தில் ஒட்டாமல் தனித்துத் தெரிவதைக் கண்டு பரிதாபப்பட மட்டுமே அவனால் முடிந்தது.

மனோ அனைத்துக்கும் தன்னை பழக்கிக் கொண்டான். கொசுக்கடியும், கட்டாந்தரை உறக்கமும்...., பசிக்கு ஏதோ ஒரு உணவும், அவனுக்குப் பரவாயில்லை.

அருணுக்கு சாப்பாடு ஒத்துக் கொள்ளாமல்...., வயிற்று உபாதையால் அவதிப்படும் பொழுது, ஜெயிலில் இருக்கும் பொது கழிப்பறையைக் கூட உபயோகிக்க முடியாமல்...., அவன் ஓலமிட்டு கதறும்பொழுது...., மனோ கண் கலங்கிப் போவான்.

அருணுக்காக...., கழிப்பறையை சுத்தம் செய்து கொடுக்க கூட மனோ முன்வந்தபொழுது...., அருண் கண்கலங்கிப் போனான்.

“எனக்கு வேண்டி நீ இதைச் செய்ய நினைக்கும்பொழுது...., உனக்காக

நான் இதை பொறுத்துப் போக மாட்டேனா...? வேண்டாம்...., நான் சமாளித்துக் கொள்கிறேன்...", என்று முதல் முறையாக இருக்கும் சூழலை அனுசரிக்க முயன்றான்.

ஆனால் மனோ இதைச் செய்வதற்கும் ஒரு காரணம் இருந்தது. இருவரும் ஒரே குற்றத்துக்காக ஜெயிலுக்கு வந்தவர்கள் தான். ஆனால் இருவரின் செல்வ நிலையிலும்...., மலைக்கும் மடுவிற்கும் இருக்கும் ஏற்றத்தாழ்வு இருந்தது.

அருணின் அப்பா...., அரசுவின் கம்பெனி வக்கீல் அவனுக்காக வாதாட முற்பட...., அதை வன்மையாக மறுத்த அருண்...., அவரைக் காணவும் மறுத்தான்.

"அவனோட பணத்தில் எனக்கு எதுவும் செய்ய வேண்டாம்...", பிடிவாதமாக மறுத்துவிட்டான்.

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து...., முதல்கட்ட விசாரணை..., குற்றம் நிரூபிக்கப்படுதல்...., அவர்கள் வயதைக் கருதி...., சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பியது வரை...., அந்த வக்கீலின் உதவியை அவன் நாடவில்லை.

ஆனால்...., மனோவிற்காக வாதாடும்படி கேட்டுக் கொண்டான். ஆனால் மனோதான் அதை தடுத்துவிட்டான். அதற்குக் காரணம்...., வெளியே தனக்கென்று யாரும் இல்லை என்பதும்...., இங்கிருந்து வெளியே சென்றால்...., தான் அடுத்தவேளை சாப்பாட்டுக்கே என்ன செய்யப் போகிறோம் என்பதும் அவனுக்குத் தெரியாது.

எனவேதான் மனோ மறுத்தான். ஆனால்...., தான் ஜெயிலில் கஷ்டப்பட்டாலும், தான் வெளியே போக உதவிசெய்ய முன்வந்த அருணின்மேல் தன்னை அறியாமலே பாசம் கொண்டான் மனோ.

இவ்வாறாக ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்தத் துவங்கினர். இருவரும் ஒரே செல் என்பதால்...., ஒருவருக்கு ஒருவர் அனுசரணையாக இருக்க முயன்றார்கள். ஆம்...., முயல மட்டுமே முடிந்தது. தங்கள் துன்பத்தை தாங்கள் தானே அனுபவிக்க முடியும். அதை எப்படி மற்றவருக்கு கொடுக்கவோ...., வாங்கவோ முடியும்...?

ஆனாலும்...., இரவு வேளைகளில் உடல் நலக்குறைவால்...., அருணுக்கு

இயற்கையின் உபாதை வரும்பொழுது, அவன் தவிக்கும் தவிப்பு...., அதற்கு மனோ உதவிசெய்யும் வேளையில்....., இயலாமையுடன் அதை ஏற்கும் நிலை...., அருண் கூனிக் குறுகிப் போவான்.

அதை உணர்ந்த மனோவும்....., சுவரைப் பார்த்து படுப்பவன்...., உறக்கத்தில் கூட அவன் பக்கம் திரும்ப மாட்டான்.

அருண் உடல் உபாதையாலும்...., உணவு உண்ணாமல் துரும்பாக இளைக்க...., மனோவுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. யாரிடம் கேட்பது என்பதோ...., இதற்கு என்ன மாற்றுவழி என்பதும் அவனுக்குப் புரியவில்லை.

அன்று காவலர்கள் அனைவரும் மிகுந்த பொறுப்பாக வேலை செய்வதாக அவனுக்குத் தோன்றியது. அங்கிருக்கும் புல்லை வெட்டுவது...., ஊதுவத்தி தயாரிப்பது...., செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது....., மர வேலைகள்...., சமையலுக்கு உதவியாக செல்வது..., என பொறுப்புகள் அவர்களுக்கு உண்டு.

அப்படியான வேலையில்...., மனோ எப்பொழுதும் சமையல் வேலைக்கு உதவி செய்வதையே தேர்ந்தெடுப்பான். அங்கிருந்து அருணுக்காக...., ஒரு தக்காளி, வெங்காயம்....., கேரட்...., பீட்ரூட் என கொண்டு வந்து கொடுப்பான்.

அதை மிகுந்த நன்றியோடு பெற்றுக்கொள்வான் அருண். சொல்லப் போனால்...., அன்றைய நாள் முழுவதுக்குமான அவனது உணவு அதுவாகத்தான் இருக்கும். சிறுவர் சீர்திருத்தப் பள்ளி...., சாதாரண ஜெயில் போன்று அல்லாமல்....., கட்டுப்பாடுகளும்...., சட்டதிட்டங்களும் மிகவும் கடுமையாக இருக்கும்.

தப்பித்தவறி மனோ வெளியே கொண்டுவரும் காய்களைப் பார்த்தால்...., அவனுக்குத் தண்டனை கடுமையானதாக இருக்கும். ஆனால் அதைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படாமல்...., அருணுக்காக அந்த ரிஸ்க்கை தினமும் செய்தான் மனோ.

மனோஜின் இந்த செய்கை...., அருணை வெகுவாக கவர்ந்தது. அவனை பாதித்தது. உடன்பிறந்தவர்களோடு பிறக்காத இருவருக்குமே...., ஒரு உடன்பிறவா சகோதரன் கிடைத்த உணர்வை இருவருக்கும் கொடுத்தது.

அதிலும் மனோஜின் அந்த பக்குவம்...., மற்றவரை கவனிக்கும் பாங்கு...., தனக்காக செய்யாமல் பிறருக்காக அவன் செய்யும் தியாகங்கள் அனைத்தையும் கண்டு வியந்தான்.

அன்று, ஜெயிலர் அனைவரையும் காண வருவதாகச் சொல்லவே...., அனைவரும் கொஞ்சம் பதட்டமாகத்தான் காத்திருந்தார்கள். மனோவும், அருணும், அவரை தாங்கள் இந்த சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு வந்த அன்று நேரில் சந்தித்து இருக்கிறார்கள்.

அன்று அவர் பார்த்த பார்வையை நினைத்தால்...., இன்றும் அவர்கள் முதுகுத்தண்டு சில்லிட்டு போகும்.

‘ஈஸ்வரன்...’, நடந்துவரும் தோரணையே ஒரு சிங்கத்தின் கம்பீரத்தைக் காட்டும். முறுக்கு மீசையும்...., தீர்க்கமான பார்வையும்...., எதிராளியை திணறடித்துவிடும். கண்டிப்பு...., கண்டிப்பு...., கண்டிப்பை மட்டுமே அவரிடம் எதிர்பார்க்க முடியும்.

அங்கிருக்கும் சிறுவர்கள் யாராவது ஏதாவது தவறு செய்தார்கள் என்று தெரிந்தால்...., பிரம்பால் விளாசித் தள்ளிவிடுவார். அத்தோடு...., பட்டினி...., அடி...., தனியறை வாசம்...., என செய்பவர்...., அதே பையன் அடுத்தமுறை தவறு செய்யவே யோசிக்கும் நிலைக்கு கொண்டு சென்றுவிடுவார்.

எனவே இன்று அவர் வரப்போகிறார் என்பதை அறிந்த உடனேயே...., அனைவருமே கொஞ்சம் பீதியாகவே இருந்தார்கள்.

ஆனால்...., இவர்களது போதாத காலமா என்னவென்று தெரியவில்லை...., அன்று காலையில் இவர்கள் செல்லுக்குப் புதிதாக வந்த ஒரு பையனை...., நாலு பையன்கள் சேர்ந்து கேலி செய்ய..., முதலில் கண்டுகொள்ளாமல் சென்றான் மனோஜ்.

ஆனால்...., அவர்கள் குளிக்கும் வேளையில்...., புதிதாக வந்த பையனின் இடுப்பில் கட்டியிருந்த டவலை அவர்கள் பிடுங்க...., அதைப் பார்த்த அந்த புதியவனோ அவர்களோடு சண்டைக்குப் போகாமல்....,

“ஏன் இப்படி செய்யிறீங்க...? உங்களுக்கு அந்த டவல் வேணும்ன்னா நான் குளிச்சுட்டு தாரேன். இப்போ தாங்க...”, ஒரு கையால் தன் நிர்வாணத்தை மறைத்தவாறு அவர்களிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்.

ஆனால் அந்த சிறுவர்களோ...., “எங்கே, என்னை ஐயான்னு கூப்பிடு டவலைத் தாரேன்...., “எங்கே, இவன் காலில் விழு...., உடனே தாரேன்...., “இவனைக் குளிக்க வை...., தாரேன்...”, என போக்கு காட்ட....,

அவர்கள் சொன்ன அனைத்தையுமே மறுக்காமல் செய்தான் அந்த புதியவன். ஆனாலும் கூட அவர்கள் டவலைக் கொடுக்காமல்...., அங்கிருந்த சாக்கடைக்குள் அதை வீச...., ஓடிச் சென்று அதை பிடித்தான் மனோஜ்.

அத்தோடு...., அவர்களின் அராஜகம் பிடிக்காமல்...., அப்பாவியான புதியவனை அலைக்கழிக்க....., அதைப் பொறுக்க முடியாத மனோ...., அந்த பையன்களோடு சண்டைக்குப் போனான்.

வாய்ப் பேச்சு கைகலப்பில் முடிய...., அப்பொழுது அங்கே வந்த ஈஸ்வரன்...., அனைவரையும் ஸ்பெஷல் செல்லுக்கு கொண்டு போகச் சொன்னார்.

வம்பு செய்த சிறுவர்கள் நால்வரும் சேர்ந்து மனோவின்மேல் குற்றம் சுமத்த....., மனோ தலை கவிழ்ந்து நின்றிருந்தான்.

“என்னடா...., நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன்...., எனக்கு பிரச்சனை செய்பவர்களைப் பார்த்தால் சுத்தமா பிடிக்காதுன்னு. அப்படியிருந்தும் பிரச்சனை செய்தால்...., உனக்கு எவ்வளவு தைரியம்...?”, கேட்டவர் மனோவின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட....,

இதை எதிர்பாராத மனோ, தூரப்போய் விழுந்து...., கன்னத்தில் கைவைத்து துடித்துப் போனான். ஈஷ்வரின் முரட்டு அடியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவன் அடி வாங்கவே...., அருணும், புதியவனும் அவன் அருகில் வர முயல...., வேகமாக கண்களால் அவர்களைத் தடுத்தான் மனோ.

அவன் கண்ஜாடையைப் புரிந்துகொண்ட அருண் தேங்கிவிட...., அந்த புதியவனோ...., ஓடிபோய் மனோவைத் தூக்கினான்.

“என்னடா..., அதுக்குள்ளே கூட்டணி சேக்குறியா...?”, அதற்கும் மனோவை அடிக்க...., துவண்டு போனான்.

“இவன் தப்பே செய்யலை...., எல்லாம் இவங்கதான் செஞ்சாங்க. நீங்க ஏன் இவனை அடிக்கறீங்க..?”, புதியவன் வினவ...., ஈஸ்வர் புருவம் தூக்கி அவனை உறுத்து விழித்தார்.

“என்ன...., 89 ராஜேஷ்....., இன்னைக்குதான் வந்த...., உடம்பு ரொம்ப தெம்பா இருக்கு போல...., நாலுநாள் ஆச்சுன்னா இங்கே இருக்கற சாப்பாட்டை சாப்பிட்டு அடங்கிடுவ... சரி என்னவோ சொன்னியே என்ன அது...?”, அவனைத் துருவ....,

“இல்ல ஐயா...., எதுவும் இல்லை....., இவன் ஏதோ தெரியாமல் பேசுறான்...”, ராஜுவை அடக்கியவாறே...., ஈஸ்வரிடம் சொன்னான் மனோ.

“நீ சும்மா இருடா...., நீ சொல்லு ராஜேஷ்...”, மனோ ஜாடையாக அவனை ‘எதுவும் சொல்லாதே’ என அடக்க முயல...., அவன் ஜாடைகளை புரிந்துகொள்ளும் நிலையில் ராஜு இருக்கவில்லை.

நடந்தவற்றை ஒன்றுவிடாமல் ராஜு உரைக்க...., மனோ பீதியாகிப் போனான். ஜெயிலர் ஏதாவது நடவடிக்கை எடுத்தால்...., அந்த பையன்களால் மீண்டும் பிரச்சனை வந்தால்...., இவர்கள்தான் அதை சந்திக்க நேரிடும்.

ஆனால் அவர்கள்மேல் குற்றம் சொல்லாமல் இருந்தால்...., அவற்றில் இருந்து தப்பிக்கலாம். ஆனால் ராஜுவோ...., மனோவின் ஜாடையை புரிந்துகொள்ளவே இல்லை. அவன் பாட்டுக்கு...., கதை சொல்ல ஆள் கிடைத்தது என்ற சாக்கில் சொல்லிக்கொண்டே போனான்.

அவன் சொல்லி முடித்ததும்...., ஈஷ்வரின் கண்கள் ரத்தமென சிவக்க...., அந்த நான்கு பையன்களையும் அன்று உதைத்து தள்ளிவிட்டார். அந்த நான்கு கைதிகளும்..., ஒருவர் ஒருவரை குற்றம் சுமத்த...., மனோ, ராஜு..., அருண்...., மூவரும் குற்றத்தை ஏற்க முன்வந்தார்கள். அதே நேரம்...., மனோவையும் தண்டிக்க அவர் மறக்கவில்லை.

“அவங்க அப்படி செய்தால்....., போலீஸை கூப்பிடாமல்...., நீயே சண்டை போடுவியா...?”, என்று கேட்டவாறு அவனையும் அடித்தார்.

அருண் ஓரமாக நின்று கண்ணீர் சிந்த...., மனோவின் அடிகளை, குறுக்கே விழுந்து தானும் சில அடிகள் பெற்றுக் கொண்டான் ராஜு.

அவனது இந்த செய்கையே ஈஸ்வரை திகைக்க வைக்க...., ஏதோ ஒரு விதத்தில் மனோ, ராஜு, அருண் மூவரும் அவரைக் கவர்ந்தார்கள்.

ஒருவேளை...., அங்கே உண்மையான குற்றவாளிக் கைதிகளுக்கு மத்தியில்...., அப்பாவிகளாக...., சந்தர்ப்ப சூழ்நிலை கைதிகளாகி, கண்களில் உண்மையை மட்டுமே தாங்கி...., அப்பாவித்தனத்தோடு...., வளையவரும் அவர்களை, ஈஸ்வர் இனம் கண்டுகொண்டதாலும் இருக்கலாம்.

அந்த நான்கு கைதிகளால் ராஜேஷ், மனோஜ், அருணுக்கு தொடர்ந்து ஏகப்பட்ட தொல்லைகள் வர...., அனைத்தையும் பொறுத்துக் கொண்டு சென்றார்கள். ராஜு இயல்பிலேயே அப்பாவியாகப் போய்விட...., அருண் பயத்தில் ஒடுங்க, மனோ, அவர்கள் துஷ்டர்கள் என்ற நினைவில் ஒதுங்கிப் போனான்.

அருணையும், ராஜுவையும் ஒரு விதத்தில் பாதுகாத்தான். அருண், ராஜுவை தனியாக எங்கும் அனுப்ப மாட்டான். வேலை செய்யும் இடத்திலும்..., தன் வேலை முடிந்தவுடன்...., அவர்களோடு இணைந்து கொள்வான்.

ராஜு என்ன குற்றத்திற்காக இங்கே வந்திருக்கிறான் என்பது முதலில் மனோ, அருணுக்குத் தெரியாது. அவனிடம் கேட்டபொழுது...., “ஒரு மஞ்ச பை கொடுத்தாங்க. அதை அங்கே கொண்டுபோய் கொடுக்கச் சொன்னாங்க. எனக்கு ரூம் நம்பர் மறந்துடுச்சு.

“அங்கே இருந்த போலீஸ்கிட்டே கேட்டேனா...? அவர் எதுக்குன்னு கேட்டார். நான்..., இந்த பையை அவங்க கிட்டே கொடுக்கணும்னு சொன்னேன். அவங்க அந்த பையை வாங்கி பாத்துட்டு..., என்னமோ ‘சுவர்...., சுவர்ன்’னு சொன்னாங்க...., அப்புறம் என்னை இங்கே கொண்டுவந்து போட்டுட்டாங்க.

“எனக்கு வேற எதுவும் தெரியாது. ஆனா...., என் பாப்பா என்னைக் காணோம்னு தேடுவா. என்னை வெளியே அனுப்புங்கன்னு சொன்னால்...., அதோ அந்த போலீஸ்காரர் என்னை அடிச்சுட்டார். ஏன் அடிச்சார்ன்னு தெரியலை.

“என்னை எப்போ வெளியே அனுப்புவாங்கன்னு கேட்டு சொல்லுறியா மனோ...., எனக்கு என் பாப்பாவை பாக்கணும்..., அந்த பையைக்

கொடுத்தவர் பத்து ரூபாய் தாரேன்னு சொன்னாரா...., நான் பாப்பாவுக்கு பலூன் வாங்கித் தாரேன்னு சொல்லியிருந்தேன்.

“நான் பலூன் வாங்கிட்டு வருவேன்னு காத்துக்கிட்டு இருக்கும்...., இப்போவே அழுதுட்டு இருக்கும்...., எனக்கு பாப்பா வேணும்”, இதைச் சொல்லும்பொழுதே அவன் குரல் அடைத்துக் கொண்டு...., கண்ணீர் வடித்தான்.

அவன் சொன்னதில் இருந்து எதையுமே அவர்களால் தெளிவாக புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால்...., ஓரளவுக்கு அனுமானிக்க முடிந்தது. அவன் கையில் ப்ரவுன் சுகர் என்ற போதைப்பொருளை கொடுத்து, அந்த ஹோட்டலுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அனுப்பியவர்களுக்கு, அங்கே போலீஸ் இருப்பது ஏற்கனவே தெரிந்திருக்க வேண்டும்.

எனவேதான்...., ராஜுவுக்கு பணம் தருவதாகச் சொல்லி ஏமாற்றி...., அழைத்துச் சென்று பலிகடாவாக ஆக்கியிருக்கிறார்கள் என்பது புரிந்தது. அதில் அவன் சொன்ன ‘பாப்பா’ யார் என்பதுதான் அவர்களுக்குப் புரியவில்லை.

“யார் அந்த பாப்பா...., என்று கேட்டதற்கு...., “என்னோட பாப்பா...”, என்று சொன்னான்.

‘உன் அம்மா அப்பா எங்கே?’ என்று கேட்டதற்கு....., அவங்கதான் என்னை தொரத்திட்டாங்களே என்றான்.

‘அப்போ அந்த பாப்பா உனக்கு எப்படி உறவு’, என்று கேட்டதற்கு...., அவளை நான்தான் பாத்துப்பேன். அவங்க அம்மா என்கிட்டேதான் பாத்துக்க சொல்லி விட்டுட்டு போவாங்க. நான்தான் பொறுப்பா பாத்துப்பேன். அன்னைக்கு என்கிட்டே பலூன் கேட்டாளா...., அதை வாங்கத்தான் வந்தேன்.

‘பலூன் வாங்கிட்டு உடனே போய்டுவேன்...’, தெளிவாக குழப்பினான்.

“சரி...., பாப்பாவோட அம்மா அப்பா உனக்கு யாரு...?”, அவர்களின் கேள்விக்கு, உதட்டை பிதுக்கியவன்...., “அது...., நான் அவங்க வீட்டில்தான் இருப்பேன்...., பாப்பா என்னோடவே இருப்பா...., விளையாடுவா. எனக்கு பாப்பாவை ரொம்ப புடிக்கும்...., சமத்து

தெரியுமா...?”, மனோ, அருணின் கேள்வி எந்த விதத்தில் இருந்தாலும்...., அது முடியும் இடம் அந்த பாப்பாவாகவே இருந்தது.

அவன் சொன்ன பாப்பாவின் பெயர் கூட அவனுக்குத் தெரியவில்லை. அவனது உலகம்...., அந்த குழந்தையோடு பிணைந்திருந்தது என்பது மட்டும் புரிந்தது.

அந்த குழந்தை கேட்டது என்பதற்காகவே, பலூன் வாங்க இவ்வளவு பெரிய இக்கட்டில் சிக்கிக் கொண்டிருக்கிறான் என்பதும் புரிந்தது. அவனது சாப்பாடு..., உடை, உறைவிடத் தேவை...., என எதையுமே அவன் பெரிதாக கருதியிருக்கவில்லை என்பதும் அவன் பேச்சில் தெரிய வந்தது.

சீர்திருத்தப் பள்ளியில் கொடுக்கும் உணவை கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் சாப்பிட்டான்...., இருக்கும் இடத்தில் குறை சொல்லாமல் இருந்தான்...., அதிகமாக எதற்கும் ஆசைப்படுவதும் இல்லை, எதைபற்றியும் குறை சொல்வதும் இல்லை.

ராஜுவின் பேச்சில் மனோவுக்கும், அருணுக்கும் தோன்றியது ஒன்றுதான். ‘அவனுக்கு மூளை வளர்ச்சி இல்லையோ...?’, என்ற சந்தேகம்தான்.

ஆனால் அதற்கும் வழியில்லாமல்...., மனோ...., சொல்வது அனைத்தையும் சரியாக புரிந்து கொண்டான். ஆனால் ராஜுவிற்கு, அனைத்தையும் நேரடியாக சொல்லி புரியவைக்க வேண்டி இருந்தது. ஜாடையாக சொல்லும் எதையும் அவனால் புரிந்துகொள்ள முடியாது.

அவனுக்கு பொய் சொல்லத் தெரியாது. அப்படியே பொய் சொல்லச் சொன்னால்...., ‘நீ சொன்னதை சரியா சொல்லிட்டனா...?’, என கேட்டு சரியாக மாட்டி விடுவான்.

யார் சொன்னாலும் எதையும் நம்பி விடுவான். யார் எதை செய்யச் சொன்னாலும் செய்வான்...., எந்த வேலையைச் செய்யவும் தயங்கவே மாட்டான்..

இப்படியாக இருந்த அவனை...., அனைவரும் ஏமாற்றி வேலை வாங்க...., அவனை மாற்ற வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தான் மனோ. ராஜுவிற்கு, வந்த முதல் நாளே..., மனோ

தனக்காக சண்டை போட்டதால்..., அவன்மேல் தனிப்பட்ட அன்பு கொண்டிருந்தான்.

அதை நல்லவிதமாக...., பயன்படுத்தினான் மனோ. எவ்வளவோ துன்பத்துக்கு இடையிலும்...., மூவரும் சின்ன சின்ன விஷயங்களில் மகிழ்ச்சியை அனுபவிக்க முயன்றார்கள். சீர்திருத்தப் பள்ளியில், பள்ளிப் படிப்பை முடிக்க உதவிசெய்ய....,

மனோ, அருண் மற்றும் ராஜு மூவரும் பன்னிரண்டாம் வகுப்பு தேர்வை எழுத முயன்றார்கள். மனோ ராஜுவிற்கு கல்வியோடு...., வாழ்வின் எதார்த்தங்களையும் சொல்லி புரிய வைக்க முயன்றான்.

யாருக்கும் ராஜு அடிமை இல்லை என்பதையும்...., எதைச் செய்யவேண்டும், செய்யக் கூடாது...., எப்படி நடக்கவேண்டும், பேசவேண்டும் என்பது முதற்கொண்டு அனைத்தயும் ராஜுவிற்கு கற்றுக் கொடுத்தான்.

ஈஸ்வரும் இவர்களை கவனிக்கத் துவங்கினார். ஒரே பார்வையிலேயே...., ஒருவன் குற்றம் செய்திருப்பானா... இல்லையா...., அவன் நேர்மையானவனா...., கள்ளத்தனம் உடையவனா என்பதை அவரால் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் அனுமானிக்க முடியும்.

அப்படியிருக்கையில்...., மனோ, அருண், ராஜு மூவரும் கள்ளம் கபடம் இல்லாமல் பழகும் விதம்...., ராஜுவையும் மனோ தன்னோடு இருத்திக்கொள்ள தன்னிடமே கேட்ட பாங்கு...., ராஜுவை அவன் பார்த்துகொள்ளும் விதம்....,

படிப்பில் காட்டும் அக்கறை...., என மூவரும் அவரை இன்னும் அதிகமாக கவனிக்கத் தூண்டினார்கள். அவர்..., அவர்களின் கேஸ் ஹிஸ்டரியை மறுபடியும் படிக்க...., குற்றம் பெரிதாக இருந்தாலும்...., அது நடந்த சூழல் என்ன என்பதை மூவருமே சொல்லியிருக்கவில்லை.

அதனாலேயே அவர்களது குற்றங்கள், மன்னிக்க முடியாததாக...., பெரியதாக அரசு வக்கீல்களால் நிரூபிக்கப் பட்டிருந்தது. இதை எப்படி கண்டுபிடிப்பது ?...., சற்று யோசித்தாலும்...., தயங்காமல் அவர்களிடம் கேட்டுவிட்டார்.

ஏற்கனவே..., தங்கள் படிப்புக்கு தேவையான உதவிகளையும், ராஜுவை

தங்கள் அறைக்கு மாற்ற கேட்டவுடன் செய்ததாலும்...., பயத்தையும் மீறி அவர்மேல் ஒரு மதிப்பு வைத்திருந்தார்கள் அவர்கள். எனவே அவர் கேட்டவுடன்....., கொஞ்சம் தயங்கினாலும்...., தாங்கள் குற்றவாளியான சந்தர்ப்பத்தை அவர்கள் சொன்னார்கள்.

அதை ஈஸ்வர் மௌனமாக கேட்டுகொண்டார். அந்த மூன்று சிறுவர்களுக்காக அவர் மனம் இரக்கப்பட்டது. மனதளவில் அவர்கள் நல்லவர்களாக இருந்தாலும்...., குற்றவாளிகள் என்று ஒரு முறை முத்திரை குத்திவிட்டால்...., அவர்களை இந்த சமுதாயம் எப்படிப் பார்க்கும் என்று அறிந்தவரல்லவா அவர்.

தன் நிலையையும் மீறி...., இவர்கள் வாழ்வு நன்றாக இருக்கவேண்டும் என்று அவர் மனம் ப்ராத்தித்தது. அந்த சூழலுக்கே ஒட்டாமல்...., தங்களுக்குள் ஒரு சிறு வட்டத்தைப் போட்டுகொண்டு..., நரகத்தில் சொர்க்கத்தைக் காணும் அவர்களை வியப்பாய் கவனித்தார்.

ஒரு வழியாக அவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு முடிக்க...., அவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருக்கவே...., அவர்கள் விரும்பியவாறு அரசு இஞ்சினியரிங் கல்லூரியில் சேர்ந்து படிக்க வைத்தார்.

அங்கேயும் அவர்களுக்கு சோதனைகளும் அவமானங்களும் தொடர்ந்தன. ஜெயில் கைதிகள் என்று தெரிந்தவுடனே...., உடன் பயின்ற மாணவர்களின் நிறம் மாறிவிட...., சமுதாயத்தின் கோர பக்கங்கள் மெதுவாக அவர்களுக்கு அறிமுகமாகியது.

அருண் கோபப்பட முயல..., அவனை அடக்கினான் மனோ. ராஜுவோ...., மனோ எவ்வாறு நடந்துகொள்கிறானோ...., அவ்வாறு நடக்கத் துவங்கினான். மனோ அமைதியாக இருந்தால் அவனும் அவ்வாறே இருந்தான்.

தங்கள் கல்லூரி அனுபவங்களை ஈஸ்வரிடம் அவர்கள் பகிர..., அவர்களைப் பற்றிய அறிக்கையை...., கல்லூரி முதல்வர், பேராசிரியர்களிடம் இருந்து...., தொடர்ந்து பெற்றுக் கொண்டிருந்தார் ஈஸ்வர்.

மனோஜ் மனதளவில் சோர்ந்துபோகும் நேரங்களில் எல்லாம்...., வாழ்வின் எதார்த்தங்களை அவனுக்குப் புரிய வைக்க முயன்றார். வாழ்க்கை அவர்களுக்கு இனிமேல் முள் படுக்கைதான் என்பதை புரிய

வைத்தார். இனிமேல் அவர்கள் மேல் ஒரு சிறு கரும்புள்ளி படர்ந்தாலும்....., அவர்கள் வாழ்கை மேலும் சிக்கலாகும் என்பதை அவனுக்கு எடுத்துச் சொல்லவே....,

உயிரே போனாலும்...., தவறு என்று தெரிந்ததை, சிந்திக்கக் கூட கூடாது என்று முடிவெடுத்தான் மனோ. அருணையும்...., ராஜுவையும் தன் நிழலிலேயே வைத்துக் கொண்டான். அருண் எடுத்தெறிந்து கோபமாக செயல்பட முயல, அவனை அடக்குவதும்....,

ராஜு அவன் நிழலிலேயே இருக்க முயல...., அவனை அடைகாக்கவும் செய்தான். ஒரு கட்டத்தில் கல்லூரி அவர்களுக்கு நரகமாகத் துவங்கவே...., இதற்குமேல் பொறுக்க முடியாது என அருண் பொங்கியெழ., ஈஸ்வர் சொன்னவற்றை அவனுக்குச் சொல்லி அவனை அடக்குவதற்குள், விழி பிதுங்கியது மனோவுக்கு.

இறுதியில் மனோ சொல்வதில் இருந்த உண்மை புரிபட...., முடிந்த அளவு பொறுமையை கடைபிடித்தான் அருண். இடையில் அவனது வக்கீல் அவனை சந்திக்க முயன்ற பொழுதும்...., அவன் மறுத்துவிட்டான். தன் தந்தையின் சொத்துக்கும், தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என பிடிவாதமாக மறுத்துவிட்டான்.

ஈஸ்வர் எதையோ சொல்ல வந்தபொழுதும்...., “என்னை மன்னிச்சிடுங்க..”, என்ற சொல்லோடு அதை ஒதுக்கிவிட்டான்.

கொடுமையாகக் கழிந்த ஏழு ஆண்டுகள்...., பசிக்காக உண்டு, தன்மானத்தை அடகுவைக்கும் கேள்விகளும், கேலிகளிலும் நைந்து...., வாழ்க்கை இவ்வளவு கொடுமையானதா...? என்று சிந்திக்கும் அளவு கழிந்த நாட்கள்...., ஒரு வழியாக அனைத்தும் முடிவிற்கு வந்தது.

அவர்களது நன்னடத்தை, கல்லூரியில் அவர்கள் பெற்ற நற் சான்றிதழ்...., ஈஸ்வர் கொடுத்த அறிக்கை, நாட்டுத் தலைவர்களின் பிறந்தநாள்...., என அவர்களின் தண்டனைக் காலம்...., பதினான்கு ஆண்டுகளில் இருந்து ஏழு ஆண்டுகளாக குறைந்திருந்தது.

இஞ்சினியரிங் பட்டதாரிகளாக வெளியே வர....., கையில் இருந்த டிகிரி அவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றிய மிகப்பெரிய நம்பிக்கையை அளித்தது. ஆயிரம் ரூபாயில் ஒரு வேலை தங்களுக்கென்று கிடைக்காமலா போய்விடும் என்ற அவர்களது நம்பிக்கை

ஆட்டம்காணப் போவது தெரியாமல்....,

சுதந்திரப் பறவைகளாக...., ஜெயில் கம்பிகளுக்கு முன்னால்...., தங்கள் வாழ்வைத் தேடி பயணப்பட்டார்கள். ஆனால்...., வாழ்க்கை அவர்களுக்கு வைத்திருந்ததோ....

***

# மௌனம் – 29.

ஆயிற்று...., இன்றோடு முழுதாக மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. சென்னையின் ஒதுக்குப்புறத்தில்....., நாற்றம் பிடித்த மேன்ஷன் ஒன்றில்...., ஜெயில் வாழ்க்கைக்கு இது பரவாயில்லை...., என்று நினைக்க முடியாத அளவு...., பசியென்றால் என்ன என்பதை உணர்ந்த நாட்கள்.

‘கொடிது கொடிது இளமையில் வறுமை...’, பாரதி சும்மாவா சொன்னான்...., ஜெயிலில் நாற்றம்பிடித்த உணவாவது கிடைத்தது...., இங்கே அதற்கும் வழியில்லாமல் போனது.

இவ்வளவு நாட்களாக, தாங்கள் விடுதலையானபொழுது கிடைத்த பணத்தை வைத்து சமாளித்தாயிற்று. வாடகைக்கு வீடு பார்க்கலாம் என்றால்...., வாலிபர்கள்...., அதிலும் இப்படி ஒரு பின்னணியில்...., அது குதிரைக்கொம்பாக இருந்தது.

முதல் ஒரு வாரம் தைரியமாக கம்பெனிகளின் படிகளில் ஏறி இறங்க...., அடுத்த வாரம் எதிர்பார்ப்பில் கழிய...., அடுத்த வாரம் ஏக்கமாக நகர...., அடுத்த வாரம் சலிப்பாகத் துவங்க...., மறுவாரம் அலுத்துப் போக...., தொடர்ந்த வாரம் விரக்தியாக உருள....., அதன் பிறகோ....., துவண்டு போகச் செய்தது.

என்ன நடந்தாலும்...., “மனோ...”, என்று அழைத்து அருணும், ராஜுவும் அவன் முன்னால் நிற்கையில்...., எதையாவது செய்துவிட மாட்டோமா...., என்ற வெறி கிளம்பவே செய்தது.

சந்தர்ப்ப சூழ்நிலையால் ஜெயிலுக்குப் போய் வந்தால்...., மீண்டும் அவர்கள் சாதாரண வாழ்க்கை வாழவே முடியாதா....? தங்கள் பின்னணி தெரிந்தவுடன், சில கம்பெனிகள் அவர்களுக்கு அடியாளாக தங்களை மாற்ற நினைத்த செய்கையைத்தான் அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

ஒரு பெட்டிக்கடை வைக்கவேண்டும் என்றால் கூட...., ஐம்பதாயிரம் ரூபாய் இல்லாமல் முடியாது என்னும்பொழுது....., சுயமாக சம்பாதிக்க அவர்கள் எங்கே போவார்கள்.

அருணின் வக்கீல், அவனது அப்பாவின் கம்பெனியை எடுத்து நடத்தச் சொல்ல, தன் பிடிவாதத்தில் இருந்து அருண் இறங்கவே இல்லை.

மூன்றுநாள் பட்டினிக்கு மேல்..., அது கொடுமையானதாக மாற...., அதைவிட...., அவர்களைத் துரத்திய நிழலுலகம்....., அவர்களை அதற்குள் இழுத்துப் போட முயல...., வயிற்றுப் பசிக்கு முன்...., எதுவும் தவறாகத் தெரியவில்லை அருண், ராஜுவிற்கு.

ஆனால் மனோ...., என்ன ஆனாலும்...., ஏன்...., உயிரே போனால் கூட...., இனி ஒரு தவறு செய்ய, மனத்தால் கூட நினைக்கக் கூடாது என்று முடிவெடுத்திருந்தான். அருணும், ராஜுவும் பசி மயக்கத்தில், கோபத்தில் கத்தும்பொழுது....., அனைத்தையும் பொறுமையாக தாங்கிக் கொண்டான்.

“மனோ...., நான் அந்த குப்பை தொட்டியில் ஏதாவது கிடக்கான்னு பாக்கவா...?”, என ராஜு இறுதியாக கேட்டபொழுது...., மனோவின் உறுதி கூட ஆட்டம் காணவே செய்தது.

ஆனாலும் இறுதி முயற்சியாக...., நண்பர்களை அழைத்துக்கொண்டு அவன் சென்ற இடம்...., ஈஷ்வரின் இல்லம் தான். தன் முன்னால்...., துரும்பாக இளைத்து....., பசி மயக்கத்தோடு நின்ற அவர்களுக்கு...., முதல் வேலையாக அவர் உணவளிக்க....., தங்கள் வாழ்நாளிலேயே...., முதல் முறையாக நல்ல உணவை உண்டார்கள் மனோவும்...., ராஜுவும்.

அருணுமே சாப்பாட்டை அள்ளி விழுங்க...., பார்த்துக்கொண்டிருந்த ஈஸ்வருக்கே கண்கள் கலங்கியது. உணவு பரிமாறிய டிரைவரோ...., “பொறுமையா சாப்பிடுங்கப்பா...., எல்லாம் உங்களுக்குத்தான். அப்படியென்ன அவசரம். நிதானமா சாப்பிடுங்க....”, என்று சொல்லும் அளவு இருந்தது.

சாப்பிட்டு முடித்து...., “வாங்கடா...., உக்காருங்க...., என்ன, என்னைப் பாக்க வீட்டுக்கே வந்திருக்கீங்க. வாழ்க்கை எப்படி இருக்கு...? வேலை கிடைத்ததா...? சுதந்திரம் நல்லா இருக்கா...., சொல்லுங்க...”, நிதானமாக வினவினார்.

அவர் அமரச் சொன்னதை கண்டுகொள்ளாமல்....., “கூடிய சீக்கிரம் ஜெயிலுக்கே மறுபடியும் வந்திடுவோம்...”, அருண் பட்டென வெடிக்க....,

“வெளியே நல்லாவே இல்லை. வேலையே கிடைக்கலை. பசிக்கிது...., செத்துப் போலாமான்னு இருக்கு. நீங்க எங்களுக்கு ஏதாவது வேலை வாங்கித் தாறீங்களா...? அங்கே இருந்து வந்த பிறகு...., இன்னைக்குதான் வயிறார சாப்பிட்டு இருக்கோம்”, ராஜேஷின் வார்த்தைகள் அவர்கள் நிலையை அவருக்கு படம் போட்டு விளக்கியது....,

மனோஜ் அமைதியாக இருக்கவே...., “என்ன மனோ...., அவங்க அவங்க கருத்தை சொல்லிட்டாங்க. நீ ஏன் ஒண்ணுமே சொல்லாமல் இருக்க. நீயும் சொல்லு....”, அவனைக் கிளறினார்.

“அதான் நீங்களே பாக்குறீங்களே. என்ன சொல்லட்டும்....”, சற்றுநேரம் அங்கே அமைதி நிலவியது. அந்த அமைதியை யாருமே கலைக்கவில்லை.

“நாங்க அங்கே இருந்து வெளியே வர முன்னாடி...., நீங்க எவ்வளவோ அறிவுரை, தைரியம் சொல்லிக் கொடுத்தீங்க. இந்த நிமிஷம் வரைக்கும் அதையே வேத வாக்கா நினைத்து நாங்க காப்பாத்திட்டு வாரோம். ஆனா..., ஆனா...., இந்த பாழா போன வயிறு பசிக்கும்போது....”, கையால் வயிற்றை அடித்தவாறு அவன் கத்த...., அருணும் ராஜுவும் அவன் அருகில் ஓடி வந்து அவனைத் தடுத்தார்கள்.

ஈஸ்வர் அப்பொழுதும் அசையாமல் நின்றுகொண்டிருந்தார். ‘மேலே சொல்’ என்பதுபோல் அவர் பார்க்க...., “ஒருத்தனோட சூழ்நிலையை சாதகமா பயன்படுத்திக்கலாம்...., ஒருவனின் வறுமையை, இயலாமையை...., அறிவை...., உழைப்பை...., இப்படி எல்லாத்தையும் முடிந்தவன் பயன்படுத்திக்கப் பாக்குறான்...., மற்றவன் பலியாளா மாறிப் போகிறான்.

“ஆனா இங்கே...., எங்களோட பசியை பயன்படுத்திக்கப் பாக்குறாங்க. கொலைப் பட்டினியா இருக்கும் எங்க முன்னாடி...., விருந்தை படையல் போட்டுட்டு...., நாங்க போகும் வழியில்...., உருட்டுக் கட்டையையும், கத்தியையும், துப்பாக்கியையும் வைக்கிறாங்க.

“உனக்கு சாப்பாடு வேணுமா...., இதையெல்லாம் தூக்கிட்டு போய்...., அங்கே உக்காந்து அந்த சாப்பாட்டை சாப்பிடுன்னு சொல்லுறாங்க....., எங்...., எங்...களால்...., முடியலை....,

“முகத்தை திருப்பிக்க முடியும் எங்களால்...., அங்கே இருந்து ஓடி வர முடியலை. ஆனாலும்...., எங்களை கட்டுப்படுத்திக்கிட்டு ஓடிக்கிட்டே இருக்கோம். பசியா...? உயிரா...? சாப்பாடான்னு வரும்போது...., நான் தனியா இருந்தால்...., தைரியமா உயிரை விடத் தயாரா இருக்கேன்.

“என்னால் மறுபடியும் தப்பு செய்ய முடியாது. இவங்களையும் அதற்கு அனுமதிக்க முடியாது. பிடிவாதமா, என்னால் இருக்க முடியும்.

“ஆனா...., என் கூடப்பிறக்காத இவங்களை அப்படி என்னால்...., என் கண் முன்னாடி பலி கொடுக்க முடியலை. நீங்க சொல்லுங்க...., இப்போ என்ன செய்யட்டும்...?”, நண்பர்களை கைக்கொருவராக பிடித்தவாறு அவன் நின்ற கோலம்...., ஈஸ்வர் கண் கலங்கியவராக கை தட்டினார்.

“சபாஷ்டா...., சபாஷ்டா...”, இதையே மறுபடியும் மறுபடியும் சொன்னவாறு அவர் கை தட்ட...., நண்பர்கள் மூவரும், அவரை புரியாத பார்வை பார்த்தார்கள்.

லேசாக கண்கலங்க ஓடிவந்து அவர்களை அணைத்துக் கொண்டவர்....., “எனக்கு ரொம்ப பெருமையா இருக்குடா...., என் சர்வீசிலேயே என்னோட கணிப்பு மிகச் சரியாக வேலை செய்தது உங்களிடம் தான்.

“எத்தனையோ குற்றவாளிகளை நான் பார்த்திருக்கிறேன். உங்களை மாதிரி...., தனியாக...., (அநாதை என்று சொல்வதை அவர் விரும்பவில்லை) இருந்த இளைஞர்கள் யாருமே இவ்வளவு தைரியமா...., திடனா...., தங்கள் நிலையில் நின்றதில்லை.

“வெளியே வந்த ஒரே மாதத்தில்...., பசி அவர்களை மறுபடியும் அந்த ஜெயில் கம்பிகளுக்குப் பின்னால் சிறை வைத்ததை நான் கண்கூடாக பார்த்திருக்கிறேன்.

“எங்கே என்னை மறுபடியும் நேரில் பார்த்தால், என்ன சொல்வது என்று தெரியாமல்...., தயங்கி...., தடுமாறி...., என்னை சந்திக்காமலே போன அவர்களையும் நான் சந்தித்திருக்கிறேன்.

“என் முன்னால் வந்து...., நேருக்கு நேராக நின்று...., ‘இப்படி ஒரு வாழ்க்கை எங்களை அழைக்கிறது...., நாங்க என்ன செய்யறது’ன்னு வந்து நிக்கிற பாரு...., இப்படி ஒரு நண்பன் கிடைக்க...., இதோ...., இவனுக ரெண்டுபேரும் கொடுத்து வைத்திருக்கணும்...”, அவர் பார்வை

அருணை கொஞ்சம் குற்றம் சுமத்தியது.

அதை உணர்ந்து தலை கவிழ்ந்தவன்...., “நான் ஏதோ கோபத்தில் சொல்லிட்டேன். என்னால் மனோவின் பேச்சை எந்த காலத்திலும் மீற முடியாது....”, நண்பனை தனக்கு கேடையமாக்கினான்.

“நீ என்னடா சொல்லுற..?”, ராஜுவிடம் வினவ....,

“எல்லாம் மனோ பாத்துப்பான். அவன் என்ன செய்யச் சொல்லுறானோ நான் செய்வேன்...”, கிளிப்பிள்ளை என்பதை மறுபடியும் நிலை நாட்டினான் ராஜு.

“சரி வாங்க...., உக்காருங்க பேசுவோம்....”, சொன்னவர் அவர்களை அழைத்துச் சென்று சோபாவைக் காட்டி அமரச் சொன்னார். இந்த முறை அழுத்திச் சொல்லவே...., அவர்கள் அமர்ந்தார்கள்.

சற்று நேரம் தாடையைத் தடவியவாறு யோசித்தவர்...., தன் அலைபேசியை எடுத்து, கிட்டத்தட்ட பத்து போன்கால்கள் பேசினார். அவர் பேசும் தோரணையில் இருந்தே....., அவர் இதுவரை யாருக்காகவும் உதவிகேட்டு பேசியவரில்லை என்பது அவர்களுக்கு புரிந்து போனது.

நெகிழ்ந்துபோய் அமர்ந்திருந்தார்கள். இறுதியாக அவர் அலைபேசியை வைத்தபொழுது இரண்டுமணி நேரங்கள் கடந்திருந்தன. சற்று யோசனையோடே அலைபேசியை வைத்தவர்...., தன் மீசையை நீவியவாறு சற்று நேரம் இருந்தார்.

“ஐ....யா...”, மிகுந்த தயக்கமாக அழைத்தான் மனோஜ்.

“ம்...., உங்களைப் பற்றித்தான் யோசிச்சுக்கிட்டு இருக்கேன். உங்க படிப்புக்கு ஏத்த வேலைதான். ஆனா முதல்ல...., ‘முதல்’ போட கொஞ்சம் அமவுண்ட் தேவைப்படுது...., அதான் யோசிக்கிறேன்.

பிறகு தெளிந்தவராக...., “அருண்...., உங்க அப்பாவோட கம்பெனி ஒண்ணு இருக்குல்ல...”, அவர் கேட்கவே...., ‘ஆம்’ என்பதுபோல் தலையை அசைத்தான்.

“போனமுறை உன்னோட லாயர் என்னை பார்க்கும்போது ஒரு விஷயம்

சொன்னார். உங்க கம்பெனியை... எதிர் கோஷ்டி விலைக்கு கேக்குறதா. இரு...., இரு...., நான் முடிச்சுடுறேன்...., இப்போ அந்த கம்பெனி, உங்க வீடு...., அந்த கெஸ்ட்ஹவுஸ்...., எல்லாத்தையும் வித்துட்டு வர்ர வருமானத்தில்...., தொழிலைத் துவங்குங்க.

“அதன் பிறகு வரும் லாபம்...., கிடைக்கும் பணம் அனைத்தையும் வைத்து...., உங்க அம்மா பெயரில் ஒரு ட்ரஸ்ட் ஆரம்பித்து...., இந்த பணத்தை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்து. இது என்னோட சஜஷன் தான். முடியும்ன்னா பாருங்க.

“இல்லன்னா...., உங்களை அவங்ககிட்டேயே வேலைக்கு சேர்த்து விடுறேன்.

நீங்களே தொழில் தொடங்கினா, முதலாளிகளா இருக்கலாம்...., உங்களை யாரும் கேள்வி கேட்க முடியாது. ஆனால் ஒருத்தர்கிட்ட வேலைக்குப் போனால்...., கை கட்டி நிற்கணும், அவங்க சொல்வதை எல்லாம் பொறுமையா கேட்டுக்கணும்...”, அவர் இழுக்க,

“இல்ல...., இல்ல...., நீங்க சொன்ன முதல் சஜஷனையே நான் கேட்டுக்கறேன். நீங்களே வக்கீல் கிட்டே பேசுங்க....”, வேகமாகச் சொன்னான் அருண்.

அவன் வேகத்தில் ஈஸ்வர் சிரித்துவிட்டார். பட்ட அவமானங்கள், அருணை, தன் பிடிவாதத்தில் இருந்து இறக்கி இருந்தது. அதன் பிறகு வேலைகள் ஜரூராக நடக்க...., ஒரே மாதத்தில் மூன்றுகோடி ரூபாய்க்கு அதிபதியாகி இருந்தான் அருண்.

ஆனால் அதை அப்படியே மனோஜிடம் கொடுத்தவன்...., “நிர்வாகத்தை நீ பார்த்துக்கோ...., எனக்கு எதுவும் தெரியாது....”, என சொல்லிவிட்டான்.

ஈஸ்வர், பெரிய பில்டர் கம்பெனிகளிடம் பேசி...., அவர்கள் எடுக்கும் சிறிய பில்டிங் வேலைகளை இவர்களுக்கு வாங்கிக் கொடுத்தார். முதல் ஒரு வருடம்...., கம்பெனிக்கு பெயர் கூட இல்லாமல், வேலைகளை மட்டும் செய்து கொடுத்தார்கள்.

அடுத்த வருடம்...., பெரிய கம்பெனியே...., இவர்களது வேலை திருப்தி அளிக்கவே...., அவர்கள் போட்ட மொத்த ‘முதல்’, லாபத்தை

இவர்களுக்கு அளிக்க...., அவர்களது வங்கிக் கணக்கு கணிசமாக உயர்ந்தது.

அத்தோடு...., தங்களுக்கென்று ஒரு இடம் வாங்கி, வீட்டையும் அவர்களே டிசைன் செய்து...., கச்சிதமாக கட்டி முடிக்க...., அவர்களது இரவு நேர தனிமை, சாப்பாட்டு பிரச்சனை அனைத்தும் சேர...., ஒருநாள்...., “மனோ..., நமக்கு மட்டும் ஏண்டா அம்மா அப்பாவோட இருக்கும் பாக்கியம் இல்லாமல் போயிற்று...?”, அருண் அங்கலாய்க்க....,

“நாம எங்கேயாவது போய்..., ஒரு அம்மா வாங்கிட்டா என்ன...?”, ராஜுவின் கேள்வியில் முடிய...., அடுத்த நாளே..., ஈஷ்வரின் முன்னால்...., “அம்மா வேண்டும்”, என்ற கோரிக்கையோடு நின்றாகள்.

திகைப்பாய் அவர்களைப் பார்க்க...., அவர்களிடம் இருந்த உறுதியில்...., ஒரு முதியோர் இல்லம் சென்று...., அவர்களுக்காக நிர்வாகத்திடம் பேசி...., சட்ட சிக்கல்...., பிள்ளைகளின் பிடிவாதம்...., என அனைத்தையும் கடந்து...., மனோஜ், அருண், ராஜேஷ்...., மூவருக்கும் தனித்தனியாக ‘பெற்றவர்களை’ அழைத்து வந்தார்கள்.

அவர்களும், தங்கள் சொந்த பிள்ளைகளாகவே இவர்களைக் காண...., இவர்களும், பெற்ற தாயின்மேல் வைத்த பாசத்தை அவர்கள்மேல் வைத்தார்கள். மேல் வேலைக்கு ஆள் வைத்தாலும்...., சமையல் மட்டும் பெரியவர்களே செய்தார்கள்.

அவர்களுக்கு என்ன பிடிக்கும்...., பிடிக்காது...., என அவர்கள் சாப்பிடுவதை வைத்தே தெரிந்து...., அதற்கு ஏற்றவாறு சமைத்தார்கள். ஒரு பாசமான குடும்ப சூழல் அங்கே உருவானது.

அடுத்த வருடமே...., மேலும் சில பெரிய கம்பெனிகளோடு கூட்டு வைத்தவர்கள்...., தங்களைத் தேடி வந்து கேட்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தார்கள்.

அதிலும் போட்டி கம்பெனிகளால் சுடு சொற்கள் வராமல் இல்லை. அதையும் தாங்கிக் கொண்டார்கள். ஆனால்...., மற்ற கம்பெனிகளோடு போட்டி போட்டு, வேலை எடுக்கவோ...., செய்யவோ தயங்கினார்கள்.

கம்பெனி மீட்டிங், பார்ட்டி என்று செல்லும் இடங்களில் கூட, பாராட்டுவதுபோல்...., தங்களை கேலிசெய்வதை, மனோவால் தாங்கிக்

கொள்ளவே முடியவில்லை. ஒரு கட்டத்தில்...., நண்பர்களை விட்டுவிட்டு...., தான் மட்டுமே, முக்கியமான மீட்டிங், பார்ட்டிகளுக்குச் செல்கையில்...., மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியிருக்க முயன்றான்.

ஆனாலும்...., தவிர்க்க முடியாத சூழல்களில்...., அவர்கள் பேச்சை கேட்பது, அதிகபடியாக நடக்கும் கேலி...., அனைத்தையும் தனியாக தாங்கினான் மனோ.

மனோவின் செய்கைக்கான காரணங்கள் அருணுக்குத் தெரியவந்தாலும்...., எதுவுமே செய்ய முடியாமல்...., ஒதுங்கி இருந்தான். ஒரு கட்டத்தில்...., இந்த நிலையே போதும்...., மேலே வளரவேண்டாம்...., என முடிவெடுத்து, பார்ட்டி, மீட்டிங் என அனைத்தையும் தவிர்க்க வைத்தான் அருண்.

நண்பனிடம் வாதாடிப் பார்த்து...., முடியாமல் போகவே, மனோவும் விட்டுவிட்டான். அதைவிட...., பணம் போட்ட அருணுக்கு நஷ்டம் வந்துவிடக் கூடாது என்பதில் அவன் மிகுந்த கவனமாக இருக்க...., அவன் எண்ணம் உணர்ந்து...., கம்பெனியை தங்கள் மூன்றுபேர்களின் பெயரில் மாற்றினான் அருண்.

முதலிலேயே அதைத்தான் அருண் செய்ய முயன்றான்..., மனோ பிடிவாதமாக இருக்கவே விட்டுவிட்டான். இப்பொழுதோ...., ‘கம்பெனியை மூன்றுபேர் பெயரில் மாற்றவில்லை என்றால்...., இதை இழுத்து மூடுவோம்’ என அவன் சத்தம் போடவே, மனோ அடங்கி விட்டான்.

“லாபமோ நஷ்டமோ...., மூவரும் அனுபவிப்போம்...”, உறுதியாக மறுத்து...., மனோவை எங்கும் செல்ல விடவில்லை. மனோவும் ஒதுங்கியிருக்கப் பழகிக் கொண்டான். அவர்களது இந்த செய்கை ஈஸ்வருக்குப் பிடிக்கவில்லை என்றாலும்...., அவர்களாகவே முன்னேறட்டும் என்பதுபோல் ஒதுங்கிக் கொண்டார்.

தொடர்ந்த நாட்களில்...., பெற்றவர்களுக்கே உரிய குணத்தில்...., மனோ, அருண், ராஜுவிற்கு திருமணம் செய்ய பெரியவர்கள் முயல...., திருமண தரகர் சென்ற இடங்களில் எல்லாம்...., மனோ கூட்டாளிகளின் பணம், வசதி, பெயர் பெரிதாக பேசப்பட்டாலும், அவர்களது இருண்ட பக்கமே அதிகமாக விமர்சிக்கப் பட்டது.

சில வசதியான வீட்டுப் பெண்கள் எல்லாம்...., இவர்களைத் தேடிவந்து காயப்படுத்திச் செல்ல...., சில பெண்களோ...., நாகரீகமாக மறுத்தார்கள். ஆனாலும். ‘மறுப்பு’ என்பது ஆண்களுக்கு மிகுந்த வேதனையை அளித்தது.

ஒரு கட்டத்தில்...., எதுவுமே வேண்டாம் என்று அவர்களை ஒதுங்கியிருக்கச் செய்தது.

தங்கள் வாழ்வில் திருமணம் என்ற ஒன்று கிடையாது, என்று தங்களையே சமாதானம் செய்துகொண்டு, அதைபற்றிய நினைப்பே இல்லாமல் இருந்துவிட முடிவெடுத்தார்கள்.

இரண்டு வருடங்கள் அமைதியாக இருந்த பெற்றவர்கள், அதன் பிறகு தொல்லை செய்யத் துவங்கினார்கள். ஏற்கனவே பட்ட அவமானங்கள், அவர்களை ‘திருமணம்’ என்ற பேச்சையே வெறுக்க வைத்தது.

ஆனால் விதி வேறாக இருக்க...., அவர்கள் வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைத்த மூன்று தேவதைகள்...., அவர்கள் மனங்களை கொள்ளை கொள்ளவே செய்தார்கள்.

தங்கள் மனம் அவர்கள் பின்னால் செல்வதை தடுக்க முடியாமலும், காதலை யாசித்து நிற்கும் அவர்களுக்கு பதில் சொல்ல முடியாமலும், மௌனம் காத்தார்கள் ஆண்கள். காதலையாவது ஒரு வேகத்தில் ஒத்துக்கொள்ள முடிந்த அவர்களால்...., திருமணம் என்ற சொல்லை நினைக்கவே பயமாக இருந்தது.

பெண்களின் பெற்றவர்களை சந்திப்பது ஒரு பக்கமென்றால்....., தங்கள் மனம் கவர்ந்த பெண்களின் முன்னால்...., தாங்கள் கொலை காரர்களாகத் தெரிவதில்...., அப்பெண்களால் அதை ஏற்றுகொள்ள முடியாமல் போனால்..., அவர்களின் முகம் வாடுவதையோ....., அவர்களின் பாராமுகத்தையோ சந்திக்கும் துணிவு அவர்களுக்கு இருக்கவில்லை.

ஆனால்....,’ கண்ணில் படவில்லை என்றால்...., கருத்தில் நிலைக்காது’ என்ற உவமைகள் காதலில் பொய்த்துப் போக...., ஒவ்வொரு நிமிடமும், நொடியும் தங்கள் உயிர்களைக் காணவேண்டும் என்ற வேட்கை ஆண்களுக்கு அதிகரித்தது.

ஆண்கள் தங்கள் நினைவுகளில் இருந்து விழிக்க...., பெரியவர்கள், தங்கள் பிள்ளைகளின் கடந்தகாலத்தைச் சொல்லிவிட்டு...., அனிதாவின் தாயின் முகத்தையே ஆவலாகப் பார்த்தார்கள்.

அமைதி...., அமைதி...., எங்கும் ஒரே அமைதி. உள்ளே இருந்த பெண்கள், 'என்ன சொல்வது...., ஏது சொல்வது...., என்று தெரியாமல் மலங்க விழித்தவாறு இருக்க....,

அனிதாவின் தாயின் முகம் உணர்வுகளைத் துடைத்து வைத்ததுபோல் இருந்தது...., உள்ளுக்குள் கலங்கித்தான் போனார்கள் பெற்றவர்கள்.

இது சமாதானம் செய்யும் விஷயம் இல்லை என்பது அவர்களுக்கு நன்கு தெரியும். இது நம்பிக்கையும்...., அன்பும் சார்ந்த விஷயம்...., முடிவெடுக்கும் முழு உரிமையும் அவர்களுக்கு உண்டு. ஆனாலும்...., தங்கள் மகன்களின் சோர்ந்த முகம் கண்முன் நிழலாட.....,

"நீங்க எதுவுமே சொல்லலையே...", மனோவின் தாய், அங்கிருந்த அமைதியைக் கிழித்தவாறு, மெதுவாக கேட்டார்.

"என்ன சொல்றதுன்னு தெரியலை. ஒரு அம்மாவா என் பொண்ணுங்களோட மனசை பாக்குறதா...? இல்ல...., இன்னொரு அம்மாவா...., என் பொண்ணுங்களோட வருங்காலத்தை யோசிக்கிறதா...? இல்ல...., ஒரு அம்மாவா...., நாளைக்கு என்ன பேச்சு வருமோன்னு...., யோசிக்கவா...?

"இருந்தாலும்...., நீங்க சொன்ன இந்த விஷயத்தை, அவ்வளவு ஈஸியா என்னால் எடுத்துக்க முடியலை. எனக்கு யோசிக்க கொஞ்சம் டைம் வேணும். இப்போ ஏதோ அவசரத்தில் முடிவெடுத்துட்டு...., பின்னாடி வருத்தப்பட முடியாதே.

"என் மூணு பொண்ணுங்களோட வாழ்க்கைப் பிரச்சனை இது. ஒருவாரம் டைம் கொடுங்க. யோசித்து, எல்லார்ட்டயும் பேசிட்டு ஒரு முடிவைச் சொல்லுறோம்....", குரலில் எதையும் வெளிக்காட்டாமல் சொல்லி முடித்தார்.

ஆண்களைப் பெற்றவர்களும்...., உடனடியாக இதற்கு ஒரு முடிவு தெரிந்துவிடும் என்று வந்திருக்கவில்லை தான். உணர்வுகளை வெளிக்காட்டாமல் அவர் பேசியவிதம், கவனமாக பேசிய அவரது

பாங்கு..., ஆண்களின் பெற்றவர்களுக்கு பெரிய நம்பிக்கையையும் விதைக்கவில்லை.

ஆனாலும்...., உடனடியாக அவர் மறுத்து உரைக்காததே, அப்போதைக்கு ஆறுதல் அளிக்க...., அவர்கள் உண்ணச்சொன்ன உணவைக் கூட மறுத்துவிட்டு, வீடு நோக்கி கிளம்பிவிட்டார்கள்.

திருச்சியில் இருந்து சென்னை வரும் வரைக்கும்...., வழியில் இருந்த சிறு கோயிலைக் கூட விடாமல்...., தங்கள் பிள்ளைகளின் வாழ்க்கை விடியவேண்டும் என்ற ஒற்றை பிரார்த்தனையோடு சென்னையை அடைந்தார்கள் அவர்கள்.

***

# மௌனம் – 30.

காலையில் கண்விழித்த பிறகும்...., எழ மனமில்லாமல் படுக்கையில் கிடந்தான் மனோஜ். மனம் முழுவதும் ஒருவித வெறுமை மண்டிக் கிடந்தது. எப்படி இந்த ஒரு வாரமாக தன் வேலைகளைச் சரியாகச் செய்தோம் என்றே புரியாமல் படுத்திருந்தான்.

ஒரு வாரமாக அலுவலகம் சென்று வந்தவன்...., இன்று நீண்டநேரமாகியும் கீழே வரவில்லையே என்ற கவலையில், மனோவின் தாய் அவனைத் தேடிச் செல்ல...., விட்டத்தை வெறித்தவாறு அவன் இருந்த தோற்றம் அவரை கலங்கச் செய்தது.

‘ஹையோ ஆண்டவா...., எப்படி இருந்த புள்ளை. இப்படி கிடக்கானே...’, மனம் வேதனையைச் சுமக்க...., மெதுவாக அவன் அருகில் அமர்ந்தார்.

அவர் பக்கம் விழிகளை மட்டும் திருப்பியவன்...., ‘என்ன..?’, என்பதுபோல் பார்த்தான்.

“என்னப்பா...., நீயே இப்படி இருந்தால்....., அவனுங்களை யார் பாக்குறது...? போப்பா...., அவங்களையும் சாப்பிட கூட்டி வா...”, அவன் தலையை வாஞ்சையாக கோதினார்.

மறுத்துச் சொல்லத் துவங்கிய நாவை கட்டுப்படுத்தியவன்...., “போங்கம்மா வரேன்....”, அவரை அனுப்பினான்.

இன்று என்னவோ நடக்கப்போகிறது என்று மனம் கிடந்தது அடித்துக் கொண்டது. கை தானாக அலைபேசியை துழாவ...., ஏக்கமாக அதன் திரையை வெறித்தான். நித்யாவின் ஒரு மிஸ்ட் காலுக்காகவும், ஒரே ஒரு மெசேஜுக்காகவும் அவன் விழிகளும், மனமும் காத்துக் கிடந்தது.

தான் இறுதியாக அனுப்பிய செய்தியை லட்சம் முறையாக பார்த்துவிட்டான். “நிது...., உன்கிட்டே நிறைய பேசணும்...., போனை எடேன். இல்லையா நீ கால் பண்ணு. பேசணும்...”, இதே செய்தியை பத்துமுறை அனுப்பிவிட்டான்.

எங்கே சிலநேரம் போகாமல் போய்விடுமோ...., செய்தி அவளை எட்டாமல் போய்விடுமோ என்று அஞ்சியே அவ்வாறு செய்தான்.

ஆனால்...., எந்த செய்திக்கும் பதில் இல்லாமல் போகவே...., மனம் சோர்ந்து போனது.

ஒரு வழியாக எழுந்து வந்து...., சாப்பாட்டு மேஜைமுன் அமர்ந்தவன்...., “அருண்...., இன்னைக்கு மட்டும் கொஞ்சம் ஆபீஸுக்கு போயிட்டு வரியா...., சாரி...., இன்னைக்கு என்னால் போக முடியலை அதான்...”, அருணும் மன வருத்தத்தில் இருப்பதாலேயே தயக்கமாக கேட்டான்.

“அதுக்கென்ன மனோ...., இன்னைக்கு நான் போறேன். ராஜு ஏற்கனவே சைட்டுக்குப் போறான். நீ ஆபீஸ் போன...., நான்தான் வீட்டிலேயே இருந்தேனே. எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை...”, சொன்னவன், உண்டு முடித்து அலுவலகம் கிளம்பிவிட்டான்.

அவன் செல்வதையே பார்த்தவன்...., “அம்மா...., கொஞ்சம் படுத்துக்கறேன். என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க...”, சொன்னவன்...., அவர் பதிலை எதிர்பாராமல் கிளம்பிவிட்டான்.

மனோ சோர்வாகச் செல்வதைப் பார்த்த ராஜுவின் தாய்...., “என்ன மனோம்மா...., இவன்தான் தெம்பா இருப்பான்னு பாத்தா...., இவன்தான் ரொம்ப உடைஞ்சு போறான். அவனுங்க கூட தேறிட்டாங்க போல...”, கவலையாக உரைத்தார்.

“ஹம்...., அவனுங்களாவது மனசுக்குள் இருப்பதை வெளியே கொட்டிடுவாங்க. இவன்தான் மனசுக்குள்ளேயே வச்சு புழுங்குவானே. அன்னைக்கு ராத்திரி அவன் ரூம் பக்கம் போறேன்...., ‘நிது ஐ லவ் யூ...., ஐ லவ் யூ...., உன்கிட்டே இதை சொல்லாமலே போயிட்டேன். சொல்லணும்னு ஆசைப்படும்போது நீ கேக்க மாட்டேன்னு சொல்லுறியே’ன்னு...., ஒரே புலம்பல்....,

“என்னால் அங்கே இருந்து அதைக் கேக்க முடியலை. உள்ளேபோய்..., அவனை மேலே இறுக வைக்க வேண்டாம்...., எல்லாம் வெளியே வந்துடட்டும்னு விலகி வந்துட்டேன். என்னால் வேற என்ன செய்ய முடியும் சொல்லுங்க.

“இருந்தாலும்...., இவங்களுக்கு இப்படி நடக்க வேண்டாம்...., எல்லாம் நம்ம கையிலயா இருக்கு...., கடவுள் விட்ட வழி. புள்ளை...., எதிலேயுமே பிடிப்பே இல்லாமல் இருக்கான்...., மனசு கிடந்தது தவிக்குது.

“இவனுங்களோட நல்ல மனசை புரிஞ்சுக்காமல்...., ஹம்...., யாரை குத்தம் சொல்ல...., சொன்னால், முதல்ல அந்த கடவுளைத்தான் சொல்லணும். ஆனா என்ன கஷ்டம் வந்தாலும்...., இந்த பாழா போன மனசு அவனைத்தான் கூப்பிடுது. இருந்தாலும்...., அனிதாவோடஅம்மா ஏதாவது ஒரு பதில் சொல்லி இருக்கலாம்...., பாப்போம்...”, ஆற்றாமையாக புலம்பி, கண் கலங்கினார்.

அதே நேரம்...., வாசலில் நிழலாடவே...., யார் என்று பார்க்க...., அங்கே நித்யா நின்றுகொண்டிருந்தாள். அவளைப் பார்த்தவுடன் தங்கள் பேச்சு நின்றுபோக...., “நித்யா...., வாம்மா...., உள்ளேவா...., ஏன் அங்கேயே நின்னுட்ட...”, கண்களைப் பின்னால் மேயவிட்டாலும்...., அவளை வரவேற்றார்கள்.

அவர்கள் பார்வையை உணர்ந்து...., “அவங்க ரெண்டுபேரும்...., அருண், ராஜுவை தேடித் போயிருக்காக...”, அவள் பதிலில்...., பெரியவர்களின் முகம் சூரியனாய் மலர்ந்தது.

‘ஆத்தா...., எங்க வேண்டுதலை கேட்டுட்டம்மா...’, மனதுக்குள் கடவுளை அழைத்தவர்...., “மனோ மேலதாம்மா இருக்கான். நீ போய் பாரு...”, அவளிடம் எதையும் துருவாமல் அவளை மேலே அனுப்பினார்.

தயக்கமாக உணர்ந்தாலும்...., வேறு வழியின்றி மாடி ஏறினாள் நித்யா. ‘மனோவின் செயல்பாடு என்னவாக இருக்கும்...? என்னைப் பார்த்து சந்தோஷப் படுவாரா...? அவரது செய்திகளுக்கு பதில் கொடுக்காததால் கோபப்படுவாரோ....?’, அவன் அறை வாயிலை அடையும் முன்னர்...., மனம், ஆயிரம் சிந்தித்தது.

அறை வாயிலை தட்டுவதற்கு அவசியமே இல்லாமல் கதவு திறந்தே இருக்க...., கவனமாக வலது காலை எடுத்து வைத்து அறைக்குள் நுழைந்தாள்.

அவள் அறைக்குள் நுழையவும்...., “நிது...”, என்ற அழைப்போடு அவன் வாசலைப் பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.

‘இது எப்படி...?’, என அவள் எண்ணும் முன்னர்...., கண்ணிமைக்கும் முன்னர்..., அவனது அணைப்புக்குள் இருந்தாள்.

அடுத்து என்ன என்று சிந்திக்கும் முன்னர்...., “நிது...., நிது...”, என்ற

புலம்பலோடு அவன் இதழ்கள் அவள் முகமெங்கும் ஆர்வமாகப் பதிய...., “மனோ...”, என்ற அவளது அழைப்பு..., அவனது இதழ்களுக்குள் சிக்கி...., அவனுக்குள் இறங்கியது.

ஒரு நிமிடம்...., இரண்டு நிமிடம்...., மூச்சுக்காற்றுக்கு பிரிந்த அவன் இதழ்கள்..., மறு நிமிடம்...., அதைவிட வேகமாக அவள் இதழ்களோடு சண்டை போட்டது.

எதை எதையோ எண்ணி வந்த நித்தி...., சத்தியமாக இப்படி ஒரு நிகழ்வை எண்ணிப் பார்க்கவே இல்லை. இதுவரை அதிக பட்சமாக அவளை அணைத்திருக்கிறான். அதுவும் அன்று, அவளைக் காணவில்லை என்ற பதட்டத்தில் மட்டுமே.

மற்றபடி...., சில வேளைகளில் ஆழமாக ஒரு பார்வை பார்ப்பான். ஆனால் இன்று....., அதிர்ச்சியில் அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் திகைத்திருந்தாள். முதல்கட்ட அதிர்ச்சி விலக...., அவள் விழி விரித்து அவனைப் பார்க்க....,

அவனோ...., அவளை முத்தமிடுவதிலேயே லயித்திருந்தான். அவன் இமைகள் மூடியிருக்க...., அவன் முகமோ...., அந்த இதழ் தீண்டலை எவ்வளவு விரும்புகிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியது. சட்டென அவளும் இமை மூடிக் கொள்ள...., அவன் முற்றுகையில் லயிக்கத் துவங்கினாள்.

அவன் கரங்கள் அவள் இடையை இறுக்கியதில்...., நித்தியை நனவுலகம் மீட்க...., அவன் கையைத் தடுக்க முயன்று தோற்று...., அவசரமாக அவன் நெஞ்சில் கைவைத்து அவனைத் தள்ளி விட்டாள்.

அவள் தள்ளிய பிறகே தன் நிலைக்குத் திரும்பியவன்...., “மனோ..”, என்ற அவளது திகைத்த அழைப்பில் முற்றிலும் கலைந்தான்.

“நிது...., உன்னைப் பாக்க முடியாத ஏக்கத்தில்...., என்னையே அறியாமல்...”, தன் செய்கைக்கு விளக்கம் சொல்ல முடியாமல் தடுமாறியவன்...., சட்டென அதை நிறுத்திவிட்டு....,

“ஐ லவ் யூ நிது...., நீ இல்லாமல் என்னால் இருக்கவே முடியாது. என்ன ஆனாலும் சரி...., உன்னை நான் திருமணம் செய்தே தீருவேன். எவ்வளவு தடைகள் வந்தாலும் சரி...., ஆனா...., என்னைப்பற்றி...., நான்

சொல்லப்போகும் உண்மை தெரிந்தால்...., நீ என்னை வெறுத்துட மாட்டியே...", கேட்டவன்...., அவள் கைகளைப் பற்றிக் கொண்டு...., அவளை அழைத்துவந்து படுக்கையில் அமர்த்தினான்.

அவள் காலடியில் மண்டியிட்டு அமர்ந்தவன்...., அவள் மடியில் தலை வைத்துக் கொண்டான். அவள் கரங்கள் அவன் சிகைக்குள் அலைய...., சற்றுநேரம் அதை ரசித்தவன்...., "நான் சொன்னதுக்கு பதில் சொல்லவே இல்லையே நிது...", அவளைப் பார்த்து, ஏக்கமாகக் கேட்டான்.

"என்ன சொல்ல....? உங்க மேல விருப்பம் இல்லாமல்தான்...., 'எல்லாத்துக்கும்' பதில் கொடுத்துட்டு உக்காந்து இருக்கேனா....?", அவன் கண்களுக்குள் பார்த்து அவள் கேட்க...., "லவ் யூ நிது...", சொன்னவன்...., அவள் இடையை கட்டிக்கொண்டு அவள் வயிற்றில் முகம் புதைத்தான்.

அவன் செய்கை சங்கடத்தை அளித்தாலும்...., எதுவும் சொல்லாமல் அமைதியாகவே இருந்தாள். "என் மெசேஜுக்கெல்லாம் ஏன் நிது பதில் அனுப்பவே இல்லை..? என்மேல் அவ்வளவு கோபமா...? இப்போ கோபம் போயிடுச்சா...? இப்போமட்டும் எப்படி வந்தியாம்...?", குறை பட்டான்.

"இப்போ கூட, நான்தான் தேடி வந்திருக்கேன்...., நீங்க வரவே இல்லை..", அவள் கோபமாக உரைக்க...., "யார் சொன்னா...? நான்தான் முதல்ல உன்னைத் தேடி வந்தேன்...", அவன் ரோசமாக உரைக்க...., திகைத்துபோய் அவனைப் பார்த்தாள் நித்தி.

***அலுவலகம் வந்த அருண்...., மனமே இல்லாமல் கட்டிடத்தினுள் நுழைந்தான். ராதா இல்லாத அலுவலகம்...., அவனால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

எதிரில் வந்த ராகவன் புன்னகை முகமாகச் செல்ல...., எரிச்சலாக வந்தது அருணுக்கு. 'அவங்க எல்லோரும் இருக்கும்போது எப்படி பேசிட்டு அலைஞ்சானுங்க. இப்போ அவங்க இல்லாதது...., இவங்களுக்கு குறையாவே இல்லையா....', திரும்பிய இடத்தில்...., மணி ஏதோ ஒரு பாட்டை பாடியவாறு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தான்.

எல்லோரையும் கடித்துக் குதறும் வேகம் இருந்தாலும்...., எதுவும் சொல்லாமல் சென்றான். சென்றவன்...., தன் அறைக்குச் செல்லாமல்

மனோவின் அறைக்குச் சென்று...., ராதா இருந்த இருக்கையை ஏக்கமாகப் பார்க்க...., பார்த்தவனால் பார்வையைத் திருப்ப முடியவில்லை.

ராதா, தன் இருக்கையில் அமர்ந்தவாறு அவனையே பார்க்க...., “ராது....”, கூவியவன்...., ஓடிப்போய் அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்றினான்.

“நல்லா ஊர் சுத்திட்டு என்கிட்டேயே வந்துட்டியா....? இதுக்கு எதுக்கு போகணும்...”, குறும்பாக சொல்லி, எதுவுமே நடவாததுபோல்...., அவளை அணைக்க...., இவனால் எப்படி இப்படி இருக்க முடிகிறது என சிந்தித்தாள் ராதா.

அவனை வெடுக்கென தள்ளிவிட்டு...., அவன் கரத்தில் இருந்து இறங்கி...., இருக்கையில் சென்று அமர்ந்தாள். “அப்போ...., நான் போனது உங்களுக்கு வருத்தமாவே இல்லையா...?”, கோபமாகக் கேட்டாள்.

“அதான் நீ இப்போ வந்துட்டியே...., எனக்கு அது போதும்...., பழசெல்லாம் பேச வேண்டாம்...”, அவள் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தவாறு...., அவள் கரத்தைப் பற்றிக்கொண்டு அவன் சொல்ல...., அவன் குரலில் இருந்த மாறுபாடு...., அவளை உலுக்கியது.

“என்னதான் இருந்தாலும்....., நான்தான் இளிச்சவாய்...., உங்களைப் பார்க்காமல் இருக்க முடியாமல் தேடி வந்திருக்கேன். நீங்க அதைக் கூட செய்யலை...”, கோபமாக உரைத்தாள்.

“நான் தேடி வரலன்னு உனக்குத் தெரியுமா...? அது ஏண்டி, மூணுபேரும் எங்கே போனாலும் ஒண்ணாவே போவீங்களா...? மனுஷன் ஆசையா பாக்க வந்தால்...., கடுப்பை கிளப்பாதே...”, பொய்க் கோபமாகச் சொல்ல...., விழித்தாள் ராதா.

***சைட்டுக்குச் சென்ற ராஜு...., வேலையை மேற்பார்வையிடாமல், அங்கிருந்த ஷெட்டுக்குள் சென்று இருக்கையில் அமர்ந்துகொண்டான். நினைவு முழுவதும் அனிதாவே சுற்றிவந்தாள்.

அங்கே இருந்த அனிதா, அவன் பார்ப்பான் என எதிர்பார்க்க...., விழி திறந்து அவளைப் பார்த்த ராஜுவோ...., “போ அனி...., முன்னெல்லாம்

அங்கே இருந்தாதான் இப்படி வந்து தொல்லை பண்ணுவ. இப்போ இங்கேயும் வந்துட்டியா...?

“உன்னைப் பாத்தாலே இப்போல்லாம் அழுகைதான் வருது. நீதான் என்னை விட்டு போயிட்டியே. நான் லூசுன்னுதானே உனக்கும் என்னைப் பிடிக்கலை. அருண் அப்போவே சொன்னான்...., எங்களையெல்லாம் யாருக்கும் பிடிக்காதுன்னு.

“ஆனா...., உனக்கு என்னைப் பிடிக்கும்தானே. பிறகு ஏன் போன...., அன்னைக்கு உன்னைப் பாக்க ஊருக்கு வந்தப்போ கூட...., உன்கிட்டே பேச முடியலை. என்னைப் பாக்க எப்போ வருவ...., இரு உனக்கு மெசேஜ் அனுப்புறேன்...”, வாய்விட்டு சொன்னவன்...., அவன் போனை எடுக்க, ஒரே தாவில் அதைப் பிடுங்கி எறிந்தவள்...., அவனைத் தாவி அணைத்தாள்.

“அனி...., அனி...., நீ தானா...., நிஜமாவே வந்துட்டியா...”, அவளுக்கு இணையாக, தானும் அவளை அணைத்துக் கொண்டான்.

“சேர்ந்தா பாக்க வந்தீங்க...”, பெண்களின் கேள்விக்கு...., மூவரும் சொன்ன பதில்...., “இல்லை...”, என்பதுதான். வியப்பாக அவர்களைப் பார்க்க...., “ஆனா அவங்களுக்குத் தெரியும்...”, என்றும் சொல்லவே...., குழம்பிப் போனார்கள். வீட்டிற்கு வந்து ஒரே இடத்தில் கூடியபிறகு கேட்க....,

“எங்களால் உங்களைப் பார்க்காமல் இருக்க முடியலை. அதான் பார்க்க வந்தோம்...”, என சாதாரணமாக உரைத்தார்கள் ஆண்கள்.

பிறகு... தங்களைப் பற்றிய உண்மையைச் சொல்ல...., பெரியவர்கள் சொன்னதைப் பற்றி அவர்களிடம் காட்டிகொள்ளாமல்...., கதை கேட்டார்கள். இறுதியாக சொல்லி முடித்து...., பெண்களின் முகம் பார்க்க...., அதில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் போகவே...., குழம்பிப் போனார்கள்.

அதைக் கண்டுகொள்ளாமல்.... “அத்தோட...., நம்ம கம்பெனியில் வேலை செய்யும் எல்லோருமே, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தவறு செய்து...., சிறிதாகவோ...., பெரிதாகவோ தண்டனை அடைந்தவர்கள் தான்.

“அதிலும் ராகவன்...., காலேஜ் கலாட்டாவில்...., யாரோ ஒருவன் செய்த கொலைப்பழிஇவன் மேல் விழுந்ததில்...., தண்டனை அடைந்தவன். ஆனா...., அவனோட வக்கீல் திறமையா வாதாடி அவனை சீக்கிரமே விடுவிச்சுட்டார்.

“அத்தோட...., அந்த ஆபீஸ் பையன் மணி...., அந்த ஆயா...., அவங்க அப்பா, வீட்டுக்காரர், எல்லாம் ஜெயில்ல தான் இருக்காங்க. அன்னைக்கு நாம முதல்நாள் வெளியே போக பிளான் போட்டுட்டு...., நீங்க வீட்டுக்கு போன பிறகு...., மணியோட அப்பா...., அவனை வரச் சொல்லி ஒரே பிரச்சனை.

“அத்தோட...., எங்களையும்...., எங்களோட கடந்தகாலத்தையும் சொல்லி...., ரொம்பவே காயப்படுத்திட்டார். கொஞ்சம் நஞ்சம் இருந்த தைரியமும்...., எனக்கு அப்போ...., அத்தோட வடிஞ்சு போய்டுச்சு.

“அதான்...., அன்னைக்கு நாங்கல்லாம் அப்படி...., ஒட்டாமல் நடந்துகிட்டோம். ஆனா இப்போ நினைக்கும்போது...., எங்க நேசத்தின்மேல் நாங்க நம்பிக்கை வைக்கலையோன்னு தோணுது. ஆனாலும்...., எல்லாம் நல்லபடியா நடக்கணும்னு...., மனசு அடிச்சுக்குது...”, மனோ சொல்ல, நித்யா அவன் கரத்தை அழுத்தினாள்.

சிறு அமைதிக்குப் பிறகு...., பெண்களின் முகத்தைப் பார்த்தவன்...., “ஏய்...., நிது...., உங்களுக்கு ஏற்கனவே எங்க கடந்தகாலம் தெரியுமா...?”, அவன் கேட்க...., பெண்களின் பார்வை பெரியவர்களிடம் சென்று மீண்டது.

“அம்மாவா...?”, ஆச்சரியமாக அவன் கேட்க...., அவர்கள் ‘ஆம்’ என்று சொல்லவே... திகைத்துப் போனார்கள். தாயிடம் சென்றவர்கள், “அம்மா...., நீங்க எல்லாம்...., எங்களைப் பெற்றவர்களை விட ஒரு படி மேல போய்ட்டீங்கம்மா...”, நெகிழ்வாகச் சொல்லி அணைத்துக் கொண்டான்.

அதன் பிறகு...., ஆண்களின் முடிவு என்னவென்று பெண்கள் கேட்க...., என்ன ஆனாலும் அவர்களை இனிமேல் விட்டுகொடுக்க முடியாது எனவும்...., இதற்குமேல் ஒரு நாள் கூட காத்திருக்க முடியாது எனவும் கூறி...., அவர்களைப் பெற்றவர்களைப் பார்க்கவேண்டும் என்று உரைத்தார்கள்.

ஆனாலும் அவர்களுக்குள் நிறைய சந்தேகங்கள்...., “நிது...., நீங்க எல்லாம் லீவிலேயும் சேர்ந்தே இருப்பீங்களா...? எனக்கு ஒண்ணு மட்டும் உறுதியா தெரியும். நீங்க அக்கா தங்கச்சி இல்லன்னு. ஆனாலும் எப்படி சேர்ந்தே இருக்கீங்க...?”, தன் சந்தேகத்தைக் கேட்டான் மனோ.

“நாங்க ஒரே ஊர்...., ஒரே இடத்தில் கொஞ்சம் தள்ளித் தள்ளிதான் வீடும். சோ...., நாங்க பிரியவேண்டிய அவசியமே இல்லை...”, நித்யா சொல்ல...., மனோவின் முகம் கொஞ்சம் வாடி, சரியானது.

அவன் முக மாற்றத்தைப் பார்த்த நித்யா பொங்கிய சிரிப்பை அடக்கியவள்...., எதுவும் தெரியாதவள் போன்று முகத்தை வைத்துக் கொண்டாள்.

மனோ தாயைப் பார்க்க....., அவனைத் தனியாக அழைத்தவர்கள், “முதல்ல நித்யா வீட்டில் பேசி சம்மதம் வாங்குப்பா. ஒரு பெரியவங்க ஒத்துக்கிட்டா...., மத்தவங்க ஒத்துக்க நாள் ஆகாது. எனக்கென்னவோ...., இப்போ இவங்க இங்கே வந்ததே பெரிய நம்பிக்கையைக் கொடுக்குது...”, அவனுக்கு ஒரு வழியைக் காண்பித்தார்.

“அதனாலதான் நாங்களும் அன்னைக்கு ஒரு வீட்டில் மட்டும் பேசினோம். அவங்க முதல்ல யோசித்து ஒரு முடிவு சொல்லட்டும்னுதான் விலகி வந்தோம்...”, அவர் இழுக்க,

“இல்லம்மா...., எல்லா வீட்டிலேயும் பேசிடலாம்னு முடிவு பண்ணிட்டேன். நான் முதல்ல போறேன். பிறகு எல்லோரும் போய்க்கலாம்”, அவன் சொல்ல....,

“இல்லப்பா அது சரிவராது. பெரியவங்களோட போனால் தான் நல்லது..”, மீண்டும் வலியுறுத்தினார்.

“நீங்க சொல்லுறது எனக்கு புரியுதும்மா. ஆனா நம்ம ஐயாகிட்டே இன்னும் பேசவே இல்லை. எனக்கு மனசே கேக்கலை...”, குற்றவுணர்வாகச் சொன்னான்.

அவனைப் புரிந்துகொண்ட விதமாய் தலையை அசைத்தவர்...., “எதுக்கும் இப்போ பேசிடேன்...”, அவனைத் தூண்டினார்.

சம்மதமாக தலை அசைத்தவன்...., "முதல்ல அவங்களை அனுப்பிட்டு பிறகு பேசலாம்", சொன்னவன்..., வெளியே வந்தான்.

"நிது...., நீங்க இப்போ ஊருக்கு கிளம்புறீங்களா? இல்ல இங்கே வீட்டுக்குப் போறீங்களா...?".

"இன்னைக்குதான் ஊரில் இருந்து வந்தோம். இன்னும் வீட்டுக்கு கூட போகலை. சோ...., இங்கேதான் போறோம். தாமரை இப்போவே பத்துமுறை போன் பண்ணிட்டாங்க. அப்பா அவங்ககிட்ட, நாங்க இங்கே வரோம்னு சொல்லியிருப்பாங்க போல...., அதான் இவ்வளவு கால்...", அவள் கண்களில் வழிந்த குறும்பை அவன் உணர்ந்து கொள்ளவில்லை.

"ஓ...., ஓகே, அப்போ வாங்க. நானே உங்களை டிராப் பண்ணுறேன். அப்படியே...., உங்க அப்பாவோட போன் நம்பர் தந்துட்டு போ. அவங்க கிட்டேயும்...., பேசணும்னு ஒரு வார்த்தை சொல்லிடுறேன்", தன் அலைபேசியை எடுத்தவாறு அவன் சொல்ல...., மூன்று பெண்களும் கலவரமாக ஒருவரோடு ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு ஒரு முடிவிற்கு வந்தவளாக...., "நோட் பண்ணிகோங்க...., 986..... அவள் சொல்லச் சொல்ல நம்பரை குறித்துக் கொண்டவன்...., உங்க அப்பா எப்போ ஃப்ரீயா இருப்பாங்க...? அப்படியே ராதா, அனிதா, இவங்களோட அம்மா, அப்பா எல்லோரையும் ஒரே இடத்தில் மீட் பண்ண முடியுமான்னு கேக்கணும்", அடுத்தடுத்து திட்டமிட்டான்.

"ஓ...", ஒற்றை வார்த்தையில் கேட்டுகொண்டவள்...., "நீங்க பேசுங்க....., சரி கிளம்புறோம்...", பெண்கள் அனைவரும் கிளம்பிவிட்டார்கள்.

யார் அவர்களை விடப் போவது என யோசிக்க...., இறுதியாக ஆண்கள் மூவருமே கிளம்பிவிட்டார்கள். பெண்கள் நமுட்டு சிரிப்பு சிரித்தாலும்...., எதுவும் சொல்லாமல் முன்னால் நடந்தார்கள்.

அவர்கள் வீட்டின் முன்னால் காரை நிறுத்தவே...., "அட...., அம்மாங்க எல்லாம் மாப்பிள்ளைத் தம்பிங்களோடையே வராங்களே...", கூச்சலோடு சோலை கிளம்ப....,

"இப்போ உன்னை ஆரத்தி எடுக்க இங்கே யாராவது கூப்பிட்டாங்களா...., இல்லல்ல...., பேசாம போய்டு....,

மாப்பிள்ளைங்களாம்...., பிச்சுப்புடுவேன்...”, தாமரையின் குரலில், வந்த வேகத்தில் வீட்டுக்குள் ஓடினாள் சோலை.

“இந்த அம்மாவுக்கு ஏன் இம்புட்டு காண்டு...”, என்ற முனகலோடு தான் சென்றாள்.

பெண்கள் மூவரும் காரிலிருந்து இறங்கிக் கொள்ள...., “உள்ளே வாங்க..”, பெண்கள் அழைக்க...., “எல்லாம் நல்லபடியா முடியட்டும்..., வரோம்”, சொன்னவன் காரை கிளப்ப முயன்றான்.

செல்லும் முன்னர்...., “நிது...”, மனோ அழைக்க...., காரைச் சுற்றிவந்து, ஓட்டுனர் இருக்கையின் அருகே குனிந்தாள்.

“என்ன...?”, மெல்லிய குரலில் கேட்க....,

“உங்க அப்பா புரிஞ்சுப்பாங்க தானே...., எங்களைப் பற்றி அவருக்குத் தெரியுமா..?”, இவ்வளவு நேரம் இருந்த தைரியம் வடிந்தவனாகக் கேட்டான்.

நித்யா காருக்குள் பார்க்க...., அருணும், ராஜுவும் காரிலிருந்து இறங்கி...., தங்கள் இணைகளோடு பேசிக்கொண்டிருக்க...., அவர்கள் கவனம் இங்கே இல்லை என்பதை உறுதிபடுத்திக் கொண்டவள்...., “என்ன, பயம்மா இருக்கா...?”, கிசுகிசுப்பாகக் கேட்க...., பரிதாபமாக தலையை அசைத்தான் மனோ.

உண்மையான மனோவின் குணம் இப்பொழுதுதான் வெளியே வருகிறது என்பதை உணர்ந்தவள்...., இருக்கும் சூழல் தடுத்தாலும்...., அதையும் மீறி..., அவன் அருகில் காருக்குள் இன்னும் குனிந்தவள்...., அவன் டிஷர்ட்டைப் பிடித்து அருகில் இழுத்தவள்....., அவன்..., அவள் என்ன செய்யப்போகிறாள் என்று சுதாரிக்கும் முன்பு...., அவன் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்து, ஒரு ஆழமான முத்தம் பதித்தவள்...., அதே வேகத்தில் விலகினாள்.

அவசரமாக என்றாலும்...., அந்த நேரம் அது அவனுக்குத் தேவையாய் இருந்தது. அந்த முத்தம் கொடுத்த தைரியம் அதிகம் தான் என்பதை அவன் உணர்ந்துகொண்டான். அவளை நிமிர்ந்து பார்த்தான்.

அவன் கண்களுக்குள் பார்த்து...., “எதுக்கு பயம்...? தைரியமா பேசுங்க.

என்ன நடந்தாலும்...., உங்களோட நான் இருப்பேன்…”, சொன்னவள், அருண், ராஜு வருவதை உணர்ந்து, வேகமாக விலகி நின்றாள்.

அவளிடம் தலையசைப்பில் விடை பெற்றவன்...., காரைக் கிளப்பிச் சென்றான். நித்தியின் வீடு தனக்கு வைத்திருக்கும் அதிர்ச்சியை அப்பொழுது அவன் அறிந்திருக்கவில்லை.

***

# மௌனம் – 31.

நித்தியின் வீட்டின் கூடத்தில் அமர்ந்திருந்த மனோ, உள்ளுக்குள் சற்று வியர்த்து வழிந்தான். அருகில் அமர்ந்திருந்த அருண் அலைபேசியில் மூழ்கியிருக்க, ராஜு வேடிக்கை பார்ப்பதில் முனைப்பாய் இருந்தான்.

வீட்டுப் பெரியவர்கள் மறுபுறம் அமர்ந்திருக்க...., அவர்களும் சற்று அமைதியாகவே இருந்தார்கள். அனைவரும் சரியாக இருக்க, தான் மட்டும் சரியில்லாமல் இருப்பதுபோன்ற ஒரு தோன்றல்.

நாக்கு வறண்டு...., தண்ணீருக்காக ஏங்கியது. அவன் எண்ணி முடிக்கும் முன்னர்...., அவனுக்கு ஒரு குழந்தையின் மூலம் தண்ணீர் கொடுத்து விடப்பட்டது. சற்று வியந்தாலும்...., வேகமாக அதை வாங்கி அருந்தினான்.

“ஏய்...., உன் ஆளு ரொம்ப பாவண்டி....., வேர்த்து வழிந்தே செம தாகம் ஐயாவுக்கு...”, அனிதா, நித்யாவை கேலிசெய்ய...., அவளை முறைத்தாள்.

“ஏன் சொல்லமாட்ட...., உன் ஆளைப்பாரு...., என்னமோ ஆக்ராவை சுத்திப்பாக்க வந்தவராட்டம் வேடிக்கை. என் ஆளுதான் பொறுப்பா உக்காந்து இருக்கார்...”, கெத்தாக உரைத்தாள்.

“ஆமா...., ஆமா...”, நொடித்துக் கொண்டாள் அனிதா. அனிதாவிற்கு பதில் கொடுத்துவிட்டாலும்...., மனோவின் செய்கை நித்யாவை கவலை கொள்ளவும், மனதுக்குள் சிரிக்கவும் வைத்தது.

“நாம இங்கே புலம்பிட்டு இருக்கோம்...., இவளை எங்கேடி...”, அவர்கள் ராதாவைத் தேட...., அவளோ அலைபேசியில் மூழ்கி இருந்தாள்.

“உஷ்ஷ்ஷ்ஷ்....”, நித்யாவிடம் வாயின் குறுக்காக விரல் வைத்து எச்சரித்தவள்...., பூனை நடை நடந்து...., ராதாவின் பின்னால் போய் நின்றாள்.

நித்யா அவளை பின்னால் இழுக்க முயல..., அதை அனாயாசமாக சமாளித்தவள்...., ராதாவின் முதுகின் வழியாக அலைபேசியை எட்டிப் பார்க்க...., ‘வாட்ஸ்ஆப்’பில் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தாள் ராதா.

செய்தி பின்வருமாறு இருந்தது...., “என்ன செய்யிற...?”.

“சும்மாதான் இருக்கேன்...”.

“ஏன்...”.

“என்ன ஏன்...”.

“ஏன் சும்மா இருக்கன்னு கேட்டேன்...”.

“வேற என்னதான் செய்ய...?”.

“நீ மனசு வைத்தால் என்னென்னவோ செய்யலாம்...”.

“ச்சீ...”, இப்படியாகப் போக...., “நித்தி...., இவ போன்லயே ரொமான்ஸ் ஓட்டுறாடி...., விட்டா இதிலேயே குடும்பம் நடத்தி, குழந்தையும் பெத்துடுவா”, அனிதாவின் குரல் அருகில் ஒலிக்க...., அடித்து பிடித்து எழுந்தாள் ராதா.

“அனி...., என்ன வேலை இது...”, ராதா கடுப்படிக்க....,

“அனி...., ஏண்டி அவளையே நோண்டுற...?”, நித்யா கோபப்பட்டாள்.

“ஆமா...., குடும்பம் நடத்திய இவளை விட்டுடு...., வேடிக்கை பாத்த என்னை குத்தம் சொல்லு...”, நொடித்துக் கொண்டாள் அனிதா.

“அனி...”, ராதா கோபமும், சங்கடமும் கலந்து அழைக்க....,

“அதெப்படிடி...., ச்சீ...., யா...., அம்மாடியோ...., இந்த பூனையும் பால் குடிக்குமான்னு உக்காந்துட்டு...., பீரே அடிக்கிறியேடி...”, அனிதா குரல் உயர்த்த, அவள் வாயை வேகமாக மூடினாள் ராதா.

“ஹையோ...., கத்தித் தொலையாதடி...”, சின்னக் குரலில் அவளை கண்டிக்க....,

“என்னால் இதைத்தான் செய்ய முடியும். கிடைக்கிற கேப்பில் எல்லாம் குடும்பம் நடத்த முடியுமா...?”, அனிதா அங்கலாய்க்க....,

“ஆமா...., முடியாமல்தான்...., ரெண்டு நாள் முன்னாடி ராஜு ராத்திரி

உன் ரூமுக்கு வந்தாரா...?", ராதா கேட்க...., இப்பொழுது அனிதா அலறியவாறு அவள் வாயை மூடினாள்.

"அம்மா பரதேவதையே...., சத்தம் போடாதே. அம்மா காதில் விழுந்தால் தோலை உரிச்சுடுவாங்க", இப்பொழுது அலறுவது அனிதாவின் முறையானது.

"இது எப்போடி நடந்தது...?", நித்யா வியக்க....,

"அதையேன் கேக்கற...., ரெண்டு நாள் முன்னாடி ராத்திரி எதேச்சையா ஏதோ சத்தம் கேட்டுதேன்னு மாடிக்குப் போனால்...., அங்கே இவளோட ஆளு...., தண்ணி தொட்டி கிட்டே பதுங்கி உக்காந்து இருக்கார். பாக்கவே பரிதாபமா இருந்தது.

"நான்தான் மாடி கதவை சும்மா சாத்தி வச்சுட்டு வந்து படுத்துட்டேன். அதுக்குப் பிறகு என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது...", கண்ணைச் சிமிட்டி அப்பாவியாக முகத்தை வைத்துகொண்டு சொல்ல...., ராதாவின் முகத்தில் குறும்பு கூத்தாடியது.

"அனி...", நித்யா நம்ப முடியாமல் அழைக்க....,

"நித்தி...., சத்தியமா தப்பா எதுவும் நடக்கவே இல்லை. சும்மாதான் வந்தார்...", அவர்கள் நம்பாமல் பார்க்கவே....,

"அன்னைக்கு என்ன நடந்ததுன்னா...", அன்றைய நாளுக்கு சென்றாள்.

அன்று காலையில் மனோ, நித்தி கொடுத்த அலைபேசிக்கு முயற்சிக்கும் முன்னர்...., அவனது ஐயா ஈஸ்வர்க்கு போன் செய்ய...., அவன் அழைப்பை ஏற்றவர்...., என்ன என்று வினவ...., அவன் சொன்னவற்றைக் கேட்டவர்...., தற்பொழுது அவர் முக்கியமான விஷயமாக வெளியூர் போகவேண்டி இருப்பதால்...., அவனையே பெண் வீட்டில் பேசுமாறு சொல்லி வைத்தார்.

அத்தோடு...., நித்தியின் தந்தை கண்டிப்பாக ஒத்துகொள்வார் என்றும், அப்படி ஒத்துக்கொள்ளவில்லை என்றால்...., தான் பேசுவதாக சொல்லி வைக்கவே...., அவர் வரவில்லையே என்று சற்று ஓய்ந்து போனான்.

அதே மனநிலையில் நித்தி கொடுத்த எண்ணுக்கு அழைக்க....,

அந்தப்பக்கம் கேட்ட “ஹலோ...”, என்ற அழைப்பே அவனுக்கு சரியாகத் தோன்றவில்லை.

அந்தக் குரலில் இருந்த கடுமையும்...., அந்த குரலின் கனமும் அவனைத் தயங்க வைத்தாலும்...., அதைவிட நித்யாவின் மேல் இருந்த காதல் அதிகமாக இருக்க...., தன் தயக்கத்தை உதறிவிட்டு, அவரிடம் பேசினான்.

தான் யார் என்பதையும், அவரிடம் பேசவேண்டும் என்பதையும் சொல்லி முடிக்கும்வரை...., எதிரில் இருந்து எந்த சத்தமும் இருக்கவில்லை. பேசி முடித்தவன்...., “சார்...”, தயக்கமாக அழைக்க....,

“மேலே சொல்லுங்க...”, தெனாவெட்டாக கேட்டார்.

“இல்ல...., உங்ககிட்டே பேசணும். நீங்க எப்போ ஃப்ரீன்னு சொன்னால்...”, அவன் இழுக்க....,

“நான் ஃப்ரீயா எல்லாம் இருக்க முடியாது தம்பி. நீங்க ஒரு நல்ல நாள் பாத்து கிளம்பி வாங்க...., எல்லாம் நேரிலே பேசிக்கலாம்...”, சொன்னவர் அலைபேசியை வைத்துவிட்டார்.

அவரது முதல் வார்த்தையிலேயே முகம் சுருங்கியவன்...., அடுத்து அவர் சொன்ன ‘நல்ல நாள் பார்த்து வாங்க’ என்பதில் பாதியை மட்டுமே கவனித்தான். அதாவது ‘நேரில் பேசிக்கலாம்’ என்பதை மட்டுமே கவனித்தான்.

மனோவின் முகத்தையே கவனித்துக்கொண்டிருந்த பெரியவர்களுக்கும் ராஜுவிற்கும், அருணுக்கும், எதுவோ சரியில்லை என்பது புரிந்தது. அவர்கள் என்னவென்று கேட்க....,

“நேர்ல பேசிக்கலாம்னு சொன்னார். நாம போய்ப் பாக்கலாம்...”, சுரத்தே இல்லாமல் மொழிந்துவிட்டு அறைக்குச் சென்றான்.

போகும் வழியிலேயே...., ‘இந்த மனுஷன் என்ன பேசினார்...? நான் பேசினதை ஒழுங்கா கவனிச்சாரா இல்லையா? பொண்ணோட கல்யாணத்தைப் பத்தி பேசணும்னு சொல்லுறேன்...., ஃப்ரீயா எல்லாம் இருக்க முடியாதுன்னு சொல்லுறார்.

‘கடைசியா கிளம்பி வாங்கன்னு சொல்லுறார்...., ஏதாவது அடியாள் வச்சு அடிக்கப் போறாரா என்ன...? மனுஷன் குரலைக் கேக்கவே..., என்னவோ தாரைக் குடிச்ச மாதிரி கரகரன்னு...., இருக்கு...., ஹம்...., முன்வைத்த காலை பின்வைக்க முடியாது. என்னன்னு போய் பாத்துடுவோம்...’, தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

அருண் அப்பொழுது வெளியே சென்றுவிட...., ராஜு தன் அறைக்குச் சென்றவன்...., தண்ணீர் தாகமெடுக்கவே...., கீழே இறங்கி வர...., “என்ன மனோம்மா...., மனோ முகமே சரியில்லை. ஏதாவது பிரச்சனையா இருக்குமோ...?”, கவலையாக கேட்டார் அருணின் தாய்.

“இவங்க கல்யாணம் முடியும் வரை...., நெஞ்சுக்குள் இருக்கும் நெருப்பு நமக்கு அணையவே போறதில்லை. மத்தவங்க மாதிரி...., அவமானப்படுத்தாமல்...., தன்மையா சொல்லிட்டா பரவாயில்லை. ராஜு புள்ளையை நினைத்தால்தான் பயம்மா இருக்கு...”, அவர் சொன்னதைக் கேட்ட ராஜுவிற்கு மனதுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

வழக்கமாக தன் பயத்தை மனோவிடமோ, அருணிடமோ வெளிப்படுத்துபவன், அன்று அனிதாவிடம் சொல்லவேண்டும்போல் இருக்கவே அவளைக் காண விழைந்தான்..

ஆனால், ஒரு வேலையைச் சொல்லி அருண் அனுப்பிவிடவே...., பகலில் செல்ல முடியாமல் போனது. மாலையில் நண்பர்களோடு அரட்டை, தாயுடன் கொஞ்சல் எனக் கழிந்தாலும்...., அனிதாவைக் காணவேண்டும் என்ற மோகம் மட்டும் அதிகரித்துக் கொண்டே போனது.

ஒரு வழியாக தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு உறங்கச் சென்ற பிறகும், உறக்கம் பிடிக்காமல் போகவே...., எழுந்து அவளைக் காணச் சென்றான். நேரடியாகச் செல்லத்தான் முதலில் எண்ணினான். ஆனால்...., முதல் முறையாக, செய்வது தவறென்று தோன்றவே...., பைப் பிடித்து மாடியேறி விட்டான்.

காதல் வந்தால் கள்ளத்தனமும் கூடவே சேர்ந்து வந்துவிடும் போல...., அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல்...., மாடியில் குறுக்கும் நெடுக்குமாக நடக்க...., அப்பொழுது மாடிக் கதவு திறக்கும் ஓசை கேட்கவே...., வேகமாகச் சென்று தண்ணீர் தொட்டியின் அருகில் பதுங்கினான்.

வந்தவள் அனிதாவாக இருக்குமோ என்ற எண்ணத்தில் எட்டிப் பார்க்க...., வந்தவள் ராதா என்பதை அறிந்து சோர்ந்து போனான். அவள் திரும்பிச் சென்றவுடன்...., அவள் சென்ற கதவைத் திறந்து பார்க்க...., அது திறந்துகொண்டது.

கண்களை உள்ளே செலுத்த...., ராதாவோ...., “அனி..., தூங்கிட்டியாடி...”, என ஒரு அறையின் முன்னால் நின்று கேட்பதும்...., “இல்ல...., தூங்கப் போறேன்...”, அவள் பதிலும் காதில் விழ...., எப்படி அனிதாவைக் காணப்போகிறோம் என்று திகைத்து நின்றவன், இனிதாக அதிர்ந்து போனான்.

ராதா சென்றவுடன்...., வேகமாகச் சென்று அனிதாவின் அறைக்கதவைத் திறந்து நுழைந்தவன்...., கதவின் மீதே சாய்ந்து கொண்டான். கதவு திறந்த சத்தத்தில் படுக்கையில் இருந்து திரும்பிப் பார்த்த அனிதா...., உள்ளே நின்ற ராஜூவைப் பார்த்து திகைத்தாள்.

“ராஜூ என்ன இந்த நேரம்...., இங்கே என்ன செய்யிறீங்க...? இப்போ எதுக்காக வந்தீங்க...?”, வேகமாகச் சென்று விளக்கை அணைத்தவள்...., விடிவிளக்கை ஏற்றிவிட்டு...., கதவைத் திறந்து எட்டிப் பார்த்தவள்...., அவனிடம் படபடத்தாள்.

அவனோ அவளது தவிப்பைக் கண்டுகொள்ளாமல்...., அமைதியாகவே நின்றான். “என்ன கேட்டுட்டே இருக்கேன்...., பேசாமலே இருக்கீங்க...”, அவனை உலுக்கினாள்.

“இப்போ எதுக்கு இங்கே வந்தீங்கன்னு கேட்டேன். யாராவது பார்த்தால் என்ன ஆகுறது...? புரிஞ்சுக்காமல் நடந்துக்கறீங்க...?”, அவனைப் பற்றி தெரிந்ததால்...., சற்று கோபமாகக் கேட்டாள்.

அவள் கோபத்தில் சட்டென முகம் வாட...., அதை மறைக்காமல் வெளியிட்டவன்...., “சாரி...., நான் போறேன்...”, சொன்னவன் அங்கிருந்து வெளியேற முயன்றான்.

அவன் செய்கை அவளை கவலையுறச் செய்ய...., அவனைத் தடுத்தவள்...., “எதுக்கு வந்தீங்கன்னு சொல்லிட்டு போங்க..”, என்றாள்.

“நீதான் கோபமா இருக்கியே...”, அவளை குற்றம் சொல்ல...., “அப்போ நான் கோபமா இருந்தா சொல்ல மாட்டீங்களா...?”, அவனிடமே

திருப்பினாள்.

“இல்ல...., அதென்னமோ தெரியலை...., எல்லோரும் என்னைப் பற்றித்தான் ரொம்ப கவலைப்படுறாங்க. அம்மா...., மனோ...., அருண்...., எல்லோருமே..., ‘ராஜு எப்படி இருப்பான்’னே பேசிக்கிறாங்க. ஏன் அப்படின்னு எனக்குப் புரியவே இல்லை.

“சில நேரம்...., நீ என்னைவிட்டுப் போய்டுவியோன்னு பயம்மா இருக்கு. அதான்...., அதான்...”, மேலே என்ன சொல்வது என்று தெரியாமல் நிறுத்தினான்.

“ம்ச்...., என்ன ராஜு இது...? நான் ஏற்கனவே சொல்லிட்டேன்...., யார் என்ன சொன்னாலும் சரி...., நீங்கதான் என் புருஷன்னு...., இன்னும் இப்படியே கேட்டால் நான் என்னதான் செய்யட்டும். அதெல்லாம் உங்களை விட்டுப் போக மாட்டேன் போதுமா....?”, அலுப்பாகச் சொன்னவள்...., அவன் முகம் தெளியாததைக் கண்டு இறுதி வாக்கியத்தை சேர்த்தே சொன்னாள்.

அரை மனதாக ஒத்துக் கொண்டவன்...., “ம்..., சரி நான் கிளம்புறேன்...”, சொன்னவன் வெளியேற முயன்றான்.

“ஹையோ இருங்க...”, சொன்னவள்...., வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, யாரும் இல்லை என்பதை உறுதிபடுத்திவிட்டு போகச் சொன்னாள். “இதுதான் நடந்தது....”, வேறு எதுவும் இல்லை என அழுத்தமாக உரைக்க, மற்றவர்கள் அமைதி ஆனார்கள்.

“அனி...”, நித்தி நம்ப முடியாமல் அழைக்க....,

“ம்ச்...., சொன்னா நம்பு நித்தி. அவருக்கு ‘அந்த’ அளவுக்கெல்லாம் தைரியம் பத்தாது. நீவேற என் பயம் புரியாமல்...., எனக்கு கொஞ்சம் பயம்மா இருக்கு நித்தி....”, எதையோ சொல்லத் துவங்கியவள் பாதியில் நிறுத்திவிட்டாள்.

அவள் சொல்லாமல் விடுத்த செய்தி என்னவாக இருக்கும் என சற்று யூகித்த நித்தி, ‘இதென்ன புதுக் குழப்பம்’, என கலங்கிப் போனாள்.

நித்யா முகத்தில் கவலையைப் பார்த்த அனிதா...., “அட விடு...., நீ எதுக்கு இவ்வளவு ஃபீல் பண்ணுற...., எல்லாம் பாத்துக்கலாம். இப்போ

உன் ஆளைப் பாரு..., மனுஷன் டென்ஷனில் வெடிச்சுடப் போறார். அப்பா எங்கே...? மூர்த்திப்பா நேத்து நைட்டே வந்துட்டாரே. இன்னும் இங்கே வரக் காணோம்...”, அவள் கேட்டு முடிக்கும் நேரம்....., ஹாலுக்குள் பிரவேசித்தார்...

‘ஈஸ்வர்’ என்று டிபார்ட்மெண்ட்டில் அறியப்படும் ‘ஈஸ்வர மூர்த்தி’. அவரைப் பார்த்தவுடன்...., “ஐயா...., நீங்க இங்கே...., எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. புது தெம்பே வந்த மாதிரி இருக்கு ஐயா...., எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க....”, மூவரும் அவர் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினர்.

அவர்கள் அவ்வாறு செய்யவே...., தன் பின்னால் நின்ற மந்திர மூர்த்தியை அவர் ஒரு அர்த்தமுள்ள பார்வை பார்க்க...., மந்திர மூர்த்தியோ..., புரிந்ததற்கு அடையாளமாக தலையசைத்து சிரித்தார்.

“வாங்க பெரியத்தான்...., வாங்க சின்னத்தான்...”, அனிதாவின் தாய், வந்தவர்களை வாசலுக்கே வந்து அழைக்க...., அங்கிருந்த அனைவரும் சற்று குழம்பிப் போனார்கள்.

“நல்லா இருக்கியா...? அவரிடம் கேட்ட ஈஸ்வர்...., “எல்லோரும் வாங்க..., உள்ளே போய் பேசலாம்...”, அனைவரையும் நடுக் கூடத்துக்கு அழைத்துச் சென்றார்.

கூடத்தில் விரித்திருந்த ஜமுக்காளத்தில் சென்று நின்றவர்...., “எல்லோரும் அப்படி உக்காருங்க. மனோ...., அருண்...., ராஜு...., அம்மா அப்பாவோட சேர்ந்து இருங்க...”, சொன்னவர்...., “மந்திரம்...., எல்லோரையும் வரச் சொல்லு...”, அவர் சொல்லவே...., ஈஷ்வரின் மனைவி, மந்திரத்தின் மனைவி, அனிதாவின் தாய்...., அனைவரும் வந்து அமர்ந்தார்கள்.

தங்கள் எதிரில் இருந்த அனைவரையும் திகைப்பு மாறாமல் மனோ பார்க்க...., அவன் பார்வையை உணர்ந்த ஈஸ்வர்...., “என்ன மனோ...., பேசணும்னு சொல்லிட்டு அப்படியே திகைச்சுபோய் பார்த்துட்டே இருந்தால் எப்படி..?

“என்ன சொல்லவந்தியோ அதை சட்டு புட்டுன்னு சொல்லு...., மேற்கொண்டு பேசணுமில்ல...., மீசையை நீவியவாறு அவர் சொல்ல...., வார்த்தைகள் தொண்டைக்குள் சிக்கி சண்டித்தனம் செய்தது அவனுக்கு.

அங்கே ஈஸ்வர் வந்தவுடன் நடந்த விஷயங்களைப் பார்க்கையில்...., நித்யாவின் தாய் என தாங்கள் நினைத்த...., அனிதாவின் தாயின் அழைப்பும்...., ஈஸ்வருக்கு அங்கே கொடுக்கப்பட்ட மரியாதையும், அவர் பேச்சுக்கு இருந்த மதிப்பும்...., எங்கோ இடறியது.

அனிதாவின் தாயின் ‘பெரியத்தான் சின்னத்தான்’...., என்ற அழைப்பு..., அது உணர்த்திய செய்தி...., சற்று தலை சுற்றிப் போனது. அப்படியென்றால்...., நித்யா...., ராதா...., அனிதா...., எல்லோரும் ஒரே வீட்டுப் பிள்ளைகளா...? அப்படியென்றால்...., நாங்கள்.....,

மேலே எண்ணவே பயமாகவும், தயக்கமாகவும் இருந்தது. நித்யாவின் பெற்றவர்களை சந்தித்துப் பேசி...., தங்கள் நிலைக்கு விளக்கம் சொல்லி...., அவர்களை பெண் கேட்டு...., தங்கள் வாழ்க்கையைப் பற்றி பேச வந்தால்...., இப்பொழுது என்னவென்று யாரிடம் சொல்ல...?

தங்கள் வாழ்க்கையைப் பற்றியும், நிலை பற்றியும் ஈஸ்வர் ஐயாவுக்குத் தெரியாததா...? அவரிடமே தங்களைப் பற்றி விளக்கவா இங்கே வந்திருக்கிறான்...?

வாழ்க்கைக்கு வழிகாட்டிய ஆசானிடமே...., வாழ்க்கைத் துணையும் கேட்டுப் பெறவா...? இது சரியா...? நடக்குமா...? என்ன சொல்வார்...? ஏற்கனவே விஷயத்தை சொல்லிவிட்டேனே...., அப்பொழுது ஏன் ஐயா எதுவும் சொல்லவில்லை...?

இப்பொழுது என்ன செய்ய...?’, குழம்பித் தவித்தது மனோவின் மனது. பேச்சற்ற மௌனம் அறையை நிறைக்க...., ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

***

# மௌனம் – 32.

திருமண விஷயமாக நித்யா, அனிதா, ராதா மூவரின் பெற்றோரை சந்திக்க வந்த இடத்தில்...., ஈஷ்வரைப் பார்த்த மனோ, சந்தோசம் கொள்ள, அந்த சந்தோசம் நொடிகள் கூட நிலைக்காமல் அங்கே நடந்தேறிய சூழல் அவனை திகைக்க வைத்தது.

சில பல நிமிடங்களில்..., தன் மனதோடு போராடி...., முன்வைத்த காலை பின்வைக்க முடியாது என்ற எண்ணத்திலும்...., என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். நம்ம ஈஸ்வர் ஐயா தானே என்ற தைரியமும் சேர்ந்துகொள்ள...., வாயைத் திறந்தான்.

அவ்வளவு நேரமும்...., ஈஸ்வரும், அவர் தம்பி மந்திர மூர்த்தியும் அங்கே நிலவிய மௌனத்தை கலைக்கவில்லை. மனோ தைரியமாக நிமிர்ந்து...., ஈஷ்வரின் கண்களைப் பார்த்தவன்...., “ஐயா...., நாங்க மூணுபேரும்...., நித்யா, அனிதா, ராதாவை கல்யாணம் செஞ்சுக்கணும்னு விரும்புறோம்.

“எங்களைப்பற்றி உங்களுக்கு நல்லாவே தெரியும். அவங்க அம்மா அப்பாகிட்டே பொண்ணு கேக்கத்தான் வந்திருக்கோம்...”, பார்வையை அவர்கள் அனைவரைச் சுற்றியும் சுழற்றியவாறு அவன் சொல்ல...., தான் யார் என்பதை தெரிந்துகொள்ள, அவன் சுற்றி வளைப்பதைப் பார்த்து சிரித்துக் கொண்டார் ஈஸ்வர்.

“இவங்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்னு உனக்குத் தெரியணும் அதானே...”, அவனிடம் சொன்னவர்...., “அம்மாடி...., நித்யா...., எல்லோரும் வாங்க...”, அவர்களை அழைக்க....,

“அப்பா....”, என்று அழைத்து நித்யா ஈஷ்வரின் அருகில் அமர, ராதா மந்திர மூர்த்தியின் அருகில் செல்ல...., அனிதா தன் தாயின் அருகில் சென்று அமர்ந்தாள்.

‘மச்சான்...., போலீசுக்கே மாப்பிள்ளை ஆயிட்டடா. கலக்கு...., ஆனா எனக்கு ஒரு சந்தேகம்..., நீ ஐயாவை இனிமேல் எப்படி கூப்பிடுவ...., ‘மாமான்னா இல்ல...’, சிரிப்பை உள்ளடக்கியவாறு...., அருண் இழுக்கவே...., இருக்கும் இடமறிந்து, அவனை முறைக்கக் கூட முடியாமல், முகம் மாறாமல் காத்தான் மனோ.

“இப்போ உங்களுக்கு தெளிவாயிடுச்சா...? மேலே சொல்லு...”, அவர் சாதாரணமாக உரைக்க....,

“ஐயா...., அதான் ஏற்கனவே...” ‘சொல்லிட்டனே....’, என்று சொல்ல வந்தவன்..., பாதியிலேயே நிறுத்திக் கொண்டான்.

“சரி...., இப்போ பொண்ணு கொடுக்க முடியாதுன்னு சொன்னால் என்ன செய்வ...”, அவர் கேட்க...., திகைத்தாலும்...., “நீங்க சொன்னா அதில் கண்டிப்பா ஒரு நியாயம் இருக்கும் ஐயா...”, குரலில் எதையும் காட்டாமல் கவனமாக சொல்லி முடித்தான்.

“ஹா...ஹா...ஹா....., நல்லா பேச கத்துகிட்ட. ஆனாலும்...., இப்படி ஒரு நல்ல பிள்ளையை வேண்டாம்னு சொல்ல, எனக்கு எந்த காரணமும் இல்லை. அதனால....., எங்க எல்லாருக்கும் சம்மதம் தான்....”, அவர் சொல்லவே...., சந்தோஷத்தில் திக்குமுக்காடிப் போனார்கள் அனைவரும்.

“ஐயா...”, நெகிழ்வாய் சொல்லி அவர் கரத்தை பற்ற...., “இன்னும் என்ன ஐயான்னு சொல்லிக்கிட்டு...., வாய்நிறைய மாமான்னு சொல்லுங்க மாப்பிள்ளை...”, அவனுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார்.

‘அதான் சொல்லிட்டாரேடா..., மாமான்னு சொல்லு...’, சின்னக் குரலில் அருண் மனோவின் காதில் உரைக்க...., “என்ன அருண்...., என்ன ரகசியம்...?”, அவர் கேட்கவே....,

“இல்ல...., நானும் மாமான்னே சொல்லவான்னு கேட்டுட்டு இருந்தேன்...”, அழகாய் சமாளித்தான் அருண்.

அவன் சமாளிப்பில் திகைத்தவன்...., நித்யாவை பொய்க் கோபமாகப் பார்த்தான். ராஜுவும் அவர்களோடு சேர்ந்துகொள்ள...., அந்த இடமே கலகலப்பானது. அப்பொழுதே நேரம் நன்றாக இருந்ததால்...., மோதிரம் மாற்றி...., சிறிதாக நிச்சயம் செய்து கொண்டார்கள்.

ஈஸ்வர் ஏற்கனவே முன்னேற்பாடாக இருந்ததை எண்ணி வியந்து போனான் மனோ. அவரிடம் தயக்கம் களைந்து உரையாடினாலும்...., மனதுக்குள் சிறிய நெருடல்...., தங்கள்மேல் நம்பிக்கை வைத்து, வேலைக்கு அனுப்பிய பெண்களை மயக்கி...., திருமணம் வரை வந்துவிட்டதாக அவர் எண்ணுவாரோ என்று கவலைப்பட்டான் மனோ.

கொஞ்சம் தயங்கித் தயங்கி அதை அவரிடம் கேட்க...., “என்ன இப்படி கேட்டுட்ட மனோ...., என் பொண்ணுங்க உங்ககிட்டே வேலைக்கு வர முன்னாடி வரைக்கும் எப்படி இருந்தாங்க தெரியுமா...? எலியும் பூனையுமா இருந்தாங்க.

இதில் அவங்களைச் சொல்லி குற்றமில்லை...., எல்லாம் பெரியவங்க நாங்க செய்த தப்புதான். இளமையின் வேகத்தில்...., நீ பெருசா...., நான் பெருசான்னு சண்டை போட்டுக்கிட்டு...., தனித்தனி தீவா இருந்தோம். அதையே எங்க அடுத்த தலைமுறைக்கும் கடத்தினோம்....,

“விளைவு...., எங்களைவிட அதிகமா..., அவங்க முறுக்கிக்கிட்டாங்க. இது தப்புன்னு எங்களுக்கு புத்திவர...., எங்க தம்பி...., அனிதாவோட அப்பாவின் உயிர் பலிகடா ஆச்சு. சொத்து மேலே கேஸ் போட்டு...., அதோட வாயிதாவுக்கு போயிருக்கும்போது...., விபத்தில்...., அங்கேயே....”, அந்த நினைவில் அவர் தொண்டை அடைக்க...., மௌனமாக இருந்தார்.

“சாரி ஐயா...., மா...மா...”, ஈஸ்வர் கோபமாக பார்க்கவே அழைப்பை மாற்றினான்.

“நீ எதுக்குப்பா சாரி சொல்லுற...., வேலையில் நூறு சதவீதம் மனுஷங்களை கணிக்க முடிந்த எனக்கு...., கேவலம்...., எங்களோட வறட்டு பிடிவாதம்...., என் தம்பியோட உயிரே போக காரணமாயிடுச்சேன்னு நினைக்கும்போது...., என்னால் தாங்கிக்கவே முடியலை.

“நான் கேஸ் போடாமல் இருந்திருந்தால்...., கொஞ்சம் விட்டு கொடுத்திருந்தால் அவன் உயிரோட இருந்திருப்பானோன்னு ஒரு எண்ணம். அன்னைக்கே வந்து அனிதா அம்மாகிட்டே மன்னிப்பு கேட்டு...., சின்னவனையும் கூட்டி...., ராசி ஆகிட்டோம்.

“ஆனா...., சிறியவர்களால் அது முடியலை. அதிலும்...., இந்த அனிதா பொண்ணு இருக்கே...., இதுவரைக்கும் என்னை பெரியப்பான்னு ஒரு வார்த்தை கூப்பிடாது. அது அப்படி கூப்பிடாதான்னு மனசுக்குள்ளே ஒரு ஏக்கம் இன்னும் இருக்கத்தான் செய்யுது....”, அவர் அமைதியாக...., அவர் கையை அழுத்தினான்.

அதில் கலைந்தவர்...., “ஹங்..., எங்கேயோ துவங்கி எங்கேயோ

முடிச்சுட்டேன் பாரேன். இவங்களை இப்படியே விடக் கூடாதுன்னு...., எல்லோரையும் ஹாஸ்ட்டல்ல...., ஒரே அறையில் தங்க வைத்தோம். காலேஜில் ஒரே பாடம்...., ஹாஸ்டல் ஒத்துக்கலன்னு...., வீடெடுத்து, தாமரையை அங்கே இவங்களை பாத்துக்க வைத்து....,

“சொல்ல மறந்துட்டேனே...., தாமரை வேற யாரும் இல்லை. எங்க டிப்பார்ட்மெண்ட் ஆளுதான். அவங்களுக்கு வேற...., முதல்ல விஷயத்தை சொல்லலன்னு கொஞ்சம் மனஸ்த்தாபம். அன்னைக்கு நீங்க வீட்டில் விட்டுட்டு போன பிறகு, பொண்ணுங்க கிட்டே பேசவே இல்லையாம்.

“பிறகு...., உனக்குத்தான் நம்ம அனிதாவைப் பற்றி தெரியுமே...., பெருசா ஐஸ் வைத்து தாஜா பண்ணினாளாம்...., சொல்ல வந்ததையே மறந்துட்டேன் பாரேன்...”, தொடர்ந்தவர்....,

“இவ்வளவும் செய்த பிறகும் கூட..., அனிதா, நித்யா ராதா கிட்டே மனசளவில் ஒட்டவே இல்லை. ராதா ரொம்ப அமைதி...., நித்யா என் மேல் உள்ள பிரியத்தில் அவங்களோட சேர்ந்துகிட்டா. அனிதாதான்...., எங்களுக்கு இவளை எப்படி வழிக்கு கொண்டுவரதுன்னே தெரியலை.

“அவங்க அம்மா...., அவகிட்டே பேசவே மாட்டேன்னு சொன்ன பிறகுதான்...., அவங்ககிட்டே பேசவே ஆரம்பிச்சா. எங்களுக்கு இது போதாதே...., எங்க காலத்துக்குப் பிறகு...., அவங்க தனியாயிடக் கூடாதுன்னு மனசுக்குள் ஒரு கவலை....,

“அதான்...., ஒத்துமையா இருக்கற உங்களைப் பார்த்தால்...., கொஞ்சம் மாறுவாளோன்னு ஒரு ஆசை, அதான் உங்ககிட்டே அனுப்பினேன். என்னோட முடிவு ரொம்பவே சரியானதுன்னு...., அவ முதல் முறை என்கிட்டே பேசினப்போ தெரிஞ்சுது.

“ஆனா என்ன...? குட்டிக்கழுத...., பேசத்தெரியாமல் துடுக்குத்தனமா பேசிட்டா. இருந்தாலும்...., என் பொண்ணுங்க கிட்டே பேசவே அவ்வளவு யோசித்தவ...., என்கிட்டே பேசியதே எனக்கு சந்தோசம் தான்”, தூரத்தில் பேசிக்கொண்டிருந்த அனிதாவை அவர் பார்வை தொட்டு மீண்டது.

என்னதான் அவர் தன்னை சமாதானம் செய்தாலும்...., அனிதா அவரை ‘பெரியப்பா’ என்று அழைத்து பேசாதது அவரை அரிக்கிறது என்பதை

அவன் உணர்ந்துகொண்டான். கண்டிப்பாக இதைப்பற்றி அனிதாவிடம் பேசவேண்டும் என முடிவெடுத்தான்.

“ஐ...., மாமா....., உங்க தம்பி...., அனிதாவோட அம்மா...., இந்த கல்யாணத்துக்கு எப்படி ஒத்துக்கிட்டாங்க...? ரொம்ப சிரமப் பட்டீங்களா...?”, என்னவோ அவனுக்கு கேட்கவேண்டும்போல் இருக்கவே கேட்டுவிட்டான்.

“ரொம்பல்லாம் இல்ல...”, அவர் சொல்லத் துவங்கும் வேளையில்...., சாப்பிட வர அழைக்கவே...., “வா..., வா...., முதல்ல சாப்பிட்டு வந்து மீதிக் கதையைப் பேசலாம்....”, அவனை அழைத்துக்கொண்டு சாப்பிடச் சென்றார்.

பெரியவர்கள் முதலில் சிறியவர்களை அமரச் சொல்ல...., சிறியவர்களோ..., பெரியவர்கள்தான் முதலில் அமரவேண்டும் என்று பிடிவாதம் பிடித்து..., அவர்களை அமர வைத்து...., இவர்கள் பரிமாறினார்கள்.

அந்த நேரம்...., அனிதாவிற்கு தன் தந்தையின் இழப்பு பெரிதாகத் தோன்றியது. அனைவருக்கும் பரிமாறி முடிக்கும்வரை தன்னை கட்டுப்படுத்திகொண்டவள்...., அங்கிருந்த கலகலப்பான சூழலை கலைக்க மனமில்லாமல்...., நழுவி வேறிடம் சென்றாள்.

அவள் மாடிக்குச் சென்ற மறு நிமிடம்...., அழுகையில் குலுங்க...., அவள் பின்னால் வந்த ராஜு...., சட்டென தன்மேல் அவளை சாய்த்துக் கொண்டான். “உங்க அப்பாவை நினைச்சுக்கிட்டியா அனி...., நான் உன்னை நல்லா பாத்துப்பேன். உன் அப்பாவை மாதிரி...., இல்ல...., அதைவிட நல்லா பாத்துப்பேன்...”, அவளை அணைத்து ஆறுதல் சொன்னான்.

“எல்லோரும் இருக்கும்போது...., என் அப்பா மட்டும் இல்லாமல்...”, அவளால் தாள முடியாமல்...., அவன் நெஞ்சில் விழுந்து அழுதாள்.

சற்று நேரம் அழுது ஓய்ந்தவள்...., “நீங்க எப்படி இங்கே வந்தீங்க...?”, தன் சந்தேகத்தைக் கேட்டாள்.

“நான்தான் உன்னையே பாத்துட்டு இருந்தேனே. நீதான்..., உனக்கு உங்க அப்பாவை ரொம்ப புடிக்கும்னு சொல்லி இருக்கியே.

எல்லோருக்கும் அப்பா இருக்கும்போது..., உனக்கு இல்லன்னா உனக்கு கஷ்டமா இருக்கும்னு எனக்குத் தெரியும். அதான்...., நீ வந்த உடனே...., உன் பின்னாடியே வந்தேன்...", அவன் நீளமாக விளக்கமளிக்க...., அழுகையிலும் சற்று சிரிப்பும்...., பெருமிதமும் வந்தது அவளுக்கு.

"சரி வாங்க...., கீழே நம்மளை தேடப் போறாங்க...", அவள் விலக...., "கொஞ்சம் பௌடர் போட்டுக்கோ...., நீ அழுதது அப்படியே தெரியுது", அவன் சொல்லவே..., அவ்வாறே செய்தாள்.

அதன் பிறகு...., கேலியும்..., கிண்டலும்...., உற்சாகமுமாக அனைத்தும் கழிய...., பெண்களோடு தனிமையில் பேசவேண்டும் என்று அனைவருமே விரும்பினார்கள். ஆனால்...., சீக்கிரமாக சென்னைக்குத் திரும்பவேண்டும் என்பதால்...., அதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்கு அமையவே இல்லை.

ஆனால்...., மதியம் சாப்பிட்டு முடித்தவுடன்...., அனைவரும் தோட்டத்துக்குச் செல்லலாம் என ஈஸ்வர் அழைக்க...., சந்தோஷமாக கிளம்பினார்கள். ஈஸ்வர், நித்யா, அவள் தாய் கூட்டாகவும்...., மந்திர மூர்த்தி...., ராதா...., அருண் ஒரு கூட்டாகவும்...., அனிதாவின் தாய், அனிதா, ராஜு மூவரும் மற்றொரு கும்பலாகவும் சென்றார்கள்.

ஆண்களின் பெற்றோர், தாங்கள் சற்று ஓய்வெடுப்பதாகச் சொல்லவே...., அவர்களை விட்டுவிட்டு இவர்கள் கிளம்பினார்கள். மனோ ஈஷ்வரோடு ஒட்டிக் கொண்டதில் வியப்பேதும் இல்லை. ஆனால் அருண், ராஜு கூட பெண்களின் பெற்றவர்களோடு ஒட்டிகொண்டதுதான் சிறப்பே.

அதிலும் ராஜு...., தன் தாய்க்கும் அனிதாவின் தாய்க்கும் வேறுபாடே காட்டவில்லை. "அம்மா..", என்றே அவரையும் அழைத்தான். கள்ளமில்லாத அவனது பேச்சு...., உண்மையான அவனது பாசம்...., கொஞ்சம் நஞ்சம் அவர் மனதில் இருந்த தயக்கத்தையும் தகர்த்து எறிந்தது.

"மாப்ளை...", என்று அவர் அழைத்ததற்கு...., "இல்ல...., இப்படி சொல்லாதீங்க. கண்ணா...., ராஜா...., அப்படி சொல்லுங்க. அப்போதான் நான் உங்க கூட பேசுவேன்...", அவன் ஆசையை அவன் சொன்னபொழுது...., கொஞ்சம் தயங்கினாலும் அவ்வாறே அழைத்தார்.

அதில் அவனுக்கு அவ்வளவு சந்தோசம்...., "எனக்கு நீங்க இப்படி கூப்பிட்டா ரொம்ப புடிச்சிருக்கு. இனிமேல் நீங்க எங்களோடவே வந்துடுங்க...., தனியா எல்லாம் இருக்க வேண்டாம்...", உரிமையான அவனது அழைப்பு...., தன் தனிமை தன்னைவிட்டுப் போவதை உணர்ந்தார்.

அனிதா என்ற ஒருத்தி அங்கே இல்லை என்பதுபோல் இருந்தது அவனது நடவடிக்கை. ஒரு கட்டத்தில் அனிதாவிற்கே கோபம் வந்துவிட்டது. அவன் கையில் நறுக்கென கிள்ள...., "கிள்ளி விளையாடாதே அனி...., நான்தான் அம்மாட்ட பேசிட்டு இருக்கேன்ல்ல...", அவன் வெள்ளந்தியாகச் சொல்ல...., தலையிலேயே அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது அவளுக்கு.

எப்பொழுதும் மகள்மேல் கவனமாக இருக்கும் அவள் தாய் கூட...., அவள் முக மாற்றத்தை கண்டுகொள்ளவில்லை. அதைவிட...., நித்யா, ராதா ஜோடிகள் செய்த சேட்டைகளைப் பார்த்தவளுக்கு...., முகமே விழுந்துவிட்டது.

ராஜு, தாயுடன் சகஜமாக மகன்போல் உறவாடுவது அவளுக்குப் பிடித்ததுதான். ஆனாலும்...., மனதுக்குள் ஒரு சுணக்கம்...., அவள் தாயின் கை கோர்த்துக்கொண்டு...., சுற்றிலும் வேடிக்கை பார்த்தாள்.

அருணும்...., மந்திர மூர்த்தியோடு கலந்துகொண்டான். ஆனால் அவரது கனத்த உடலும்...., கட்டைக் குரலுக்கும்...., முரட்டுத் தோற்றத்துக்கும் சம்பந்தமே இல்லாமல்...., மனதில் மென்மையானவராக இருந்தார்.

"பாத்துடா...., மாமனார் உன்னை பாசமா அணைக்கிறேன்னு பிழிஞ்சுடப் போறார்....., அவரோட ஒரு நாள் பேசினதுக்கே..., எனக்கு பத்துநாள் தூக்கம் பிடிக்கலை, மனுஷன் குரலுக்கு அவ்வளவு சக்தி. இருந்தாலும்...., மந்திரம் மாமா போன் நம்பரைத் தந்து என்னை ஏமாத்திட்டா பாரேன் இந்த நிது...", அருணிடம் மனோ அங்கலாய்த்தது அவ்வப்பொழுது நினைவிற்கு வந்து சிரிப்பை மூட்டியது அருணுக்கு.

அவரிடம் காதைக் கொடுத்திருந்தாலும்...., பார்வை முழுவதும் ராதாவிடமே இருந்தது. அவளை விழுங்கும் அதே பார்வை. உள்ளுக்குள் தவித்துக் கொண்டிருந்தாள் ராதா. அவன் பார்வையை கவனித்த ராதாவின் தாய்...., பொறுப்பான தாயாக மாறி...., அவளை அவன் பக்கமே செல்ல அனுமதிக்காமல் அடை காத்தார்.

மனோ, ஈஸ்வரிடம் பேசிக் கொண்டிருந்தாலும்...., தன் அருகில் வந்த நித்யாவை அவ்வப்பொழுது சேலை மறைவில் தீண்டி விளையாடினான். பெற்றவர்முன் அதை வெளிப்படுத்தவும் முடியாமல்...., அவனை விட்டு விலகிச் செல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் நித்தி.

அப்பொழுது அனிதாவின் தாய் நித்யாவின் தாயை அழைக்க...., நித்யாவும் அவரோடு சென்றுவிடவே...., ஈஸ்வரும், மனோவும் தனித்து இருந்தார்கள். “மாமா..., நான் அப்போ கேட்டேனா...”, மனோ நினைவுபடுத்த....,

“ஓ..., அதுவா...? இதிலும் வழக்கம்போல...., அனிதாவின் அம்மாவுக்குத்தான் கொஞ்சம் கவலை. உங்க ரெண்டுபேரோட செய்கையையாவது ஏதோ ஒரு விதத்தில் ஏத்துகிட்டாலும்...., ராஜு செய்ததை ஏத்துக்க ரொம்ப தயங்குனாங்க.

“இதில் பெரிய கஷ்டம்...., அவன் மனநிலையைப் பத்தி நாம சொல்லும்போது...., கொஞ்சம் பிசகினாலும்...., அது வேறு விதமா முடிஞ்சுடும். கவனமா கையாளவேண்டி இருந்தது. கடைசியா...., சப்போஸ் என் பொண்ணு நித்தி அவனை விரும்பியிருந்தால்...”, இதைச் சொல்லும்பொழுது மனோவின் முகம் சுருங்கிவிட....,

“அட..., ஒரு பேச்சுக்குதாம்ப்பா....., அதுக்கு ஏன் உன் மூஞ்சி இப்படி போகுது. மனசுக்கு பிடிச்ச பொண்ணுகூட வேற யாரையும்...., அது ஃப்ரண்டாவே இருந்தா கூட இணை சேர்த்து நினைக்க முடியலை இல்ல...., இப்படிப்பட்ட நீங்கதான்...., என் பொண்ணு வேண்டாம்னு முடிவெடுத்து அவளை ஊருக்கு அனுப்பி வச்சீங்களாக்கும்...?”, அவனை கேலி செய்தார்.

“அது....”, அவன் தலை கோதியவாறு தயங்க...., “இருந்தாலும்...., உங்க மனசை திறக்கவைக்க...., என்னவெல்லாம் செய்ய வேண்டி இருந்தது...”, ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

“மாமா...”, அவன் அதிர்ந்து அழைக்க...., “பின்ன என்னப்பா...., நான் ஒரே மாசத்தில் புரிஞ்சுகிட்ட என் பொண்ணோட மனசை...., நீ ஒரு வருஷமாகியும் புரிஞ்சுக்கலன்னா, நானும் என்னதான் செய்ய...? அதான்..., என் பொண்ணுங்களை திரும்பக் கொடுன்னு கேட்டேன்...”, சொல்லிவிட்டு அவர் ஏதோ ஹாஸ்யம் சொன்னதைப்போல சிரிக்க...,

‘அடப்பாவி மனுஷா...., எங்க வேதனை உனக்கு சிரிப்பா...’, என மனதுக்குள் கறுவினான் மனோ.

“சொல்ல வந்ததை பாதியில் நிறுத்திட்டேனே...”, அவர் துவங்கவே. “எனக்கு நீங்க சொல்ல வந்தது புரிஞ்சுடுச்சு...”, என வேகமாக உரைத்தான் மனோ.

அதற்கும் அவர் சிரிக்க...., மௌனமாகவே இருந்துவிட்டான். “கடைசியா...., நான் என் பொண்ணை மனோவுக்கு கொடுக்குறதா முடிவு பண்ணிட்டேன். இது இன்னைக்கு எடுத்த முடிவில்லை...., எப்போ அவன், தப்பான வழிக்கு போறதைவிட...., செத்து போகலாம்னு சொன்னானோ அப்போ எடுத்த முடிவு இது.

“இப்போ என் பொண்ணும் அவனை விரும்புறா....., அவளோட விருப்பத்தை நான் நடத்திக் கொடுக்கப் போறேன். நீங்க உங்க விருப்பம்போல செய்ங்கன்னு சொல்லிட்டு விலகிட்டேன்...., ஒரு வாரம் டைம் எடுத்துக்கிட்டாங்க.

“ஆனா அனிதா பொண்ணு ஒரேயடியா பிடிவாதம் பிடிச்சுத்தான்...., வழிக்கு வந்துட்டா அவ அம்மா. ஆனா, தான் சரியான முடிவுதான் எடுத்திருக்கோம்னு இப்போ நினைச்சுப்பா..”, அவர் பார்வை...., தூரத்தில் அமர்ந்திருந்த அவர்கள்மேல் பாய்ந்து மீண்டது.

“நம்ம மந்திரம்தான் கொஞ்சம் இடக்கு பண்ணினான்...., ராதா என்ன சொன்னாளோ...., கடைசியா...., அண்ணாவே அவன் பொண்ணை கொடுக்கும்போது...., எனக்கு ஒரு ப்ரச்சனையும் இல்லன்னு சொல்லிட்டான்.

“ஆனாலும்...., பொண்ணுவீட்டுக்காரங்க எப்படி மாப்பிள்ளை வீட்டைத் தேடி வரது...? அதான்...., ஒரு வார காத்திருப்பு உங்களை என்ன முடிவெடுக்க வைத்திருக்குன்னு தெரிஞ்சுட்டு...., இதோ...., இப்போ எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது.

“இன்னும் பத்து நாள்ல கல்யாணமும் முடியப் போகுது..”, உற்சாகமாகச் சொன்னார்.

கேட்டுகொண்டிருந்த மனோ நெகிழ்ந்து போனான். “ஐயா...., நீங்க இல்லன்னா...., நாங்க என்ன ஆகி இருப்போம்னே தெரியலை.

உங்களை கடவுள் எங்களுக்காகவே அனுப்பி வைத்திருக்கார். இந்த ஜென்மம் முழுவதும் இந்த நன்றியை நாங்க மறக்க மாட்டோம்....”, அவர் கையைப் பற்றிக் கொண்டான்.

“நான் இல்லன்னாலும்...., நீ நீயாகத்தான் இருந்திருப்ப, அதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. நீ ஒரு மாணிக்கம் மனோ..”, அவனை ஆதூரமாக அணைத்துக் கொண்டார்.

பிறகு வீட்டிற்கு வந்தவர்கள்...., ஆண்கள் அனைவரும் சென்னை செல்வதாகச் சொல்லவே...., ஈஸ்வர் அவர்களிடம்...., “கல்யாண வேலை எல்லாம்...., நாங்களே பாத்துக்கறோம். நீங்க மாப்பிள்ளையா லட்சணமா...., மணமேடையில் உக்காந்து எங்க பொண்ணுங்க கழுத்தில் தாலி கட்டினால் போதும்”, அவர் சொல்லவே...., ஆண்களின் முகம் விழுந்துவிட்டது.

திருமணம் திருச்சியில் நடப்பதாக ஏற்பாடு செய்தார்கள். வரவேற்பு சென்னையில் என்று முடிவானது.

“என்னடா...., உன் ‘மாமா’ நமக்கு இவ்வளவு பெரிய ஆப்பா வைக்கிறார்...”, அருண், மனோவிடம் அலற....,

“மவனே...., எல்லாம் நீ செய்த வேலை. அங்கே பாரு...., ராதாவை உன் கண்ணுல கூட காட்டாமல்..., எப்படி முதுகு பின்னாடி மறைச்சு வைக்கிறாங்கன்னு பாரு. பொண்ணை சாதாரணமா பாத்தா பரவாயில்லை...., முழுசா முழுங்கப் போற மாதிரி பாத்தா...”, கொலைவெறியானான் மனோ.

“சரி...., சரி...”, உடனே அடங்கிப் போனான் அருண்.

ஆண்கள் அவர்கள் விரும்பிய தனிமை இறுதிவரை கிடைக்காமலே போக...., சென்னைக்குப் பயணமானார்கள். அந்த பத்து நாளும்...., யுகங்களாகக் கடந்தது திருமண ஜோடிகளுக்கு.

***

# மௌனம் – 33.

தங்கள் மனதுக்கினியவர்களின் கழுத்தில் மங்கலநாண் பூட்டி...., அவர்களைத் தங்கள் இணையாக, வாழ்க்கைத் துணையாக சேர்த்துக் கொள்ள...., புது வாழ்க்கைக்குள் அடியெடுத்து வைத்தார்கள் அவர்கள்.

ஈஸ்வரிடம் முதலில் அனைவரும் ஆசீர்வாதம் வாங்க...., இறுதியாக வந்த அனிதா...., “மூர்த்திப்பா...., எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்க...”, அவர் காலில் விழுந்து வணங்கினாள்.

“அன்னு குட்டி...”, ஈஸ்வர் நடுங்கும் குரலில் அழைத்து...., அவள் தலையை வருட...., தன் தந்தை அழைக்கும் செல்லப் பெயரில் அவர் அழைக்கவே...., “மூர்த்திப்பா...”, என்ற கேவலுடன் அவர் தோள் சாய்ந்தாள். அங்கிருந்த அனைவரின் கண்களும் கலங்கியது.

ஈஸ்வரும் அனிதாவும் ஒரு சேர மனோவைப் பார்க்க...., எதுவுமே தெரியாதவன் போன்று நின்றுகொண்டிருந்தான்.

அனிதாவின் சிந்தையோ...., அன்று அவன் தன்னோடு உரையாடியதில் நிலைத்தது. அன்று அவளது அலைபேசிக்கு அவன் அழைக்க...., எடுத்து பேசியவள்...., “என்ன அனிதா...., எப்படி இருக்கீங்க...?”, என்ற அவனது கேள்வியில் புருவம் சுருக்கினாள்.

“என்ன மனோ புதுசா...., என்னமோ சொல்ல வரீங்க..., அதை நேரடியா சொல்லுங்களேன்...”, அவள் அதிரடித்தாள்.

அவள் அதிரடியில் மிரண்டவன்....., சுதாரித்துக் கொண்டு...., “சரி நான் நேரடியா விஷயத்துக்கே வரேன்...., ஏன் நீங்க ஈஸ்வர் ஐயாகிட்டே பேச மாட்டேங்குறீங்க....?”.

அவன் கேள்விக்கு இப்பொழுது அனிதா விழித்தாள். அவள் அமைதியாக இருக்கவே...., “உங்க மனசுக்குள் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியாது. ஆனா...., நான் சொல்ல வரது ஒண்ணே ஒண்ணுதான்....., இப்போ ஒரு உயிரை எடுக்கணும்னு கடவுள் நினைத்துவிட்டால்..., அதை நம்மளால் தடுக்கவே முடியாது.

“ஏதோ ஒரு ரூபத்தில் அதை அவர் நடத்திக் காட்டுவார்.

அப்படியிருக்கும்போது...., நான் சொல்ல வருவது உங்களுக்குப் புரியும்னு நினைக்கிறேன். ஐயா எதற்குமே இவ்வளவு வருத்தப்பட்டு நான் பாத்ததே இல்லை. ஆனா...., தன்னோட பொண்ணு...., பெரியப்பான்னு கூப்பிடலையேன்னு அவருக்கு அவ்வளவு வருத்தம்...", சொன்னவன் வைத்துவிட்டான்.

அவன் சொன்னதைக் கேட்ட அனிதாவிற்கு கொஞ்ச நேரம் எதுவும் புரியவில்லை. புரிந்த பிறகு...., தன் அப்பா இல்லாத குறையைத் தீர்க்க, அவர் போராடுவது அவளுக்குப் புரியாமல் இல்லை. ஆனால் அவரை பெரியப்பா என்று அழைக்கும் சந்தர்ப்பம் மட்டும் அமையாமலே இருந்தது.

அந்த குறையை மணமேடையில் நிறைவேற்றிக் கொண்டாள் அனிதா. திருமணம் நல்லபடியாக முடிய...., கோயிலுக்குச் சென்று வணங்கிவிட்டு வீட்டுக்குச் சென்றார்கள்.

ஒரு வாரம் கழித்தே வரவேற்பு சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்களது பூர்வீக வீட்டுக்கு மூன்று ஜோடிகளையும் அழைத்துச் சென்று...., பால் பழ சடங்கு நிறைவேற்றப் பட்டது.

நித்யாவும்...., ராதாவும் ஒருவித பரவச நிலையிலேயே இருக்க...., அனிதா மட்டும்...., கோபமும்...., குழப்பமும் கலந்த மனநிலையில் இருந்தாள். ஆண்கள் மூவரும் கூடிப் பேச...., பெண்கள் மூவரும் சேர்ந்து இருந்தார்கள்.

அனிதாவின் குழப்பமான முகத்தைப் பார்த்த நித்யா...., "என்ன அனி...?", அவள் தோளைத் தொட்டு உலுக்க...., ஒன்றுமில்லை என்பதுபோல் தலையை அசைத்தாள்.

"உன் மனசுக்குள் என்னதான் இருக்கு அனி...., சொன்னாத்தானே தெரியும்", கோபமானாள்.

அவள் அமைதியாகவே இருக்க...., "எது...., அன்னைக்கு விளையாட்டா சொன்னியே அதுதானா...?", அவள் முகத்தைத் திருப்பிக் கேட்க...., அவளது அமைதியே, 'விஷயம் இதுதான்' என்பதை அவளுக்கு புரிய வைத்தது.

“ரொம்ப சீப்பா இருக்குன்னு நினைக்கிறியா நித்தி...”, குரல் கன்ற அனிதா கேட்க...., அவள் வாயை கையால் மூடினாள் நித்தி.

“என்னடி பேசுற...? நான் அப்படி நினைப்பேனா...? அன்னைக்கு அவ்வளவு தைரியமா....., அவருக்குத் தெரியலன்னா டியூஷன் எடுப்பேன்னு சொன்ன...., இப்போ எங்கே போச்சு அந்த தைரியம்...? எனக்கு அந்த அனிதாவைத்தான் தெரியும். இப்போ இது யார் புதுசா...?

“உனக்கு எல்லாத்தையும் நேரில் சந்தித்துதானே பழக்கம். இதில் மட்டும் என்ன...? நீ தனியா இல்லை அனி. உனக்கு நாங்க ஐந்து பேர் துணை இருக்கோம். நாளைக்கு காலையிலும் நீ இதே மனநிலையில் இருந்தால்...., நான் மனோ கிட்டே பேசுறேன் சரியா.

“இப்போ எதையும் யோசிக்காமல் கொஞ்ச நேரம் தூங்கு...”, அவளை மடி சாய்த்துக் கொண்டாள். அனிதாவும், நித்தியிடம் பேசியபிறகு கொஞ்சம் தைரியமாக உணர...., நிம்மதியாக கண் மூடினாள்.

ஆண்களும் அமர்ந்து பேசிக் கொண்டிருக்க, “எல்லோரும் தூங்காமல் என்ன செய்யிறீங்க...? ஒரு தூக்கம் போட்டு எந்திரிங்க...”, மந்திர மூர்த்தி வந்து சொல்ல...., அனைவரும் தூங்கச் சென்றார்கள்.

***இனிமை கொடுக்கும் முதல் இரவு....., அனைவரும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ராஜுவை அறைக்குள் அனுப்பிய மனோவும், அருணும்...., அன்று மதியம் நடந்த பேச்சுவார்த்தையை நினைத்துப் பார்த்தார்கள்.

ராஜு கேட்ட கேள்வியில் கொதிப்படைந்த மனோ, கன்னா பின்னாவென்று அவனைத் திட்டினான். “மனோ...., கோபத்தை குறைச்சுக்கோடா...., யாராவது என்னன்னு கேக்கப் போறாங்க...”, அவனை அடக்கினான் அருண்.

“நீ சொன்ன மாதிரிதானே நடந்துக்கிட்டேன். பிறகு ஏன் திட்டுற...”, புரிந்தும் புரியாமல் கேட்டான் ராஜு.

தன் தலையிலேயே அடித்துக் கொண்டான் மனோ. “டேய்...., இதை, உன் மனசோடதான் வச்சுட்டு இருக்கியா...., இல்ல அனிதாகிட்டேயும் சொல்லிட்டியா..?”, கொலை வெறியில் இருந்தான் மனோ.

“அதெல்லாம் சொல்லலை....”, ரோசமாகச் சொன்னான் ராஜு.

“இந்த ரோசத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை. ஏண்டா எருமை...., உன்கிட்டே எப்போ...., எந்த சூழ்நிலையில் நான் சொன்னேன். அதை எப்போ...., எதோட முடிச்சு போடுற...”, மனோவால் இதை எப்படி எடுத்துக்கொள்ளவென்றே தெரியவில்லை.

“மனோ..., நீ சொன்னால் அது அவனுக்கு வேத வாக்கு. அது உனக்குத் தெரியாதா...?”, அருண் அவனை அடக்கினான்.

“ம்ச்...., முந்திதான் இப்படி கிளிப்பிள்ளை மாதிரி இருந்தான். இப்போ இவனை நம்பி அனிதா இருக்காடா...”, கவலையானான் மனோ.

“விடுடா...., அனிதா இவனைப் பாத்துப்பா....”, அருண் சொல்ல...., “என்ன ஜோக்கா...., இதுக்கு இப்போ நான் சிரிக்கணுமா...?”, பல்லைக் கடித்தான் மனோ.

“மனோ...., அவன் சொல்லிக் கொடுத்தால் புரிஞ்சுப்பாண்டா...”, அருண் சொல்ல...., “எதை...?”, என்ற மனோவின் கேள்வியில்...., திருதிருவென விழித்தான் அருண்.

இருக்கையில் அமர்ந்து தலையில் கை வைத்துக் கொண்டான் மனோ. முன்பு ஒரு நாள்...., யாரோ சில இளைஞர்கள் சேர்ந்து ஒரு பெண்ணிடம் கொட்டமடிக்க...., அதை எதேச்சையாகப் பார்த்த ராஜு...., அதைப்பற்றி இவர்களிடம் சொல்ல....,

“ராஜு...., முதலும் கடைசியுமா உனக்கு ஒரு விஷயம் சொல்லுறேன். எந்தப் பெண்ணையும் தப்பா பாக்கவோ...., தப்பா நினைக்கவோ... கூடாது. எந்தக் காலத்திலேயும் நீ அதைச் செய்யவே கூடாது. இங்கே பார்த்ததை இத்தோட நீ மறந்துடணும்.

“எனக்கு சத்தியம் பண்ணிகொடு...., எந்த பொண்ணையும் தப்பா நினைக்கமாட்டேன், தொட மாட்டேன்னு எனக்கு சத்தியம் பண்ணு....., இந்த சத்தியத்தை எப்போ நீ மீறுறியோ...., அன்னைக்கு இந்த மனோ செத்துட்டான்னு நினைச்சுக்கோ”, மறு பேச்சின்றி அதைச் செய்தான் ராஜு.

ராஜுவின் கிளிப்பிள்ளை குணமறிந்து தான் வாங்கிய சத்தியம்...., ‘தாலி

கட்டிய மனைவியைத் தொடலாம் தானே'...., என்று சந்தேகம் கேட்க வைக்க...., இடிந்துபோனான் மனோ. அதிலும் ஒரு ஆறுதல்...., தொடலாமா..? என்று சந்தேகம் கேட்கவில்லை அவன்.

ராஜு அனிதாவிடம் பெற்றுக்கொண்ட முத்தங்கள் கூட..., அவளாக நெருங்கியதாலும்...., தன் மனம் கவர்ந்தவள் என்ற எண்ணத்திலும்...., நான் தப்பு செய்யவில்லை என்ற அவனது நம்பிக்கையின் அடிப்படையிலுமே நடந்தது.

"மனோ...", ராஜு அவன் தோளை உலுக்க...., "சாரி ராஜு...., நான் எதையோ நினைத்து சொல்லப்போய்...., அது இப்படி வந்து நிக்கும்னு நான் நினைக்கவே இல்லை. என்னை மன்னிச்சுடு ராஜு...., அப்போ இவ்வளவுநாள்...", தான் நித்யாவைத் தீண்டி விளையாடியதும்...., செல்லச் சீண்டல்களும் நினைவிற்கு வர...., குற்ற உணர்வில் தவித்துப் போனான்.

அதை ராஜுவிடம் சொல்லவும் முடியாமல் அமைதியாக...., "அவன் காலருகில் மண்டியிட்டு அமர்ந்த ராஜு...., "நீ அப்போ என்ன நினைத்து சொன்னன்னு எனக்கு இப்போ புரியுது மனோ. எனக்கு எதுவுமே சொன்னால் தானே புரியும். இப்போகூட...., நான் அவ கழுத்தில் தாலி கட்டிட்டேன் என்ற சந்தோசத்தில்தான்...., என்ன கேக்குறோம்னு தெரியாமல் கேட்டுட்டேன்.

"நீ வருத்தப்படாதே...., எனக்கு புரியுது. இப்போ அவ என்னோட மனைவி, எனக்கு எல்லா உரிமையும் இருக்கு...., நீ என்கிட்டே மன்னிப்பு கேக்காதே. என்னால் அதை தாங்கிக்க முடியாது...", கண் கலங்கியது அவனுக்கு.

நண்பனை அணைத்துக் கொண்டான் மனோ. மனதுக்குள் ஒரு குட்டிக் கலவரம்...., அதை மறைத்துக்கொண்டு, "சரி...., எதையும் உளறாமல்...., அனிதாவோட சந்தோசமா இருக்கணும். அனிதாவை நீதான் பாத்துக்கணும்...", மேலும் அவன் சொல்லப் போகவே....,

"அதெல்லாம் நான் நல்லா பாத்துப்பேன். எனக்குதான் அவளை ரொம்பப் புடிக்குமே...", இடைமறித்து ராஜு சொல்ல...., சிரித்துக் கொண்டான் மனோ.

ராஜு என்னவோ தைரியமாக சொல்லி விட்டாலும்...., மனோவால்

தைரியமாக இருக்க முடியவில்லை. அருணை அனுப்பிவிட்டு தானும் அறைக்கு விரைந்தான்.

இங்கே ராஜுவோ...., படுக்கையில் அமர முடியாமல்...., நகத்தை கடித்து துப்பிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது கதவைத் திறந்துகொண்டு அனிதா உள்ளே வர...., ஆவலாக அவளைப் பார்த்தான். அவனைப் பார்த்தவள்...., பால் டம்ளரை அவனிடம் நீட்ட...., ஒரே மூச்சாக குடித்து முடித்தான்.

“எனக்கு எங்கே...?”, அவள் கேட்க...., “ஓ...., உனக்குத்தான் கொண்டு வந்தியா...? அப்போ என்கிட்டே எதுக்கு கொடுத்த...?”, அவன் விளக்கம் கேட்க....,

“தெரியாமல் கொடுத்துட்டேன் சாமி. பால் குடிச்சாச்சா..? நல்லா இருந்ததா...? போய் படுத்து தூங்குங்க..”, கடுப்படித்தாள் அவனிடம்.

“அனி...., எல்லோரும் சேர்ந்து இருக்கும்போது தானே இப்படிப் பேசுவ. இப்போ நான் மட்டும்தானே இருக்கேன்...., இப்பவும் இப்படியே பேசுறயே...”, புரியாமல் கேட்டான்.

“ம்...., எனக்கு வேண்டுதல்...”, அவனிடம் நொடித்தவள்...., கண்ணாடியின் முன்னால் அமர்ந்து நகைகளைக் கழட்டி வைத்தாள். அவள் பின்னால் நின்றுகொண்டு அவள் செய்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் ராஜு.

அவனைக் கண்டுகொள்ளாமல்..., ஒரு நைட்டியை எடுத்துக் கொண்டு பாத்ரூம் செல்லப் போகவே...., “நைட்டி எடுத்துட்டு எங்கே போற...”, அவளைத் தடுத்தான்.

“ம்...., பல்லாங்குழி ஆட..”, அவன் முகம் சுருங்குவதைப் பார்த்தவள்...., “நைட்டி மாத்தத்தான் போறேன். பட்டுப்புடவை ரொம்ப உறுத்தலா இருக்கு...”, சொன்னவாறு அவன் கையிலிருந்து தன் கையை உருவிக் கொண்டாள்.

“அதுக்கு ஏன் அங்கே போகணும்...?”, அவன் கேள்வியில் திகைத்தவள் அவனை நேராகப் பார்க்க...., “இங்கேயே மாத்து...”, அவளை இடையோடு சேர்த்து அணைத்தவாறு...., அவள் காதுக்குள்

சொன்னான்.

அவனது இந்த பரிமாணம் அவளை திகைக்க வைக்க, “விளையாடாதீங்க ராஜு...., விடுங்க...”, போலியாகத் திமிறினாள்.

அவனோ...., “நான் சொன்னா சொன்னதுதான்....”, பிடிவாதம் பிடித்தான்.

அத்தோடு...., அவன் மீசை காதின் நுனியைத் தீண்ட...., அவன் கரங்களோ..., அவள் வெற்றிடையில் அழுந்த புதைந்து போனது. அத்தோடு நில்லாமல்...., அவன் கரங்கள் அவளை அறிய முற்பட...., அவசரமாக அவனிடமிருந்து விலக முயன்றாள்.

அது முடியாமல் போகவே....., “ராஜு...”, என்று அழைத்து எதையோ சொல்ல முயல...., அவன் இதழ்கள் அவள் பேச்சுக்கு தடை விதிக்க...., அவன் கரங்களோ...., முழுதாக தன்னவளை அறியும் வேலையில் இறங்கியது. அவனைத் தடுக்க முடியாமல்...., சோர்ந்து...., அவன் செய்கைக்கு தானும் இசைந்து....., அவன் மோகத்தில் திகைத்து..., திணறி...., கலைந்து...., களைத்துப் போனாள்.

எந்த நைட்டியைப் போட போராடினாளோ...., அது கேட்பாரற்று தூரக் கிடந்தது.

***ராதா அறைக்குள் நுழைய...., தனது வசீகர புன்னகையோடும்...., ஆளை விழுங்கும் பார்வையோடும் அவளை எதிர்கொண்டான் அருண். கையில் இருந்த பாலை அவனிடம் கொடுக்க...., அவளை பார்வையால் விழுங்கியவாறு, பாலைக் குடித்தவன்...., மீதியை அவளுக்குக் கொடுத்தான்.

டம்ளரை டீபாயில் வைத்தவள்...., அவன் ஏதாவது பேசுவானோ என்று அவனையே பார்த்தாள். தொடர்ந்து பார்க்க முடியாமல், அவன் பார்வை வீச்சு தாக்க...., சட்டென தலை குனிந்தாள். அவன் நின்ற இடத்தில் இருந்து அசையவும் இல்லை.

‘என்ன பார்வை இது...?’, மனதுக்குள் சிணுங்கியவள்...., நகைகளைக் கழட்டி வைத்தாள்.

மேலும் பத்து நிமிடம் கடக்க...., உடை மாற்றவா வேண்டாமா...? என்று

மனதில் பட்டிமன்றம் நடத்தியவள்...., இறுதியில் உடை மாற்றச் சென்றாள். அவள் பாத்ரூம் சென்று நைட்டி மாற்றி வரும்வரை அவனிடம் மாற்றம் இல்லாமல் போகவே....,

‘ஓ...., இன்னைக்கு ஃபுல்லா இப்படியே நின்னு பாத்துட்டேதான் இருக்கப் போறாரா...? அப்போ சரி...’, எண்ணியவள்...., படுக்கையில் ஏறி...., அவனுக்கு முதுகு காட்டி படுத்துக் கொண்டாள்.

அவள் படுக்கவே...., புயலென அவளை நெருங்கி...., தன் பக்கம் திருப்பியவன்..., “கொழுப்புதானே உனக்கு. மனுஷன் எவ்வளவு நேரமா காத்துட்டு இருக்கான். நீ பாட்டுக்கு வந்த...., பால் கொடுத்த...., நகையெல்லாம் கழட்டுன...., நைட்டியை மாத்திட்டு வந்து படுத்துட்ட.

“அப்போ இங்கே ஒருத்தன் எதுக்கு இருக்கேனாம்...”, கேட்டவனது இதழ்கள் அவளை முற்றுகை இட்டது.

அவன் மூச்சுக்கு விலகவே...., “ஓ...., அப்படின்னா நீங்களே எல்லாத்தையும் மாத்தி விட்டுருப்பீங்களா...?”, அவள் அப்பாவியாக விழி விரித்துக் கேட்க,

“என் ராதுக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால் அதை ஏன் கெடுக்கணும்...?”, அவன் கரங்கள் அவள் ஆடையில் பதிய...., விதிர்த்துப் போனாள்.

தன் பேச்சு இப்படி ஒரு எதிர் விளைவை கொடுக்கும் என்று எண்ணாதவள்..., “ஹையோ...., நான் சும்மா சொன்னேன். உள்ளே வந்தது முதல்...., ஆளையே முழுங்குற மாதிரி பாத்துட்டே இருந்தால்..., நான் வேற என்னதான் செய்யிறது...”, அவன் கரத்தை விலக்கியவாறு மொழிந்தாள்.

“நீ எதுவும் செய்ய வேண்டாம். எல்லாம் நான் பாத்துக்கறேன்...”, சொன்னவன் செயலிலும் ஈடுபட...., “ஆண்டவா...., விளக்கை கூட நிறுத்தாமல்...”, அவள் பேச்சுதான் பாதியில் நின்றதே தவிர, அவன் வேலை செவ்வனே நடந்தேற...., அவன் வேலையில் தன்னையும் இணைத்துக் கொண்டாள்.

***தான் வந்ததைக் கூட உணராமல்...., ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்துகொண்டிருந்த மனோவை புருவம் சுருக்கிப் பார்த்தாள் நித்யா.

கொண்டுவந்த பாலை டீபாயில் வைத்தவள்...., அவனை நெருங்கி, அவன் தோளில் கை வைத்தாள்.

திரும்பிய அவன் கண்கள் லேசாக கலங்கியிருப்பதைப் பார்த்து துணுக்குற்றாள்.

“என்ன ஆச்சு மனோ..? ஏன் கண்ணெல்லாம் கலங்கி இருக்கு..? அம்மா ஞாபகமா...?”, ஆதரவாக கேட்டாள்.

‘இல்லை’, என்பதுபோல் தலை அசைத்தவன்...., “நான் செய்தது சரியா தப்பான்னு தெரியலை. குழப்பமா இருக்கு அதான்...”, சொன்னவன் அமைதியாக கட்டிலில் வந்து அமர்ந்தான்.

நித்யாவும் அருகில் அமர...., “கொஞ்சம் படுத்துக்கறேன் நிது....., ப்ளீஸ்...”, “படுக்கணும்னா படுங்க..., அதுக்கு எதுக்கு ப்ளீஸ் எல்லாம்...”, கடிந்தவள்...., அவனை மடியில் சாய்ந்துக் கொண்டாள்.

அவள் வயிற்றோடு ஒன்றியவன்....., சிறிதுநேரம்வரை உறங்கவில்லை என்பது...., அவன் இடையை அணைத்திருந்த விதத்திலேயே அவளுக்குத் தெரிந்தது.

“என்னன்னு சொல்லுங்க மனோ...., நீங்க இவ்வளவு வருத்தப்படுற மாதிரி என்ன நடந்தது...?”, அவன் தலையைக் கோதி...., ஆதரவாகக் கேட்டாள்.

அவள் அவ்வாறு கேட்கவே, தன் மன குழப்பத்தை, பாரத்தை, ராஜு பற்றிய தன் கவலையை அவளிடம் பகிர்ந்தான். அவன் சொல்லவே...., “ஓ..., இதே விஷயத்தைப் பற்றி அனிதாவும் வருத்தப்பட்டா. நீங்க கவலைப்படும்படி எதுவும் இருக்காது.

“நாளைக்கு காலையில் அனிதாவிடம் பேசுறேன். நீங்களும் பேசுங்க. இப்போ எதையும் நினைக்காமல் தூங்குங்க...”, அவள் சொல்ல...., அதன் பிறகு அவன் கரம் கொஞ்சம் கொஞ்சமாக தளர்ந்து படுக்கையில் விழ...., அவன் தலை கோதியவாறே அமைதியாக இருந்தாள்.

பிறகு சற்று நகர்ந்து தானும் படுத்துக் கொண்டாள். அவள் மனதையும் அனிதாவின் விஷயம் உறுத்திக் கொண்டிருந்ததால்....., தங்கள் முதலிரவைப் பற்றிய எண்ணமே அவளுக்கும் எழவில்லை.

காலையில் வழக்கமான நேரத்துக்கு அவள் விழிக்க...., இப்பொழுது மனோவின் கையணைப்புக்குள் கதகதப்பாக இருப்பது அவளுக்குப் புரிந்தது. எப்பொழுதும் கண் விழித்தவுடன் ஜன்னலை திறந்து...., சூரிய வெப்பத்தை தாங்குவது அவளுக்குப் பிடிக்கும்.

ஆனால் இன்றோ...., அவனது அணைப்பை விலக மனமில்லாமல்...., அவனுடனே ஒண்டிக் கொண்டாள். மனோவும் காலை ஓட்டத்துக்காக விழித்தவன்...., நித்யாவின் நெருக்கத்தை விட்டு விலக மனமில்லாமல்...., இன்னும் அவளை இறுக்கிக் கொண்டு படுத்துக் கிடந்தான்.

ஒருவருக்கொருவர் விழித்திருப்பது தெரியாமலேயே...., அணைப்பில் கட்டுண்டு கிடந்தார்கள். இறுதியாக நேரம் ஏழைக் கடக்கவே...,
“மனோ...”, அவன் நெஞ்சில் முகத்தை உரசியவாறு அவள் அழைக்க....,

“ம்ச்...., இப்படி ஒரு காலை வராதான்னு நான் எவ்வளவு ஏங்கியிருக்கேன். இப்போ உன்னை விட முடியாது ஆமா...”, தாயை கட்டிக்கொண்டு விட மறுக்கும் குழந்தையின் மனநிலையில் இருந்தான் அவன்.

“காலையில் எட்டு மணிக்கு கோயிலுக்குப் போகணும்னு சொல்லி அனுப்பிச்சாங்க. இப்போ போகலன்னா என்ன நினைப்பாங்க. என் செல்லம் இல்ல...., இப்போ சமத்தா எழுந்து கிளம்புவீங்களாம்...., கோயிலுக்கு போயிட்டு வந்து...., எவ்வளவு நேரம் வேணுமோ...., அவ்வளவு நேரம் உங்களோடவே இருக்கேன். ப்ளீஸ்...”, சொன்னவள் அவன் கன்னத்தில் இதழ் பதிக்க...., அந்த முத்தத்துக்காகவேனும் எழுந்து கிளம்பினான்.

அவனுக்கும் ராஜுவையும்...., அனிதாவையும் பார்க்கவேண்டும்போல் இருந்தது. வேகமாகக் கிளம்பி...., ஹால் சோபாவில் பேப்பரோடு அமர்ந்துகொள்ள, முதலில் வந்த ராதாவும்...., அருணும் கண்களால் பிணைந்தவாறே வர...., நிம்மதியாக உணர்ந்தான்.

இவன் பொறுமையை நன்றாக சோதித்துவிட்டு....., எட்டுமணி பத்து நிமிடத்துக்கு ராஜுவும் அனிதாவும் வர...., “ஆண்டவா...., ஏன் இப்படி தொல்லை பண்ணுறீங்க...? இப்போ நாம கோயிலுக்குப் போறோம். சுத்த பத்தமா போகணும். வம்பு பண்ணாம வாங்க....

“எல்லார் முன்னாடியும் கையைக் காலை நீட்டாமல் நல்ல பிள்ளையா

இருந்தாதான்...", மீதியை அவன் காதில் சொல்ல...., உடனே நல்லபிள்ளையாக மனோவின் அருகில் வந்து அமர்ந்தான் ராஜு.

மனதில் இருந்த மொத்த பாரமும் இறங்கியது மனோவுக்கு. அதேபோல்...., நித்யா, அனிதாவின் முகத்தை நிமிர்த்திப் பார்க்க...., அவளது வெட்கச் சிரிப்பே, நடந்ததைச் சொல்ல...., "இதுக்கே கோயிலுக்கு போய் தேங்காய் உடைக்கணும்...., அம்மாடி...., என்ன டென்ஷன்...", நித்யா, நிம்மதியாக மூச்சு விடுவது மனோவுக்குத் தெரிந்தது.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டார்கள்.

கோயிலுக்குச் செல்லும்பொழுதும், வரும்பொழுதும்...., ராஜு சமத்து பையனாக நடந்துகொள்ள...., அருண்தான் அவ்வப்பொழுது...., ராதாவின் இடையைக் கிள்ளி அவளை அலற வைத்தான்.

ராதாவின் தாய் அவளை முறைக்க...., அவள் அருணை முறைக்க...., வேண்டுமென்றே அவளை உரசி நடந்து...., "உங்க அம்மாவை வெறுப்பேத்த ஒரு சான்ஸ் கிடைத்தால் விடுவேனா நான். பத்துநாள் உன்னை போனில் கூட பேச விடாமல் பழி வாங்குனாங்க இல்ல.

"இப்போ உன்னை தூக்கிட்டு போனால் என்ன செய்வாங்களாம்...", அவன் அவளை தூக்க முயல...., வேறு திசையில் காலை எட்டிப் போட்டு ஓடிப் போனாள் ராதா. அருணின் சிரிப்பு அவளைத் தொடர்ந்தது.

நன்றாக சாமி கும்பிட்டு முடித்தவர்கள் வீடு வந்து சேர...., புதுமண தம்பதிகளுக்கே உரிய விதத்தில் அவர்கள் வாழ்க்கை ஆரம்பமானது. அறைக்கு வந்த மனோ...., நித்தியை இடையோடு கட்டிக்கொண்டு இழைய....,

அது உணர்த்திய செய்தியில்...., மனதுக்குள் பட்டாம்பூச்சிகள் பறக்க, "மனோ...., பட்டப் பகலில்...., இப்போ வேண்டாம்...., நைட்...", அவளைப் பேச விடாமல் அவள் இதழ்களை சிறை செய்தவன்...., முகம் முழுக்க ஈரமாக முத்தமிட்டு...., அவள் கழுத்தடியில் இளைப்பாற....,

அவனிடமிருந்து விலக மனமில்லாமல்...., விலக முயன்றாள். அவள் விலகவே..., "ம்ச்...., என்ன...?", மறுத்தான்.

“புடவை கசங்கிடும்...., பட்டுப் புடவை...”, அவள் காரணம் கண்டுபிடிக்க...., “அப்படி ஒண்ணு இருக்குல்ல...”, சொன்னவன் அடுத்து செய்த செய்கையில்..., வேகமாக போர்வைக்குள் அடைக்கலாமானாள்.

“மனோ...., பட்டப் பகலில்...., எல்லோரும் என்ன நினைப்பாங்க..”, போர்வையை கெட்டியாக பிடித்தவாறு கெஞ்சினாள்.

“நான் வேண்ணா...., நீங்க நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லைன்னு சொல்லிட்டு வந்துடவா...?”, கண்ணைச் சிமிட்டி அவன் சொல்ல...., தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“நீங்க ஆணியே...”, மீதியைச் சொல்ல அவன் விடாமல் அவள் வாயை கையால் மூடியவன்...., “அடுத்து உன் பிரச்சனை என்ன...., பட்டப்பகலில்...., ம்...”, நிதானமாக அவள் அருகில் நெருங்கியவன்...., அவள் வேகமாக பின்னடைய....,

விடாமல் பிடித்து....., “குருட்டுப் பூனை இருட்டுக்குள் த...”, “ஐயோ...., என்னமோ செய்ங்க...., இப்படி பேசி என் மானத்தை வாங்காதீங்க...”, அவன் வாயை கைகளால் மூடினாள். முகம் குங்குமமாக சிவந்து போனது.

“இது நல்ல பிள்ளைக்கு அழகு...”, சொன்னவன்...., அவளது போர்வைக்குள் புகுந்துகொள்ள...., காதல் பாடம் சுகமாய் நடந்தேறியது அங்கே.

***சென்னைக்கு வந்து....., டெண்டர் வேலை துவங்கி மாதம் இரண்டு ஓடிவிட...., இப்பொழுது மிகவும் பிஸியாகி விட்டார்கள் அனைவரும். முதல் டெண்டர் என்பதால்...., லாபம் பெரிதாக இல்லை என்றாலும்...., வேலை கச்சிதமாக அமைய போராடினார்கள்.

அத்தோடு...., மேலும் பல போட்டி கம்பெனிகளுக்கு சவால் விடுவது...., போட்டி போட்டு டெண்டர் எடுப்பது என....., அனைத்திலும் புகுந்து விளையாடினார்கள். மனோவிற்கு முழு பக்கபலமாக நித்யா இருக்க...., எத்திக்கும் கால் பதித்தான்.

பிசினஸ் மீட்டிங்...., பார்ட்டி...., என அனைத்திலும் அனைவரும் கலந்து கொண்டார்கள். இவர்களை மூக்குடைக்க வரும் யாரையும்...., அனிதாவோ, நித்யாவோ விட்டதில்லை.

ஒருமுறை...., “நீங்கதானே அந்த ஜெயிலுக்கு போயிட்டு வந்த...., ஏஎம்ஆர் கன்ஸ்ட்ரக்ஷன் முதலாளிங்க....”, ஒருவர் சத்தமாக கேட்க...., ஆண்கள் தடுமாற....,

“அட....., நாங்க அவங்கதான். நீங்க யாருன்னு தெரியலையே....., பாத்தீங்களா...., எங்கே புகழ் எங்கே எல்லாம் பரவி இருக்குன்னு. ஆனா உங்களைத்தான் யாருன்னு எங்களுக்குத் தெரியலை.

“சரி சொல்லுங்க...., எந்த பில்டிங் உங்களுக்கு கட்டணும்...? எவ்வளவு கோடி ப்ராஜெக்ட்...”, அது இதென்று அனிதாவும்..., நித்யாவும் வரிந்துகட்ட, வந்தவர் பின்னங்கால் பிடறியில்பட ஓடியது ஒரு பக்கம் என்றால்...., அங்கேயே ராஜு..., அனிதாவை இறுக்கி அணைத்து...., அவள் கன்னத்தில் இதழ் பதித்தான்.

அன்று காலையில் அவசரமாக ஒரு டெண்டர் எடுக்க அனைவரும் கிளம்பிக் கொண்டிருக்க...., அனிதா தலைசுற்றி விழப் போனாள். அவளை ஓடிவந்து தாங்கிய ராஜு...., வீட்டையே இரண்டாக்கி விட்டான்.

இறுதியில்..., மனோவின் தாய் நாடி பிடித்து...., அவள் தாயாகப்போகும் விஷயத்தைச் சொல்ல...., “யாஹூ...., எனக்கு பாப்பா பொறக்க போகுது...”, இதையே பத்துமுறை சொன்னவாறு வீட்டை சுற்றி வந்தான்.

“கொஞ்சம் பேசாமல் இருங்களேன்...”, சிணுங்கியவாறு தடுத்த அனிதாவின் குரலை அவன் கண்டுகொள்ளவே இல்லை. ராஜுவின் சந்தோசம்...., அங்கிருந்த அனைவரிடமும் பிரதிபலித்தது. தோழிகள் இருவரும் அனிதாவை கட்டிக்கொண்டு வாழ்த்து சொல்ல...., மனோ ராஜுவை தூக்கிச் சுற்றினான்.

அன்றைய டெண்டரும் அவர்களுக்கே கிடைக்க...., அவர்களின் வளர்ச்சி ஏறுமுகமாக அமைந்தது. அடுத்தடுத்த வாரங்களில் ராதா...., நித்யா தாய்மை அடைய...., அவர்களது மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் போனது.

பத்து மாதமும் தங்கள் இணையை கண்ணுக்குள் வைத்து பாதுகாக்க...., தொழிலையும் மேம்படுத்தினர். அடுத்தடுத்து அவர்களுக்கு குழந்தைகள் பிறக்க....., மழலைகள் பட்டாளம் அவர்கள் வீட்டை ஆட்சி செய்தது.

ராஜுவிற்கு அவன் விரும்பியவாறு பெண் குழந்தை பிறக்க....,
மனோவிற்கும், அருணுக்கும் ஆண் குழந்தை பிறந்தது.

மனோஜ் தன் குழந்தையை கையில் ஏந்தியவாறு...., "இப்படி ஒரு வாழ்க்கை அமையும்...., இப்படி என் குழந்தையை கையில் ஏந்தும் பாக்கியம் கிடைக்கும்னு கனவில் கூட நான் நினைத்ததே இல்லை நிது...", கண் கலங்க...., அவள் நெற்றியில் ஈரமாக முத்தமிட்டான்.

"ஆமா இப்போ சொல்லுங்க. ஒரு வார்த்தையாவது சொல்லுவீங்களா...? இல்ல மௌனமாவே இருந்து கொல்லுவீங்களான்னு நான் தவிச்சது எனக்குத் தானே தெரியும்...?", அவன் மனதை மாற்ற அவனைச் சீண்டினாள்.

அதான் எல்லாத்தையும் தகர்த்தெறிய நீ பலம் தந்தியே, பிறகு என்ன...? வாழ்க்கையின் இனிய பக்கங்கள் எழுதப்பட....., அவர்களின் மக்கட் செல்வங்கள் தங்கள் பாட்டிமாரை பாடாக படுத்தினார்கள்.

வேலைப்பளுவின் இடையில்...., ஒருநாள் திருச்சி செல்ல....., அங்கே இவர்களின் பிள்ளைகள் போட்ட சண்டையில்...., "எல்லாம் அப்படியே அம்மாமாரை கொண்டு பொறந்திருக்குதுக...., ஒண்ணாவது அப்பா மாதிரி அடக்கமா இருக்கா பாரு...., எப்போ பாரு சண்டை...", பெண்களின் பெற்றோர் போலியாக அலுத்தவாறு...., பெருமையாக தங்கள் பேரக் குழந்தைகளின் சண்டையை விலக்கி விட்டார்கள்.

ஆண்கள் வீரமாக மீசையை முறுக்க...., 'உள்ளே வருவீங்கல்ல...', தங்கள் மனைவியரின் கண்ஜாடையை சரியாக புரிந்த மனோவும், அருணும் பம்ம...., "கண்ணில் தூசி விழுந்திடுச்சா அனி...", ராஜுவின் கேள்வியில் அனைவரும் விழுந்து விழுந்து சிரிக்க....,

"ஆமா...., உள்ளே வந்து எடுத்து விடுறீங்களா...?", அவள் கேள்வியில்...., "நான் மாட்டேன்...., உள்ளே வந்தால் நீ அடிப்ப...", வேகமாக அவன் மறுக்க, "அப்பா...., நான் உனக்கு ஃபுல் சப்போர்ட் கொடுக்குறேம்ப்பா...", அவன் மகள் அவனுக்கு துணைக்கு வர....,

வாழ்க்கை அழகானதுதான் இல்லையா....?

நன்றி.